

# மாணிக்க விநாயகம்





பம்பலப்பிட்டி, சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய

மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர் - 2001




கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்





கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்
திரு. உருத்திரா துரையப்பா
அவர்கள் நன்கொடையாக அளித்தது
01.09.2009.

# மாணிக்க விநாயகம்



பம்பலப்பிட்டி, சம்மாங்கோடு


## ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக சிறப்பு மலர்

வெளியீடு - 10.10.2001 புதன்கிழமை

(மண்டலாபிஷேகப் பூர்த்தி நாள்)

46990





# சமர்ப்பணம்

பம்பலப்பிட்டி, சம்மாங்கோடு

அருள்மிகு

ஸ்ரீ மாணிக்க விநாயகப்

பெருமானைச் சிந்தித்து வணங்கி

அவரது பாதாரவிந்தங்களில்

இம்மலரைச்

சமர்ப்பணம் செய்கின்றோம் !

- சம்மாங்கோட்டார்



கொழும்பு சம்மாங்கோடு - பம்பலப்பிட்டி
அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர்
(ஆதிமூலமூர்த்தி)
மஹா கும்பாபிஷேகம்
24-08-2001



# அருள் மழை பொழிவதாக!

சம்மாங்கோடு, பம்பலப்பிட்டி, ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலயத்தினை
தூரத்திருந்து நோக்கும் போது, இராஜகோபுரம்
நம்மைக் கைகூப்பச் செய்கிறது.
ஆலயத்து வாசலுக்குச் சென்றதுமே பிரமிப்புத் தோன்றுகிறது;
மெய்சிலிர்த்துப் போகின்றோம்.
இறையருளின் வெளிப்பாடா அல்லது
மனித எண்ணங்களின் பெருமுயற்சியா என வியந்து நிற்கிறோம்.
ஆலயத்தின் அழகுக் கலை வண்ணம் அது!

卐 卐 卐 卐 卐

முன்னோர் தேடிவைத்த அருட்செல்வத்தைக் காத்து,
இன்னும் சிறக்க வைக்கும் நோக்குடன்
அறங்காவலர் சபையினர் திருப்பணியைத் தொடங்கினர்.
ஐந்தரை ஆண்டுகாலம் புனர் நிர்மாணம் நிகழ்ந்தது.
மனமொன்றிய கவனம், ஆழ்ந்த ஈடுபாடு, சிறுசிறு விடயங்களிலும்
பூரணத்துவத்தை நோக்கிய செம்மை என அவர்களின் சிந்தனை விரிந்தது.

卐 卐 卐 卐 卐

அவர்தம் எண்ணத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்ட
கட்டிடக் கலைஞர்கள், ஸ்தபதியார், அவரது குழுவினர், ஏனைய பணியாளர்கள்,
தொழில்நுட்ப உதவியாளர்கள், அனைவருமே மாணிக்க விநாயகனுக்கு
இராஜகோபுரம், மூலவர் கோபுரம், மண்டபங்கள், சந்நிதிகள், சிற்பங்கள்
என்ற அனைத்தையும் மிகச் சிறப்பாக அமைத்தனர்.
நிர்மாணப்பணிகள் நிறைவுபெற்றன.

卐 卐 卐 卐 卐

கும்பாபிஷேகத்திற்கு நாள் குறிக்கப்பட்டது. கிரியைகள், அபிஷேகங்கள்,
அனைத்தையும் சிவாச்சாரியப் பெருமக்கள் பக்திபூர்வமாக ஆற்றிவைத்தனர்.
திட்டமிடப்பட்ட நிகழ்ச்சிகள் அனைத்துமே ஒரு குறையுமின்றி நிகழ்ந்தன.
பக்தகோடிகளின் பக்திப்பரவசத்தோடு குறித்த நல்வேளையிலே
கும்பாபிஷேகப் பெருஞ்சாந்திப் பெருவிழா இனிதே நிறைவு பெற்றது.
வானம் மழை பொழிந்து ஆசீர்வதித்தது!

卐 卐 卐 卐 卐

தொடர்ந்து நாற்பத்தெட்டு தினங்கள்
மண்டலாபிஷேகக் கிரியைகள் நடைபெற்றன.
இத்தினங்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.
நம் நாட்டுக் கலைஞர்கள், சொற்பொழிவாளர்கள்,
தமிழக சொற்பொழிவாளர்கள் எனப் பலரும்
கலந்து கொண்டு மாலைப் பொழுதுகளை ஆன்மீக மயமாக்கினார்கள்.

卐 卐 卐 卐 卐

அறங்காவலர் சபையினருடன் கைகோர்த்துக் கொண்டு,
திருப்பணிக்கென நியமிக்கப்பட்டிருந்த சிறப்புக்குழுவினர் பணி செய்தனர்.
சளைக்காத மனதுடன், சலியாது உழைத்தனர்.
இன்னும், வர்த்தகப் பிரமுகர்கள், நிறுவனங்களிற் பணிசெய்யும் ஊழியர்கள்
பக்தர்கள் எனப் பல்லோரும் சேர்ந்து அபிஷேக நாட்களிலே சரியைத் தொண்டாற்றினர்.

卐 卐 卐 卐 卐

இத்தனையையும் வார்த்தைகளாக்கி வண்ணப்படங்களோடு இணைத்து
ஒரு அருட்சான்றாக அமைக்கும் பெரும்பணியை நாம் சுமந்தோம்!
சான்றோர், பெரியோர்களிடமிருந்து கட்டுரைகளைக் கோரிப் பெற
கால அவகாசம் இல்லை.
எனவே இம்மலர் ஒரு கதம்பத் தொகுப்பாகவே அமைந்தது.
காலத்தைக் கடிந்து கொண்டு
முழுமையாய்ச் சொல்லிவிட வேண்டும் என்று விரைவாக எழுதி
சலித்துக் கொண்டபோதும் தெம்பு பெற்று அச்சுவடிவாக்கி கட்டிக் கோர்த்து
"மாணிக்க விநாயகத்தை" மலர வைத்தோம்.
இறையருளாலே இப்பணி ஆயிற்று!
எமது எண்ணம் ஈடேறியதோ தெரியவில்லை.
ஆயினும், எம்மை ஆட்டிவைத்த அந்த
ஆனைமுகனுக்கே அனைத்தும் அர்ப்பணம்!

卐 卐 卐 卐 卐

உரிய காலத்தில் மலருக்கு
ஆசிச் செய்திகளை அனுப்பி வைத்துதவிய
அருள் ஞானியர், குருமஹா சந்நிதானங்கள், அருட்துறவியர்,
பெரியோர் அனைவரையும் நினைந்து போற்றுகின்றோம்.
நாம் எண்ணிய வண்ணம்
அட்டைப்பட ஓவியத்தை வரைந்துதவிய ஓவியர்,
கட்டுரைகளைத் தந்த கட்டுரையாளர்கள்,
இம்மலர் செயல் வடிவில் சாத்தியமாக நிதிதந்த புரவலர்கள்
அனைவருக்கும் நன்றி பாராட்டுகின்றோம்.

卐 卐 卐 卐 卐

அறங்காவலர் சபையினரும், திருப்பணி சிறப்புக் குழுவினரும்,
இம்மலர் உரிய தருணத்தே வெளிவர வேண்டும் என்பதிற்
கொண்டிருந்த ஆர்வம் அளப்பரியது.
அவர்கள் எமக்கு தார்மீகத் துணையாக நின்று ஊக்கமளித்தனர்.
அவர்கள் அனைவருக்கும் எமது நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

卐 卐 卐 卐 卐

ஒரு நூலை, நூலுருவாக்குவதென்பது மிகவும் சிரமமான பணி.
எமது எண்ணத்திற்கேற்ப அப்பணியை நிறைவேற்றித் தந்த
யுனி ஆர்ட்ஸ் அச்சக உரிமையாளர் திரு. பொ. விமலேந்திரன் அவர்களுக்கும்,
அச்சக ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரியன.

卐 卐 卐 卐 卐

சிற்றறிவும், சிறுதொழிலும் மிக்க எம்மைக் கருவியாக்கி
இப்பணியை நிகழ்த்திக் கொண்ட, எம்பெருமான் மாணிக்க விநாயகர்,
திருப்பாதங்களில் இம்மலரை அர்ப்பணிக்கின்றோம்.
யாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெற
அவர்தம் அருட்கருணை
மழை பொழிவதாக!

- மலர்க்குழுவினர் -

**மலர்க்குழுவினர்:**
**மலைக் கொழுந்து சண்முகநாதன் (தொகுப்பாசிரியர்)**
**கா. சௌந்தரராஜன் (மலர்க்குழுத் தலைவர்)**
**பெரி. முத்துசாமி**
**செ. ஜெகநாதன்**
**க. கனகராஜா**
**பொ. சுகுமார்**
**தெ. முருகையா**

உ

ஸ்ரீ மாணிக்கவிநாயகர் துணை







கொழும்பு சம்மாங்கோடு

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் தேவஸ்தானம் - பம்பலப்பிட்டி

# அருள்மிகு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் நூதன ஆலய

## புனராவர்த்தனப் பிரதிஷ்டா ஸப்த தள ராஜகோபுர

# மஹாகும்பாபிஷேக சுபமுகூர்த்த விஞ்ஞாபனம்

ஐங்கரன் அடியார்களே!

இறைவன் அருள்பெற்ற வன்தொண்டராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும், நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமானாலும், அருட்கவி அருணகிரிப் பெருமானாலும் முறையே பாடப்பெற்ற திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், கதிர்காமம் ஆகிய புண்ணிய தலங்களைத் தன்னகத்தே கொண்டதும், மாணிக்க கங்கையினால் புனிதமடைந்ததும், இந்து சமுத்திரத்தின் மத்தியிலே இரத்தினத் துவீபம், தர்மத்துவீபம், சிவபூமி, சுவர்ணபூமி என விளங்குவதுமாகிய இலங்கையில், அன்பர் மிடிதீரப் பருக வந்த செழுந்தேனாய், கருணை வள்ளலாய் விளங்கும் சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் உபய தலமாகிய பம்பலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயம்; புதிய நாகர தூங்கானை மாட பஞ்சதள விமானம், துர்க்கை, துவாரகணபதி, தண்டாயுதபாணி, நவக்கிரஹம், இடும்பன் ஆகியாம் மூர்த்திகட்கு புதிய கோவில்களும், விநாயகர், வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், துர்க்கை, மணிவாசகர் ஆகிய உற்சவ மூர்த்திகட்குப் புதிய வசந்த மண்டபமும், மஹாமண்டபமும், புராதன இதிகாச சங்கீத விசாரத மண்டபமும், ஏழு தள ராஜகோபுரமும், மணிக்கோபுரமும் அமைக்கப்பெற்று; நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீ விஷு வருஷம், தக்ஷிணாயனம், வருஷருது, ஆவணி மாதம், வளர்பிறை, ஷஷ்டி திதி, வெள்ளிக்கிழமை, சுவாதி நட்சத்திரம், சுப்பிரயோகம், கௌலவ கரணம் சேர்ந்த ஆவணி 8ம் நாள் (24. 08. 2001) காலை 6.45 மணிமுதல் 8. 00 மணிவரையுள்ள சித்தயோகம், சிம்ம லக்னமும் கூடிய புதஹோரையில் ஸ்ரீ மாணிக்கவிநாயகப் பெருமானுக்கும் பரிவார மூர்த்திகட்கும் மஹாகும்பாபிஷேகம் செய்ய திருவருளை முன்னிட்டு நிச்சயிக்கப் பெற்றுள்ளதால்; அத்தருணமும் அதன் முன் பின் நடைபெறும் கிரியா காலங்களிலும் அடியார்கள் தவறாது வந்து தரிசித்து விநாயகப் பெருமானின் திருவருளால் இம்மை, மறுமை நலங்களைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

# கிரியா கால செய்முறைக் காலங்கள்

| ஆங்கிலத் திகதி | தமிழ் ஆண்டு மாதம் | திகதி | கிழமை | நேரம் | மணி | நிகழ்ச்சி நிரல் |
|---|---|---|---|---|---|---|
| 17. 08. 2001 | விஷு ஆவணி | 1 | வெள்ளிக்கிழமை | காலை | 7.00 மணிக்கு | சுக்கிர ஹோரையில் கும்பாபிஷேக பூர்வாங்க கிரியாரம்பம், விநாயக வழிபாடு, தேவானுக்ஞை, பிராம்மண அனுக்ஞை, எஜமான் சங்கல்ப்பம் பிரதான ஆசார்ய வரணம், சர்வசாதக போதக ஆசார்ய வரணம், தனபூஜை, திரவிய விபாகம், கணபதிஹோமம், கஜபூஜை, கோபூஜை, பிரம்மச்சாரி பூஜை. |
| | | | | மாலை | 5.00 மணிக்கு | கிராமசாந்தி, பிரவேச பலி, ரக்ஷோக்ன ஹோமம். |
| 18. 08. 2001 | விஷு ஆவணி | 2 | சனிக்கிழமை | காலை | 8.30 மணிக்கு | நூதன மூர்த்திகள் அஷ்டாதச கிரியை, தான்யாதிவாசம், நயனோன்மீலனம், ஜலாதிவரசம். |
| | | | | மாலை | 5.30 மணிக்கு | திசாஹோமம், மூர்த்தி ஹோமம், சம்ஹிதா ஹோமம், சயனாரோஹணம். |
| 19. 08. 2001 | விஷு ஆவணி | 3 | ஞாயிற்றுக்கிழமை | காலை | 8.30 மணிக்கு | நவக்கிரஹ ஹோமம், கிரஹப்ரீதி, கோளறு பதிகம் ஓதல். |
| | | | | மாலை | 5.30 மணிக்கு | வேதபாராயணம், பன்னிரு திருமுறை பாராயணம், உத்தமபத வாஸ்த்துசாந்தி. |
| 20. 08. 2001 | விஷு ஆவணி | 4 | திட்கட்கிழமை | காலை | 9.00 முதல் 10.30வரை | குருஹோரையில் ஸ்தூபி ஸ்தாபனம், சிற்பி உபசாரம், மிருத்சங்கிரஹணம், சூர்யாக்னி சங்கிரஹணம், யாகசாலா குண்ட, மண்டப அலங்காரம், தீபஸ்தாபனம். |
| | | | | மாலை | 4.00 மணிக்கு | சோமகும்பபூஜை, அங்குரார்ப்பணம், மூர்த்திபவரணம், ரக்ஷாபந்தனம், பாலாலயத்தில் பிரசன்னாபிஷேகம், பிரசன்னபூஜை, கும்பாலங்காரம், கலாகர்ஷணம், மதுவர்க்க நிவேதனம், யாத்ராஹோமம், யாத்ராதானம், கும்பயாகசாலா பிரவேசம், பேரசலனம், யாகாரம்பம், யாகபூஜை காலம் 1, நவாக்னி விபஜனம், ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| 21. 08. 2001 | விஷு ஆவணி | 5 | செவ்வாய்க்கிழமை | காலை | 8.30 மணிக்கு | யாகபூஜை காலம் 2, ஹோமம், பூர்ணாஹுதி தீபாராதனை. |
| | | | | மாலை | 5.30 மணிக்கு | யாகபூஜை காலம் 3, ஹோமம், பூர்ணாஹுதி தீபாராதனை. |
| 22. 08. 2001 | விஷு ஆவணி | 6 | புதன்கிழமை | காலை | 6.30 முதல் 8.00 வரை | புதசந்திர ஹோரையில் சுவர்ண, மாஷ, கூர்ம, பத்ம, மூஷிகஸ்தாபனம், யந்திரஸ்தாபனம், பிம்ப ஸ்தாபனம், அஷ்டபந்தன சமர்ப்பணம், யாகபூஜை காலம் 4, ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| | | | | நண்பகல் | 12.00 முதல் பிற்பகல் 3.00 வரை | தைலாப்பியங்கம் |
| | | | | மாலை | 6.00 மணிக்கு | யாகபூஜை காலம் 5, ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை. |

*22. 08. 2001 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணி முதல் இரவு 11 மணிவரையும்*
*23. 08. 2001 வியாழக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் பிற்பல் 3.00 மணிவரையும்*
*பக்தர்கள் எண்ணெய்க்காப்பு.*

| ஆங்கிலத் திகதி | தமிழ் ஆண்டு மாதம் | திகதி | கிழமை | நேரம் | மணி | நிகழ்ச்சி நிரல் |
|---|---|---|---|---|---|---|
| 23. 08. 2001 | விஷு ஆவணி | 7 | வியாழக்கிழமை | காலை | 8.30 மணிக்கு | யாகபூஜை **காலம் 6,** விஷேட திரவிய ஹோமம், பூர்ணாஹுதி, தீபாராதனை. |
| | | | | மாலை | 5.00 மணிக்கு | யாகபூஜை **காலம் 7,** ஹோமம், பிம்பசுத்தி, கௌதுகபந்தனம், தத்துவபூஜை, நாடீசந்தானம், ஸ்பர்சாஹுதி, பூர்ணாஹுதி, தீபாராதனை, ஆசார்ய பூஜனம், சிற்பி உபசாரம். |
| 24. 08. 2001 | விஷு ஆவணி | 8 | வெள்ளிக்கிழமை | காலை | 4.30 மணிக்கு | யாகபூஜை **காலம் 8,** ஹோமம், மஹாபூர்ணாஹுதி, அந்தர்பலி, பஹிர்பலி, யாத்ராதானம், விமான ராஜகோபுர கலசங்கள் புறப்பாடு, **6.35 மணிக்கு** ராஜகோபுர அபிஷேகம், **6.45 மணிக்கு** பிரதான ஸ்தூபி **அபிஷேகம், 6.50** மணிக்குள் பரிவார ஸ்தூபிகள் அபிஷேகம். |
| | | | | | 7.00 முதல்<br>7.55 வரை | ஸ்ரீ மாணிக்கவிநாயகப் பெருமானுக்கும், பரிவார மூர்த்திகட்கும் **மஹாகும்பாபிஷேகம்,** நியாஸம், கோபூஜை, தசதர்சனம், எஜமான் அபிஷேகம், மஹா அபிஷேகம், தீபாராதனை, ஆசார்ய சம்பாவனை, ஆசீர்வாதம். |
| | | | | மாலை | 6.00 மணிக்கு | சாயரட்சை பூஜை, விஷேச வசந்தமண்டப பூஜை, பஞ்சமுக அர்ச்சனை. சுவாமி வீதி உலாக்காட்சி. |

★ ஒவ்வொரு யாகபூஜா காலங்களில் திரவியஹோமம், பூர்ணாஹுதி, பிரதக்ஷிணம், ஜபஹோம சமர்ப்பணம், வேதஸ்தோத்திர பன்னிரு திருமுறைப் பாராயணமும் நடைபெறும்.

**பிரதிஷ்டா பிரதம குரு**

பிரதிஷ்டா பூஷணம், சிவாகமஞானபானு,
பிரதிஷ்டா கலாநிதி
சிவாச்சார்ய சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள்
(நயினை)

**சர்வசாதகம்**

சிவாகம சாஸ்திர சக்கரவர்த்தி, ஆகம பேராசிரியர்
சிவஸ்ரீ டி. சி. தியாகராஜ சிவாச்சார்யார்
(திருக்கழுக்குன்றம், இந்தியா)

**உபசர்வ சாதகம்**

வேதாகம வித்யா பூஷணம்
பிரம்மஸ்ரீ விஸ்வநாராயண சர்மா
கொழும்பு

**கோவில் ஸ்தாநிகர்**

சிவாச்சார்யமணி, ஆகம சூடாமணி
சிவஸ்ரீ பா. சிற்சபேசக்குருக்கள் (மணி ஐயர்)

**கோவில் உதவி குருமார்**

சிவாகம ஜோதி
பிரம்மஸ்ரீ இ. சோமாஸ்கந்த சர்மா
சிவஸ்ரீ சாமி புவனேஸ்வரக் குருக்கள்

**சிற்பவேலை**

இராமநாதபுரம் தேவஸ்தான சிற்பி
விஸ்வ பிரம்மஸ்ரீ வீ. நாகலிங்க ஸ்தபதியார்
குழுவினர்
திருப்புல்லாணி, தமிழ்நாடு, இந்தியா.

**ஓதுவா மூர்த்தி**

திருவாசக செந்நாவலர்
பி. சற்குருநாதன்
கபாலீஸ்வரர் ஆலயம் - மைலாப்பூர்,
தமிழ்நாடு, இந்தியா.



"வேழமுகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுந்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத்தொழ
துள்ளியோடுந் தொடர்ந்த வினைகளே"





**இங்ஙனம் - சம்மாங்கோட்டார்**



சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் பரிபாலன சபை - நிர்வாகக்குழு - 2001/2002

அமர்ந்திருப்போர் (முன்வரிசை) திரு. கா. சௌந்தரராஜன், திரு. ஆ. கருப்பண்ண பிள்ளை, திரு. ஏ. மாணிக்கவாசகர்.


அமர்ந்திருப்போர் (பின்வரிசை) திரு. மு. பெரியசாமி, திரு. தெ. பெரியசாமி, திரு. பெரி. முத்துசாமி, திரு. கா. தெ. மு. கருப்பையா பிள்ளை



**சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் பரிபாலன சபை - திருப்பணி சிறப்புக்குழு**

*அமர்ந்திருப்போர் (இடமிருந்து வலமாக)* திரு. தி. ஏ. சிவலிங்கம் பிள்ளை, திரு பெரி. முத்துசாமி, திரு. பெ. இராதாகிருஷ்ணன், திரு. கா. சௌந்தரராஜன்,திரு. ஆ. கருப்பண்ணபிள்ளை, திரு. ஏ. மாணிக்கவாசகர், திரு. கா. தெ. மு. கருப்பையா பிள்ளை, திரு. தே. பெரியசாமி,


*நிற்போர் (இடமிருந்து வலமாக)* திரு. தெ. முருகையா, திரு. பெரி. மாரிமுத்துப் பிள்ளை, திரு. பெ. ஜெயராஜ், திரு. செ. ஜெகநாதன், திரு. செ. முருகேசு, திரு. பெ. தேவராஜ், திரு. பெ. சதாசிவம், திரு. மு. பெரியசாமி, திரு. பெ. வைத்திலிங்கம், திரு. மு. சேகர், திரு. ஏ. முத்துக்கிருஷ்ணன்.















ஆலய புனர்நிர்மாணம் தொடங்கப்படுவதற்கென 26. 01. 1996ம் நாளன்று இடம்பெற்ற விசேட பூஜையும், அடிக்கல் நாட்டு வைபவமும்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# அருளுரை




**ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி**
**சங்கராச்சார்ய மஹா சுவாமிகள்,**
**காஞ்சி காமகோடி பீடம்.**

கொழும்பு மாநகரின் பிரதான வீதியான காலிவீதியில் பம்பலப்பிட்டி என்னும் இடத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் இராஜ கோபுரம் அமைக்கும் பணி பூர்த்தியாகி, வரும் 2001 ஆகஸ்ட் மாதம் 24ம் நாள் குடமுழுக்கு நடக்க இருப்பதும், அவ்வமயம் ஒருசிறப்பு மலர் வெளியிட இருப்பதும் கேட்டு சந்தோஷிக்கிறோம். முருகன் என்னும் தமிழ்க் கடவுளும், அவர் சகோதரரான விநாயகரும் தமிழ்த் தெய்வம் தான்; இந்த அண்ணா தம்பிகளைப் பிரிக்கவே கூடாது என்ற தத்துவத்தின்படி இந்த கொழும்பு நகரின் பம்பலப்பிட்டி கோவில் கதிர்வேலாயுதஸ்வாமி ஆடித்திருவிழாவின் போது ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவிலிலும் பெருவிழாவாகக் கொண்டாடுவது மிகச் சிறப்புடையதாகும்.

குடமுழுக்கு விழா வெகு சிறப்பாக நடைபெறவும், விழா மலரும் பக்திமணம் கமழ வெளிவரவும், இந்த விழாவை நடத்துபவர்களும், இந்த விழாவில் கலந்து கொள்பவர்களும் கொழும்பு மக்களும் பரமக்ஷேமமாக இருக்கவும் எல்லாம் வல்ல விநாயகரை வணங்கி ஆசிர்வதிக்கிறோம்.

*நாராயண ஸ்ம்ருதி!*


*ஸ்ரீமடம் சமஸ்தானம்,*
*இல. 1 சாலை வீதி,*
*காஞ்சீபுரம் - 631502.*



ஜகத்குரு ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய சுவாமிகள்,
காஞ்சி காமகோடி பீடம்.


கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தைச் சேர்ந்த பம்பலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் நூதன ஆலயப் புனராவர்த்தனப் பிரதிஷ்டா ஸப்ததள ராஜகோபுர மஹா கும்பாபிஷேகம், இவ்வாண்டு ஆவணி மாதம் 8ம் நாளன்று சிறப்பாக நடைபெறவிருப்பது அறிந்து சந்தோஷிக்கிறோம்.

ஸ்ரீ விநாயகப் பெருமானே முழுமுதற் கடவுள் என்று கணபத்யதர்வசீர்ஷம் விளக்கமாக எடுத்துக் கூறுகிறது. இவ்வுலக வாழ்க்கைக்குத் தேவையான பொருள்வளம், உடல்வளம், ஞானவளத்துடன், அவ்வுலகத்துக்குத் தேவையான அருள்வளத்தையும் வேழமுகக் கடவுள் வழங்குகிறார். வழிபாட்டு முறைகளில் வேற்றுமை இருந்தாலும் எல்லா அடியார்களாலும் நித்தமும் போற்றப்படுபவர், ஸ்ரீ பிள்ளையார். தமிழ்க்கிழவி ஔவைப் பிராட்டியை சிவலோகத்துக்கு அனுப்பிவைத்து, தன்னிகரற்ற தன் அருளாற்றலை, யானைமுகக் கடவுள் உலகுக்கு உணர்த்தியருளினார். வாழ்வில் பலதுறைகளில் தோன்றும் சங்கடங்களையும் விலக்கி, வெற்றிப் பாதையைக் காட்டி நெறிப்படுத்தும் தனிப்பெரும் தெய்வம் இவர் என்பதால் தான் சங்கடஹர சதுர்த்தியன்று விசேஷமாக நோன்பு-விரதம்-பூஜை செய்கிறோம்.

பம்பலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தைப் புதுப்பித்து, ஆகம முறைப்படி சீரும் சிறப்புமாகக் கும்பாபிஷேகம் நடத்தும் சீரிய முயற்சியில் பங்கு கொண்டுள்ள அன்பர்கள் அனைவரும் ஸ்ரீ விநாயகப் பெருமானின் கருணா கடாட்சத்திற்குப் பாத்திரமாகிறார்கள். இந்தத் திருப்பணியில் ஈடுபட்டு, பல்வகைத் தடைகளைக் கடந்து வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ள அனைவருக்கும் ஸ்ரீ மகா திரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்த்ர மௌளீஸ்வரர் திருவருள் புரிய வேண்டுமாய்ப் பிரார்த்தித்து, ஆசீர்வதிக்கிறோம்.

*நாராயண ஸ்ம்ருதி*

*ஸ்ரீமடம் சமஸ்தானம்,*
*இல. 1 சாலை வீதி,*
*காஞ்சீபுரம் - 631502.*



**ஸ்ரீமத் ஸத்குரு சாந்தானந்த சுவாமிகள்,**
**சேலம், ஸ்ரீ ஸ்கந்தாஸ்ரமம்.**

கொழும்பின் தலைநகரில் இந்துப் பெருமக்களுக்கு ஆன்மீகம் மேலும் பெருக்கெடுப்பதற்காக மிகப்பெரிய திருப்பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இத்திருப்பணித் தொண்டு குன்றின் மேலிட்டதீபம் போல் பிரகாசிக்குமென நம்புகின்றோம்! ஆலய பரிபாலனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், இந்துப் பெருமக்கள் அனைவருக்கும் கோடான கோடி ஆசிகளை அனுப்புகிறோம். அன்பும், பண்பும், பணிவும், பொறுமையும் நிறைந்த நமது கொழும்பு மாநகரில் இருக்கும் இந்து மக்களே! "ஓம்" என்னும் பிரணவ மந்திரத்தின் உட்பொருளில் விளங்குபவர் விநாயகப் பெருமான். ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் தமக்கு மேல் தலைவர் இல்லாதவர் என்பதை நம்புங்கள். ஷண்மதங்களில் கணபதியை வழிபடும் நெறி காணபத்யமென்று பெயர். மன்னுயர்களின் மூலாதாரத்தில் அமர்ந்து ஜீவனை ரட்சிப்பவர் கணபதியே. ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆதி சங்கரர் தமது அத்வைத சித்தாந்தத்தில் கணபதி தத்துவத்தைச் சாரமாக்கிக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

அகில லோகத்துக்கும் தந்தையான பரமேஸ்வரரின் புத்திரன் ஆனதினால் எல்லோரும் பிள்ளையாரை முதலில் நினைத்துக் கொள்ள வேண்டும். பிள்ளையார் ப்ரம்ம ஸ்வரூபம்! சொல்லும் பொருளும் அற்ற நிலைதான் கணபதியின் நிஜஸ்வரூபம்.

ஓம் என்னும் ப்ரணவமே நிர்க்குணப்ரம்மம். ஓம் என்னும் மந்திர ஜபத்தால் பரம் பொருளான விநாயகருடன் ஒன்றாகி விடலாம். சகல ஜகத்தையும் கணபதி தம்முள்ளே அடக்கிக் கொண்டவர். ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரை வழிபடுகிறவர்கள் உண்மையிலேயே பெரும் பாக்கியசாலிகளாவார்கள். கொழும்பிலுள்ள இந்துப் பெருமக்களுக்குத் தொண்டு செய்துவரும் பக்தகோடிகள் அனைவரையும் வாழ்த்துகிறோம். இறைவனுக்குச் செய்யும் தூய தொண்டு ஒருவனுடைய வாழ்வின் லட்சியக் கதவைத் திறந்து இறைவனின் சக்திகளை உணரச் செய்யும்.

மனிதர்களுக்கு நல்லது செய்வதே கடவுளுக்குச் செய்யும் தொண்டாகும். பிறரை இன்புறச் செய்தல், நம்மை மேல்நிலைக்கு உயரச் செய்யும். எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் யாம் அறியோம்.

*நல்லதை நினையுங்கள்! நல்லதைப் பேசுங்கள்! நல்லதைச் செய்யுங்கள்!*

*கொழும்பு மாநகரில் உள்ள அத்துணை இந்து மக்களுக்கும் கோடான கோடி ஆசிகள். சுபம்.*

*உமையாபட்டி,*
*சேலம் 636140.*



**சுவாமி ஆத்மகனாநந்தா,**
இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு.

கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் நூதன ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா ஸப்ததள ராஜகோபுர மஹாகும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் ஆவணி 8ம் நாள் (24.08.2001) அன்று நடைபெற உள்ளதென்பதை அறிந்து, இவ்வாழ்த்துச் செய்தியை மகிழ்வுடன் வழங்குகிறோம்.

'தடம் கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்' என, இறைவனை உள்ளங்கை நெல்லிக்கனி போல கண்டுணர்ந்த நமது ஞானியர் பரம்பரை, 'இறையனுபூதியே வாழ்க்கையின் உன்னத நோக்கம்' என வாழ்க்கையின் இலக்கணத்தை வகுத்தனர். அந்த இறைஞானத்தைப் பெறும் முயற்சிகளில் ஒன்றாக, இறைவழிபாட்டை அமைத்து, அதற்காக ஆலயங்களையும் சமைத்தனர். அத்துடன் அந்த இறைவழிபாடு, ஆலயங்களுக்கு வெளியே மக்களுக்குச் செய்யும் தொண்டின் மூலமாகவும் அமைய வேண்டும் என்றும் உணர்த்தினர்.

இம்மஹாகும்பாபிஷேகப் பெருவிழாவில் பங்கேற்கும் அனைவருக்கும் இறைவனது திருவருள் பூரணமாகக் கிட்டப் பிரார்த்திக்கிறோம். இவ்வாலயப் புனருத்தாரணப் பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி உழைத்த திருப்பணிக்குழுவினர்க்கும், நிதிவழங்கிய அன்பர்களுக்கும், சகல மேன்மைகளும் கிட்ட இறைவன் திருவருள் புரியப் பிரார்த்திக்கிறோம்!

*இராமகிருஷ்ண மிஷன்,*
*இலங்கைக் கிளை,*
*40, இராமகிருஷ்ண வீதி,*
*கொழும்பு - 06.*



திருவளர்த்திரு காசிவாசி
முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
காசித்திருமடம், திருப்பனந்தாள்.

சைவசமயத்தின்பாலும், செந்தமிழிடத்தும், ஞானியர்தம் அருட்பெருக்கிலும், மாறாத பற்றுதல் மிக்குடைய மக்கள் வாழ்கின்ற இலங்கையின், கொழும்பு பம்பலப்பிட்டி நகரில் ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் திருக்கோயிலின் இராஜகோபுரத் திருப்பணி நிறைவுற்று 24.08.2001 அன்று குடமுழுக்கு விழா நிகழவுள்ளதும், விழா மலர் ஒன்று விரையார்ந்த மலராய்ப் பூக்க இருப்பதும் அறிந்து மகிழ்ச்சி.

இன்னிசை வீணையர் ஒருபுறமும், இருக்கொடு தோத்திரம் இயம்புபவர் ஒருபுறமும், துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபுறமுமாய்ப் பல்திறத்து அன்பர்கள் கூடி வழிபாடாற்றிக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதும் சிறப்பு மிக்க திருக்கோயிலின் குடமுழுக்குப் பெருவிழா செம்மையாய் நிகழவும், 'மலர்' பல்வகை இலக்கிய மணம் கமழும் மலராய் மலரவும் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம். *சுபம்!*

சிவசிவ

*காசித்திருமடம்,*
*திருப்பனந்தாள் - 612504,*
*தஞ்சாவூர்.*



**சீர் வளர் சீர் சிவப்பிரகாச தேசிக,**
**பரமாசாரிய சுவாமிகள்,**
**திருவாவடுதுறை ஆதீனம்.**

திருஞானசம்பந்தப் பெருமானாலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளாலும் திருப்பாடல்கள் பெற்ற தலங்களைக்கொண்ட இலங்கையின் தலைநகராகிய கொழும்பில், சம்மாங்கோடு அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி கோயில் தேவஸ்தான, பம்பலப்பிட்டி அருள்மிகு மாணிக்க விநாயகர் திருக்கோயில் திருக்குடமுழுக்கு விழா நிகழும் விஷு ஆண்டு ஆவணித் திங்கள் சுவாதி நன்னாளில் நடைபெறுவதும், விழாச் சார்பாகச் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப் பெறுவதும் தெரிந்து மகிழ்கிறோம்.

நாயகர்களுக்கெல்லாம் நாயகர் விநாயகர். தனது அடி வழிபடுமவர் இடர் கடிந்து இன்பம் அருளுபவர். உயிர்களை இருவினை ஒப்பின்வழி நடத்தி முத்தி அருளும் இப்பெருமான் அருள்மிகு மாணிக்க விநாயகராகக் கொழும்பு-பம்பலப்பிட்டியில் திருக்கோயில் கொண்டு அருள்பாலிக்கின்றார். பழமையும் அருட்சிறப்பும் மிகுந்த இத்திருக்கோயில், புகழ் பரவித் திகழும் முருகப்பிரான் திருத்தலமாகிய கதிர்காமத்தில் நடைபெறும் பெருவிழாவை ஒட்டிக் கொழும்பில் ஆடிவேல் விழாவைக் கொள்ளும் அருள்மிகு கதிர்வேலாயுதசுவாமி திருக்கோயிலோடு சிறந்த தொடர்பு உடையது.

இன்ன பல சிறப்புகளைக் கொண்ட இத்திருக்கோயிலில் பல ஆண்டுகளுக்குப் பின்னர் பக்தப் பெருமக்களின் ஆர்வம் மிகு சீரிய முயற்சியினால் புதுவனவாக இராஜகோபுரம், விமானம், மண்டபம் முதலியன அமைத்துத் திருப்பணிகளை நிறைவு செய்தும் தண்டாயுதபாணி முதலாய மூர்த்திகளை நூதனமாகப் பிரதிட்டை செய்தும் சிவாகம விதிப்படி எட்டு கால யாகபூசைகளை முறையாக நிகழ்ச்சிசெய்தும் விழா நடைபெறுவது போற்றற்குரியது.

திருக்குட முழுக்கு விழாவும், சார்புடைய நிகழ்ச்சிகளும் சீரும் சிறப்புமுற நடைபெறவும், விழா இனிய நினைவு என்றும் நிலவ வெளியிடப்பெறும் சிறப்பு மலர் அரிய படைப்புகளைக் கொண்டு தெய்வமணம் கமழ மலர்ந்து இன்ப அன்பினைப் பெருக்கவும் அருள, நம் ஆன்மார்த்த மூர்த்தி அருள் தரு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்திக்கின்றோம்.

*திருக்கைலாய பரம்பரைத்*
*திருவாவடுதுறை ஆதீனம்*
*திருவாவடுதுறை - 609803*



ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத
ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய
சுவாமிகள்,
மதுரை ஆதீனம்.

கொழும்பு காலிவீதி, பம்பலப்பிட்டி எனும் சிறுநகரில் அமைந்துள்ள ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் பெருஞ்சாந்திப் பெருவிழா வருகின்ற ஆகஸ்ட் 24-ஆம் நாள் நடக்கவிருப்பதையும், அதனையொட்டி சிறப்பு மலர் வெளியீட்டு விழா வைத்திருப்பதையும் அறிந்து மகிழ்ந்தோம்.

சிறப்பு மலர் ஆன்மீகக் கருத்துக்கள் கொண்டதாகவும், சமய உணர்வுமிக்கதாகவும், இறை பக்தியினைக் கொண்டதாகவும் அமைந்திடவும், பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்புற நடந்தேறிடவும், விழாக் குழுவினர், சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் பரிபாலனச் சங்க உறுப்பினர்கள் மற்றும் அனைவரும் வாழ்வில் எல்லா நலன்களும், வளங்களும் பெற்றிடவும் திருவருள் பாலிக்குமாறு எமது நிரந்தரத் தாய் தந்தையாகிய சிவபெருமானைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

*எல்லோருக்கும் ஆசீர்வாதம்!*


*மதுரை ஆதீனம்,*
*70, தெற்காவணி மூல வீதி,*
*மதுரை - 625001*



திருவம்பலதேசிக ஞானப்பிரகாச
பரமாச்சார்ய சுவாமிகள்,
தொண்டை மண்டல ஆதீனம்.

அன்புடையீர்,

இலங்கை, கொழும்பு மாநகர் சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில் தேவஸ்தான - பம்பலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் நூதன ஆலயப் புனராவர்த்தனப் பிரதிஷ்டா ஸப்ததள ராஜகோபுர மகாகும்பாபிஷேக சுப முகூர்த்த பத்திரிகை கிடைத்தது.

எல்லாம் வல்ல ஏலவார் குழலி உடனாய ஏகாம்பர ஈசுவரர் திருவருளால், விழா சிறக்கவும் இனிது நிறைவேறவும் வேண்டுகின்றேன்.

*57, வி. சி. பரமசிவம் தெரு,*
*தொண்டை மண்டல ஆதீனம்,*
*பெரிய காஞ்சீபுரம்-631502*



ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.


விநாயகர் அடியார்களே,

கொழும்பு பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் அபிஷேகம் மகாகும்பாபிஷேகமாகும். இதனை இவ்வாலயத்தில் இன்று செய்வதையிட்டு அனைத்து மக்களும் மகிழ்ச்சியடைகின்றனர். கொழும்பு சைவத்தமிழ் மக்களின் பண்பாட்டுக் கருவூலமாக விளங்குவது இவ்வாலயம். வேண்டுவார் வேண்டுவதை அருளும் பொருட்டு இவ்வாலயத்தில் விக்கினங்கள் எல்லாம் நீக்கும் விநாயகராக மாணிக்க விநாயகர் வீற்றிருக்கின்றார். " ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பதும், "கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதும் எமது சமயக் கருத்தாகும். சைவமக்கள் எங்கு வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் ஆலயம் அமைத்து வழிபாடு செய்து இறையாசி வேண்டி மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து கொண்டிருப்பதே அவர் பண்பு .

ஆலய வழிபாடுகள், விழாக்கள் மனிதனை மனித நேயத்தோடு வாழ வழி வகுக்கின்றன. பழமையும் பெருமையும் வாய்ந்த இவ் வாலயம் இன்று உயர்ந்த இராஜகோபுரத்தோடு காட்சி தருவது எல்லா மத மக்களின் உள்ளத்தையும் தெய்வீக சிந்தனையில் ஆழ்த்தியுள்ளது. ஆடிவிழாக் காலங்களில் முருகப் பெருமான் இவ்வாலயத்தில் வீற்றிருந்து அருளாட்சி புரிவது வரலாற்று நிகழ்ச்சியாகும். இவ்வாலயத்தைப் புதிதாக அமைத்துள்ள ஆலய பரிபாலன சபையினரையும், கும்பாபிஷேகத்தை நடாத்தும் அந்தணப் பெருமக்களையும், கொழும்பு வாழ் சைவ மக்களையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*



தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகளார்,
பேரூர் ஆதீனம்.

செந்தமிழும் சிவநெறியும் தழைக்கப் பண்பு சேர்ந்திட்ட சான்றோர்கள் இலங்கைத் தீவில்
கந்தனருள் கதிர்காமம் போற்றிச் செவ்வேல் கவின் ஆடி விழாக் காண்பார் கதிரைவேலர்
சிந்தனை சேர் அன்பர்மிகு சம்மாங்கோடு திகழ் பம்பலப்பிட்டியினில் தெய்வக் கோயில்
தந்தவர் ஐங்கரனார்க்கும் முருகனுக்கும் சார்பான கடவுளர்க்கும் அமைத்தார் வாழி!

திருமுறையை இளமைமுதல் கல்வியுடன் பயின்றுவரும் செழுமையுள்ளார்
ஒருமைமிகு வழிபாட்டால் உவந்திடுவார் நெஞ்சநெகிழ்வு உடையாராகித்
திருமுருகன் மாணிக்கவிநாயகர்க்கும் கோபுரங்கள் சேர்ந்த கோயில்
அருமைமிகு சிற்பமுடன் அமைத்த அன்பால் திருக்குட நீராட்டுகின்றார்!

பல்வகையாம் அல்லல்களால் படைபடையாய் அயல்நாடு பரவி மக்கள்
அல்லலுற்றார் என்றாலும் அங்கங்கு சமயநெறி ஆக்கங் கண்டார்
நில்லாத உலகியல்பைக் கொழும்பிலுள்ள தமிழ்மக்கள் நினைந்து கோயில்
மல்கும் வளத்துடன் புதுக்கித் திருக்குட நீராட்டுகின்ற மரபு வாழி!

உலகெங்கும் வாழ் தமிழர் பண்பால் அன்பால் உயர்கின்றார் என்றாலும் உரிய நாட்டில்
பலநலமும் பெறும் உரிமை; ஆட்சிதன்னில் பங்கேற்றல்; திருவருளால் பதிய வேண்டும்
அலகில் செழுந்தமிழ் மரபு, மாசு நீங்கி அயல் வழக்கின் துறைவெல்லும் ஆற்றலோடு
நிலவுலகில் சிறந்தோங்கிச் சாந்தலிங்கர் திருவருளால் நீடுழி வாழி வாழி.

பேரூர்,
கோயமுத்தூர் - 641010.



**தவத்திரு ஊரன் அடிகளார்,**
**அருட்பா ஆசிரமம்.**

சிவபூமி என்று திருமூலரால் புகழ(ல)ப் பெறும் இலங்கையின் தலைநகரமான கொழும்பு மாநகரிலே, ஆண்டுதோறும் நிகழும் விழாக்களில் ஆடிவேல் விழா மிகவும் சிறப்பானது. மத்திய கொழும்பின் முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்திலிருந்து காலையில் தேர் புறப்பட்டுக் கொழும்பு நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலமாகப் பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தை மாலையில் வந்தடைந்து, இரவு தங்கி, மூன்று நாள் இருந்து, மூன்று தினங்களுக்குப்பின் இந்துமா சமுத்திரத்தில் நீராட்டுவிழா நிகழ்ந்து முன் உலாவந்த அதே வீதிகள் வழியாக மீண்டும் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தை வந்தடையும். இவ்விரு ஆலயங்களுக்கும் இடையேயுள்ள தூரம் ஏறத்தாழப் பத்து கிலோ மீட்டர். இப்பத்துக்கல் தேரோட்ட, மூன்றுநாள் ஆடிவேல் விழா கொழும்புவாழ் இந்துக்களிடையே பக்தி மணங் கமழும் பெருவிழாவாக நிகழ்ந்து வருகிறது. இவ்விழாவின் போது மத, இன, பேதமின்றி இலட்சக்கணக்கான மக்கள் கூடி வழிபாடு செய்வார்கள். இவ்வினிய ஆடிவேல் விழாவின் கண்கொள்ளாக் காட்சியை யாம் 1994 ஆம் ஆண்டில் அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்களின் அழைப்பின்பேரில் இலங்கை வந்திருந்த போது கண்டு மகிழ்ந்தோம்.


150 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமை மிக்கதான பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கவிநாயகர் கோயிலுக்கு ஒரு பெருந் திருப்பணியைச் செய்து ஆலயத்தை விரிவுபடுத்திப் புதிய மண்டபங்களை அமைத்து 91 அடி உயரமுள்ள எழுநிலை இராஜகோபுரத்தை அமைத்துக் குடநீராட்டுவிழாவை விநாயகர் சதுர்த்தசி விழாவை அடுத்து 24.08.2001 வெள்ளிக்கிழமையன்று மிகச்சிறப்பாக நடத்துவது பாராட்டுவதற்குரிய பெரும் புண்ணியச் செயலாகும்.

அழைப்பிதழ்களும் கும்பாபிஷேகக் கிரியைகளின் செய்முறைகளும் பக்தி சிரத்தையுடன் மிக அருமையாக அமைக்கப் பெற்றுள்ளன. இக்கும்பாபிஷேகத்தின் பயனாக இலங்கையின் பழைய அமைதி மீண்டும் சிறிது சிறிதாக நாளடைவில் நிலைபெறத் திருவருள் துணைசெய்ய வேண்டுவோம்.

இருபெரும் கோயில்களின் பரிபாலனத்தோடு சைவ சமய பரிபாலனமும் திறம்படச் செய்துவரும் பரிபாலன சபையார் சம்மாங்கோட்டார் நம் பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியர். மேலும் மேலும் இதுபோன்ற பணிகள் பல செய்து புகழும் புண்ணியமும் பெற அன்பான வாழ்த்துக்கள்.

*வாழ்க ! வாழ்க ! !*

*ஜீவகாருண்யக் குடில்,*
*த. பெ. இல. - 2,*
*வடலூர் - 607303*



**யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி,**
உலக சமுதாய சேவை நிலையம்.


இலங்கையின் கொழும்பு மாநகரிலே காலி வீதி எனும் புகழ் பெற்ற வீதியில், பம்பலப்பிட்டி எனும் சிறுநகரில் ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலயத்தின் குடமுழுக்குப் பெருவிழா மிகச் சிறப்பாக நடைபெறவும் அங்கு ஆண், பெண் இருபால் மக்கள் எல்லோரும் பக்தி நிலையில் திளைத்து பிறகு ஞான நெறியில், இறைநிலையை ஒரு குருவின் மூலம் உணர்ந்து சிறந்தோங்கி வாழ வாழ்க வளமுடன் என இறை நிலையில் நின்று வாழ்த்துகிறேன்.

ஒரு இலட்சியத்தைக் குறிக்கும் ஒரு அழகிய உருவமும், தனக்குப் பொருள், புலனின்பம், புகழ், அதிகாரம், உயிர்களின் நட்பும் அளிக்கும் என்ற நம்பிக்கையும் உள்ளடக்கமாக உள்ளவைதான் சிலைகள் ஆகும். அவ்வாறு வணங்க வணங்க வணங்குபவன் மனம் உருவத்தாலும் செயலாலும் அந்தத் தன்மையை உருவாக்கி வலுப்படுத்திக் கொள்கிறது. மேலும் சிலை வணக்க முறையில் மூன்று நல்ல பயன் தரும் செயல் முறைகள் அடங்கியுள்ளன. அவை 1) யந்திரம், 2) மந்திரம், 3) தந்திரம். மனதில் உருவப் பதிவாகக் கொள்வதற்குச் சிலை, படம், எழுத்துக்கள் அடங்கிய சக்கரம் இவை யந்திரமாகும்.

ஒவ்வொரு ஒலிக்கும் சீவகாந்தத்தை ஒவ்வொரு முறையில் இயக்கும் வல்லமை உண்டு. மொத்தம் 50 ஒலிகளை எழுத்துக்கள் மூலமாக உச்சரிக்கிறோம். ஒரு எழுத்துடன் மற்ற எழுத்துச் சேரும்போது அந்தக் கூட்டு ஒலிக்குத் தனி விளைவு உண்டு. நீண்ட கால அனுபவத்தால் முன்னோர்கள் தனி எழுத்திலும், கூட்டுஎழுத்துக்களிலும் ஏற்படும் நல்விளைவுகளையும், தீய விளைவுகளையும் கணக்கெடுத்து வைத்துள்ளார்கள். இந்த முறையின் மூலம் மனிதன் தேவைப்படும் பொருள், புகழ், புலன், இன்பம், அதிகாரம், நட்பு (வசியம்) இவற்றிற்கு எந்தெந்த ஒலிகள் எவ்வாறு ஒலிக்க வேண்டுமென்ற ஒலி விஞ்ஞானமே மந்திரங்கள் ஆகும். தனக்கு என்ன வேண்டுமென்பதைத் தெளிவாகச் சங்கல்பங்களாக்கி பல தடவைகள் அதையே நினைத்தும் சொல்லியும் தனது அறிவாட்சித் தரத்தை மேன்மைப் படுத்திக் கொள்ளத் தந்திரம் உதவுகிறது. எனவே பொருள் பற்று, மக்கள் பற்று உடையவர்கள். அவர்கள் விருப்பங்களில் வெற்றி பெற யந்திரம், மந்திரம், தந்திரம் ஆகிய முறைகளைக் கைக்கொள்கின்றனர்.

வினை-விளைவு தத்துவம் இறையுணர்வு பெற்றவர்களுக்கு இயல்பாகி வாழ்வில் நிறைவு தரும். இறையுணர்வு எனும் ஞானநெறி உலகில் பரவ வேண்டும். அதன் மூலமே மனிதன், வினைகளைத் தூய்மை செய்து கொண்டு பிறவிக் கடலைக் கடக்க முடியும் என்ற கருத்து உயர்வானதும் சிறப்பானதும் ஆகும். அதற்கு மெய்யுணர்வால் தகுதி பெற்றவர்கள் பொறுப்பேற்று முறையான பயிற்சியை வேண்டுவோர்களுக்கு அளித்து உதவ முன்வர வேண்டும். வாழ்க்கைக் கடமைகளில் இதுவே உயர்வானதாகும்.

*20, 2ம், கடற்கரைத் தெரு, வால்மீகிநகர்,*
*திருவான்மியூர், சென்னை–41.*



சுவாமி ரமண சைத்தன்யா,
சின்மயா மிஷன், கொழும்பு.

அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் வரும் ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி நடக்க இருப்பது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி.

பிள்ளையார் மங்களம் அருள்பவர்; மற்றும் ஞானம் அருள்பவர். அவரை வணங்கினால் இந்த உலகத்தில் நாம் விரும்புவதெல்லாம் கிடைக்கப் பெறலாம். விடுதலை மட்டுமே விரும்பினால் அவர் அருளால் அதனையும் கிடைக்கப் பெறலாம்.

அவரைச் சரணடைவது நம் அனைவரின் உடனடித் தேவையாகும். அப்படிச் சரணடைந்தால் நம்முடைய எல்லாச் சஞ்சலங்களும், துயரங்களும் உடனடியாக நீங்கி, நல்ல சந்தோஷமும், அமைதியும் நம் வாழ்வில் துலங்கும்.

பிள்ளையாரைப் போல அருமையான கடவுள் வேறெங்குமில்லை. ஔவைப் பாட்டி கைலாயம் போக விரும்பியது தான் தாமதம், உடனடியாகத் தன் தும்பிக்கையால் ஒரே தூக்காகத் தூக்கி கைலயம்பதியைத் தரிசிக்க அருள் புரிந்து விட்டார்.

அவர் அருள் இருந்தால் வேறென்ன வேண்டும். எதற்காகக் கவலைப்பட வேண்டும். அருமையான கடவுள் இருக்கையில் அவரைக் கும்பிட நினைக்காதவர்கள் எவ்வளவு துரதிர்ஷ்டசாலிகள்.

அவருடைய ஆலயக் கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்து, நாம் அனைவரும் அவருடைய அருள் மழையில் நனைந்து ஆனந்தமாக வாழ்வோமாக.

*21/1 டி. கிரெஸ்டர் பிளேஸ்,*
*கொழும்பு - 4.*



டி. சி. தியாகராஜ சிவாச்சாரியார்,
ஆகம சாஸ்திர சக்கரவர்த்தி.

திருக்கோயிலின் அமைப்பும், திருப்பணியின் சிறப்பும், மூர்த்தியின் அருளும் பொருந்தியது இறைவனின் அருள்.

மேற்படி கும்பாபிஷேகச் சிறப்பானது, வரலாற்றிலேயே நடந்ததில்லை என்ற முறையில், ஆகம நிகழ்ச்சியும் கும்பாபிஷேக நிர்வாகமும் பக்தர்களுக்கு மரியாதை முறையான வரவேற்பும், சிவாச்சாரியப் பெருமக்களுக்கு ராஜோபசார மரியாதையும் போற்றத்தக்க முறையில் அமைந்திருந்தன என்று சொல்லலாம். இந்தியாவிலிருந்து வந்து சர்வ சாதகம் வகித்த நானும் என்னுடன் கூடவந்த சிவாச்சாரியார்களும், உங்கள் சமுதாயத்திற்கே ஆசிகூறுகிறோம்.

நீங்கள் நீண்டநாள் வாழ்ந்து இன்னும் பல திருப்பணிகள் செய்து திடகாத்திரமாயிருந்து பேரானந்தப் பெருவாழ்வு வாழ எங்களுடைய ஆசீர்வாதம் உரியதாகுக.

*இல. 86, பெருந்தெரு,*
*திருக்கழுக்குன்றம் - 603109.*



சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்,
ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்.

பிரணவம் என்பது பிள்ளையார் வடிவம். இவ் ஓங்காரம் பரம் பொருளை உணர்த்துகின்றது. இதுவே மூல ஒலி. இவ் ஒலிவடிவில் அகாரம், உகாரம், மகாரம் என்பன கலந்துள்ளன. பிரணவம் ஐந்தெழுத்தாகும். இவ்வைந்திற்கும் உரிய அதிதேவதைகளாக அகரத்திற்கு - பிரமனும், உகரத்திற்கு - திருமாலும், மகரத்திற்கு - உருத்திரனும், பிந்துவிற்கு - மகேசனும், நாதத்திற்கு - சதாசிவனும் கூறப்படுகின்றன.

இவ்வண்ணம் எழுத்திலும் எண்ணத்திலும் செயலிலும் கலந்து நின்று காத்து வரும் பிள்ளையார் வழிபாட்டிற்கு உகந்த இடமாக இறையருள் பொலிந்து விளங்குகின்றது பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்.

கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி தேவஸ்தான நிர்வாகத்தினரே பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தினதும் பரிபாலன சபையினராவர். பரம்பரை பரம்பரையாக இவர்கள் இவ்வாலயத்தை நிர்வாகம் செய்து வருகின்றார்கள். மன்னர் பரம்பரை இன்று இல்லாத போதும், அரசன் ராஜராஜ சோழன் பெயரை அவன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் இன்றும் அழியாது காத்துநிற்கிறது. மாணிக்கவாசகப் பெருமான் கட்டிய ஆவுடையார் கோவில் என்பனவும் இதனை நிலை நிறுத்திக் கொண்டிருப்பதைக் காணலாம். காலம் மாறினாலும் நிர்வாகத்தினர் செய்யும் அறப்பணிகள் அவர்தம் பெயரை அழியாது நின்று நிலைக்க வைக்கும்.

'உபய' என்றால் சமமான என்று பொருளாகும். ஆலயப் பணிகளில் பங்கெடுக்கும் உபயகாரரும் எஜமானர்களுக்குச் சமமானவர்களே. ஆடிவேல் விழாவினால் கதிர் வேலாயுத சுவாமி கோவிலும், ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயமும் பெயர் பெற்றுச் சிறந்து விளங்குகின்றன. நூறு வருடத்திற்கு மேல் பூஜிக்கப்பட்டால் பூஜிக்கப்படும் அந்த விக்கிரகம் சுயம்பு மூர்த்திக்குச் சமானமாகும். இவ்வாலயம் பல்லாண்டு காலம் பழமையானது; பின்னர் புதுமைக்கும் புதுமையாக ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு பஞ்சதள விமானம், சப்ததள கோபுரம், துர்க்கை, துவார கணபதி, சுப்ரமண்யார் (தண்டாயுதபாணி), நவக்கிரகம், இடும்பன் ஆதியாம் மூர்த்திகளுக்கும் கற்கோவில், பொற்கோவில் எனச் சிறப்புற அமைத்தும் அத்துடன் சங்கீத விசாரத மண்டபம், பின்புறத்தில் கல்யாண மண்டபம், அன்னதான மண்டபம் என்பனவும் அழகுற நன்கமைந்து விளங்குகின்றன.

கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடாத்திய தர்மகர்த்தாக்கள், தொண்டு செய்த அடியார்கள், தரிசித்த பக்தர்கள் யாவரும் நல்லன எல்லாம் பெற்றுப் பல்லாண்டு வாழ, வினைதீர்க்கும் அருள்மிகு மாணிக்க விநாயகன் திருவருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

*ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்,*
*நயினை.*



**சிவஸ்ரீ பா. சிற்சபேசக்குருக்கள்**
**ஆலய பிரதம குரு *(மணி ஐயர்)***

ஓங்கார ஸ்வரூபியாய் விளங்கும் விநாயகப் பெருமான் "ஸ்ரீ மாணிக்கவிநாயகப் பெருமான்" என்ற திருநாமங் கொண்டு, கொழும்பு நகரின் பம்பலப்பிட்டிப் பகுதியில் கோவில் கொண்டெழுந்தருளி, அடியவர்களுக்கு நல்லருள் பாலித்து வருகின்றார்.

எம்பெருமானுக்குரிய இக்கோவில் வரலாற்றுப் புகழ்மிக்கது; விநாயகப் பெருமானின் புதிய ஆலயம் சப்ததள இராஜகோபுரம், பஞ்சதள ஸ்தூபி போன்றவற்றால் சிறப்பமைந்து, துவார கணபதி, துர்க்கை, தண்டாயுதபாணி, நவக்கிரகம், இடும்பன் ஆகிய பரிவார மூர்த்திகளுக்குப் புதிய ஆலயங்களும் புதிதாக அழகுற அமைக்கப்பட்டு விநாயகர், வள்ளி தெய்வயானை சமேத சுப்பிரமணியர், துர்க்கை, மணிவாசகர் ஆகிய உற்சவ மூர்த்திகளுக்கு வசந்த மண்டபமும் அமைந்து, தலைசிறந்த சிவாச்சார்யார்கள், இந்தியாவில் இருந்து வருகை தந்து சிறப்பித்த வேதாகம விற்பன்னர்கள் முன்னிலையில் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேக விழாவும் சிறப்புறப் பூர்த்தியாகியுள்ளது.

கொழும்பு வாழ் சைவ மக்களின் முழுமுதற் கடவுளாக விளங்கும் பெருமான் பழம் பெருமை கொண்டவர். இந்துக்களால் மட்டுமன்றி ஏனைய சமயத்தினராலும் வணங்கப்பெறுபவர். இப்பெருமைகளைக்கொண்ட எம்பெருமானுக்குப் பரம்பரையாகத் தொண்டாற்றும் பெரும்பேறு எனது முன்னோர் மூலமாக எனக்கு அமைந்தமையிட்டுப் பெருமைப்படுகிறேன்.

கும்பாபிஷேக, மண்டலாபிஷேகப் பூர்த்தியினையொட்டிப் பரிபாலன சபையினர் விஷேட மலரினை வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன். சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் தேவஸ்தான பம்பலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயப் பரிபாலன சபையினரின் விடாமுயற்சியாலும், அயரா உழைப்பினாலும் நடைபெறும் இவ்விழாக்களைக் கண்டு தரிசித்தபாக்கியம் பெற்றவர்களுக்கும், நிருவாகத்தினருக்கும், ஏனைய மெய்யடியார்களுக்கும் மாணிக்க விநாயகப் பெருமானின் பூரண நல்லருள் கிடைக்கப் பிரார்த்தித்து அன்பாசிகளைக் கூறி அமைகிறேன்.

*சம்மாங்கோட்டார்*
*ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில்,*
*359, காலி வீதி,*
*கொழும்பு - 4.*




சாந்தி நாவுக்கரசன்,
பணிப்பாளர்.


தலைநகரில் பிரதான வீதியான காலிவீதியில் பம்பலப்பிட்டியிலே மிகவும் கம்பீரமாக எழுந்துள்ள இராஜகோபுரத்துடன் கூடிய ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகக் கிரியைகளும், தொடர்ந்து இடம்பெறும் மண்டலாபிஷேகப் பூஜைகளும் சிறப்புற நிறைவேற விக்னேஸ்வரப் பெருமானின் அருட்கடாட்சம் கிட்டியிருப்பது இப்பகுதியிலே வாழும் இந்து மக்களுக்குக் கிடைத்துள்ள பெரும் பேறாகும்.

இந்திய வர்த்தகப் பெருமக்களின் பக்தி ஈடுபாட்டினால் கட்டி எழுப்பப்பட்ட இவ்வாலயம், நூறாண்டுக்கும் மேற்பட்ட பழமை மிக்கதாகும். இக்காலகட்டத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள், மாணிக்கப்பிள்ளையாரை நெஞ்சுருக வணங்கி வழிபட்டு வந்துள்ளனர்.

இலங்கையின் வரலாற்றுப் புகழ் மிக்க கதிர்காமக் கந்தனின் வருடாந்தத் திருவிழா நடைபெறுங் காலங்களில், கொழும்பு மாநகரிலே, ஆடிவேல் விழா மிகச் சிறப்பாக நடைபெறும். ஆடிவேல் விழாக் காலத்தின்போது நாட்டின் அனைத்துப் பாகங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தலைநகரில் கூடுவது பெருஞ் சிறப்பாகும்.

1981ம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாக ஆடிவேல் விழா தொடர்ந்து இடம்பெறவில்லை. இக்காரணத்தினால் ஆலயத்தின் கும்பாபிஷேக வைபவமும் உரிய காலத்தில் நடைபெறத் திருவருள் வாய்க்கவில்லை.

தற்போது, ஆலயம் தமிழகத்தின் தேர்ந்த ஸ்தபதிகளின் கைவண்ணத்தில் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. நுண்ணிய வேலைப்பாடுகளுடன் கூடிய சிற்ப வடிவங்கள் வடிக்கப்பட்டுள்ளன. 91 அடி உயரமான இராஜகோபுரமும், 39 அடி உயரமான மூலஸ்தானக் கோபுரமும் அழகுற அமைந்துள்ளன. துர்க்காதேவிக்கென்றும் நவக்கிரகங்களுக்குமான புதிய பீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில், இத்தெய்வத் திருக்கைங்கரியத்தை மிகவும் கண்ணும் கருத்துமாக நிறைவேற்றியுள்ள ஆலய நிர்வாக சபையினரை மனமாரப் பாராட்டுகின்றேன். அவர்களின் எண்ணம் நிறைவேறப் பூரண ஒத்துழைப்பு நல்கிய சிற்பாசிரியர் குழுவினதும் கட்டிட நிர்மாணக் கலைஞர்களினதும் பணி போற்றுதற்குரியதாகும்.

இத்திருப்பணியுடன் தொடர்புடைய அனைவருக்கும், இவ்வாலயத்தில் வழிபடும் பக்தர்களுக்கும், நாட்டுக்கும், ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையாரின் கருணைப் பேரருள் பொழிய வேண்டுமென மனமாரப் பிரார்த்திக்கின்றேன்.


*இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,*
*248 1/1, காலி வீதி, கொழும்பு 04.*



**ஏ. கருப்பண்ண பிள்ளை,**
அறங்காவலர் சபைத் தலைவர்.

எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் திருவருளால் சம்மாங்கோட்டார், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான பம்பலப்பிட்டி, அருள்மிகு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தின் மகாகும்பாபிஷேகம் கடந்த 24. 08. 2001ம் நாள் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மண்டலாபிஷேகம் பூர்த்தியாகும் தினமான இன்று (10.10.2001) கும்பாபிஷேக நினைவாக இம்மலர் வெளியிட்டு வைக்கப்படுகின்றது.

இறைவனின் திருவருளும், பலரது அயராத முயற்சியும், உழைப்பும் சேர்ந்து ஏழுதள இராஜ கோபுரம், பஞ்சதள மூலவர் கோபுரம், மண்டபங்கள், தண்டாயுதபாணி, இடும்பன், துர்க்கை, துவார கணபதி, நவக்கிரகம் ஆகிய மூர்த்தங்களுக்குத் தனிச் சந்நிதிகள் என ஆலயம் மிகவும் சிறப்பாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஏறத்தாழ ஆறு ஆண்டுகள் நடைபெற்ற புனரமைப்புப் பணிகளுக்கு பலரும் இணைந்து பணியாற்றினர். தம்மை அர்ப்பணித்து இப்பெரும் பணியை நிறைவு செய்த திருப்புல்லணி திரு. நாகலிங்கம் ஸ்தபதி, திரு. சந்தனக்குமார் ஸ்தபதி குழுவினர் கட்டிடக் கலைஞர்களான இராஜூ சிவராமன், திரு. ஜெகதீஸ்வரன், ஆகியோருக்கு அறங்காவலர் சபையின் சார்பாக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

கும்பாபிஷேக வைபவத்தின்போது சிவாச்சாரியப் பெருமக்கள் மிகச்சிறப்பாகக் கிரியைகள் நடத்தியுதவினார்கள். திருப்பணிக்குழு உறுப்பினர்கள் பூரண ஒத்துழைப்பு நல்கினர். மேலும், வர்த்தக நிலைய உரிமையாளர்கள், ஊழியர்கள், நண்பர்கள் அனைவரும் - இப்பெரும்பணியை தமது சொந்தக் கடமையாகக் கருதி ஒன்றுபட்டு நின்று உதவினர்.

இத்தெய்வீக கைங்கர்யம் பூரணத்துவமாக நிறைவுபெற உதவிய அனைவருக்கும், பக்தர்களுக்கும் விநாயகப் பெருமானின் அருள் கிடைக்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

*சம்மாங்கோட்டார்*
*ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில்,*
*359, காலி வீதி, கொழும்பு - 4.*



**கா. சௌந்தரராஜன்,**
**அறங்காவலர்.**

புறக்கோட்டை, முதலாம் குறுக்குத்தெரு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி ஆலயம் இந்திய வர்த்தகப் பெருமக்களால் அமைக்கப்பட்ட தொன்மைமிக்க ஆலயமாகும். இவ்வாலயத்துடன் இணைந்ததாக, கொழும்பின் தென் பகுதிவாழ் இந்துமக்களுக்காக 1910ம் ஆண்டு அமைக்கப்பட்டதே பம்பலப்பிட்டி சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயமாகும்.

சிறிய மூலஸ்தானத்தையும், சிறிய மகாமண்டபத்தையும் கொண்டதாகவே இவ்வாலயம் விளங்கியது. ஆனால் பக்தர்கள் வருகையோ அதிகரித்துக் கொண்டே வந்தது. இதன் காரணமாகவே ஆலயத்தை விரிவுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட இறையருள் கூடியது. நல்லெண்ணம் மிக்க பெரியோர் பலரின் அரிய செயற்பாடாக இன்று ஆலயம் பக்தி மயத்தோடும், கலையம்சத்தோடும் திகழ்கின்றது.

இவ்விரு ஆலயங்களுடன் தொடர்புடைய ஆடிவேல் விழா ஆன்மீக அன்பர்களுக்கும் கலை ரசிகர்களுக்கும் பெருவிருந்தாக அமைவதாகும். இவவிழாவிற்கென தமிழகக் கலைஞர்கள், நாதஸ்வர வித்துவான்கள் எனப்பலரும் வரவழைக்கப்படுவர். ஆடிவேல் விழாவின் மூலம் இன, மத பேதமின்றி மக்கள் ஒன்றுபட சம்மாங்கோட்டார் ஆலயங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

இன்று, நாம் மிகச்சிறப்பாக இந்த ஆலயத்தை அமைத்து கும்பாபிஷேகம் கண்டுள்ள வேளையில் இவ்வாலயம் தோன்றவும், நிலைபெறவும், ஆடிவேல் விழாக்கள் நிகழவும் அரும்பணியாற்றிய ஆரம்பகர்த்தாக்கள், முன்னாள் அறங்காவலர் பெருமக்கள், முன்னாள் நிர்வாகிகள் அனைவரையும் நன்றியோடு நினைவுகூர்வது எமது தலையாய கடமை என நான் கருதுகின்றேன். விநாயகப் பெருமானின் அருளால் அவர்கள் தொட்டதை நாம் தொடர்ந்து செய்தோம்.

ஆன்மீக, கலைப் பண்பாட்டுச் சின்னமாக இராஜகோபுரத்தோடும், அழகிய மண்டபங்கள், சந்நிதிகளோடும் இவ்வாலயம் அமைய, எம்முடன் ஒத்துழைத்த இன்றைய நிர்வாகிகள், வர்த்தகப்பெருமக்கள், கட்டிடக்கலைகளுர்கள், ஸ்தபதி குழுவினர், கிரியைகளை நிகழ்த்திய சிவாச்சாரியப் பெருமக்கள், பக்தர்கள் அனைவருக்கும் விநாயகப்பெருமானின் ஆசிகள் கிட்டுவதாக!

*சம்மாங்கோட்டார்*
*ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில்,*
*359, காலி வீதி, கொழும்பு - 4.*



**அ. மாணிக்கவாசகர்,**
திருப்பணிச்சபைத் தலைவர், அறங்காவலர்.

கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் தேவஸ்தான பம்பலப்பிட்டி அருள் மிகு ஸ்ரீ மாணிக்கவிநாயகர் நூதன ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா ஸப்ததள இராஜகோபுர மகா கும்பாபிஷேக பூர்த்தியை முன்னிட்டு 48வது மண்டலாபிஷேக தினமான (10.10.2001) இன்று வெளியிடப்படவுள்ள சிறப்பு மலர் நம் எல்லோரின் கரங்களையும் அலங்கரிக்க வேண்டும் என ஸ்ரீ மாணிக்க விநாயகரைப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்ஆலயம் மூலவர் விநாயகர், தண்டாயுதபாணி, இடும்பனுடன் புதிதாகத்துவார கணபதி, துர்க்கை, நவக்கிரகம், வசந்தமண்டப உற்சவமூர்த்திகளுடன் இந்தியாவிலும் மற்றும் வெளி நாடுகளிலும் மிகவும் பிரசித்திபெற்ற பல பெரிய ஆலயங்களைக் கட்டிய திரு கணபதி ஸ்தபதி அவரின் ஆலோசனையுடன் கோவில் முழுவதும் பல வசதிகளுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ் ஆலயத்தின் வரைபடம் பிரபல கட்டிடக்கலைஞர் திரு. பி. சிவராமன் (ARCH TRIAD CONSULTANTS) அவர்களினால் பூர்த்தி செய்யப்பட்டு திரு. ஜெகதீசன் (LUCKLAND - DEVELOPMENT LTD) அவர்களின் கட்டிட கட்டுப்பணியுடன், திருப்புல்லாணி நாகலிங்கம் ஸ்தபதி குடும்ப அங்கத்தினர்களின் சிற்ப வேலையுடன் 26.01.1996 ஆம் திகதி இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழாவுடன் ஆரம்பிக்கப்பட்டு 17. 08. 2001 ஆம் திகதி பல சிவாச்சாரியார்களுடன் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு, 24.08.2001ம் திகதி வெகு சிறப்பாக மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. சுமார் ஐந்து வருடங்கள் எவ்வித சிரமங்களுமில்லாமல் இவ்வாலயத்தைக் கட்டி முடிக்க உதவிய திரு சிவராமன் அவர்களுக்கும் அவரின் உதவியாளர்களுக்கும், திரு. ஜெகதீசன் அவர்களுக்கும், நாகலிங்கம் ஸ்தபதி குடும்பத்தினருக்கும், சிறப்புப் பணியாற்றிய திரு. கணேசன் அவர்களுக்கும், மேலும் கும்பாபிஷேகம் சிறப்பாக அமைய வேண்டுமென தங்களது வர்த்தக ஸ்தாபனங்களை மூடி பலவழிகளிலும் உதவிய வர்த்தக உரிமையாளர்களுக்கும் அவர்களின் உதவியாளர்களுக்கும், கும்பாபிஷேகக் குழு அங்கத்தினர்களுக்கும் மற்றும் இலங்கையிலும், இந்தியாவிலும் பல வழிகளிலும் உதவிய நண்பர்கள் அனைவருக்கும் எமது கதிர்வேலாயுத சுவாமி கோவில் பரிபாலன சபையின் சார்பில் இச்சிறப்பு மலர் மூலமாக நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், இவ்வாலயம் மேலும் சிறப்புப் பெற எல்லோரின் ஒத்துழைப்பையும் வேண்டி ஸ்ரீ மாணிக்க விநாயகரின் திருவருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். சுபம்.

*சம்மாங்கோட்டார்*
*ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில்,*
*359, காலி வீதி, கொழும்பு - 4.*



**பெரி. முத்துசாமி,**
**பொதுச் செயலாளர்.**

சம்மாங்கோடு, மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் இராஜ கம்பீரத்தோடு எழுந்துநிற்கும் எழுநிலை இராஜ கோபுரம் எவ்வாறு பல்லாண்டு காலம் நிலைத்துநிற்குமோ, அதுபோன்றே கும்பாபிஷேக வைபவத்தையொட்டி வெளிவரும் இச்சிறப்பு மலரும் இவ்வாலயத்தின் சரித்திரச் சான்றாக அமையும். இம்மலரிலே எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்வதில் நான் மிக்க மகிழ்வடைகின்றேன்.

மாணிக்க விநாயகரின் அருட் கருணையினால், ஆலயம் மிகவும் வனப்புடன் அமைந்து, மஹா கும்பாபிஷேகம், மண்டலாபிஷேகம் என்பன உரிய நல்முகூர்த்தங்களிலே சிறப்புற நிகழ்ந்தேறின. இவை அனைத்தையும் எழுத்துருவிலும், வண்ணப்படங்களாகவும் இம்மலரிலே அடக்கிவிட முயன்றோம்.

தனி மனித முயற்சியினாலன்றி, உயர்ந்த சிந்தனையும், தியாக உணர்வும், ஆன்மீக நாட்டமும் மிக்க நல்லோர்கள் பலரின் ஒருமனதான உழைப்பினால் இன்று இவ்வாலயம் சிறந்தோங்கி நிற்கிறது. அனைவரையும் ஒன்றிணைத்து இப்பெரும்பணியை ஆற்றிவைத்த விநாயகப் பெருமானின் அருட்திறத்தையே நாம் எண்ணி வியக்கின்றோம்.

இவ்வேளை, இவ்வாலயம் அமைந்த நாளிலிருந்து நிர்வாகப்பணிகளையும், ஆன்மீகப் பணிகளையும் புரிந்த பெரியோர் அனைவரையும் நாம் நன்றியுடன் போற்றுகின்றோம்.

அவர்கள் ஆற்றிய அருட்பணி காரணமாகவே இன்று எமக்கும் இந்தத் திருச்செயலில் ஈடுபடும் வாய்ப்புக் கிடைத்தது. இறைவன் அருளால் எமது அடுத்த தலைமுறையினரும், இத்தகைய ஆன்மீகப் பெரும் பணிகளை ஆற்றும் பாக்கியம் பெறவேண்டும்.


எமது குழந்தைகள், ஆன்மீக வலிமையோடு இன்னும் அரிய காரியங்களை ஆற்றுவதற்கு நாம் முன்னுதாரணமாகத் திகழ்வோமாக. எமது செயற்பாடுகளால், இறை நம்பிக்கையும், உயர்ந்த சிந்தனைகளும் அவர்களுக்குக் கிடைப்பதாக! ஆலயப்புனர் நிர்மாணப்பணிகள், கும்பாபிஷேகக் கிரியைகள், மண்டலாபிஷேக வைபவங்கள் அனைத்தும் எமக்குப் புதிய பல அநுபவங்களைக் கற்றுத்தந்தன. இவை எமக்குக் கிடைத்த அருட்பிரசாதம் எனவே நான் கருதுகின்றேன்.

இன்னும் பல பயன்மிக்க செயற்பாடுகளை ஆற்ற இறைவன் எமக்கு ஆன்மீக வலிமை தர வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.


இப்பெரும்பணியை, இறைதொண்டாகக் கருதி உழைத்த அனைவருக்கும், சிவாச்சாரியார் பெருமக்களுக்கும், பக்தர்களுக்கும், விநாயகப் பெருமானின் அருள் கிடைப்பதாக!

*சம்மாங்கோட்டார்*
*ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில்,*
*359, காலி வீதி, கொழும்பு - 4.*




அபிஷேகம்

# பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய வரலாறு



இந்தியாவிலும் இலங்கையிலும் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியபோது தமிழ் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த வர்த்தகர்கள், வணிக நோக்கம் கருதி, இலங்கைக்கு விஜயம் செய்தனர். இங்ஙனம் வந்தவர்கள் இலங்கையின் பல்வேறு நகரங்களிலும் வெவ்வேறு வியாபாரத் துறைகளில் ஈடுபட்டு உழைத்தனர்.

இவ்வணிகர்கள், தாம் எந்த ஊரில் வாழ்ந்த போதும், தமது ஆழ்ந்த இறை நம்பிக்கை காரணமாக அவ்வூர்களில் ஆலயங்களை மிகவும் சிறப்பாக அமைத்து வழிபாடு மேற்கொள்வதைத் தமது கடமையாகக் கொண்டிருந்தனர். இவ்வாறான வணிகர்களால் இலங்கையின் பல நகரங்களிலும் கட்டப்பட்ட ஆலயங்கள் இன்றும் அவர்களின் பக்திச் சிறப்புக்குச் சான்றாக விளங்குகின்றன.

1850ம் ஆண்டளவில் தமிழகத்தின் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், நாகபட்டினம், காரைக்கால் போன்ற பகுதிகளிலிருந்து கொழும்புக்கு வந்த வர்த்தகர்கள் பலர் புறக்கோட்டையில் 2ம் குறுக்குத் தெரு, கெய்சர் வீதி, பேங்க்ஷால் வீதி, பிரதான வீதி, மனிங் சந்தை ஆகிய இடங்களில் அரிசி, ஜவுளி போன்ற வியாபாரங்களை மேற்கொண்டனர்.

கொழும்பு புறக்கோட்டையில் மேற்குறித்த வீதிகள் அமைந்த பிரதேசம் அக்காலப் பகுதியில் 'சம்மாங்கோடு' என அழைக்கப்பட்டது. தமிழகத்தின் காரைக்கால் பகுதியில் அமைந்த ஒரு கிராமத்தின் பெயர் 'சம்மாங்கார அல்லது சம்மாங்கோடு' எனவும், அப்பகுதி வர்த்தகர்கள் கொழும்பில் அதிகமாக வாழ்ந்தமையினால், இப்பகுதி அப்பெயரால் அழைக்கப்பட்டது எனவும் கருதப்படுகின்றது. ஆயினும் இக்கருத்திற்கான ஆதாரம் இல்லை.

18ம் நூற்றாண்டிலேயே, ஒவ்வோராண்டும் ஆடி மாதத்தில் கதிர்காமத்தில் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுவதுண்டு. இத்திருவிழாவிற் கலந்து கொள்ளவென நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் பாத யாத்திரையாகப் புறப்பட்டுச் செல்வர். பக்தியோடு கதிர்காம உற்சவத்திற்குப் பாத யாத்திரை மேற்கொள்பவர்கள், போக்கு வரத்து வசதிக் குறைவினால் ஏறத்தாழ ஒரு மாதத்திற்கு முன்பே தமது யாத்திரையைத் தொடங்குவது வழக்கமாகும்.

1850ம் ஆண்டு காலப்பகுதியில் கொழும்பு முதலாம் குறுக்குத் தெரு வர்த்தகர்களும், கதிர்காம உற்சவம் தொடங்குவதற்கு இரு மாதங்களுக்கு முன்பு, பிரதான வீதியில் ஒரு கட்டிடத்திற் கூடி, பாதயாத்திரை மேற்கொள்வது தொடர்பாக ஆலோசனை நடத்துவர்.

யாத்திரைச் செலவிற்குரிய நிதியையும் சேகரித்துக் கொள்வர்.

ஒரு முதியவர் தமது இடையில் வேலைக் கட்டிக் கொள்ள ஏனையவர்கள், காவடிகளைத் தாங்கியவர்களாக பக்திப் பரவசத்துடன் பாத யாத்திரை மேற்கொண்டு, கதிர்காமத்திற்குப் புறப்பட்டுச் செல்வார்கள். அங்கு மாணிக்க கங்கையில் தீர்த்தமாடி கந்தனைத் தரிசித்த பின், மீண்டும் கால் நடையாகவே கொழும்பு திரும்புவதுண்டு.

1856ம் ஆண்டு மேற்குறித்த வீதிகளில் வணிகத்தை மேற்கொண்டிருந்த தமிழக வணிகர்கள் முதலாம் குறுக்குத் தெருவில் ஒரு நிலத்தைக் கொள்வனவு செய்து ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தை நிர்மாணித்தனர்.

இவ்வாலயம் சம்மாங்கோட்டார் ஆலயம் என அழைக்கப்பட்டது. அக்காலத்தில் வியாபாரம் மேற்கொண்டிருந்த வணிக நிறுவனங்கள், 'விலாசங்கள்' என அழைக்கப்பட்டன. இவ்விலாசங்களைச் சேர்ந்தவர்களே ஆலய பரிபாலனத்தைக் கவனித்துக் கொண்டனர்.

1900ம் ஆண்டு முற்பகுதியில் (சரியான ஆண்டிற்கான ஆதாரம் இல்லை) கதிர்காமப் பகுதியில் காலரா தொற்றுநோய் பரவிய காரணத்தினால் அப்போதைய ஆங்கிலேய ஆட்சியாளர்கள், பிற மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் கதிர்காமத்திற்குச் செல்வதைத் தடைசெய்தனர்.

இக்காரணத்தினால் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலய நிர்வாக சபையினர் 1909ம் ஆண்டு பம்பலப்பிட்டியில் நிலமொன்றைக் கொள்வனவு செய்து ஆலயமொன்றை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர். 1910ம் ஆண்டு கட்டப்பட்ட இவ்வாலயமே ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயமாகும். மேற்குறித்த இரு ஆலயங்களும் ஒரே நிர்வாக சபையின் கீழ் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் கட்டப்பட்டபோது பக்தர்கள், யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்காக ஆலயத்திற்கு அருகிலேயே மடம் ஒன்றும் அமைக்கப்பட்டது.

இவ்வாலயம் அமைந்தபின் ஆடி மாதத்தில் கொழும்பில் ஆடி வேல் விழாவைச் சிறப்பாக நடத்தத் தொடங்கினர். கொழும்பில் நடைபெறும் ஆடி வேல் விழா அதே காலப்பகுதியில் கதிர்காமத்தில் நடைபெறும் உற்சவத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது. பக்தர்கள் கதிர்காமக் கந்தனை, ஆடி வேல் விழாக் காலத்தில் நினைந்து பூஜித்துக் கொண்டனர்.

வருடந்தோறும், புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திலிருந்து வேல் ஒன்றை ஏந்தியவாறு பக்தர்கள் கொழும்பின் பிரதான வீதிகளூடாக பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்திற்குக் கால் நடையாக வருவர். இந்த வேல், நான்கு தினங்கள் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டு மீண்டும், பக்தர்களால் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

பிற்காலத்தில் முதலாம் குறுக்குத் தெரு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமியே தேரில் அமர்ந்து ஆடி வேலின் போது பவனியாக வருவார். பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் மூலவர் தங்கியிருக்கும் மூன்று தினங்களும், ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயக் குருக்களே பூஜைகளை நடத்துவது ஒரு சம்பிரதாயமாக ஆகியது.

ஆடி வேல் விழாவின்போது கொழும்பில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடுவர். இந்துக்கள் மட்டுமன்றி ஏனைய மதத்தினரும் இவ்விழாவிற் பங்கேற்று பக்தி செலுத்துவதுண்டு. மலையகப் பிரதேசங்களில் வாழ்ந்த தோட்டத் தொழிலாளர்களும் ஆடிவேல் காண கொழும்புக்கு வந்தனர்.

சிறப்பான நிகழ்ச்சிகளை நடத்துவதற்கென நாதஸ்வரக் கலைஞர்கள், ஏனைய இசைக் கலைஞர்கள், கூத்துக் கலைஞர்கள் என்போர் தமிழகத்திலிருந்து வரவழைக்கப்பட்டனர். ஆடி வேல் விழா நிறைவடையும் நாளன்று பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

1942ம் ஆண்டு 2ம் உலகப் போர் நடைபெற்றவேளையில், கொழும்பில் குண்டுகள் விழுந்த போது சம்மாங்கோடு கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் ஒரு பகுதியும் சேதமடைந்தது. யுத்தம் காரணமாகப் புறக்கோட்டையில் வணிகம் செய்த இந்திய வர்த்தகர்கள் தாயகம் திரும்பினர்.

யுத்தம் ஓய்ந்தபின் 1946ம் ஆண்டளவில் இலங்கை திரும்பிய இவர்கள், ஆலய நிர்வாகப் பணிகளையும் தொடர்ந்து நடத்தினர்.

இக்காலப் பகுதியில் ஆலயத்தைச் சேர்ந்த நிலத்தின் ஒரு பகுதி பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிக்குக் குத்தகையாக வழங்கப்பட்டமையும், ஆலய நிலத்தின் ஒரு பகுதியிலேயே லோறீஸ் வீதி அமைவதற்கான நிலம் அன்பளிப்புச் செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கனவாகும்.

1960ஆம் ஆண்டுக்குப் பின் ஆலய நிர்வாகத்திற்கென புதிய நிர்வாக சபை அமைக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் ஆலயத்திற்கு சொந்தமான நிலங்களில் புதிய கட்டிடங்களை ஏற்படுத்தி அவற்றின் மூலம் நிதி நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான திட்டங்கள் சபையினரால் மேற்கொள்ளப்பட்டன.

1983ஆம் ஆண்டு, நாட்டில் ஏற்பட்ட வன்முறைச் செயற்பாடுகள் காரணமாக கொழும்பில் நிர்க்கதியான தமிழ் மக்கள் மாணிக்க விநாயகர் ஆலய வளவிலேயே புகலிடம் தேடித் தங்கியிருந்தனர். அவர்கள், ஆலயச் சூழலிலிருந்து வேறு இருப்பிடங்களுக்கு செல்ல சில ஆண்டு காலம் எடுத்தது. அவர்கள் அனைவரும் சென்ற பின்னரேயே நிர்வாகத்தினர் ஆலய மேம்பாட்டுக்கான சீரமைப்புப் பணிகளில் அதிக கவனஞ் செலுத்தினர்.

1994ஆம் ஆண்டுக்குப் பின் இயங்கிய அறங்காவலர் சபை ஆலயத்திற்குப் பெருந்தொகையாக வருகின்ற பக்தர்கள் முகங் கொடுக்கும் வசதியீனங்களை நீக்கும் முகமாகவும், மிக நீண்ட காலமாக புனரமைக்கப்படாதிருக்கும் ஆலயத்தின் திருப்பணியை மேற்கொள்ளும் நோக்குடனும், சிறியதாக இருந்த மூலஸ்தானம், மண்டபம் என்பவற்றை விரிவுபடுத்தி நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களைத் தொடங்கியது. விநாயகப் பெருமானின் அருட்துணையோடு ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு 26. 01. 1996 ஆம் திகதி அடிக்கல் நாட்டு வைபவத்துடன் திருப்பணி தொடங்கிவைக்கப்பட்டது.

ஏறத்தாழ ஐந்தரை ஆண்டுகள் நடைபெற்ற புனர் நிர்மாணப்பணிகள் மூலமாக ஏழுதள இராஜகோபுரம், மூலஸ்தான கோபுரம், பரிவாரமூர்த்திகளான, இடும்பன் தண்டாயுதபாணி, துர்க்கை, துவார கணபதி, நவக்கிரகங்கள் ஆகிய மூர்த்தங்களுக்கு தனிச்சந்நிதிகள், மிகவும் விசாலமான அலங்கார மண்டபம், மகாமண்டபம், மணிக் கோபுரம், ஆலய முன்வாயிற் கோபுரம், தேர்ச்சாலைக் கோபுரம் என ஆலயம் மிகவும் திட்டமிட்டு விரிவுபடுத்தப்பட்டது.

அத்துடன் ஆலயத்திற்குப் பின்னால், திருமண மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

இறைவனின் ஆசியோடு அறங்காவலர் சபையினரின் உயர்ந்த சிந்தனைகளுக்கேற்ப திருப்பணி வேலைகள் பூரணமாக நிறைவுபெற்று, மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதற்கான நல்வேளையாக 2001ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ம் திகதி காலை 4.30 மணிமுதல் 8மணி வரையாக நேரம் குறிக்கப்பட்டது.

கும்பாபிஷேகத்தோடு ஒட்டிய கிரியைகள், ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி முதல் 22ம் திகதி வரை நடைபெற்றன. கிரியைகள் தொடங்கப்படுவதற்கு முன், விபூதி பூசி, திலகமணிந்த யானையொன்று அழைத்துவரப்பட்டு ஆலயக் கதவுகள் திறக்கப்பட்டமை பக்தர்களுக்கு மெய்சிலிர்க்க வைத்த அநுபவமாக அமைந்தது.

22, 23ம் திகதிகளில் ஆயிரக்கணக்கான பக்தர்கள், பல மணிநேரமாக நீண்டவரிசையிலே காத்திருந்து ஆலய மூர்த்தங்களுக்கு எண்ணெய்க் காப்பு சாத்தினர்.

ஆலய அறங்காவலர் சபையினரும், கும்பாபிஷேகத்திற்கென அமைக்கப்பட்டிருந்த திருப்பணி சிறப்புக் குழுவினரும் ஒவ்வொரு சிறு பணியையும் மிகவும் கண்ணுங் கருத்துமாக மேற்கொண்டிருந்தனர்.

சிவாச்சாரியார் பெருமக்கள் முறையுற நிகழ்த்திய கிரியை, அபிஷேக நிகழ்ச்சிகளும், கிரியை வேளைகளில் எழுந்த வேதமந்திர பாராயணங்களும், தேவார இன்னிசையும் பக்தர்களை மனமுருகச் செய்தன.

24ம் திகதி காலை சுமார் 7.55 மணியளவில் எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் ஆலயத்திற்கென அமைந்த இராஜகோபுரம், மூலஸ்தான கோபுரம், மூலவர், ஏனைய மூர்த்தங்கள் ஆகியவற்றுக்கு கும்பாபிஷேகம் இனிதே நிகழ்ந்தேறியது.

ஆயிரக்கணக்கில் திரண்டிருந்த பக்தர்களுக்கு அன்றைய காலைப்பொழுதின் மழைத்தூறல், விநாயகப் பெருமானின் ஆசீர்வாதமாக அமைந்தது.

அன்று மாலை தொடக்கம் அக்டோபர் மாதம் 10ம் திகதிவரை மண்டலாபிஷேகப் பூசைகள் சிறப்புற நிகழ்ந்தன. மாலைவேளைகளில் நாதஸ்வரக் கச்சேரி, சொற்பொழிவுகள் என விசேட நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

தொகுப்பு:- ம. சண்முகநாதன்.

கொழும்பு

## சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் தேவஸ்தானம்

## பம்பலப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம்


# முன்னாள் அறங்காவலர்கள்




ஆண்டியாபிள்ளை (அமரர்)




வை. பெரியசாமி பிள்ளை (அமரர்)



கு. பெ. காளியப்பா பிள்ளை (அமரர்)



தே. செல்லமுத்துப்பிள்ளை (அமரர்)



மரு. திருப்பதியா பிள்ளை (அமரர்)



திரு. வி. எஸ். சுப்பிரமணியம்

தற்போது தமிழகத்தில் வாழ்கின்ற இவர், அறங்காவலர் சபை உறுப்பினராகவும் விளங்குகின்றார். கும்பாபிஷேக வைபவங்களுக்காக இவர் தமிழகத்திலிருந்து வந்து கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கதிர்காமத் திருத்தலமும் சம்மாங்கோட்டார் ஆலயங்களும்



இலங்கையிற் காணப்படும் முருகன் ஆலயங்களுள் மிகப்பழைய வரலாறுடையது கதிர்காமம். சூரபத்மனை அழிக்க வந்த முருகன், கதிர்காமத்திலே பாசறை அமைத்துத் தங்கியிருந்தான் என்றும், அங்கேயே வள்ளியைத் திருமணம் செய்தான் என்றும் ஐதீகங்கள் கூறுகின்றன. வேடர் குலத்து வள்ளியின் பரம்பரையினரே இன்றும் பூசகராக விளங்குகின்றனர்.

கதிர்காமத்தில் வழிபாட்டு முறைகள் மிகவும் எளிமையானவை. விக்கிரக வழிபாடு இல்லை. பிராமணர் இன்றி, "கப்புறாளை" எனப்படும் பூசகர் வாய் கட்டி மௌன பூசை செய்தலே கதிர்காமத்தின் கிரியை முறை.

பிரதான கோயிலின் மூலஸ்தானம் திரைச் சீலை ஒன்றினால் மறைக்கப்பட்டிருக்கும். திரையில் வள்ளி தெய்வயானை சமேத முருகனின் அழகிய தோற்றம் வரையப்பட்டுள்ளது. மூலஸ்தானத்தில் ஒரு பெட்டகத்தில் யந்திரமொன்று இருப்பதாகவும், அதுவே கதிர்காம இரகசியம் எனவும் நம்பப்படுகின்றது.

கதிர்காமத் தலத்தின் பழைமைப் பெருமைக்கு பதினைந்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த அருணாகிரிநாதசுவாமிகள் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் சிறந்த சான்றாகும்.

இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் கதிர்காமத்தின் செல்வாக்கு காணப்படுகின்றது. பௌத்த ஆலயங்கள் பலவற்றின் பரிவார தெய்வமாக கதிர்காமக் கந்தன் வழிபடப்படுகின்றார்.

கதிர்காம உற்சவகாலங்களில் இலங்கையின் வடபிரதேசத்தில் ஆரம்பித்து கரையோரமாக மக்கள் பாதயாத்திரை மேற் கொண்டு கதிர்காமம் செல்வர். இந்த யாத்திரை 43 நாட்களில் நிறைவுறும்.

யாழ்ப்பாணத்தின் செல்வச்சந்நிதி எனும் தலமும், மட்டக்களப்பின் திருக்கோவில், மண்டூர், சித்தாண்டி, உகந்தை, ஆகிய தலங்களும், குமாரபுரம், வெருகல் ஆகிய திருகோணமலைத் தலங்களும் கதிர்காமத்தின் தொடர்புகளைக் கொண்டவையாக விளங்குகின்றன.

திருக்கோயில் சித்திரவேலாயுதர் கோவிலில் மௌனபூசை நிலவுவதும், மண்டூர் கந்தசுவாமி கோயில் சின்னக்கதிர்காமம் என அழைக்கப்படுவதும் கதிர்காமத்துத் தொடர்புகளை நன்குணர்த்துகின்றன. செல்லச்சந்நிதி முருகன் கோவிலிலும் விக்கிரகம், பிராமணர் இன்றி மௌன பூசையே நடைபெறுகின்றது.

கதிர்காமம் எனும் பெயருடன் சார்ந்த பல ஆலயங்கள் இலங்கையிலுள்ளன. புங்குடுதீவுக்

கதிர்காமம், வட்டுக்கோட்டை மேற்கு சின்னக் கதிர்காமம், குருக்கள் மடம் செல்வக்கதிர்காமம், கருங்காலிச் சோலை முருகன், வத்துகாமம் கதிரேசன், குருணாகல் கதிரேசன், ஊருகலை முருகாமலை கதிரேசன், அப்புத்தளை கதிர்வேலாயுதசுவாமி என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் சில ஆலயங்கள் மூலவிக்கிரகமாக 'வேலை' யே கொண்டு ஆரம்பிக்கப்பட்டு, பிற்காலத்தில் விக்கிரகங்கள் அமைந்து ஆகம வழிபாட்டிற்குட்பட்டமை முக்கியத்துவம் மிகுந்ததாகும்.

இவற்றுள் ஒன்றாகவே கொழும்பு, புறக்கோட்டை சம்மாங்கோட்டார் கதிர்வேலாயுதசுவாமி ஆலயம் விளங்குகின்றது. கதிர்காமக் கொடியேற்றத்தன்று சந்நிதிமுருகன் கதிர்காமம் சென்று தீர்த்தத் திருவிழாவன்று மீண்டும் சந்நிதி திருப்புவதாக ஒரு ஐதீகம் உண்டு. இதே ஐதீகம், கொழும்பு சம்மாங்கோட்டார் ஆலயத்துடனும் தொடர்புபடுத்தப்படுகின்றது.

கதிர்காம உற்சவ காலத்தில் கரையோரப் பகுதியிலிருந்து பாதயாத்திரை புறப்படல் போன்றே, கொழும்பு சம்மாங்கோட்டார் ஆலயத்தினின்றும் பக்தர்கள் வேல் ஒன்றைத் தாங்கி பாதயாத்திரையாக கதிர்காமம் சென்று பூசை வழிபாடாற்றி மீண்டும் கொழும்பு திரும்புவர்.

இந்த ஐதீகம், நம்பிக்கை என்பவற்றின் அடிப்படையிலேயே, பாதயாத்திரையாக கதிர்காமம் செல்ல இயலாது என்ற ஒரு நிலை தோன்றியபோது, பம்பலப்பிட்டியில் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயம் அமைந்தமையும், ஆடிவேல் விழாக்கள் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# கலசத் தத்துவம்

சங்கரபகவத்பாதர் நம்முடைய மனத்தை ஒரு கலசமாக வருணித்து, பகவானின் விஷயத்தில் நமக்குள்ள அளவிடமுடியாத பிரேமை என்ற நூலைக் கொண்டு அதைச் சுற்றவேண்டும் என்கிறார். தண்ணீருக்கு 'அமிர்தம்' என்ற ஒரு பெயரும் சமஸ்கிருதத்தில் உண்டு. மனமாகிய கலசத்தில் சந்தோஷம் என்ற நீரை ஊற்றவேண்டும் என்பதற்காக சங்கரர் 'முதம்ருதாபூர்ணே' என்று சொல்லுகிறார். சந்தோஷமாக உள்ளவனால்தான் எந்த நல்ல காரியத்தையும் நன்றாகச் செய்ய முடியம். அதுவும் தூய்மையானதாகக் கலப்பற்றதாக இருக்க வேண்டும். அப்போதுதான் அந்தச் சிந்தனை பகவானிடத்தில் ஈடுபடும். எல்லோருக்கும் நல்லதையே நினைக்கும். அதற்காகவே கலசத்தில் தூய நீரை நிறைக்கிறோம். கலசத்தின் மேல் மாந்தளிர்களை வைத்து, அதன் மேல் தேங்காயை வைப்பது நம்முடைய வழக்கம். பக்தனுடைய மனத்தில் பகவானுடைய இரு பாதாரவிந்தங்கள்தாம் பிரதிபலிக்க வேண்டும். பகவானுடைய பாதங்களுக்கு மலரிதழ்களை உவகையாகக் கூறுவதைப் போல தளிரையும் உவமையாகச் சொல்லுவதுண்டு. அதனால்தான், 'தளிரைப் போன்ற உன்னுடைய பாதாரவிந்தத்தை எனது மனமாகிய கும்பத்தின் மேல் வைத்து' என்கிறார். கலசத்தின் மேல் உள்ள மாந்தளிர் இதையே குறிக்கிறது. கடைசியில் வைக்கப்படும் தேங்காய் ஞான பலத்தைக் காட்டுகிறது. 'நமக்கு இறைவன் ஞானஸ்வ ரூபத்தைக் கொடுக்க வேண்டும். அதனால் நாம் 'சிரயேஸ்ஸை அடைய வேண்டும்' என்ற எண்ணத்தோடுதான் நாம் எப்போதும் இறைவனை ஆராதிக்கிறோம். ஞானரூபமாய் உள்ள பலத்தை நாம் பிடித்துக் கொண்டு வந்து சேர்க்க வேண்டியதில்லை. அது தானாகவே வந்து உட்கார்ந்து விடுகிறது.

'ஸாம்ப தவாஸ்க்ரி பல்லவயுகம் ஸம்ஸ்தாப்ய ஸம்வித்பலம்' என்று சங்கரர் கூறுகிறார். இப்படி நம்மிடம் வந்து அமர்ந்து நம்மை ஆட்கொள்ளும் ஞானபலத்தையே தேங்காய் உணர்த்துகிறது. வீட்டில் நல்ல காரியங்கள் நடைபெறும்போதே, இப்படிப் பூர்ணகும்பம் வைப்பதுண்டு. அப்போது நம்முடைய மனம் நல்ல எண்ணங்களால் நிறைந்து, இறைவன் அருளால் ஞான பலம் கொண்டு இருக்க வேண்டும் என்பதையே இந்த அமைப்பு உணர்த்துகிறது.

# ஆடிவேல் விழா



ஆண்டுக்கொரு முறைவரும் ஆடிவேல் விழா கொழும்பு மாநகரில் நடைபெறும் முக்கிய விழாக்களிலொன்றாகும். கலியுகவரதனாம் ஸ்ரீ வேலாயுத சுவாமிக்கு எடுக்கப்படும் விழா, இந்துக்களுக்கு மட்டும் உரியதோர் விழாவாக அமையாமல் ஏனைய மக்களும் பங்குகொள்ளும் சமரச விழாவாக அமைகின்றமை இதன் தனிச்சிறப்பாகும்.

ஏறத்தாழ 175 ஆண்டுகளாக இவ்விழா கொழும்பு நகரில் நடைபெற்று வருகின்றது. இதனை நாட்டுக் கோட்டை நகரத்தார் சமூகத்தினரும், சம்மாங்கோட்டார் சமூகத்தினரும் பல இலட்ச ரூபா செலவில் ஆண்டு தோறும் ஆடி மாதத்தில் கதிர்காம விழாக் காலத்துடன் பௌர்ணமி தினத்துடன் ஆரம்பித்து கொழும்பில் நடத்துகின்றார்கள்.

கதிர்காமத் தீர்த்த உற்சவத்திற்கு மறுநாள் இவ்விழா நிறைவு பெறும். சம்மாங்கோட்டார் சமூகத்தின் நிருவாகத்தில் இயங்கும் கோவில்களான புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெருவில் உள்ள முருகன் கோவில், பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சம்மாங்கோட்டார் மாணிக்கப்பிள்ளையார் கோவில் ஆகியனவும், நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தினரின் நிர்வாகத்தில் உள்ள புறக்கோட்டை பழைய கதிர்வேலாயுத சுவாமி கோவில், புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில், பம்பலப்பிட்டி பழைய கதிர்வேலாயுத சுவாமி கோவில், புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில் ஆகிய நான்கு கோவில்களும் இந்த ஆடிவேல் விழாவில் நேரடியாகப் பங்கு கொள்கின்றன.

## ஆடிவேல் விழா தோன்றிய வரலாறு

பண்டைய நாள்களில் வர்த்தகத்தைக் கொழும்பில் நடத்தி வந்த சம்மாங்கோட்டார், நாட்டுக் கோட்டை நகரத்தார் ஆகிய இரு சமூகத்தினரும் இறைபக்தியோடு விளங்கியவர்கள். ஆடி மாதத்தில் நடைபெறும் கதிர்காம உற்சவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே மக்கள் கூட்டங் கூட்டமாகக் கரைப்பாதை வழியாகக் காவடிகளோடு பாதயாத்திரையாக கதிர்காமம் சென்று மாணிக்க கங்கையில் முருகப் பெருமானுடன் தீர்த்தம் ஆடி மீண்டும் கொழும்பு திரும்புவர்.

சம்மாங்கோட்டார் இவ்வாறு தமது பயணத்தை ஆரம்பிக்கு முன்னர், தாங்கள் வணங்கி வந்த இடும்பன் தெய்வத்தையும் வழிக்காவலுக்கு தங்களுடன் அழைத்துச் செல்வதாக ஒரு நம்பிக்கை இருந்தது. இவ்வாறு செல்லும் பக்தர்கள் வேல், காவடி என்பவற்றைத் தாங்கியவர்களாகச் சென்றனர்.

இவ்வாறு இவர்கள் சென்று வருகையில் கதிர்காமப் பகுதியில் காலரா நோய் வேகமாகப் பரவி வந்தது. இதன் காரணமாக பதுளை அரசாங்க அதிபர் பிற மாவட்டங்களைச் சேர்ந்த மக்களைக் கதிர்காமத்துப் பிரதேசத்திற்கு வரவிடாது தடுக்கும் படி ஏனைய அரச அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். இதன்படி அறிவித்தல்கள் சகல மக்களுக்கும் அறிவிக்கப்பட்டது. ஒரு மாதம் முன்பிருந்தே மக்கள் கால்நடையாகக் கதிர்காமத்திற்கு செல்வது வழக்கமாகையால் குறித்த ஆண்டில் அறிவித்தல் கிடைக்க முன்னரே அவர்கள் புறப்பட்டுச் சென்றார்கள். ஆனால் அவர்கள் அரச அதிபர்களினால் ஆங்காங்கே நிறுத்தப்பட்டார்கள். இவ்வாறு நிறுத்தப்பட்டவர்களில் கொழும்பிலிருந்து புறப்பட்ட செட்டிமார் குழுவும், சம்மாங் கோட்டார் குழுவும் அடங்கும். இக்குழுக்களைத் தொடர்ந்தும் செல்லவிடாமல் கொழும்பில் தடுக்கப்பட்ட இடமே பம்பலப்பிட்டிப் பகுதியாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## உபய கதிர்காமம்

இதனால் மனக்கிலேசமுற்ற பக்தர் ஒருவரின் கனவில் கதிர்காமக்கந்தன் தோன்றி "இதற்கு நீங்கள் கவலையடைய வேண்டாம். இனிமேல் கதிர்காம உற்சவக் காலங்களில் கொழும்பு வாழ் சகல மக்களுக்கும் தரிசனம் கொடுக்க அருள் பூண்டுள்ளேன், ஆகையால் அதற்கு உரிய நடவடிக்கையை நீங்கள் எடுங்கள் " என்று கூறினாராம்.

இதனால் அருள் மனமும், செல்வ வளமும் படைத்த செட்டிமார் முதன் முதலில் பம்பலப்பிட்டி காலி வீதியில் 123ஆம் இலக்கத்தில் உள்ள காணியை விலைக்கு வாங்கி அதில் உபய கதிர்காமம் என்னும் பெயரில் ஒரு கோவிலைக் கட்டினார்கள். இக் கோவிலே பிள்ளையார் ஆலயம் ஆகும். இதே காலப்பகுதியில் சம்மாங்கோட்டாரும் பம்பலப்பிட்டியில் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தை அமைத்தனர்.

கொழும்பில் ஒவ்வொரு வருடமும் ஆடி மாதப் பௌர்ணமித் தினத்திற்கு முதல் நாள் புறக்கோட்டையில் முதலாம் குறுக்கு வீதியில் உள்ள சம்மாங்கோட்டார் முருகன் ஆலயத்தில் இருந்து முருகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராய் காவடி இரதத்தில் புறப்பட்டு காலி வீதி வழியாகப் பம்பலப்பிட்டி லோறன்ஸ் வீதியின் அருகே உள்ள ஸ்ரீ சம்மாங்கோடு மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தை வந்து சேருவார்.

இரண்டாம் நாள், முருகன் வெள்ளவத்தைப் பகுதி சமுத்திரத்தில் தீர்த்தம் ஆடுவார். பின்னர் சர்வாலங்காரப் பூஜிதராக இரு இரவுகள் ஆலயத்தில் தங்கி பக்தர்களுக்கு அருள்பாலிப்பார்.

நான்காம் நாள் அங்கிருந்து புறப்பட்டு புறக்கோட்டை ஆலயம் வந்தடைவார். இதேவேளை ஆடிப் பௌர்ணமி தினத்தன்று செட்டியார் தெருவில் உள்ள கதிர் வேலாயுத சுவாமி கோவிலில் இருந்து ஸ்ரீகதிர்வேலாயுதக் கடவுள் "தங்கரதத்தில்" பவனியை ஆரம்பிப்பார். பவனியை ஆரம்பிக்க முன்னர், தங்கரதத்தில் பால் காவடியுடன் செட்டிமாரினால் மயில் தோகையும் வெள்ளிப்பூண் போட்ட பிரம்பும் ஜிந்துப்பிட்டி முருகன் கோவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு தீப ஆராதனை நடைபெறும். அதனைத் தொடர்ந்து கட்டியம் கூறப்பட்டு அவை தங்கரதத்தில் வைக்கப்படும். இடும்பன் தெய்வத்திற்கும் கோவில் நிருவாகிகள் நேர்த்தி வைத்தபின், முருகனின் தங்க இரதபவனி ஆரம்பமாகி அன்று இரவு பம்பலப்பிட்டி காலி வீதியில் அமைந்த கோவிலை வந்தடையும்.

அன்று இரவும், மேலும் இரு இரவுகளும் அங்கு தங்கியிருந்து ஸ்ரீ கதிர் வேலாயுதக் கடவுள் மக்களுக்கு அருள் பாலிப்பார். மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு செட்டியார் தெருவில் உள்ள ஆலயத்தை தங்க ரதம் வந்தடையும். நாட்டில் ஏற்பட்ட குழப்ப நிலைகள் காரணமாக இவ்வேல் விழா அண்மைக் காலங்களில் நடைபெறவில்லை. வேல் விழாக் காலங்களில் பம்பலப்பிட்டியில் இருந்து முருகப் பெருமான் நாலாம் நாள் புறப்பட்டால் ஒரு நாள் முழுதும் வீதிவலம் வந்து, ஐந்தாம் நாள் தான் முதலாம் குறுக்குத் தெரு ஆலயத்தை வந்து அடைவது வழக்கம்.


கொழும்பு நகரவீதிகளின் ஊடாக எம்பெருமான் பவனி வருகின்ற போது, பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வீதிகள் தோறும் பூரண கும்பம் வைத்து, தேங்காய்கள் உடைத்து வழிபடும் காட்சி பெரும் மனநிறைவையும், பூரிப்பினையும் ஏற்படுத்தும். எம்பெருமானின் வீதி ஊர்வலத்தோடு இடம் பெறுகின்ற வாணவேடிக்கை, காவடி, கரக ஆட்டங்கள் தவில் கச்சேரி, மயிர்க்கூச்செறியும் சாகச விளையாட்டுக்கள் மக்களைப் பெருங் களிப்பில் ஆழ்த்தும். ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி எழுந்தருளும் ஆலயங்களிலும் மக்கள் பல்லாயிரக் கணக்கில் கூடி பக்திப்பரவசமாக வழிபடுதல் கண்கொள்ளாக் காட்சியாகும்.

*நன்றி :– வீரகேசரி08. 08. 1995.*

இந்து சமய வழிபாட்டுத் தெய்வங்களுக்குள் விநாயகப் பெருமான் முதன்மைக்குரியவராகக் கருதப்படுகிறார். அவர் பல தத்துவங்களுக்கேற்றவாறு தோன்றாத் துணையாகவிருந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். விநாயகப் பெருமானின் ஆலயங்கள் பல நாடுகளிலும் உள்ளன. இந்தியாவில் விநாயக வழிபாடு பல கோடி மக்களால் அனுட்டிக் கப்படுகிறது. விநாயக சதுர்த்தி இந்துக்களின் முக்கிய பண்டிகையாகக் கொண்டாடப்படுகின்றது. தமிழகத்திலும் புகழ்பெற்ற விநாயகர் ஆலயங்கள் உள்ளன. இலங்கையில் பல மாவட்டங்களிலும் விநாயகருக்கு ஆலயங்கள் அமைத்து மக்கள் வழிபாடாற்றி வருகின்றனர். இது தொன்றுதொட்டு வரும் ஒரு மரபாக உள்ளது.

அவ்வக் காலங்களில் ஆலயங்களுக்கு புனரமைப்பு, புனர்நிர்மாணம் என்பன மேற்கொள்ளப் படுவது வழக்கமாகும். மேலும் திருப்பணிகள் நடைபெற்ற ஆலயங்களில் கும்பாபிஷேகங்களும் நடைபெறுவ துண்டு.

இக்கட்டுரையாளரான நானும் எனது



*ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ !*

# பம்பலப்பிட்டி ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலய புனர் நிர்மாணம்

இராமநாதபுர தேவஸ்தான சிற்பி விஸ்வப்பிரம்மஸ்ரீ.
வி. நாகலிங்கம் ஸ்தபதியார் திருப்புல்லாணி,
இராமநாதபுரம், தமிழ்நாடு



கட்டுரையாளர் - வி. நாகலிங்கம் ஸ்தபதியார் அவர்களும், இவ்வாலய நிர்மாணத்தில் சிறப்புப் பணிபுரிந்த அவரது பேரன் திரு. சந்தனக்குமார் அவர்களும்.

குழுவினரும் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம், திருப்புல்லாணி எனும் ஊரைச் சேர்ந்தவர்கள். ஆலய நிர்மாண வேலைகளைச் செய்வதே எமது பரம்பரைத் தொழிலாகும்.

நானும் எனது குழுவினரும், தமிழகத்தில் நூற்றுக் கணக்கான ஆலய நிர்மாணப் பணிகளை மேற்கொண்டு, இறைவன் அருளால் இனிதே அவற்றை நிறைவேற்றியுள்ளோம். ஏறத்தாழ, கடந்த ஐம்பது வருடங்களாக நாம் இலங்கையின் பல பாகங்களிலும் ஆலயநிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்துள்ளோம். கொழும்பு கொம்பனித் தெரு, ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி

கோயில், செட்டியார் தெரு முத்துவிநாயகர் கோயில், முகத்துவாரம் சிவன் கோயில், மாத்தளை முத்துமாரியம்மன் கோயில், மருதானை கப்பித்தாவத்தை செல்வவிநாயகர் ஆலயம் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

கொழும்பிலுள்ள மிகவும் சிறப்புப் பெற்ற விநாயகர் ஆலயமான பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் இராஜகோபுர நிர்மாணப் பணியும், மண்டபங்கள், மூலஸ்தானம் புனர் நிர்மாணப் பணிகளும் எமது குழுவினரால் நிறைவேற்றப்பட விநாயகப் பெருமானின் அருள் கிடைத்தது.

கொழும்பு, சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வோலாயுத சுவாமி ஆலய நிர்வாக சபையினரின் வேண்டுகோளுக்கிணங்க, நான் 1996ம் ஆண்டு முற்பகுதியில் தமிழகத்திலிருந்து வந்தேன்.

மேற்படி ஆலயத்தைப் புனரமைப்பது தொடர்பாக நிர்வாக சபையினர் நடத்திய கூட்டத்தில் நானும் கலந்து கொண்டபோது இராஜகோபுரம் அமைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டது.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பதற்கிணங்க ஆலய நிர்வாக சபையினர், பம்பலப்பிட்டி வாழ் இந்து மக்களின் அருட்பேறு கருதி இவ்வாலயத்தில் இராஜகோபுரம் ஒன்றைப் புதிதாக நிர்மாணிக்கத் தீர்மானித்தனர். ஆரம்பத்தில் பஞ்சதள (5நிலை) இராஜகோபுரம் அமைக்கவே அவர்கள் திட்டமிட்டிருந்தனர்.

இத்திட்டத்திற்கமைய, நான் இவ்வாலயத்தின் திருப்பணியைப் பொறுப்பேற்று, தமிழகத்திலிருந்து எனது குழுவினரை வரவழைத்துக் கொண்டேன். இறைவனின் திருவருளோடும், ஆலய நிர்வாக சபையினரின் ஆசியோடும், இராஜகோபுர நிர்மாணப் பணி 26. 01. 1996ம் நாளன்று அத்திவாரக் கல்நாட்டு விழாவுடன் ஆரம்பமானது.

## இராஜகோபுர நிர்மாணம்

விநாயகப் பெருமானை மனதில் தியானித்தவாறே எனது சிற்ப, கட்டிடக் கலைத்துறையின் அனுபவத்திற்கேற்ப இராஜகோபுரத்தை அமைக்கத் தொடங்கினேன். எவ்வித தடையுமின்றி முதல் மூன்று தளங்கள் அமைக்கப்பட்டன.

நானும் எனது குழுவினரும் தினமும் விநாயகரை வழிபட்ட பின்பே எமது பணிகளை ஆரம்பிப்பதுண்டு. மூன்று தளங்கள் முடிவுற்ற நிலையில் ஒருநாள் காலை பணியைத் தொடங்கியபோது எனது மனதில் ஒரு எண்ணம் உதித்தது. இராஜகோபுரத்தை ஐந்து தளத்திற் கட்டாமல் ஏழு தளத்தில் கட்டினால் தூரத்திலுள்ள பக்தர்களுக்கும் கோபுர தரிசனம் கிடைக்கும் என்ற எனது எண்ணத்தை ஆலய நிர்வாக சபையினரிடம் தெரிவித்தேன். அவர்களும் மனப்பூர்வமாக அதனை ஏற்றுக் கொண்டனர். அதற்கமைய பஞ்சதள இராஜகோபுரம் சப்ததளமாக அமைந்து ஆறு மாதங்களின் பின் இராஜகோபுரத்திற்கு வர்ணப் பூச்சு பூசப்பட்டது.

சப்ததள இராஜகோபுரத்தின் உருவங்கள், விநாயகரின் தத்துவக் கதைகளை விளக்குவனவாகவும், முருகன், சிவபெருமான் ஆகிய கடவுளரின் திருவிளையாடல்களை விளக்குவனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன. விசேடமாக, விநாயகர் ஒளவையாரை மோட்சத்திற்கு தனது துதிக்கையில் தூக்கிச் செல்லும் காட்சியும், வியாச முனிவர் கூறக்கூற விநாயகர் மகாபாரதத்தை எழுதும் காட்சியும், அகத்திய முனிவர் தவமிருக்கையில் காகவடிவத்தில், விநாயகர் கமண்டலத்தில் இருந்த நீரைத் தட்டி விட்டு காவிரி நதியை பெருக்கெடுக்கச் செய்த காட்சியும், முருகன் வள்ளியை மணமுடிக்க விநாயகர் யானை வடிவாக வந்த காட்சியும் இராஜகோபுரத்தில் அமைந்துள்ளன.

இராஜகோபுரத்தின் உச்சியில் விநாயகர் சயனிக்கும் காட்சி அமைந்துள்ளது. இரண்டாம் தளத்தில் ஷோடச கணபதிகளின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் உருவ வேலைப் பாடுகளுக்குத் தகுந்தவாறு வர்ணங்களும், இராஜகோபுரத்திற்குத் தனியான வர்ணமும் பூசப்பட்டுள்ளன.

## அலங்கார மண்டபம்


அலங்கார மண்டபம் என்பது, ஆலயத்தில் நடத்தப்படும் தெய்வீக நிகழ்ச்சிகளுக்காக அமைக்கப்படும் மண்டபமாகும். இம்மண்டபத்தின் பெயருக்கேற்பவும், ஆகம விதிமுறைகளுக்கமையவும் அழகிய வேலைப்பாடுகள் கொண்டதாக இம்மண்டபம் அமைக்கப்படுகின்றது.

அலங்கார மண்டபத்தில் திருமணங்கள் நடைபெறுவதால், அதில் திருமணக் காட்சிகளும், தூண்களில் கஜயாளிகள், கொடியாளிகள், அன்னப்பறவைகள், மற்றும் தூண்களில் போதிகை வேலைப்பாடுகள் என்பன அமைக்கப்பட்டுள்ளன. மண்டபக் கூரையில் கமலங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

## அர்த்த மண்டபம் (மகா மண்டபம்)

இம்மண்டபத்திலேயே ஆலயத்தில் அமைய வேண்டிய மூர்த்திகளுக்குரிய விமானங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது ஆகம விதியாகும். இம்மண்டபம், தியான மண்டபம் எனவும் அழைக்கப்படுவதுண்டு. பக்தர்களின் மன ஒருமை கருதி இம்மண்டபத்தில் இறையம்சத்துடன் கூடிய வேலைப்பாடுகள் மட்டுமே செய்யப்படும்.

இவ்வாலயத்திலே பரிவார மூர்த்திகளாக, துவார கணபதி, பால தண்டாயுதபாணி, நவக்கிரகங்கள், ஸ்ரீ துர்க்கை, இடும்பன் ஆகிய மூர்த்தங்கள் உள்ளன. இம்மூர்த்திகளுக்குத் தனித்தனி விமானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்துடன் அலங்கார மண்டபத்திற் போலவே இம்மண்டபத்தின் கூரையிலும் கமல வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தூண்களில் அஷ்ட லக்ஷ்மிகளும், அஷ்ட மங்கலப் பெண்களும் வடிவமைக்கப்பட்டுள்ளனர்.



அர்த்த மண்டபத்தின் முன்புற வாயிலில் ஷோடச கணபதிகளின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அர்த்த மண்டபத்தின் பின் சுவரில் நவக்கிரக கவசம் எழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. பக்தர்கள் மூலவரின் தீபாராதனையைத் தரிசிப்பதற்காக நேர் எதிர்ப்புறமாக மண்டபச் சுவரில் பெரிய நிலைக்கண்ணாடி ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

## மூலஸ்தானம்

இரண்டு தள விமானமாக அமைக்கத் திட்டமிடப்பட்டிருந்த மூலஸ்தான கோபுரம், இராஜகோபுரம், ஏனைய மண்டபங்கள் என்பவற்றின் அமைப்பைக் கருத்திற் கொண்டு ஐந்துதள விமானமாக அமைக்கப்பட்டது. மூலஸ்தான கோபுரத்திலும் பொம்மை வேலைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மூலஸ்தானத்திற்கு அருகே, மண்டபத்திற்கு வெளியே மணிக்கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தின் நிர்மாணத்தின்போது இராஜகோபுரம், பரிவாரமூர்த்திகள், மூலஸ்தானம், மணிக்கோபுரம், தேர்க் கொட்டகை, ஆலய நுழைவு வாயில் விமானம் ஆகிய அனைத்திற்குமான ஸ்தூபிகள் ஆலயமணி என்பன இந்தியாவிலிருந்து கொண்டுவரப் பட்டமை சிறப்பம்சமாகும்.

இராஜகோபுரத்துடன் கூடிய நிர்மாணப் பணிகள் நிறைவுபெற ஏறத்தாழ ஐந்து ஆண்டுகள் எடுத்தன. ஆயினும் குறித்த முகூர்த்தத்திலே, கும்பாபிஷேகம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு மகிழுமாறு சிறப்புற நிறைவேறியது.

எனது குழுவினர் பொறுப்பேற்ற இவ்வாலயத்தின் திருப்பணி எவ்வித விக்கினமுமின்றி நிகழ்ந்தேற அருள்பாலித்த மாணிக்கப் பிள்ளையாரைத் தியானித்து வணங்குகின்றேன்.

நிறைவாக, பம்பலப்பிட்டி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாரின் கும்பாபிஷேகப் பெருவிழாவோடு இந்த நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைபெற வேண்டுமென இறைஞ்சிப் பிரார்த்திக்கின்றேன்.

அனைவரையும் ஈர்க்கும் வகையில் கலையம்சத்தோடு ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் அமைய உதவிய அனைவருக்கும், வணங்கவரும் பக்தர்களுக்கும் பிள்ளையாரின் அருட் கடாட்சம் பொலிவதாக.

சிற்பங்கள் பேசுமா? பேசும்........ காலங்காலமாக நமது சமயப் பண்பாட்டை, கலாசார விழுமியங்களை, நாகரிகத்தின் உயர் கொடுமுடிகளைத் தொட்டு மக்களின் நெஞ்சகங்களுக்கு அறிவித்தது காலத்தால் அழிக்க முடியாத கவினுறு சிற்பங்கள்தான். விழியாலும், மொழியாலும் விளக்க முடியாத தெய்வீக அனுபவங்களை, புராணக் கூறுகளை மக்களுக்குத் தெளிவு படுத்தியது சிற்பக் கலையினூடாகவே. தெய்வீக அருள் மணக்கும் சிற்ப எழில் நுகர உங்களை பம்பலப்பிட்டி சம்மாங் கோட்டார் மாணிக்க விநாயகர் ஆலயத்திற்கு அழைத்துச் செல்கிறேன்.

முதல் தளத்தில் நுழைவாயிலிற்கு மேலே செந்தாமரை மலரின் மேவு திரு, இருபுறமும் மத்தகஜங்கள் சூழ கஜலக்ஷ்மியாக வீற்றிருந்து அருள் மழையை நம்மீது சொரிகின்றாள். திருவின் அருளைப் பெற்று நிமிர்ந்தால், அச்வதுவார பாலகர்கள் இருபுறமும் அணிவகுக்க மாணிக்க விநாயகப் பெருமானின் திவ்யத் திருக்கோலம் நம்மை ஆட்கொள்கின்றது. விழிகளைச் சற்றே வலதுபுறம் திருப்பினால்,

*"தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள் தோடும்*
*பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்*
*சூலமுந் தொக்கவளையும் உடைத்தொன்மைக்*
*கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ"*



# பேசும் பொற்சிற்பங்கள்!

*(வித்துவான். திருமதி. வசந்தா வைத்திய நாதன். ஜே. பி.)*

இந்து மாகடலின் பொங்கும் எழிலைப் பருகியவாறு இந்தின் இளம்பிறை எயிற்றான், மேற்குநோக்கி அருட் செங்கோலோச்சும் ஆலயத்தை நெருங்குகின்றோம்.

சாளாலங்கார வாயிலிலேயே தும்பிக்கை நாயகன் நல்லாசி நல்கி நம்மை அழைக்கின்றான்; செல்கின்றோம். நிமிர்ந்து பார்த்தால் விழிகள் வியப்பால் விரிகின்றன. 91 அடி சப்ததள இராஜகோபுரம் ஓங்கி உயர்ந்து ஒரு அரசனுக்குரிய கம்பீரத்துடன் காட்சி அளிக்கின்றது. கண்கவர் வண்ணத்தில் விளங்கும் சுதைச் சிற்பங்கள் கதை பேச நம்மைக் கரம் நீட்டி அழைக்கின்றன.

என்று மணிவாசகர் மகிழ்ந்து போற்றும் மாதொரு பாகனின் பெண்மைக்குப் பெருமையீந்த திருக்கோலம். அருகிலே மீன நோக்கின் மடவரலை மணந்து உலக முழுதாண்ட சுந்தரனின் "மீனாட்சி திருமணக் காட்சி. கம்பீரத் தோற்றங் கொண்ட சிவனின் செங்கரங்களில் நாணம் பூக்கும் அம்மையின் நளின மென் கரங்களைச் சேர்த்துத் திருமால் தாரை வார்க்கும் அற்புதமான காட்சி.

***சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்து ஆன்மீகச் சூழலையும் கலையம்சங்களையும், வார்த்தைகளால் விளக்கும் ஒரு நேர்முக வர்ணனை!***

இடது புறம் விழிகளைத் திருப்பினால் 'பார்வதி திருமணம்' நம்மை வரவேற்கின்றது. தும்புரு நாரதர் யாழ் மீட்ட, இமவான் தனது செல்வ மகள் பார்வதியைப் பரமேஸ்வரனுக்கு தத்தம் செய்யும் அபூர்வக் காட்சி. அருகே அரியும் அரனும் ஒன்றே என்ற சமய ஒருமையை உணர்த்தும் அரிய கோலம் 'சங்கர நாராயணரின்' திருக்கோலம்.

*"தாழ்சடையும் நீண்முடியும், ஒண்மழுவும் சக்கரமும்*
*சூழரவும் பொன்னாணுந் தோன்றுமால் – சூழும்*
*திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு*
*இரண்டுருவும் ஒன்றா யிசைந்து"* என்ற பேயாழ்வாரின் வரிகளுக்கு விரைவிலக்கணம்

இனி இரண்டாவது தளத்தின் வலது புறம்: 'தூலகாயா' என்ற பெயருக்கேற்ப அமர்ந்தருள் புரியும் ஆனை முகன் – அருகிலே இளையோன் – மயில்மீது எழுந்தருளி ஆன்மாவின் மயலைத் தீர்க்கும் ஆறுமுகப் பெருமான்.

இடது புறம் விநாயகப் பெருமானின் அருட்திருமேனிகளில் துவிமுக கணபதி (இரண்டு முகம்) அரிமாவின் மீது வீற்றிருந்தருளும் ஹேரம்ப கணபதி துவிஜகணபதி (மும்முக கணபதி), இத்தளம் முழுவதுமே முன்னவனும், பின்னவனுமாக இடம் பிடித்துள்ளனர்.

மூன்றாவது தளம் - வலது புறம்: பக்குவான்மாவாகிய வள்ளி நாயகியாரை அண்ணனின் துணையுடன் கோலக்குமரன் கிழஉருத் தாங்கி வந்து மணம் புணர முயலும் காட்சி – ஜீவனை சிவனாக்க இறைவன் வலிய வந்து அவதாரம் கொள்ளும் அரிய சைவசித்தாந்த உண்மையைத் தெளிவாக்கும் நிலையைக் காண்கின்றோம்.

இடது புறம் தும்புரு, நாரதர் யாழ் மீட்ட நந்தி குடமுழா முழக்க, திருமால் மத்தளம் தட்ட, காளியை வெல்ல சிவபெருமான் ஆடிய ஊர்த்துவ தாண்டவம். வேகம் மிக்க இத்தாண்டவத்தை சிவபெருமான் ஆட உலகத்து உயிர்களெல்லாம் ஆடினவாம்.

*"மானாட மழுவாட மதியாட புனலாட*
*மங்கை சிவகாமியாட*
*மாலாட, நூலாட மறையாட திரையாட*
*மறைதந்த பிரம்மனாட*
*கோனாட வானுலக கூட்ட மெல்லா மாட*
*குஞ்சர முகத்தனாட*
*குண்டல மிரண்டாட தண்டை புலியுடையாட*
*குழந்தை முருகேசனாட*
*ஞான சம்பந்தரோடு இந்திர பதினெட்டு முனி*
*அஷ்ட பாலகருமாட*
*நரைதும்பை யருகாட நந்தி வாகனமாட*
*நாட்டியப் பெண்களாட* – அடியார் வினை யோட விமலன் ஆடும் வியன் தாண்டவம் நம்மை வியக்க வைக்கின்றது.

நான்காம் தளம் - வலது புறம்:

*"பூவைகாள் செங்கட் புறவங்காள் ஆலோலம்*
*தூவிமா மஞ்ஞைகாள் சொற்கிளிகாள் ஆலோலம்*
*கூவல் சேர்வுற்ற குயிலினங்காள் ஆலோலம்*
*சேவல்காள் ஆலோலம்* – என்று தினைப்புனப் பரண்மீது நின்று தினைப்பயிரைக் (ஞானப் பயிர்) கவர வரும் பறவைகளைக் (தீயசக்திகள்) கல்லெறிந்து காப்பாற்றி பரமனுடன் ஒன்ற வைக்கின்றது. பக்குவம் பெற்ற ஜீவான்மா எனும் குருமூர்த்தி. வள்ளி தினைப் புனங் காத்து நிற்க, வேலவன் வேங்கைமரமாக நிற்கிறான். ஆன்மா சிவனை அடையாளங் கண்டு அணைகின்றது. வாழ்க்கையின் விளக்கம் வண்ணச் சுதைச் சிற்பமாக காணப்படுகின்றது.

இடது புறம் சுந்தரரும், சேரமானும் திருக்கயிலைக்குச் செல்வதைக் கண்ட ஔவைப் பிராட்டி தானும் அவர்களுடன் செல்ல அவாவி பூஜையை விரைந்து செய்கின்றாள். அதனைக் கண்ணுற்ற ஐங்கர நாயகன் ஔவைக்குக் காட்சியளித்து தனது துதிக்கரத்தினால் ஔவையைத் தூக்க, அவளும் "சீதக்களபச் செந்தாமரைப் பூம் பாதங்களை அகவல் பாடி அகமகிழ, கயிலை வரையில் ஞானக் கிழவியை, ஞானக் குழந்தை சேர்ப்பிக்கும் அழகுக் காட்சி.

இனி ஐந்தாம் தளம் வலதுபுறம் பிரம்ம புத்திரராகிய நாரத முனிவர் மகிழ ஷண்முகப் பெருமான்

கமுகாசல வேலவனாகக் கோலம் கொள்ளல் – பக்திப் பரவச மீதூர பக்தன் ஒருவன்,

*"சென்னிக் குளநகர் வாசன் தமிழ்*
*தேறும் அண்ணாமலை தாசன் செப்புஞ்*
*செக மெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையிற் புனை*
*தீரன் அயில் வீரன்.*

*"வண்ண மயில் முருகேசன் குற*
*வள்ளி பதம்பணி நேசன் உரை*
*வரமே தருகமுகாசல பதிகோயிலின் வளநான் மற*
*வாதே சொல்வன் மாதே.*

என்று கால்களின் சதங்கை காவடிச் சிந்தின் ஓசை நயத்திற்குத் தாளமிட காவடி எடுக்கும் இனிய தோற்றம்.

இடது புறம் தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி காடுடைய சுடலைப்பொடி பூசி எம்முள்ளம் கவர் அழகிய இடபாரூடக் காட்சி.

ஆறாவது தளம் – வலது: தோழியருடன் நம்பிராஜனின் செல்வ மகள் வள்ளி தினைப்புனத்தில் வீற்றிருக்கும் ஒய்யாரக் கோலம்

இடதுபுறம் வேதமே உருவான உலக நாயகனின் மடிகளில் செல்வக் குமரனும், சீர்மைகொள் விநாயகனும் அமர்ந்து ஆனந்தம் அருமைக் கோலம்.



ஏழாவது தளத்திலே உலகத் தொழில்கள் அனைத்தையும் நிறைவேற்றிய மகிழ்விலே மாணிக்க விநாயகன், (திருப்பணி வேலைகள் செப்பமுற நிறைந்த ஆனந்தமாகவும் இருக்கலாம்). ஆனந்தமாகப் பள்ளிகொள்ளும் அற்புதக் காட்சி.

சகல சௌபாக்கியங்களையும் அருளும் சங்க நிதி, பதுமநிதி இருமருங்கும் காட்சி தந்து நிறைவளிக்கின்றது.

இனி இராஜகோபுரத்தின் தெற்குப் பகுதிக்குச் செல்வோம்.

தெற்கு முதல்தளம் ஞானத்திற்குரிய திசைகளுக்கு ஒவ்வொரு தளத்திலும் ஞான விநாயகன் இடம் பெறுகின்றார். சனகர், சநந்தனர், சநாதனர் – சநற்குமாரர் ஆகிய வயது முதிர்ந்தவர்கள் பாடங்கேட்க, பாடம் கூறுபவனோ வயதில் குறைந்த யுவன், அவனோ வாய்மொழியாக எந்தப் பாடமும் நடத்த வில்லை. ஆனால் மாணவர்களான முனிவர்களோ ஐயம் நீங்கித் தெளிவடைந்து விட்டனர். இது ஆச்சரியமல்லவா? ஒரு வட மொழிப் பாடல்.

*"சித்ரம் வடதரோர் மூலே வ்ருத்தா சிஷ்ய: குருர் யுவ*
*மௌனம் வ்யாக்யானம் சிஷ்யாது சின்ந ஸம்சய:*

*"கல்லாலின் புடையமர்ந்து நான்மறை*
*யாறங்கமுதற் கற்ற கேள்வி*
*வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த*
*பூரணமாய் மறைக்கப்பாலாய்*
*எல்லாமா யல்லதுமா யிருந்ததனை*
*யிருந்தபடி யிருந்து காட்டி*
*சொல்லாமற் சொன்னவரை நினையாமல்*
*நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்*

தென்முகக் கடவுளின் அருமையான உபதேசத் திருக்கோலம் – நான்கு முனிவர்கள் புடைசூழப் பெருமான் உத்குடிகாசனத்து உறைந்தருளுகின்றார்.

## இரண்டாவது தளம்

*"கண்ணுதல் யோகிருப்பக் காமனின் றிடவேட் கைக்கு*
*விண்ணுறு தேவராதி மெலிந்தமை யோரார் மால்தான்*
*எண்ணிவேல் மதனை யேவ எரிவிழித் திமவான் பெற்ற*
*பெண்ணினைப் புணர்ந்துயிர்க்குப் பேரின்ப மளித்த தோரார்*

சிவஞான சித்தியாருக்கு ஓர் சுதை விளக்கம், கருவேளாம் மன்மதன் ஞான வேளாகிய சிவன்மீது அம்பு தொடுத்தும் சற்றும் அசையாமல் யோக மலையாகப் பெருமான் காட்சி தரும் ஞான விளக்கம், அருகே தென்திசைக் கடவுளான யமன் மீது சிவ பெருமான் சூலத்தை ஊன்றி மார்க்கண்டனைக் காக்கும் "யம சம்ஹாரக் காட்சி.

*"மறித்திகழ் கையினன் தானவர் கோனை மனமகிழ்ந்து*
*குறித்தெழு மாணிதன் ஆருயிர் கொள்வான் கொதித்த சிந்தைக்*
*கறுத் தெழு மூவிலை வேலுடைக் காவலனைத் தானலற*
*உறுக்கிய சேவடியான் கடவூருறை உத்தமனே"*
*அப்பர் பெருமானின் அரிய விளக்கம்.*

மூன்றாவது தளம் சநகர் முதலிய முனிவர்கள் நால்வர் சூழ "எம்மிறை நல்வீணை வாசிக்குமே" என்று வாகீசர் போற்றும் வீணாதர தக்ஷிணா மூர்த்தி.

அறப்பெருங் காவியமான மகாபாரதத்தை வியாச முனிவர் கூற, மேருவரையையே ஏடாகவும், தனது வலது தந்தத்தையே எழுத்தாணியாகவும், கொண்டு வரைந்து உலகின் முதல் எழுத்தாளப் பெருமகனாராகிய ஏகதந்தர்.

நான்காவது ஐந்து, ஆறு, ஏழு தளங்களிலும் தென்முகக் கடவுளின் ஞான உபதேசக் காட்சியே சிற்பமாக இலங்குகின்றது.

இனி இராஜ கோபுரத்தின் வடக்குப் பகுதிக்குச் செல்வோம்.

முதல்தளம் வடக்கு இங்கும் விநாயகர் பல்வேறு தோற்ற, நிலைகளில் இடம் பிடித்துள்ளார். முக்கியமாக வைணவர்கள் வணங்கும் விஷ்வக்சேனர் (தும்பிக்கையாழ் வார்) திருக்கரத்தில் கதையுடன் விளங்குகின்றார். அமர்ந்த கோலத்தில் நான்முகன் காயத்ரி, சாவித்திரி ஆகிய தேவியர் இருவர் புடைசூழ அமர்ந்த திருக்கோலம் கண்களுக்கு நல்விருந்து.


இரண்டாம் தளம் சிவனை மதியாத தக்கனின் தலையுடன் வீரபத்திரரின் சினம் மிகுந்த கோலம் – கீழே தக்கனின் தலையற்ற உடல். இங்கு பிரம்மா தேவியர் இருவருடன் நின்ற திருக்கோலத்தில் காட்சி யளிக்கின்றார்.

மூன்றுமுதல் ஏழுதளங்கள் வரை பிரம்மாவின் திருக்கோலமே நிறைந்துள்ளன.

அருமையான பேசும் சித்திரங்களால் அமைக்கப்பட்டிருக்கும் வானுயர இராஜ கோபுரம் சப்த தளங்களுடனும், நவகலசங்களுடனும் 91 அடி உயரமும் 40 அடி அகலமும் கொண்டு மதுரை மீனாக்ஷியம்மன் கோயில் கோபுரத்தைப் போன்று ஓங்கி உயர்ந்து தூலலிங்கமாகக் காட்சி தரும் அருமைப் பாட்டினைக் கண்டுதான் உணர வேண்டும். கோபுரத்தின் கீழே நிற்கும் பொழுதுதான் தோற்றத்தில் சிறிய நம்முடைய சிறுமையையும், தோற்றத்தில் விண்ணுற உயர்ந்து நிற்கும் இறைவனுடைய பெருமையையும் நம்மால் உணர முடிகின்றது.

இனி அலங்கார மண்டபத்துள் நுழையலாம் வாருங்கள். மண்டப முகப்பிலேயே வள்ளி கல்யாணம், வள்ளி இச்சாசக்தி , பக்குவமுற்ற ஜீவான்மா. திருமாலின் மகள் சுந்தரவல்லி, வேடர் குலத்திலே வளர்ந்தாலும் வள்ளியின் தூயபக்திக்கு இரங்கி, முருகன் வேலனாக, வேடனாக, விருத்தனாக வந்து ஆட்கொள்கின்றார்.

முருகன் தமிழ்க் கடவுள். தமிழரின் தொன்னெறியாகிய களவுவழித் திருமணத்தினாலே வள்ளியைச் சேர்ந்தார். இத்தகைய அரிய பெரிய தத்துவத்தை உள்ளடக்கிய வள்ளி திருமணக்காட்சி அலங்கார மண்டப முகப்பை அலங்கரிக்கின்றது. உள்ளே மீனாக்ஷி திருமணம். தந்தை தனயன் இருவருடைய திருமணங்களையும் கண்ட மனநிறைவோடு மண்டபத்தினுள் நுழைந்தால் தாமரை வடிவ மேற்கட்டு வேலைகள் வியப்பிலாழ்த்துகின்றன. பெரும் பொருள் செலவில் அமைக்கப்பட்டுள்ள விஸ்தாரமான மண்டபத்தின் வழவழப்பான தரையில் முகம் பார்க்கலாம் – அத்துணை நேர்த்தி சோடச விநாயகர்கள் (16 விநாயகர்கள்) வரிசையாக அமர்ந்திருந்து அருளைப் பொழிகின்றனர். வடக்கிலிருந்து தெற்காக நோக்கினால் 1. பாலகணபதி, 2. தருண கணபதி, 3. பக்தி கணபதி, 4. பிரும்ம கணபதி, 5. பிங்கள கணபதி, 6. உச்சிஷ்ட கணபதி, 7. க்ஷிப்ர கணபதி, 8. விக்கின கணபதி, 9. லக்ஷ்மி கணபதி, 10. மகாகணபதி, 11. வல்லபை கணபதி, 12. நர்த்தன கணபதி, 13. ஊர்த்துவ கணபதி , 14. சக்தி கணபதி, 15. ஹேரம்ப கணபதி, 16. வீரகணபதி, இவர்களை வணங்கி வழிபட்டு மகாமண்டபத்துள் நுழைகின்றோம். அங்கே வலது புறம் துவார கணபதியும், இடது புறம் பழனியாண்டவரும் அருளாசி வழங்கி நிற்கின்றனர். அழகான வசந்த மண்டபத்தை அடுத்து வலமாகச் சென்றால், புதிய அமைப்பிலான நவக்கிரக மேடையை அடையலாம்.




கிழக்கு நோக்கிய கதிரவன் ஏழுகுதிரைகள் பூட்டிய தேரில் நடுநாயகமாக கல்விக்கு உரிய நாயகனாகக்காட்சி தருகின்றார். ஏழுகுதிரைகள் பூட்டிய ஒற்றை ஆழி கொண்ட இரதத்தில் உலகை வலம் வரும் விதத்தில் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. இந்த நவக்கிரக அமைப்பில் ஒரு சிறப்பு, அவரவர்களுக்கு உரிய வாகனத்தில் நவநாயகர்களும் அருள் புரிகின்றார்கள். சந்திரன் வெள்ளைக் குதிரையிலும், செவ்வாய் ஆட்டுக்கிடாயிலும், புதன் குதிரையிலும், வியாழன் மீன வாகனத்திலும், சுக்கிரன் முதலையிலும், சனி பகவான் காகத்திலும், இராகு நீலச்சிம்மத்திலும், கேது கழுகிலும் அமர்ந்து மக்களின் துயர்களைப் போக்குகின்றனர்.

நவகோள்களை வணங்கித் தெற்கு நோக்கி வந்தால் அழகிய தூண்களில் அஷ்டமங்கலங்களைத் தாங்கும் மங்கையர்களையும், அஷ்ட இலக்குமிகளையும் தரிசிக்கலாம்.

வடக்குத் திக்கை நோக்கிய நிலையிலே வெற்றியைத் தரும் கொற்றவைத் தாயைக் கருவறையில் கண்டு அருள் பெறலாம். சங்கு சக்கரங்களைத் தாங்கிய விஷ்ணு துர்க்கையின் அழகுக் கோலம். மக்களைத் துன்பங்களினின்றும் காக்கும் துர்க்கமாக, அரணாக அத்தாய் திகழுகின்றாள். கிழக்கே காயத்திரியும், தெற்கே வராகியும், மேற்கே வைஷ்ணவியும் கருவரை விமானத்தில் காணப்படுகின்றனர். வடக்கு மண்டப நுழைவாயிலில் மகிடத்தின் மீது துர்க்கை, கலைமகள் அலைமகளுடன் காணப்படுகின்றனர். உள்ளே அஷ்டகர துர்க்கை காட்சி அருளுகின்றாள். தெற்கு நுழை வாயிலில் கணபதி நடுநாயகமாக வீற்றிருக்க அலைமகள், கலைமகள் ஔவை அகத்தியர் மருங்கிலே பணிந்து நிற்கக் காணலாம்.

மேற்கு நோக்கிய காவல் தெய்வம் இடும்பனின் சந்நிதி; தெற்கு வடக்கிலே வைரவர் விளங்க கிழக்கே காவடி எடுக்கும் பக்தனைத் தாங்கி நிற்கும் விமானம்.



மூலவரான மாணிக்க விநாயகரின் சந்நிதிக்குச் செல்லும் படிக்கட்டுக்கள் ஐந்தும் ந–ம–சி–வா–ய என்ற ஐந்தெழுத்தினையும், இருமருங்கும் யானையின் துதிக்கையினைப் போன்ற அமைப்பு திருக்களிற்றுப் படியினையும், சிதம்பரம் நடராசப் பெருமான் சந்நிதியை நினைவூட்டுகின்றன. மாணிக்க விநாயகனின் எழிற்கோலம் சொல்லுக்கு அப்பாற்பட்டது. வெள்ளிக் கவசம் சாத்திய ஐங்கரனின் ஒளித் திருமேனி பரிந்த செஞ்சுடரோ! பரிதியோ! மின்னோ! பவளத்தின் குழவியோ! பசும் பொன் சொரிந்த சிந்தூரமோ! தூமணித்திரளோ! சுந்தரத்து அரசு இது தான் என்று சொக்க வைக்கும் வண்ணக் கோலம். பெருமானின் அழகைப் பன்மடங்கு பெருக்கிக் காட்டும் கண்ணாடி எதிரே பொருத்தப்பட்டிருக்கின்றது.

மூலவரின் விமானம், பஞ்சதள அமைப்பு பஞ்சதளத்தில் முதல் தளம் மட்டுமே பார்க்கக் கூடியதாக உள்ளது. பஞ்ச தளத்திலும் சமயக்குரவர்கள், முனிவர்கள், கணபதி உருவ பேதங்கள் வடக்கே பிரும்மா, தெற்கே ஆலமர், கடவுள் பிக்ஷாடனர் போன்ற பலதிருவுருவங்கள் அழகிற்கு அழகு சேர்க்கின்றன.

மணிக்கூண்டுக் கோபுரத்தைக்கூட ஸ்தபதியார் விட்டு வைக்கவில்லை. அங்கும் இலிங்கப் பெருமானை ஆரத் தழுவிய நிலையில் விநாயகரைப் பார்க்கின்றோம். – இது ஒரு புதுமையான சிந்தனை.

மொத்தத்தில் பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயம் ஓர் சிற்பக் களஞ்சியம் என்றே கூறலாம். எண்ணூறுக்கும் மேற்பட்ட சுதைச் சிற்பங்கள் புராணவிளக்கங்களைத் தந்து நிற்கின்றன.

இப்பேசும் பொற்சிற்பங்களை வடித்துத் தந்த சிற்பக்கலா வித்தகர், திரு. வி. நாகலிங்கம் ஸ்தபதியார் பரம்பரை பரம்பரையாக புனிதப்பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார். எண்பது வயதினைத் தொட்டும் சற்றும் தளர்ச்சியுறாத திரு. நாகலிங்கம் அவர்களைக் காணும் பொழுது வியப்பாக இருக்கின்றது. இறைவன் திருவருள் அவர்களை வழிநடத்துகின்றது. நான்கு அல்லது ஐந்து தலைமுறைகள் இவர்களது அழியாத திருப்பணிகளுக்குச் சான்று பகர்கின்றன. மகன், பேரன் என வாழையடி வாழையாக இப்பணி வளர்கின்றது.

எல்லாச் சிறப்புக்களுக்கும் மூலகாரணம், சம்மாங்கோட்டு ஆலய பரிபாலன சபையினர் ஸ்ரீ மாணிக்க விநாயகரிடம் கொண்டுள்ள முறுகிய பக்தியே. தலைவர், பொருளாளர், செயலாளர், அங்கத்தவர்கள்

எல்லோரும் பிள்ளையாரின் தொண்டர்கள். முற்பிறப்பின் நல்வினைப் பயன் இக் கைங்கர்யத்தைச் செயலாக்கும் முயற்சியில் ஈடுபட்டதே என நினைக்கும் அவர்களது நினைப்பு, அனைவருக்கும் ஒரு முன்மாதிரி. 'பணியுமாம் என்றும் பெருமை' என்ற தொடரை வள்ளுவன் எடுத்தாண்டது இப்படிப்பட்ட தூய உள்ளம் கொண்டவர்களைக் கருதித்தானோ! என்று எண்ணத் தோன்றுகிறது.

மிகப்பெரிய ஒரு கும்பாபிஷேகத்தையும், எடுத்துக்காட்டான ஒரு மண்டலாபிஷேகத்தையும் நடத்திமுடித்திருக்கும் ஆலய பரிபாலன சபையினர் போற்றத் தகுந்தவர்கள்; வாழ்த்தத் தகுதியானவர்கள்.


சிறந்த பரிபாலனத்தைப் போலவே ஒரு ஆலயத்தின் செழுமைக்கு சிவாச்சாரியாரும் ஆதி காரணம் ஆவர். அம்முறையில் இவ்வாலயப் பணியில் மூன்று தலைமுறையினராகத் தொடர்ந்து பணிபுரியும் பேற்றினை சிவஸ்ரீ. சித்சபேசக் குருக்கள் அவர்கள் பெற்றிருப்பதும், மாணிக்க விநாயகரின் திருவருளே. 'மணிக் குருக்கள்' என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் ஆலயக் குருக்கள் அவர்கள் நிறைந்த அன்பும் ஆற்றலுங் கொண்டவர். அவரது தூய தொண்டின் விளைவுதான் ஆலயத்தின் ஏற்றமும் தோற்றமும் என்று கூறினால் அது மிகையல்ல.

நயினை நாகபூஷணியன்னையின் திருவடிகளை கனவிலும், நனவிலும் மறவாத பெருமதிப்பிற்குரிய சிவஸ்ரீ. சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் அவர்களும் இவ்வாலயத்தில் மூன்று கும்பாபிஷேகங்களாகத் தொடர்ந்து பணிபுரியும் பெருமைமிக்கவர். இவரது தலைமையில் திருக்கழுக்குன்றம் சிவஸ்ரீ தியாகராஜக் குருக்களின் வழிகாட்டலில் நாற்பதிற்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்கள் கலந்து கொண்டு ஆகஸ்ட் 24ந் திகதி நிகழ்த்திய மாபெரும் கும்பாபிஷேகத்தைப் போல மற்றொரு கும்பாபிஷேகத்தைக் காண முடியுமா! என்பது சற்று சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

ஸ்ரீ மாணிக்க விநாயகனின் தண்ணருள் பரிபூரணமாக அனைத்து மக்களுக்கும் கிட்ட வேண்டும் என்பதே எமது பிராத்தனை.

*"கணங்கொண்ட வல்வினைகள் கண்கொண்ட நெற்றிப்*
*பணங்கொண்ட பாந்தட் சடைமேல் – மணங்கொண்ட*
*தாதகத்த தேன்முரலும் கொன்றையான் தந்தளித்த*
*போதகத்தின் தாள்பணியப் போம்.*

# மாணிக்க விநாயகா!



பல்லவி

மாணிக்க விநாயக, மஹா தேவ புத்ர
காணிக்கையாய், எமை ஈந்தோம் நின்பாதம் சரணம்


அனுபல்லவி

வேத சாஸ்திரம், உன்னுள் அடக்கம்
யோக, ஞான திவ்ய சொரூபா
பாப விமோசனம், நின்கழலடி போக்கும்
தேக, லோக அபிமானம் களைவாய்

சரணம்

சௌக்கிய, சுகானுபவ நித்ய வாழ்வு
சங்கரன் மைந்தா, சூழ்ந்திடத் துணைசெய்
ஷண்முக சகோதரா, சாந்த ஸோபனா
சந்ததமும் எமை ஆள்வாய் சுந்தரநாயகா

செந்தணலெனவே தகிக்கும் வல்வினை - நின்
கண் மலர்க் கதிர்கள் நோக்கினால் தகரும்
சொர்க்கத்தின் மேலாம் திருவடி நிழல்கள்
பக்கத்தில் இருந்தால் நிம்மதி சாஸ்வதம்



- பருத்தியூர் பால வயிரவநாதன்.

*அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர்*
*நூதன ஆலய புனராவர்த்தனப் பிரதிஷ்டா*
*ஸப்ததள ராஜகோபுர*

# மஹாகும்பாபிஷேக வாழ்த்து

வெண்பா

உந்திக் கமலத்தில் யோகத்தை உள்ளடக்கி
வந்திக்க வந்த மழகளிறே - மாணிக்கா
சிந்தைக்கு எட்டாத தேசிகனே காவாயெம்
புந்திக்குள் வந்து புகுந்து.

ஏழுதளக் கோபுரத்தி லேறியமர்ந் தேரம்பன்
ஆளும் மலர்ப்பதந்தந் தாட்கொள்ளச் - சம்மாங்கோட்டு
அன்பர் விருப்பு மவர்செய்த புண்ணியமும்
இன்றொன்றி நிற்கிறதே பார்.

சம்மாங்கோட் டார்சால்பு சற்சனரின் சீர்கூற
எம்மாத் திரம்நான் விநாயகனே - சும்மா
சுடச்சுடரும் பொன்னேயோ! சுத்தசிவ சத்துவமோ
அடல்விடையாய் நீயே புதிர்.

இந்திர லோகமென்ன இங்கெழுந்த வெள்ளிமலை
மந்திரத்தால் வீழ்ந்த மதியமல்ல - சிந்தையிலே
அங்கிங் கெனாதபடி ஆனந்த மூர்த்தியாய்
இங்கிதமாய் நின்ற நினைவு.

மாணிக்கப் பிள்ளை மலரடியைக் கைதொழுதே
காணிக்கை வைத்துக் கருவறுமின் - ஆணிப்பொன்
முத்தோ! பவளமோ! முன்னிலவோ?, அஃதறுக்கா
அத்தன் அருளேயென் றறி.

காலவெள்ளத்து ஆழாத கந்தருவர் யாமத்தும்
கோலத் திருமுடிக்குக் கும்பவிழா - நூலிழையில்
கங்கை கரைந்து கடலே பெருக்கெடுத்து
வங்கம் வழிந்துவரும் காண்.

*யார்க்கரு விநாயகர் ஆதீனம்*
*கீழ்க்கரவை.*

*மு. வேலுப்பிள்ளை*

# மண்டலாபிஷேகத் தினங்களின் மாலை வேளைகளில் நடைபெற்ற சிறப்பு நிகழ்ச்சிகள்

| திகதி | நிகழ்ச்சிகள் | பங்கு பற்றியோர் |
|---|---|---|
| 24.08.2001 | மேளக் கச்சேரி | |
| 25.08.2001 | மேளக் கச்சேரி | இணுவையூர் ஸ்ரீ வி. ஆர். இராதாகிருஷ்ணன் குழுவினர் |
| 26.08.2001 | வயலின் கச்சேரி | |
| 27.08.2001 | மேளக் கச்சேரி | |
| 28.08.2001 | வில்லுப்பாட்டு | சோக்கெல்லோ சண்முகம் *குழுவினர்* |
| 29.08.2001 | சொற்பொழிவு | பேராசிரியை, செல்வி ஜெயபாரதி |
| | கும்பாபிஷேகப் பெருமை | *(பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம், தமிழ்நாடு.)* |
| 30.08.2001 | கங்கை வேடனும் | |
| | காளத்தி வேடனும் | பேராசிரியை, செல்வி ஜெயபாரதி |
| 31.08.2001 | சந்தோஷி மாதா | பேராசிரியை, செல்வி ஜெயபாரதி |
| 01.09.2001 | சொல்லின் செல்வன் | பேராசிரியை, செல்வி ஜெயபாரதி |
| 02.09.2001 | பிள்ளைக்கறியமுது | பேராசிரியை, செல்வி ஜெயபாரதி |
| 03.09.2001 | கர்ணனும் கும்பகர்ணனும் | பேராசிரியை, செல்வி ஜெயபாரதி |
| 04.09.2001 | விநாயகர் விஜயம் | பேராசிரியை, செல்வி ஜெயபாரதி |
| 05.09.2001 | தென்னிலங்கைக் கோமான் | பேராசிரியை, செல்வி ஜெயபாரதி |
| 06.09.2001 | நவக்கிரக மாண்பு | பேராசிரியை, செல்வி ஜெயபாரதி |
| 07.09.2001 | நலம் அருளும் நவ துர்க்கை | பேராசிரியை, செல்வி ஜெயபாரதி |
| 08.09.2001 | ஞானமும் கல்வியும் | திரு. க. நாகேஸ்வரன் எம். ஏ.<br>*மொழித்துறை விரிவுரையாளர், சப்ரகமுவ பல்கலைக்கழகம்* |
| 09.09.2001 | திருமறை தந்த விநாயகர் | திரு. க. நாகேஸ்வரன் |
| 10.09.2001 | விழுத்துணை | அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் |
| 11.09.2001 | விழிக்குத்துணை | அருள்மொழி அரசி திருமதி வசந்தா வைத்தியநாதன் |
| 12.09.2001 | வெற்றியளிக்கும் விநாயகன் | திருப்புகழ்ச் செல்வர், கவிமாமணி மதிவண்ணன்,<br>*தமிழ் நாடு.* |
| 13.09.2001 | திருப்புகழ்த்தேன் | கவிமாமணி மதிவண்ணன் |
| 14.09.2001 | பாம்பனடிகள் | கவிமாமணி மதிவண்ணன் |
| 15.09.2001 | இறைவன் இருக்கிறான் | கவிமாமணி மதிவண்ணன் |

| | | |
|---|---|---|
| 16.09.2001 | கந்தனே எழுதிய காவியம் | கவிமாமணி மதிவண்ணன் |
| 17.09.2001 | மலைமகள் திருமணம் | கவிமாமணி மதிவண்ணன் |
| 18.09.2001 | உதித்தனன் ஒரு திருமுகன் | கவிமாமணி மதிவண்ணன் |
| 19.09.2001 | பிரணவ உபதேசம் | கவிமாமணி மதிவண்ணன் |
| 20.09.2001 | வீரபாகுத் தூது | கவிமாமணி மதிவண்ணன் |
| 21.09.2001 | தேவியர் இருவர் | கவிமாமணி மதிவண்ணன் |
| 22.09.2001 | ஆன்மீக இன்னிசைக் கச்சேரி | அருட்கலைத் திலகம், கலாபூஷணம் பி. வி. இராமன் |
| 23.09.2001 | ஆன்மீகச் சொற்பொழிவு | சுவாமி ரமண சைத்தன்யா *(வதிவிட பிரமச்சாரி, சின்மயாமிஷன், கொழும்பு.)* |
| 24.09.2001 | ஆன்மீகச் சொற்பொழிவு | சுவாமி ஆத்மகனானந்தா *(தலைவர், இராமகிருஷ்ண மிஷன், கொழும்பு.)* |
| 25.09.2001 | அழகு தெய்வம் | திருமதி வசந்தா வைத்தியநாதன் |
| 26.09.2001 | வில்லுப்பாட்டு | யாழ்ப்பாணம், கலாபூஷணம் சின்னமணிக் குழுவினர் |
| 27.09.2001 | இந்து சமயத்தை சரியாக அறிந்து கொண்டோமா? | இளா. சுந்தரம் *(இயக்குனர், அகில இந்திய வானொலி, மதுரை.)* |
| 28.09.2001 | பெருமைமிகு பிள்ளையார் | இளா. சுந்தரம் |
| 29.09.2001 | துள்ளி வருகுது வேல் | இளா. சுந்தரம் |
| 30.09.2001 | பெரியபுராணத்தில் பெண்கள் | இளா. சுந்தரம் |
| 01.10.2001 | வழிகாட்டும் வள்ளலார் | இளா. சுந்தரம் |
| 02.10.2001 | இராமனைச் சந்திப்போம் | இளா. சுந்தரம் |
| 03.10.2001 | கண்ணனைப் போற்றுவோம் | இளா. சுந்தரம் |
| 04.10.2001 | பாரதியின் பராசக்தி | இளா. சுந்தரம் |
| 05.10.2001 | அன்பே சிவம் | இளா. சுந்தரம் |
| 06.10.2001 | திருப்புகழ் இன்பம் | இளா. சுந்தரம் |
| 07.10.2001 | அவர் தலைவர் | கம்பவாரிதி இ. ஜெயராஜ் |
| 08.10.2001 | மீனும் தேனும் | கம்பவாரிதி இ. ஜெயராஜ் |
| 09.10.2001 | பெரும் தெய்வம் | கம்பவாரிதி இ. ஜெயராஜ் |
| 10.10.2001 | தெய்வம் என்பதோர் சிந்தை | கம்பவாரிதி இ. ஜெயராஜ் |

*10.10.2001 மண்டலாபிஷேகக் கிரியைகள் பூர்த்தி*

**சிறப்பு நிகழ்ச்சி**

கும்பாபிஷேகச் சிறப்பு மலர்
'மாணிக்க விநாயகம்' வெளியீடு









மின்விளக்கு அலங்காரத்துடன் இராஜ கோபுரம்




கோபுரமும், நிர்வாக சபையினரும்



ஆலயக் கதவை யானை திறந்து, உள்நுழையும் அழகுக்காட்சி!



இராஜகோபுரத்தின் உச்சிப்பகுதி



மூலஸ்தான கோபுரம்





அட்டபந்தன மருந்து இடித்தல்


எண்ணெய்க்காப்புக்காக பக்தர்கள் வரிசை












ஆலய மூர்த்தங்கள்

மூலஸ்தான கோபுரமும்
திருமண மண்டபமும் ↓

நவக்கிரக சந்நிதி →

யாக சாலை









கும்பாபிஷேகக் கிரியைகளை நிகழ்த்தி வைக்கும் சிவாச்சாரியப் பெருமக்கள்.








கும்பாபிஷேகக் கிரியைகளிற் பங்கேற்கும் அறங்காவலர் சபையினர்








அபிஷேக கும்பங்களைச் சுமந்துவரும் காட்சி!



ஆலயத்து முன்வாயிற் கோபுரத்திற்கு புனித கும்பநீர் அபிஷேகம்



இராஜ கோபுரத்திற்கு புனித கும்பநீர் அபிஷேகம்



மூலவருக்கு புனித கும்பநீர் அபிஷேகம்







ஆலயத்தினுள் சந்நிதிக் கோபுரத்திற்கு புனித கும்பநீர் அபிஷேகம்.



கிரியைகள், கும்பாபிஷேகம் என்பவற்றில் கலந்து கொண்ட பக்தர்கள்!




கலசங்கள் ஸ்தாபித்தல்



உற்சவமூர்த்தி
உள்வீதி வலம்



மண்டலாபிஷேகத் தினத்தன்று நாதஸ்வரக் கச்சேரி




சிவாச்சாரியார் சொற்பொழிவு




ஸ்தபதிகளுக்கு கௌரவம்




மண்டபத்தில் பக்தர்கள்










வண்ணத்திலும், சிற்ப
வடிவத்திலும்
ஆலயத்து உள் அழகு!








ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய அலங்கார மண்டபத்தில்
அமைக்கப்பட்டுள்ள விநாயகரின் பதினாறு மூர்த்தங்கள்









ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய அலங்கார மண்டபத்தில்
அமைக்கப்பட்டுள்ள விநாயகரின் பதினாறு மூர்த்தங்கள்












ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய அலங்கார மண்டபத்தில்
அமைக்கப்பட்டுள்ள விநாயகரின் பதினாறு மூர்த்தங்கள்












ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய அலங்கார மண்டபத்தில்
அமைக்கப்பட்டுள்ள விநாயகரின் பதினாறு மூர்த்தங்கள்





கொழும்புத் தமிழ்ச் சங்கம்



# ஆலயத்தின் அமைப்பும் திருவுருவங்களும்



'அண்டத்திலுள்ளது பிண்டத்திலுண்டு' என்று தத்துவ நூல்களும் சமய ஞானிகளும் உரைப்பது வழக்கம். அண்ட மென்பது இந்தப் பிரபஞ்சம். பிண்டம் என்பது நமதுடல். அண்டங்கள் யாவற்றிலும் பரந்து விரிந்து வியாபித்திருக்கும் பேரருட்சக்தி நிறைந்த இறைவன் எமது உடலிலும் அவ்வாறே உறைந்திருக்கிறான்.

*"நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"*
*"விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்"*
*"வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே"*

என வரும் சிவபுராண அடிகள் சிவபெருமானின் பெருமை நுண்மைகளைப் புலப்படுத்துவன. இத்தகைய இறைவனை அண்டத்தில் வியாபித்திருக்கும் ஆண்டவனைப் பிண்டமாகிய நமது உடலிலேயே கண்டுணர்ந்து அனுபவித்து வழிபட்டு ஆனந்திப்பது ஞானிகள் செயல். இது யோக ஞான மார்க்கங்களின் பாற்பட்டது.

*"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்*
*வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"* என்றும்,

*"காயமே கோயி லாகக் கடிமனம் அடிமை யாக*
*வாய்மையே தூய்மை யாக மனமணி லிங்க மாக*
*நேயமே நெய்யும் பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்*
*பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே"*
என்றும்

வரும் திருமுறை மலர்கள் இதனை விளக்கும்.

சிற்றறிவினராகிய எம்போன்றவர்களுக்கு இந்த யோக ஞான மார்க்கங்கள் கைவருதல் கடினமென்பதால் சரியை, கிரியை என்னும் முதற்படிகளை அமைத்தனர் சான்றோர். சரியைத் தொண்டுகளையும் கிரியை வழிபாடு களையும் நிகழ்த்தி இறைவனை அடையும் இந்த மார்க்கங் களுக்குச் சில சாதனங்களும் அவசியமாகின்றன.

'இன்ன வழியால் இன்ன இடத்திற்குப் போகலாம்' என்று பாதையைச் சுட்டி நிற்றல் மட்டுமன்றி இன்ன வாகனத்தில் ஏறி இப்படிப் போக வேண்டும் என்று வழி முறைகளையும் சொல்லித் தருகிறது சைவசமயம்.

முன்பொருபோதும் கண்டறியாத பொருள்களைப் படங்கள் வரைந்து அதன் மூலம் விளங்கச் செய்வது போலவும் செயல்முறைப் பரிசோதனைகள் மூலம் சில முடிவுகளைக் கண்டறிவது போலவும், நாம் ஞானக் கண்ணால் கண்டறிய வேண்டிய இறைவனுக்குச் சில உருவப் பிரதிமைகளை நமது ஊனக் கண்களுக்குத் தெரியும்படி அமைத்து அத்திருவுருவங்களை வைத்துச் சில கிரியைகளைச் செய்கிறோம்.

எல்லா இடங்களிலும் எல்லாச் செயல்களையும் செய்வது இயலாத காரியம். அவ்வாறு செய்யின் உரியவாறு சித்திகள் கிடைப்பதும் அபூர்வம். விஞ்ஞானப் பரிசோதனைகள் அதற்கென அமைந்த ஆய்வு கூடங்களிலேயே நிகழ்த்தப்பட முடியும். இது போலவே வழிபாடுகள், கிரியைகளை முறைப்படி நிகழ்த்த ஆலயங்கள் அவசியமாகின்றன.

பசுவின் உடலிலுள்ள பாலை அதன் மடியிலிருந்து மட்டுமே பெறுதல் முடியும். உலகெங்கணும் வியாபித்திருக்கும் ஆண்டவனை வழிபட்டு அவனருள் பெற ஆலயமும் இவ்வாறே அவசியமாகிறது. அது மாத்திரமல்ல ! பசுவின் மடியில் கைவைத்த மாத்திரத்தில் பால் சுரப்பதில்லை. அதன் கன்றைச் சிறிது நேரம் ஊட்டும்படி விட்டுப் பின்னர் நாம் முயற்சியுடன் கறந்தெடுத்தல் போல, உரிய காலங்களில் உரிய முறைப்படி கிரியைகளை நிகழ்த்தி முயற்சியுடன் வேண்டி நின்றால் இறைவன் திருவருள் தானே சுரக்கும்.

பாலிலே மறைந்து தோன்றும் நெய்யைப் பிரித்தெடுப்பதற்கும், விறகிலே மறைந்து தோன்றும் தீயினை வெளிப்படுத்தவும் நாம் எவ்வளவு முயற்சி எடுக்கவேண்டியுள்ளது. இதேயளவு முயற்சியை இறையருள் நாட்டத்திலும் வைத்தால் நாம் வெற்றி பெறலாம்.

*விறகிற் றீயினன் பாலில் படுநெய்போல்*
*மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்*
*உறவு கோல்நட்டு உணர்வுக் கயிற்றினால்*
*முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே"*

என்று இதையே விளக்குகிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

திருவுருவங்களும், ஆலயங்களும் எப்படி எப்படி அமையவேண்டும், எந்தெந்த அளவுகளில் அமைக்கப்பட வேண்டும் என்று பல நியதிகளை – விதிமுறைகளைச் சமய நூல்கள் எடுத்துரைக்கின்றன. ஆலயங்களின் அமைப்பு மட்டுமல்லாமல் ஒவ்வொரு விதமான கிரியைகளும் நடைபெற வேண்டிய மண்டபங்கள், அவற்றின் அமைப்பு முறைகள், அளவுகள், அங்கு இருக்கவேண்டிய பொருள்கள் இவையெல்லாம் ஆகமங்களிலும் அவற்றை முதல் நூல்களாகக் கொண்டெழுந்த சிற்பசாஸ்திரம் முதலிய நூல்களிலும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

ஆலயமானது நமது உடலின் அமைப்பிலேயே அமைக்கப்படுவது கவனிக்கத்தக்கது. ஆலயம், அதன்கோபுரம், தேர் என்பவை மனித சரீரத்தையும், இப் பிரபஞ்சத்தையும் நினைவூட்டும் வகையில் அமைக்கப்படுகின்றன.


ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற தோற்றத்தில் ஆலயமும் அமைகிறது. மூலஸ்தானம் அல்லது கருவறை சிரசினைக் குறிக்கும். அர்த்த மண்டபம் கழுத்தினையும், மஹாமண்டபம் மார்பினையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அடுத்த மண்டபங்கள் கால்களையும், ராஜகோபுரம் பாதங்களையும் குறிக்கின்றன.

அந்த மனிதன் அப்படியே இருந்தபடியே முதுகை நிமிர்த்தி உட்கார்ந்தால் முள்ளந்தண்டு அமையும் வகையைக் கொடித்தம்பம் காட்டுகிறது. இக் கொடித்தம்பத்தின் அடியில் இருக்கும் சிறிய விநாயகர் எமது மூலாதாரத்தில் அரூப சொரூபியாயிருக்கும் விநாயகரைக் குறிக்கிறது. மூலாதார கணபதி என இவர் அழைக்கப்படுகிறார்.

யோக மார்க்கத்திலே ஆறாதார ஸ்தானங்கள் என மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம். விசுத்தி, ஆஞ்ஞை என்பன குறிப்பிடப் படுகின்றன. முள்ளந்தண்டெலும்பின் அடிப்பாகம் குண்டலினி சக்தியின் (மனிதனில் மறைந்திருக்கும் அளப்பரும் தெய்வீக சக்தி) இருப்பிடம். இதற்குச் சற்று மேலாகக் கணபதியின் இருப்பிடமான மூலாதாரம் உள்ளது. இது நாலிதழ்க்கமல வடிவுடையது.

இதற்குமேல் லிங்கத்தின் அடிப்பாகத்திற்கு நேரே ஸ்வாதிஷ்டானம் என்னும் ஆறிதழ்க் கமலம் உள்ளது. இது பிரமாவின் ஸ்தானம். நாபிக்கு நேரே உள்ள பத்திதழ்க் கமலம் மணிபூரகமாகும். இது விஷ்ணுவின் இருப்பிடமாகும். இருதயத்திற்கு நேரே உள்ள பன்னிரண்டிதழ்க் கமலம் அநாகதம். இது ருத்திரனுக்குரியது. தொண்டைக் குழிக்கு நேரே பதினாறிதழ்க் கமலமாக அமைந்தது விசுத்தி. இது மகேஸ்வரனின் இருப்பிடம். புருவ மத்திக்கு நேரே உள்ள இரண்டிதழ்க் கமலமானது ஆஜ்ஞை எனப்படும் சதாசிவனது இருப்பிடமாகும்.

இந்த ஆறு ஆதாரங்களுக்குமேல் சிரசின் உச்சியிலே அமைந்த ஆயிரமிதழ்க் கமலமான சஹஸ்ராரம் என்பது சுத்த சிவத்தின் இருப்பிடமான துவாதசாந்தஸ்தான அடித்தளமாகும்.



இவை ஆலயத்தின் அமைப்பில் முறையே, கொடித் தம்பத்தடி, பலிபீடம், தரிசனமண்டபம், மஹாமண்டபம், அர்த்தமண்டபம், கருப்பக்கிருகம் என்பனவாக அமைகின்றன. சஹஸ்ராரத்தை நினைவூட்டவே கர்ப்பக்கிருகத்தில் கமல விளக்கு அமைக்கின்றனர்.

ஆலயத்தின் கோபுரம் பிரபஞ்ச இயக்கத்தை விளக்குகிறது. அடுக்கடுக்காய் அமைந்த தளங்கள் பல்வேறுபட்ட உலகங்களையும், உலகவாழ்க்கையின் பலவித அநுபவங்களையும் குறிப்பன. இறைவனின் பலவிதமான திருவிளையாடல்கள் மற்றும் சாதாரண உலகியல் நடைமுறைகள் என்பன கோபுரத்தில் அமையும் சிற்பங்களால் குறிக்கப்படுகின்றன.

கீழே அகன்றிருக்கும் கோபுரம் மேலே ஒடுங்கிச் சென்று கலசத்திலே நிறைவுறும். மன ஒருமைப்பாடும், பரம்பொருள் ஒன்றையே பற்றி நிற்கும் மனத்திண்மையும் மேலான எண்ணங்களில் ஆழ்ந்து நிற்றலும் ஆன்ம ஈடேற்றத்திற்கு அவசியம் என்பதைக் கோபுரம் விளக்குகிறது.

தூலலிங்கம் என்று கூறப்படும் இக் கோபுரமானது சூக்குமலிங்கம் என அழைக்கப்படும் மூலமூர்த்தியின் வெளிப் படையான குறியீடாகவும், (தூலம் – வெளிப்படையானது; சூக்குமம் – மறைபொருள்) வெகுதூரத்தில் உள்ளவர்களுக்குக் கூட ஆலயத்தின் இருப்பிடத்துக்கு வழிகாட்டுவதாகவும், காணுந் தோறும் இறையுணர்வை ஏற்படுத்துவதாகவும் அமைகிறது.

ஆலயங்களிலுள்ள கண்டாமணி எனப்படும் அசையா மணியும் இவ்வாறே தொலைவிலுள்ள வர்களுக்கும், பல்வேறு கடமைகளில் ஈடுபட்டிருப் பவர்களுக்கும் உரிய வேளைகளில் இறை நினைவையூட்டிக் கோயிலின் இருப்பிடத்தைக் காட்டி நிற்பதோடு மங்கல ஒசையை வெளிப்படுத்துவதாகவும் இருக்கிறது.

மேலும் இறைவன் நாத தத்துவமாகவும் இருக்கிறான் என்பதனால், ஆலயங்களில் பல்வேறு விதமான நாதங்களை வழிபாட்டின் போது உருவாக்குகிறோம். மங்கல வாத்தியங்களை ஒலிப்பதன் மூலம் இவை உருவாக்கப்படுகின்றன.

''ஓசை ஒலி எலாம் ஆனாய் நீயே'' என்று திருமுறை கூறுகிறது. ஒலிகளிலெல்லாம் நிறைந்து விளங்கு பவனாகவும், ஒலிகளையெல்லாம் உருவாக்குபவனாகவும் விளங்குபவன் பரமேஸ்வரன் அல்லவா? நடராஜ தாண்டவத்தின்போது அவரது உடுக்கிலிருந்து பிறந்த ஒலியிலிருந்தே இசையும் மொழியும் பிறந்தன.

மணியோசைக்குத் தேவர்களை அழைக்கும் சக்தியும், தீய சக்திகளை அகற்றும் சக்தியும் இருப்பதாகச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதனாற்றான் எந்தக் கிரியையை ஆரம்பிக்கும் போதும் பூஜையில் பயன்படுத்தப்படும் மணிக்குப் பூஜை செய்து மந்திர சகிதமாக அதனை ஒலிக்கச் செய்கின்றார்கள்.

ஆலயத்தின் அமைப்பு வெளியே அகன்று பெரிய மண்டபங்கள் அமைந்து உள்ளே போகப் போகச் சிறுத்து ஒடுங்கி மூலஸ்தானத்திற் குவிகிறது. மனம் குவிந்து ஒருமைப்பபாட்டுடன் வழிபாடியற்றிப் பரம்பொருளை அடையலாம் என்பதையே இது விளக்குகிறது.

மூலஸ்தானம் எனப்படும் கருவறையானது வாயிற்புறம் தவிர்ந்த ஏனைய மூன்று புறமும் மூடப்பெற்றதாகவும், இருள் சூழ்ந்ததாகவும் இருக்கும்.

வாயிலில் திரை இடப்பட்டிருக்கும். சிவாசாரியார் திரையை நீக்கித் தீபத்தை ஏற்றிக் காட்டும் போதுதான் இறைவன் திருவுருவம் தெற்றெனத் தெரிகிறது.

ஆன்ம கோடிகளின் அறிவை மறைத்து உணர்வை மழுங்கடித்து அவர்களை மூடிநிற்கும் ஆணவ இருளை நீக்கி, நல்லறிவுச் சுடர் கொளுத்தி ஞானதீட்சை வழங்கி நல்லாசான் வந்து வழிகாட்டும் போது திருவருட் சக்தியின் துணையால் சிவதரிசனம் கிட்டும் என்ற சைவசித்தாந்தக் கருத்தினது தத்துவ விளக்கமாக இவை அமைவது கவனிக்கத் தக்கது.

ஸ்தம்ப மண்டபத்திலே கொடித் தம்பத்திற்கருகிலே பத்ரலிங்கம் என்று கூறப்படும் பலிபீடமும் அதையடுத்து நந்தியும் அமைந்திருக்கக் காணலாம். இவையும் பதி, பசு, பாசம் என்கிற (இறைவன், ஆன்மா, ஆணவாதி மலங்கள்) முப்பொருளுண்மை கூறி நிற்பவையே.

நந்தியானது பலிபீடத்தைப் பாராது சிவனை நோக்கியவாறு (மூலஸ்தானத்தைப் பார்த்தபடி) அமைகிறது. பலிபீடம் மலநீக்கத்திற்கு அறிகுறி. நந்தி ஆன்மா. ஆன்மா தனது ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் பலியிட்டு அவற்றினின்றும் நீங்கிப் பதியாகிய பரம்பொருளை நாடவேண்டும் என்பதையே இது குறிக்கின்றது. கொடிமரமானது பஞ்சகிருத்தியங்களை விளக்கும் மஹோற்சவ காரியத்திற்குப் பயன்படும்.

மூலஸ்தானத்திலே பிரதான தெய்வம் வீற்றிருக்க தெற்கு வாசல் நோக்கி சக்தி அல்லது எழுந்தருளி மூர்த்தம் முதலியவற்றிற்கும் சுற்றுப்பிரகாரத்திலே உரிய இடங்களிலே ஏனைய பரிவார தெய்வங்களுக்குமாக சந்நிதானங்கள் அமைக்கப்பட்டிருக்கும். ஆலயங்கள் பொதுவாகக் கிழக்கு நோக்கி அமைவதே முறை, ஆனால் இடம், பொருள், ஏவல்களுக்கேற்றபடி மிகச் சில இடங்களில் வடக்கு மேற்கு நோக்கியும் கோயில்கள் அமைவதுண்டு, ஆனால் தெற்கு நோக்கி எந்தவொரு ஆலயமும் அமைவதற்கு விதி இல்லை. எனினும் சில இடங்களில் தனியான நடேசர் கோயில்கள் தெற்கு நோக்கி உள்ளன.

பொதுவாகச் சிவாலயங்களில் தென்மேற்கு மூலையில் கிழக்கு நோக்கிப் பிள்ளையாரும், வடமேற்கு மூலையில் கிழக்கு நோக்கி சுப்பிரமணியரும், ஈசானத்தில் தெற்கு நோக்கி வசந்த மண்டபமும், மேற்கு நோக்கி யாகசாலையும், அருகில் மேற்கு நோக்கி பைரவரும், அதையடுத்து மணிக்கோபுரமும் அமைவது மரபு. மஹாமண்டபத்தில் தெற்கு முகமாக அம்பிகை வீற்றிருப்பார். தரிசன மண்டபத்தில் நடராஜர் மற்றும் எழுந்தருளிகள் வைக்கும் வழக்கம் சில இடங்களில் உண்டு. நந்தி, பலிபீடம் இவற்றிற்கு நேர்வடக்கே நவக்கிரகங்கள் அமையும்.

நவக்கிரக மண்டபத்திலே மத்தியில் கிழக்கு நோக்கிச் சூரியனும், தென்கிழக்கில் மேற்கு நோக்கிச் சந்திரனும், தெற்கிலே தெற்கு நோக்கிச் செவ்வாயும், வடகிழக்கில் கிழக்கு நோக்கிப் புதனும், வடக்கிலே வடக்கு நோக்கிக் குருவும், கிழக்கிலே கிழக்கு நோக்கிச் சுக்கிரனும், மேற்கிலே மேற்கு நோக்கிச் சனீஸ்வரனும், தென்மேற்கில் தெற்கு நோக்கி ராகுவும், வடமேற்கில் தெற்கு நோக்கிக் கேதுவும் காட்சியளிப்பர்.

சனீஸ்வரனைத் தனிச் சந்நிதானத்திலே அமைக்கும்போது ஈசானத்தையடுத்து பைரவருக்கருகில் மேற்கு முகமாக அல்லது வடமேற்கு மூலையில் தெற்கு முகமாக அமைத்தல் மரபு, கோபுர, வாசலையடுத்து இரு புறத்திலும் மேற்கு முகமாகச் சூரிய சந்திரர்களுக்கும் தனிக்கோயில்கள் அமைவதுண்டு.

ஆலய அமைப்பு, சுற்றுமதில்கள், வீதிகள், பரிவார தெய்வங்கள் இவை யாவற்றையும் நோக்கும் போது நமக்கு ஒரு ராஜசபை நினைவுக்கு வருவது இயல்பு. வீதி உலா வருதல், குடை, தீவட்டி உபசாரங்கள் ஆகிய இவையெல்லாம் ராஜ மரியாதைக்குச் சமமானவையே!

முற்காலத்தில் அரசனைக் கடவுளாக மதித்தமையாலும், அரசனே கண்கண்ட தெய்வமாக இருந்தமையாலும் இத்தகைய ராஜோபசாரங்கள் அரசனுக்கும் கடவுளுக்கும் சமமாக இருந்தன.

பிரபஞ்ச இயக்கம் பரம்பொருளின் பஞ்சகிருத்தியங்களின் அடிப்படையில் நடப்பது. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற இந்த ஐந்தொழில்களையும் பரம்பொருளாகிய சிவபெருமான் தாமே புரிவாரெனினும், தமது சக்தியின் துணைகொண்டு பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகியவர்களை அதிட்டித்து நின்று இத்தொழில்களைப் புரிவதாகக் கருதுதல் சித்தாந்த மரபு. ஒரு இராச்சியத்தை நிர்வகிக்கும் அரசன் பல மந்திரிகள், சேவகர்கள், உத்தியோகத்தர்கள்,


அதிகாரிகள் ஆகியோரைக் கொண்டிருத்தல் போலப் பரமசிவனும் தமது பரிவார தெய்வங்கள் மூலமாகப் பிரபஞ்சத்தை இயக்குதல் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றே.

ஆயின் சற்று நிதானமாகச் சிந்திப்பின், இவ்வியக்கங்களுக் கெல்லாம் மூலகாரணமா யிருக்கின்ற அந்த ஒருவரே வேறு வேறு பெயர்களையும் தோற்றங்களையும் கொள்கிறார் என்பது விளங்கும். விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், வீரபத்திரர் ஆகிய நால்வரும் சிவபெருமானின் திருக் குமாரர்கள் என்று கூறப்படும். அதே நேரத்தில் இவர்கள் பரம சிவனிடமிருந்து வேறல்லாதவர்கள் என்பதும் பல புராணங்களி லிருந்து புலப்படுகின்றது. ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு தேவையை முன்னிட்டு ஒவ்வொரு திருவுருவத்தினைப் பரமேஸ்வரன் மேற்கொண்டிருக்கிறார். அத்தகைய வடிவங்களும் ஆலயங்களிலே பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்படுவதுண்டு.

ஆலயத்தின் கருவறைச் சுவர்களிலும், அர்த்த மண்டபச் சுவர்களிலும் வெளிப்புறங்களில் மாடங்கள் செய்யப் பெற்று (இவை கோஷ்ட பஞ்சரங்கள் எனப்படும்) அவற்றிலும் திருவுருவங்கள் சில பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. இவற்றில் தெற்கே உள்ள மாடங்களில் தக்ஷிணாமூர்த்தி, நிருத்த கணபதி ஆகியோரும் மேற்கே உள்ளதில் லிங்கோற்பவரும், வடக்கே உள்ள மாடங்களில் பிரம்மா துர்க்கை ஆகியோரும் அமைவது வழக்கம்.

கோயில் அதன் வசதிக்கேற்பவும் சூழலுக்கேற்பவும் ஒரு வீதியுடையதாக அல்லது பல வீதிகளை உடையதாகவும் பல்வேறு மண்டபங்களை உடையதாகவும் அமையும். சாதாரணமாகக் கர்ப்பக்கிருகம் (மூலஸ்தானம்), அர்த்த மண்டபம், மஹா மண்டபம், தரிசன மண்டபம் (நிருத்த மண்டபம்), வசந்த மண்டபம் (தேவசபை), யாகசாலை, பாகசாலை (மடைப்பள்ளி), களஞ்சியம், வாகனசாலை என்பனவும், பரிவார தேவர்களின் சந்நிதிகளும் பெரும்பாலும் எல்லாக் கோயில்களிலும் இருக்கின்றன. வசதியுள்ள பெரிய கோயில்களில் வாக்கிய மண்டபம், புராண மண்டபம், தீக்ஷா மண்டபம், புஷ்ப மண்டபம் எனப் பல மண்டபங்கள் அமைவதுண்டு.

மூலஸ்தானத்தின் மேல் பண்டிகை அல்லது ஸ்தூபி எனப்படும் பகுதி உண்டு. ஸ்தூபி இல்லாத கோயில்களை மடாலயங்கள் என்று கூறுவர். ஸ்தூபி, ராஜகோபுரம், தூண்கள், விதானங்கள் முதலியவற்றிலும், விக்கிரகங்கள் எனப்படும் இறைவன் திருவுருவங்களிலும் இந்து நாகரிகத்தின் சிறப்பைக் காணலாம். இவற்றில் சிற்பக்கலை நுணுக்கமும் ஓவியக்கலை மாட்சியும் ஒளிர்கின்றன. இவை இந்து மதத்தின் பக்திநெறியை மட்டுமன்றிக் கலை, கலாசாரங்களின் பண்பாட்டுப் பாரம் பரியங்களுக்குள்ள சிறப்பினையும் எடுத்துக்காட்டுவனவாக அமைகின்றன.



பிரகாரங்கள் எனப் பெயர் பெறும் வீதிகள் இறைவனின் திருவுருவங்கள் அலங்கரிக்கப்பட்டு உலா வருவதற்கும், பக்தர்கள் வீதி வலம் வந்து



வழிபாடியற்றுதற்கும் உதவுகின்றன. வீதிவலம் வருதல், அஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரங்கள் எனக் கூறப்படும் முறைகளில் வீழ்ந்து வணங்குதல், சிரசில் குட்டி வணங்குதல், தோப்புக்கரணம் போடுதல், அங்கப்பிரதட்சணம் செய்தல் ஆகியன நமது வழிபாட்டு முறைகளிற் சிலவாகும்.

இவற்றை ஒழுங்கான முறையிற் கடைப்பிடித்து வழிபடும் போது இவை மனத்தை ஒரு நிலைப்படுத்தி இறைவனை நாடிச்செல்ல உதவுவதோடு நல்ல உடற்பயிற்சிகளாகவும் அமைந்து உடல் நலத்திற்கும் உதவுகின்றன. உடலும் மனமும் ஒத்துழைத்து இறையருளைப் பெறத் துணை புரிகின்றன.

இவை மட்டுமல்லாமல், இங்கு நடைபெறுகின்ற கிரியைகளுங்கூட நமது மன வளர்ச்சியில் படிப்படியான முதிர்ச்சியை ஏற்படுத்தி ஆன்ம விடுதலைக்கு நம்மை அழைத்துப் போகின்றன என்பது நன்கு சிந்தித்தால் உணரப்படும்.

இனி, திருவுருவங்கள் பற்றிச் சிறிது சிந்திப்போம். சிவலிங்கம் இறைவனின் குறியீடாக அமைவது. உருவமல்லாதது, அருவமும் அல்லாதது. எனவே அருவுருவத் திருமேனி என அதனைக் கூறுவர். அருவத் திருமேனி வழிபாடு ஞான மார்க்கத்திற்குரியது. எம் போன்ற சிற்றறிவினர்க்குரிய சரியை, கிரியை, வழிகளுக்கு உதவும் வகையில் உருவத் திருமேனிகள் பல உள்ளன. அவற்றையே ஆலயங்களில் வைத்து வழிபடுகிறோம்.

சிவபெருமானது சிறந்த மூர்த்தங்களுள் ஒன்று நடராஜ வடிவம். இது ஐந்தொழிலைக் குறிக்கும் ஆனந்த தாண்டவ வடிவமாகும். இடது பாதம் தூக்கி வலது பாதம் ஊன்றி ஆடும் இந்த நடனத்தில்,

*"தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாம்*
*ஊன்றும் மலர்ப்பதத்தே உற்ற திரோதம் மூத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு"*

என்ற திருப்பாடலுக்கமைய உடுக்கிலிருந்து பிறக்கும் நாதம் படைத்தலையும், அபயகரம் காத்தலையும், அக்கினி ஏந்திய கரம் அழித்தலையும், முயலகன்மேல் ஊன்றிய பாதம் மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும் குறிக்கின்றன. இந்த ஆனந்தத் தாண்டவத்தில் சிவகாமசுந்தரியின் உருவம் இடம்பெறல் முக்கியம். நடராஜ தாண்டவத்தின் பல்வேறு வகையான மூர்த்திகள் அமைக்கப்படுகின்றன. கால் மாறி ஆடிய மூர்த்தி, ஊர்த்துவ தாண்டவமூர்த்தி என்று பலவாகும். இவற்றைவிட சோமாஸ்கந்தர் (நடுவில் பாலமுருகனும், இருபுறமும் சிவனும் உமையுமாக அமர்ந்த திருக்கோலம்), சந்திரசேகரர் (பிறை சூடிய பெருமானின் நின்ற திருக்கோலம்), (உடையுடன் கூடியும் தனியாகவும் இரு வகையிலமையும்), பிக்ஷாடனர் (பிக்ஷை ஏற்கும் திருக்கோலம்), தக்ஷிணாமூர்த்தி (தெற்குமுகமாக வட வாலமரத்தின்கீழ் அமர்ந்து சநகர், சநாதனர், சநந்தனர், சநற்குமாரர் ஆகிய நான்கு சீடர்களுக்கும் ஞானநிலையை விளக்கும் கோலம்) என்பன சிவனின் மூர்த்தி பேதங்களுட் சிலவாகும். சிவாலயங்களில் இம் மூர்த்திகள் பரிவார தெய்வங்களாக அமையும். மூலஸ்தானத்தில் சிவலிங்கமே அமைதல் வழக்கம்.

பரம்பொருளின் திருவருட் சக்தியானது பெண் வடிவாக தாய்மைத் திருவுருவாக அம்பிகை என அன்போடு வழிபடப்படுகின்றது. சதாசிவம் பரப்பிரம்மத்தில் சக்தியாக பரம மங்கள ஸ்வரூபியாக உருவகப்படுத்தப்படும் தேவி மனோன்மணியின் தோற்றம் அபய வரத ஹஸ்தங்களுடனும், ஜபமாலை தாமரைகளுடனும் நின்ற கோலத்தில் அமைக்கப்படுகிறது. பாசம், அங்குசம், வரதம், அபயம்

என்பவற்றுடன் புவனேஸ்வரியாகவும், சதாசிவ மூர்த்தியாகிய பரமசிவனுடன் இணைந்து காணப்படும் வேளையில் கௌரி என்ற பெயருடன் வலக்கரத்தில் நீலோற்பலம் ஏந்தி, இடக்கரம் தொங்கவிட்ட தோற்றத்துடனும் அமைக்கப்படுகிறது.

மாராசுரனை அழித்ததனால், மஹாமாரி என்ற மூர்த்தம் உருவாகியது. முக்கண்ணும், நான்கு கரமும் (கபாலம், கத்தி, பாசம், உடுக்கு), இடக்கால் மடித்து வலக்கால் தொங்கவிட்டு அமர்ந்த தோற்றமும், தலையைச் சுற்றி ஒளிரும் அக்கினிப் பிழம்பும் மஹாமாரியின் திருவுருவமாகும். ஐந்து தலை நாகமொன்று சிரசின்மேல் படமெடுத்திருக்க இவள் தோற்றத்தை அமைப்பதுமுண்டு. இவள் நோய்களுக்கு அதிபதி.

மகிஷாசுர மர்த்தனியாகிய துர்க்கை எருமைத் தலைமேல் நிற்பவளாகவும், சங்கு, சக்கரம், சூலம் என்பன தரித்தவளாகவும் காணப்படுவாள். எட்டுக் கரங்களுடனும், பத்துக் கரங்களுடனும், பதினெட்டுக் கரங்களுடனும் அமைக்கப்படும் வேறுவகையான துர்க்கையின் திருவுருவங்களும் உள்ளன.

காளியின் திருவுருவம் பெரும்பாலும் நின்ற உருவிலும், மிகச் சில இடங்களில் இருந்த உருவிலும் அமைக்கப்பட்டிருக்கிறது. இது மஹாமாரியின் உருவத்தையொத்ததெனினும் அக்கினி, ஜடை, பாம்பு என்பன இருப்பதில்லை. கத்திக்குப் பதிலாகச் சூலம் இருக்கும். (சில இடங்களில் மஹாமாரியின் உருவத்திலும் சூலம் இருப்பதைக் காணலாம்.)

விக்கினேஸ்வரப் பெருமானின் பருத்த தொந்தியும், தும்பிக்கையும், சுளகுக் காதும் கொண்ட உருவம் யாரும் அறிந்ததே. 'ஓம்' என்ற பிரணவ வடிவமாக அமைந்தது விநாயகரின் முகம். நான்கு கரங்களில் பாசம், அங்குசம், ஒடித்த கொம்பு, மோதகம் என்பவற்றை வைத்திருப்பார். துதிக்கை இடதுபுறம் திரும்பி இருக்கும். சில இடங்களில் மாறியிருப்பதும் உண்டு. இவர் வலம்புரி விநாயகர் என அழைக்கப்படுவர்.

எல்லாம் உலகும் இவருள் அடக்கம் என்பதனை இவரது பருத்த தொந்தியும், எல்லா அறிவும், சகல கலாவல்லமையும் உடையவர் என்பதை பெரிய செவிகளும், மலநீக்கத்தைக் குறித்த தந்தமும், ஞானம் வழங்குவதை மோதகமும் காட்டுகின்றன. பேருருவம் உடையவரெனினும் சின்னஞ் சிறு எலியையே வாகனமாகக் கொண்ட தன்மை இவர் பெருமைக்கும் நுண்மைக்கும் அப்பாற்பட்டவர் என்பதையும் காட்டும்.

விநாயகரை இருந்த கோலத்திலும், நின்ற கோலத்திலும் அமைக்கும் வழக்கம் உள்ளது. சிவனுக்குச் சமமானவர் என்பதால் ஐந்து முகங்களுடன் பஞ்ச முகவிநாயகர் என்ற உருவமும் அமைக்கப் படுகிறது. பதினாறு வகையான கணபதி உருவங்கள், மற்றும் 32 வகையான திருவுருவங்கள் என்பன நூல்களிற் சொல்லப்பட்டுள்ளன.

விநாயகரை வல்லபசக்தியுடன் கூடியவராக வழிபடும் முறை கிரியாமார்க்கத்தில் உண்டு. சித்தி புத்தி விநாயகர் என்று இரண்டு சக்திகளுடன் புராணங்கள் சில விநாயகரைச் சித்திரிக்கின்றன. எனினும் நமது ஆலயங்களில் விநாயகரைத் தனியே அமைப்பதே மரபு. இவரைப் பிரம்மசாரி என்றும் கூறுவர்.


சைவசமய தத்துவார்த்த உண்மைகளை விளங்கிக் கொள்ளாதவர்களுக்கு இவை முரண்பாடுகளாகவும் மயக்கம் தருவனவாகவும் இருக்கும். ஆனால் எமது சமயத்தில் திருவுருவங்கள், கிரியைகள், புராணங்கள் என்பன வெளிப்படையான கருத்துக்களையோ பௌதீக ரீதியான விளக்கங்களையோ கொண்டவையல்ல! உள்ளார்ந்த தத்துவ உண்மைகளின் படிமங்களே இவை என்ற பேருண்மையைத் தெரிந்து உணர வேண்டும்.

விநாயகப் பெருமானின் வல்லபை என்ற சக்தியே 'வல்லபாசக்தி' என்ற ஒரு மனைவியாகவும், வெற்றி, அறிவு என்பன சித்தி, புத்தி என்னும் இரு மனைவியராகவும் உருவகிக்கப் படுகின்றன. முருகப் பெருமானுக்கு இப்படியே வள்ளி தெய்வயானை இருவரும் இச்சை, கிரியை (செயல்) ஆகியவற்றின் உருவகங்களாகவே அமைகின்றனர்.

முருகப் பெருமானை அவரது ஞானசக்தியாகிய வேல் வடிவமாக வைத்து வழிபடும் மரபு பல இடங்களிலும் உண்டு. இது ஆகம விதிகளுக்கு முரண் பாடானதெனினும் இன்று பல ஆலயங்களில் மூலமூர்த்தியாக மூலஸ்தானத்தில் வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சக்திகள் இன்றி இளமுருகனாக பாலசுப்பிரமணியர் (இரு கைகளுடன்) வள்ளி, தெய்வயானையுடன் கூடிய முத்துக்குமாரசுவாமி (நான்கு கரங்களில் வரதம், அபயம், சக்தியாயுதம், குலிசாயுதம் இவற்றுடன் வேலாயுதம் கொண்டது.) ஆறு முகங்களும் பன்னிரு கரங்களும் கொண்டு வள்ளி, தெய்வயானையுடன் கூடிய ஷண்முகப் பெருமான் ஆகியன முருகனின் பல்வேறுபட்ட மூர்த்தி பேதங்களாகும். ஆறு முகங்களும் ஆறு கைகளுமுடைய கார்த்திகேய மூர்த்தியும் மிகச் சில இடங்களிலுண்டு.

முருகனுக்கு வலப்புறத்தில் வள்ளியும், இடப்புறத்தில் தெய்வயானையும் நிற்க முருகனது உருவம் அமையும். தேவியர் இருவரும் முருகனது பக்கத்திலுள்ள கரம் தாமரைமலர் கொண்டதாகவும், வெளிப்புறத்திலுள்ள கரம் தொங்க விட்டதாகவும் அமையக் காட்சியளிப்பர்.



இவற்றைவிடத் துறவிக்கோலத்தில் பழனியாண்டவர் திருவுருவமும் செய்யப்படுகிறது. மாங்கனிக்காக விநாயகரும் முருகனும் போட்டியிட்ட தத்துவார்த்தமுள்ள புராணக் கதையை நினைவூட்டும் உருவம் இது.

முருகப் பெருமானுக்கு வாகனம் மயில். அவரது கொடி சேவல். இவை முறையே பிந்துதத்துவம், நாததத்துவம் ஆகியவற்றைக் குறிக்கின்றன.

நாய் வாகனத்துடன் நிர்வாண கோலத்தில் பயங்கரமாகக் காட்சி தருபவர் பைரவர், இவரை க்ஷேத்திர பாலகர் எனவும் அழைப்பர். கோவிலையும் கிராமத்தையும் பாதுகாக்கும் காவற் தெய்வம் இவரே. இவரைச் சூலவடிவத்திலும் வழிபடுவதுண்டு.

இவர்களைத் தவிர நவக்கிரகங்கள், சூரிய சந்திரர்கள், அறுபத்து மூவர் நாயன்மார்கள், சண்டேஸ்வரர் ஆகியோருக்கும் தனித்தனி சந்நிதானங்கள் அமையும். சண்டேஸ்வரர் கூப்பிய கரத்துடன் காணப்படுவார். விநாயகர் கோவிலில் இவர் கும்போதர சண்டேஸ்வரர் எனவும், சிவன் கோயில்களில் த்வனி சண்டேஸ்வரர் எனவும், முருகன் கோவிலில் சுமித்திர சண்டேஸ்வரர் எனவும், சக்தி கோயில்களில் தாரிகா சண்டேஸ்வரி எனவும் அழைக்கப்படுவர். அதற்கேற்ப உருவங்களிலும் சிறு வேறுபாடுகள் காணப்படும். வழிபாட்டின் பூரண பலனைத் தருபவர் சண்டேஸ்வரரே. முதற் பூஜை விநாயகருக்கு அமைவதுபோல இறுதிப் பூஜை இவருக்குரியது.

வீரபத்திரர், விஷ்ணு ஆகியோர்க்குத் தனியான சந்நிதிகள் அமைக்கப்படுவதில்லை எனினும் ஸ்தூபி, கோபுரம் முதலியவற்றில் இவர்களின் திருவுருவங்கள் இடம்பெறும். இவர்களுக்குத் தனித்தனியே ஆலயங்கள் அமைவதுண்டு.

விஷ்ணு ஆலயங்களில் பாலகிருஷ்ணர் பூதேவி ஸ்ரீதேவி சமேத மஹா விஷ்ணு, பாமா ருக்மணி சமேத ஸ்ரீகிருஷ்ணர், பாம்பணையிற் பள்ளி கொண்ட ஸ்ரீரங்கநாதர் ஆகிய பலவித மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்படுகின்றன. இவை தவிர முருகப்பெருமானின் வேல் போல, மஹாவிஷ்ணுவின் சக்கராயுதமும் தனியே பிரதிஷ்டை செய்யப்படுவதுண்டு. சக்க ராழ்வார் என இது சொல்லப்படும்.

ஐயனார் முதலிய தெய்வங்களுக்கும் தனியான ஆலயங்கள் அமைவதுண்டு. ஹரிஹர புத்திரராகிய சாஸ்தாவை ஐயப்பன் என்றும், ஐயனார் என்றும் சொல்வர்.

மூலமூர்த்தியாக விநாயகர். சிவன், சக்தி, சுப்பிரமணியர், பைரவர், விஷ்ணு என்போர் அமைவதற்கேற்ப பலிபீடத்தருகில் வைக்கப்படும் பசுவானது, முறையே மூஷிகம், நந்தி, சிம்மம், மயூரம், நாய், கருடாழ்வார் என அமையும். சக்தி ஆலயங்களில் சிம்மத்திற்குப் பதிலாக நந்தி அமைவதுமுண்டு.



# சிவ பூஜா தத்துவம்



சிவாகம முறைகொண்டு ஆலயங்களில் செய்யப்படும் பூஜை நித்யம் நைமித்தியம், காம்யம் என மூவகைப்படும். நித்யபூஜை உத்தமோத்தமம், உத்தமமத்தியமம். உத்தமாதமம், மத்திய மோத்தமம், மத்தியமமத்தியமம், மத்திய மாதமம், அதமோத்தமம், அதமமத்தியமம் என்று எட்டு வகைப்படும். உத்த மத்தில் மூன்றாவதாகவுள்ளது ஆறுகால பூஜை.

## ஆறுகால பூஜைக்குரிய நேரம் :

தினகரனுதயத்திற்கு முன் மூன்றே முக்கால் நாழிகை தொடங்கி சூரிய உதயம் வரையில் செய்ய வேண்டிய பூஜை உஷ : காலம்


பூஜையின் முடிவில் சூரியன் உதயமாக வேண்டும். பிறகு சூரியன் உதயம் தொடங்கி ஏழரைநாழிகை வரையில் ப்ராதக்கால பூஜையின் காலம் (காலசந்தி). அவ்வேழரை நாழிகைக்குமேல் ஐந்துநாழிகை சங்கவ காலம் (ஓய்வு. பக்தர்கள் தரிசிக்கும் நேரம்) இதற்கு மேல் ஏழரைநாழிகை மாத்தியந்தின காலம்; அதாவது பன்னிரண்டரை நாழிகைக்கு மேல் இருபது நாழிகை வரையில் உச்சிக்கால பூஜையின் காலமாகும். அதன்பிறகு அபரான்னகாலம். சூரியன் அஸ்தமிக்கும் முன்பு மூன்றே முக்கால் நாழிகை முதல் செய்யப்படும் பூஜை பிரதோஷகால பூஜை. சூரிய அஸ்தமனம் தொடங்கி ஏழரை நாழிகையளவில் செய்யப்படும் பூஜை சாயங்கால பூஜை (சாயரக்ஷை). அதன் பிறகு மூன்றே முக்கால் நாழிகை அர்த்தயாம பூஜை காலம் (ஏழரை நாழிகைக்குமேல் பத்தரை நாழிகைக்குள்).

## பூஜகர் :

பரார்த்த பூஜை செய்யத் தகுதி உள்ளவர் ஆதிசைவர்கள் (குருக்கள்): என்று ஆகமங்கள் வலியுறுத்துகின்றன. மற்ற அந்தணர்களும் பூஜிக்கக் கூடாது என்று கூறுகிறது. அவ்வாசாரியர் சமய விசேஷ நிர்வாணத்தீக்ஷை பெற்று, ஆசாரியாபிஷேகமானவராய் மந்திரம், கிரியை, பாவனைகளின் தேர்ச்சி பெற்றவராய் பதினாறு வயதுக்குமேல் எழுபது வயதுக்கு உட்பட்டவராய் இருக்கவேண்டும்.

## பூஜை செய்யும் முறை :

ஆசாரியன் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன் எழுந்து ஸ்நானம் நித்தியகர்மானுஷ்டானம் முதலியவற்றை முடித்துக் கொண்டு சூரியன் உதிக்க



மூன்றேமுக்கால் நாழிகை இருக்கும் பொழுதே சிவாலயத்திற்குச் சென்று இறைவனுடைய சன்னிதியில் புஷ்பாஞ்சலி செய்து ஷாஷ்டாங்கமாக நமஸ்க்கரித்து விட்டு, கை, கால்களை அலம்பிக் கொண்டு பஞ்சசுத்தி செய்து முடித்துப் பிறகு பூஜை தொடங்க வேண்டும்.

முதலில் க்ஷேத்திர பாலரைப் பூஜித்து முத்ராதண்டம் (திறவுகோல்) பெற்று சயனாலய பூஜை முடித்து சயனாலய மூர்த்தியை கர்ப்பாலயம் சேர்த்து மூலலிங்கத்திற்கு அபிஷேகம் தீபாராதனை செய்து, தேவிக்கும் பூஜைசெய்ய வேண்டும், சோமாஸ்க்கந்தர், நடராஜர் முதலிய மகேச்வரமூர்த்திகளுக்கும், மற்றைய பரிவார மூர்த்திகளுக்கும் பூஜை உஷக் காலத்தில் கிடையாது.

## தீர்த்த சங்கிரஹணம் :

காலசந்தி பூஜை ஆரம்பம் செய்யும் முன்பு, நதி முதலிய யாதானுமொன்றிலிருந்து திருமஞ்சனம் கொண்டுவந்து நந்தியின் சிரசில் அல்லது பலிபீடத்தின் சிரசில் விடவேண்டும். இறைவன் முதல் நாள் அர்த்தயாம காலத்தில் சயனாலயம் சென்றதும் இறைவனின் ஜடையிலிருக்கும் கங்காதேவி அங்குள்ள மனோன் மணியைப் பார்த்துவிட்டு அங்கிருந்து கிளம்பி வெளியில் சென்று நதி முதலிய தீர்த்தத்தில் கலந்து விடுகிறாள். ஆதலால் அந்த கங்கையை மீண்டும் இறைவனிடம் சேர்ப்பதே இதன் தத்துவம்.

## காலசந்தி பூஜை :

சூரியனை முதலில் பூஜைசெய்து விநாயகரையும் அர்ச்சித்து சுற்றுக்கோவிலிலுள்ள எல்லாப் பரிவாரமூர்த்திகளுக்கும் அபிஷேகம் அலங்காரம் செய்து வைத்து, மூல லிங்கத்திற்கு அபிஷேகம், அலங்காரம், நிவேதனம், தீபாராதனை, உபசாரம் முடித்துப் பிறகு நடராஜர் முதலிய எல்லா மூர்த்திகளுக்கும் நிவேதனம், தீபாராதனை செய்து பின்னர் தேவிக்கும் அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை செய்து பிறகு நித்யாக்னிகாரியம், நித்யோத்சவம் செய்து சண்டீச பூஜையுடன் பூர்த்தி செய்ய வேண்டும்.

## உச்சிக் கால பூஜை :

உச்சிக்கால பூஜையின் ஆரம்பத்தில் ஸ்னபனம் வைத்து பஞ்சகவ்யம் செய்து த்வார பூஜையுடன் மூலலிங்கத்திற்கு அபிஷேகம் அலங்காரம் செய்து நைவேத்தியம் முதலிய உபசாரம் செய்து தேவிக்கும் இவ்வாறு செய்து சண்டீசனுக்குப் பூஜைசெய்து பூர்த்திசெய்ய வேண்டும்.

## பிரதோஷகால பூஜை :

முதலில் நடராஜப்பெருமானுக்கு பூஜை நைவேத்தியம் தீபாராதனை செய்து முடித்து பிறகு மூலலிங்கத்திற்கு அபிஷேகம் நைவேத்தியம் தீபாராதனைகளைச் செய்து அதன்பிறகு சோமாஸ் கந்தர் தேவி இவர்களுக்கும் பூஜை செய்யவேண்டும்.

## சாயங்கால பூஜை :

ஸ்நபனம், த்வாரபூஜையுடன் மூலலிங்கத்திற்கு அபிஷேகம் அலங்காரம் செய்து நைவேத்தியத்துடன் ராஜோப சாரத்துடன் பூஜை செய்து பிறகு மகேச்வராதி, பரிவாரங்களுக்கும் நிவேதனம் செய்து பிறகு பார்வதி

தேவிக்கும் சண்டன், பைரவர் வரையில் பூஜை நிவேதனம் செய்து அக்னிகாரியம் நித்யோத்ஸவத்துடன் முடிக்க வேண்டும்.

### அர்த்தயாம பூஜை :

நல்ல வாசனையுடைய தைலம் சந்தனாதித் தைலம் (வேறு தைலம் கூடாது) அபிஷேகம் செய்யப்படும். இல்லையேல் தேன், சக்கரை, பால், இளநீர், சந்தனம் இவைகளை அபிஷேகம் செய்து நிவேதனம் செய்து தேவிக்கும் பூஜை செய்தவுடன் பாதுகாராதனம், க்ஷேத்ரபால பூஜையுடன் பூர்த்தி செய்யவேண்டும்.

### பூஜாதத்துவம் :

செய்யப்படும் பூஜை யாவும் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து பூத சம்பந்தமாகும். அதாவது சந்தனம், பழம், கிழங்கு, புஷ்பம், அன்னம் முதலியவை பார்த்திவ உபசாரம். திருமஞ்சனம், பால், தயிர் முதலியவை அப்பு உபசாரம். இரத்னம், கர்ப்பூரம் முதலியவை அக்னி உபசாரம், தூபம், சாமரம், விசிறி முதலியவை வாயு உபசாரம். மணி, தோத்திரம், வாத்தியம், முதலியவை ஆகாச உபசாரம். சித்தாந்த சாராவளி. (நறுமணமுள்ள சந்தனம்) சுகந்தம் சாத்தவேண்டும்.



அதிகமான அபாயத்தினின்றும் காப்பது. துர்ப்பாக்கியம், கிலேசம் இவைகளைப் போக்குவது என்ற செயலினால் கந்தம் எனப் பெயர் பெற்றது. இது போல் புண்யத்தை வளர்ப்பதாலும் பாபக்கூட்டங்களை ஒழிப்பதாலும் புஷ்பம் எனப் பெயர் வந்தது. நாவுக்கரசர்;

*"விண்ட மாமலர் கொண்டு*
*விரைந்து நீர்*
*அண்ட நாயகன்றன் னடி*
*சூழ் மின்கள்*
*பண்டு நீர்செய்த பாவம்*
*மறைந் திடும்*
*வண்டு சேர் பொழில்*
*வான்மியூரீச னே.*

தூபமானது பாவத்தைக் கொளுத்தும், ஆன்மாவை மறைத்திருக்கும் ஆணவ மல சக்தியாகிய அறியாமையை நீக்கும் தத்துவமுடையது. (கிரியா சக்தியை அதிதேவதையாகக் கொண்டது தூபம்) சிற்சக்தியின் வாசமாய் ஞான விளக்காயிருப்பது தீபம்; எனவே தீபத்தினால் அபமிருத்யு நிவாரணமாகும்.

ஆவாஹனத்திற்குப்பின் மது பர்க்கமும், சந்தனாபிஷேகத்திற்குப் பின் ரஹஸ்ய நிவேதனமும், திருவொற்றாடைக்குப்பின் சுத்தான்ன நிவேதனமும் அலங்காரத்திற்குப்பின் அலங்கார நிவேதனம் அதாவது வர்க்கான்னம் அல்லது திருத்தளிகை செய்யவேண்டும்.

### உபசாரம் :

உபசாரங்களாவன:– 5 உபசாரம் 10 உபசாரம், 16 உபசாரம், 25 உபசாரம், 36 உபசாரம், 40 உபசாரம் என்ற பல பிரிவை உடையன. ஒவ்வொரு உபசாரப் பொருள்களுக்கும் தனித்தனி அதிதேவதைகள் உண்டு. அந்தந்த அதிதேவர்கள் திருப்தியடைந்து நமக்கும் இறைவனின் அனுக்ரகம் கிடைக்க உதவுகிறார்கள்.

### உபசாரப் பொருள்களின் அதிபதிகள் :

(1) தூபத்திற்கு அக்னிதேவன், (2) மகாதீபத்திற்கு சிவன். (3) நாக தீபத்திற்கு கேது. (4) விருஷப தீபத்திற்கு தருமதேவதை. (5) புருஷாமிருக தீபத்திற்கு விஷ்ணு (6) பூர்ணகும்பத்திற்கு ருத்ரன். (7) பஞ்சதட்டு தீபத்திற்கு பஞ்சப்பிர்மதேவதை. (8) நக்ஷத்திர தீபத்திற்கு 27 நக்ஷத்திரங்கள். (9) மேருதீபத்திற்கு த்வாதசாதித்யர்கள். (10) திருநீற்றில் பரமேச்வரன். (11) கண்ணாடியில் சூரியன். (12) குடையில் சந்திரன். (13) சாமரத்தில் மகாலக்ஷ்மி. (14) விசிறியில் வாயுதேவதை, (15) ஆலவட்டத்தில் பிரும்மா. (16) கற்பூரத்தில் அக்னி என்பவர்கள் அதிதேவர்களாவார்கள்.

### குற்ற நீக்கம் :

அதாவது தீர்த்த அபிஷேகத்தினால் 10 அபராதத்தை போக்குகின்றார். இவ்வாறு பாலினால் 100 அபராதத்தையும் தயிரினால் 1000 அபராதத்தையும் போக்கும் இறைவன் சந்தனாபிஷேகத்தினால் எல்லையற்ற குற்றத்தைப் போக்குகிறார்.

### சுளுகோதக சமர்ப்பணம் :

சுளுகோதக சமர்ப்பணம் செய்யாவிடில் பூஜை பயனற்றது. பயனில்லாத காரியம் செய்வது பாவம். எனவே பூஜையின் முடிவில் கையில் புஷ்பத்தை எடுத்துக்கொண்டு கைநிறைய அர்க்கிய ஜலத்தை எடுத்துச் சுட்டுவிரல் நுனியால் இறைவனின் முன்பு அந்தத் தீர்த்தத்தைப் பூமியில் விட்டுவிட்டு, அந்தப் புஷ்பத்தை சுவாமிக்குச் சாத்துவது. இவ்வாறு சாத்தினால் பூஜை சபலமாவதுடன் மூன்று தலைமுறைகளுக்குச் சிவலோகம் கிடைக்கும்.

### பூஜாத்திரவியத்தின் பயன் :

எண்ணெய் அபிஷேகத்தினால் சௌக்கியம் உண்டாகும். இவ்வாறு பஞ்சாமிருதத்தினால் பரிசுத்தம், நெய்யினால் முக்தி, பாலினால் ஆயுள் விருத்தி. தயிரினால் புத்திரப்பேறு, தேனினால் சுகம். அன்னாபிஷேகத்தால் சாம்ராஜ்யம், சந்தனத்தினால் மோக்ஷம் கிடைக்கும். வஸ்திரத்தினால் தாரித்தியம் நீங்கும். புஷ்பமாலை ஐஸ்வர்யமளிக்கும். நைவேத்தியத்தினால் அரசபதவி கிடைக்கும். தாம்பூலத்தினால் குறைவற்ற பயன் உண்டாகும்.

### திரவியலோபத்தினால் உண்டாகும் தீமை :

சந்தனம் இல்லையேல் குஷ்டம் உண்டாகும். புஷ்பமில்லையேல் குலமழியும். தீர்த்தமில்லாவிடில் துக்கமுண்டாகும் . தூபமில்லாவிடில் சுகக்குறைவு உண்டாகும். தீபமில்லையேல் தன நாசம் உண்டாகும். நைவேத்தியமில்லாவிடில் துர்பிக்ஷம் உண்டாகும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

யாகம், தவம், தானம், புண்யதீர்த்தாடனம் இவைகள் உண்டாகும் பலனுக்கு நூறுகோடி பயன் சிவலிங்கார்ச்சனையால் உண்டாகும். மற்றும். பூஜகருடைய தவவலிமையாலும் பூஜையின் அதிகத்தினாலும் பிம்பத்தின் லக்ஷணத்தினாலும் சிலையானது தெய்வத் தன்மையையடைகிறது.



ஆலயங்களில் நிகழும் விசேஷ கிரியைகள் எல்லாவற்றிலும் கும்பம் முதலிடம் பெறுகிறது. தமிழர்களின் வாழ்வோடு சிறப்பாக இந்துக்களின் கலாசாரத்தோடு பின்னிப் பிணைந்த ஒரு மங்கலத் திருவுருவமாக நிறைகுடம் அமைந்துள்ளது. இதே நிறைகுடம் கிரியைகளில் பயன் படுத்தப்படும்போது கும்பம் எனப்படுகிறது.

நிறைகுடம் ஓர் அடையாளப் பொருளாகவும் மங்கலச் சின்னமாகவும் இருக்க, கும்பம் இறைவனை ஆவாகனம் செய்து வழிபடும் ஒரு பூஜாஸ்தானமாக அமைகின்றது.

மந்திரங்களை அதில் பதித்து இறைவனை அங்கு எழுந்தருளச் செய்து சகல உபசாரங்களும் வழங்கிப் பூஜைகளை நிகழ்த்துவர்.

கும்பம் உருவாக்கப்பட்ட உலோகம் அல்லது மண் உடலாகவும், கும்பத்தில் சுற்றப்படும் நூல் எழுபத்தீராயிரம் நாடிகளாகவும், தண்ணீர் இரத்தமாகவும், உள்ளே இடப்படும் நவரத்தினங்கள் முதலியன எலும்புகளாகவும், தங்கம் அல்லது நாணயம் சுக்கிலமாகவும், தேங்காய் சிரசாகவும், மாவிலை மயிராகவும், கூர்ச்சம் குடுமியாகவும் அதில் பதிக்கப்படும் மந்திரம் உயிராகவும் கொள்ளப்பட வேண்டுமென "சகலாகம சங்கிரகம்" கூறுகிறது.




# கும்பபூஜை, அக்கினிகார்யம் என்பவற்றின் விளக்கம்

உருவமற்ற அருவமான பரம்பொருளை எங்கள் சிற்றறிவுக்கு எட்டும் வகையில் திருவுருவங்களாக அமைத்து வழிபடுவது ஒருவகை வழிபாடாகும். உருவமல்லாமலும், அருவமல்லாமலும் இடைப்பட்ட நிலையில் ஒரு குறியீடாக – அருவுருவமாகக் காட்சி தருவது லிங்கம். இது சிவபிரானைக் குறித்தலின் சிவலிங்கம் என்பர்.

எல்லா மூர்த்திகளையும் ஆவாகனம் செய்து வழிபடுவதற்குக் கும்பம் உதவுகிறது. கும்பம் சர்வதேவதா ஸ்வரூபம். அது ஒரு தெய்வத் திருமேனியாகப் பாவனை செய்யப்படுகிறது.

இவ்விதம் அமைக்கப்படும் கும்பங்கள் இருவகை. ஒன்று நவராத்திரி, வரலக்ஷ்மி விரதம் போன்ற பூஜைகளுக்காக வீட்டிலோ, ஆலயத்திலோ வைக்கப்படும் கும்பம். பூஜை வேளையில் கும்பத்தில் ஆவாகனம், பூஜை, உபசாரம் முதலிய வழிபாடுகள் முடிந்தபின் மூர்த்தியை மீண்டும் சுவஸ்தானத்துக்கு எழுந்தருளச் செய்து கும்பத்தைக் கலைத்து விடுவர்.

மற்றொருவகைக் கும்பம் அபிஷேகத்திற்குரியது. எங்கும் நிறைந்த பரம்பொருட் சக்தியை சிவாசாரியார் தமது மனோசக்தியாலும், மந்திர சக்தியாலும் ஆகர்ஷித்துக் கும்பத்திலே ஆவாகனம் செய்து அதில்



பூஜை செய்து தெய்வ சாந்நித்தியத்தை ஏற்படுத்துகிறார். இதன் பின் இக்கும்பமானது பிம்பம் எனப்படும் திருவுருவத்தில் அபிஷேகம் செய்யப்படும்போது தெய்வ சாந்நித்தியமும், இறையருட்சக்தியும் அத்திருவுருவத்திலே மேலும் பொலிகிறது. மந்திரங்கள் உருவேற்றப்படும்போது (மீண்டும் மீண்டும் உச்சரிக்கப்படும்போது) அபரிமிதமான சக்தி உருவாகுவது போலத் திருவுருவத்திலே மீண்டும் மீண்டும் அபிஷேகங்கள் பூஜைகளைச் செய்யும்போது அங்கு அருட்சக்தி மிகுவதில் வியப்பென்ன இது விஞ்ஞான பூர்வமாகவும் ஏற்புடையதன்றோ!

கும்பம் அமைத்தலில் பலவகையான முறைகள் உண்டு. ஒரு கும்பம் மாத்திரம் அமைத்து அதில் மூர்த்தியை எழுந்தருளச் செய்து பூஜை செய்தல் ருத்திரகும்ப பூஜை எனப்படும். இதனுடன் அஷ்ட வித்யேஸ்வரர்கள் எனக் கூறப்படும். எட்டுப் பரிவார தெய்வங்களுக்கும் வேதிகையில் எட்டுத் திக்கிலும் ஒவ்வொரு கும்பமுமாக ஒன்பது கும்பங்கள் வைத்துப் பூஜித்தல் நவகலச ஸ்நபன கும்ப பூஜை எனப்படும்.

இதற்குமேல் விரிவாகப் பதினேழு, இருபத்தைந்து, நாற்பத்தொன்பது, எண்பத்தொன்று, நூற்றெட்டு, இருநூற்றெண்பது, நானூற்றெண்பது, ஆயிரம், ஆயிரத்தொன்பது என்ற எண்ணிக்கையில் கலசங்களை ஸ்தாபித்து வழிபடும் ஸ்நபனாபிஷேகங்களும் ஆகமங்களிற் சொல்லப்பட்டுள்ளன.

தற்போது 108, 1000 என்ற எண்ணிக்கைகளில் சங்காபிஷேகங்கள் செய்யப்படுகின்றனவெனினும் விரிவான ஸ்நபனகும்ப அபிஷேகம் வழக்கில் அதிகமில்லை. ருத்ரகும்ப அபிஷேகமும், நவகலச ஸ்நபனகும்ப அபிஷேகமுமே சாதாரணமாக எங்கும் நிகழுகின்றன.

இக்கும்பங்களை ஸ்தாபிப்பதற்காக ஆசனங்களாக வாழையிலைகளைப் பரப்பி அவற்றில் நெல், பச்சையரிசி, பயறு, உழுந்து, எள்ளு, கடலை, துவரை ஆகிய தானியங்களும் நெற்பொரி, தர்ப்பை என்பனவும் அடுக்கடுக்காக இடப்படுகின்றன.

இவற்றை ஆசனங்களாகக் கொண்டு க்ஷிதி (நிலம்) எனப்படும் பிருதுவி தத்துவம் முதல் குடிலை எனப்படும் சுத்தமாயை ஈறாக முப்பத்தாறு தத்துவங்களையும் இவற்றிலே விரிவாகப் பூஜிப்பர். அல்லது அனந்தர், தர்மர், ஞானம், வைராக்கியம், ஐஸ்வர்யம், பத்மம் என ஆறாக வகுத்து ஷடுத்தாசனமாகப் பூஜிப்பதும் உண்டு. முன்னையதைப் பஞ்சாசன பூஜை என்பர். அனந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், விமலாசனம் என்பனவே பஞ்சாசனம் எனப்படுபவை.

இவ்வாறு ஆசன பூஜைகளின் மூலம் முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்த மெய்ப்பொருளைப் பிரதான கும்பத்திலே **ஆவாகனம்** செய்வர் (எழுந்தருளச் செய்தல்). ஆவாகனம் செய்த இறைவனை **ஸ்தாபனம்** (ஆசனத்தில் அமருமாறு வேண்டுதல்), **சந்நிதானம்** (அங்கிருந்து அருள் சுரக்குமாறு வேண்டுதல்), **சந்நிரோதனம்** (பூஜை நிறைவு பெறும்வரை அவ்விதமே நிலைபெற வேண்டுதல்)முதலிய கிரியைகள் மூலம் இறையருளை அங்கு பொலியச் செய்வர். இதன்பின் **பாத்தியம்** (சுத்திகரித்தற் பொருட்டாகப் பாதங்களில் நீர் விடுதல்), **ஆசமனம்** (அருந்துவதற்கு ஒரு துளி நீர் வாயிலே விடுதல்), **அர்க்கியம்** (பூஜைக்குரிய விசேஷ ஜலம் சிரசிலே துளி விடுதல்) முதலிய உபசாரங்களை வழங்கிப் பூஜிப்பர்.

இத்தகைய உபசாரங்கள் ஷோடசோபசாரங்கள் எனப்தினாறு வகையாகவும், சதுஸ்ஷஷ்டி உபசாரங்கள் என அறுபத்து நான்கு வகையாகவும் கூறப்படுவன.

இவ்வுபசாரங்களின் போதும், வேறுபல கிரியைகளின் போதும் பலவகையான முத்திரைகள்

சிவாசாரியாரால் பயன்படுத்தப்படும். முத்திரை என்பது அடையாளம். பரத நாட்டியத்திலே அநேக முத்திரைகள் வழங்குவதைக் காணலாம். இம்முத்திரைகள் மூலம் பல தத்துவார்த்த உட்பொருள்களை விளக்குவது கிரியைகளில் ஒரு சிறப்பம்சம். மேலும் இவை பாவனைகளாகவும் அமைகின்றன. மந்திரம், பாவனை, கிரியை என்ற மூன்றும் இணைந்ததே நமது ஆலய வழிபாட்டு முறை. பாவனைகளை முத்திரைகள் மூலம் காட்டுவது மரபு. உதாரணமாக வணக்கம் செலுத்தும் பாவனையை நமஸ்கார முத்திரை மூலம் காட்டுவது வழக்கம்.

இவ்வாறு கிரியைகளில் பயன்படும் முத்திரைகள் மிகப் பலவாயும், ஆழமான கருத்துக்கள் உள்ளனவாகவும் இருப்பதால் அவற்றை இங்கு ஆராய்தல் முடியாது.

பிரதான கும்பபூஜையின் பின் (பஞ்சாசன பூஜையின் பின்) ஆவரண பூஜை செய்யப்படும். பிரதான மூர்த்தியைச் சூழவுள்ள பரிவார கணங்களை ஒவ்வொரு ஆவரணமாக (வரிசையாக, சுற்றுவட்டமாக) பூஜித்தலே ஆவரண பூஜை.


ஸ்நபன கும்ப பூஜையில் ஐந்து ஆவரணங்கள் உள்ளன. முதலாம் ஆவரணத்தில் பஞ்சப் பிரம்ம மந்திரங்கள் எனப்படும் ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்ற ஐந்து மந்திரங்களும், ஷடங்க மந்திரங்கள் எனப்படுகின்ற ஹ்ருதயம், சிரசு, சிகை, கவசம், நேத்திரம், அஸ்திரம் என்று ஆறு மந்திரங்களுமாகப் பதினொரு மந்திரங்களும் பூஜிக்கப் படுகின்றன. இது எல்லா மூர்த்திகளுக்கும் ஒரே விதமாகவே அமையும்.

இரண்டாம் ஆவரணத்தில் அஷ்டவித்தி யேஸ்வரர்கள் எண்மர் பூஜிக்கப்படுவர். இவர்கள் பிரதான மூர்த்திகளுக்கேற்ப மாறுபடுவர்.

மூன்றாம் ஆவரணத்தில் கணநாதர்கள் எண்மர் பூஜிக்கப்படுவர். இவர்களும் பிரதான மூர்த்திகளுக்கேற்ப மாறுபடுவார்கள்.

நான்காவது ஆவரணத்தில் எண்திசைக் காவலர்களான இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய அட்டதிக்குப் பாலகர்களும் பிரமம் விஷ்ணுக்களும் பூஜிக்கப்படுவர்.

ஐந்தாவது ஆவரணத்தில் நாராசம், சூலம், குந்தாலி, வேதாளம், பாசம், அங்குசம், தண்டம், குடாரம், முசலம், கட்கம் ஆகிய தசாயுதங்களும் பூஜிக்கப்படும்.



இவ்வளவும் சாதாரண கும்பபூஜையில் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து அக்கினிகாரியம் நிகழும், மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனுக்கு அக்கினி அத்தியாவசியமாகிறது. அகில உலகுக்கும் சக்தி வழங்கி அதனை இயங்கவைக்கும் இப் பிரபஞ்சத் தலைவனாகவும் பிரத்தியட்ச தெய்வமாகவும் கருதப்படும் சூரியன், அக்கினிக் குழம்பாகவே காட்சிதருகிறான். அக்கினியே பெரும் சக்தி வடிவம்தான்.

இயற்கைப் பொருள்களை வழிபட்ட மனிதர் அக்கினியைத் தெய்வமாக வழிபட்டதோடு ஏனைய தெய்வ சக்திகளுக்கிடையில் பாலமாக நின்று எல்லாக் கடவுளர்களுக்கும் எமது வழிபாட்டை எடுத்துச் செல்லும் தூதனாகவும் அக்கினியைக் கொண்டனர். ''தேவாவைஅக்னி முகா:'' என்பது வேதவாக்கியம். தேவர்கள் அக்கினியை முகமாக உடையவர்கள் என்பது இதன் பொருள்.

சோதி வடிவமாகச் சுவாலிக்கும் அக்கினியின் வடிவே சிவலிங்கம். தேர், இராஜ கோபுரம் என்பனவும் இதன் வடிவில் அமைக்கப்படுகின்றன.

பரமசிவன் பிரம்ம விஷ்ணுக்களுக்குச் சோதிப் பிழம்பாகவே காட்சி தந்தார். இத்தகைய சிறப்புக்களும், வரலாற்றுப் பெருமையும் மிக்க அக்கினி வழிபாடு ஆலயங்களில் முக்கிய இடம் பெறுகிறது. இதற்கென உருவாக்கப்பட்ட ஓம குண்டங்களிலே மா, பலா, ஆல், அரசு, அத்தி, பலாசு முதலிய சமித்துக்களை (சுள்ளிகள்) மந்திர சதிதமாக இட்டுத் தீமூட்டி நெய் வார்த்து அக்கினி வளர்த்து அதிலே வேண்டிய தெய்வங்களை ஆவாஹனம் செய்து உபசாரங்கள் வழங்கிப் பிரார்த்திப்பது அக்கினிகாரியக் கிரியையின் முக்கிய அம்சம்.

இவ்வக்கினி குண்டத்திலிருந்து கும்பம் ஒரு நூல்மூலம் தொடுக்கப்படும். இது நாடீசந்தானம் எனப்

பெயர் பெறும். அக்கினிகாரிய முடிவில் அக்கினியில் ஆவாகனம் செய்யப் பெற்ற மூர்த்தியை, ஏலவே அதேமூர்த்தியை ஆவாகனம் செய்து பூஜித்த கும்பத்திலே ஒடுக்குவர். இவ்விருதிறத்தாலும் சாந்நித்தியம் அடைந்த கும்பம், பின்னர் மூர்த்தியின் திருவுருவத்திலே அபிஷேகம் செய்யப்படுகிறது,

மஹோற்சவ காலத்தில் கொடிப்படமும், பிரதிஷ்டா காலத்தில் விக்கிரகமும் இவ்வாறு நாடீசந்தானம் செய்யப் பெற்று அக்கினி, கும்பம் ஆகிய இரண்டு விதத்தாலும் வரவழைக்கப்பட்ட தெய்வ சாந்நித்தியத்தைப் படத்திலோ மூர்த்தியிலோ ஏற்றுவது வழக்கம்.

அக்கினி காரியம் செய்வதற்குரிய குண்டம் ஆலயங்களில் ஸ்நபன மண்டபத்திலே ஸ்நபன வேதிகைக்குக் கிழக்குப் புறமாக அமையும். மஹோற்சவ யாகசாலை மேற்கு நோக்கியிருப்பதால் இங்கு அக்கினி குண்டம் வேதிகைக்கு (வேதிகை– பிரதான கும்பங்கள் வைக்கும் மேடை) மேற்கில் அமையும். கும்பாபிஷேகம் முதலியவற்றிற்கு அமைக்கப்படும் யாகங்களில் ஒரு குண்டம் முதல் முப்பத்து மூன்று குண்டம் வரை வேறு வேறு திக்குகளில் அமையும்.

யாககுண்டத்தின் முன்பு சிவாசாரியர் வடக்குமுகமாக அமர்ந்து அர்க்கியம் கூட்டி சகளீகரணம், அந்தர்யாகம் என்பன செய்தபின் குண்டசம் ஸ்காரங்கள் எனப்படும் நிரீக்ஷணம் முதலிய பதினெட்டுவகைக் கிரியைகளைச் செய்வர்.

சமஸ்காரம் என்பது சீர் செய்தல், தகுதியாக்குதல், சுத்தி கரித்தல் என்ற கருத்துக்களை உடையது. நிரீக்ஷணம் முதலியன முன்னர் குறிப்பிட்டவகையில் பாவனாமார்க்கமாக முத்திரைகள் மூலம் செய்யப்படும் சிறுசிறு கிரியைகளாகும். அக்கினிகாரியம் ஆரம்பிக்கு முன்னர் இவ்வாறு குண்டசம்ஸ்காரம் (10), அக்கினி சம்ஸ்காரம் (4), ஆஜ்ய சம்ஸ்காரம் (18) என்பன முறையே குண்டம், அக்கினி, நெய் என்பவற்றைப் பக்குவப்படுத்துவதற்காகச் செய்யப்படுகின்றன. குண்டசம்ஸ்காரம் முடிந்ததும் குண்டத்தின் நடுவில் வாகீஸ்வரன் வாகீஸ்வரி ஆகியோரைத் தியானித்து ஆவாகனம் செய்வர். அக்கினியை ஒரு தட்டில் எடுத்துவரச் செய்து ராக்ஷசர்களின் பொருட்டு அதிலிருந்து ஒரு துண்டை நிருதி திக்கிலே போட்டுவிட்டு அக்கினி சம்ஸ்காரம் செய்து பூதாக்கினி, பிந்துவக்கினி, ஜடராக்கினி ஆகிய மூவகை அக்கினிகளையும் சிவாசாரியார் தமக்குள்ளிருந்து வெளிக் கொணர்ந்து வெளியிலுள்ள அக்கினியுடன் சேர்ப்பதாகப் பாவனை பண்ணி அதனைப் பூஜிப்பர். மும்முறை குண்டத்தை வலமாகச் சுற்றி அக்கினியைக் குண்டத்தில் இட்டு அக்கினி கொண்டுவந்த பாத்திரத்தில் சிறிது அட்சதையும் நீருமிட்டு அதனை ஒரு புறத்தே வைப்பர்.

அக்கினியின் காவலுக்காப் பரிதி விஷ்டரங்கள் எனப்படும் சமித்துக்கள் மற்றும் தர்ப்பையால் உருவாக்கப்பட்ட தண்டு முதலியவற்றைக் குண்டத்தைச் சுற்றிப் புருவமாக அமைக்கப்பட்டுள்ள மேகலைகளின் மேல் வைத்து அவற்றில் திக்குப் பாலகர்களைப் பூஜிப்பர்.

வளர்க்கப்பட்ட அக்கினியிலே மூர்த்தியை ஆவாகனம் செய்து உபசாரங்கள் வழங்கிப் பூஜிப்பர். விசேஷமாகக் குறிப்பிடப்பட்ட சிலவகை மரங்களினாற் செய்யப்பட்ட சிருக், சுருவம் என்பன அக்கினி காரியத்திற்கு நெய்வார்க்கும் கரண்டிபோன்ற கருவிகளாகும்.

அக்கினிகாரியத்தின் இறுதியில் சிருக்கினை நெய்யால் நிரப்பி சுருவத்தை அதன்மேல் கவிழ்த்து வைத்து நுனியில் பூ, 'நெய்பொரி' என்பன வைத்து சிவாசாரியார் எழுந்து நின்று 'வௌஷட்' என்பதை இறுதியில் கொண்டதாக அமையும்படி குறித்த தெய்வத்தின் மூலமந்திர உச்சாடனத்துடன் நெய்யை வார்த்துப் 'பூர்ணாகுதி' வழங்குவர். இவ்வேளையில் தேங்காய், வெற்றிலை பாக்கு, பழம் என்பவற்றையும் சமித்து, நெற்பொரி, வஸ்திரம், தர்ப்பை என்பவற்றையும் அக்கினிக்கு வழங்குவர்.

இதன் பின் அன்ன உருண்டைகளைப் பலி நிவேதனமாக வழங்கி நீராஜனம் செய்தபின் யாக அக்கினியில் உருவாக்கப்பட்ட சாம்பலை நெய்யிற் குழைத்துப் பெறும் ரக்ஷை எனப்படும் கரிப் பொட்டினைக் கும்பங்களுக்கு இட்டு யாவரும் அணிந்து கொள்வர்.

இறுதியில் அக்கினியில் இருக்கும் தெய்வத்தை உத்வாசனம் செய்து, ஏற்கெனவே கும்பத்துடன் அக்கினியை இணைத்துப் போடப்பட்டிருந்த நாடீசந்தான நூலினை எடுத்து நெற்பொரி, தர்ப்பை இவற்றுடன் சேர்த்துக் கும்பத்திலே இடுவதன் மூலம் அங்கே ஒடுக்குவர்.

இதன் பின் சிவம் வர்த்தனி கும்பங்களை உத்வாசனம் செய்து விட்டுப் பிரதான கும்பங்களை வீதிவலமாக எடுத்து வந்து அபிஷேகம் செய்வர்.

# விபூதியின் சிறப்பு



விபூதி என்பது மேலான ஐஸ்வர்யமாம். சிவஸ்ரூபமான பேரானந்த நிலையாம். இது பசுவாகிற ஜீவன்களின் மலமான அஞ்ஞான கர்மநாசத்திற் சித்திப்பதாம். கோமய பிண்டங்கள் ஜீவர்களாம். கோமயமென்பது ஜீவர்களின் மலமாம். இதை சிவஞான அக்னியில் இடுவது ஸோஹம் பாவனையாகிற யோக நிஷ்டையாம். இந்நிஷ்டையால் ஜீவனிடத்திலுள்ள உபாதிகள் நீங்கிப் பரசிவத்தோடு இரண்டறக் கலத்தலாகிய பிரமைஸ்வர்ய வடிவம் விபூதியாகியு நித்யானந்த நிலை உண்டாகிறது. அன்றும் மாயாகாரிய பிரபஞ்ச வடிவ நாமரூபங்களை அகண்டாகார விருத்தி வடிவ தீயால் எரித்து மிஞ்சிய சுத்த சிவ வடிவ ஸ்வரூபமே விபூதியாகும்.

## சிவாலய வழிபாடுகள்

1. காலையில் நீராடி தூய ஆடையுடுத்தி சமயச் சின்னங்கள் அணிந்து செல்லுதல் வேண்டும்.
2. கோபுர வாயிலுள் செல்லுமுன் கை, கால்களை கழுவிக் கொண்டு தலை மேல் இரு கைகளையும் கூப்பி கோபுரத்தை வணங்கி உட்செல்லவேண்டும்.
3. ஐந்தெழுத்து பஞ்சாக்ஷரத்தை மனதில் ஒதவேண்டும்.
4. முதலில் கொடிமரத்துப் பக்கமாகப் பூமியில் விழுந்து வணங்க வேண்டும். பின் முதலில் விநாயகரை வணங்கி தலையில் குட்டிக் கொண்டு, தோப்பு கரணம் போட வேண்டும்.
5. கொடிமரம், பலிபீடம், நந்தி இவைகளை வணங்கிய பின் துவாரபாலகரின் உத்தரவு பெற்று இறைவன் சன்னிதியை அடையவேண்டும். பின் அம்பாள் சன்னிதியை அடைந்து அம்பாளை வழிபட வேண்டும். பின்னர் பிராகாரத்திலுள்ள தெக்ஷிணாமூர்த்தி, முருகன், துர்க்கை, சண்டிகேஸ்வரர், நவக்கிரகம் முதலியோரை வழிபட வேண்டும். மூல மூர்த்திகளை வணங்கியபின் நடராஜர் சிவகாமியம்மை, சோமஸ்கந்தர், சந்திரசேகரர் முதலிய உத்ஸவமூர்த்திகளை வணங்க வேண்டும். பின் கோயிலை மும்முறை வலம் வரவேண்டும். கடைசியாக கொடிமரத்து அருகில் வந்து நமஸ்காரம் செய்து இறைவனிடம் விடைபெறவேண்டும். கோயில் வாசலில் வந்து சிறிது உட்கார்ந்து விட்டு வரவேண்டும். மிகுந்த புண்ணியம் கிடைக்கும்.

## விபூதியின் மகிமை

சிவபக்தர்கள் தரிக்கும் சிவ சின்னங்கள் விபூதி ருத்திராக்ஷம். திருவெண்ணீறு ஆன்மாக்களை ரக்ஷித்துக் காப்பதால் இரட்சை எனவும், தீ வினைகளை நீறு படுத்துவதால் திருநீறு எனவும், அழியாத செல்வத்தைக் கொடுப்பதால், விபூதி எனவும், ஆன்மாக்களிடம் உள்ள மலமாசைக் கழுவுவதால் சாரமெனவும் அறியாமையை அழித்து ஞானத்தைத் தருவதால் பசிதமெனவும் பெயர் பெறும்.

(பேரூர் புராணம்)

*நீடலுறுந்தீ வினையனைத்து*
*நீற்றிடலானீறென்றும்*
*வீடில்வெருக்கை தருவினால்*
*விபூதியென்று முயிர்தோறுங்*
*கூடுமலமாசினைக் கழுவுங்குணத்தற்*
*சாரமென்றுமட*
*மோடவளர்சோதியைத் தரலாற்*
*பசிதமென்று முறைப்பரால்*

விபூதியானது கற்பமெனவும், அநுகற்பமெனவும் உபகற்பமெனவும் மூன்று விதப்படும். கன்றுஈன்ற பத்துநாளைக்குள் பட்டு ஆசௌசம் நீங்கியதும், இரண்டு கன்றுகள் ஈன்றதும், முதிர்ந்த கன்றுடையதும், நோய்வாய்ப் பட்டதும், மலட்டுத்தன்மை உள்ளதும் கிழத்தன்மையுள்ளதும், கர்ப்பமுற்றதும் கன்று இறந்ததும், வால், காது, கொம்பு இவைகள் பின்னமானதும், என்றதுமான பசுக்கள் விபூதிக்கு ஏற்றதல்ல.

மற்றும் செம்மை, வெண்மை நிறங்களும் அழகும் நற்குணங்களும் அமைந்தவனவாய் சரீரம், புஷ்டியாய் பங்குனி மாத நெற்கதிர்களை மேய்ந்த பசுக்கள் விபூதிக்கு நல்லவைகள். அவைகளின் சாணத்தை அஷ்டமி சதுர்த்தி பௌர்ணமி, அமாவாசை முதலிய திதிகளில் ஏதாவது ஒரு திதியில் பசுமாட்டின் சாணம் பூமியில் விழாமல் தாம்பிற இலையில் சத்யோஜாத மந்திரத்தைச் சொல்லி பஞ்சகவ்யம் விட்டு அகோர மந்திரத்தால் பிசைந்து தத்புருஷ மந்திரத்தால் கையால் உருட்டி ஹோமம் செய்த அக்னியில் நெல்பதருடன் வைத்து ஈசாந மந்திரத்தைச் சொல்லி எடுப்பது கற்பமாம். அவ்விதம் எடுத்த விபூதியை ஒரு கொடி வஸ்த்திரத்தினால் வடிகட்டி புதுப்பாண்டத்தில் நிரப்பி காயத்ரி மந்திரம் சொல்லி, மலர்சாத்தி பூஜித்து வெள்ளை வஸ்த்திரத்தினால் வேடு கட்டி வைக்க வேண்டும்.


சித்திரை மாதத்தில் காட்டிற்கு சென்று அங்கு கிடைக்கும் சாணத்தை எடுத்துவந்து இடித்து கோசலம் வார்த்து பிசைந்து உருட்டி முன்சொல்லிய மந்திரங்களின்படி சொல்லி விளைய வைப்பது அனுகற்பம்.

பெரிய காடுகளில் தீப்பற்றி எரிந்து கிடக்கும் சாம்பலை பஞ்சகவ்யம் வார்த்து பிசைந்து உருட்டி பஞ்சபிரம்ம மந்திரங்களால் ஹோமாக்கினியாய் விளைவித்த விபூதி உபகற்பமெனப்படும்.

மேல் சொன்னவைகளை மந்திரங்கள் சொல்லாமல் உண்டாக்குவது அகர்ப்பமென்பதாகும்.

கருநிற விபூதி வியாதியை உண்டாக்கும். செந்நிற விபூதி கீர்த்தியையும், புகைநிற விபூதி ஆயுளையும் பொன்நிற விபூதி போகமோக்ஷத்தையும் கொடுக்கும். வெண்ணிற விபூதி எல்லா நன்மைகளையுந் தரும்.

இத்துணை பெருமை வாய்ந்த விபூதிதாரணமானது சூரிய பூஜையில் தரிக்கப்படுவது (உத்தூளனம்) சந்தியா காலங்களில் தரிக்கப்படுவது (திரிபுண்டரம்) என இருவகைப்படும். சிவபூஜா காலங்களில் விபூதி, ருத்ராக்ஷம் தரிக்காமல் செய்வது சாம்பலில் வார்த்த ஹோமத்தால் உண்டாகும் நிஷ்பலனாகும். முறையோடு மேற்சொன்னபடி விபூதி தரித்துக் கொள்பவர்கள் சகல நன்மைகளோடு ஆரோக்ய திடகாத்திரமாக இருப்பார்கள்.



# கிரியை

# அட்ட பந்தனம்



திருக்கோயில்களில் கடவுண் மங்கலம் (பிரதிஷ்டை) செய்யப்பெறும் கல்லால் ஆன தெய்வப் படிமங்கள் ஆடாமல் நிலைபெற, இருப்பிடம் (பீடம்), படிமத்தின் அடிப்பகுதி இரண்டையும் பொருத்திப் படியச் செய்யும் ஒரு கூட்டுக் கட்டுப் பொருளை அட்ட பந்தனம் என்பர். இப்பொருள் ஓர் அருமையான படைப்பு; அற்புதமான கண்டு பிடிப்பு. எட்டுப் பண்டங்களின் கலவையானதாலும், இருப்பிடத்தையும், தெய்வப் படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதாலும் இது 'அட்ட பந்தனம்' எனப் பெயர் பெறுவதாயிற்று.

செயற்படும் பொழுது சிலையுருவிற்குச் சேதம் விளையவும் கூடும். ஆனதால் மிகப் பெரும்பாலும் இடிமுறையை மேற்கொள்ளலே நன்று.

மேலே சொன்ன பண்டங்களை நன்கு சோதித்து வாங்க வேண்டும். பின்னர், தூசு, துப்பட்டை முதலிய களைந்து தூய்மை செய்யவேண்டும். அதன் பின்னர் அளவுப்படி கலக்க வேண்டும். கலந்தபின் இடிக்க வேண்டும்.

1. கொம்பரக்கு : இது அவலரக்கு அல்ல. மரப்பட்டையுடன் ஒட்டிக் கொண்டிருக்கும். இதுதான் தூய்மையானது; இயற்கையானது; கலப்பற்றது. இதை

*அட்டபந்தன மருந்தில் கலக்கும் பொருள்கள் :-*

| | |
|---|---|
| 1. கொம்பரக்கு | 2. சுக்கான் தூள் |
| 3. குங்கிலியம் | 4. கற்காவி |
| 5. செம்பஞ்சு | 6. சாதிலிங்கம் |
| 7. தேன் மெழுகு | 8. எருமை வெண்ணைய் |
| | ஆகிய எட்டுமே. |

இவற்றை எல்லாம் கலந்து செய்யும் முறை இருவகையாகும். ஒன்று இடிமுறை ; மற்றது காய்ச்சுமுறை. காய்ச்சுமுறை மிக விரைவாக ஆகிவிடும். ஆனால் காய்ச்சு மருந்து சார்த்தியதை அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டால் அகற்றல் கிட்டத்தட்ட இயலாது. வலிந்து

வாங்கிப் பொடித்து மரப்பட்டை முதலியவற்றை நீக்கிச் சுத்தமாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

2. சுக்கான் தூள் : சுக்கானில் பல நிறமும் இருவகையும் உண்டு. வெள்ளை நிறம் நன்று; கபில நிறம் கொள்ளலாம்; கருமை நிறம் கூடாது. இதைக் கொண்டு வந்ததும் முதலில் சிறிது சுக்கானைத் தூளாக்கி, அடுப்பில் காயும் இரும்புச் சட்டியிலிட்டு வறுத்துப் பார்க்க வேண்டும். படபட என்று (உப்பைப் போல) வெடித்தால், அவ்வகைச் சுக்கான் கூடவே கூடாது. ரவை, மணல் போல வெடிக்காமல் இருந்தால் அவ்வகைச் சுக்கான்தான் உகந்தது.

3. குங்கிலியம் : துண்டுத் துகள், தூசி இல்லாமல் பொறுக்கி எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.


4. கற்காவி : இஃது அழுக்குச் சிவப்பு நிறமாகக் கட்டியாய் இருக்கும். பூங்காவி என்பதல்ல இது. கடைகளில் காவித்தூள் என்று பலவகைக் கலப்படங்கள் உண்டு. அவற்றை வாங்கக் கூடாது. கட்டிகட்டியாய் இருக்கும் கற்காவியையே வாங்கி, மேலே படிந்துள்ள தூசிகளைப் புடைத்துப் போக்கிவிட்டு, இடித்துப் பொடியாக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

5. செம்பஞ்சு : இஃது இயற்கையாகவே வாதாம்கொட்டை நிறமுடையது. பிகார்ப் பக்கத்திலிருந்து வருவது. 'கோத்தி' என்று பெயர். இதுதான் உகந்தது. சிவப்புச் சாயம் ஏற்றி அடை அடையாய்த் தட்டி வைத்துக் கொண்டு அதுதான் செம்பஞ்சு என்று ஏமாற்றுவோரும், ஏமாறுவோரும் மிக அதிகம். 'கோத்தி' பஞ்சு கதர்க்கடைகளில் சொல்லி வரவழைக்கச் செய்யலாம். இதையும் சருகு, சொத்தை, காம்பு முதலியன இல்லாமல் பழுது நீக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.

6. சாதிலிங்கம் : இதில் பலவகை உண்டு. உலாந்தாவிலிருந்து வருவதுதான் தரத்தால் உயர்ந்தது. கலவைப் பண்டம் எட்டிலும் விலைமிக்கது சாதிலிங்கமே. அட்டபந்தனத்தின் முக்கியமான பொருள் இது. விலை மிகுதியை எண்ணி அளவைக் குறைப்பதும், தரமற்ற மலிவுச் சரக்கை வாங்குவதும் இன்று மலிந்து காணப்படுகின்றன. அப்படிச் செய்வது முறைகேடாகும். இஃது இரும்பைப் போலக் கனமிக்க பண்டமாகும். இதைப்பொடி செய்தல் எளிது. இதையும் நன்கு பொடித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

7. தேன்மெழுகு : இதில் இருவகை உண்டு. ஒன்று மஞ்சள் நிறமுள்ளது. அதை மஞ்சண மெழுகு என்பர். மற்றொன்று வெண்மை நிறமாக இருக்கும். மஞ்சண மெழுகில் தேன் கலந்திருக்கும். வெண் மெழுகில் தேன் இல்லை. இதுதான் உகந்தது. வெண் மெழுகு என்று சில இடங்களில் மெழுகுவர்த்திக் குழம்பை ஆறவைத்து ஏமாற்றுவார்கள். வாயில் சிறிது கிள்ளிப் போட்டுச் சுவைத்துப் பார்த்தால் உண்மை புலப்பட்டுவிடும்.

8. எருமை வெண்ணெய் : பசுவின் வெண்ணெயில் கொழுப்புச் சத்துக் குறைவு. ஆகவே, அது கூடாது. எருமை வெண்ணெய்தான் உகந்தது. இதிலும் சிறிதும் நீர்ச்சத்தின்றி முழுதும் அகற்றப்பட வேண்டும். நெருப்பு, வெயில், வேறுவகை வெம்மை பயன்படுத்தப்பட முடியாதவை. அவற்றால் வெண்ணெய் உருகிவிடும். ஆனதால் புதிய மண்பானையை எடுத்துப் பானைக்கு ஒரு வீசை வெண்ணெயைப் புறத்தில் கால் அங்குலக் கனமாக அப்பி வெம்மை தாக்காத குளிர்ந்த, இருண்ட அறையில் இரண்டல்லது மூன்று நாட்கள் வாய் கீழாகப் பானையைக் கவிழ்த்து வைத்திருக்க வேண்டும். பானை வெண்ணெயில் உள்ள நீர்ச்சத்து முழுவதையும் உறிஞ்சிக் கொள்ள வெண்ணெய் பக்குவமாய் ஆகி விடும். தேவைக்கேற்பப் பானைகளின் எண்ணிக்கையைக் கூட்டிக் கொள்ள வேண்டும்.



எல்லாப் பண்டங்களும் ஆயத்தமான பிறகு மர உரலில் இடிக்க வேண்டும். கல்லுரல் கூடாது. ஒவ்வோர் உருண்டைக்கும் குறிப்பிட்ட அளவாக ஏழு பண்டங்களையும் உரலில் இட்டுத் தேவைக்கு ஏற்ப வெண்ணெயைச் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒவ்வோர் உருண்டையையும் சுமார் அரைமணி நேரம் இடித்துப் பின்னர் உரலிலிருந்து எடுத்து உருட்டித் தலையில் ஆணிக் கொண்டையால் ஒரு குத்துக் குத்தி வைத்துக் கொள்ள வேண்டும். முதல் இடி முடிந்ததும் ஒரு குத்து. இரண்டாம் முறை இடித்தபின் இரண்டு குத்து. இப்படி எட்டு முறை இடிக்க வேண்டும். ஓர் இடிக்கும் அடுத்த இடிக்கும் இடையில் குறைந்தது இரண்டு நாள் இடைவெளி இருக்க வேண்டும்.

இனி அளவைப் பார்ப்போம். ஒவ்வோர் உருண்டைக்கும் :

| | | | | |
|---|---|---|---|---|
| சுக்கான் தூள் | ..... | ..... | 25½ | தோலா |
| குங்கிலியம் | ..... | ..... | 9 | தோலா |
| கற்காவி | ..... | ..... | 7½ | தோலா |
| இலிங்கம் | ..... | ..... | 7½ | தோலா |
| அரக்கு | ..... | ..... | 3¾ | தோலா |
| மெழுகு | ..... | ..... | 3¾ | தோலா |
| செம்பஞ்சு | ..... | ..... | 1 | தோலா |
| எருமை வெண்ணெய் | ..... | ..... | 7½ | தோலா |

(இஃது எட்டு இடிக்கும் சேர்த்துள்ள உத்தேச அளவு. சிறிது கூடவும் ஆகலாம்)

இவற்றை எல்லாம் மர உரலில் ஒவ்வொரு சரக்காக இட்டு ஒன்றோடு ஒன்று கலந்து ஒன்று சேரும்படி இடிக்க வேண்டும். முதல் ஆறு பொருள்களும் சிமெந்து, சுண்ணாம்பு, மணல் போன்றவை. ஏழாவதாக உள்ள பஞ்சு கம்பிவளை போன்றது. வெண்ணெய்தான் இந்தக் காங்க்ரீட்டிற்கு நீர் போன்றது.

இந்த மருந்து கலந்து இடிப்பதில் பண்டத் தூய்மை, பண்டங்களின் சேர்மான அளவு, இடிக்கும் கால அளவு மூன்றும் மிக முக்கியம். அத்துடன் இடிக்கின்றவர்களின் உடல் தூய்மை, மனத்தூய்மை முதலியன மிக மிக முக்கியம். இடிக்கு பொழுது இடிக்கும் ஆட்கள் ஆலயத்திற்கு ஏற்ப, "சிவ–சிவ" அல்லது "நாராயணா" அல்லது "வேல் வேல் முருகா" என்பன போன்ற இறைவன் திருப்பேர்களை உச்சரித்துக் கொண்டே இடிக்க வேண்டும். இப்படிச் செய்த அட்டபந்தன மருந்து சார்த்திக் குடநீராட்டுச் செய்த திருக்கோயில்களில் அம்மருந்து எவ்விதக் குறைபாடும் நேராது, மிக நீண்ட நாட்களாய் இலங்கி வருதலைக் கண்கூடாகக் காணமுடிகிறது.

எனவே, இடிக்கப் புகுமுன் இடிப்போர்களைக் குளிக்கச் செய்து, திருநீறு முதலானவற்றை அணிந்து கொண்டு விநாயகர் வணக்கம் செய்து கொண்ட பின் ஒவ்வொரு குத்துக்கும் "சிவ சிவ" போன்ற நாமங்களைச் சொல்லிக் கொண்டே இடிக்கச் செய்ய வேண்டும். இவற்றில் பெரும்பாலோர் போதிய அக்கறை காட்டுவதில்லை. இதற்குக் காரணம் குடநீராட்டு விழாவின் உண்மைத் தத்துவத்தையும், அதன் இன்றியமையாத துறைகளையும் அறியாமையே எனலாம்.

மேலே கூறிய முறை இருப்பிடத்தையும் படிமத்தையும் இணைத்துப் பிணைப்பதற்குச் செய்வதாகும். இருப்பிடத்தையும், துணையிருப் பிடத்தையும் (பீடத்தையும், உப பீடத்தையும்) இணைப்பதற்குத் திரிபந்தனம் என்னும் முக்கூட்டுப் பொருளே உகந்தது. இதற்கு வேண்டியவை : சுக்கான் தூள், சுத்தம் செய்த சக்கரை, முற்றக் கனிந்த பேயன்பழம் ஆகிய மூன்றுமே. சுக்கானைச் சோதித்து வெடி சுக்கான் அல்லாத நற்சுக்கான் கற்களை நன்கு பொடித்துப் பெருஞ்சல்லடையாகச் சலித்து அதில் வேண்டிய அளவை எடுத்து வாயகன்ற மண் அல்லது களிப்பேறாத ஒரு பாத்திரத்தில் இட்டுச் சிறிது சிறிதாகச் சர்க்கரையும், தோல் கறுத்துக் கிட்டத்தட்ட அழுகியது போலத் தோன்றும் பேயன் வாழைக் கனியையும் சேர்த்துப் பிசைந்து கொண்டே வரும்பொழுது கைதாங்காத அளவு சூடு வந்ததும் கையை எடுத்துவிட்டு மத்து முதலிய மரக்கருவியால் நன்கு குழப்பி மத்திக்க வேண்டும். கூழ் போல ஆனதும் எடுத்து இரு கற்களுக்கும் இடையில் அரைக்கால் அங்குல அளவு வைத்துக் கற்களை முறைப்படி ஒன்றின்மேல் ஒன்றாய்ப் படிய வைத்துவிட வேண்டும். கூட்டுமுறை செம்மையாக அமைந்துவிட்டால் பிடிமானம் உறுதியாக இருக்கும்.

"கொம்பரக்குச் சுக்கான்தூள், குங்கிலியம், கற்காவி
செம்பஞ்சு, சாதிலிங்கம், தேன்மெழுகு – தம்பழுது
நீக்கி எருமைவெண் ணெய்கூட்டி, நன்கிடித்து,
ஆக்கல் அட்ட பந்தனம் ஆம்".

"சுக்கான் தூள், சர்க்கரை, தொல்பேயன் நற்கனியும்
ஒக்கக் கலந்தமைத்தல் உற்றதிரி பந்தனம்ஆம்".

*நன்றி:–*

# கும்பாபிஷேக மகிமை



அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்து விளங்கும் இறைவனை உருவத் திருமேனியில் தியானித்து, ஆவாகித்து வழிபட வேண்டிய முறைகளை ஆகமநூல் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறியிருக்கின்றது. அந்த உருவத் திருமேனியை வைத்து வழிபட வேண்டிய தலம் எத்தகையதாய் அமைய வேண்டும் என்பதையும் ஆகம நூல் சிறப்பாகக் கூறியிருக்கின்றது. இறைவன் உருவத் திருமேனியில் நின்று அடியார்களுக்கு அருள்புரியும் தலம் ஆலயமாகும். அதனைப் பிரசாதம், தேவாயதனம் என்று பல பெயர் கொண்டு அழைப்பதுண்டு. பொதுவாக ஆலயம் என்ற பெயரால் பெரும்பாலும் வழங்கப்படுகின்றது. ஆ–ஆன்மாக்கள், லயம்–ஒடுங்குதல் என்று கருத்தாகும். ஆன்மாக்கள் இறைவன் சந்நிதியை அடைந்து, பக்தியுடன் ஒடுங்கும் தன்மையைப் பெறுவதால் ஆலயம் என்று பெயர் வழங்கலாயிற்று. ஆ–எங்கும் கும்பம், பிம்பம், தம்பம் முதலிய இடங்களில் மறைவாக அதிஷ்டித்து நின்று அருளுகின்றார் என்று இலக்கண முறையாகவும் கருத்துக் கொள்ளலாம். விதிமுறையாக ஆலயத்தை அமைத்து அவரவர் விரும்பும் உருவத் திருமேனியைத் தாபித்துக் கும்பாபிஷேகம் செய்து வழிபட்டு வருவதை நாம் காண்கின்றோம். இந்தக் கும்பாபிஷேகத்தின் நிகழ்ச்சி ஒழுங்கு முறைகளை நாம் ஊன்றிக் கவனித்தோமானால், பல அடிப்படையான தத்துவக் கருத்துக்கள் நம் வாழ்க்கையில் காணக்கூடியதாய் இருக்கும். கும்பாபிஷேகம் தொடக்கம் முதல் முடிவுரை நிகழ்ச்சிகளை எட்டுப் பெரும் பிரிவுகளாகக் காணலாம்.

அவற்றுள் முதலாவது வரித்தல், அனுமதிபெறல், பிரார்த்தித்தல் என மூன்று அம்சங்கள் கொண்டது.

## I. (அ) வரித்தல் :

ஒரு கும்பாபிஷேகத்தை நடத்தத் தக்க ஆசாரியரைத் தேர்ந்தெடுத்தல். மனிதனுடைய வாழ்க்கை தெய்வப் பண்புடையதாய் அமைய வேண்டுமானால் முதலில் தக்க குருவைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுவது இன்றியமையாததாகும். அதுபோலவே இறைவனைப் பிரதிஷ்டை செய்யத் தகுதிவாய்ந்த சிவாச்சாரியார் ஒருவரை முதலில் தேர்ந்தெடுப்பது மிக முக்கியமாகும். ஆசாரியர் நல்லொழுக்கமும் ஆகம சாஸ்திர அறிவும் பக்தியும் நிறைந்தவராய் இருக்க வேண்டும். சிவாசாரியாருடைய தவவலிமையாலும், நித்திய நைமித்திக பூசை முறையாக நடந்து வருவதாலும் உருவத்திருமேனியை நன்கு

அலங்கரித்துத் தூய்மையாக வைத்திருப்பதாலும் விக்கிரகம் தெய்வத் தன்மையுடையதாய் விளங்குகின்றது என்று ஆகம சாஸ்திரம் கூறுகின்றது. அதில் சிவாசாரியாருடைய தவவலிமையை முன்னதாக எடுத்துக் காட்டியிருப்பதால் கும்பாபிஷேகத்திற்கு முதலாவதாக ஆசாரியவரணம் செய்ய வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

### (ஆ) அனுமதி பெறல் :

ஆசாரியர் பாலாலயம் சென்று இறைவனிடம் தருணாலயத்தில் பிரதிஷ்டை செய்ய அனுமதி தருமாறு வேண்டுதல். இதனை தேவாநுஞ்ஞை என்பர்.

அடுத்தது ஒழுக்கமும் சீலமும் பொருந்திய வேதமந்திரம் கற்றுணர்ந்த அந்தணர்களைக் கிழக்கு முகமாக மண்டபத்தில் அமரச் செய்து, அவர்களுக்கு சந்தனத் தாம்பூலம் கொடுத்து மலரால் அவர்களை அர்ச்சித்து அவர்களிடம் அனுமதி பெறுவதாகும். கற்றுணர்ந்த சபையோர்களே இறைவனைப் பாலாலயத்திலிருந்து தருணாலயத்திற்கு கொண்டு சென்று பிரதிஷ்டை செய்ய இறைவனிடம் அனுமதி பெற்றோம் அக்கிரியைகளில் மந்திரங்கள் விட்டுப் போகமாலும் கிரியைகள் மாறுபடாமலும் நடத்தித் தரவேண்டும். "மேலும் எனக்கும் பிரதிஷ்டை செய்யக்கூடிய தகுதியையும் அருளவேண்டும்" என்று ஆசாரியர் பிரார்த்திக்க அவர்களும், "இறைவனின் பிரதிஷ்டாகர்மாவைச் செய்து முடிக்க உமக்கு ஆற்றல் உண்டாகுக" என்று ஆசி கூறுவர். இதனைப் பிராமணானுமதி பெறல் என்பர்.

இறைவனைப் பிரதிஷ்டை செய்ய அந்தணர்கள் வாழ்த்து அனுமதி அவசியமா என்ற ஐயம் எழலாம். கண்ணன் கூறுகின்றான்.

"இவ்வுலகம் இறைவனருளால் இயங்குகிறது. அந்த இறைவன் எங்கும் வியாபித்திருக்கின்றான். ஆகாசவெளியிலும் கலந்து நிற்கின்றான். அவனை வழிபட்டு அவனருளைப் பெற உருவத்திருமேனியில் மந்திரம் கூறி ஆவாகித்துப் பிரதிஷ்டை செய்யப் படுகின்றது. ஆகவே, அந்த இறைவன் மந்திரத்துக்குட் பட்டவன். அந்த மந்திரம் அந்தணர்களால் கற்கப்பட்டு விளங்குகின்றது. மந்திரம் அந்தணர்களுக் குரியதாகின்றது. அந்த அந்தணர்கள் எனக்குப் போற்றத் தக்கவர்கள். ஏனெனில், எல்லா உயிர்களும் வழிபட்டு உய்ய உருவத்திருமேனியில் என்னை ஆவாகிக்கும் மந்திரம் அந்தணரிடம் உறைவதால் அவர்கள் எனக்குப் போற்றத்தக்கவர்கள்" என்று வியந்து கூறினான்.

தாய் தந்தையர் சேர்க்கையால் குழந்தை உண்டாகின்றது. அக்குழந்தை வளர்ந்து மனிதனாகின்றான். அவன் குருவினிடம் சென்று மந்திரத்தைக் கற்றுக் கொள்ளுகின்றான் என்ற நியதி அளவில் மட்டிலும் அவன் அந்தணனாக மாட்டான். தாய் தந்தையர் சேர்கையால் உதயமாகின்ற மைந்தனுக்குத் தூய்மை உண்டு பண்ணக்கூடிய சில கிரியை முறைகள் விதிக்கப்பட்டுள்ளன. குழந்தை பிறந்த உடன் தங்கத்தை உரைத்துத் தேனில் கலந்து எல்லாத் தெய்வங்களும் உனக்கு நல்லறிவைக் கொடுக்கட்டும் என்று மந்திர வாழ்த்துக் கூறித் தந்தை மைந்தனின் நாவில் தடவுகின்றார். பின் மூன்று வேதங்களின் சாரமான பிரணவத்தைக் கூறித் தயிரையும் மைந்தனின் நாவில் தடவுகின்றார். வேதமந்திரம் கற்கத் தகுதி யுள்ளவனாவாய் என்று வாழ்த்துக் கூறுகின்றார். மேலும் இது போன்ற சில கிரியைகளால் அக்குழந்தை தந்தையின் இந்திரியத்தால் வரும் தோஷமும், தாயின் கர்ப்பவாசத்திலுள்ள தோஷமும் நீங்கப்பெற்றுப் பரிசுத்தமாக விளங்குகின்றது. பின் ஏழாம் வயதில் வேதசாரமான காயத்திரியைத் தந்தை மகனுக்கு உபதேசிக்கின்றார். அவன் முறையாக ஜபித்து வருகின்றான். இதனால் அவன் உள்ளம் தூய்மை அடைகின்றது. பின் குருவை அடைந்து வேதத்தை முறையாகக் கற்கிறான். தாயின் கர்ப்பவாசத்திலிருந்தே தூய்மைபெற்று வளர்ந்து வருகின்ற பாலகன் வேதத்தைக் கற்பதால் அந்த வேதம் சித்தியுடையதாகின்றது. ஆகவே அந்தணர் அனுமதி என்பது அவர்கள் உள்ளத்திலிருந்து வருகின்ற வாழ்த்து. அது வேதபுருஷனின் வாழ்த்து

அனுமதியாகும். ஆகவேதான் இரண்டாவதாகப் பிராமணாநுஞ்ஞை கூறப்பட்டுள்ளது.

### (இ) பிரார்த்தித்தல் :

எந்த ஒரு காரியத்தையும் இடையூறு இல்லாமல் நிறைவேற்ற விநாயகப் பெருமான் திருவருள் வேண்டும். காற்று, மழை, நெருப்பு முதலிய உத்பாதங்கள் நிகழாது மங்களகரமாக கிரியைகள் நிறைவேற நவக்கிரகங்களின் அருள் வேண்டும். ஆகவே, கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம் இவ்விரண்டையும் சிவாசாரியர் செய்து முடிக்கின்றார். இது பிரார்த்தனையாகும்.

### II. சுத்திகரித்தல் :

எந்தவொரு காரியத்தையும் செய்து முடிக்கப் பொருள் இன்றியமையாதது. அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை. பொருள் இல்லார்க்கு இவ்வுலக மில்லை என்ற முதுமொழியை யாவரும் அறிவர். ஆகவே சிவதர்மம் செய்து முடிக்கப் பொருள் மிக முக்கியமானது. அந்தப் பொருள் தூய்மையுடையதாய் இருக்க வேண்டும். அதாவது நேர்மை வழியில் அப்பொருள் ஈட்டியதாக அமையவேண்டும். சிவ தர்மத்திற்காக ஈட்டிய பொருள் பல வழியாக வந்திருக்கக் கூடும். ஆகவே, அப்பொருளைச் சுத்திகரித்தல் என்ற கிரியையை குரு நடத்துகின்றார். சிவாஸ்த்திர மந்திர ஜெபம், ஹோமம் முதலியவற்றைச் செய்து கும்ப நீரால் தெளித்துச் சுத்தமாக்கிப் பதினொரு பாகமாகப் பிரித்து எஜமானிடம் கொடுத்து சிவதர்மத்தைச் செய்து முடிக்குமாறு ஆசாரியர் தெரிவிக்கிறார்.

பொருளைச் சுத்திகரித்தபின் குரு தன்னையும் இறைவன் உறைவிடமான ஆலயத்தையும் சுத்திகரிக்கின்றார். மதுபாகம் என்னும் கிரியையைச் செய்து ஆன்ம சுத்தியைப் பெறுகின்றார். நெய், தேன், பழம் இவைகளில் ஆன்ம தத்துவம், வித்யாதத்துவம், சிவதத்துவம் என்ற மூன்று தத்துவங்களையும் பூசித்து மது பாகத்தை அருந்துகின்றார். அறிந்தோ அறியாமலோ முற்பிறவியிலோ சிவநிந்தை, சிவ சாஸ்த்திர நிந்தை, சிவனடியார் நிந்தை இவைகளைச் செய்திருந்தாலும் அத்தோஷம் நீங்கப் பெற்றுக் குரு ஆன்ம சுத்தியுடையவராய் விளங்குகின்றார். பின் பத்து வகையாக நீராடிப் புறச் சுத்தியைச் செய்து கொள்ளுகின்றார். அதனால் உடல் ஆரோக்கியம், பலவகையான பாபங்கள் நீங்குதல், மனத்தில் ஒருமைப்பாடு, திரிகரணசுத்தி இவைகளைப் பெறுகின்றார். நல்லறங்களைச் செய்யத் தொடங்கும்பொழுது தீயவர் தீயசக்திகளை உபயோகித்து இடையூற்றை விளைவிப்பர். அத்தீய சத்திகளை நீக்க ரட்சோக்ந சாந்தியைக் குருசெய்கின்றார். நான்கு திசைகளிலிருந்து வரும் தீயசக்திகளை அழிக்கும் ஆற்றல் மிக்க தேவர்களே உங்களுக்கு வணக்கம்– எம்மைக் காத்தருள் புரிவீர்களாக என்று பிரார்த்தனை அமைந்துள்ளது.

தீயசக்தியை நீக்கியபின் ஆலயத்தின் வெளிவீதியில் எண் திசைகளில் நின்று அமைதியை நிலையைக் குலைக்கும் யக்கர், அரக்கர், பூதங்கள், பிசாசுகள், பிரமராக்ஷஸர், மஹாகாளி, சரளீவடுகர் ஆகிய எண்மருக்கும் பலி உணவு கொடுத்து மரியாதை செய்து, நீங்கள் இவ்விடத்தைவிட்டு நீங்கி மலையடிவாரம், காடு, ஆற்றங்கரை, பாலைவனம், மயானம் முதலிய இடங்களிற் சென்று வசியுங்கள்; இங்கே இறைவனுடைய பிரதிஷ்டை நடைபெறப் போகின்றது என்று கூறிப் பிரவேச பலி என்ற கிரியையைக் குரு செய்கின்றார். தீயசக்திகளை விரட்டி அரட்டி அமைதிக்குப் பங்கம் விளைவிப்பவரைத் தூரச் சென்று வசிக்குமாறு குரு ஆணையிடுகின்றார். பின் கிராம சாந்தி என்ற கிரியையை நடத்துகின்றார். ஆலயம் மட்டும் சுத்தமானாற் போதாது. அக்கிராமத்தில் வசிப்பவர்களும் நோய் பிணியற்றவர்களாய், அகால மரணமற்றவர்களாய், வறுமையற்றவர்களாய், தீமைகளற்றவர்களாய் விளங்க வேண்டும். அப்பொழுது தான் ஆலயம் சிறப்புடையதாகும். அடியார்கள் வந்து தரிசிப்பதனாற்றான் ஆலயம் தெய்வ சாந்நித்தியம் உடையதாய் விளங்கும். ஆகவே, கிராம நன்மைக்காகச் செய்யப்படும் சாந்தியாதலால் கிராமசாந்தி என்று பெயர் வழங்கப்பட்டது. அதனைச் செய்து அதன்பின் பிரமா, இந்திரன், அக்கினி முதலிய எண் திசைப் பாலகர்கள் அவ்விடத்தில் வந்து வசிக்கக் கூடியதாகப் பூமியைச் சுத்திகரிக்கின்றார். அதன் பொருட்டு வாஸ்துசாந்தி என்ற கிரியையைச் சிவாசாரியர் செய்கின்றார்.

### வாஸ்துவின் வரலாறு :

முன்னொரு சமயம் அந்தகன் என்ற அசுரனுடன் இறைவன் போர் செய்யும் பொழுது அவரது மேனியிலிருந்து வேர்வைத்துமி நிலத்தில் விழுந்தது. அத்துமி உலகம் முழுவதையும் தன்னுள் விழுங்கும் வலிமை பொருந்திய பூதமாகத் தோன்றியது. இறைவன் கட்டளையால் அந்தப் பூதம் அந்தகாசுரன் இரத்தத்தைப் பருகியது. பின் சிவபெருமான் மகிழ்ச்சியுற்று அப்பூதம்

விரும்பிய வரங்களைக் கொடுத்தார். வரங்களைப் பெற்றுப் பூதம் மூவுலகத்தையும் கொடுமைப்படுத்தியது. தேவர்கள் இறைவனிடம் தஞ்சம் புகுந்தனர். சிவபெருமான் உருத்திரனையும் பாசங்களையும் படைத்தருளினார். சிவபெருமான் பூதத்தின் வலிமையை ஒடுக்குமாறு கட்டளையிட்டார். உருத்திரனும் பாசங்களால் அப்பூதத்தைக் கட்டி நிலத்தில் வீழ்த்தி, பிரமாதி தேவர்களை வாழச்செய்தார். இந்த வாஸ்து சாந்தியைச் சிவாசாரியர் செய்து ஆலயத்தைச் சுற்றிலும் தேவர்கள் வந்திருந்து இறைவன் பிரதிஷ்டையில் கலந்து கொள்ளும்படி செய்வதாக அமைகின்றது.

### III. விக்கிரகப்பிரதிஷ்டை :

உருவத் திருமேனி புதிதாகத் தாபிக்கப் படுவதாயின், குரு சிற்பியைக் கொண்டு (நயனோன்மீல நம்) கண் திறத்தல் என்ற கிரியையைச் செய்விக்கின்றார். உருவத் திருமேனியைச் சுற்றித் திரையிட்டுச் சிற்பி குருவின் கையிலிருந்து ஆயுதத்தைப் பெற்று முதலில் நெற்றிக் கண்ணையும் அடுத்தது சூரிய நேத்திரத்தையும் அதன்பின் சந்திர நேத்திரத்தையும் இறைவனைத் தியானித்துக் கொண்டு ஆயுதத்தால் திறக்கின்றார். வாய், மூக்கு, காது, கொப்பூழ், நகக்கண் முதலிய ஒன்பது இடங்களில் சிறு துவாரத்தை உண்டு பண்ணுகின்றார். பின் குரு பிம்பசுத்தி முடித்து, பால், நெய், தேன், நெல், கண்ணாடி, யானை, அந்தணர், கன்னிப் பெண், தீபம், பசு, எஜமானன், பஞ்சாராத்திரிகம் இவைகளை இறைவனுக்கு முன் வைத்துத் தரிசிக்கச் செய்கின்றார். அதனால் பசுச்செல்வம், தானிய வளர்ச்சி, இன்பவாழ்வு, வீரியம், மனோபலம், வேதநெறி, கற்பு, அறிவுச்சுடர், சிவதர்மம், ஐந்தொழில் இவையாவும் நாட்டில் சிறப்பாக விளங்கும் என்பதாகும்.

பின் உருவத் திருமேனியைத் தண்ணீரில் மார்பு அளவில் வைத்துச் சக்தி வடிவமாக இருந்தால் காது அளவுவரை தண்ணீரில் வைத்து விசேஷ பூசை அபிஷேகம் இவைகளை ஆசாரியர் செய்கின்றார். இதனை ஜலாதிவாஸம் என்பர். பின் தண்ணீரிலிருந்து எடுத்துத் தானியாதிவாசம் என்ற கிரியையை ஆசாரியர் செய்கின்றார். சுத்தமான தானியத்தை எடுத்துப் புண்ணியாக நீரால் தெளித்து முன்கூறிய அளவில் அத்தானியத்தால் மூடி, எண்மலரால் அர்ச்சித்து ஒரு முகூர்த்த காலம் அவ்வாறு வைத்திருந்து பின் பிம்பத்தை எடுத்து ஒரு பீடத்தில் வைத்து அடியார்களைக் கொண்டு வீதிவலம் செய்விக்கின்றார். கோபுர வாயிலை அடைந்ததும் ஆசாரியர் (திருஷ்டி தோஷ நிவிர்த்தி) கண்ணூறு நீங்குதல் என்ற கிரியையைச் செய்கின்றார். பின் மாலையில் சயனாரோபணம் என்ற கிரியையையும் செய்து முடிக்கின்றார். சுத்தமான விரிப்பில் தலையணை முதலிய உபகரணங்களுடன் உருவத்திருமேனியைப் படுக்கவைத்து விசேஷ பூசை, நியாஸம் முதலியவற்றைச் செய்கின்றார். இதனால் சயனாரோகணம் என்று கூறுவர். கண்திறத்தல், நீரில் வைத்தல், நெற்குவியலில் வைத்தல், வீதிவலம், படுக்கையில் விடுதலை இவ்வைந்து காரியங்களையும் ஆசாரியர் செய்து முடிக்கின்றார்.

விவேச பூதாநி சராசராணி என்பது வேதமந்திரம். சரப்பொருள் அசரப் பொருள் எல்லாவற்றிலும் இறைவன் மறைந்து நிற்கின்றார் என்பது கருத்து. அந்த இறைவன் ஒளியாகவும் உணவாகவும் நீராகவும் காற்றாகவும் இருந்து உயிர்களைக் காத்து வருகின்றான். என்றும் போற்றப்படுகின்றான். அருவமாகப் பஞ்சபூதங்களில் பரவி நிற்கும் இறைவனை உருவத் திருமேனியில் வந்து இணைந்து அருள்புரியுமாறு இவ்வைந்து கிரியைகள் செய்யப்படுகின்றன. கண்திறத்தல் என்பதால் ஒளியிலிருந்தும், நீரில் வைத்தல் என்பதால் ஜலத்திலிருந்தும், நெற்குவியலில் வைத்தலால் நிலத்திலிருந்தும், வீதிவலம் வருவதால் ஆகாயத்திலிருந்தும், படுக்கையில் கிடத்தலால் காற்றிலிருந்தும் இறைவனுடைய சக்தி உருவத்தில் இணைந்து கொள்ளுகின்றது. ஆகவே, புதிய உருவத் திருமேனிக்கு இவ்வைந்து கிரியைகளையும் ஆசாரியர் செய்து முடிக்கின்றார். பின் சுபவேளையில் யந்திரஸ்தாபனம் செய்து பீடத்தில் உருவத் திருமேனியை ஸ்தாபித்து அஷ்டபந்தனம் என்ற கிரியையை நிகழ்த்துகின்றார். எட்டுப்பொருள் சேர்த்து இடித்துக் குழைவாக்கி அதனால் பீடத்திற்கும் உருவத்

திருமேனிக்கும் இணைப்பை உண்டுபண்ணுகின்றார். எந்த ஆலயத்தில் பீடபந்தம் இல்லாது மூர்த்தி காணப்படுகின்றதோ, அங்கு செய்யப்படும் பூசை முதலிய யாவும் பயனற்றனவாகும் என்று ஆகமநூல் கூறுகின்றது. அடுத்தது பிம்பசுத்தி என்ற கிரியை நிகழும், தர்ப்பை, அடிமண், புற்றுமண், நாவலடிமண், ஆலடிமண், வில்வ மரத்தடிமண், துளசி அடிமண் இவைகளை ஒரு மண் கலசத்திலிட்டு நீர் நிறைத்து அதுபோல அரசு, ஆல், அத்தி, பில்வம், நாவல், மா இவைகளின் தளிரை ஒரு கலசத்திலும் பட்டைகளை மற்றொரு கலசத்திலும் வைத்து நீர் நிறைத்து ஆத்ம தத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் என்ற தத்துவத்திரயத்தைப் பூசித்து அக்கலச நீரால் பிம்பத்தை அபிஷேகம் செய்தால் பிம்பசுத்தியாகும். பிம்பசுத்தி முறையாகச் செய்யப்படாவிடில் தெய்வ சாந்நித்தியம் உண்டாகாது.

## IV. மிருத்சங்கிரகணம் :

பாலிகை தெளிப்பதற்காகப் புண்ணிய பூமிக்குச் சென்று மண் எடுத்து வருதல் என்பதையும், பின் அங்குரார்ப்பணம் பாலிகை தெளித்தல் என்பதையும் இவ்விரண்டு கிரியைகளையும் குரு செய்கின்றார். இவ்விரண்டும் படைப்பு என்ற தத்துவத்தைக் குறிக்கின்றது. ஆகவேதான், பூமிதேவியைப் பூசித்து வழிபட்டுப் பிரார்த்தனை முடித்துப் பூமிதேவியின் வயிற்றிலிருந்து மண் எடுக்கப் படுகின்றது. படைப்புக்குரிய இடம் வயிறாகும். அதுபோலவே, பாலிகை தெளித்து அங்குரம் நன்கு வளருவதால், நாட்டில் தானிய வளர்ச்சியுண்டாகிப் படைப்புக்கள் வளர்ச்சி பெறும். பின் ஆசாரியர் பாலாலயம் சென்று, இறைவனுக்குப் பிரஸந்நாபிஷேகம் செய்கின்றார். அதன் கருத்து, "பாலாலயத்தி லிருந்து யாகசாலைக்கு அழைத்துச் செல்லக் கருதியுள்ளோம். இறைவன், எங்கள் அழைப்பை ஏற்றுச் சகல கலாமூர்த்திகளுடனும் யாகசாலைக்கு எழுந்தருள வேண்டும்" என்று குரு பிரார்த்திக்க இறைவன் மகிழ்வுடன் யாகசாலைக்கு எழுந்தருள ஆயத்தமாகின்றார் என்பதாம். பின் கடஸ்தாபனம் என்ற கிரியை நிகழ்கின்றது.

குடத்தை மாவிலை, தேங்காய், கூர்ச்சம், வஸ்திரம், மாலை இவைகளால் வேத யந்திர பாராயணத்துடன் நன்கு அலங்கரித்துப் பாலாலயம் சென்று, இறைவனுக்கு முன் கலசத்தை வைத்துப் (கலாகர்ஷணம்) பிம்பத்திலிருந்து கலசத்தில் வந்து சகல கலைகளுடன் அமரும்படி பிரார்த்தித்துப் பூசித்து யாத்திராஹோமம் முடித்து, வேதபாராயணத்துடன் சகல வாத்திய கோஷங்களுடன் வலமாக யாகசாலை சென்று, கலசங்களைத் தானிய பீடத்தில் சிவாசாரியர் ஸ்தாபிக்கின்றார். உருவத் திருமேனியிலிருந்த இறைவனை அருவுருவத் திருமேனியாய் அமைந்த கலசத்தில் ஆகர்ஷித்து, விசேஷ பூசை, ஹோமம், ஜபம் முதலியவற்றைச் செய்து, வழிபட யாகசாலைக்கு அழைத்துச் சென்றதாகக் கருத்தாகும். அருவுருவத் திருமேனி என்று குறிப்பிட்டது இறைவனை நிஷ்களமாக ஆகர்ஷித்துச் ஸகளமாகப் பூசிக்க வேண்டும் என்ற ஆகம வாக்கியத்திற்குப் பொருத்தமாம். நிஷ்களரூபத்தில் சாந்தி அதீதகலை சிரஸாகவும், சாந்திகலை முகமாகவும், வித்தியாகலை மார்பாகவும், பிரதிஷ்டாகலை குஹ்யமாகவும், நிவிருத்திகலை முழங்கால் பாதமாகவும், புவனாத்துவக ரோமங்களாகவும், வர்ணாத்துவா தோலாகவும், மந்திராத்துவா இரத்தமாகவும், பதாத்துவா தசையாகவும், தத்துவாத்துவா எலும்பு இந்திரியங்களாகவும் நினைக்கப்பட வேண்டுமென்று ஆகம சாஸ்திரம் கூறுகின்றது.

**V.** யாகசாலையில் கும்பம் ஸ்தாபித்த பின் விதிமுறைப்படி குண்டத்தில் ஆசாரியர் அக்னியை உற்பத்தி செய்கின்றார். மறுநாள் காலை தொடங்கி, காலை மாலை இரு நேரங்களிலும் பூஜை, ஹோமம் இவைகளைச் செய்து வருகின்றார். பூஜை, ஹோமம், ஜபம், பாராயணம் முதலியவற்றால் திருவருள் நிறைவு உண்டாகின்றது. அக்னியில் செய்யப்படும் ஹோமத்தால் இறைவன் பூரண திருப்தியடைகின்றார். "அக்நிமுகா : தேவா" என்று வேதவாக்கியம் உள்ளது. இறைவன் அக்னியை முகமாக உடையவர் என்ற கருத்து, உருவேறத் திருவேறும் என்ற சான்றோர் வாக்கின்படி எவ்வளவு ஹோம எண் கூடுகின்றதோ அவ்வளவு அருள் நிறைவும் உண்டாகின்றது.

(ஸ்பர்சாகுதி) யாகசாலையில் வழிபடும் அருவுருவத் திருமேனிக்கும், தருணாலயத்தில் வீற்றிருக்கும் உருவத் திருமேனிக்கும் முப்புரி நூலால் அல்லது தர்ப்பைக் கயிற்றால் தொடர்புபடுத்திச் சிவாக்னியில் ஆகுதி செய்து, சுருக் சுருவத்துடன் முப்புரி நூலைத் தொட்டுக் கொண்டு தருணாலயம் சென்று, உருவத் திருமேனியைப் பிரமபாகம், விஷ்ணுபாகம், உருத்திரபாகம் என மூன்றாகப் பிரித்துப் பூசித்துச் சுருக்சுருவத்தில் எஞ்சியிருக்கும் நெய்யை அந்தந்தப் பாகத்தில் ஹோமம் செய்கின்றார். இவ்வாறு மூன்று முறை நடைபெறுகின்றது. அக்னிக்குக் குணம், உருவம். பரஞ்சோதியாகிய பேரொளி அருவம். அது உருவத்

திருமேனியில் மறைந்து நிற்கின்றது. ஒருசமயம் மால் அயனுக்கு அந்தப் பரஞ்சோதி உருவமாகக் காட்சியளித்தது. பின் அந்தச் சோதி குளிர்ந்து மலையாக மாறியது என்பதைப் புராணங்கள் மூலம் நாம் அறிவோம். அந்த மலையிலிருந்து எடுத்து உருவாக்கப்பட்டதே உருவத் திருமேனியாகும். உருவமான சிவாக்னியில் ஹோமம் செய்து, பின் பரஞ்சோதியான உருவத் திருமேனியில் எஞ்சிய நெய்யைக் ஹோமம் செய்து, யாகசாலையில் நிகழ்த்திய ஹோமத்தின் பலன்கள் யாவும் இந்த உருவத்திருமேனியில் நின்று அருள்புரியட்டும் என்பது கருத்தாகும். இவ்வாறு ஹோமம், ஜபம், பூசை முதலியவற்றால் யாகசாலையில் வேதிகையில் வைக்கப்பட்ட கலச நீர் அருளமுதமாய் மாறுகின்றது.

## VI. கும்பாபிஷேகம் :

விசேஷ பூர்ணாகுதி முடித்துத் தீபாராதனை செய்து, யாத்திராதானம் முடித்துக் கும்பம் தூக்கி அடியார்கள் புடைசூழ மேள வாத்தியங்களுடன் தருணாலயம் சென்று, சுபமுகூர்த்தத்தில் கலசத்தின் அருளமுதை உருவத் திருமேனியில் சிவாசாரியர் அபிஷேகம் செய்கின்றார். தொடக்கம் முதல் பல கிரியைகள் நிகழ்ந்துள்ளன. இன்னும் இரண்டு கிரியைகள் உள்ளன. அவ்வாறு இருந்தும் பிரதிஷ்டை என்று பெயரிட்டு அழையாமல், மகாகும்பாபிஷேகம் என்று பிரசித்தமாக வழங்குவதின் காரணம் யாது?

படிகநிறம் வாய்ந்த சிவலிங்கம் பாதாளத்தி லிருந்து வானளாவிப் புவனம் முழுவதும் வியாபித்து நிற்கின்றது. கூடிக்குறையாத பூரண சந்திரன் சிவலிங்கத்தின் சிரசில் விளங்குகின்றது. அதிலிருந்து அமுதநீர் பெருகிக் கொண்டே இருக்கின்றது. அக்காட்சியை உள்ளத்தால் சிவாசாரியர் தியானித்துக் கொண்டு நமச்சிவாய என்ற ஐந்தெழுத்தை நடுமணியாகக் கொண்டு விளங்கும் ஸ்ரீருத்தாரத்தைச் செபித்துக் கொண்டு அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற விதிமுறையைப் பின்பற்றி, இயற்கையாகவே இறைவன் முடியிலிருந்து இடைவிடாது அருளமுதம் பொழியப் பூசை, ஹோமங்களால் அருளமுதமாக மாறிய கலசநீரை அத்துடன் சேர்த்து அபிஷேகம் செய்வதாக அமைந்தபடியால், மகாகும்பாபிஷேகம் என்ற பெயரிட்டு அழைக்கப்படலாயிற்று. மகா – போற்றத்தக்க, கும்பா அபிஷேகம் – கலசநீரால் அபிஷேகம் செய்தல் என்று கருத்தாகும்.

## VII. மகாபிஷேகம் :

கும்பாபிஷேகம் முடிந்தபின் பால், தயிர், இளநீர் முதலிய விசேஷ திரவியங்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்தல் மகாபிஷேகமாகும். அதனால் இறைவன் உள்ளம் மகிழ்வு பெற்றுப் பரிபூரண அருளைச்செய்கின்றார். இறைவன் அக்னியை முகமாக உடையவர் என்று முன் கூறப்பட்டது. அந்த அக்னிக்கு ஏழு நாக்குக்கள் உள்ளன. அந்தச் சிவாக்னியில் பால், தயிர், பழவகை முதலியவை விசேஷமாக ஹோமம் செய்யப்பட்டுள்ளன. அதனால் இறைவன் கலசத்தில் அருள் பரிபாலிப்பவராய் விளங்குகிறார். பின் கும்பாபிஷேகம் முடிந்தது.


உருவத் திருமேனியில் மறைந்திருப்பது பரஞ்சோதி. அந்த அக்னிக்கு ஆயிரம் நாக்குகள் உள்ளன. ஆகவே, ஏராளமாகப் பால், தயிர், இளநீர், பஞ்சாமிர்தம் முதலியவற்றால் அபிஷேகம் செய்து ஆசாரியர் திருவருள் நிறைவை உண்டு பண்ணுகின்றார். இறைவன் தக்ஷிணாமூர்த்தியாயிருந்து ஸநகாதி முனிவர்களுக்கு ஞானத்தை உபதேசிக்கின்றார் என்று சாஸ்திரம் கூறுகின்றது. முனிவர்களுக்கு குருவாக வந்த இறைவனும் முனிவராக விளங்குகின்றார். முனிவர்களுக்குரிய முக்கிய விரதம் (திரிஷவணம்) மூன்று நேரம் நீட்டல் ஆகவேதான் (அபிஷேகப்ரிய : சிவ) அபிஷேகத்தில் விருப்பமுடையவர் சிவன் என்று சான்றோர் போற்றியிருக்கின்றனர்.

## VIII. மண்டலாபிஷேகம் :

நாற்பத்தைந்து நாட்கள் தொடர்ந்து அபிஷேகம் பூசை நடைபெறுகின்றன. பொருள் வசதி குறைந்தவர் வேறு வசதிக் குறைவுகளாலும் இருபது நாட்கள், பத்து நாட்கள் தொடர்ந்து அபிஷேகம் செய்து முடிப்பார்கள். கும்பாபிஷேகம், மஹாபிஷேகம், மண்டலாபிஷேகம் – மூன்று கிரியைகளிலும் அபிஷேகம் சொல்லால் குறிக்கப்பட்டுள்ளது. அபிஷேகத்தில் விருப்பமுடையவர் சிவன் என்ற நியாயத்தை அனுசரித்து அமைந்தது. மகாபிஷேகம், மண்டலாபிஷேகம் இவ்விரு கிரியைகளும் இறைவனின் (சாந்நியத்தியத்தை) திருவருள் நிறைவை உண்டுபண்ணுவனவாய் அமைந்தவை.

*நன்றி : உரும்பிராய் கருணாகரப்பிள்ளையார்*

*மஹா கும்பாபிஷேக மலர் – 1973*



# கும்பாபிஷேக பலன்

ஸ்ரீ பரமேசுவரர் என்னும் பெயரை யதார்த்தமாக உடைய ஸ்ரீ சதாசிவப் பெருமான் இவ்வுலகப் படைப்பின்போதே அதிலுள்ள பிராணிகளுக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அடையச் செய்யவே காமிகம் முதலிய சிவாகமங்களையும், ரிக்வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வ வேதம் என்னும் நான்கு வேதங்களையும் தமது மேல் கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு நோக்கிய முகங்களினின்றும் அருளிச் செய்தார். ஆதலால், இந்தச் சிவாகம வேதங்கள் ஸ்ரீ பரமேசுவரருடைய திருவாக்காகும்.

ஸ்ரீ சதாசிவப் பெருமானைக் குறித்துச் செய்யும் தர்மம் சிவதர்மம் என்றும், இந்தத் தர்மங்களைக் காட்டிலும் உயர்ந்த தர்மம் இருந்ததுமில்லை, உண்டாகப் போவதுமில்லை, ஆதலால் இது பதி தர்மமென்றும் அந்த நூல்கள் கூறுகின்றன. சாலோகம் தேவரது உலகையடைதல்; சாமீபம் தேவரது அருகிலேயே இருத்தல்; சாரூப்யம் சிவகணங்களாக இருக்குந் தன்மை; சிவதருமம் இவற்றையும், சிவனது திருவடி நிழலை அடைதலெனும் பரமுத்தியையுங் கொடுக்கும். ஏனையவை பசு தர்மங்கள். அவை பல நுகர்ச்சியின் இறுதியில் இப்புவியையே அடையச் செய்யும்.

பதி தர்மங்களுள் சிவாலயப் பிரதிஷ்டை மிக மிக முக்கியம். ஆதலாலே, இதைத் தேவர்கள், ரிஷிகள் இவர்களுடன் அரசர்கள், செல்வர்களான புண்ணிய சீலர்கள் முறைப்படி செய்து, நித்தியப்படி, ஏறுபடி, பிரார்த்தனை என்ற பூஜைகளை வகுத்துள்ளார்கள். இப்பிரதிட்டையும் அருவுருவான சிவலிங்கத்திற்குச் செய்து வைப்பது மிக முக்கியமானது. ஏனெனில், சிவலிங்கத்தில் எல்லாத் தேவர்களும், கங்காதி தீர்த்தங்கள் யாவும் அடங்கும். சிவலிங்கத்தின் மேல் பாகம் ருத்திராம்சம்; நடுப் பாகம் விஷ்ணுவின் அம்சம்; கீழ்ப்பாகம் பிரம்மாவின் அம்சம், சிவாலயங்களில் உள்ள பரிவார தேவர்களைப் போல ஏனைய தேவர் யாருக்குமே இல்லை. சிவலிங்கங்களில் பூஜை முதலியவை கூடினாலும், குறைந்தாலும், பூர்ணமான பூஜையாகவே ஆகும். நம் முன்னோர்கள் சிவலிங்கம் மணல், கருங்கல், தங்கம், வெள்ளி, ரஸங்களது சேர்க்கை – இவற்றால் செய்து ஆலயங்களில் சிவாகம விதி வழுவாது பிரதிஷ்டை செய்து பூசித்தனர். சிவலிங்க பிரதிஷ்டையை விதி வழுவாது செய்தவர்கள், அவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்கள், செய்யத் தூண்டியவர்கள், தரிசித்தவர்கள் யாவரும், சிவலிங்க

பீடங்களிலும், யாகசாலை, அதிலுள்ள வேதிகைகள் குண்டங்கள் இவைகளிலும் எவ்வளவு பரமாணுத் தூளிகள் உள்ளனவோ அவ்வளவு காலம் போகபோக்கியங்களை அனுபவிப்பார்கள். தம் தலைமுறை, தகப்பன் வம்சத்தவர் பத்துத் தலைமுறை, தாய் வம்சத்தின் பத்துத் தலைமுறையாக இருபத்தொரு தலைமுறையினரும் சிவலோகத்தில் பெரும் போகபோக்கியங்களை அனுபவித்து, முடிவில் ஸ்ரீ சிவபெருமான் திருவடி நிழல் அடைவார்கள்.

வியாதி நீக்கத்தைச் சூரியனிடமிருந்தும், பொருள்களைச் சிவாக்கினி வளர்த்து ஹோமஞ் செய்வதிலிருந்தும், ஸம்ஸாரபந்த நீக்கத்தை விஷ்ணுவிடமிருந்தும், சிவஞானத்தை ஸ்ரீ ஸதாசிவப் பெருமானிடமிருந்தும் அடையலாம் என்பது நூல்களின் துணிபு.

இந்தத் தர்மங்களை ஒருவர் புதிதாகச் செய்வதைக் காட்டிலும் முன்னோர்கள் செய்தவற்றைக் காப்பாற்றுவது இரண்டு பங்கு புண்ணியங்களைத் தரும்; தாம் செய்யும் புண்ணியங்களால் சுவர்க்கவாஸமும், முன்னோர்கள் செய்த தர்மங்களைக் காப்பாற்றுவதால் மீளாத சாயுஜ்யமும் பெறுவார்கள். ஒருவன் முன்னோர்கள் செய்த தர்மங்களை அழிப்பதால், அவன் செய்ததருமங்களும் வீணாகும். இப்படியே, பழையஆலயத்தையும் பின்ன பிம்பங்களையும் விதிப்படி திருத்தியமைத்து மகா கும்பாபிஷேகம் செய்வித்தலால் நான்கு மடங்கு புண்ணியம் கிடைக்கும். ஸ்ரீ சிவபெருமானுக்கு உகந்த சிவாலயம் கட்டுவதற்கு முன் இளங்கோவிலைக் கட்டி, அதனுள் சிவலிங்கப் பெருமானை முக்கிய பரிவாரங்களுடன் விதிப்படிப் பிரதிஷ்டை செய்து, நித்தியப்படி பிரார்த்தனை பூஜைகளைச் செய்விக்க வேண்டும். அவ்விளங்கோவிலிலுள்ள மூர்த்திகளுடன், 16, 32 பரிவார மூர்த்திகளையும் செவ்வனே கட்டப்பட்ட ஆலயத்தில் விதிப்படியான யாகசாலாதிவாஸனத்துடன் கும்பாபிஷேகமுஞ் செய்விக்க வேண்டும். பிறகு நித்தியப்படி, ஏறுபடி, பிரார்த்தனை, பூஜை உத்ஸவங்களைச் செய்விக்க வேண்டும். இவ்வாறு கட்டப்பெற்ற ஆலயம் காலங்கடந்ததால் ஜீர்ணமானபோது, முதலில் சொன்னபடி சிறு ஆலயத்தில் அங்குள்ள சிவலிங்கத்தை அந்த லிங்க அளவுக்குத் தக்கபடியாக யாகயோக்கியமான மரங்களில் செய்து யாகாதிவாஸனத்துடன் கும்பாபிஷேகஞ் செய்வித்து, சக்திக்குத் தக்கபடி நித்தியம், ஏறுபடி, பிரார்த்தனா பூஜைகளையும் உத்ஸவங்களையுஞ் செய்வித்தல் வேண்டும். இது தருணாலயப் பிரதிஷ்டையாகும்.

பின்பு ஜீர்ணமான ஆலயத்தைச் செப்பனிட்டு முன்போல யாகசாலாதி வாஸனத்துடன் அவ்வாலயத்தில் சேர்த்து நித்தியப்படி முதலிய பூஜைகளையும் உத்ஸவங்களையுஞ் செய்விக்க வேண்டும். இந்த நான்கு செயல்களையும் ஒரு புருஷனின் வாழ்நாளுக்குள் செய்ய முடியாது. ஆதலால், ஜீர்ணாலயச் சீர்திருத்தத்துடன் செய்விப்பதில் நான்கு மடங்கு முன் கூறப்பட்ட புண்ணியத்தைப் பெறுவார்கள்.

சிவலிங்கப் பெருமானின்பிரதிஷ்டையைப் போல ஏனைய சிவபிம்பங்களான சந்திரசேகரர், ஸோமாஸ்கந்தர், நடராஜர், சிவபரிவார தேவர்களான – அம்பிகை – விநாயகர் – சுப்பிரமணியர் – பைரவர் முதலிய தேவர்களின் பிரதிஷ்டையால் அந்த அந்தத் தேவர்களது உலகை அடைந்து அவர்களுடைய உருவம் பெற்று வாழ்ந்து பின்பு சிவபெருமானுடைய திருவடி நிழலையும் அடைவார்கள்.



*தச்சம்யோ – ராவ்ருணீமஹே । காதும் யக்ஞாய*
*காதும் யக்ஞபதயே । தைவீ: ஸ்வஸ்திரஸ்துந:*
*ஸ்வஸ்திர் மானுஷேப்ய: । ஊர்த்வம் ஜிகாது பேஷஜம் ।*
*ஸந்நோ அஸ்து த்வபதே । சஞ்சதுஷ்பதே ।*
*ஓம் சாந்தி: சாந்தி : சாந்தி ।*

உலகத்தில் பிறந்த அனைத்து உயிரினங்களுக்கும், நிகழ்காலத் துன்பத்திற்கும் எதிர்காலத் துன்பத்திற்கும் சாந்தியளிக்கும் நற்கருமம் எதுவோ அதை ஆர்வத்துடன் வேண்டுகின்றோம். யக்ஞத்திற்கு வளர்ச்சியை வேண்டுகின்றோம். யஜமானனுக்கு நற்பயனை அடைய

விவேகம், வைராக்யம், துறவு முதலியவைகளினால் ஆத்ம ஸ்வரூபத்தை நேரடியாக லயிப்பதற்கு ஞானயோகம் என்று பெயர்.

கர்மானுஷ்டானங்களை நிஷ்காம்யமாகச் செய்து அதன் மூலமாகவும், ஞானத்தை அடையலாம் என்று தெளிந்துள்ளனர். ஆனால் மனிதப்பிறவிக்கு விதிக்கப்பட்டுள்ள பலவித கர்மாக்களைச் செய்தால் மட்டுமே சித்த சுத்தி ஏற்பட்டு ஞானத்தையடையலாம். இதையே ஸ்ரீ பகவத்கீதையில்,

*"ஸஹயக்ஞா : ப்ரஜா : ஸ்ருஷ்ட்வா புரோவாச ப்ராஜாபதி:*
*அநேந ப்ரஸவிஷ்யத்வம் ஏவவோஸ்த்விஷ்ட காமதுக்"*



# யாகங்களும் அதன் பயன்களும்



வேண்டுகின்றோம். நமக்குத் தேவதைகளின் அருள் உண்டாகுக. மனித சமூகத்திற்கு க்ஷேமம் உண்டாகட்டும். உயிர்க்கு மருந்து போன்ற செடி, கொடிகள் மேலோங்கி வளரட்டும். இவ்வுலகில் உள்ள இரண்டு, நான்கு கால் பிராணிகளிடம் மங்களம் ஏற்படட்டும், என்பது மேற்குறித்த சுலோகத்தின் பொருளாகும்.

ஹிந்து தர்ம சாஸ்த்ரம் பரந்த நோக்குடன் பல விஷயங்களை அணுகியுள்ளது. ஆத்மவிசாரம் செய்பவர்கள் ஞானயோகம், கர்மயோகம் என்ற இருவகைகளை மட்டும் எடுத்துக் கொண்டால் கர்மத்தினால் ஞானத்தை அடைய முடியும்.

உலகை ; ஸருஷ்டித்த ப்ரம்ஹா உயிரினங்களைப் பார்த்து இதனால் நீங்கள் வளர்ச்சியடையுங்கள். இந்த யக்ஞம் உங்களுக்கு ஸர்வாபீஷ்டங்களையும் அளிக்கும் காமதேனுவாயிருக்கட்டும். இந்த ரகசியத்தை உள்ளபடி உணர்ந்தவர் பிறவித் துன்பங்களைக் கடந்து சாகாநிலை எய்துவர் என்றும் கூறியுள்ளது.

உலகத்தில் பிறந்த மனிதர்கள் யாவர்க்கும் பொதுவானவை ஐந்து யக்ஞங்கள் என்று முன்னோர்கள் விதித்துள்ளனர். அவை முறையே (1) தேவயக்ஞம் (2) மனுஷயக்ஞம், (3) பித்ருயக்ஞம், (4) ப்ரம்ஹ யக்ஞம், (5) பூத யக்ஞம் என்பவையாம்.

முதலில் யக்ஞம் என்றால் என்ன?

யக்ஞம் என்றால் யாகம், என்று பொருளாகும்.

| | | |
|---|---|---|
| தேவ யக்ஞம் | : | தேவர்களைக் குறித்துச் செய்தல். |
| மனுஷ்ய யக்ஞம் | : | ரிஷிகளைக் குறித்துச் செய்தல். |
| பித்ரு யக்ஞம் | : | நம் முன்னோர்களைக் குறித்துச் செய்தல். |
| ப்ரம்ஹ யக்ஞம் | : | வேதமறிந்தவர்கள் தினமும் செய்ய வேண்டியது. |
| பூத யக்ஞம் | : | நாம் உட்கொள்ளும் உணவில் தினமும் ஒரு பங்கை, பகலில் காக்கைக்கும், அக்னியில் படைத்தும் செய்வது. |

மேற் கூறியவைகளை சரிவரச் செய்வதினால் ஏற்படும் பலன்கள் மிக்க அதிகம். இதில் முக்கியமாக முதலில் முதல் இரண்டு யக்ஞங்களைப் பற்றி அறிவோம். பொதுவாகவே அக்காலங்களில் வேதமறிந்த அந்தணர்களின் இல்லங்களில் யாகங்கள் நடைபெற்றதாகக் கூறுவதுண்டு. அதற்கு மானியமாக அரசனிடம் பல்வேறு வகையில் உதவிகளைப் பெற்றும் மேலும் யக்ஞம் செய்பவர்கள் யாவரும், தனவந்தர்கள், பிரபுக்கள் அனைவராலும் தேச நலங்கருதி அவர்கள் ஆயுள் பரியந்தம், காப்பாற்றியதாக வரலாறு. உண்மையும் அதுவே. தேவதைகளை ப்ரீத்தி செய்து அவர்களுக்கு உண்டான ஹவிர்பாகம் என்று சொல்லக் கூடியதான நெய், ஸமித்து இவைகளை அக்னியில் சமர்ப்பித்தால் அவை உடனே பஸ்மமாகி நம்மை அனுக்ரஹிக்கும் என்பது திண்ணம்.

மழைவேண்டி அக்காலங்களில் யாகம் செய்துள்ளனர். நாம் கொடுக்கும் ஹவிர் பாகமானது அக்னியின் வழியாக அந்தந்த தேவதையை அடைகின்றது.

*"பர்ஜன்யோ வர்ஷது | பலவத்யோ ந*
*ஓஷதய : பச்யந்தாம்" |*
*யோகக்ஷேமோ ந : கல்பதாம்*

என்று மழையை விரும்பி யாகம் செய்துவரும் முனிகள் அந்த யாகம் மூலம் உலகத்தின்பால் சார்ந்துள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் நல்ல தாவரங்களை வளரச் செய்து, அதை உட்கொள்ளும் பசுமாடுகள் நல்ல விதமாகப் பாலைக் கொடுத்து, அந்தப் பாலை நெய்யாகச் செய்து அதையும் ஹோமத்தில் அளித்திட

*"யோக க்ஷேமோ ந : கல்பதாம்"*

"இவ்வுலகத்தில் எங்களுடன் உள்ள எல்லோரையும் நல்லபடியாக வாழ்த்திட வேண்டுவதாக" என்று காண்வ ஸம்ஹிதை கூறுகிறது.

மனுஷ்யக்ஞம் என்பதும் இதுபோன்றதே.


இவ்வாறு விதிக்கப்பட்ட யக்ஞங்களைச் சரிவரச் செய்தோமேயானால் தேவதைகள் திருப்தியடைந்து நம்மை ஆசீர்வதிப்பார்கள்.

அதேபோல் நாம் செய்யும் யக்ஞமானது உலகத்தில் உள்ள சகல துர்பிக்ஷங்களையும் போக்கி நிவ்ருத்தி செய்வதுடன் இக, பரலோகத்திலும் சிரேயஸ்ஸையும், நம் வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்களை அருளும். எவ்வொன்றையும் சரிவரச் செய்தோமேயானால் நமக்குத் தேவையான மனச்சாந்தியுடன் கூடிய நல்ல இல்வாழ்க்கை கிடைக்கும்.

அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட கருமங்களைச் சரிவரச் செய்வதினால் மட்டுமே இந்த மனிதப் பிறவியைக் கடைத்தேற முடியும்.

இப்பூவுலகில் நம்மை படைத்து நமக்குத் தேவையானதை அள்ளித்தரும் வஸ்துக்களைப் படைத்த பகவான் செய்யும் இக்காரியத்திற்கு "ச்ருஷ்டி யக்ஞம்" என்று பெயர்.

நமக்குத் தேவையானவற்றைக் கொடுத்த – கொடுத்துக் கொண்டிருக்கிற கடவுளுக்கு – அந்தப்



பரம்பொருளுக்குச் செலுத்தும் நன்றியை அக்னியின் மூலமாகச் செய்வதாலும் யக்ஞம் என்று பெயர்.

அதன்பயன்கள் : சரியான நேரத்தில் மழை பெய்யும். வேண்டிய அளவு பணம் கிடைக்கும். புகழ் நம்மைத் தேடிவரும். நீண்ட நாட்கள் வாழவைக்கும். இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைக் கூறலாம்.

இந்தியாவின் மத்திய பகுதியான போபாலில் கடந்த பல வருடங்களுக்கு முன்பு ஏற்பட்ட விஷவாயுக் கசிவினால் போபாலைச் சுற்றி இருபது சதுர கி. மீ. வரை ஏற்பட்ட உயிரிழப்புகள் எல்லோரும் அறிந்ததே.

ஆனால் அதிலும் ஒரு வியத்தகு சம்பவம். அந்த 20 ச. கி. மீக்குள்ளேயே உள்ள ஒரு வீட்டில் மட்டும் எந்த விதமான மரணமோ அங்கஹீனமோ ஏற்படவில்லை. என்ன காரணம் என்று அறிய முயற்சித்தபோது அந்த வீட்டில் உள்ள பெரிய வேதபண்டிதர் "ஔபாசனம்" என்ற அந்தணர்களுக்கு உண்டான நித்ய கர்மாவை வழக்கம் போல் செய்து கொண்டிருந்ததாகத் தெரிவித்தனர். இது நாடறிந்த விஷயம். இன்றும் யக்ஞ கர்மாக்கள் தொடர்ந்து அப்பகுதியில் நடைபெறுகிறது.

யாகம் என்பது நம் மனத்தில் உள்ள தீய எண்ணங்களைப் பொசுக்கிவிடும். பொதுவாக யாகத்திற்கு உபயோகப்படும் பொருட்களான பசுநெய், பசுவரட்டி இவற்றினால் ஏற்படும் ஜுவாலையானது அந்தச் சுற்று வட்டாரத்தையே ரம்யமாகவும், அமைதியாகவும் வைத்திருக்க உதவுகின்றது.

இவ்வுலகை உய்விக்கும் பொருட்டு ஸ்ரீ பகவானான விராட்புருஷன் தன்னையே அர்ப்பணித்ததாக வரலாறு. எனவே எல்லோரும் யாகங்கள் என்று கண்டவுடன், அதற்கு தங்களால் முடிந்த அளவு பொருள் உதவி செய்து ஸ்ரீ அக்னி, இந்திரன், வருணன் போன்ற தேவதைகளைத் திருப்தி செய்து அதன் மூலம் நம்முலகில் சுபீட்சங்கள் மலரட்டும். சாந்தி ஏற்படட்டும் என்று யக்ஞ ஸ்வரூபியான பகவானைப் ப்ரார்த்திப்போமாக. மேலும் யாகமில்லாமல், தியாகமில்லாமல் எந்தப் பெரிய கார்யமும் செய்ய இயலாது, என்பதையும் உணர்வோமாக.


*(சென்னை– ஸ்கந்த சஷ்டி 30ம் ஆண்டு விழா மலரிலிருந்து)*


# மறுபிறவித் தத்துவம்

நிரந்தரமான ஒரு தெய்வீக சக்தி நமக்குள்ளேயே இருக்கிறது. அதையே ஆத்மா என்று கூறுகிறோம். நமது கனவில் நமது மனம் இல்லாத இடம் இல்லை. அதேபோல உலகியல் வாழ்வில் ஆத்மா நிலவாத இடம் இல்லை. எங்கேயாவது இல்லை என்றால் அல்லவா, ஓரிடத்தை விட்டு இன்னொரு இடத்துக்குப் போவதற்கு? இறந்தபிறகு பூதஉடல் மட்டுமே எஞ்சி நிற்கிறது. அந்தக்கரணம் என்னும் சூக்ஷ்ம உடலுடன் ஆத்மா விடை பெற்றுச் செல்லுகிறது. அத்துடன் அது வாழ்க்கையில் அனுபவித்து உணர்ந்த அனுபவங்களின் வாசனையும் தொடர்ந்து செல்லுகிறது. இப்போது நீங்கள் இங்கே இருக்கிறீர்கள். உங்களுடைய வீட்டில் இல்லை. அதேபோல வீட்டுக்குப் போய்விட்டால் இங்கே இருக்கமாட்டீர்கள். அதே போல சூக்ஷ்ம உடல் இடம் மாறுகிறது. நல்ல வாழ்க்கை வாழ்ந்தால் பதவி உயர்வு பெற்று, இன்னும் உயர்வான வாழ்க்கையை அநுபவிக்கப் போகிறது. நல்ல விஷயங்களை நாடி ஆசைப்பட்டிருந்தால், அந்த நல்ல வாசனையுடன் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள அடுத்த பிறவியை நாடிப் போகிறது. இதைப் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நாம் கூர்ந்து முனைப்புடன் உருவாக்கும் எண்ண சக்தியே நமது அடுத்த பிறவியை நிர்ணயிக்கிறது. ஆக, மறு பிறவித்தத்துவம் என்பது விஞ்ஞான பூர்வமானது. தர்க்க பூர்வமானது.



# ஆனைமுகம்


UNIE ARTS


UNIE ARTS



# ஸ்ரீ விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா யகர்காக்க ;
வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக மதோற்கடர் தாம்
அமர்ந்து காக்க ;
விளரற நெற்றியை என்றும் விளங்கியகா சிபர்காக்க;
புருவந் தம்மைத்
தளர்வில்மகோ தரர்காக்க; தடவிழிகள் பாலசந்
திரனார் காக்க ;
கவின்வளரும் அதரம்கச முகர்காக்க ; தால் அங்கணக்
டரீடர் காக்க ;
நவில்சி புகம் கிரிசைசுதர் காக்க; தனி வாக்கைவிநா
யகர்தாம் காக்க ;
அவிர்நகைதுன் முகர்காக்க ; அள் எழிற்செஞ்செவிபாச
பாணி காக்க ;
தவிர்தலுரு திளங்கொடி போல்வளர்மணி நாசியைச்
சிந்தி தார்த்தர் காக்க ;
காமருபூ முகந்தன்னைக் குணேசர் நனிக்காக்க ; களம்
கணேசர் காக்க ;
வாமமுறும் இருதோளும் வயங்கு கந்த பூர்வசர்தா
மகிழ்ந்து காக்க ;
ஏமமுறு மணிமலைவிக் கினவிநா சன்காக்க ;
இதயந்தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க ; அகட்டினைத்துலங்(கு)
ஏரம்பர் காக்க ;
பக்கம்இரண் டையுந்தராதரர் காக்க ; பிருட்டத்தைப்
பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க ; விளங்கிலிங்கம் வியாளபூ
டணர்தாம் காக்க;
தக்கருய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்க; கச
சனதை அல்லல்
உக்ககண பன்காக்க ; ஊருவைமங் களமூர்த்தி
உவந்து காக்க ;
தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்க ; இரு பதம் ஏக
தந்தர் காக்க ;
வாழ்கரம்கப் பிரப்பிரசா தனர் காக்க ; முன்கையை
வணங்குவார் நோய்
ஆழ் தரச்செய் ஆசாபூ ரகக் காக்க ; விரல்பதும
அத்தர் காக்க ;
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர் காக்க ; கிழக்கினிற்புத்
தீசர் காக்க ;
அக்கினியிற் சித்தீசர் காக்க ; உமாபுத்திரர் தென்
ஆசை காக்க ;
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க ; விக்கினவர்த்
தனர்மேற் கென்னுந்
திக்கதனிர் காக்க ; வாயுவிற்கசகன் னர்காக்க ;
திகழ்உ தீசி
தக்கநிதி பன்காக்க ; வடகிழக்கில் ஈசநந்
தனரே காக்க ;
ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க ; இர வினும் சந்தி
இரண்டன் மாட்டும்
ஒகையின்விக் கினகிருது காக்க ; இராக் கதர்பூதம்
உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்திறத்தால் வருந்து
யரும் முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுய சாங்குசர்தாம்
விரைந்து காக்க ;
மதி, ஞானம், தவம், தானம், மானம் ஒளி, புகழ்,
குலம், வண்சரீரம் மற்றும் ;
பதிவான தனம், தானியம், கிருகம், மனைவி, மைந்தர்,
பயில்நட் பாதிக
கதியாவும் கலந்து சர்வாயுதர்காக்க ; காமர் பவித்
திரர் முன்னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர் எஞ்ஞான்றும்
விரும்பிக் காக்க ;
வென்றிசீ விதம்பகபிலர் காக்க ; கரி யாதி யெலாம்
விகடர் காக்க ;
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும் ஓதிடின், நும்பால்
இடையூ றொன்றும்
ஒன்றுமுறா ; முனிவரர்காள் ; அறிமின்கள் ; யாரொருவர்
ஓதினாலும்
மன்றஆங் கவர்தேகம் பிணியறவச் சிரதேக
மாகி மன்னும். ||

---

பக்தியுடனே இந்தக் கவசத்தைப் பாராயணஞ் செய்வோர்க்குப் பிணியும் வறுமையும் அகலும்!
பேய் பூதங்களாலுண்டாகின்ற துன்பங்களும் கவலைகளும் நீங்கும்!
பெருஞ்செல்வமும் தீர்க்காயுளும், உண்டாகும். இதைப் படித்தாலும், சொல்லக் கேட்டாலும்,
பூஜித்தாலும், அனைத்துத் துன்பங்களும் கதிரவனைக் கண்ட பனிபோல் விலகும்!

# முதல்வர்

*(காஞ்சி. சங்கராச்சார்ய சுவாமிகள்)*



"கோயில்" என்று பெயர் வைத்து விமானமும் கூரையும் போட்டுக் கட்டிடம் எழுப்ப வேண்டும் என்பது கூட இல்லாமல், அரசமரத்தடிகளிலே கூட வானம் பார்க்க அமர்ந்திருக்கும் ஸ்வாமி நமது பிள்ளையார். தெருவுக்குத் தெரு ஒரு பிள்ளையார் கோயில், நதிக் கரைகளிலெல்லாம் பிள்ளையார், மரத்தடிகளில் பிள்ளையார் என்றிப்படி இந்தத் தமிழ் தேசம் முழுவதும் அவர் வேறெந்த ஸ்வாமிக்கும் இல்லாத அளவுக்கு இடம் கொண்டு அருள்பாலித்து வருகிறார். அவரைப் "பிள்ளையார்" என்றே அன்போடு கூறுவது நம் தமிழ் நாட்டுக்கே உரிய வழக்கம். சர்வலோக மாதா பிதாக்களாகிய பார்வதி பரமேசுவரர்களின் ஜேஷ்ட புத்திரர் அவர். "பிள்ளை" என்றால் அவரைத்தான் முதலில் சொல்ல வேண்டும். வெறுமே "பிள்ளை" என்று சொல்லக் கூடாது என்பதால் மரியாதையாகப் "பிள்ளையார்" என்று சொல்வது தமிழ் நாட்டுச் சிறப்பு.

"குமாரன்" என்றால் "பிள்ளை" என்றே அர்த்தம். பாரத தேசம் முழுவதிலும் குமாரன், குமாரஸ்வாமி என்றால் பார்வதி பரமேசுவரர்களின் இளைய பிள்ளையாகிய சுப்பிரமணியரையே குறிப்பிடும். தமிழிலும் "குமரக் கடவுள்" என்கிறோம்; ஆனால் அவரை குமரனார் என்பதில்லை "குமரன்" என்றுதான் சொல்வார்கள். மூத்த பிள்ளைக்கே மரியாதை தோன்றப் பிள்ளையார் என்று பெயர் தந்திருக்கிறோம்.

முதல் பிள்ளை இவர்; குழந்தைஸ்வாமி ஆனாலும் இவரே எல்லாவற்றுக்கும் ஆதியில் இருந்தவர். பிரணவம் தான் எல்லாவற்றுக்கும் முதல். பிரணவத்திலிருந்துதான் சகல பிரபஞ்சமும் ஜீவராசிகளும் தோன்றின. அந்தப் பிரணவத்தின் ஸ்வரூபமே பிள்ளையார். அவரது ஆனைமுகம், வளைந்த தும்பிக்கை இவற்றைச் சேர்த்துப் பார்த்தால் பிரணவத்தின் வடிவமாகவே தோன்றும்.

குழந்தையாக இருந்து கொண்டே ஆதி முதலின் தோற்றமாக இருக்கிற பிள்ளையார், குழந்தை போல் தோன்றினாலும் பக்தர்களை ஒரேயடியாகக் கைதூக்கி உயர்த்தி விடுவதிலும் முதல்வராக இருக்கிறார்.

ஔவைப் பாட்டி ஒருத்தியின் உதாரணமே போதும். ஔவையார் பெரிய கணபதி உபாஸகி. பிரணவ ஸ்வரூபியான விநாயகரைப் புருவ மத்தியில் தியானித்துக் கொண்டு ஔவையார் யோக சாஸ்திரம் முழுவதையும் அடக்கியதான "விநாயகர் அகவலை"ப் பாடியிருக்கிறாள். அதைப் பாராயணம் செய்தால் பரமஞானம் உண்டாகும். இந்த ஔவையாரைப் பற்றி ஒரு கதை உண்டு, சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாசத்துக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் ஔவையையும் உடன் அழைத்துப் போக எண்ணினார்கள். அப்போது ஔவை விக்னேசுவரருக்குப் பூஜை பண்ணிக் கொண்டிருந்தாள்.

சீக்கிரம் வருமாறு சுந்தரமூர்த்தியும் சேரமானும் அவளை அவசரப்படுத்தி அழைத்தார்கள். அவளோ, "நீங்கள் போகிறபடி போங்கள். உங்ளுக்காக நான் என் பூஜையை வேகப்படுத்த மாட்டேன். விநாயக பூஜையே எனக்குக் கைலாசம்" என்று சொல்லி விட்டாள். அவர்கள் அப்படியே கிளம்பி விட்டார்கள். ஔவை சாங்கோபாங்கமாகப் பூஜை செய்து முடித்தாள். முடிவில் பிள்ளையார் பிரசன்னமாகி அவளை அப்படியே தம் துதிக்கையால் தூக்கி ஒரே வீச்சில் கைலாசத்தில் கொண்டு சேர்த்து விட்டார்! அவளுக்குப் பிற்பாடுதான் சுந்தரமூர்த்தியும் சேரமான் பெருமாளும் கைலாசத்தை அடைந்தார்கள். அங்கே சேரமான் பெருமாள் திருக்கைலாய உலாவைப் பாடினார். பெரிய அநுக்கிரகத்தை அநாயாசமாகச் செய்கிற ஸ்வாமி விக்னேசுவரர்.

விநாயக மூர்த்தியிலுள்ள ஒவ்வொரு சின்ன சமாசாரத்தைக் கவனித்தாலும் அதில் நிறையத் தத்துவங்கள் இருக்கின்றன.

பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பது எதற்காக? விக்னேசுவரர், தம் அப்பாவான ஈசுவரனைப் பார்த்து, " உன் சிரசையே எனக்குப் பலி கொடு" என்று கேட்டு விட்டாராம். எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் பண்ணினால் தான் மகாகணபதிக்குப் பிரீதி ஏற்படுகிறது. அவ்வளவு பெரிய தியாகம் பண்ணுவதற்குத் தயார் என்ற அறிகுறியாகத் தான், ஈசுவரனைப் போலவே மூன்று கண்கள் உடைய தேங்காயைச் சிருஷ்டித்து அந்தக் காயை அவருக்கு நாம் அர்ப்பணம் பண்ணும் படியாக ஈசுவரன் அநுக்கிரகித்திருக்கிறார்.

*நன்றி:- தெய்வத்தின் குரல்*

# இருமுறை இறை வணக்கம்

இரவில் நாம் நினைவிழந்த மனநிலையில் (உறக்கத்தில்) கிடப்போம். எதிர்பாராது திடீர் என்று வரும் ஆபத்துக்களிலிருந்து நாம் நம்மை அப்பொழுது காத்துக்கொள்ளமுடியாது. இந்த மனநிலையில் நம் உயிரே போகின்ற கொடியநிலை ஏற்பட்டாலும் ஏற்படக் கூடும். இந்தத் துன்பங்களிருந்து உணர்விழந்த நிலையிலும் நம்மைக் காப்பது அந்தப் பேரருளாம் இறைவன்தான். எனவேதான் வைகறையில் நாம் கண் விழித்தவுடன், முந்திய இரவு நம்மைக் காத்து அருளிய தெய்வத்திற்கு நன்றியைச் செலுத்துவது நமது தலையாய கடமை ஆகிறது. இன்று அரைக்கோப்பை டீ வாங்கித் தந்த நண்பனுக்கும், வெற்றிலை பாக்குத் தந்த தோழனுக்கும் "நன்றி" சொல்ல மட்டுமே இன்றைய சமுதாயப் பழக்க வழக்கங்கள் நமக்குப் பாடம் கற்றுத் தந்துள்ளன. நம் வாழ்வைக் காத்து உயிரமுதம் ஊட்டி வளர்க்கும் ஆண்டவனுக்கு "உடல்குழைய, என்பெலாம் நெக்குருக விழி நீர்கள் ஊற்றெனப் பெருக" - உயர்ந்த எண்ணங்களால், தகுந்த சொற்கள் மூலம் நாம் செலுத்தும் காலை வழிபாடு உயர்ந்தது.

கடமைகள் எல்லாம் முடிந்த மாலையில் மீண்டும் இறைவனை வணங்க வேண்டும். நாள் முழுவதும் நாம் செய்த செயல்களை அந்த நேரத்தில் நம் நினைவின் விளிம்பிற்குக் கொண்டு வந்து திரும்பிப் பார்ப்போம். அப்பொழுது வணங்குவோம். "பரம்பொருளே! நாள் முழுவதும் கடமைகளுக்கிடையே நாங்கள் அலைந்து திரிந்தபோது எங்களுடன் வந்து, தவறான வழிகளிலிருந்து எங்களைக் காத்து வழிகாட்டிய பெருந்தெய்வமே! உனக்கு நன்றி செலுத்துகிறோம்".

க டவுளைப் பூசிக்கும் அன்பர்களுடைய மனம் அவரவர்களுடைய பரிபாகத்திற்கு ஏற்பப் பல்வேறு நிலைகளில் பல்வேறு திருவுருவ அமைப்பில் ஈடுபடுகின்றது: ஒன்றுகிறது: உருவேற்றுகிறது: உயர்கிறது: இவ்வண்ணமாகிய இடையறாத தியானம், எல்லா இன்பங்களையும் அளித்து, ஈடேறச் செய்கிறது. விநாயகப் பெருமானுடைய திருவுருவமும் அன்பர்களுக்காக முப்பத்திரண்டாகப் போற்றப் பெறுகின்றது.



# பிள்ளையார் வகைகள்

1. பால கணபதி :

நான்கு திருக்கரங்களும் யானைமுகமும் உடையவர். உதிக்கின்ற செங்கதிர் போன்ற நிறம் உடையவர். குழந்தைத் திருமேனியுடையவர். வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு இவற்றை நான்கு திருக்கரங்களிலும் தாங்கியவர். இவரது துதிக்கையில் மோதகம் விளங்கும்.

2. தருண கணபதி :

எட்டுத் திருக்கரங்களையும் யானை முகத்தையும் உடையவர். கைகளில் பாசம், அங்குசம், பணியாரமாகிய மோதகம், விளாம்பழம், நாவற்பழம், ஒடிந்த தன்கொம்பு, நெற்கதிர், கரும்பின் துண்டு இவைகளையுடையவர். நண்பகல் தோன்றுகின்ற சூரியனைப் போன்ற நல்ல சிவந்த திருமேனி படைத்தவர்.

3. பக்தி கணபதி :

சரத்காலத்து நிறைமதி போன்ற வெண்ணிறம் படைத்தவராக தேங்காய், மாம்பழம், வாழைப்பழம், பாயஸ பாத்திரம் இவற்றை நான்கு திருக்கரங்களில் ஏந்தி, யானைமுகமும் உடையவராக விளங்குபவர்.

4. வீர கணபதி :

வேதாளம், வேல், அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடகம், சம்மட்டி, கதை, அங்குசம், நாகம், சூலம், குந்தாலி, மழு, கொடி ஆகிய பதினாறையும் தாங்கிய பதினாறு திருக்கரங்களையும், சிவந்த திருமேனியையும், சிறிது சினந்த திருமுகத்தையும் உடையவர்.

5. சத்தி கணபதி :

செவ்வந்தி வானம் போன்ற நிறமுடையவராக, பச்சைநிற மேனியளாகிய தேவியைத் தழுவிக்கொண்டு இருப்பவர். ஒருவருக்கொருவர் இடுப்பில் கைகொடுத்து தழுவிக்கொண்டிருப்பது தனியழகு; பாசம், பூமாலை,

இவற்றைத் தாங்கிய திருக்கரத்துடன்அஞ்சலென்கிற அபயகரமும் உடையவர்.

**6. துவிஜ கணபதி :**

நான்கு திருக்கரங்களிலும், முறையே புஸ்தகம், அட்சமாலை, தண்டம், கமண்டலம் இவற்றைத் தரித்தவர். மின்னற் கொடிபோல விளங்குகின்ற கைவளையல்களை உடையவர், சந்திரன்போல வெண்மையானவர். நான்கு யானைமுகங்களை உடையவர்.

**7. சித்தி கணபதி :**

மாம்பழம், பூங்கொத்து, கரும்புத்துண்டு, எள்ளுருண்டை, பரசு இவற்றைத் துதிக்கையுட்பட ஐந்து கரங்களில் தரித்தவரும், பொன்கலந்த பசுமை நிறமுடையவருமாக விளங்குபவர்.

**8. உச்சிஷ்ட கணபதி :**

நீலோற்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், அட்சமாலை, இவற்றைத் தரித்தவரும், நீலநிறத்திருமேனி உடையவருமாக விளங்குபவர்.

வேறுவகை : பெண்ணின் யோனியில் துதிக்கையை வைத்தவராக காமமோகிதராக விளங்குபவர். நீலவர்ணம் உடையவர்.

**9. விக்ன கணபதி :**

சங்கு, கரும்பு வில், புஷ்பபாணம், கோடரி, பாசம், சக்கரம், கொம்பு மாலை, பூங்கொத்து, பாணம் முதலியவற்றோடு கூடிய திருக்கரங்களையுடையவரும், ஆபரணங்களை நிரம்பத் தரித்தவரும் பொன் மேனியருமாக விளங்குபவர்.

**10. க்ஷிப்ர கணபதி :**

தந்தம், கற்பகக்கொடி, பாசம், ரத்னகும்பம், அங்குசம் இவற்றை ஏந்தியவர். செவ்வரத்தம்பூப் போன்ற அழகிய மேனியர். செந்நிறமானவர்.

**11. ஏரம்ப கணபதி :**

அபயம், வரதமாகிய கைகளையுடையவர், பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம், பழம் இவற்றைத் தாங்கியவர். சிங்கவாகனத்தில் ஏறியவர். யானைமுகம் ஐந்துடையவர். பசுமை கலந்த கருமை நிறம் உடையவர்.

**12. லட்சுமி கணபதி :**

எட்டுக் கைகளிலும் கிளி, மாதுளம்பழம், கலசம், அங்குசம், பாசம், கற்பகக்கொடி, கட்கம், வரதம் இவற்றையுடையவர். அமுதப் பிரவாகம் போன்ற வெண்மை நிறத்தோடு நீலத் தாமரைப்பூவை ஏந்திய இருபெருந் தேவிமார்களோடு திகழுபவர்.

**13. மஹா கணபதி :**

மாதுளம்பழம், கதை, கரும்பு, வில், சக்கரம், தாமரை, பாசம், நீலோத்பலம், நெற்கதிர், தந்தம், ரத்னகலசம் இவற்றைத் திருக்கரங்களில் தாங்கியவர். செங்கதிர்போன்ற நிறம் உடையவர். முக்கண்ணர், பிறை முடியர், மடிமீது எழுந்தருளியிருக்கிற – தாமரையை ஏந்திய தேவியாற் சுவையோடு தழுவப்பெற்றவர்.

**14. விஜய கணபதி :**

பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவைகளைத் தரித்தவர். பெருச்சாளி வாகனத்தில் ஏறியிருப்பவர். செந்நிறமானவர்.

**15. நிருத்த கணபதி :**

இவர் கூத்தாடும் பிள்ளையார் எனப்பெறுவர். மோதிரங்களணிந்த விரல்களையுடைய கைகளால் பாசம், அங்குசம், அபூபம், கோடரி, தந்தம் இவைகளைத் தரித்தவர். பொன்போன்ற நிறமுடைய திருமேனியர். கற்பக விருட்சத்தினடியில் எழுந்தருளியிருப்பவர்.

**16. ஊர்த்துவ கணபதி :**

நீலப்பூ, நெற்பயிர், தாமரை, கரும்புவில், பாணம், தந்தம் இவற்றையுடையவர். பொன் வண்ணர். பச்சைநிற மேனியோடு விளங்குகின்ற தேவியைத் தழுவியிருப்பவர்.

**17. ஏகாட்சர கணபதி :**

செந்நிறமானவர், செம்பட்டாடையர், செம்மலர் மாலைய, பிறை முடியர், முக்கண்ணர், குறுந்தாளர், குறுங்கையர். மாதுளம்பழம், பாசம், அங்குசம், வரதம் இவைதாங்கிய கரங்களையுடையவர். யானைமுகவர், பாதுமா சனத்திருப்பவர், பெருச்சாளி வாகனர்.

**18. வரகணபதி :**

செவ்வண்ணர், யானைமுகவர், முக்கண்ணர். பாசம் அங்குசங்களைத் தரித்தவர். தேன்நிறைந்த கபாலத்தை உடையவர். பிறை முடியர்.

### 19. திரயாக்ஷர கணபதி :

அசைகின்ற செவிகளாகிய சாமரையணிந்தவர். பொன்னிறமானவர். நான்கு கரங்களை உடையவர். பாசம், அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைத் தாங்கியவர். துதிக்கை நுனியில் மோதகம் உடையவர்.

### 20. க்ஷிப்ரபிரசாத கணபதி :

பாசம், அங்குசம், கல்பலதை, மாதுளம்பழம், தாமரை, தருப்பை விஷ்டரம் இவற்தைத் தரித்தவர். திருவாபரணங்களை அணிந்தவர். பேழை வயிற்றையுடையவர்.

### 21. ஹரித்திரா கணபதி :

மஞ்சள் நிறமானவர். நான்கு கரங்களையுடையவர். அவற்றில் பாசம், அங்குசம், தந்தம், மோதகம் இவற்றைத் தரித்திருப்பவர். பக்தர்கட்கு அபயமளிப்பவர்.

### 22. ஏகதந்த கணபதி :

பேழைவயிற்றுடன், நீலமேனியர். கோடரி, அட்சமாலை, லட்டு, தந்தம் இவற்றையுடையவர்.

### 23. சிருஷ்டி கணபதி :

பாசம் அங்குசம், தந்தம், மாம்பழம் இவற்றைக் கரங்களில் ஏந்தியவர், பெருச்சாளி வாகனத்தை யுடையவர். சிவந்த திருமேனியர்.

### 24. உத்தண்ட கணபதி :

நீலம், தாமரை, மாதுளம்பழம், கதை, தந்தம், கரும்புவில், ரத்ன கலசம், பாசம், நெற்கதிர், மாலை இவற்றையேந்திய பத்துக்கைகளை உடையவர். அழகிய தாமரைப்பூவை ஏந்திய பச்சைமேனியளாகிய தேவியால் தழுவப்பெற்றவர். சிவந்தமேனியுடையவர்.

### 25. ரணமோசன கணபதி :

பாசம், அங்குசம், தந்தம், நாவற்பழம், இவற்றைத் தரித்தவர். வெண்பளிங்கு போன்ற மேனியர், செந்நிறப் பட்டாடையுடுத்தியவர்.

### 26. துண்டி கணபதி :

அட்சமாலை, கோடரி, ரத்னகலசம், தந்தம் இவற்றை ஏந்தியவர்.

### 27. துவிமுக கணபதி :

தந்தம், பாசம், அங்குசம், ரத்னபாத்திரம் இவற்றைக் கையில் ஏந்தியவர். பசுநீலமேனியர் செம்பட்டாடையும், ரத்தின கிரீடமும் அணிந்தவர். இருமுகம் உடையவர்.

### 28. மும்முக கணபதி :

வலது கைகளில் கூரிய அங்குசம் அட்சமாலை, வரதம் இவற்றை உடையவர். இடது கைகளில் பாசம், அமுதகலசம், அபயம் இவற்றை உடையவர். பொற்றாமரையாஸனத்தின் நடுப் பொகுட்டில் மூன்று முகங்களோடு எழுந்தருளியிருப்பவர். புரசம் பூப்போன்ற சிவந்த நிறம் உடையவர்.

### 29. சிங்க கணபதி :

வீணை, கற்பகக் கொடி, சிங்கம், வரதம் இவற்றை வலது கைகளில் தாங்கியவர். தாமரை, ரத்னகலசம் பூங்கொத்து, அபயம் இவையமைந்த இடது கைகளையுடையவர். வெண்ணிறமான மேனியர். யானை முகவர். சிங்கவாகனத்தில் எழுந்தருளியிருப்பவர்.

### 30. யோக கணபதி :

யோக நிலையில், யோகபட்டம் தரித்துக் கொண்டு இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு இந்திரநீலம் போன்ற ஆடையை உடுத்திக் கொண்டு பாசம், அக்ஷமாலை, யோகதண்டம், கரும்பு இவற்றை ஏந்தி இருப்பவர்.

### 31. துர்க்கா கணபதி :

சுட்ட பசும் பொன்னிறம். எட்டுக்கை. பெரியமேனி. அங்குசம், பாணம், அட்சமாலை, தந்தம் இவைகளை வலது கைகளில் ஏந்தியவர். பாசம், வில், கொடி, நாவற்பழம் இவைகளை இடது கைகளில் உடையவர். செந்நிற ஆடையர்.

### 32. சங்கடஹர கணபதி :


இளஞ்சூரியன் போன்ற நிறத்தோடு, இடப்பாகத் தொடையில் அம்மையை உடையவர். அம்மை பசியமேனியளாக நீலப் பூவை ஏந்தியவளாக இருப்பள். வலதுகையில் அங்குசம், வரதம் உடையவர். இடதுகையில் பாசம், பாயசபாத்திரம் ஏந்தியவர். செந்தாமரைப் பீடத்தில் நிற்பவர். நீலநிறமான ஆடையணிந்தவர்.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும்–மண்ணிற்கும்–நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.


- கபிலதேவநாயனார். -

நன்றி:- கணபதி
*திருவாவடுதுறை ஆதீனம்*

# 32 கணபதிகள்





பால கணபதி




பக்தி கணபதி

ஸித்தி கணபதி







சக்தி கணபதி




உச்சிஷ்ட கணபதி




ஷிப்ர கணபதி




விஜய கணபதி




ஸ்ருஷ்டி கணபதி




ருணமோசன கணபதி




டுண்டி கணபதி




த்விமுக கணபதி




யோக கணபதி




ஏகதந்த கணபதி




ஹேரம்ப கணபதி




ந்ருத்த கணபதி




ஹரித்ரா கணபதி




தருண கணபதி




வீர கணபதி




த்விஜ கணபதி




விக்ந கணபதி






லக்ஷ்மீ கணபதி




மஹா கணபதி

ஏகாக்ஷர கணபதி







வர கணபதி




த்ரயாக்ஷர கணபதி




க்ஷிப்ரப்ராஸாத கணபதி



உத்தண்ட கணபதி




த்ரிமுக கணபதி



ஸிம்ஹ கணபதி




துர்கா கணபதி



ஸங்கடஹர கணப

# பாரதி போற்றிய கணபதி

மேன்மைப் படுவாய் மனமே கேள்
விண்ணினடிமுன் விழுந்தாலும்
பான்மை தவறி நடுங்காதே
பயத்தாலேதும் பயனில்லை
யான் முன்னுரைத் தேன் கோடி முறை
இன்னும் கோடிமுறை சொல்வேன்
ஆன்மாவான கணபதியின்
அருளுண்டச்சமில்லையே!
அச்சமில்லை, அழுங்குதலில்லை.
நடுங்குதலில்லை நாணுதலில்லை
பாவமில்லை பதுங்குதலில்லை
ஏது நேரினும் இடர்ப்பட மாட்டோம்
அண்டஞ் சிதறினாலஞ்ச மாட்டோம்
கடற் பொங்கி எழுந்தாற் கலங்க மாட்டோம்.
யார்க்கு மஞ்சோம் எதற்கு மஞ்சோம்
எங்கு மஞ்சோம் எப்பொழுது மஞ்சோம்
வானமுண்டு, மாரியுண்டு
ஞாயிறும் காற்றும் நல்ல நீரும்
தீயுமண்ணு திங்களு மீன்களும்
உடலு மறிவு உயிருமுளவே
தின்னப் பொருளும் சோந்திடப் பொண்ணும்
கேட்கப் பாட்டும் காண நல்லுலகும்
களிந்துரை செய்யக் கணபதி பெயரும்
என்றுமிங்குளவாம், சலித்திடாய் ஏழை
நெஞ்சே வாழி! நேர்மையுடன் வாழி
வஞ்சகக் கவலைக் கிடங் கொடேல் மன்னோ
தஞ்சமுண்டு சொன்னேன்
செஞ்சுடர்த் தேவன் சேவடி நமக்கே!
நமக்குத் தொழில் கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சோராதிருத்தல் உமைக்கினிய
மைந்தன் கண நாதன் நம் குடியை வாழ்விப்பான்
சிந்தையே யிம் மூன்றுஞ் செய்
செய்யும் கவிதை பராசக்தியாலே செய்யப்படுங்காண்
வையத்தைக் காப்பவ ளன்னை சிவசக்தி வண்மையெலாம்
ஜயத்தி லுந்துரி தத்திலுஞ் சிந்தியழிவதென்னே.
பையத் தொழில்புரி நெஞ்சே கணாதி பன் பக்தி கொண்டே.



மகாகவி பாரதியாரின் தெய்வீகப் பாடல்களில் தலை சிறந்தது 'விநாயகர் நான்மணி மாலை'! அந்தப் பாடலை விடாமல் படித்து மனப்பாடம் செய்தால் முழுமையான மனிதன் ஆகலாம். இதைப் படித்தால் மனிதநேயம், அச்ச மின்மை, விடா முயற்சி, தன்னம்பிக்கை, நோயற்ற வாழ்வு, விடுதலை வேட்கை, செய்தொழிலில் ஊக்கம், மன அமைதி, சரணாகத மகிமை இவை எல்லாம் உண்டாகும். பாடலில் ஒரு பகுதி:

ஓம் வக்ரதுண்டாய வித்மஹே லம்போ தராய தீமஹீ
தந்நோ தந்தி பிரசோதயாத்

ஸ்ரீ கணேச காயத்ரீ

"நமது வல்வினைகளை வேரறுக்கும் வல்லான்" விநாயகப் பெருமான். பக்தர்களின் ஆதர்ச தெய்வம் விநாயகர். எளிமையானவர். கோபுரத்திலும் எழுந்தருளுவார்; வெறும் கூரை கூட இல்லாத அரச மரத்துத் தண் நிழலிலும் தரிசனம் தருவார்.

மாமேருவை ஏடாக்கி, தமது தந்தத்தை எழுது கோலாக்கி, வேத வியாசருக்கு ரத்னாகரம் எனும் மகாபாரதக் களஞ்சியத்தைத் தந்தருளுளிய பேரருளாளர்.

கணபதி அக்ரஹாரம் எனும் தலம் காவிரி நதியின் வடகரையில் கும்பகோணம், திருவையாறு பேருந்து வழித் தடத்தில் அமைந்துள்ளது.

இவ்வூரில் விநாயக சதுர்த்தி உத்ஸவம் மிகச் சிறப்பாகப் பதினாறு தினங்கள் நடைபெறும்.

சதுர்த்திக்கு முதல் நாள் ரதோத்ஸவம். விநாயக சதுர்த்தியன்று காலை ஸ்ரீமகா கணபதிக்கு விசேஷ அபிஷேகம், பின்னர் தீர்த்தவாரி, இரவு கொடியிறக்கம், சுவாமி புறப்பாடு என நடைபெறும். இந்த உத்ஸவம் பக்தர்களுக்குப் பேரின்பம் தரும் கொண்டாட்டமாகும்.



# விநாயகருக்குரிய விரதங்கள்

விநாயகப் பெருமானின் சேவடியைப் போற்றிப் பணிந்து தொடங்கும் அனைத்துப் பணிகளும் சிறக்கும். விளையாட்டில் கூட முதலில் ஆடத் தொடங்கும்பொழுது பிள்ளையார் ஆட்டம் என்றுதான் சொல்லி ஆரம்பிக்கின்றோம். அதேபோல் எழுத ஆரம்பிக்கும்போதும் 'உ' என்று பிள்ளையார் சுழி போடுகின்றோம்.

விநாயக சதுர்த்தியின் போது நாம் மண்ணினால் விநாயகர் செய்து பூஜிக்கின்றோம். மறுநாள் நீரில் பிள்ளையாரை இறக்கி விடுகின்றோம்.

இந்த விநாயகர் பூஜையை கணபதி அக்ரஹாரத்தைச் சேர்ந்த பக்தர்கள் வேறு விதமாகக் கொண்டாடுகின்றனர்.

பொதுவாக விநாயக சதுர்த்தியன்று மண்ணினால் பிள்ளையார் செய்து வீட்டில் வைத்துப் பூஜிப்பது வழக்கம். ஆனால் இவ்வூரில் அந்த வழக்கம் கிடையாது.

தங்கள் இல்லத்திலேயே, கொழுக்கட்டை போன்ற நிவேதனப் பொருட்களைச் செய்து எடுத்துக் கொண்டு, ஆலயத்திற்குச் சென்று ஸ்ரீ மஹாகணபதிக்கு நிவேதனம் செய்வார்கள். அவ்வூரைச் சொந்த ஊராகக் கொண்டு, வேறு ஊர்களில் குடியிருப்பவர்கள் விநாயக சதுர்த்தியன்று ஸ்ரீ மகாகணபதி படத்திற்குத்தான் நிவேதனம் செய்வார்கள்.

கணபதி அக்ரஹாரத்திலுள்ள 'மகா கணபதி' அகஸ்திய முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, கௌதம முனிவரால் பூஜிக்கப்பெற்றதாக ஸ்தல புராணம் கூறுகிறது. தன்னை அண்டியவர்களுக்குச் சகல சௌபாக்கியங்களையும் அளிக்கும் ஸ்ரீமகாகணபதி தாள் பணிவோம்! வாழ்வில் நல்ல துணிவு பெறுவோம்.

நாம் தவறான காரியங்கள் செய்வதால் நம் மீது சில சாபங்கள் விழுவதுண்டு. இவற்றைப் போக்குவதற்கு கிருஷ்ண பட்சத்தில் சங்கடஹர சதுர்த்தி பூஜை செய்தால் சாபம் போகும் என்பது ஐதீகம்.

சதுர்த்தி விரதம் இருந்து, சமந்தக மணியின் சரிதத்தைப் பாராயணம் செய்வது விநாயகருக்கு மிகவும் விருப்பமானதாகும்.

சரிதம் முழுமையும் பாராயணம் செய்ய இயலாதவர்கள், கீழ்க்கண்ட இரண்டு வரிகளை மட்டுமாவது சொல்லலாம்:

ஸிப்ம்ஹ: ப்ரஸேதம் அவதீத ஸிம்ஹோ ஜாம்பவதா ஹதா
ஸுகுமாரக மரோதீ: தவ ஹ்யேஷ ஸ்யமந்தக:

"சிங்கத்தைக் கொன்று அது பிரஸேனனைக் கொன்று பறித்த சமந்தக மணியை எடுத்தார் ஜாம்பவான். ஸுகுமாரா! அழாதே, சமந்தக மணி உனக்குத்தான்" என்று சாம்பன் மனைவி சாம்பவதி குழந்தையிடம் சொல்கின்றாள்.

சந்திரனின் நான்காம் பிறையைப் பார்க்கக் கூடாது என்று ஒரு நம்பிக்கை.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் நான்காம் பிறையைப் பார்த்ததனால் சமந்தக மணியைத் திருடிவிட்டார் என்ற அபாண்டப் பழியை ஏற்றுக் கொண்டவரானார். அதற்குப் பரிகாரம் தேடி நாரதரின் ஆலோசனையைக் கேட்டார். ஸ்ரீ கிருஷ்ண பகவான், நாரதர் கூறியபடி கிருஷ்ண பக்ஷத்தில் 'சங்கடஹர சதுர்த்தி விரதம் இருந்து சாப விமோசனம் பெற்றார் என்று புராணம் கூறுகிறது.

விநாயகருக்கு உகந்த விரதங்கள் ஆறு. அந்த ஆறும் நமக்கு மன ஆறுதல் தருவன.

1. சதுர்த்தி விரதம்
2. குமார சஷ்டி விரதம்
3. சித்தி விநாயக விரதம்
4. செவ்வாய்க்கிழமை விரதம்
5. வெள்ளிக்கிழமை விரதம்
6. சங்கடஹர சதுர்த்தி விரதம்.

## 1. சதுர்த்தி விரதம்

ஆவணி மாதம் விநாயக சதுர்த்தியில் தொடங்கி, புரட்டாசி மாதம் சுக்கிலபட்ச சதுர்த்தி வரை அனுஷ்டிக்கப்படும் விரதம் ஆகும். இவ்விரதத்தை முருகன், உமாதேவி, நளன், சந்திராங்கதன், மன்மதன், ஆதிசேஷன் ஆகியோர் அனுஷ்டித்து நற்பலன் எய்தினர்.

## 2. குமார சஷ்டி விரதம்

குமார சஷ்டி விரதத்தைப் பிள்ளையார் நோன்பு என்றும் கூறுவர்.

கார்த்திகை மாதம் கிருஷ்ண பட்சப் பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்கில பட்ச சஷ்டி திதி வரை 21 நாட்கள் அனுஷ்டிக்கப்படும் விரதம் ஆகும்.

விரதம் இருப்பவர் 21 இழையினால் ஆன நூலைக் காப்பாக அணிவர். ஆண்கள் வலது கையிலும், பெண்கள் இடது கையிலும் அணிந்து கொள்ள வேண்டும்.

## 3. சித்தி விநாயக விரதம்

புரட்டாசி மாதம் சதுர்த்தியில் அனுஷ்டிக்கப்படும் விரதத்திற்கு சித்தி விநாயக விரதம் என்று கூறப்படுகிறது.

இந்த விரதத்தைப் பற்றி பிரகஸ்பதி என்ற முனிவர் கூறியுள்ளார்.

பஞ்ச பாண்டவர்களில் மூத்தவரான தரும புத்திரரால் அனுஷ்டிக்கப்பட்ட விரதம் ஆகும். இந்த சுக்கில பட்ச சதுர்த்தியில் சந்திர தரிசனம் செய்யக் கூடாது.

இந்த விரதத்தின் போது விநாயகர் அகவல், விநாயகர் அஷ்டோத்திரம் படிக்க வேண்டும். முடியாதவர்கள் "ஓம் கம் கணபதீ நம:" என்ற விநாயகரின் மூலமந்திரத்தையோ அல்லது "ஓம் விக்னேஷ்வராய நம:" என்னும் விநாயகரின் மந்திரத்தையோ 108 முறை ஜபம் செய்து வழிபட வேண்டும்.

## 4. செவ்வாய்க்கிழமை விரதம்

இந்த விரதம் தை மாதம் அல்லது ஆடி மாதம் செவ்வாய்க் கிழமையில் தொடங்கி ஒரு வருடம் வரை ஒவ்வொரு செவ்வாக்கிழமையும் அனுஷ்டிக்கப்படும் விரதம் ஆகும்.

பரத்துவாச முனிவர் விநாயகப் பெருமானின் பரம பக்தர். அவர் நர்மதை நதியில் நீராடும்போது தேவ மங்கை ஒருத்தியிடம் மனதைப் பறி கொடுத்தார். அதன் காரணமாக செந்தணல் போல் ஒரு குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தையைப் பூமாதேவி எடுத்து வளர்த்தாள். குழந்தை செந்நிறமாக இருந்ததால் 'அங்காரகன்' என்று பெயர் பெற்றான்.

பரத்துவாச முனிவரைப் போலவே மகன் அங்காரகனும் விநாயகரின் மீது பக்தி கொண்டான். விநாயகரின் பேரருளால் கோள்களில் ஒருவனாகத் திகழும் பேறு பெற்றான்.

அத்துடன் செவ்வாய்க்கிழமை, தன்னுடைய நாளில் வரும் சதுர்த்தி திதியில் விநாயகரை வழிபடுவோரின் பிணிகளைத் தீர்க்க வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டான். அதன் காரணமாகத் தான் செவ்வாய்க்கிழமை விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

### 5. வெள்ளிக்கிழமை விரதம்

வெள்ளிக்கிழமை விரதத்தை வைகாசி மாதம் சுக்கில பட்சம் முதல் வெள்ளிக்கிழமை தொடங்கி, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் ஓர் ஆண்டுவரை அனுஷ்டிக்க வேண்டும்.

### 6. சங்கடஹர சதுர்த்தி விரதம்


சங்கடஹர சதுர்த்தி விரதம் அனுஷ்டித்தால் நினைத்த காரியம் கூடும். வீண்பழி அகலும். பகைவர்களும் நண்பர்கள் ஆவார்கள். தீவினை அகலும். மனச்சுமை நீங்கும். எல்லாத் தோஷங்களும் நீங்கும்.

ஒவ்வொரு மாதமும் தேய்பிறையில் வரும் கிருஷ்ண பட்ச சதுர்த்தி அன்று இருக்கும் விரதத்தைத்தான் சங்கடஹர சதுர்த்தி விரதம் என்றும் சங்கடாஷ்ட ஹரண சதுர்த்தி விரதம் என்றும் கூறுகின்றனர்.

சங்கடம் என்றால் துன்பம் என்றும், ஹர என்றால் ஒழிப்பது என்றும், சங்கடஹர என்றால் சங்கடங்களில் இருந்து விடுதலை பெறுதல் என்பதுமாகும்.

## திருப்புகழ்

*கைத்தல நிறைகனி அப்பமொடு அவல்பொரி*
*கப்பிய கரிமுகன் அடிபேணிக்*
*கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்*
*கற்பகம் எனவினை கடிதேகும்*
*மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்*
*மற்பொரு திரள் புய மதயானை*
*மத்தள வயிறனை உத்தமி புதல்வனை*
*மட்டவிழ் மலர்கொடு பணிவோனே*
*முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்*
*முற்பட எழுதிய முதல்வோனே*
*முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்*
*அச்சது பொடிசெய்த அதிதீரா*
*அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்*
*அப்புறம் அதனிடை இபமாகி*
*அக்குற மகளுடன் அச்சிறு முருகனை*
*அக்கண மணம்அருள் பெருமானே.*



அம்பிகையும் ஈசுவரனும் மகிழ்ச்சியடைந்தால் சர்வலோகங்களும் மகிழ்ச்சி அடையும். அம்மையப்பனை ஆனந்திக்கச் செய்யும். ஆறாத அன்பின் ஊற்றுதான் ஆனைமுகக் கடவுள்.

ஒரு நாள் அன்னை தந்தை முன் முகத்தைத் தொங்கப் போட்டு வந்தார், கணேசன்.

"முருகன் தொல்லை தாங்க முடியலை; என் காதைச் சும்மாக்கிள்ளறான்" என்றார்.

"ஏண்டா, அண்ணாவைக் கிள்ளினாய்?" என்று கந்தனைக் கடிந்தார் ஈசுவரன்.

தேவி விக்நேசுவரனை வாரி அணைத்துக் கொண்டாள். அவள்தான் உலகில் புதுமணம் செய்து கொண்டுள்ள தம்பதியருக்கெல்லாம் இன்பமான இல்லறத்தை வழங்கவேண்டும் என்று பாடி இருக்கிறார் சிவப்பிரகாச சுவாமிகள்.

*அரவனிடத்திலே ஐங்கரன் வந்துதான்*
*ஐயஎன் செவியை மிகவும்*
*அறுமுகன் கிள்ளினான் என்றே சிணுங்கிடவும்*
*அத்தன்வே லவனை நோக்கி*
*விரைவுடன் வினவவே அண்ணன்என் சென்னியில்*
*விளங்குகண் எண்ணினன்என*



# கணபதி

*ரா. கணபதி*

"அண்ணாமட்டும் என் கண்களை எண்ணலாமோ?" என்று திருப்பிக் குற்றம் சாட்டினார் ஆறுமுகன்.

"கணபதி, நீ செய்த குறும்பை மறைத்துத் தம்பியை மட்டும் குற்றம் சொன்னாயே, நியாயமா?" என்று வினவினார் ஈசன்.

"நான் ஒன்றும் முதலில் அவன் கண்ணை எண்ணவில்லை. அவன் என் துதிக்கையின் நீளத்தை அளந்து முழம் போட்டான். பின்தான்...."

ஈசுவரன் சிரித்துவிட்டார். மகிழ்ச்சியில் திளைத்த தேவியைப் பார்த்து, "பார், உன் அருமைக் குழந்தைகளை" என்றார்.

*வெம்பிடும் பிள்ளையைப் பார்த்து நீ அப்படி*
*விகடமேன் செய்தாய்என*
*மருவும்என் கைந்நீள முழமளந் தான்என்ன*
*மயிலவன் நகைத்து நிற்க*
*மலையரையன் உதவவரும் உமையவளை நோக்கிநின்*
*மைந்தரைப் பாராய் எனக்*
*கருதரிய கடலாடை உலகுபல அண்டம்*
*கருப்பமாய்ப் பெற்ற கன்னி*
*கணபதியை அருகழைத்து அகமகிழ்வு*
*களிப்புடன் உமைகாக்கவே. (கொண்டனள்)*

அகிலாண்ட கோடிகளைப் பெற்றவள்தான் கணேசனையும் பெற்றவள். அகிலாண்டமுமே அவரது உதரமாக உருண்டு திரண்டிருக்கிறது. அவரைத் தேவி அணைந்தால். அவர் முகமாக அவளது காப்பு உலகுக்குப் பாயும்.

"விகடமேன் செய்தாய்?" என்று விநாயகரைச் சிவபெருமான் கேட்டதாகக் கவிதை கூறுகின்றது. விநாயகன் பெயரே விகடன். அவர் எப்படி விகடம் பண்ணுவார்? ஆனைமுகன் என்றும், பிரசன்ன வதனன் என்றும் தனிப் பெயர் பெற்ற கஜமுகன் பிறர் முகத்திலும் அகத்திலும் மலர்ச்சியை உண்டுபண்ணுவதே முதற் தொழிலாகக் கொண்டவர். சிரிப்பில் பிறந்த அவர் எங்கும் சிரிப்பை வளர்த்து ஆனந்தம் பரப்புபவர்.

சிரிப்பில் பிறந்தவர்தான் அவர். ஈசனும் அம்பாளும் ஒருவரையொருவர் நோக்கி மென்னகை புரிந்து கொண்டனர். அந்த மந்தஸ்மிதத்தில் உருவானவர் விநாயகன்.

தந்தை தாயிடமே விகடம் செய்து அவர்கள் பிணங்கியபோது சேர்த்து வைத்திருக்கிறார் அவர்.

ஒருமுறை தேவி ஐயனிடம் ஊடியிருந்தாள். அப்போது கணநாதன் ஏதோ வேடிக்கை செய்ய, அன்னை, தந்தை இருவருமே அவரிடம் வந்து முத்தமிட்டனர். சரேலெனக் கஜானனன் தனது ஆனைத் தலையை விலக்கிக் கொள்ள பெருமானும் அன்னையுமே பரஸ்பரம் தீண்டிக் கொண்டுவிட்டனர். இந்த இரகசியத்தை ஒரு சம்ஸ்கிருதக் கவி அம்பலப் படுத்தியிருக்கிறார்.

இன்னொரு சம்ஸ்கிருதக் கவி இதே போல் இன்னொரு குடும்ப சமாசாரத்தைப் போட்டு உடைத்திருக்கிறார்.

ஸ்வாமியிடம் தேவி படுகோபமாயிருந்தாள். வெளி யுலகத்துக்குத் தெரியாது என்று நினைத்துச் சிவனார் தேவிக்கு நமஸ்காரமே செய்துவிட்டார். அப்போதும் அம்பாளின் பிகு தணியவில்லை. பிள்ளை பார்த்தது. தாமரைக் கிழங்கு என்றால் ஆனைக்கு மிகவும் விருப்பம். சிவபெருமான் தலையில் முளைத்திருந்த நிலாக் கீற்றைப் பார்த்தால் தாமரைக் கிழங்கைப் போலிருந்தது. உடனே தும்பிக்கையை வளைத்து நிலாவைச் சடை முடியிலிருந்து இழுக்கத் தொடங்கிவிட்டார் ஐங்கரன். சிவனார் படும் பாட்டைக் கண்டு தேவி சிரித்தே விட்டாள்; மனமும் இரங்கிவிட்டாள்.

பிரம்மசரியத்துக்கு எவ்வளவு கனம் உண்டு என்பதைக் காட்டத்தான் ஸ்தூல காயராக இருக்கிறார் கணபதி. காமமே எழாத குழந்தை அவர். லோக பிதாவான அவரை அதனால்தான் பிள்ளை, பிள்ளையார் என்றே சொல்கிறோம். கட்டைப் பிரம்மசாரியான போதிலும் தம்பதிகளின் பிணக்குகளை அவர் எப்படித் தீர்த்து வைக்கிறார் பாருங்கள்! அப்படி ஒரு நல்ல உள்ளம் விநாயகனுடையது. தமது வழி ஒன்றாக இருந்தாலும் வேறு வழிக்காரர்களிடமும் அநுதாபம் அவருக்கு உண்டு. முருகப் பெருமானுக்கு, வள்ளியம்மை இடமே கொடுக்காதபோது, மத்தகஜமாக ஓடி வந்து அவளைப் பயமுறுத்தித் தம்பியின் தோளிலே சேர்த்தவரல்லவா?

திருமாலுக்கும் விநாயகருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இது உமையின் சோதரர் திருமால் என்பதோடு நின்றுவிடவில்லை. விநாயகரது சக்திகளான சித்திக்கும் புத்திக்கும் திருமால்தான் பாட்டனார். சித்தியும் புத்தியும் –அதாவது ஆற்றலும் அறிவும். ஞானத்தோடு சேருவதே இத் திருமணம். இதனால் ஆன்ம லாபமும் ஆன்ம க்ஷேமமும் உண்டாகும். இதையே புராணங்கள் கூறுகையில் விநாயகருக்கு லாபம் என்றும் க்ஷேமம் என்றும் புத்திரர்கள் இருப்பதாகக் கூறும். ஆற்றல்களின் உறைவிடம் விநாயகர் என்பதால் அவரை வல்லபை நாயகனாகவும் சொல்லுவார்கள்.

விஷ்ணுவிடம் உள்ள தொடர்பை விட்டுவிட்டோமே! விநாயகப் பெருமானின் பிறந்த நாளை அம்பாள் ஆண்டு தோறும் கொண்டாடி மகிழ்வாள். அப்போது



விஷ்ணுவைப் போலவே சியாமள நிறமும் பீதாம்பரமுமாக விசுவேதேவன் என்கிற பக்தன் வருகிறான். தேவி அவனையும் விருந்துக்கு அழைக்கிறாள். விஷ்ணு தரிசனம் இல்லாமல் உண்ணமாட்டேன் என்கிறான் விசுவேதேவன். அப்போது விநாயகனே அவனுக்கு விஷ்ணுவாகத் தரிசனம் தருகிறார். அவனது பேத புத்தி நீங்குகிறது.

எல்லாரிடமும் விகடம் செய்யும் விநாயகர், விஷ்ணுவை விகடம் செய்ய வைத்ததும் உண்டு.

சகோதரியின் வீடான கயிலைக்கு வந்திருந்தார் கமலக்கண்ணன். "மாமா, என்ன கொண்டு வந்தாய்?" என்று கேட்டார் பிள்ளையார்.

விஷ்ணுவுக்கு வெட்கமாகி விட்டது. "மறந்தேன் கண்ணே, வெறுங்கையோடு வந்துவிட்டேன்" என்றார் நாராயணன்.

"வெறுங்கையா? சக்கரந்தான் இருக்கே!" என்று கூறிச் சக்கரத்தை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு விட்டார் விக்நேசுவரர்.

"சக்கரத்தைத் தின்றுவிடாதே! அது வாயை அறுத்து விடும்" என்று விஷ்ணு அலறினார். அம்பாளும் அலறினாள். "சரி, சக்கரத்தை உண்பதில்லை. வாயில் வெறுமே அடக்கிக் கொண்டிருக்கேன்" என்றார் கணபதி. விஷ்ணு முகத்தில் ஈயாடவில்லை.

"எனக்கு வாய் அறுந்துபோகும் என்பதற்காக மாமா அலறவில்லை. சக்கரம் இல்லாமல் தம் சக்தி போய்விடுமே என்றுதான் அலறுகிறார். நான் சக்கரத்தை உமிழமாட்டேன்" என்று விடாப் பிடியாகக் கூறிவிட்டார் விநாயகர்.

இந்தப் பிள்ளையை அதட்டி உருட்டிப் பண்டத்தை வாங்கமுடியாது என்று மாதவனுக்குத் தெரியும்; யுக்தி செய்தார். தமது நான்கு கரங்களாலும் காதுகளைப் பிடித்துக்கொண்டு ஆடினார். விநாயகர் மலைபோன்ற தேகம் குலுங்கச் சிரித்தார். வாயிலிருந்து சக்கரம் கீழே விழுந்தது.

விஷ்ணு செய்த விளையாட்டிலிருந்து தான் தோப்புக்கரணம் போடும் பழக்கம் தோன்றியது. 'தோர்பி:' என்றால் கைகளால் என்று பொருள். 'கர்ணம்' என்றால் காது. கைகளால் காதைப் பிடிப்பது 'தோர்பி: கர்ணம்– அதுவே தோப்புக்கரணமாக மருவிவிட்டது. விஷ்ணுவின் பாரிஷதரான விஷ்வக்ஸேனர் இவ்வாறு தோப்புக்கரணம் போட்டதாகவும் கதை உண்டு. விகடம் செய்தபின் சக்கரத்தைத் தந்த விநாயகர் காஞ்சி குமரக் கோட்டத்தில் குடிகொண்டிருக்கிறார். 'விகடச் சக்கரன் மெய்ப்பதம் போற்றுவோம்' என்று இவரைக் கச்சியப்பர் கந்தபுராணத்தில் துதிக்கிறார்.

விஷ்வக்ஸேனரே வைஷ்ணவ விநாயகர் தான் எனலாம். விஷ்ணு கணங்களின் அதிபதியான விஷ்வக்ஸேனரும் 'கணபதி' தானே? அவருக்குத் தும்பிக்கை உண்டு. ஸ்ரீரங்கத்தில் 'தும்பிக்கை ஆழ்வான்' என்றே அவரைக் கோயில் எடுத்துக் கும்பிடுகிறார்கள்.


ஸ்ரீ ரங்கநாதன், ஸ்ரீரங்கத்தில் இடம் கொள்ளவும் விநாயகர்தான் காரணபுருஷர். ஸ்ரீராமனிடமிருந்து ரங்கநாத விக்கிரகத்தைப் பெற்றுக்கொண்டு விபீஷணன் இலங்கை திரும்பிக்கொண்டிருந்தான்.

'பூமியில் எங்கு வைத்தாலும் அங்கு அவ்விக்கிரகம் நிலைத்து நீண்டுவிடும்' என்று விபீஷணனிடம் ராமன் சொல்லியிருந்தார்.

விநாயகருக்கு ரங்கநாத விக்கிரகம் இந்தியாவை விட்டு இலங்கை செல்வது பிடிக்கவில்லை. ஆனால் மன்னன் ராமன் உத்தரவுக்கு மாறாக அவரால் ஏற்றுமதித் தடை செய்ய முடியாதே! அதனால் ஒரு தந்திரம் செய்தார். பிரம்மச்சாரிச் சிறுவனாக விபீஷணன் முன் தோன்றி, 'நாராயணப் பிரதிமையை நான் தூக்கி வருகிறேன் என்றார். "அப்படியே செய். விக்கிரகத்தை ஒருபோதும் கீழே மட்டும் வைத்துவிடாதே" என்றான். "அப்படியே. ஆனால் எனக்குக் கை இற்றுப் போய்விட்டால் உங்களை மூன்று முறை கூப்பிடுவேன். நீங்கள் அதற்குள் வந்து வாங்கிக் கொள்ளாவிட்டால் விக்கிரகத்தைக் கீழே வைத்துவிடுவேன்" என்றார் பிள்ளையார். விபீஷணன் ஒப்புக் கொண்டான்.

அகண்ட காவேரியின் மத்தி வந்ததும் விபீஷணன் அநுஷ்டானத்துக்கு அமர்ந்தான், "சரியான சமயம்" என்று குதூகலித்த விநாயகர், "மகாராஜா, கைபோச்சு, விக்கிரகத்தைச் சட்டென்று வாங்கிக்கொள்ளுங்கள். மகாராஜா, மகாராஜா!" என்று மூன்று முறை குரல் கொடுத்துவிட்டு, விபீஷணன் ஆசமனம் செய்து எழுந்து வருவதற்குள் விக்கிரகத்தைக் கீழே வைத்துவிட்டார். ஸ்ரீரங்கநாதர் நீண்டு வளர்ந்தார். அவ்விடமே அவருக்கு இருக்கையாகிவிட்டது.

விபீஷணன் விநாயகரைப் பிடிப்பதற்காகத் துரத்தினான். விநாயகர் மலைக்கோட்டை உச்சியில் ஏறி உச்சிப் பிள்ளையாராக உட்கார்ந்துவிட்டார். அப்போது



விபீஷணன் குட்டியதால் உண்டான வடு இன்னும் உச்சிப்பிள்ளையார் தலையில் இருக்கின்றது.

அதற்குப் பரிகாரமாகத்தான் இன்றும் நாம் விநாயரைக் கண்டவுடன் குட்டிக் கொள்கின்றோம்.

தத்துவம் அறிந்தவர்களோ, சிரஸில் உள்ள சகஸ்ரார கமலத்தில் துளும்பும் ஆனந்தத் தேனை நம் நாடிகளில் பாய்ச்சிக் கொள்வதற்குத்தான் அக்கமலத்தை ஆட்டுமுகமாகப் பொட்டுக்களில் குட்டிக் கொள்கிறோம் என்பார்கள்.

சிரசின் உச்சியில் உள்ள ஆத்ம ஸ்வரூபமே தாம் என்பதை உணர்த்தவே உச்சிப் பிள்ளையாராக அவர் அமர்ந்திருக்கிறார். ஆத்ம ஸ்வரூபம்; ஜீவர்களைத் தோற்றுவிக்கும் ஆதாரமும் அவரே, அப்போது அவரை மூலாதார கணபதி என்கிறோம்.

சிறந்த விநாயக பக்தனான காசிராஜனின் அரண்மனைக்குக் குழந்தை விநாயகர் செல்லுகிறார். அவரைத் தடுமாறி விழச்செய்யும் நோக்கத்துடன், அசுரன் ஒருவன் அரண்மனை வாயிற்படிக் கல்லுக்குள் ஒளிந்துகொண்டிருந்தான்.

அதனருகே வந்ததும் குழந்தை நின்றது. காசி மன்னனுக்கும் காசினி மன்னனான பெருமானுக்கும் பலர் பூரண கும்பம் கொண்டு வந்திருந்தனர்.

"அந்தத் தேங்காய்களையெல்லாம் இந்தப் படிக்கல்லில் உடையுங்கள்" என்றார் பிள்ளைப் பெருமான்.

அப்படியே உடைத்தார்கள். தேங்காய் உடைந்தது; கல்லும் உடைந்தது. அசுரன் மாண்டான்.

சிதறு தேங்காய் உடைக்கும் வழக்கம் இப்படி ஏற்பட்டது. இன்னொரு வரலாறு:

"அப்பா, உன்னைத் தியாகராஜன் என்கிறார்களே! நீ எதையும் தியாகம் செய்வாயா?" என்று பரமேசுவரனைக் கேட்டார் பால விநாயகர்.

"செய்கிறேன் செல்வமே!" என்றார் சிவபெருமான்.

"எனக்கு யானைத் தலையாக இருக்கே! உன் தலையை எனக்காகத் தியாகம் செய்யேன்" என்றார் குமாரர்.

ஈசுவரன் தயங்கவில்லை. அப்படியே தம் தலையைப் பலி தந்துவிட்டார்.

கணபதி மீண்டும் அதனைத் தந்தைக்கே தந்துவிட்டார். "இந்த என் முகத்தை விட உன் ஆனை முகந்தான் வஞ்சனையில்லாத அழகடா கண்மணி" என்று பரமனும் பரிந்து கூறினார்.

முக்கண் உள்ள தேங்காய் முக்கண்ணனுக்கு ஓர் அடையாளம். எல்லா ஐசுவரியங்களையும் விநாயகருக்காகத் தியாகம் செய்ய வேண்டும் என்ற தாத்பர்யத்தில் பரமேசுவர ரூபமான தேங்காயை அவர் முன் உடைக்கிறோம். தேங்காய் அகங்காரத்தைக் குறிக்கும். கெட்டியான ஓட்டைப் பார்த்தால் தெரியவில்லையா? நம் உள்ளே உள்ள ஆனந்த இள நீரை மறைப்பது ஆணவ ஓடுதானே? ஆணவத்தை உடைத் தெறிவதற்கு அடையாளமாகத் தேங்காயை உடைக்கிறோம். ஆங்காரம் அகன்றால் ஓங்காரமாக கணபதி தோன்றுவார்.

தந்தையைத் தியாகம் செய்ய வைத்த கணநாதன் தாமுமே ஒரு தியாகி. இந்தத் தியாகத்தை ஸ்ரீ காம கோடி பெரியவரின் வாக்கில் கேட்போம்.

"ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றிலே அதிக கௌரவம் இருக்கும். கவரிமானின் கௌரவம் அதன் வாலில். மயில் என்றால் அதற்குத் தோகை விஷேசம். இதே போல் யானைக்குத் தந்தத்தில் கௌரவம். ஆனால் இந்த யானை (விநாயகர்) என்ன பண்ணிற்று என்றால் அந்தக் கொம்பில் ஒன்றையே ஒடித்து மகாபாரதத்தை எழுதிற்று. தன் அழகு, கௌரவம், கர்வம் எல்லாவற்றுக்கும் காரணமாக இருக்கிற ஒன்றைக் காட்டிலும் தர்மத்தைச் சொல்கிற ஒன்று தான் பெரிது என்பதை இந்த யானை காட்டுகிறது. தருமத்துக்காக, வித்தைக்காக எதையும் தியாகம் பண்ணிக் காட்டியிருக்கிறது" என்று தியாகியைப் போற்றுகிறார் யோகி.

வியாசர் சொல்லச் சொல்ல பாரதம் எழுதியது மட்டுமன்றி, அகத்தியர் சொல்லத் தமிழ் இலக்கணத்தையும் விக்னேசுவரன் மேரு மலையில் எழுதினாராம். இந்தச் செய்தியைத் திருப்புகழ் தெரிவிக்கிறது.

முத்தமிழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே

இதிலிருந்து விநாயகர் தமிழுக்கு மிகவும் வேண்டியவர் என்று தெரிகிறதல்லவா? 'சங்கத் தமிழ் மூன்றும் தா' என்று அவ்வை வேண்டிய தெய்வமாச்சே!

தமிழ் மறையான தேவாரம் நமக்குக் கிடைத்ததற்குக் காரணமே அவர்தாம்.

திருநாரையூரைச் சேர்ந்த நம்பி, தனது தந்தை வெளியூர் சென்றிருக்கையில் தானே பிள்ளையார் பூஜை செய்தான். நிவேதனத்தைப் பிள்ளையார் உண்டு தான் ஆகவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்தான். கல் கடவுளாயிற்று, கஜானனன், குழந்தை தந்த நிவேதனத்தை ஏற்றுத் தமிழ் தனத்தை அவனுக்கு அளித்தார். தேவாரங்கள் தில்லை ஆலயத்தில் மறைந்திருப்பதை அவனுக்கு உணர்த்தி, அவை வெளி உலகுக்கு வர வழி செய்தார். தமிழிடம் அவருக்குள்ள அன்பு எத்தகையது பார்த்தீர்களா?

தமிழ்ப் பாட்டிக்குக் கைலாகு கொடுத்துக் கைலாசம் அனுப்பிய பிரபுவும் கண நாதனே அல்லவா?

தமிழ்க் கடவுளாம் முருகனுக்கு வள்ளியுடன் மணம் முடித்த விநாயகர் அவருக்கு ஞானோபதேசம் செய்ததுண்டு என்பதை ஒரு சமஸ்கிருதக் கவிதை கூறுகிறது.

"ஐங்கரா, ஓர் ஐயம்" என்றார் பால ஸ்கந்தர். "அப்பாவும் அம்மாவும் அர்த்தநாரியாக ஒன்றாகும்போது, அப்பாவின் ஒரு பாதியும் அம்மாவின் ஒரு பாதியும் என்னவாகின்றன?" என்று கேட்டார்.

"அப்பாவின் அந்தப் பாதிதான் எல்லா ஆண்களும் ஆகிறது; அம்மாவின் அந்தப் பாதிதான் எல்லாப் பெண்களும் ஆகிறது" என்று விடை சொன்னார் வேழமுக ஞானதீபம்.

'ஓம் ஞானதீபாய நம' என்பது பிள்ளையாருக்கு ஓர் அர்ச்சனை, 'ஞானக் கொழுந்து' என்றே திருமூலர் சொல்வார்.

உபதேசம் செய்த பிள்ளையாரே தம்பிக்கு ஊர்தியும் தந்திருக்கிறார். ஆம், ஸ்கந்தனுடைய மயில் ஆரம்பத்தில் விநாயகரிடந்தான் இருந்தது. நாலு யுகங்களிலும் நாலுவிதத் தோற்றத்துடனும், நாலு வித ஊர்திகளுடனும் விளங்குவார் கணபதி.

கிருதயுகத்தில் அக்கினியில் மஞ்சள் நிறத்தவராய், பத்துக் கைகளுடன், சிம்ம வாகனத்தின் மீது விநாயகர் என்ற பெயரில் விளங்குவார். திரேதாயுகத்தில் வெண்நிறத்தராய், ஆறு கைகளுடன் மயில் வாகனத்தின்மீது மயூரேசர் என்ற பெயரில் திகழ்வார். துவாபர யுகத்தில் சிவப்பு வண்ணராக, நான்கு கரங்களுடன், மூஷிக வாகனத்தின் மீது கஜானனன் என்ற நாமம் தரித்துப் பொலிவார். கலியுகத்தில் சியாமள வர்ணராக இரு கரம் தாங்கி, குதிரைமீதமர்ந்து தூம்ரகேது என்ற பெயரில் அருள் பாலிப்பார்.

இவர்களில் மயூரேசர்தான் மயில் வாகனர். 'சசிவர்ணம்' என்ற அடை மொழி கொடுத்துப் பரமசீதளராக, பரம பாவனராகப் போற்றப்படுபவர் இவர். இவரைத்தான் சிவகணங்கள் தமக்கு அதிபதியாக்கி, கணபதி என்ற விருதை அளித்தன. ஸிந்து என்ற அரக்கனைக் கொன்று அமரேசனைச் சிறை மீட்ட பின் சித்தி – புத்தியை மணந்தவரும் இவரே. திருமணத்துக்குப் பின் தமது லோகமான ஆனந்தபுவனத்துக்குச் செல்கையில் மயூரத்தைத் தம்பி பெற முடியாமல் முன்பு பறித்துக் கொண்டு அவரைப் பழனியாண்டியாக்கியதற்கு ஈடாக, இப்போது அவரை நீலமயிலேறும் கோலக் குமரனாக்கி விட்டார்.

மூஷிகத்தை விநாயர் வாகனமாக்கிக் கொண்ட கதை அனைவர்க்கும் தெரியும். தம்மை எதிர்த்த அசுரனையே மூஷிக வடிவில் தமது திருமேனியைத் தங்குமாறு செய்தார் அவர். இதனில் பொதிந்துள்ள ஓர் உண்மையை அற்புதமாகச் சொல்கிறார் ஸ்ரீ காமகோடி பெரியவாள்:

"இவரோ யானை மாதிரி இருக்கிறார். அதற்கு நேர் விரோதமான ஆகிருதி உடையது மூஞ்சூறு. தாம் எத்தனைக்கு எத்தனை பெரிய ஸ்வாமியாக இருக்கிறாரோ அத்தனைக்கு அத்தனை சின்ன வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். வாகனத்துக்குக் கௌவரம் கொடுக்க, அதனுடைய சக்திக்கு ஏற்றபடி அதற்குச் சிரமமில்லாமல் நெட்டிப் பிள்ளையார் மாதிரி கனம் இல்லாமல் இருக்கிறார். மற்றவர்களை உபகரணமாக வைத்துக்கொண்டு

அவர்களுக்கு அந்தஸ்தை உண்டாக்கித் தரும்போதே தாம் அவர்களுக்குப் பாரமாக இல்லாமல் இருக்கிறார்".

ஒரு விரோதியை வாகனமாக்கிக் கொண்டது போலவே இன்னொரு விரோதியான கஜமுகாசுரனின் ஆனைத் தலையை ஆண்டவன் தரிப்பதும் அவரது இதய விசாலத்துக்குச் சான்றாகும்.

விநாயகரின் வாசஸ்தானமான ஆனந்த புவனத்தைச் சிறிது பார்ப்போம். அதன் பெயரே, அது சச்சிதானந்தம் வழங்கும் பரமபதம் என்பதை உணர்த்துகிறதல்லவா? ஆனந்த பூரணத்துக்கு மறு பெயரே அன்றோ மகா கணேசர்? ஆனந்தந்தானே மோதகம்? ஆன்ம நிறைவு தானே அதனுள் உள்ள பூரணம்? கருப் பஞ்சாற்றுக் கடலுக்கிடையேயுள்ள அமுதத் தீவு ஆனந்த புவனம். அங்கே பொதுவாக, கணபதியை மகாகணபதியாகவே தியானிப்பது வழக்கம். மகா கணபதியின் பீஜாக்ஷரங்களையும், அவர் தாங்கும் ஆயுதங்களையும் கண்டாலே அவரில் சகல தேவைகளும் அடக்கம் என்று புரியும். லக்ஷ்மி. அம்பிகை, மன்மதன், பூதேவி, கஜவானன் ஆகிய ஐவரது பீஜாக்ஷரங்களும் அவரது மந்திரத்தில் அடங்குவதிலிருந்து அவர் செல்வம், ஞானம், அன்பு, பொறுமை, புலனடக்கம் அனைத்தும் அருள்வார் என்கிறது. அவரது பீஜாக்ஷரம் 'கம்' என்பது. 'கம்' மென்று நறுமணம் வீசுவதாகச் சொல்கிறோம். அவர் மௌனநாதன். 'கம்' என்றால் உள்ளுக்குள் ஒரு சுமை ஏற்படும். அவர் ஆனந்த கனம். மகாகணபதியின் வலப்புறத்துக் கரங்கள் யாவும் பெண் தெய்வங்களின் ஆயுதங்களைத் தாங்குவன. சிவபெருமான் இடப் பகுதியைப் பெண்ணுக்குத் தந்ததுபோல் இவர் ஆண், பெண் இரண்டுமே என்பதைக் குறிக்கவே இடப்புறம் ஆண் யானை போல் கொம்புடனும், வலப்புறம் பெண் யானைபோல் கொம்பின்றியும் திகழ்கிறார். முழுக்கப் பெண் உருவில் 'கணேசானி' என்ற பெயரிலும் அவருக்குச் சிற்பங்கள் உண்டு.



இதேபோல் மனித இனம், விலங்கினம் இரண்டும் கலந்து, மனித உடலுடனும் யானை முகத்துடனும் விளங்கும் கணேசனை மனித முகமே கொண்ட நரமுக கணபதியாகவும் சிற்பிகள் வடித்துள்ளனர்.

திவ்விய தேஜோரூபியான கணநாதன் தலையில் பிறைமதி மிளிர, முக்கண்ணராக விளங்குவார். அவரது கன்னத்தில் வழியும் மதநீரை வண்டினங்கள் மொய்க்க வரும். அதற்காகத் தமது நீண்ட செவிகளை ஆட்டிக்கொண்டிருப்பார். இத் திருக்கோலத்தில் அவரைத் தியானிப்பதற்கு மேல் சௌந்தரியம் உண்டோ?

விநாயகனின் சௌந்தரியம் மண்டிக்கிடப்பது அவரது பேழை வயிற்றில்தான். திருப்தியின் உருவம் அந்தத் தொந்தி. அதில் ஆதிசேஷனையே அரை ஞாணாகக் கட்டியிருப்பார். குண்டலினியைக் கட்டிப் போட்ட பிரம்மசாரி என்பது இதற்குத் தாத்பரியமாயினும், புராணக் கதையும் உண்டு.

கணேசனாக மட்டுமின்றி நற்குணங்கள் யாவும் அமைந்த குணேசனாகவும் விநாயகர் ஒரு முறை அவதரித்தார். அப்போது பாதாளலோகம் சென்று வாசுகியையும் ஆதிசேஷனையும் வென்றார். வாசுகியைக் கழுத்தில் மாலையாக இட்டுக் கொண்டார். (பூணூலாகப் போட்டுக் கொண்டதாகவும் கருதி, பல ஆலயங்களில் நாக யக்ஞோபவீத கணபதியின் சிலை அமைத்துள்ளனர்.) ஆதிசேஷனை இடையில் கட்டிக்கொண்டார்.

குணேசனைப்போல் பல அவதாரம் செய்தவர் விநாயகர். பிறப்பில்லாத ஆதி கணபதியின் பிரதிமையை அம்பாள் வழிபட்டு, "எனக்குப் பிள்ளையாகப் பிற" என வேண்டிக் கொள்ள புரட்டாசி, சுக்லபட்ச சதுர்த்தியில், திங்கட்கிழமையன்று, சுவாதி நட்சத்திரமும் ஸிம்ம லக்கினமும் கூடிய திவ்விய நாளில் பிரதிமை பிள்ளையாராக உயிர் பெற்றது. அவரே குணேசன்.

வயிறு குலுங்க ஆன்ந்த நர்த்தமிடுவார் அவர். தமது பன்னிரண்டாவது மாதத்தில், கூத்தப்பிரானுடன் நாட்டியத்தில் போட்டியிட்டவர் இவர். அப்பனுடையது நளின நடனம்; பிள்ளையுடையது கம்பீர நாட்டியம்.

சீதக்களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பல இசை பாட

என்று இந்த நடனத்தில்தான் தமிழ்ப் பாட்டி தனது அகவலைத் தொடங்குகிறாள். 'கனதரம்புகனு மகிமை பதமுலு கல்லு கல்லன நுஞ்சி' என்று தியாகையர்

சுவாமிகளும் இந்த ஆனந்தச் சுமையின் அழுத்தமான நடனத்தையே அழகுற வர்ணிக்கிறார்.

பார்வதி தேவியின் அழுக்கிலிருந்து விநாயகர் தோன்றியதாகவும் கதை உண்டு. 'இது என்ன ஆபாசம்! தேவியின் உடலிலும் அழுக்கா?' என்று முதலில் அருவருக்கத்தான் தோன்றும். யோசித்தால் அதிலும் தத்துவம் மிளிரும். உலகில் அழகு மட்டுந்தான் உள்ளதா? அழுக்கும்தானே உள்ளது? அவை அனைத்துக்கும் தேவி பராசக்திதானே பிறப்பிடம்? நம் அனைவருடைய பிறப்புங்கூட அழுக்குடன் தொடர்புள்ளதுதானே? கணேசனும் நம்மில் ஒருவனாகவே தோன்றப் பிரியப்பட்டிருப்பாரோ என்னவோ? தோற்றம் எங்கிருந்தாலும் ஆற்றலால் ஆண்டவனாகலாம் என்பதை மெய்ப்பிக்கிறாரோ?

கணேச ஆவிர்பாவம் பற்றி இன்னொரு கதை: தேவியும் மகாதேவனும் கைலாசத்திலுள்ள சித்திரமண்டபத்துக்குச் சென்றனர். அங்கு ஏழு கோடி மூல மந்திரங்களும் எழுதப்பட்டிருந்தன. அவற்றில் நடுநாயகமாக, சகல மந்திர ஸ்வரூபமான பிரணவம் அதன் சமஷ்டி, வியஷ்டி உருவங்களில் பொறிக்கப்பட்டிருந்தது. சமஷ்டிப் பிரணவத்தைப் பரமன் பார்த்தார். அதிலிருந்து ஓர் ஆண் யானை வெளிப்பட்டது. அதே போதில் வியஷ்டிப் பிரணவத்தைத் தேவி நோக்கினாள். அதிலிருந்து பெண் யானை வெளிப்பட்டது. இரு யானைகளும் கலந்து விக்நேசுவரன் தோன்றினார்.

சிவசக்தியின் புன்முறுவல்கள் லயிக்கத் தோன்றியவரே பிள்ளையார் என்பதுமுண்டு.

இது தவிர காசிபருக்கும் அதிதிக்கும் மதோத்கடன் என்ற பெயரில் விநாயகர் திரு அவதாரம் செய்து அற்புத லீலைகள் செய்ததும் உண்டு.

விநாயகருக்கு எவ்வளவு உருவ பேதங்கள் உண்டு என்று சொல்ல முடியாது. ஐம்பத்தொரு சக்திகளுக்குச் சரியாக ஐம்பத்தொரு விநாயக மூர்த்தங்கள் உண்டு என்பர். ஷோடச கணபதி என்று பதினாறு ரூபங்களைக் கொண்டாடுவர். மகாகணபதி, உச்சிஷ்ட கணபதி என்ற இருவரே முக்கியமாக உபாஸிக்கப்படுவார்கள்.

எதிலும் இருக்கும் அவருக்கு எத்தனை ரூபமுண்டு என யார் கணக்கெடுக்க முடியும்? அவர் எதிலும் இருப்பவர் என்பதால்தான் களிமண்ணிலும், மஞ்சளிலும், சாணியிலும்கூட அவரைப் பூஜிக்கிறோம்.

அவரது உருவங்களில் சிறந்தது பிள்ளையார் சுழியே என்பார்கள். பிரணவாகாரமான யானை முகத்தை 'ஓம்' குறிக்கிறது எனில், காரணமான பிரணவத்தோடு காரியமான உலகையும் சேர்த்துக் குறிப்பது பிள்ளையார் சுழி என்பார்கள்.

பிள்ளையார் சுழி போடாத காரியம் ஜெயிக்காது என்பது நம்மவர் நம்பிக்கை. பிள்ளையாரை நினைந்தபின்தான் லலிதா தேவி பண்டனைக் கொன்றாள். பிள்ளையாரைப் பூஜித்த பிறகே ஈசன் திரிபுரரைச் சம்ஹரித்தான். அவரைப் பூஜிப்பது வெகு எளிது. அருகம்புல்லையும் எருக்கம்பூவையும் போட்டு அவரை நம்வசமாக்கிக் கொண்டு விடலாம்.

பல்லவசேநாபதி பரஞ்சோதி, வாதாபியை வென்று அங்குள்ள விநாயகனைத் திருச்செங்காட்டாங்குடிக்குக் கொண்டு வந்தபின்தான் தமிழகத்தில் கணபதி வழிபாடு பரவிற்று என ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். அது எப்படியாயினும் இன்று தமிழகத்தின் சந்து பொந்துகளிலெல்லாம் அரசு செலுத்துபவர் விநாயக ஸ்வாமியே.

உலகெங்கிலும் வணங்கப்படுபவர் அவர். ஒருவரையொருவர் தழுவும் இரட்டைப் பிள்ளையாக அவரை ஜப்பானில் வழிபடுகிறார்கள். ஜைனர்களும் பௌத்தர்களும் அவரை வேறு பெயரில் வணங்குகிறார்கள். மெக்ஸிகோவில்கூட கணபதி வழிபாடு உள்ளது என்று காமகோடி பெரியவர் கூறியிருக்கிறார்.

ஹேரம்ப உபநிஷதம், கணபதி உபநிஷதம், பார்க்கவ புராணம் முதலிய நூல்களிலிருந்து அவரையே பரப்பிரம்மமாக, பரம்பொருளாக அறிகிறோம். இவ்வாறு வழிபடுவதே ஆறு சமயங்களில் ஒன்றான காணபத்தியம். 'க' என்பது மனோ வாக்கையும், 'ண' என்பது அதற்கு மேம்பட்ட அநுபவ ஆனந்தத்தையும் குறிப்பாகவும், 'கணபதி' என்பவர் இந்தப் பேரின்ப நாயகனான ஆன்ம ஸ்வரூபமே என்றும் காணபதர் கூறுவர்.

*யான் முன்னுரைத்தேன் கோடிமுறை*
*இன்னும் கோடிமுறை சொல்வேன்*
*ஆன்மாவான கணபதியின்*
*அருளுண்டு அச்சம் இல்லையே*

என்று இதைத்தான் கோடிக் கோடி முறை பாரதியும் கூறியிருக்கிறார். அவர் அருளைப் பணிவோம்; அச்சம் தணிவோம்.

*(நன்றி:– இந்துதர்ம மன்ற பத்தாவது ஆண்டு விழா மலர், 1976)*

பிள்ளாய் பிள்ளாய், பிரணவப்பிள்ளாய்!
கள்ளமிலார் பணி கணபதிப்பிள்ளாய்,
வள்ளல் பசுபதி வழங்கிய கன்றே;
வெள்ளியங்கிரியான் ஈந்த பொற்குன்றே,
தெள்ளமுதன்னாய், தேவர்கள் பதியே,
வள்ளிக்கொடியை வளர் பைங்காட்டில்
வெள்ளையானையாய் விரட்டிய நிதியே;
உள்ளத்துள்ளே ஊறும் நற்சுவையே;
அள்ளிப்பருகும் அமுதக்கடலே,
வெள்ளைப்பிறையணி வித்தக மலையே;

தலையிற் கொண்டேன் தளிரடி தலைவா,
விலையில் மாமணி வித்தைச்சுடரே,
கலையே, கதியே, கவிதைப்பயனே;
உலகில் நிகரில் ஒருவா சரணம்;
குலமாமணியே கோனே சரணம்
மலை நிகர் திண்டோள் மன்னே சரணம்
இலகும் செம்பட்டுடையாய் சரணம்
கலை வளர் மொழியில் வளர்வோய் சரணம்
கயமுகன் பகைவா, கருணையின் உருவே;
நயமிகு குமரா, நாதத்தொலியே;



# ஆளாய் பிள்ளாய்!

பள்ளிச்சிறுவர் பணிந்திடு தலைவா;
வெள்ளைக்கவிதையளித்திடு குருவே;
கொள்ளை கொண்டெனைத்தந்த செம்மணியே;
கள்ளக்கருவிழி வல்லபை கணவா;
துள்ளி நடமிடு குகன் உயிர்த்துணைவா,
தெள்ளிய அறிவின் தெய்விகமுடிவே,
கலைமகள் வாணி கருதிடு மருகா,
அலைமகள் திருவாள் அகமகிழ் மருகா
மலைமகள் உமையாள் மனமகிழ் குமரா,
நிலையிற் பெரியோய், நின்மல உருவோய்

ஐயமணிநிதியே, சங்கரன் மகனே;
பயமொழி பதியே, பார்வதி சுதனே,
தம்பி பொருட்டாய் தான் காதலித்த
கொம்பனை, குஞ்சரி, கோலக்குமரி;
உம்பர் குலக்கொடி, உலவிடு பைங்கொடி;
செம்பவளக்கொடி, தெய்வமணிக்கொடி;
அம்புவி போற்றிடு அழகிய பொற்கொடி;
சம்பக மணி நிற ஜாதி மலர்க்கொடி;
பம்பு பலர்க்குழல் பாவை பசுங்கொடி;
வம்பிளங் குறு நகை வாச மலர்க்கொடி;

தம்பியின் தடவரைப்புய மதில் படர
நம்பி இருத்தலை நாயக கண்டு
அம்பிகை குஞ்சரி அன்பினைக்கண்டு
இம்பரும், உம்பரும், நாகரும் வியப்ப
சுரமகள் காதலை விரைவினில் உதறி
பரிவுடன் அவள் உயர் பங்கயச் செங்கை
குரு பர குமரன் கை சேர்த்தனை கோவே!
அவ்விதம் அய்யனே அன்று நீ செய்த
செவ்விய தியாகம் என் சிந்தை உருக்கும்:
திவ்வியக்கனலே, தாரணி வாழ்வே;

இவ்விதம் செய்பவர் யார் கொலோ தேவா;
தியாகக்கனலே, தாரணி வாழ்வே;
ஏகக்கொம்புடை இறையவர் ஏறே!
நாகமசைந்திடு துதிக்கை அரசே!
யோகப்பொருளே, போகப்பொருளே!
அருமறை முடிவே, அடியவர் உறவே,
திரு மறைத்துணிவே, எளியவர் உறவே,
பெருகுண மலையே, பெரியவர் தனமே
கருவினை மாய்க்கும் கணபதி நின்னைத்
தொந்தி வயிற்றோன்: தொங்கிடு காதன்

தந்தி முகத்தோன்; யானைக்காலன்:
சந்தி சிரிப்போன்; சட்டி வயிறன்;
மந்த நடையோன்; மாணவன்: குள்ளன்
அந்தியும் சந்தியும் அசைப்பான் தீனி
சந்து பொந்துகளில் சாலையோரம்
எந்த ஊரிலும் இங்கும் அங்கும்
வந்து போவோர் வழி தனை மறித்து
"முந்திக்கொண்டா மோதகம்" என்றும்
"எந்தையைப் பின்னால் எனைப்பணி" என்றும்
"சந்ததம் போடு கரணம்" என்றும்

"நொந்து தலையில் குட்டிக்கொள்" என்றும்
இந்த விதமாய் இடும்பைகள் செய்து
பந்தனம் செய்யும் பிள்ளையார்; என்பர்!
கரி பரி சிங்கம் காளை இருக்க
"கறு முறு"வென்றும் மூஞ்சூறதின் மேல்
சர சர வென்று ஏறியமர்வான்
பிரும சாரிப்பிள்ளை யார் என்று
கூறி நகைக்கும் கசடர் மொழியை
பாரினில் பர நிலைத்தத்துவமுணரா
வீரியமில்லா வீணர்கள் மொழியை

காரிய காரணமுணரார் பேச்சைக்
கேளேன்; கேளேன்; கணபதி கேளேன் !
கம்பீரத்தைக் கரிமுகம் விளக்கும்!
செம்பருத்தி நிறம் தியாகமுணர்த்தும் !
கொம்பு குறிக்கோள் ஒன்றெனக்காட்டும் !
அம்புலி அமைதியின் தண்ணொளி மலர்த்தும் !
துதிக்கை "செயல் திறன் மதி" எனக் கூறும் !
நதிக்கரையோரம் இயற்கையைச் சுட்டும் !
கதித்திடு பாம்பும் உலகியல் காட்டும் !
மதித்திடு அருகம்புல் "வணங்கு" என்றும் !

எருக்கம் பூவும் "செருக்கினை அழி" எனும்
உருக்கிளர் கொன்றை "நன்மை" விளக்கும்
பெருக்கிடுமுலகெலாம் பெருவயிறுணர்த்தும் !
முறக் காதிரண்டும் "கேள்வி முயல்" எனும்
சின்னஞ்சிறிய கால்களிரண்டும்
இன்னமுணரொணாத்தன்மை விளக்கும்
யானைக்கண்களெதையும் உலகில்
"ஊனக்கண்ணால் நோக்குதல் தீது
ஞானக்கண்ணே நலம்" என உணர்த்தும்
மோனத்தன்மை முத்தி உணர்த்தும் !

"அன்னம் இன்றேல். ஆன்மா இல்லை;
பின்னை ஏதுயிர்? பின்னை ஏதுடல்"
இன்னத்தன்மை விளக்குவதன்றோ
மன்ன நின் கையில் மங்கள மோதகம் !
நான்கு கரமும் நான் மறை விளக்கும் !
பாங்குடனமர்தல், பர பரப்பின்மை
ஏங்கிடா இதயத்தமைதியன்றோ!
தீங்கிலா மனத்துத்தீரம் அன்றோ !
மூஞ்சூறென்னும் மூஷிக வாஹனம்
"தான் செத்தாலும் தன்மையைக் கைவிடேல்

வானிடிந்தாலும், வயல் வரண்டாலும்
ஊன் குலைந்தாலும் உறுதி குலையேல்"
சாவு வந்தாலும் செய்கை மறவேல்;
ஆவி ஓய்ந்தாலும் ஆற்றல் மறவேல்:
பொறியிடைப்படினும் வினை செயல் கைவிடேல்:
நெறியினில் நின்று, நிலைமையுணர்ந்து
குறிதனைத்தொடர்ந்து, கொள்கை விடாது
சிறியவன் ஆயினும் செய்கவோ மா வினை;
உருவினிற் சிறியோன் ஆயினும் உலகில்
பெரியதாம் காரியம் உழைப்பினால் முடி"
என்பதை அலவா என்றும் உணர்ந்தும்!

தனத்தைக்குவித்தோர்! தருமம் புரிந்தோர்!
மனத்தையடக்கிய மனிதர்கள், செல்வர்,
சினத்தையடக்கிய பெரியவர் எல்லாம்
தேடியே செல்லுவர் கடவுளைக் கோயிலில்;
நாடியே செல்லுவர் நாதனைக் கோயிலுள்!!
ஆனால் அய்யனே அவர்களை எல்லாம்
ஏன் என்று கேளாய்! ஏறிட்டும் பாராய்
"போனால் போகட்டும் போலிகள்" என நீ
கோனே, கோயிலின் வாயிலில் நிற்பாய்!!
உன்னைப் பாராமல் உள்ளே செல்பவர்


தன்னைப் பார்த்து நீ தானேசிரிப்பாய்!
என்ன விந்தை! இறைவனே, ஏழைகள்
தன்னைத்தானே தடுத்தாட் கொள்வாய்!
முன்னம் வருவாய் மூலையில் நிற்பாய்;
உன்னைக்கண்ட உணர்ச்சி பொங்க
கன்னந்தனில் "கணபதீ" எனஒரு
அன்னக்காவடி அறைந்து கொள்வான்!
"என்னருந்தெய்வமே! எம்பிரானே உனக்
கின்னம் ஒரு நாள் சூடம் கொளுத்துவேன்
இன்றில்லை" என ஏகுவான் விரைவில்

கன்றே, அவனைக் கண்டகமகிழ்வாய்!
ஆற்றங்கரையில், அரசமரத்தடி
வீற்றிருக்கும் நின்னுருக்கண்டே
நாற்றமெடுத்து, நானிலம் சிரிக்க,
ஒற்றமிழந்து, தோல் மேல் வெளுத்து,
கையும் காலும் குறைந்து அழுகி,
மெய்யுடன் உள்ளமும் குலைந்து சேர்ந்து,
நையும் உடலும், நைந்த இதயமும்
பையவே சுமந்தொரு குஷ்டரோகி
"அய்யனே! கணபதி அப்பனே! சரணம்!

பொய்யும் புனையும் செய்தறியேன் நான்!
மெய்யும் அறமும் விட்டறியேன்நான்!
செய்வினை யாதோ? தெய்வமே அறியேன்;
உய்யும் வழி இனிக்காணேன் அரசே!
வையக வாழ்வு போதும்! போதும்!
துய்யனே ஆட் கொளாய்" என்று நின்றரற்ற
அவனைக்கண்டு அகமகிழ் பூத்து
அவனறியாமல் அருள்வாய் ஞானம்!
கல்லாய் இருக்கும் கணபதித் தெய்வம்
சொல்லாய் மாறி நாவினில் புகுவாய்

கல்லும், மண்ணும், புல்லும் உருக
வல்லவர் மயங்கப் பாடுவான் ரோகி!
இப்படியாக எளியவரிடமே
முப்பொழுதும் குடி கொண்டு விளங்கும்
ஒப்பில் குமரா உன் குணம் கண்டு
அப்பனே! உன்னடி வந்தடைந்தேன் யான்
இப்புவிமிசை இனி வேறொரு தெய்வம்
எப்பொழுதும் இனித்துதியேன்; மதியேன்
தப்பிதம் பொறுத்தாள் தியாகசிகாமணி!!!

*(வரம் தரும் பிரார்த்தனைகள் எனும் நூலிலிருந்து)*




C.Vishnu
JOTHI 954


शुभ लाभ
ॐ

# பிள்ளையார் கையிலுள்ள ஆயுதங்கள்



1. பாசம்: இது கயிறு. பகைவர்கள் கையையும், கால்களையும் கட்டப் பயன்படும். ஒரு கயிறு அல்லது இரண்டு மூன்று கயிறுகள் சேர்த்து, எளிதில் அவிழ்க்கும் சுருக்கு முடிச்சாக இடப்பட்டிருக்கும். சுருக்கிடாமல் வளையமாகவும் இருக்கும். விநாயகருக்குச் சிறப்பான கருவி நாகமே பாசமாக அமைவதும் உண்டு. இதனை நாகபாசம் என்பார்கள். இதன் வகைகள் நான்கு.

2. அங்குசம் : இது யானையை அடக்கப் பயன்படுவது. இரும்பாற் செய்யப்பெற்ற வளைந்த மூக்கும் குத்தியடக்கக் கூடிய ஒரு கூரிய நேரான பகுதியும் உடையது. நீளமான கழிகளிற் செருகப்பெற்றிருக்கும். யானைப் பாகன் இதனை யானைக் காதிலே மாட்டித் தொங்க விட்டிருப்பான், இதில் இரண்டு உருவங்கள் உள்ளன. விநாயகருக்கு உரிய சிறப்புக்கருவிகளில் இதுவும் ஒன்று.


3. தந்தம் : ஒடிந்த யானைக் கொம்பு.

4. வேதாளம் : தசை நாரில்லாத, அச்சமும் அருவெறுப்புந் தரத்தக்க பூத வடிவாக இருப்பது, இதனை ஏவிப் பகைவர்களை விழுங்கச் செய்வது வழக்கம். இது வீரகணபதி கரங்கள் ஒன்றில் இருக்கிறது.

5. சக்தி : இது வேல். ஆறு கூரிய பகுதிகளையுடையது. தகட்டு வடிவானது. முருகனுக்குச் சிறப்பானது, விநாயகரும் வீரகணபதியாக விளங்கும்போது தாங்கியிருக்கிறார். இது பிடித்தபடியே எறியும் கருவிகளில் ஒன்று. வேல் மட்டும் இரும்பாலானது. இதனை நடுவில் பிடித்து எறிவது வழக்கம். இருமருங்கும் குத்தும் இயல்பினது. யானையெறிந்தவேல் ஏந்தல் இனிது. என்பர் வள்ளுவரும்.

6. அம்பு : (Arrow) இது வில்லை வளைத்து அதில் வைத்து எய்யப் பெறுங்கருவி. நுனி கூரிய முள்போன்றது. நுனிமட்டும் இரும்பாலானது. நுனியை ஒரு கழியிற் செருகியிருப்பார்கள். அதனது வால்பக்கத்தில் கழுகின் இறகுகளையும், மற்ற பறவை இறகுகளையும் கட்டியிருப்பார்கள். பெரும்பாலும் கழுகிறகே இதற்குப் பயன்படும். இறகு கட்டுவது விரைந்து காற்றை ஊடுருவிச் செல்வதற்காகவே.

7. வில் : இது அம்பு எய்யப் பயன்படுவது மூங்கில், சிலையென்னு மரம் முதலான வளையக்கூடிய நார் மரத்தால் செய்யப்பெறுவது. இந்த வில்லினது இருதலையிலும் தோல், அல்லது நார்க்கயிற்றானியன்ற




நாண் கட்டப்பெற்றிருக்கும். வில்லை வளைத்து நாணை இறுகக்கட்டி அதன்நடுவில் அம்பை வைத்துவிடுவது வழக்கம். எவ்வளவுக் கெவ்வளவு வில்லின் வலியும், நாணின் உறுதியும் இழுத்து விடுபவன் வன்மையும் இருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அம்பின் வேகமும். தைக்கும் வன்மையும் மிகும். அம்பு பட்டவுடன் இறப்பதற்காக அதன் நுனியில் விஷம் தோய்த்து வைத்தலும் வழக்கம்; அம்பின் நுனி பிறைமதிபோலக் கவர்பட்டதாகவும் இருக்கும். இதற்குப் பிறையம்பு என்று பெயர்.

8. சக்கரம் : இது விஷ்ணுவுக்கு உரிய சிறப்பான கருவி. இதன் அமைப்பு அனைவருக்கும் நன்கு தெரிந்ததே. அதில் இருவகையுண்டு. ஒன்று தேருருளை போன்றது. மற்றது வளையம் போன்றது இது அழகுப் பொருளாக எத்தனையோ வடிவங்களிற் காணப்பெறுகின்றது.

9. கத்தி : இது இன்று அறவே மறந்துபோன கருவி. தலைப் பகுதி குண்டாகத் தடித்துள்ள நீளக்கழியிற் கோக்கப் பெற்றுள்ள கருவி. இதுவும் பகைவரை அடிக்கப் பயன்படுவது. தலைப்பக்கம் ஒரு மண்டை ஓடு போலவும், கம்பி முழங்கால் எலும்பாகவுங்கூட அமைந்திருப்பதுண்டு இதனைக் குத்துக்கத்தியாகிய 'பிச்சுவா' என்பாரும் உளர்.

10. கேடகம் : இது கத்திவெட்டைத் தடுப்பதற்காகப் பயன்படுவது. பலகையாலும், வலுவுள்ள காட்டெருமை, கடமா, நீர்யானை, காண்டாமிருகம் இவற்றின் தோலாலும் செய்யப்பெறும் சதுரம், நீளச் சதுரம், வட்டம், முக்கோணம் முதலிய பல வடிவங்களிற் செய்யப்பெறும்.

11. சம்மட்டி : இது இரும்பாலியன்ற கனத்த தலைப்பகுதியை உடையது. இதன் நடுவில் துளையிடப்பெற்றிருக்கும். இதில் கை பிடிக்கும் சிறுகழியைக் கோர்த்திருப்பார்கள். இதுவும் உடையவன் கையைவிட்டு அகலாதபடி எதிரியை அடித்துத் தாக்கப் பயன்படுத்தப் பெறும்.

12. கதை : குண்டாந்தடி. இதில் பலவகைகள் காலாந்தரத்தில் ஏற்பட்டன. பகைவர்களை அடித்து நொறுக்கப் பயன்படுவது. கையை விட்டு அகலாதபடி, காவலாக இருந்து, உடையவனைப் பாதுகாப்பது.

13. நாகபாசம் : இதுவும் பாசவகைகளுள் ஒன்று.

14. சூலம் : இது மூன்று நுனிகளையுடையது. சிவபெருமானுக்குச் சிறப்பாக உரியது. சுரைவரையிலும் எஃகு இரும்பாற் செய்யப்பெற்றது. நீளமான மரக்கம்பிற் கோர்க்கப் பெற்றிருக்கும்.

15. குந்தாலி : இன்று, வன்மையான நிலப்பாறைகளை உடைக்கப் பயன்பெறும். தலை கனத்துக்கு கூரிய நுனியோடு இருக்கும் இரும்பானியன்ற கருவி இது, இதில் பலவகைகள் உள்ளன.

16. மழு : இன்று மரங்களை வெட்டப் பயன்பெறுவதாக எறியென்னும் பெயருடன் வழங்குகிறது. மிகக் கூர்மையானது. 'வாய்ச்சி' என்னும் மரஞ்செதுக்குங் கருவியினின்றும் முற்றிலும் வேறுபட்டது. தீப்பிழம்பு என்பதும் உண்டு. சிவபெருமானுக்கு விருப்பமான கருவி.

17. கொடி : இது வெற்றிக்கு அறிகுறியானது. துணியாலியன்றது. அடையாளம் எழுதப்பெற்றது. இதனையும் விநாயகப்பெருமான் தமது திருக்கையில் தாங்கியிருக்கின்றார்.

18. தண்டம் : இது நீளமான கைத்தடி, மரத்தாலானது.

19. கமண்டலம் : நீர் வைத்துள்ள கலம். ஒரு மரத்தின் காயால் இயன்றது. முனிவர்கள், அந்தணர்கள் தங்கள் நாட்கடனைக் கழிப்பதற்காக வைத்திருப்பார்கள். இதுவும் அக்ஷமாலையும் ஆயுதங்கள் அல்லவானாலும், திருவுருவநிலையை அறிந்துகொள்ள உதவும் கருவிகள்.

20. பரசு : இது சற்றேறக்குறைய மழுப்போன்ற கருவிதான். ஆனாலும் மழுவின்வாய் சதுரமாக இருக்கும். இதன்வாய் சற்று வளைந்து கூரியதாக இருக்கும். இதுவும் காம்பில் செறிக்கப்பெற்றுப் பயன்படுத்தப் பெறும் கருவியாகும்.

21. கரும்புவில் : கரும்பால் செய்யப்பெற்ற வில். இது மன்மதனுக்குரிய சிறப்பான கருவி. யோகியாக இருக்கும் மற்றைய தெய்வங்களும். காமேஸ்வரியாகிய காமாட்சியும் தாங்கியிருப்பார்.

22. சங்கம் : இதுவும் விஷ்ணுவுக்குரிய சிறந்த ஆயுதம். வெற்றியை அறிவிக்கும் கருவி. பகைவர்களை இதன் ஒலி கேட்டதுமே ஒடுங்கி அடங்கச்செய்யும் அச்சக்கருவியுமாம். இதிலும் பல வடிவங்கள் உள.

23. புஷ்பபாணம் : தாமரை, அசோகு, மா, முல்லை, நீலம் என்ற ஐந்து பூக்களாலியன்ற பாணம், இவற்றை மன்மதன் மக்களிடத்தில் காம நினைப்பூட்ட எய்வன். போகநிலையில் மற்றத் தெய்வங்களும் தாங்குவதுண்டு.

24. கோடரி : மரம் பிளக்கப் பயன்படும் கருவிபோலப் பகைவரின் உடலைப் பிளக்க இது பயன்படுவது. இரும்பால் வாய் கூர்மையாகப் பின் பக்கம் கனமானதாக அமைந்துள்ளது.

25. அக்ஷமாலை : உருத்திராக்ஷ மாலை, இது தனித்தனியே ஒரு மாலையாகத் திருவுருவங்களில் தொங்குவதும் உண்டு. மிகப் பழைமையான திருவுருவங்களில் இது ஓராயுதம் போல் இருப்பதைக் காணலாம்.

26. சாமரம் : இது கவரிமான் வால்மயிரால் ஆனது. ஓர் ஆயுதம் அன்று. ஆனாலும் விநாயகப்பெருமானுடைய திருவுருவ அடையாளங்களில் ஒன்றாகையால் ஆயுதவரிசையில் இது இடம் பெற்றிருக்கிறது.

27. கட்டுவாங்கம் : இது நீளமான கத்தி. போரில் படைகளை வெட்டப் பயன்படுத்துவது. இதில் ஒரு முனையுடையதும் இரு முனையுடையதும் என இருவகையுண்டு. குத்துக் கத்தியாகக் கூரிய நுனியுடையதும் உண்டு. பழங்கால மன்னர்கள் இடுப்பில் செருகியிருப்பது வழக்கம்.

28. தீஅகல் : ஒரு தீப்பிழம்பு. தீ அகலாகிய மழுவின் வடிவும் இப்படியேதான் இருக்கும்.

29. வீணை : இது ஓர் இசைக்கருவி. போர்க்காலங்களில் தளர்ந்த படைவீரர்களுக்கு உணர்ச்சியூட்டப் பயன்படுவது.

*நன்றி :– கணபதி, திருவாவடுதுறை ஆதீனம்*

# அறுகும் வன்னியும்



அறுகம்புல் பூமியில் இருந்து கிளம்பும் போது நேராக தலை நிமிர்ந்து கிளம்பி, பிறகு கொடியாகப் பரவி, ஒவ்வொரு கணுவுக்கும் வேரை ஊன்றி, அதில் குருத்தும் கிளம்பி பரவிக் கொண்டே போகும், அப்படி நன்றாக வளர்ந்ததைச் சீக்கிரத்தில் அழித்துவிட முடியாது. அது சிறந்த மூலிகையாகவும் இருக்கிறது. அத்துடன் இதைப் பச்சையாக தீயில் போட்டாலும் அது உடனே நன்றாக எரிய ஆரம்பித்துவிடும். அப்படிப்பட்ட அறுகம் புல்லிற்கு தூர்வை என்ற பெயரும் உண்டு. ஆலமரம் பூமிக்கு மேல் உயரமாக வளர்ந்து படர்ந்து விரித்த குடை மாதிரியாக இருக்கிறது. அறுகு பூமியில் மேல் நோக்கிப் படர்ந்து பசுமையாக இருக்கிறது. அதுபோல் மனித சரீரத்தில் உள்ள ஆறு ஆதாரங்களில் மூலாதாரத்தில் குண்டலினி சக்தியாகக் கணபதி திகழ்கிறார். அந்த குண்டலினி சக்தியானது, அறுகு நிமிர்ந்து பசுமையாக படர்வது போல் ஆறு ஆதாரங்களிலும் வேரூன்றிப் படர்ந்து ஸஹஸ்ராரம் என்ற தலை உச்சியை அடைந்து ஆல மரம் போல் தழைத்து விரிந்து இருக்க வேண்டும் என்ற தத்துவமாக விநாயகருக்கு அறுகு முதல் இடமாக அமைகிறது.

இந்த அறுகு வெப்ப நோய்களை நீக்குவதாகவும் அரு மருந்தாகவும் இருக்கிறது. விநாயகர் அனலாசுரன் என்பவனை விழுங்கியதால் ஏற்பட்ட வெப்பத்தை அறுகு தண்ணீரால் தணித்ததாக விநாயக புராணம் கூறுகிறது. ஜுரம் கண்டவர்களுக்கு அறுகை நீரிலிட்டு நன்றாகச் சுண்ட காய்ச்சி கஷாயமாகக் கொடுத்தால் ஜுரம் நீங்கிவிடும். இந்த அறுகை நீண்ட மஞ்சளுடன் சேர்த்து அரைத்து சிரங்கு போன்ற தோல் வியாதிகளுக்கு மேல்பூச்சாகத் தடவக் குணம் உண்டாகும். அறுகினால் ரத்த அழுத்தம், நீரழிவு போன்ற நோய்களுக்கும் குணம் உண்டாகிறது என்று சித்த வைத்தியர்கள் கூறுகிறார்கள். அறுகை சிறு சிறு துண்டுகளாகத் துண்டித்து அம்மியில் நன்றாக அரைத்து கெட்டித் தயிருடன் சேர்த்து வாரம் இரண்டு முறை உணவுடன் உட்கொண்டால் அல்சர் போன்ற குடல் சம்பந்தமான வியாதிகள் வராமல் தடுப்பதுடன் உடலின் வெப்பத்தையும் சரியான முறையில் நிலைக்கச் செய்யும் என்று மூலிகை வைத்தியத்தில் கூறப்படுகிறது. யோகிகள் நீண்ட நேரம் உட்கார்ந்து யோகத்யானம் செய்வதால் மூலாதாரத்தில் ஏற்படும் உஷ்ணத்தைத் தணிப்பதற்கு

அறுகைக் கஷாயம் வைத்து அருந்துவார்கள். அந்த கஷாயத்திற்கு "மூ தண்டக் கஷாயம்" என்று பெயர்.

இவ்வளவு பெருமைகளைப் பெற்ற அறுகம்புல் முழுமுதற் கடவுளாகவும், பிரணவ ரூபமானவருமான கணபதிக்கு மிகவும் உகந்ததாக அமைந்து இருக்கிறது. அதன் காரணமாக அறுகு என்ற தூர்வையால் விநாயகரை அர்ச்சிக்கப்படுகிறது, அந்த அர்ச்சனை "தூர்வாயுக்ம அர்ச்சனை" என்றும் "தூர்வாயுக்ம பூஜா" என்ற பெயரிலும் அழைக்கப்படும். தூர்வா என்றால் அறுகம்புல். யுக்மம் என்றால் இரண்டு சேர்ந்தது. ஆகையால் இரண்டு இரண்டு அறுகம்புல்லாகக் கணபதியை இருபத்தியொரு தடவை அர்ச்சிக்க வேண்டும். அதாவது (1) ஓம் கணாதிபாய நம: தூர்வாயுக்மம் – ஸமர்ப்பயாமி என்ற முறையில் (2) பாஸாங்குஸதராய, (3) ஆகுவாஹநாய (4) விநாயகாய (5) ஈஸபுத்ராய, (6) ஸர்வ ஸித்திப்ரதாய (7) ஏகதந்தாய (8) இபவக்த்ராய (9) மூஷிகவாகநாய (10) குமார குருவே (11) கபிலவர்ணாய (12) ப்ரஹ்மசாரிணே (13) மோதகஹஸ்தாய (14) ஸுரச்ரேஷ்டாய (15) கஜ நாஸிகாய (16) கபித்த பலப்ரியாய (17) கஜமுகாய (18) ஸுப்ரஸந்தாய (19) ஸுராக்ரஜாய (20) உமாபுத்ராய (21) ஸ்காந்தபரியாய என்ற இருபத்தியொரு (ஏகவிம்ஸதி) நாமாக்களைக் கொண்டு இரண்டு இரண்டு அறுகம் புல்லாக அர்ச்சிக்க வேண்டும் என்று புராணம் கூறுகிறது. இந்த முறையில் கணபதியை வழிபட்டு நன்மைகள் அடைந்தவர்கள் பலர் இருந்தாலும் அதில் கவுண்டின்னிய முனிவரும், அவருடைய மனைவி ஆசிரியையும் மிகச் சிறந்தவர்கள் ஆவர்.

## வன்னி பத்தரம்

அவுரவ முனிவர் என்ற முனிவருக்கு சமி என்ற மகள் இருந்தாள். அவளுக்கும் மந்தாரன் என்பவருக்கும் திருமணம் ஆகி, இருவரும் கணவன் மனைவியாக வாழ்ந்து வந்தார்கள். ஒரு சமயம் கணேசரின் பூர்ணமான அருளைப் பெற்று கணேச ரூபமாக இருந்த புருசுண்டி என்ற முனிவரை இகழ்ந்து பேசியதால் அவருடைய சாபத்திற்கு ஆளாகி இருவரும் வன்னி மரமாகவும், மந்தார மரமாகவும் ஆகிவிட்டார்கள். அவர்கள் இருவரும் தங்கள் தவற்றை உணர்ந்து விநாயகப் பெருமானை வழிபட்டு அவருடைய அருளைப் பெற்று சாப விமோசனம் அடைந்தார்கள். அவர்கள் இருவரும் விநாயகப் பெருமானிடம் நாங்கள் இருவரும் தங்களின் வழிபாட்டுக்கு உரிய பத்தரம் – புஷ்பமாக இருக்க வேண்டும் என்றும் அப்படி வழிபடுபவர்களுக்கு தாங்கள் அருள வேண்டும் என்றும் வேண்டிக் கொண்டார்கள் (பத்தரம் = இலை) விநாயகர் மனமகிழ்ந்து வரம் அளித்தபடியால் சமியும் – மந்தாரனும் இன்றும் வன்னி மரமாகவும் – மந்தார மரமாகவும் இருக்கிறார்கள். விநாயகரின் அருளால் உண்டான வன்னியின் பத்தரம் (இலை) மந்தாரையின் புஷ்பமும் விநாயகருக்கு உந்ததாக இருக்கின்றன.

ஸம்ஸ்கிருத மொழியில் வஹ்னி என்றால் நெருப்பு என் பொருள். நெருப்பை தன்னில் அடக்கிக் கொண்டு இருப்பதால் வன்னி என்ற பெயரை அடைந்தது. சூரியகாந்தக் கல்லோடு சூரிய ஒளி கலந்தால் அதில் இருந்து தீ வெளிப்படுவது போல் வன்னியின் கட்டையை, அதன் கட்டையைக் கொண்டு தயிர் கடைவது போல் கடைந்தால் தீ வெளிப்படுகிறது. அப்படியாக வன்னியில் இருந்து கடைந்து எடுக்கப்பட்ட தீயை ஹோமம், யாகம் முதலிய நற்காரியங்களுக்கு மிகவும் உயர்ந்ததாகச் சாஸ்திரங்கள் விவரிக்கின்றன. இதுவே முதன்மையானதாகவும் மற்ற வழி முறைகள் இதனை அடுத்ததாகவும்தான் கூறுகின்றன. தீயை அடைந்த பொருள்கள் எரிந்து பஸ்பமாகி விடுகிறதோ, எப்படி தீயைச் சார்ந்த தங்கம், சங்கு போன்ற பொருள்கள் மேலும் மேன்மையானதாக ஆகிறதோ, எப்படி தீயில் சம்பந்தப்பட்ட பொருள்கள் மிகவும் சுத்தமானதாக, தூய்மையானதாக ஆகிறதோ அதுபோல் வன்னி மரம், வன்னி இலையைத் தொட்ட மாத்திரத்திலேயே மனிதர்களின் பாபம் அழிகிறது. வன்னி என்ற நெருப்புடன் மனிதனின் தேகம் சம்பந்தப்படுவதால் அவன் தங்கம், சங்கு போன்று மேன்மை ஆனவனாக ஆகிறான். வன்னியின் இலையைக் கொண்டு பக்தியுடன் ஈஸ்வரார்ப்பணம் செய்யும் போது தீயில் சம்பந்தப்பட்ட பொருள் சுத்தம் ஆவது போல் மனிதன் மனமும் புத்தியும் சுத்தம் அடைந்து தெய்வீக ஞானம் மிக்கவனாகின்றான். மண்ணுலகில் பிறவி என்ற மாசை அகற்றிடச் செய்பவர் விநாயகப் பெருமான். அதன் காரணமாகவேதான்

வன்னிப் பத்தரத்தைத் தனக்கு உகந்த பத்தரமாக வைத்துக் கொண்டும் வன்னி மரத்தடியிலும் கணேசர் எழுந்தருளியிருக்கிறார்.

வன்னி இலைக்கு ஸ்ரீசமி பத்தரம் என்று பெயர். விநாயக பூஜையில் இருபத்தொரு நாமாவால் அறுகம்புல்லால் அர்ச்சிக்கப்படுவதுபோல இருபத்தொரு பத்ர (இலை) ங்களால் அர்ச்சிக்கப்பட வேண்டும். அதற்கு "ஏகவிம் சதி – பத்ர பூஜை" என்று பெயர். அதில் மாசிப் பச்சை, கண்டங் கத்திரி, பில்வதளம், அறுகம்புல், உமத்தை, இலந்தை, நாயுருவி, துளசி, மாவிலை, அரளி, விஷ்ணு கிராந்தி, நெல்லி, மருக்கொழுந்து, நொச்சி, ஜாதி, வெள்ளெருக்கு, வன்னி கரிசிராங்கன்னி, வெண்மருதை, கிளுவை, நாகை என்ற 21 பத்ரங்கள் கூறப்படுகின்றன. இந்த வன்னியின் இலை கொண்டு வழிபடுவதால் நன்மை அடைந்தவர்கள் பல பேர்கள் இருக்கிறார்கள். அவர்களில் சாம்பன் என்ற மன்னனும் அவனுடைய மந்திரியும் அடைந்த பலன் விசித்ரமானது. எனவே அறுகாலும் வன்னியாலும் ஆனைமுகனை அஞ்சலி செய்து "மண்ணுலகத்தினிற் பிறவி மாசை" அறுத் தெறிவோம்.

# மலர்கள், பழங்கள், தேங்காய்

ஆலயங்களுக்குச் செல்லும் போது மலர்கள், பழங்கள் ஆகியவற்றை எடுத்துப் போவதுச் தேங்காயை எடுத்து சென்று உடைப்பது யாவும் நமது வாழ்க்கையைத்தான் பிரதிபலிக்கின்றன. மலர் என்பது வாழ்க்கையின் மலர்ச்சி. அது குவிந்து காயாகி கனியாகிறது. அது வாழ்க்கையின் முழுமை. நமக்கு இறைவன் கொடுத்த இந்த இன்பங்களை இறைவனுக்கே அர்ப்பணித்து மகிழ்கிறோம். அதுவே பூஜாதிரவியங்களாக நம்முடன் ஆலயத்துக்கு வருகின்றன. தேங்காய் என்பது வெளியே அழகான வழுவழுப்பான மேற்தோல்; ஆனால் உள்ளே அவ்வளவும் பிசிறு பிடித்த தேங்காய் நார். அதே போல் நமது உடல் பார்க்க அழகாக இருக்கிறது; ஆனால் உள்ளே எண்ணங்களில் எத்தனை அழுக்கு? தேங்காயை நார் உரித்து எடுத்துச் செல்லுவதைப் போல, கோயிலுக்குச் செல்லும்போது இந்த எண்ண அழுக்குகளைப் பின்னால் விட்டுச் செல்லுகிறோம். ஆயினும் துளிபாக்கி இருக்கிறது; தேங்காயில் குடுமியை நாம் பாக்கிவிட்டு வைப்பதைப் போல் மூன்று முறை வலம் வந்து முடிவில் கருவறைக்குள் உள்ள இறை உருவத்தைத் தரிசிக்கிறோம். அங்கே குருக்கள் கற்பூரம் ஏற்ற அந்தத் தெய்வ உருவத்தை நாம் தரிசிக்க முடிகிறது. பந்தி அதே போல வாழ்க்கையில் படிப்படியாக முன்னேறி நாம் நம்மையே உணர முற்படுகிறோம். அப்போது குருநாதர் வந்து நமக்கு வழிகாட்டுகிறார். வித்யா மூலம் நாம் இறை உணர்வைப் பெற உதவுகிறது. ஞானதீபம் கடவுளை நமக்கு அடையாளம் காட்டுகிறது. குருநாதர் ஞானப்பார்வையை அளித்து மூன்றாவது கண்ணைத் திறக்கிறார். அதேபோல குருக்கள் மூன்றுகண் உள்ள தேங்காயை உடைக்கிறார்.

ஆசைகளும் பற்றுகளும் நீங்கிய நமது உள்ளத்தை இறைவனுக்கு அர்ப்பணிக்கிறோம். அதேபோல உடைந்த தேங்காய், சத்தான நீரும் பருப்புமாக இறைவனுக்கு நைவேத்தியம் ஆகிறது போல நமது வாசனைகளும் வெளியேறி விடுகின்றன.

கற்பூரம் என்பது என்ன? அபூர்வமானதோர் மணம் உறைந்திருப்பதுதானே? அதைக் கொளுத்தினால் ஒளி பெருக்கி, வாசனையைப் பரப்பி அது தன்னையே அழித்தக் கொள்கிறது. அதேபோல நம்முடைய எண்ண வாசனைகள் நிறைந்த உடலை இறைவனுக்குரிய பணிக்கு அர்ப்பணிக்கும் போது, அது தனக்குரிய தொண்டுகளை நிறைவேற்றி, உலக வாழ்க்கையிலிருந்து விடைபெற்றுக் கொள்ளுகிறது. அந்தத் தெய்வீகப் பணியில் நமது வாழ்க்கை ஒளி ஜோதிமயமாக ஒளிபரப்புகிறது. நமது அகந்தை, ஆணவம் ஆகிய யாவும் கற்பூரம் கரைந்து மறைவதைப் போல, உருத் தெரியாமல் மறைந்து போகின்றன.



# பிள்ளையார் பெருமை!

*(சுகி. சிவம்)*

உலகம் முழுவதையும் ஒரே குடும்பமாகக் பார்க்க வேண்டும். இது உயர்ந்த கொள்கை. அதே போல குடும்பத்தையே உலகமாகப் பாவிக்க வேண்டும். இதுவும் நல்ல வாழ்க்கை முறை. இந்த இரண்டு இலட்சியங்களையும் விளக்கிய இரண்டு ஸ்வாமிகள் முருகனும், பிள்ளையாரும்.

உலகத்தைச் சுற்றி வந்தால் பழம் என்ற பழைய கதையில் முருகன் உலகத்தைச் சுற்றினார். பிள்ளையாரோ பெற்றோரைச் சுற்றினார். உலகமே குடும்பம். இது முருகன் கொள்கை. குடும்பமே உலகம். இது பிள்ளையார் கொள்கை. இவை முரண்பாடுகள் அல்ல. ஒரு மரத்தின் இரு பிரிவுகள். மரத்தில் வேரும் உண்டு; கொழுந்தும் உண்டு. குடும்பமே உலகம் இது வேர். உலகமே குடும்பம் இது கொழுந்து. பிள்ளையார் கொள்கை வேர் மாதிரி. முருகன் கொள்கை கொழுந்து மாதிரி.

பிள்ளைகள், பெற்றவர்களை எப்படி மதிக்க வேண்டும், போற்ற வேண்டும் என்கிற நடைமுறைக்கு நல்ல வழிகாட்டிப் பிள்ளையார்: சிவபெருமானுக்கு ஐயப்பன், முருகன், பிள்ளையார் யாவருமே பிள்ளைதான் என்றாலும் ‘பிள்ளை யார்?’ என்றதும் விநாயகர்தான் முன்நிற்கிறார்.

ஒரு அப்பாவுக்கு இரண்டு பிள்ளைகள். மூத்தவன் சாது. (இப்போதெல்லாம் சாது என்றால் அசடு என்ற பொருள் வழக்கத்தில் வந்து விட்டது. ஆனால் ஆசையற்ற அமைதியான பொறுமைசாலி என்பதுதான் உள்ளர்த்தம்.) இரண்டாவது பிள்ளை சுறுசுறுப்பு. பள்ளியில் கப், மெடல் என்று ஓடி ஓடி வாங்குவான்.

மூத்தவன் அம்மாவுக்கு ரொம்ப உதவி. காய்கறி வாங்குவது, அதைத் திருத்திக் கொடுப்பது, ரேஷன் கடைக்குப் போவது, அப்பாவுக்கு எப்போது என்ன தேவை? என்று தெரிந்து செய்வது; பிளட் பிரஷர் மாத்திரை தீர்ந்து விட்டதனால் வாங்கி வைப்பது, ஞாயிறு என்றால் மொபெட்டைக் கழற்றி, துடைத்து வைப்பது என்று ஏக உதவி. அவன் ஒரு நாள் இல்லை என்றால் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் கையே காணாமல் போன மாதிரி.

சின்னவன் படுசுட்டி. வீட்டில் அவன் இருந்தாலே ஏக அமர்க்களமாக இருக்கும். உத்தரவு தூள் பறக்கும். அவன் வீட்டுக்குள் வருவதும் போவதுமே எப்போதும் ஒரு வேகத்தில் தான் நடக்கும். காரணம் எப்போதும் பரபரப்புத்தான். அவன் தெருவுக்குள் நுழைந்தால் தெருவுக்கே உயிர் வந்த மாதிரி. போதாக்குறைக்கு அந்தத் தெருவின் ஒரு நற்பணி மன்றத்துக்கு அவன் தலைவன் வேறு.



பத்து பொடியன்கள் வீடு தேடி வந்து அவனை விசாரிப்பதே ஒரு கலையாக இருக்கும். "தலைவர் இருக்காரா?.." இந்தக் கேள்வியை அவன் அப்பாவிடம் கேட்டு விட்டால் கொஞ்சம் கடுப்பாகி விடுவார். மனைவியிடம் பாய்வார். "தலைவராம் தலைவர்! வீட்டுக்கு ஒரு காரியம் செய்வதில்லை; எங்கே போறான் எங்கே வர்றான் தெரிவதில்லை. தலைவராம் தலைவர்!"

அப்போது அம்மா முகத்தைப் பார்க்க வேண்டுமே. முகமெல்லாம் மகிழ்ச்சி பொங்க, "இந்த வயதிலேயே அவனைத் தலைவர்னு கூப்பிட நாலு பேர் இருக்கானுங்க. சில பேருக்கு எத்தனை வயசானாலும் அந்த அதிஷ்டம் வரலையே!" என்பாள் இந்த அஸ்திரத்தில் அப்பா அடங்கி விடுவார்.

யாராவது நண்பர், 'சின்னப் பிள்ளை எப்படி இருக்கிறான்? என்ன பண்றான்?" என்று கேட்டால், "சார் அவர் நம்ம பிள்ளை இல்லை. 'தலைவர்!' அவரை 'அவன் இவன்'னு கூப்பிட்டா நாலு பேர் சண்டைக்கு வருவாங்க சார்! அவருக்கு ரத்த தானம், அறியாமை ஒழிப்புன்னு உலகம்தான் முக்கியம். வீட்டைப் பற்றித் துளி அக்கறை கிடையாது. பிள்ளைன்னா பிள்ளை முதல் பையன்தான் சார்! என்ன பொறுப்பு! என்ன பாசம்! அவன்தான் சார் பிள்ளை. சின்னவர் நமக்குத் தலைவர்" என்று புராணம் படிப்பார் அப்பா.

இதே கதைதான் கைலாயத்தில். முருகன் சின்னவர்; ஆனால் சிவனுக்கே தலைவர். தகப்பன் சுவாமி அப்பாவுக்கே குருபீடம். பிள்ளையாரோ அன்பான பிள்ளை. அம்மாவின் செல்வப் பிள்ளை. குடும்பமே உலகம் என்று பெற்றோரைச் சுற்றி வந்த ஞானப் பழம்! அதனால் தான் 'பிள்ளை என்றால் அவர் தான்' என்ற அர்த்தத்தில், 'ஆர்' விகுதி பெற்று, பிள்ளையார் ஆனார், நம் விநாயகப் பெருமான்.

அது மட்டுமல்ல. அவர் பிள்ளைகளின் கடவுள். காஞ்சி பரமாச்சாரியார் பாஷையில் 'குழந்தை ஸ்வாமி', 'குழந்தைகளின் ஸ்வாமி'. பிள்ளைகளுக்கு என்னதான் சாப்பாடு கொடுத்தாலும், நொறுவல் முக்கியம். "தின்பதற்கு என்ன இருக்கும்?" அடிக்கடி கேட்பது பிள்ளைக் குணம். அவருக்குப் பட்சணங்கள் நைவேத்யம்.

*"இக்கவரை நற்கனிகள் சர்க்கரைப ருப்புடன் நெய்*
*எள் பொரிய வல்துவரை இளநீர்வண்*
*டெச்சில் பய றப்பவகை பச்சரிசி பிட்டுவெள*
*ரிப்பழ மடிப்பல் வகை தனிமூலம்*
*மிக்கஅடி சிற்கடலை பக்ஷமெனக் கொளொரு*
*விக்கினச மர்த்தனெனும் அருளாழி."*

என்று நைவேத்தியப் பட்டியலைப் பாட்டியல் ஆக்கினார் அருணகிரிப் பெருமான்.

சிதறுகாய் போடுவது ஆணவத்தை நீக்குவது என்று தத்துவமாக நாம் பேசுகிறோம். காஞ்சிப் பரமாச்சார்யார் சிதறுகாய் குழந்தைகளின் சொத்து என்கிறார்கள்.

சிதறு காய் போட்டதும் குழந்தைகள் 'ஓ' என்று அலறிக்கொண்டு ஓடி வரும். ஆனந்தக் கூத்தாடும். அந்தக் குழந்தைகளின் ஆனந்தம் தான் இந்த வழிபாட்டின் முக்கிய அம்சம். அவரே குழந்தை. குழந்தைகள் கூத்தும் கும்மாளமும் அவருக்கு நிகழ்த்தும் பூசனைப் போல; ஆனந்தமே அவர் சந்நிதானம்.

பிள்ளைகளோடு பிள்ளையாய் ஒன்றிப் போவதால் அவர் பிள்ளையார். கவலை, கஷ்டம், கடன் என்ற வயதின் அவஸ்தைகள் தொலைந்து போய் பக்தனைப் பிள்ளையாக்குவதால் பிள்ளையார்.

இது பெரிய உண்மை. குழந்தையோடு குழந்தையாய் ஒரு மணி நேரம் விளையாடினால், நாம் குழந்தைகளை விட அதிக சேட்டைகள் செய்வோம். முறுக்கிய நிலையில் இருந்த மனம் – இறுக்கிய நிலையில் இருந்த இதயம் எல்லாமே நெகிழ்ந்து போய் நாமும் குழந்தையாகி விடலாம். மறுபடியும் குழந்தையாகிவிட மாட்டோமே என்ற ஏக்கம் இல்லாதவர் இல்லை. அதனால்தான் மறுபடியும் நம்மைக் குழந்தை ஆக்கி (மறுபிறவி) நமது ஆசையைக் கடவுள் பூர்த்தி செய்கிறார்.

பிள்ளையார் பெற்றோரால் நேசிக்கப்பட்ட பிள்ளை மட்டுமல்ல. பெற்றோரை நேசிக்கும் நல்ல பிள்ளை. நமது குழந்தைகள் பெற்றவர்களை எப்படி நேசிக்க வேண்டும் என்ற ரகசியத்தை விநாயகர் விளக்கியிருக்கிறார். அபரிமிதமான அன்பைக் கொட்டி நம்மை வளர்த்தவள் அன்னை. அவள் அன்புக்கு ஈடு கிடையாது. பத்து மாதம் சுமந்து, மரணத்தைத் துச்சமாகக் கருதி நமது ஜனனத்தை வழங்கிய தாய் ரொம்பவும் பெரியவள். அவள் அன்பு காட்டியது போல் முடியாவிட்டாலும் அதில் பத்தில் ஒரு பங்காவது பிள்ளைகள் அவளிடம் அன்பு காட்டுவது அவசியம். தாய்ப்பாலுக்கு ஏது விலை? பிள்ளையார் பார்வதி தேவியிடம் அதீதமான அன்பு கொண்டவர்.

திருவிளையாடற் புராணம் என்ற நூலில் இந்த உண்மையைப் பரஞ்சோதி முனிவர் விளக்குகிறார். பார்வதி தேவியிடத்தில் விநாயகருக்கு எவ்வளவு பாசம் என்பதை மிக மிக அழகான ஒரு கதை மூலம் விளக்குகிறார். சிவபெருமான் பெருமையை விளக்க நூல் எழுதிய பரஞ்ஜோதியார் அப்படியே தம்மை மறந்து பிள்ளையாரின் பெருமை ஒரு படி மேலே என்பதையும் எழுதி வைத்து விட்டார்! பிள்ளையார் பக்தர்கள் சந்தோஷப்பட இது ஒரு நல்ல இடம். பிள்ளையார் பக்தர்கள் எப்போதுமே சந்தோஷமாக இருப்பார்கள் என்பது வேறு விஷயம். இது ஒரு போனஸ் சந்தோஷம்.

கடற்கரைப் பகுதியில் வாழ்ந்த மீனவர் தலைவர் ஒருவர். அதியனாயன் என்பது அவர் பெயர். அவரது பக்திக்கு இறங்கி பார்வதி தேவி அவரது மகளாக வந்து கிடைத்தார். வளர்த்தார். சிவபெருமானையே கணவனாக அடைய நினைந்து நாளும் அவரையே வணங்கியும் வந்தார். பாசியும் மணியும் சங்குகளும் கலந்த பரதவர் குலத்துக்கேற்ற மாலைகளை அணிந்து, புன்னை மர நிரலில் வீடு கட்டி விளையாடிய சிறுமியாக இருந்தும், சிவனை நினைப்பதை மறந்திலர்.

அப்போது கடலின் நடுவில் ஒரு கலக்கம். வலிமை வாய்ந்த சுறாமீன் ஒன்று எங்கிருந்தோ வந்தது. கடலைக் கலக்கியதோடு மட்டுமல்லாமல் கடலை நம்பி வாழும் மீனவர் வயிற்றையும் வாழ்வையும் கலக்கியது. படகுகளும் தோணிகளும் பாழாகும் படி பாய்ந்து பாய்ந்து தாக்கியது. பயந்து பயந்து மீனவர் திரும்பினர்.

வலிய சுறாவை வலை வீசிப் பிடிக்க வழிவகை தெரியாமல் மீனவர் நடுங்கினர். அது கடவுள் போல் யாருக்குமே அகப்படவில்லை. சுறாவை பிடிப்பவர் தம் மகளை மணக்கலாம் என்று பரவதர் தலைவர் பகிரங்கப் படுத்தினார். பார்வதி கரம் பிடிக்கக் கடவுளே ஓடி வந்தார்.

நெய்தல் மலர் நிறைந்த கடற்புறத்தில், உப்பங்கழிகளையும் முள்ளிக் காட்டையும் தாழைக்காட்டையும் கடந்து, வீசும் வலையையும் தோளில் இடுகிற கூட்டையும் சிவ கணத்துள் ஒருவர் சுமந்து வர, வலைஞர் திருவடிவில், பக்தி வலையில் படும் பரம் பொருள் வந்து சேர்ந்தார். அங்கயற்கண் அம்மையின் அழகிய மீன்விழிகள் வலை வீசி இழுத்த காரணத்தால் சுறாவை வலை வீசிப் பிடிக்க ஆவலாய் அண்ணல் ஓடோடி வந்தார். மீனவர் வடிவில் வந்து வென்றார். பற்றற்றவர் பலகாலம் தேடிப் பற்றமுடியாத பரம் பொருள், பரவதர் வடிவில் வந்து அலைந்தது என்ன காரணத்தால்?

அம்பிகையைத் தண்டித்தவர் தம்மையே தண்டித்துக் கொண்டது ஓர் அவசியமான அதிசயம். அந்தத் தண்டனையில் வெளிப்பட்டது அதிசயமான ரகசியம். அதைப் புரிந்து கொள்வது அன்பர்களுக்கு அவசியம்.

திருக்கயிலை நந்தவனத்தில் அமைதியான ஓர் இடத்தில் பரமேஸ்வரனும் பார்வதியும் வீற்றிருந்தனர். வேத உட்பொருளை விளக்கி, அம்மைக்கு உபதேசித்தார் சிவபெருமான். கவனம் இன்றி, கவலை தோய்ந்த முகத்துடன் பாடம் கேட்டார் பார்வதி தேவி. இதுவரை அப்படி அவர் கவனம் இன்றிக் கேட்டதில்லை. அதன் காரணமும் தெரியவில்லை என்கிறார் பரஞ்ஜோதியார்.

பாராமுகமாய், மனம் ஒன்றாது வேதப் பொருள் கேட்டதைக் காரணமாக்கி, உமையம்மைக்குத் தண்டனை கொடுக்கிறார் உலகத் தலைவரான சிவபெருமான். எத்தனை பெரிய தண்டனை தெரியுமா? மண்ணில் பிறக்கும்படி ஆணையிட்டார். அதுவும் எங்கே? எப்படி? என்ற விவரங்களுடன்.

'அறம், விரதம், நெறி என்பது பற்றிக் கவலைப்படாத, உயிர்க் கொலைக்கஞ்சாத அறிவு நலம்

சாராத குடும்பத்தில் பிறக்க வேண்டும்! வேதத்தை அலட்சியப்படுத்தியமையால் வேதமேயறியாத மனையில் பிறக்க வேண்டும்' என்று கடினமான உத்தரவாகச் சிவபெருமான் பிறப்பித்தார். அஞ்சி ஒதுங்கினார் அன்னை. பிரிய மாட்டாது தவித்தார்.

அன்னைக்கு நேர்ந்த துன்பத்தை அறிந்ததும் பதறி ஓடி வந்தார் பிள்ளையார். அம்மாவுக்கு துன்பம் என்றதும் துடித்து ஓடி வந்தார். அவ்வளவு பாசம் அவருக்கு. அம்மா பூமிக்குப் போவது என்றால் அவரைப் பிரிய வேண்டுமே என்ற கவலை அவருக்கும் வந்தது.

இத்தனைக்கும் எது காரணம் என்று யோசித்தார். ஆகா! அந்தச் சுவடிகள் வேதப் பொருளை விளக்கும் புத்தகங்கள், ஏடுகள் அவர் கண்ணில் பட்டன. நீண்டு தொங்குகிற துதிக்கையைத் தூக்கி உணவை விழுங்குவதற்கு யானை உட்புறம் சுழற்றுவது போல் சுழற்றி, அத்தனை ஏடுகளையும் கடலில் எறிந்தார். 'குடும்பமே உலகம்' என்ற கொள்கையுடைய பிள்ளையாருக்கு அந்தப் பிரிவு அப்படித் துன்பம் கொடுத்தது. அவர் அம்மா பிள்ளை. அம்மாவைப் பிரியக் காரணமான ஏடுகளை எறிவது குற்றமாகத் தெரியவில்லை அவருக்கு.

எப்போதுமே சின்னப் பிள்ளைகள் பெரிய பிள்ளைகளை அப்படியே பின்பற்றுவது இயல்பு. சின்னவர் முருகன் சீறிப் பாய்ந்தார். அண்ணன் கடலில் எறியும் போது நழுவி விழுந்த ஏடுகளை எடுத்துக் கடலில் வீசினார். திரும்பிப் பார்த்தால் அப்பா கையிலே ஒரு புத்தகம். அது சிவ ஞானபோதம் என்ற சித்தாந்த விளக்கம்.

எட்டிப் பாய்ந்து தட்டிப் பறித்தார். குறிபார்த்து வேல் வீசி சூரனைக் கொன்றவர். குறிபார்த்துக் கடலில் எறிந்தார். கடலுக்குள் கரைந்தன ஏடுகள். கோபப்படுவது போல் நடித்துப் பழக்கப்பட்ட சிவபெருமான், காவலுக்கு நின்ற நந்தி தேவரை நெருப்பாகப் பார்த்தார்.

"எப்படி இவர்கள் உள்ளே வரலாம்? நீ காவல் காத்த லட்சணம் அப்படி! இப்படியா காவல் புரிவது? 'பூமியில் போய் அறிவற்ற சுறாமீனாக நீ உப்புக்கடலில் உழலக் கடவது" என்றார். போச்சு! போச்சு! பிள்ளைகள் உள்ளே வருவதைக் காவலர் எப்படித் தடுக்க முடியம்? ஆனாலும் சாபம் பாய்ந்தது!

பிள்ளைகள் தவறு செய்தால் கணக்குப் பிள்ளை மீது பாயும் முதலாளிகள் போல, இது என்ன வேடிக்கை? ஒரு வேளை சிவ பெருமானுக்குப் பிள்ளைகள் மீது அவ்வளவு பாசமா? அதுவும் இல்லை. எட்டிப் பாய்ந்து சிவஞான போதத்தைத் தட்டிப் பறித்த முருகனைப் பார்த்தார், "பூமியில் போய் நீ ஒரு ஊமையாகப் பிறக்கக் கடவாய்" என்று உத்தரவு போட்டார்.

மீனவர் குலத்தில் பிறந்து வேதங்களை விட்டு, எளிய வாழ்க்கை வாழ அம்மைக்குச் சாபம். 'காவல் காக்கத் தவறியமைக்கு, சுறாவாகப் பிறக்கும்படி நந்திக்குச் சாபம். தட்டிப் பறித்ததால் ஊமைப் பிள்ளையாகப் பிறக்கும்படி முருகனுக்குச் சாபம். இந்தக் கலாட்டாவுக்குப் பிள்ளையார் சுழி போட்ட பிள்ளையாருக்குச் சாபம் கிடையாதா? என்ன நியாயம்? சுவடிகளைக் கடலில் எறிந்து முருகனுக்குத் தெம்பு ஊட்டியவர் அவர் தானே? அவருக்கு ஏன் சாபம் இல்லை?

சிவ பெருமான், பெருமைகளை வளர்க்க வேண்டும் என்பதற்காகவே நூல் செய்த பரஞ்ஜோதியார், பிள்ளையார் பெருமையை மிகுதியாக விளக்கும் வகையில், பிள்ளையாரைச் சபிக்கவில்லை! ஏன் என்றால், சபித்தால் அந்தச் சாபம் சிவபெருமானையே சென்று சேரும். விநாயகருக்குச் சாபம் கொடுத்தால் அதை அவரே அநுபவிக்க வேண்டும் என்பதால் சபிக்கவில்லை என்று பொருள்.


வெருவரை செலவின் வேழமுகத்தனை விதித்த சாபப்
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியல் சாபம் கூறான்

என்று பாடினார்.

'மதுரையை அடுத்த பரமக்குடி வடகிழக்கில் உள்ள உப்பூரில் குடிகிழார் மகன் உருத்திர சன்மனாக முருகன் பேசாப் பிள்ளையாகப் பிறந்தான்' என்று இறையனார் அகப் பொருள் முதல் சூத்திர உரை இந்நிகழ்ச்சிக்குச் சான்று கூறும். உமையம்மை மீனவர்க் குலத்தில் வளர, நந்தி சுறாவாக வசிக்க, சிவபெருமான் வலை வீசி வென்றார் என்பது திருவிளையாடற் புராணக் கதை.

சாபங்கள் எப்படி விநாயகரைப் பாதிக்காதோ, சபித்தவர் யாரானாலும் சாபம் எப்படி அவரையே சாருமோ, அது போலவே விநாயகர் பக்தர்களையும் சாபங்கள் சாராது; சபித்தவனையே சென்று சேரும்! அம்மா மீது உள்ள பாசத்தில் ரொம்பவும் மேலே போய் விட்டார் பிள்ளையார். பிள்ளை என்றால் அவர் தானே பிள்ளை? அதனால் அவர்தான் பிள்ளையார்.

*நன்றி: கல்கி பொன்விழா மலர்*



# கணபதியும் கம்பியூட்டரும்


*கனகசபாபதி நாகேஸ்வரன்,* (எம். ஏ)
*முதுநிலை விரிவுரையாளர், சப்ரகமுவ பல்கலைக் கழகம்,*

**கா**ணபத்தியம், கணபதியை – விநாயகப் பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடும் சமயமாகும். எழுத்தாணியை விநாயகர் ஏந்தியுள்ளார். எழுத்தாணி பிடித்த கரம் படைத்தலைக் குறிக்கும் என்று தத்துவம் பேசுகிறது. கணபதியின் வாகனம் – ஊர்தி – 'மூஞ்சூறு' எனப்படும் 'எலி' யாகும். மகாபாரதத்தை மேருமலையிலே எழுதியவர் விநாயகப் பெருமான் என்பது புராண வரலாறு. *"மருப்பொன்றொடித்து ஒரு கரத்திற் தரித்துயர் கிரிப்புறத் தெழுதும் கவளமா களிறு"* என்பது அவ்வெழுத்து வரலாற்றைக் குறித்து நிற்கும் இலக்கியச் சான்று. வியாச பகவான் சொல்லச் சொல்ல மிகுந்த வேகமாகப் பாரதத்தை எழுதினார் விநாயகர். ஆகவே விரைவான எழுத்துக்குக் கணபதி; வேகமான படைப்புக்குக் கணபதி; ஞானத்துடன் கூடிய பேரறிவுக்குக் கணபதியின் உறுதுணை மிக மிக அவசியம். கணபதியைக் கைதொழுது கற்பவர்க்கு – இடர் களைந்து விக்கினங்களைப் போக்கி – வெற்றி பெற வைக்கும் திருவருள் நலம் அவரது தனி பெருங் கருணை.

இப்பொருத்தப்பாடுகள் இன்றைய நவீன கணனி யுகத்திற்கும் மிகுந்த ஏற்புடையன என்பது, இக்கட்டுரையின் கருப்பொருள். 'Mouse' என்ற ஆங்கிலச் சொல்லுடன் கூடிய 'கணனி' இன்று எல்லோருக்கும் அறிமுகமானதொரு 'கருவி'யாய்விட்டது. 'Mouse' என்னுஞ் சொல் 'எலி', 'மூஞ்சூறு' என்னும் பிராணியையே தமிழில் குறிக்கும். எத்தனையோ வகையான புதிய புதிய திறவுகோல்களைத் தந்து கணனி விஞ்ஞானத்திலே மகோன்னத இடத்தினை வகிப்பது இந்த 'Mouse' என்னும் அலகுதான். இங்கு ஒரு ஒப்பீடு சாத்தியமாகின்றதல்லவா? எத்தனை (Automatic) தன்னியக்க இயந்திர சாதனம் வந்தாலும் – அச்சடிக்கும் கருவிகளமைந்தாலும் விநாயகப் பெருமானின் கையிலேயும், கணனி யந்திரத்தை உபயோகிக்கும் மனிதன் கையிலேயும் எழுதுகருவி – எழுத்தைப் படைக்கும் சாதனம் இருக்கிறதல்லவா? எனவே 'Wisdom' எனப்படும் 'ஞானம்' எழுத்தாற்றலாலேதான் பரிபூரணமடைகின்றது என்னும் மாபெரும் தத்துவம் இதன் மூலம் விளங்கப்படுத்தப்படுகின்றதல்லவா? கல்வியும், அறிவும், ஆற்றலும், ஆளுமையும், ஞானமும், பரிபூரண

முற்றறிவும் தரவல்லவர் விநாயகர் என்பதுவும், இன்று கணனியை இயக்கவோ அல்லது பயன் படுத்தவோ தெரியாதவர் அறிவில்லாதவர், கல்லாதவர், ஞானமில்லாதவர் என்று எண்ணும் போக்கும் பிறிதொரு ஒப்புமையாகவே எமக்குத் தோன்றுகிறது! சிந்தித்தால் மேலும் அறிவு விரியும்.

கணபதிக்குத் துதிக்கை, நால்வாய் உண்டு. விநாயகர் தும்பிமுக கணபதி ஆவார். தும்பிக்கையை நீட்டி – விசாலித்து – விரித்துத் தன் உணவினை உட்கொள்ளும் ஆற்றல் யானைக்கு உண்டு; அதுவே யானை முகவனதுமாகும். அதேபோலத் தூரத்தே அமர்ந்திருந்து 'கை'யின் நீளம் வரை 'Mouse' என்னும் கருவியைத் தொழிற் படவைப்பதன் மூலம் கணினி யந்திரத்தினை வெகு நேர்த்தியாகவும் செம்மையுடனும் இயக்கும் நடைமுறையினை இன்று முயலுகின்றோம். கணபதி தத்துவம் சுந்தரரையும் ஒளவையாரையும் திருக்கயிலை சேர்த்தது என்ற புராண வரலாறு 'சுருங்கியதும் நீண்டதும்' என்ற அடிப்படைத் தத்துவத்தையல்லவா நமக்குணர்த்தி நிற்கிறது. பூவுலகு எங்கே? கைலாயம் எங்கே? 'விநாயகரகவல்' பாடியதால் ஒளவை கைலை சேர்ப்பிக்கப்பட்டார். அதாவது 'உயர்த்தி' வைப்பவன் விநாயகன். யானையின் சிறந்த குணங்களிலே ஒன்று 'பாகனை' த் தனது முன்னங் காலின் உதவியுடன் தனது முதுகிலே ஏறும்படி உதவிசெய்யும் குணம். இப்பண்பு – இவ்வியல்பு வேறெந்த மிருகங்களுக்கும் கிடையாது. அதேபோல 'கணனி அறிவு' இன்று தனித்துவமிக்க பேரறிவாகவும், சர்வதேச வலைப்பின்னலோடு கூடிய அண்டங்களையே தந்து கொண்டிருக்கின்ற பெருமைமிகு துறையாகவும் பரிணமித்துள்ளது.



கணபதி ஞானம் மெய்ஞ்ஞானம், கணனி அறிவு விஞ்ஞானம். இதுதான் பழமையும் புதுமையும் சங்கமிக்கும் இடம். தூய மெய்யறிவும் புதிய கண்டுபிடிப்பும் இணைந்த சங்கமம். ஆயின் (ஆய்வு செய்யின்) புதிய புதிய சுவைமிகுந்த கருத்துக்கள் பிறக்கும். சூக்குமமான – மிக நுட்பமான பொருள் கணபதி. அதே போல பல்வேறு சூக்குமங்களையுங் கொண்டு தேடத் தேட – ஆய்வு செய்யச் செய்யப் புதிய புதிய எத்தனையோ விநோதங்களையும் தந்து மேலும் மேலும் அறிவாராய்ச்சியைத் தூண்டுவது கம்பியூட்டர் (கணினி). நம்மைக் கம்பியூட்டர் பிடிக்க, நாமும் கம்பியூட்டரையே நம்பிப் பிடித்து அறிவிலும், விஞ்ஞானத்திலும், புத்திக்கூர்மையிலும் உயர்ந்து சிறந்து சித்தி பெறுகிறோம். எனவே இங்கும் தொழிற்படுவது 'நம்பிக்கை' எனும் நல்ல பண்பேயாகும். யானை. பாரிய மரங்களைப் பெயர்க்கின்றதென்றால் அதன் தும்பிக்கையில் அது கொண்டுள்ள நம்பிக்கை (பலமே) யேயாகும். முடிவில் மனித குலமும் தனது பலத்திலே நம்பிக்கை கொள்ள வேண்டுமல்லவா? இப்பொழுது சொல்லுங்கள்! நம்பிக்கையோடு தும்பிக்கையானை வணங்கினால் கலை – ஞானம் வருந்திக் கற்கவேண்டிய பண்டமல்ல அல்லவா? சிக்கல்கள் இலேசிலே விலகி வெற்றி கிடைக்கும்.

*"நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானம்*
*கற்குஞ்சரக்கன்று காண்"* (திருவருட்பயன்)

வித்தைகற்கும் பிள்ளைகட்குக் கம்பியூட்டரே கணபதி.

Mouse, கணபதி கரத்திருக்கும் ஒடித்த கொம்பு!

விநாயகரின் கையில் இருக்கும் ஒடிந்த கொம்பு மஹாபாரதம் எழுதவும் பயன்பட்டது. அதுவே அசுரனை அழிக்க ஆயுதமாகவும் பயன்பட்டுள்ளது. மஹாபாரதம் தர்ம அதர்மங்களையும் நீதி முறைகளையும், கர்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகம் போன்ற பல முத்துக்களை தன்னுள் அடக்கிய ஆக்க வழியின் சாதனமாக இருக்கிறது. அவைகளை அடைவதற்கு மனிதர்கள் தங்களுடைய தாமஸ குணம் என்ற அரக்க குணங்களை அழிக்க வேண்டும் என்ற தத்துவம் பொருளாக இருக்கிறது.

பிரம்ம தேவன் வியாசர் முன் தோன்றவும் அவரிடம் வியாசர் தன் விருப்பத்தைத் தெரிவித்தார். பிரம்ம தேவர் வியாசரை மிகவும் புகழ்ந்து பாராட்டி ''மஹரிஷியே, உங்களுடைய எண்ணம் பூர்த்தியாக மஹாகணபதியைத் தியானம் செய்யுங்கள்'' என்று கூறி மறைந்தார். வியாசர் கணேசரைத் தியானம் செய்யவும் அவரும் அவர் முன் தோன்றினார். அவரை முறையாக வியாசர் வழிபட்டு, ''என் மனதில் பாரதக் கதை பெருக்கெடுத்துக் கொண்டிருக்கிறது. அதைத் தாங்கள்தான் எழுதி உலகத்திற்கு அளிக்க வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார். விநாயகரும் அதற்குச் சம்மதித்தார்.



# விநாயகருக்கு ஏற்பட்ட சோர்வு !

பாரத நாட்டில் பலவாறாக இருந்த வேதத்தைத் தொகுத்து நமக்கு அளித்தவர் வியாசர் என்பவர். அதனால் வேத வியாசர் என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது. அவர் ஸ்ரீ விஷ்ணுவின் அவதாரம் என்று ''வியாஸாய விஷ்ணு ரூபாய வ்யாஸரூபாய விஷ்ணவே'' என்று வர்ணிக்கப்படுகிறது. அவர் பராசர முனிவரின் புத்திரர் ஆவார். அவருடைய மனதில் மஹாபாரதம் ஊற்றெடுத்து ஊறியது. அதை நாம் சொன்னால் யார் எழுதுவது, எப்படி உலகத்திற்கு அளிப்பது என்று யோசித்தார். அவருக்குப் பாரதம் எழுதச் சரியான நபர் யாரும் தோன்றாதபடியால் பிரம்மாவைத் தியானம் செய்தார்.

## நிபந்தனையும் பதில் நிபந்தனையும்

பாரதம் எழுதச் சம்மதித்த விநாயகர் வியாசரிடம் ''நான் எழுதும் போது என்னுடைய எழுதுகோல் நிற்காது. அதனால் தடையில்லாமல் சொல்லிக் கொண்டே போக வேண்டும். அப்படியானால்தான் நான் உமக்கு உதவ முடியும்'' என்ற நிபந்தனையைத் தெரிவித்தார். அதற்கு வியாசரும் சம்மதித்து நான் சொல்லுவதின் அர்த்தத்தையும் தத்துவத்தையும் அறிந்து கொண்டே நீங்கள் எழுத வேண்டும் என்ற பதில் நிபந்தனையையும் விதிக்க கணேசரும் அதனை ஏற்றுச் சம்மதித்தார்.

அப்படியாக வியாசர் பாரதத்தைத் தங்கு தடையின்றி சொல்லிக் கொண்டே போனார். விநாயகரும் தன் உடைந்த தந்தத்தை எழுத்தாணியாக உபயோகித்து எழுதிக்கொண்டே போனார். அதனைத் தொடர்ந்து எழுதும் போது சில கடுமையான தத்துவங்களையும் சேர்த்துச் சொல்லி வந்தபடியால் பூர்ணமான பொருளை உணர்வதால் கணேசருக்கு அசதி ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வியாசர் அநேக சுலோகங்களை மனதில் உருவாக்கிக் கொண்டு விடுவார். இப்படியாக வியாசரால் சொல்லப்பட்டு கணேசரால் எழுதப்பட்டது தான் ஸ்ரீமத் மஹாபாரதம். உலகத்திலுள்ளவர்களின் நலனுக்காகத் தன்னுடைய அசதியைப் பொருட் படுத்தாமல் ஆனைமுகன் தொடர்ந்து எழுதி முடித்தார் என்றால் உலக க்ஷேமத்தை எப்படி அவர் கவனிக்கிறார் என்பதை இந்த மஹாபாரத வரலாறு நிரூபிக்கிறது. இதனைக் கொண்டுதான்,

*"எடுக்கும் மாக்கதை இன் தமிழ்ச் செய்யுளாய்*
*நடக்கும் மேன்மை நமக்கருள் செய்திட*
*தடக்கை ஐந்துடைத் தாழ் செவி நீள் முடிக்*
*கடக் களிற்றைக் கருத்துள் இருத்துவாம்"*

என்று சேக்கிழார் பெருமான் அழகாகப் பாடியிருக்கிறார்.

# பிரம்ம முகூர்த்தம்

உபாசனையில் காலையில் பிரும்ம முகூர்த்தத்தில் எழுந்திருக்க வேண்டும் என்பது முக்கியமான ஒரு கடமையாகும். பிரும்ம முகூர்த்தத்தில் எழுவதற்கு உரிய பழக்கங்களை நாமேதான் நம்மைத் தயார் செய்து கொள்ள வேண்டு. பிரும்ம முகூர்த்தத்தில் ஏன் எழுந்திருக்க வேண்டும் என்று கேட்டால் பிரும்ம முகூர்த்தம் என்ற வார்த்தையை இரண்டாகப் பிரித்துப் பார்த்தால் அதனுடைய பொருள் நன்றாக விளங்கும்.


பிரும்ம+முகூர்த்தம். பிரும்ம என்ற சொல்லானது நான்முகனைக் குறிக்கும். நான்முகன் படைப்புக்கு உரியவர். திருமாலுடைய உந்திக்கமலத்தில் தோன்றிய அவர் தன்னுடைய நான்கு முகங்களினாலும் முதலில் நான்கு வேதங்களைப் படைத்தார். தன்னுடைய நாவிலே சரஸ்வதியை அமரச் செய்து கொண்டு 64 கலைகளையும் படைத்தார். 64 கலைகளைப் போலவே 64 தந்திரங்களும் உண்டு. இந்த 64 தந்திரங்கள் என்பதே மந்திர சாஸ்திரத்தின் ஆணிவேராக – 64 வேர்களாக விளங்குகின்றன. பிரும்ம முகூர்த்தம் என்பது பிரும்மாவினுடைய சக்தியை, நினைவாற்றலை, தன்னைத்தானே வழிபடுத்திக் கொண்டு மேன்மை அடைய வேண்டிய நிலைக்கு அடித்தளம் போடுகின்ற காலமாகும்.

பிரும்ம முகூர்த்தத்தில் எழுந்தால் எழுபவனது மனநிலையானது ஒருமைப்படுகிறது. இதற்கு ஏற்ற வண்ணம் அந்தக் காலம் இருக்கிறது. அதிகாலையில் சூரியனுடைய வெப்பம் கிடையாது. சந்திரனுடைய வெட்ப திட்பக் குளுமையும் கிடையாது. இவை இரண்டுக்கும் மத்தியில் உறங்கிக் கிடந்த ஜீவன்களெல்லாம் எழுந்திருக்கும் காலமாக விளங்குவது, பிரும்ம முகூர்த்தம். பிரும்மம் அறியப்படாதது என்பதைப் போல, பிரும்ம முகூர்த்தத்தின் இனிமையும் சாதாரணமாக அறிய முடியாதது. – பிரும்ம முகூர்த்தத்தில் எழுந்து தங்கள் தங்கள் உபாசனா தெய்வங்களை நினைந்து ஜெபம் செய்து சித்தி அடைவதைப் போலச் சிறந்த மேன்மையான வழி வேறு எதுவும் கிடையாது.

பிரும்ம முகூர்த்தம் ஜீவன்களை எழச் செய்வது போல மந்திரங்களையும் எழச் செய்கிறது. மந்திரங்கள் ஜெபிப்பவனுடைய மனத்திலிருந்து படிப்படியாக அவனுடைய நுண் அலைகளை – ஒலி அலைகளை மேலே எழுப்பி சஹஸ்ராரத்தில் அந்த ஜெபம் செய்பவனுடைய மந்திர ஒலியானது வெளிப்படச் செய்கிறது. இவ்வண்ணம் பிரும்ம முகூர்த்தத்தில் எழுந்து ஜெபம் செய்பவனுடைய ஜெப சித்தியானது அவன் செல்லுமிடங்களிலெல்லாம் அவனை அறியாமலேயே அந்தந்த இடங்களில் நல்ல நன்மைகளை விளைவிக்கும் வித்தாக இருக்கிறது. எனவே பிரும்ம முகூர்த்தத்தை ஒரு முக்கியமான காலமாக ஜெபத்திற்குச் சொல்லியிருக்கிறார்கள்.

பிரும்ம முகூர்த்தத்தில் ஜெபிப்பது, தியானம் செய்வது, யோகம் செய்வது எல்லாமே ஒரு சிறப்பானதாகும். பிரும்ம முகூர்த்தத்தில் செய்யும் இந்த தெய்வீகக் காரியங்கள் எல்லாம் படிப்படியாக மேலோங்கி வளரும் என்பதில் எந்த விதத்திலும் ஐயமில்லை.

# தேவாரங்களில் விநாயகர்



*(காஞ்சி சங்கராச்சார்ய சுவாமிகள்)*

விக்நேஷ்வரரைப் பற்றி வருகிற இரண்டு தேவாரக் குறிப்புகளை விஷயம் தெரிந்தவர்கள் விசேஷித்துச் சொல்வார்கள். ஒன்று அப்பர் வாக்கு. மற்றது சம்பந்தருடையது.

சமணனாயிருந்த பல்லவ ராஜா தன் மாதிரியே சமணராயிருந்து விட்டு அப்புறம் சைவராகி விட்ட அப்பர் ஸ்வாமிகளைப் பல விதத்தில் ஹிம்ஸைப்படுத்திக் காளவாயில் போட்டான்; கல்லைக் கட்டி சமுத்திரத்திலே போட்டான்; அப்புறம் அதெல்லாம் பலிக்கவில்லை என்பதைப் பார்த்துத் தானும் அவரை நமஸ்காரம் பண்ணி வைதிக மதத்திற்குத் திரும்பி விட்டான் என்று கதை. அதிலே காளவாய்க்கும், கல்லைக் கட்டிப், போட்டதற்கும் நடுவில் விஷம் கொடுத்ததாகவும், அவர் மேலே மதயானையை ஏவி விட்டதாகவும் இருக்கிறது. அப்படி மதயானையை ஏவினபோது அவர் பாட்டுக்குக் கொஞ்சங்கூடப் பயப்படாமல், "*அஞ்சுவது யாதொன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லை*" என்று பதிகம் பாடிக் கொண்டு தீரமாக நின்றார். * மத்தகஜம் வேகமாக வருகிறபோது சஜஸ்ம்ஹார மூர்த்தியான ஸ்வாமியை, 'வேழம் உரித்த நிலை' என்று துதித்துக் கொண்டு நின்றார்! கஜானனரைப் பற்றியும் அந்தப் பதிகத்தில்தான் சிறப்பித்துச் சொல்லியிருக்கிறார்!

*"பலபல காமத்த ராகிப் பதைத்தெழு வார்மனத் துள்ளே*
*கலமலக் கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறு."*

"அந்தக் களிறு எந்த ஈச்வரனின் பரிவாரத்தில் இருக்கிறதோ, அந்த ஈச்வரனின் "தமர் நாம்", அதாவது, "தம்மவர் நாம்", அதாவது ஈச்வரனே, "இவர்கள் என்னுடைய மநுஷர்கள்" என்று சொல்லிக் கொள்ளும் படியான அடியார் நாங்கள்! ஆகவே நாங்கள் ராஜா ஏவி விட்டிருக்கிற இந்த மதக் களிறானாலும் சரி, வேறே என்ன உத்பாதமானாலும் சரி, அஞ்சுவது யாதொன்றுமில்லை!" என்று பாடினார்.

மதயானை அவரைப் பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணிவிட்டு ஏவினவனையே தாக்குவதற்குப் பாய்ந்தது. அவன் ஓட்டம் பிடித்தான்.

"கணபதி என்னும் களிறு" பற்றி அவர் என்ன சொல்லியிருக்கிறாரென்றால்: நம்மில் ஒவ்வொருத்தரும் நூறாயிரம் ஆசைகளை வைத்துக் கொண்டு, ஒன்று பூர்த்தியானால் இன்னொன்று என்று ஸதா பரபரக்கிற, படபடக்கிற சஞ்சல மனஸுக்காரராக இருக்கிறோம். இதைத்தான் "பல பல காமத்தராகிப் பதைத்தெழுவார் மனம்" என்றார். சாதாரணமாகச் சொல்வது, ஆசாபூர்த்திக்கு ஏற்படும் இடையூற்றை அகற்றி அது நிறைவேற அநுக்ரஹிக்கிறவரே விக்நேச்வரர் என்பது. ஆனால் அப்பர் ஸ்வாமிகளோ அப்படிச் சொல்லாமல் ரொம்ப 'ஹை லெவ'லுக்குக் கொண்டு போய் விடுகிறார். நல்ல விஷயஜ்ஞரான புலவர்கள் எப்படி அர்த்தம்

*'கண்ணவெண்சந்தனச் சாந்தும்' எனத் தொடங்குவது.

பண்ணுவார்களோ, எனக்குத் தோன்றுகிற அர்த்தம் இப்படித்தான். என்னவென்றால்: ஆசைப் பூர்த்தி என்று போனால் அதற்கு முடிவேயிருக்காது. ஒன்று பூர்த்தியாச் சென்றால் இன்னொன்று என்று அது போய்க் கொண்டேதான் இருக்கும். முடிவிலே அத்தனை ஆசைகளும் ஸம்ஸார பந்தத்தை மேலும் மேலும் இறுக்குகிறவைதான். கணபதி இதற்குத்தான் அநுக்ரஹிக்கிறாரென்றால் அதொன்றும் சிறப்பில்லை என்று அப்பர் நினைத்திருக்கிறார். அவர் அபிப்ராயத்தில் – 'அநுபவத்தில்' என்று சொல்லணும் – கணபதி என்ன பண்ணுகிறார்? ஆசைகளினால் சதா பதறிக் கொண்டிருக்கும் நம் மனஸில் பிள்ளையார் 'கலமலக்கிட்டுத் திரிகிறா'ராம். அப்படியென்றால் ஒரே கலக்காகக் கலக்கிக் கொண்டு உத்ஸாஹமாகச் சுற்றுகிறார் என்று அர்த்தம். ஏற்கனவே ஆசைகளால் பதைத்துக் கலங்கிப் போயிருக்கிற மனஸை அவர் எதிர்த்திசையில் போட்டுக் கலக்குகிறார். கலக்கல், அதற்கு எதிர்க்கலக்கல், *revolution* ம் அதற்கு எதிரான *counter- revolution*–ம் என்றால் என்ன ஆகும்? முதலாவதை இரண்டாவது சமனம் பண்ணி, கலக்கம் எல்லாம் அடங்கி *equilibrium* என்கிற ஸமநிலையான பரம சாந்த நிலை உண்டாகும். மனசு அப்படி சாந்தமாக அடங்கி விட்டால் அதுதான் மோக்ஷம். ஒரு களிறு – ஆண் யானை – எத்தனை சக்தியோடு ஒரு சுழலுக்குள்ளே நுழைந்து கலக்கு கலக்கு என்ற கலக்கி விளையாடிக் கம்பீரமாக சஞ்சாரம் பண்ணுமோ, அப்படி நம்முடைய ஆசைச் சுழல்மயமான மனஸுக்குள்ளே பரமகிருபையோடு விக்நேச்வரர் புகுந்து எதிர்ச் சுழலாகச் சுழற்றிக் கொண்டு வெற்றிநடை போட்டுத் திரிகிறாராம்! இது அப்பர் சொல்வது.

சம்பந்தமூர்த்தி என்ன சொல்லியிருக்கிறா ரென்றால்: விக்நேச்வரர் பல வேறு சந்தர்ப்பங்களில் பல வேறு கோலங்களாக அவதரித் திருக்கிறார். அவற்றிலே ஒன்றில், பிடி என்கிற பெண் யானையாக அம்பாள் ஒரு ரூபம் கொண்டிருந்தாள். அந்தக் காலத்தில், ஸ்வாமி (சிவபெருமான்) தன்னுடைய அடியார்களுடைய இடர்களைத் தானே கடிந்து போக்கிவிடாமல் அதற்கென்றே 'ஆதரைஸ்' ஆன ஒரு விக்ன நிவாரண மூர்த்தியைத் தன்னுடைய பிள்ளையாகப் பெற்று, அந்தப் பிள்ளை மூலம் நடத்தணும் என்ற லீலையாக ஒரு சங்கல்பம் பண்ணினார். உடனே அவர் ஆண் யானையாகி, பிடியாயிருந்த அம்பாளோடு அப்படி ஒரு புத்ரோத்பத்தி பண்ணினார். இந்த விருத்தாந்தத்தைத் தான் சம்பந்தர், வலிவலம் என்று திருவாரூர்கிட்டே உள்ள ஷேத்திரத்தில் தாம் பாடிய தம்முடைய பதிகத்தில் சொல்லியிருக்கிறார்.

*பிடியதன் உருஉமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்*
*கடிகண பதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.*

வலிவலத்தில் தானதர்ம வள்ளல்களாக 'மிகுகொடை வடிவினர்' இருப்பதை ஸம்பந்தமூர்த்தி பார்த்தார். உடனே அவருக்குப் பரமேச்வரன் லோகம் பூராவுக்குமாக அளித்திருக்கிற பெரிய கொடை ஒன்றைச் சொல்லத் தோன்றிற்று. என்ன கொடை என்றால், அடியார் இடர் கடியவே அவர் கணபதியை வரவழைத்தாரே, அதுதான்! 'தனதடி வழிபடும் அவரிடர் கடி கணபதி வர அருளி'னாரே அதுதான்!

விக்நேச்வரருக்குப் பல நாமாக்கள் இருந்தாலும் அப்பர் பாடல், ஸம்பந்தர் பாடல் இரண்டிலும் கணபதி என்ற நாமாவே வருகிறது. பிள்ளையார் மந்திரங்களில் முக்கியமானவற்றிலும் அந்தப் பேர்தான் இருக்கிறது. பிள்ளையார் மதத்தின் பெயரும் 'காணபத்யம்' என்று அந்தப் பேரை வைத்தே இருக்கிறது.

சுந்தரமூர்த்தி ஸ்வாமி இந்த இரண்டு பேரைப் போலப் பிள்ளையாரைப் புகழ்ந்து பாடவில்லை. பரமேச்வரனையே ரொம்பவும் நிந்தாஸ்துதி செய்த 'வன்றொண்டர்' அல்லவா அவர்? பிள்ளையாரையும் அப்படித்தான் இறக்கியிருக்கிறார்! ஒரு இடத்தில் "கணபதியேல் வயிறுதாரி" என்று[1]. இன்னோரிடத்தில், கணக்கு வழக்கில்லாமல் தின்று கொண்டு தொப்பையை வளர்க்கிறதைத் தவிர வேறே ஒன்றும் தெரியாத கணபதி என்ற அர்த்தத்திலே 'எண்ணிலியுண் பெருவயிறன் கணபதி, ஒன்றறியான்' என்று சொல்கிறார்[2]. இங்கேயும் இரண்டு இடத்திலேயும் கணபதி நாமாதான். இரண்டிலுமே பெருந்தீனிக்காரர் என்ற அவருக்கு வசவு!

இப்படி அவர் சொன்னார் என்றுதான் பிள்ளையார், "பெருந்தீனிக்காரன்னுதானே சொன்னே? அப்படியே இருக்கட்டும். ஔவை படைக்கற பெருந்தீனி

(1) "நெய்யும் பாலும்" எனும் பதிகம்;
(2) "பத்தூர்புக்கு எனும் பதிகம்.)

முழுசையும் ஸாவகாசமா மொக்கி (வி)ட்டும், ஒனக்கு மூந்தி அவ கைலாஸத்துல சேரும்படிப் பண்றேனா, இல்லியா, பார்!" என்று கடைசியில் பண்ணிக்காட்டினார் போலிருக்கிறது!

ஆனாலும் அவர் சுந்தரருக்கு நிறைய அநுக்ரஹங்களும் பண்ணித்தான் இருக்கிறார்.

## சுந்தரருக்கு அருள்

அப்பர் – சம்பந்தர்களுக்கு அன்பிலில் ஏற்பட்டாற் போல, சுந்தரரும் திருவையாற்றுக்குப் போனபோது காவேரியில் பெரிய வெள்ளமாக வந்து அவரைத் தடுத்தது. அவர் எதிர்க்கரையிலேயே நின்று கொண்டு, "ஐயாறுடைய அடிகளே!" ஓலம் ஓலம்! என்று கதறினார். இங்கேயும் அப்பாவுக்கு முந்தித் திருவையாற்றுப் பிள்ளையார்தான் பக்தர் கஷ்டத்தைத் தெரிந்து கொண்டு அவருடைய ஓலத்தை அப்பாவுக்குத் தாமே 'ரிலே' பண்ணினார். அதனாலே அவருக்கு 'ஓலமிட்ட விநாயகர்' என்றே பெயர். தோழர் – 'தம்பிரான் தோழர்' என்று சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளைச் சொல்வார்கள் – அந்தத் தோழர் ஓலமிட்டு, அதை மூத்த புத்ரனும் 'ஸெகன்ட்' பண்ணின கணமே ஸ்வாமி வெள்ளத்தை வடிய வைத்தார்.

நண்பர் என்கிற முறையிலே சுந்தரர் ஸ்வாமிகிட்டே எதை வேணாலும் கேட்பார். பரவை நாச்சியார் என்று அவருக்கு ப்ரியமானவள். அவள் சுந்தரமூர்த்திகளின் ஊரான திருவாரூர் கோவிலில் நாட்யம் பண்ணுகிறவர்களில் பரம பக்தையான ஒரு உத்தமி. ரொம்பவும் தானதர்மிஷ்டை. அவள் வாரிக் கொடுக்கிறதற்காக ஸுந்தரர் அப்பப்போ "பொன்னு தா", "நெல்லு தா" என்றெல்லாம் ஸ்வாமியிடம் நச்சரித்துப் பெற்றுக் கொள்வார். அப்படி, 'திருமுதுகுன்றம்' என்று தேவாரத்தில் சொல்லியிருக்கும் விருத்தாசலத்திலேயும் அவர் பொன் கேட்டு, ஸ்வாமியும் பன்னிரண்டாயிரம் பொன் கொடுத்தார். சுந்தரர் அதோடு விடாமல், "கொடுத்தது மட்டும் போறாது. இதைக் காபந்து பண்ணி எடுத்துண்டு நான் ஊர் ஊராப் போய்த் திருவாரூர் சேருகிறது கஷ்டம். ஆனதாலே இதை நீயே எப்படியாவது அங்கே சேத்துடு" என்றார்.

ஸ்வாமியும் "சரி" என்றார். ஆனால் கொஞ்சம் லீலை பண்ணவும் நினைத்து, "இந்தப் பொன்னை இங்கே ஓடற மணிமுத்தாற்றிலே போட்டுடு, அப்புறம் ஊர் ஊரா என்னைப் பாடிண்டு திருவாரூருக்குப் போய் அங்கே கமலாலயத்திலே – அதுதான் அங்கே உள்ள பிரசித்தி பெற்ற திருக்குளம் – ஈசான்ய (வடகிழக்கு) மூலையிலேருந்து கலெக்ட் பண்ணிக்கோ" என்றார்.

"அப்படியே!" என்று மணிமுத்தாற்றிலே பொன் மூட்டையைப் போடப் போன சுந்தரருக்கு ஒரு சந்தேஹம் வந்தது, "நாம படுத்தியெடுக்கறோம் என்கிறதாலே ஸ்வாமி ஏதாவது கொனஷ்டை பண்ணி வெக்கப் போறார்! இங்கே உசந்த மாற்றுத் தங்கமாக் குடுத்துட்டு கமலாலயத்திலே எடுக்கறப்போ மாற்று கொறைச்சுடப்போறார்" என்று நினைத்தார். மாற்று என்பது காரட் மாதிரி. 24 காரட், 14 காரட் என்கிறோமே அப்படி 24 ஐயே 14 ஆக ஸ்வாமி பண்ணி விடப்போகிறாரே என்று சுந்தரர் நினைத்தார். இரண்டு இடத்திலேயும் உரைத்து மாற்றுப் பார்த்துக் கொள்வதுதான் நல்லது என்று நினைத்தார்.



உடனே அவருக்கு சஹாயம் செய்வதற்காகப் பிள்ளையார் அவர் பக்கத்தில் வந்து நின்றார். பொன்னை உரைத்துப் பார்த்து, பத்தரை மாற்று – 24 காரட் – என்ற 'ஸர்டிஃபை' பண்ணினார். விருத்தாசலம் கோவிலில் அறுபத்து மூவருக்குப் பக்கத்தில் 'மாற்றுரைத்த பிள்ளையார்' என்றே அவர் இருக்கிறார், அறுபத்து மூவரையும் சொல்லித் திருத்தொண்டத்தொகை பாடியவர் சுந்தரர்தானே?

அந்தப் பொன்னில், பின்னாடி 'கம்பேர்' பண்ணுவதற்காக ஸாம்பிளாக 'மச்சம்' என்று ஒரு துணுக்கை சுந்தரர் வெட்டியெடுத்துக் கொண்டு மூட்டையை அப்படியே மணிமுத்தாற்றில் போட்டு விட்டார்.

அப்புறம் க்ஷேத்ரம் க்ஷேத்ரமாகப் பாடிக்கொண்டே போய்த் திருவாரூரை அடைந்தார். பரவை நாச்சியாரைக் கமலாலயத்தின் ஈசான்யத்தில் படித்துறையில் நிறுத்தி விட்டுக் குளத்துக்குள் இறங்கினார், பொன்னை எடுப்பதற்காக!

இவர் நினைக்காத ஒரு கொனஷ்டையை ஸ்வாமி பண்ணினார். ஏதோ மாற்றுதான் குறைந்தது என்றில்லாமல் முதலுக்கே மோசமாக ஸ்வாமி விளையாடினார். இவர் தேடு தேடு என்று தேடியும் பொன் மூட்டையே அகப்படவில்லை!

பரவையானால், "எங்கேயோ ஆத்துலே போட்டுட்டு இங்கே கொளத்துலே தேடறீரே ஸ்வாமி!" என்று பரிகாசம் பண்ணினாள். அவள் சொன்னது பிற்பாடு வசனமே ஆகிவிட்டது!

சுந்தரருக்கு எரிச்சல் பொத்துக்கொண்டு வந்தது. உணர்ச்சி ஜாஸ்தியானால் அவருக்குப் பாட வந்துவிடும். ஆனால் வழக்கம் போல் நிந்தாஸ்துதி பண்ணினால், இந்தத் தடவை ஸ்வாமி காது கொடுக்காமலிருந்து, ஒரு பொம்மனாட்டிக்கு முன்னே தாம் இன்னும் அவமானப் படப் போகிறோமே என்பதால் ரொம்பவும் தைன்யமாகவே குழைந்து வேண்டிக் கொண்டு பதிகம் பாடினார். பொன் ஸமாசாரமானதால் "பொன் செய்த மேனியினீர்!" என்றே ஆரம்பித்துப் பாடினார். (பிறிதொரு சமயத்தில்) "பொன்னார் மேனியனே"! பாடினதும் சுந்தரர்தான்.

ஸ்வாமி இவருடைய பாட்டைப் பெறணுமென்றே தான் சோதித்தது! இவர் பாடினவுடனே பொன் அகப்படும்படிப் பண்ணிவிட்டார்!

இங்கேயும் பிள்ளையார்தான் வந்து மாற்றுப் பார்த்தார். அதனால் திருவாரூரிலும் ஒரு மாற்றுரைத்த விநாயகர் உண்டு.

சுந்தரர் நினைத்த கொனஷ்டையையும் ஸ்வாமி இப்போது பண்ணியிருந்தார்! மச்சத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மாற்று குறைந்திருந்தது! 14 காரட்!

பாட்டு ப்ரியரை சுந்தரர் மறுபடி ஸ்துதித்தார். ஸ்வாமியும் பதினாலை இருபத்து நாலாகவே மாற்றிக் கொடுத்தார்.

அப்புறம் ஒரு ஸமயம் சுந்தரமூர்த்தி, சேரமான் பெருமாளுடைய ஊருக்குப் போய் அரண்மனையில் தங்கி விட்டுப் புறப்பட்டார். ராஜாவான சேரமான் அவருக்கு ராஜோபசாரம் பண்ணி வழியனுப்பும்போது மூட்டை மூட்டையாக – 'பொதி' என்று சொல்வது; அப்படி – நிறையப் பொதி பொன்னும் பொருளும் கொடுத்தனுப்பினார். ராஜஸேவகர்கள் அவற்றைத் தூக்கிக் கொண்டு வர, சுந்தரர் கொங்கு நாட்டு வழியாகத் திருவாரூர் திரும்பிக் கொண்டிருந்தார்.

திருப்பூருக்குக் கிட்டே திருமுருகன்பூண்டி என்ற க்ஷேத்ரம். அங்கே காட்டு வழியில் சுந்தரர் ஆள்களோடு போய்க் கொண்டிருந்தார். அந்த ஊர் ஸ்வாமி பார்த்தார். 'வழக்கமாக நம்மிடம் அதைத் தா, இதைத் தா என்று நச்சரித்தபோது ஒரு க்ஷேத்ரம் விடாமல் நம்மிடம் வந்து பாடியவன், இப்போது நம்மை லக்ஷ்யமே பண்ணாமல் அல்லவா பெரிய ராஜஸம்பாவனையுடன் போகிறான்? நாம் ஏதாவது கொடுத்தால், 'நீயே அதைத் திருவாரூரில் சேரு' என்கிறவன், ராஜஸேவகர்கள்தான் நிஜமான துணை என்ற தைரியத்தில்தானே இப்போது காட்டிலே இத்தனை பொதியுடன் போகிறான்?' என்ற நினைத்தார். கொஞ்சம் சோதனை லீலை செய்வதற்கு முடிவு பண்ணினார்.

பூதகணங்களை வேடர்களாக ஆக்கி சுந்தரர் கோஷ்டியை எதிர்த்து வழிப்பறி செய்ய வைத்தார். உயிருக்கு ஹானி செய்யாமல் அந்த கணங்கள் பொருளை மட்டும் பிடுங்கிக் கொண்டு ஸ்வாமியிடம் வந்து பொதியைக் கொடுத்துவிட்டன.

எல்லாம் பறி கொடுத்துவிட்டு சுந்தரர் என்ன செய்வது என்று தெரியாமல் நின்று கொண்டிருந்தார்.

அப்போது அந்த ஊர்ப் பிள்ளையாருக்குத்தான் கருணை பெருகிற்று. ஊருக்குப் பேர் திருமுருகன்பூண்டி அந்த முருகன் "வைதாரையும் வாழ வைப்பான்" என்கிறார்கள். ஆனால் அந்த ஊரிலோ அவனுடைய அண்ணாக்காரர்தான் தன்னை 'வயிறுதாரி' என்று சுந்தரர் வைததையும் நினைக்காமல் அவரை வாழவைக்க நினைத்தார்!

அதனால் கோவிலை விட்டே கொஞ்ச தூரம் ஓடி வந்தார். சற்றுத் தூரத்தில் சுந்தரரைப் பார்த்தவுடனேயே ஒரே கூவலாகக் கூவி அவரைக் கூப்பிட்டார். "இங்கே கோவிலில் இருக்கிற என் அப்பாதான் கணங்களை அனுப்பி வழிப்பறி செய்தது. அதிலே கணபதியான எனக்குப் பங்கு இல்லை. நீ கோவிலுக்கு வந்து அவரைப் பாடு. நீ பாடி விட்டால் அவர் மனஸு குளிர்ந்து, தான்

பண்ணினதை அப்படியே மாற்றி விடுவார்" என்று தகவல் கொடுத்து உபாயமும் சொல்லிக் கொடுத்தார். சுந்தரமூர்த்தியைக் கூவிக் கூவிக் கூப்பிட்ட அந்தப் பிள்ளையார் 'கூப்பிடு பிள்ளையார்' என்ற பெயரில் திருமுருகன் பூண்டியிலிருந்து அவிநாசிக்குப் போகிற வழியில் இருக்கிறார்.

அவருக்கு ரொம்பவும் நன்றி சொல்லி விட்டு, அவர் பரம கருணையோடு வழிகாட்ட சுந்தரர் கோவிலுக்குப் போனார். 'நிந்தாஸ்துதி பண்ணி இன்னும் கஷ்டம் ஏற்பட இடம் கொடுக்க வேண்டாம். ஸ்வாமியேதான் கொள்ளை நடத்தினது என்பதுகூட நமக்குத் தெரிந்ததாகக் காட்டிக் கொள்ள வேண்டாம். துஷ்ட வேடர்கள் நிறைந்த இந்த ஊரில் நீ இருக்கலாமா என்று ஸ்வாமியிடம் அங்கலாய்த்துக் கொள்கிற ரீதியிலேயே பாடலாம்' என்று சுந்தரர் நினைத்தார். 'இங்கே ஏன் ஸ்வாமி, நீ வாஸம் பண்ணணும்?' என்று அர்த்தம் கொடுக்கும்படியாக ஒவ்வொரு பாடலும் "எத்துக்(கு) இங்(கு) இருந்தீர், எம்பிரானே?" என்று முடித்துப் பதிகம் பாடினார்.

ஸ்வாமியும் தாம்தான் அந்த வழிப்பறியை 'அரேஞ்ஜ்' பண்ணினது என்று காட்டிக் கொள்ளாமல், அந்த வேடர்களுக்கே மனஸ் மாறிவிட்ட மாதிரிக் காட்டி, கணங்களை மறுபடி வேடர்களாக்கி அவர்கள் பொதியை எல்லாம் ஸந்நிதியிலேயே சுந்தரருக்கு முன்னாடி கொண்டு வந்து போட்டுவிடும்படிப் பண்ணினார்.

பக்தர்களும் பகவானும் விளையாடிக் கொள்கிறதற்கு எல்லையே இல்லை!

## விநாயகரும் மாணிக்கவாசகரும்

தேவாரம் பாடிய மூவரைப் பற்றி விக்நேச்வர ஸம்பந்தமாக இவ்வளவு! ஆனால் மாணிக்கவாசகர் அவருடைய திருவாசகத்திலே பிள்ளையாரைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. இருந்தாலும் அவருடைய வாழ்க்கையிலே இவர் நெருக்கமாக ஸம்பந்தப் பட்டிருக்கிறார்.

பழங்காலத்திலே பாண்டிய நாட்டிலேயிருந்து சோழ தேசம் போகிறதற்கு ஆவுடையார்கோவில் வழியாகத்தான் நல்ல சாலை இருந்தது. மாணிக்கவாசகர் காலத்தில் ஆவுடையார்கோவிலுக்கு திருப்பெருந்துறை என்று பெயர். அங்கே வழிப்போக்கர்கள் தங்குவதற்கு ஒரு சத்திரம் இருந்தது. அதற்குப் பக்கத்தில் வானம் பார்க்க, அதாவது கூரையில்லாமல், ஒரு பிள்ளையார் உட்கார்ந்திருப்பார். வெயிலில் வந்த யாத்திரிகர்கள் ஒரு கூரையின் கீழ் 'ரெஸ்ட்' பண்ணிக் கொள்ளும் சத்திரத்துக்குப் பக்கத்திலேயே இப்படி அத்தனை வெயிலையும் தன் மேலே வாங்கிக் கொள்கிற ஒரு பிள்ளையார்! இன்னும் சில இடங்களிலும் இப்படி உண்டு. அங்கேயெல்லாம் 'வெயில் உகந்த பிள்ளையார்' என்று அவருக்குப் பேர் சொல்லுவார்கள். இங்கேயோ 'வெயில் காத்த பிள்ளையார்' என்ற பேர். என்ன வித்யாசமென்றால் மற்ற இடங்களில் ஜனங்கள் அநுபவிக்கிற வெயில் கஷ்டத்தை நாமும் அவர்களோடு சேர்ந்து அநுபவிப்போமே என்று 'ஸிம்பதி'யிலே அவராக வெயிலை பிரியப்பட்டு உகந்து ஏற்றுக் கொள்கிறார். இங்கேயோ அதற்கு மேலே ஒரு படி போய், சத்திரத்தில் தங்கினவர்கள் அப்புறம் யாத்திரை தொடரும்போது வெயிலால் கஷ்டப்படாமல் அந்த வெயிலை அவர்களுக்குமாகச் சேர்த்து *Vicarious suffering* என்கிறார்களே, அப்படித் தாமே வாங்கிக் கொண்டு, அவர்களை உஷ்ணத்திலிருந்து காப்பாற்றுகிறார். அதனால் 'வெயில் காத்த பிள்ளையார்' என்று பெயர் பெற்றிருக்கிறார்.

பாண்டிய ராஜாவுக்காகக் குதிரை வாங்கப் போன மந்திரி திருவாதவூரர் அப்புறம் மாணிக்கவாசகர் என்ற மஹானான கதை தெரிந்திருக்கும். அவர் குதிரை வாங்கப் போகிற வழியில் அந்தத் திருப்பெருந்துறைச் சத்திரத்தில் தான் இரவு தங்கினார். அப்போது அவருடைய ஸ்வப்பனத்திலே வெயில் காத்த பிள்ளையார் தோன்றினார். வெயிலா, *suffering* – ஆ எதுவும் தெரியாத பரப்ரஹ்மமே தாம் என்று வாதவூரருக்குத் தெரிவிக்க நினைத்து, தான் ஒருத்தரே ப்ரஹ்ம – விஷ்ணு–ருத்ரர் ஆகிய மூன்று ரூபமுமாக மாறி அவருக்குக் காட்சி கொடுத்தார். கொடுத்த அப்புறம், "இந்த ஊரிலே பரப்ரஹ்மத்துக்குக் கோவில் கட்டு. அரூபமாகவும் நிர்க்குணமாகவும் இருக்கிற தத்துவத்துக்கு எப்படிக் கோவில் கட்டுவது என்று கேட்காதே. அதற்கு நேரடியாகக் கோவில் கட்ட முடியாதுதான். ஆனாலும் அப்படி ஒரு தத்துவம் உண்டு என்று ஸகல ஜனங்களுக்கும் துளியாவது நினைப்பு வர வேண்டுமல்லவா? அதற்காகத்தான் அதை 'ஸிம்பாலிக்'காக (உருவகமாக)ப் புரிந்து கொள்ளும்படி ஒரு கோவில் கட்டச் சொல்கிறேன்.

* ("கொடுகு வெஞ்சிலை" என்று தொடங்குவது)

"ப்ரஹ்மம் அருவம், நாம் பார்க்கிற மூர்த்திகளுக்குள் சிவலிங்கம் தவிர பாக்கி எல்லாம் உருவம். சிவலிங்கத்துக்கு அவயவங்கள் கொண்ட உருவமும் இல்லை; அது அருவமுமில்லாமல் ஒரு நீள உருண்டையாயிருக்கிறது. அதனால் அருவுருவம் என்று அதற்குப் பேர். சிவலிங்கத்துக்குப் பீடம் இருக்கிறதே, ஆவுடையார் என்று, அதுவே ப்ரஹ்ம – விஷ்ணு–ருத்ர ஸ்வரூபம். அதற்கு மேலே சிவம் என்கிற அருவ ப்ரஹ்மம் இருப்பதை ஸிம்பாலிக்காகக் காட்டத்தான் லிங்கம் வைத்தது.

"ஆனால் உருவ தத்வத்திலேயே ருசியுள்ள ஜனங்கள் அதை மறந்துவிட்டு லிங்கத்தையும் ஒரு உருவ மூர்த்திதான் என்று நினைக்கிறார்கள். பொது ஜனங்கள் உள்ள ஸ்திதியில் அப்படி நினைப்பதுதான் இயற்கை. அதனால் மற்றக் கோவில்களி லெல்லாம் அப்படியே இருந்து விட்டுப் போகட்டும். ஆனாலும், இத்தனாம் பெரிய தேசத்தில் ஒரு இடத்திலாவது வேதத்தின் பரம தாத்பர்யமான பரப்ரஹமத்தை, அருவப் பரம்பொருளை, அழுத்தமாக ஞாபகப்படுத்த ஒரு ஆலயம் வேண்டாமா? உருவம் என்பதிலிருந்து அருவுருவம் என்கிற வரையில் கொண்டு விட்டிருக்கிற ஈச்வரனுக்குத்தான் அதற்கும் அடுத்த நிலையான அருவமாக வைத்தும் கோவில் கட்டினால் பொருத்தமாயி ருக்கும்; ஜனங்களின் மனோபாவத்துக்கும் அதுவே சரியாய் வரும்.

"ஆனபடியால் நீ இங்கே ஆவுடையாரை மட்டும் மூலஸ்தானத்தில் வைத்து, அதற்கு மேல் லிங்கம் ப்ரதிஷ்டை பண்ணாமல் காலியாகவே விட்டுக் கோவில் கட்டு, காலி என்பதால் சூன்யமில்லை, அதுதான் நம் இத்தனை ஜீவாத்மாக்களுக்கும் மூலம் என்று ஜனங்களுக்குப் புரிவிப்பதாக அதற்கு ஆத்மநாதஸ்வாமி என்று பெயர் வை.

"நான் சொன்னேனே என்று இப்பவே காரியத்தில் இறங்காதே! இங்கே ஒரு குருந்த மரத்தின் கீழே என் தகப்பனார் குரு ஸ்வரூபத்தில் வந்து ஆத்மாவை நீ அநுபவத்தில் தெரிந்து கொள்ளும்படியாக – அதாவது, நம்முடைய ஆத்மா பரப்ரஹ்மமே என்பதை நீ அநுபவமாக அறியும்படி – உபதேசிப்பார். அதற்கப்புறமே ஆலய நிர்மாணம் பண்ணு" என்ற சொல்லி விட்டுப் பிள்ளையார் மறைந்து விட்டார்.

இப்படி ஒரு ஆனை சொன்னதன் மேல்தான் குதிரைக்கான பணத்தில் மாட்டுக்குக் கோவில் எழும்பிற்று! ஆவுடையார் என்பது மாடுதான்; பரமேச்வரனின் ரிஷபம்! ஆ – மாடு; உடையார் என்றால் ஸ்வாமி. கோவில் கல்வெட்டுக்களில் பார்த்தால் 'ஸ்வாமி' என்பதற்குத் தமிழ் வார்த்தையாக 'உடையார்' என்றே போட்டிருக்கும்: ராஜராஜீச்சுரமுடையார், திருநாகேச்சுரமுடையார் என்கிற மாதிரி. மற்ற மாடுகளுக்கெல்லாம் தலைமையில் அவற்றுக்கு ஸ்வாமியாக உள்ள ரிஷபந்தான் ஆவுடையார். மற்ற ஊர்களில் அந்த ரிஷபத்தின் மேலே லிங்க ரூபத்தில் பரமேச்வரன். ஜீவாத்மாக்களான அத்தனை பசுக்களுக்கும் உடையாரான பசுபதி மாட்டு ஜாதிப் பசுபதியான ஆவுடையார் மேலே உட்கார்ந்திருப்பார்.

பிள்ளையார் சொன்னபடியே அப்புறம் ப்ராம்மண குருவாக ஈச்வரன் வர, அவரிடம் வாதவூரர் உபதேசம் பெற்றுக் கொண்டு, ஆவுடையாரை மட்டும் வைத்துக் கோவில் கட்டினார். ஞானாநுபூதி பெற்றவுடனேயே அவருக்கு மணி மணியாகத் திருவாசகம் பாட வந்ததால் மாணிக்கவாசகர் என்ற புதுப் பெயரும் உண்டாகி விட்டது.

அரூப ஸ்வாமி ! ஆவுடையார் மட்டுமே மூல ஸ்தானத்தில் இருந்ததால் ஜனங்கள் அந்தத் திருப்பெருந்துறைக்கும் 'ஆவுடையார் கோவில்' என்று புதுப் பெயர் வைத்துவிட்டார்கள்.


அம்பாளும் அங்கே அரூபந்தான். இவர் ஆத்மநாதர் என்றால் அவள் யோகாம்பிகை.

இப்படி அவர்களை அரூபமாக விட்டதற்கு வட்டியும் முதலுமாக மாணிக்கவாசகர் என்ன பண்ணினாரென்றால் கோவில் கட்டச் சொன்ன பிள்ளையாருக்கே அங்கே மூன்று மூர்த்திகள் சேர்ந்தாற்போல் வைத்து விட்டார். அவர் இவருக்கு மும்மூர்த்திகளாக மூன்று ரூபத்தில் தரிசனம் தந்ததால் இவரும் அவருக்கு மூன்று மூர்த்தி வைத்து விட்டார் – மும்மூர்த்திகளும் அவரே என்று காட்டுவதாக.

இரட்டைப் பிள்ளையார் பல ஊரில் உண்டு. ஆவுடையார் கோவிலில் மட்டும் மூன்று பிள்ளையார்!


*நன்றி: 'தெய்வத்தின் குரல்'*





முழுமுதற் பரம்பொருளாகிய இறைவன், சிவலிங்கத் திருமேனி கொண்டு எழுந்தருளித் திகழ்கின்ற திருக்கோயிலுள் சென்று எம்பெருமானைக் கண்டு வழிபடுவதற்கு முன்னர் விநாயகப் பெருமானைக் கண்டு வழிபட வேண்டியது முறையாகும். எனவே, திருக்கோயில் வழிபாட்டினை மேற் கொள்வோர், முதலில் விநாயகப் பெருமானின் திருச்சந்நிதியை அடைந்து, கண்டு வணங்கி நம் விக்கினங்களையெல்லாம் போக்கிக் கொள்ள வேண்டியது முறையாகும்.

விநாயகப் பெருமான், தன்னை வழிபடுவோரின் விக்கினங்களையெல்லாம் போக்கியருள்வதால், எந்த ஒரு செயலைத் தொடங்குவோரும், செயலைத் தொடங்கு முன் தமது காரியம் எவ்விதக் குற்றமும் இன்றி நிறைவேறுதல் வேண்டும் என்று வணங்கி வேண்டுவது வழக்கம். இவ்வாறு வழிபடுவோரின் காரியமும் விநாயகர் திருவருளால் குற்றமின்றி நிறைவேறிப் பயனுண்டாதல் உண்மை. எனவே புனித கோயில்களை வழிபடச் செல்வோர் முதலில் விநாயகர் திருச்சந்நிதியில் வணங்க வேண்டியது அவசியமாகும்.




### தமிழகத்தின் புகழ்பெற்ற விநாயகர் ஆலயம்

# பிள்ளையார்பட்டி வலம்புரி விநாயகர்

விநாயகப் பெருமான், தமக்குமேல் ஒரு தலைவன் இல்லாத தனி முதற் கடவுள். நாயகன் – தலைவன். விநாயகன் – தனக்கு ஒரு தலைவன் இல்லாது, தானே ஒப்பற்ற தலைவனாக உள்ளவர். இத்தகைய இப்பெருமானுக்கு விக்கினேசுவரர் என்னும் வேறு திருப்பெயரும் உண்டு. இப்பெருமான், தன்னை அன்புடன் வணங்கி வழிபடுவோரின் விக்கினங்களையெல்லாம் – குற்றங்களையெல்லாம் போக்கியருள்பவர். ஆகையால், இவர் விக்கினேசுவரர் என்னும் திருப்பெயர் பூண்டார்.

விநாயகர் திருச்சந்நிதி இல்லாத ஊர் தமிழகத்தில் இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். ஒரே ஊரில் பல விநாயகர் சந்நிதிகள் இருப்பதும் உண்டு. இவ்வாறு சந்நிதிகளைக் கொண்டுள்ள ஊர்கள்–தலங்கள் பல ஆயினும் தமிழகத்தில் உள்ள விநாயகர் சந்நிதிகளுள் சிலவே பெருமை மிகுந்து புகழ் பெற்று விளங்குகின்றன. புகழ் மிகுந்த இச்சந்நிதிகளில் எழுந்தருளித் திருக்காட்சி தருகின்ற விநாயகப் பெருமான், அன்புடன் வழிபடும் அன்பர்கட்குச் சிறந்த வரப்பிரசாதியாகத்

திகழ்கின்றார். எம் பெருமான் விநாயகர் இவ்வாறு திகழும் தலங்களுள் ஒன்று பிள்ளையார் பட்டி என்னும் சிற்றூர்.



பிள்ளையார்பட்டி என்னும் விநாயகர் திருத்தலம், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள காரைக்குடியிலிருந்து மேற்கே எட்டு மைல்கள் தூரத்தில் உள்ளது. இவ்விநாயகர் தலத்துக்குச் செல்லும் வழியிலேயே குன்றக்குடி என்னும் குமரக் கடவுளின் திருத்தலமும் உள்ளது.

இத்தலத்தில் விநாயகப் பெருமான் கோயில், குடைவரைக் கோயிலாக அமைந்து விளங்குகின்றது. இக் குடைவரைக் கோயில் நரசிம்மவர்மப் பல்லவன் காலத்தில் தோன்றியதாகும். ஒரு சிறு குன்றைக் குடைந்து, பாறையில் விநாயகப் பெருமானது திருவுருவம் செதுக்கப்பட்டுள்ளது. இக்குடைவரைக் கோயில் தோன்றுவதற்கு முன்பு இந்த ஊர் மருதங்குடி, திருவீங்கைக்குடி என்னும் பெயர்களால் அழைக்கப் பெற்று வந்துள்ளது. குடைவரைக் கோயில் தோன்றி, பிள்ளையார் ஆதிக்கம் தோன்றியது முதலாக இந்த ஊர்ப் பெயர் பிள்ளையார்பட்டி என்னும் பெயர் பெற்று வழங்கி வருகின்றது.

இக்குடைவரைக் கோயிலை மூலக் கோயிலாகக் கொண்டு, பின்னர் மகாமண்டபம், இராஜகோபுரம் முதலியவை எழுப்பப் பெற்றுப் பெருங்கோயிலாகத் திகழ்கின்றது. ஊரின் நடுவே அமைந்த இக்கோயிலில் மருதங்குடி நாயனார் கோயிலை அழகாகவும் விரிவாகவும் கட்டி முடித்துப் பெருமை கொண்டார்கள் நாட்டுக் கோட்டை நகரத்தார்கள். இக்கோயிலின் முன்னே ஒரு குளத்தையும் அமைத்துள்ளனர். இக்குளத்தில் நீராடி விநாயகப் பெருமானை வழிபட வேண்டியது முறையாகும்.

இக்கோயிலில் நடைபெறும் விழாக்களில் இரண்டு விழாக்கள் மிகவும் சிறப்புடையவை. அவை திருவாதிரைத் திருவிழா, விநாயக சதுர்த்தி விழா. இக்கோயிலின் பெரிய திருவிழா விநாயக சதுர்த்தியே. இத்தலத்தில் விநாயகர் ஆட்சி பெற்றுள்ளதால் சதுர்த்தி விழா பெரிய திருவிழாவாகக் கொண்டாடப்படுகின்றது. பத்து நாட்கள் இவ்விழா சிறப்பாக நடத்தப்படுகின்றது. சதுர்த்தி விழாவில் பத்தாம் நாள் நடைபெறும் விழா உயர்தனிச் சிறப்புடையது.

இப்பிள்ளையார் பட்டியில் ஆண்கள், பெண்கள் எல்லோருமே சதுர்த்தி விரதம் மேற்கொண்டு, வலம்புரி விநாயகரை வழிபட்டு நன்மையடைகின்றார்கள். இவர்களது சதுர்த்தி விரதம் ஆண்டு முழுவதும் தொடர்வதாக உள்ளது. இதன் காரணம் என்ன? சதுர்த்தி விரதத்தின் வரலாறு என்ன? விநாயகப் பெருமான் தேவர்களெல்லாம் கண்டுகளிக்கும்படியாகத் திருக்கயிலையில் நடனம் ஆடினார். குறுகிய கால்களோடும் தொந்தி வயிற்றோடும் அப்பெருமான்

ஆடிய திருநடனத்தைக் கண்டு சந்திரன் சிரித்து விட்டான். அதைக் கண்ட விநாயகப் பெருமான் சினந்து, சந்திரனைச் சபித்து விட்டார்; இன்று முதல் உன்னை எவரும் பார்க்கக் கூடாது; பார்ப்பவரும் நிந்தித்து உன்னை ஒதுக்குமாறு நீ நீசனாகக் கடவாய்; என்று சாபம் விட்டார். அது முதல் சந்திரன் கலை இழந்து தேய்ந்து தேய்ந்து மெலிந்தான். அவனைக் கண்டவர்களெல்லோரும் வெறுத்து ஒதுக்கினார்கள். சந்திரன் வெட்கப்பட்டுப் பிரமனிடம் சென்று முறையிட்டான். பிரமன், சாபமிட்டவரே சாப விமோசனத்தையும் அருள வேண்டும் என்று சந்திரனை விநாயகரிடம் அழைத்துச் சென்றான். சந்திரனும் விநாயகர் திருவடியில் வீழ்ந்து வணங்கி அறியாது செய்த பிழையை மன்னித்தருள வேண்டினான். பிரமனும் சந்திரனுக்கு அருள் புரியுமாறு விநாயகரை வேண்டினான். விநாயகரும் மனம் இரங்கி சுக்ல சதுர்த்தியில் உன்னைக் காண்பவர்களெல்லாம் வீண் அபவாதம் அடையட்டும். ஆனால் ஆவணி மாதம் சுக்ல சதுர்த்தியில் என்னைப் பூசித்தால் அந்த அபவாதம் நீங்கட்டும்' என்று சாபத்தை மாற்றியருளினார். இதன் காரணமாகவே வளர்பிறையில் சதுர்த்தியன்று இன்றும் மக்கள் சந்திரனைப் பார்க்காது ஒதுக்குகின்றார்கள்; தவறிப் பார்ப்பவர்களும் ஆவணி மாத சுக்ல சதுர்த்தியில் விரதம் இருந்து விநாயகப் பெருமானை வணங்கிச் சாபவிமோசனம் பெறுகின்றனர்.

இவ்வாறு சதுர்த்தி விரதம் அன்பர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதிலும் சதுர்த்தி விரதம் பெண்கள் மேற்கொள்ள வேண்டிய முக்கிய விரதம் என்று சொல்லப்படுகின்றது. ஏனென்றால் பெண்களே உலகத்தில் அதிக அபவாதத்துக்கு உள்ளாகின்றார்கள். ஆகையால், அவர்கள் தம்மீது ஏற்படும் வீண் அபவாதங்கள் நீங்கவும், தாம் விரும்பும் பிள்ளைப் பேறு முதலிய எண்ணங்கள் சித்தி பெறவும் சித்திவிநாயகரைச் சிந்தையில் இருத்தி, சதுர்த்தி விரதம் அனுட்டித்து விநாயகப் பெருமானை வணங்குதல் வேண்டும். ஆண்டு முழுவதும் வருகின்ற இருபத்து நான்கு சதுர்த்தியிலும் விரதம் மேற் கொள்வதோடு ஆவணி மாத சுக்ல சதுர்த்தியில் விரதத்தை முடித்து விநாயகரை வழிபட்டால் பெறுற்கரிய பேறுகளை யெல்லாம் பெறலாம்.

பிள்ளையார் பட்டித் தலத்து மக்களில் சிறப்பாகப் பெண்கள் சதுர்த்தி விரதம் மேற்கொண்டு விநாயகப் பெருமானை வழிபட்டு வருகின்றனர். இத்தலத்து மாதர்களில் இருபத்து நான்கு சதுர்த்தியிலும் விரதம் மேற்கொண்டவர்கள், ஆவணி மாதம் சுக்லபட்ச சதுர்த்தியன்று விரதத்தை முடிக்கின்றார்கள். விரதம் முடிக்கின்ற இப்பெண்கள் எல்லோரும் ஒன்று கூடி ஒவ்வொருவரும் ஒவ்வொரு குடம் வைத்து, ஒவ்வொரு குடத்தினுள்ளும் வெள்ளிப் பிள்ளையாரையும் இட்டு குடத்தில் தண்ணீர் நிரப்பிப் பூசனை செய்கின்றார்கள். அதன் பின்னர், ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு குடம் எடுத்து, அக்குடத்தில் உள்ள தண்ணீரால் அபிடேகம் செய்து கொள்கிறார்கள்; நனைந்த உடலோடும், ஆடையோடும் வலம்புரி விநாயகர் திருச்சந்நிதியில் வீழ்ந்து வணங்குகிறார்கள்; எழுந்து நின்று தீப ஆராதனையைக் கண்டு களிக்கின்றார்கள். அன்று கோயிலில் கொடுக்கப்படும் பிரசாதமாகிய நைவேத்தியத்தை மட்டுமே அருந்துகிறார்கள். இவ்வாறு சதுர்த்தி விரதம் அனுட்டித்து முடிக்கின்ற பெண்கள் வலம்புரி விநாயகப் பெருமான் திருவருளால் தங்கள் கோரிக்கை நிறைவேறப் பெறுகின்றார்கள். பெண்கள் மட்டுமில்லை, ஆண்களும் இவ்வாறு விரதம் அனுட்டித்து வலம்புரி விநாயகரை வழிபட்டால் நலங்கள் பல பெறலாம்.

இத்தலத்து அருளாட்சி செலுத்துகின்ற விநாயகப் பெருமானின் துதிக்கை வலமாகச் சுழித்திருத்தலால், இப்பெருமான் வலம்புரி விநாயகர் என்னும் திருப்பெயர் பூண்டு திகழ்கின்றார். பிற திருத்தலங்களிலெல்லாம் நான்கு திருக்கரங்களோடு அருளாட்சி செய்கின்ற விநாயகர், இங்கு இரண்டு திருக்கரங்களோடு ஆட்சி பெற்று விளங்குகின்றார். கோரிய வரமளிக்கும் பிள்ளையார் பட்டி கணபதிப் பெருமானைக் கரங்குவித்து வணங்கினால் கருதும் காரியமெல்லாம் கைகூடி வரும் என்பதில் ஐயமில்லை. புனித கோயில்களின் வழிபாட்டினை மேற்கொள்வோர்; பிள்ளையார்பட்டி வலம்புரி விநாயகரை வழிபட்டு மேற்கொள்வது நலம் பயப்பதாகும்.

# ஸ்ரீ வித்யா கணபதி



ஸ்ரீ மஹா கணபதியை 'மகேஸ்வரன்' என்று ஆதிசங்கரர் கூறுகிறார். ஈஸ்வரனுக்கும் மேலானவர் என்ற பொருள்படக் குறிப்பிடுகிறார். கணபதியை முழுமுதற் கடவுள் என்று கூறுவதுண்டு. கணபதியை மட்டுமே வழிபடுபவர்கள் 'காணாபத்யர்' என அழைக்கப்படுவர்; இவர்கள் தீவிர பக்தர்கள். கணபதியைத் தவிர வேறெந்தத் தெய்வத்தையும் உயர்வாகக் கருதமாட்டார்கள். இப்படிப்பட்ட பக்தர்கள் கணபதியை சக்தியுடன் வழிபடுகிறார்களா என்று தெரியவில்லை.

சக்தியுடன் கூடிய பல விநாயக மூர்த்தங்கள் உள்ளன. அவரைப் பற்றிய நூல்களிலும் சக்தி கணபதியைப் பற்றி விரிவாகவே விளக்கப் பட்டிருக்கின்றன. சக்தி கணபதி திருவுருவங்கள் பல உள்ளன. அவற்றுள் ஒன்றான 'ஸ்ரீ வித்யா கணபதி' யைப் பற்றித்தான் இங்கு விளக்கப்படுகிறது.

சக்தியை முதன்மையாக வழிபடுபவர்கள் (சாக்தர்கள் எனப்படுவர்) 'ஸ்ரீ வித்யையை' மிகவும் சிரத்தையுடனும் உரிய உபாசனா மார்க்கங்களுடனும் பூஜை செய்வர். அவர்கள் 'ஸ்ரீ வித்யோபாசகர்கள்' என்று அழைக்கப்படுவார்கள் . தக்க குரு மூலம் தீட்சை பெற்று வழிபடுவார்கள்.

ஸ்ரீ வித்யா சக்தி கணபதியுடன் இணைந்து 'ஸ்ரீ வித்யா கணபதி' யாக விளங்குகிறார்.

ஸ்ரீ வித்யா கணபதியை ஆராதித்து வழிபடுவது என்பது மிகவும் கடினம். வழிபாட்டு முறைகளை நன்கு தெரிந்து கொண்டு, ஒரே சிந்தனையோடு பூஜை செய்யவேண்டும். பூஜைக்குரிய மந்திரங்களைச் சரியாக உச்சரிக்கவேண்டும். ஒழுக்கம், நேர்மை, சுத்தம் ஆகியனவெல்லாம் வழிபடுபவருக்கு இருத்தல் அவசியம். அப்படிச் செய்யும் மகான்கள் சிலரே இருப்பார்கள். சத்தியையும் கணபதியையும் இணைத்து வழிபட்டு சித்தி பெற்றுவிட்டால் அவர்களே 'ஸ்ரீ வித்யா கணபதி' ஸ்வரூபமாகி விடுகிறார்கள் என்று நூல்கள் கூறுகின்றன. அவரைப் பார்த்து வணங்கினாலே நம் துன்பங்கள் போய்விடும். அவர்களுடைய வாக்கு தெய்வ வாக்காக ஆகிவிடுகிறது.

ஸ்ரீ வித்யா கணபதியை ஆராதிப்பவர்கள் மிகச் சிலரே இருப்பார்கள். வழிபாடு கடினமானதுதான். இருந்தாலும் ஸ்ரீ வித்யா கணபதியைப் பற்றித் தெரிந்து கொள்வதில் தவறேதும் இல்லை.

சக்தியுடன் விநாயகர் இணைந்து கொண்டாரா? அல்லது விநாயகரோடு சக்தி சேர்ந்து கொண்டாளா

என்ற விவரத்தை ஆராயாமல் 'ஸ்ரீ வித்யா கணபதி' யைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

ஸ்ரீவித்யா கணபதியின் சிற்ப வடிவங்கள் பாரதத்தில் சில இடங்களில்தான் காணப்படுகின்றன. இவ்வுருவங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன் ''ஸ்ரீவித்யா கணபதி''யின் தத்துவத்தைக் கொஞ்சம் தெரிந்து கொள்வது நல்லது.

'வாஞ்சா கல்ப லதா கல்பம்' என்ற நூல் – கணபதியைச் சக்தி உருவத்தில் வழிபட உதவும் அரிய பொக்கிஷமாகும். மந்திரங்கள் மறைபொருளுடன் இருக்கும் உபாசகர்கள் ஸ்ரீ கணபதியை, ஸ்ரீ வித்யா வாகவே நினைத்து வழிபடுகிறார்கள் என்று பெரியோர் கூறுவர்.

ஸ்ரீ வித்யா கணபதியை வழிபட முதலில் தக்க குருவின் மூலமாக மந்திர தீட்சை பெறவேண்டும். இது முதற் படியாகும்.

லலிதா சகஸ்ரநாமாக்களில் ஒன்றாக 'காமேஸ்வர முகாலோல கல்பித ஸ்ரீ கணேஸ்வரா' என்று ஒரு நாமா (பெயர்) வருகிறது. இந்நாமா, கணபதியின் ஆவிர் பாவத்தைப் பற்றிக் கூறுகிறது.

மேற்கண்ட வார்த்தைக்குப் பொருள்: சிவபெருமானுக்கு 'காமேஸ்வரன்' என்ற பெயர் உண்டு. ''அவருடைய திருமுகத்தை அன்னை பராசக்தி பார்த்ததன் விளைவாக கணேசனைத் தோற்று வித்தவள்'' என்ற கருத்து உள்ள நாமாவாகும்.

மகேஸ்வரனும் பராசக்தியும் இரு பெரும் சக்திகளாவர். இவர்களின் இணைப்பால் உலகமும், ஜீவன்களும் உய்கின்றன.

இம்மாபெரும் சக்திகளின் கூட்டுறவால் முதன்மை ஸ்தானம் வகிப்பவராக ஸ்ரீ கணேசர் சக்தி தெய்வமாகத் திகழ்கிறார்.

உடலும் உயிரும் ஒன்று சேர்ந்திருப்பதுதான் ஜீவ அமைப்பு. உடல் சக்தியின் கூறு. உயிர் சிவத்தின் கூறு. இவ்விரண்டின் தெய்வீக சேர்க்கைதான் கணேச மூர்த்தியில் இடம் பெறுகின்றன. அதனால் மஹா கணபதி ' ஸ்ரீ வித்யா கணபதி' யாகக் காட்சி தருகிறார்.


ஸ்ரீ வித்யா கணபதிக்குத் தனிச் சந்நிதியோ கோயிலோ அதிக அளவில் இல்லை. பாரதத்தில் சில இடங்களில்தான் ஸ்ரீ வித்யா கணபதியின் வடிவத்தைக் காணலாம். ஆனால் தென் பாரதத்தில் ஓர் இடத்தில்தான் ஸ்ரீ வித்யா கணபதிக்கு பூஜை முதலான வழிபாடுகள் நடக்கின்றன.

லலிதா சகஸ்ரநாமாவில் 'ஸ்ரீ வித்யா' என்ற திருப்பெயர் வருகிறது. அதற்கு சகல வித்தைகளுக்கும் முதன்மையாக விளங்குபவள் என்றும் தெய்வீக அழகுடையவள் என்றும், பொருள். ஸ்ரீ வித்யை மகாசக்தி படைத்தவள். ஆன்மிகவாதிகள் ஸ்ரீ வித்யையைப் பற்றி விரிவாக விளக்கிப் பேசுவார்கள்.

ஸ்ரீ வித்யா பல பிரிவு கொண்டவளாக உள்ளாள். யக்ஞ வித்யா, குஹ்ய வித்யா, பிரம்ம வித்யா, மஹா வித்யா என்று நான்கு ரூபங்களில் காணப்படுகிறாள்.

## ஸ்ரீ வித்யோபாசனையும் - மஹா கணபதியும்

ஸ்ரீ வித்யோ பாசனை முறையில் தொடக்கத்தில் ஸ்ரீ வித்யா கணபதி உபாசனை உள்ளது. ஸ்ரீ சக்கரத்தில் பூஜை செய்யும் தகுதி கணபதிக்குத்தான் முதன்மை ஸ்தானம் உள்ளது. மஹா கணபதிக்கு ஸ்ரீ சக்கரம் உண்டு. ஸ்ரீ வித்யா உபாசகர்கள் நவாவரண பூஜையில் ஷோடசாநியாசம் என்றதோர் அங்கம் (பகுதி) உண்டு. அதில் கணபதி நியாசமும் இடம் பெறும். கணபதி நியாசம் என்றால், உகந்த சூரிய நிறத்தோடும். யானை முகத்தோடும், மூன்று கண்களோடும். பாசம், அங்குசம் வரதம் போன்றவற்றுடனும் சக்தியுடன் கூடிய



விநாயகனைத் தியானிப்பது என்று பொருள்படக் கூறும் மந்திரமாகும்.

ஸ்ரீ மஹா கணபதியை 51 வித மாத்ருகா ஸ்தானங்களில் நியாசம் செய்யவேண்டும்.

## பஞ்சமுக விநாயகர் சக்தியின் வடிவமே!

மஹா கணபதி – சித்த கணபதி – சக்தி கணபதி–மோட்ச கணபதி – வித்யா கணபதி என்று இவ்வைந்து முகங்களோடு, 'பஞ்சமுக விநாயகர்' என்று அழைப்பர். இந்த விநாயகப் பெருமானோடு வித்யாவும் சக்தியும் இடம் பெறுகின்றனர்.

'ஐந்து' என்ற எண்ணில் சில விவரங்கள் உண்டு. ஐந்து திக்குகள், பஞ்சாட்சரம், பஞ்சகவ்யம், பஞ்சகோசம், பஞ்சதளம், பஞ்ச பிராமணங்கள், பஞ்சபூதங்கள் இப்படியாக ஐந்தின் மகிமையோடு விளங்குவதுதான் 'ஸ்ரீ வித்யா கணபதி' ரூபம். மேலும் சக்தியின் வாகனமான சிங்கத்தின் மீது ஐந்து முகங்களோடு காட்சி தருபவர் சக்தி விநாயகரே.

லலிதா சகஸ்ரநாமாக்களில் அம்பிகையை, பஞ்சமி, பஞ்சபூதேசி, பஞ்ச சங்க்யோபாசாரிணி என்று குறிப்பிடுவதெல்லாம், மஹா கணபதிக்கும் பொருந்தும். ஐந்து என்ற எண் உலகில் காணும் எல்லாப் பொருள்களிலும் சக்தியின் பரிமாணம் பரவியுள்ளது என்ற விவரம் தைத்ரீயோப நிஷத்தில் காணப்படுகிறது.

விநாயகப் பெருமானுக்கு ஐங்கரங்கள் இருப்பதாலும். ஐந்து முகங்களோடும் இருப்பதாலும் சக்தி தெய்வமாகவே விளங்குகிறார்.

யானை முகம் கொண்ட சக்தி தெய்வம் என்பதைவிட, சக்தியுடன் கூடிய 'ஸ்ரீ வித்யா கணபதி' என்றே கூறலாம்.

உருவ விளக்கம்: (வேதம்) ஸ்ரீ வித்யா கணபதிக்கு பன்னிரு கரங்கள் – சிரசில் பிறைச் சந்திரன் – மூன்று கண்கள் – சக்தியின் அம்சமாக இதய பாகம் இரு ஸ்தனங்களோடு காணப்படுகின்றன. பெண்களுக்குரிய அங்க அமைப்புகள் – துடி இடை – சிறு வயிறு (தொந்தியன்று) இடக்காலை மடக்கி, வலக்காலைத் தொங்கவிட்டு அமர்ந்த நிலையில் காணப்படுகிறார்.

## கரங்களும் அவற்றில் காணும் பொருள்களும்

வலக்கையில் – அமிருத கலசம் – இடக் கையில் சங்கிலி போன்ற ஆயுதம் – மற்றும் வலப்புறமுள்ள ஐந்து கரங்களும், இடப்புறம் ஐந்து கரங்களும், வலக்கைகள் ஐந்தில், கீழேயிருந்து மேல் நோக்கி வரம் – சூலம் – கரும்புவில் – கதாயுதம் – பிளந்த மாதுளம்பழம்.

இடக்கைகள் ஐந்தில் மேலிருந்து கீழ்ப் புறமாக, தாமரை – பாசக்கயிறு – ஆம்பல் மலர் – நெற்கதிர்– தன்னுடைய தந்தம்.

சிருங்கேரி சாரதா ஆலயத்தின் மேற்குப் பிராகாரத்தில் பத்துக் கரங்களுடன் சக்தி கணபதியைக் காணலாம். ஸ்ரீ வித்யா சங்கரர் ஆலயம் ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது. அமைப்பு: ஸ்ரீ வித்யா கணபதி தெற்கில் சந்நிதி (தெற்குத் திசை) கொண்டுள்ளார்.

இங்கு ஸ்ரீ வித்யா கணபதியின் சிற்பமும் அதையொட்டி வண்ண ஓவியமும். பஞ்சமுக கணபதி உருவங்களையும் காணலாம்,

சிருங்கேரியில்தான் 'ஸ்ரீ வித்யா கணபதி' கோயில் கொண்டுள்ளார் என்று ஊகிக்க முடிகிறது.

சுசீந்திரத்தில் உள்ள தாணுமாலேஸ்வரர் கோயிலில் உள்ள ஒரு தூணில் பெண் வடிவில் கணபதியின் சிற்பத்தைக் காணலாம். 'விக்னேஸ்வரி' என்று கூறுகிறார்கள். இரு கரங்களோடு, மெலிந்த இடையுடன் காணப்படும் கணபதி பெண் வடிவத்தில் இருந்தால் 'ஸ்ரீ வித்யா கணபதி' எனக் கூறலாம். ஒரு காலை மடக்கி மற்றொரு காலைத் தொங்கவிட்டு சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கிறார். இதைப் பற்றிய வேறு விளக்கம் தெரியவில்லை.

வட இந்தியாவில் ஜபல்பூர் அருகே 'பீராகேட்' என்ற தலத்தில் கணேசர் பெண் வடிவில் காட்சி தருகிறார். மதுரை சுந்தரேஸ்வரர் சந்நிதிக்குப் போகும்போது வலப்பக்கத் தூண் ஒன்றில் 'கணேசனி' என்ற பெயருடன் பெண் ரூபத்தில் விநாயகரைக் காணலாம். வடிவீஸ்வரம் ஆலயத்திலும் பெண் ரூபத்தில் வீணை வாசிப்பது போன்ற பிள்ளையார் காணப்படுகிறார்.

# விநாயகர் ஆயிரம்



## ஆயிரமும் கணபதியும்

ஆயிரம் என்பதை வரம்பிலா எண்ணிக்கையைக் குறிக்கும் ஒரு சொல்லாகவும் பயன் படுத்துகிறோம்.

பேச்சு வழக்கில் கூட 'ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கல்யாணம் செய்ய வேண்டும்' என்று சொல்லப்படுகிறது.

இறைவனுக்கு எண்ணிலாத நாமங்கள். எனவேதான் மணிவாசகர் இறைவனைப் 'பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெருமான்' என்றும், 'ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ?' என்றும் குறிப்பிட்டு மகிழ்கிறார்.

இதனால் எண்ணிலாத தன்மையே 'ஆயிரம்' என்று பேச்சுவழக்கில் குறிப்பதை உணர முடிகிறது.

விநாயகப் பெருமானுக்கும் ஆயிரம் என்ற எண்ணையொட்டிய பெயர்கள் உண்டு. அவற்றில் சிலவற்றை கவனிக்கலாம்.

## கரும்பாயிரம் கொண்ட விநாயகர்

ஒரு சமயம் கும்பகோணத்தில் ஒரு விழா நடைபெற்றது.

அந்த விழாவில் விற்பனை செய்ய கரும்பு வியாபாரி ஒருவன் தன் வண்டியில் கரும்புக் கட்டுக்களை ஏற்றிக்கொண்டு வந்தான்.

அவனிடம் விநாயகர் ஒரு சிறுவன் வடிவத்தில் சென்று, 'ஒரு கரும்பு வேண்டும்" என்று கேட்டார்.

கரும்பு வியாபாரியோ அவரை அடித்து விரட்டிவிட்டான்.

மறுநாள் கரும்பு வியாபாரி வியாபாரத்தைத் தொடங்கினான். கரும்பு நன்றாக விற்பனையாயிற்று.

ஆனால் சிறிது நேரத்தில் மக்கள் அவன் கடையின் முன் கூடினார்கள். அவன் விற்ற கரும்பில் கொஞ்சமும் சாறு இல்லை என்று இகழ்ந்து பேசி அவனை விரட்டினார்கள்.

அவன் பல இடங்களில் ஓடி இறுதியில் ஒரு விநாயகர் கோயிலில் தஞ்சம் புகுந்தான். அங்கு விநாயகர் ஒருகணம் சிறுவன் வடிவத்தில் அவனுக்குக் காட்சி தந்தார்.

வியாபாரி, நேற்று சிறுவனாக வந்தவர் விநாயகர் என்றும், அவரது திருவிளையாடலால் கரும்பு சக்கைகளாகி விட்டன என்பதையும் உணர்ந்தான்.

அவரிடம் அவன் மன்னிப்பு வேண்டினான்.

அவர் கேட்ட ஒரு கரும்புக்குப் பதிலாக ஓராயிரம் கரும்பை அவருக்குப் படைத்தான். விநாயகரும் அவனுக்கு அருள் புரிந்தார்.

இவர் 'கரும்பாயிரம் கொண்ட விநாயகர்' என்னும் பெயரில் கும்பகோணத்தில் எழுந்தருளியுள்ளார்.

## ஆயிரம் யானை திரை கொண்ட விநாயகர்


ஒருமுறை திருவண்ணாமலையை சிற்றரசன் ஒருவன் ஆட்சி செய்து வந்தான். அவனிடம் வடநாட்டு அரசன் ஒருவன் யானைகளைத் திரையாக செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தினான்.

சிற்றரசன் விநாயக பக்தன். அவன் திருவண்ணாமலையில் கிளிக்கோபுரத்தில் எழுந்தருளி யிருக்கும் விநாயகரைச் சரணடைந்தான்.

விநாயகர் வடநாட்டு அரசன் கனவில் தோன்றி, "நீ என் பக்தனைத் துன்புறுத்தினாய். ஆதலால் நீ எனக்கு ஆயிரம் யானைகளைத் திரையாகச் செலுத்த வேண்டும். தவறினால் என் யானைகள் அனைத்தையும் காட்டுக்கு அனுப்பிவிடுவேன்" என்றார்.

வடநாட்டு அரசன், கனவில் விநாயகர் கூறியதை லட்சியம் செய்யவில்லை. மேலும் அவன் விநாயக பக்தனான சிற்றரசனைப் பிடித்துச் சிறையிலும் அடைத்துவிட்டான்; அவனுடைய பட்டத்து யானையையும் பறித்துக் கொண்டான்.

அன்றிரவு வடநாட்டு அரசனின் யானைப் படை முழுவதும் கட்டறுத்துக்கொண்டு காட்டுக்குள் ஓடிவிட்டது. மறுநாள் இதை அறிந்த அரசன் மிகவும் அஞ்சி நடுங்கிச் சிற்றரசனை விடுதலை செய்தான்.



அவன் அந்த சிற்றரசன் கூறியபடி திருவண்ணாமலைக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் விநாயகரை வணங்கிப் போற்றித் தன்னைக் காத்தருளுமாறு வேண்டினான். ஆயிரம் யானைகளைத் திரையாகச் செலுத்துவதாகவும் பிரார்த்தனை செய்து கொண்டான்.

காட்டுக்கு ஓடிய யானைகள் ஒவ்வொன்றாகத் திரும்பி வந்தன. அரசனும் தான் பிரார்த்தித்துக் கொண்ட ஆயிரம் யானைகளைத் திரையாகச் செலுத்தினான். அன்று முதல் திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் இந்த விநாயகருக்கு 'ஆயிரம் யானைத் திரை கொண்ட விநாயகர்' என்ற பெயர் ஏற்பட்டது.

ஒரு சாண் உயரமே கொண்ட இந்தப் பெருமான் திருவண்ணாமலை ஆலயத்தில் சுவரில் புடைப்புச் சிற்பமாகவே எழுந்தருளியுள்ளார். பின்னாளில் உள்மண்டபம், முகமண்டபம் ஆகியவற்றைக் கட்டி இந்தச் சந்நிதி விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

## கணபதி ஆயிரம்

தென்னார்க்காடு மாவட்டம் திருவாமாத் தூரில் வாழ்ந்து இறை நிலை பெற்றவர் வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள்.

இவர் கணபதியை வியாழக்கிழமைகளில் வணங்கி அந்நாளில் 10 பாடல்கள் வீதம் ஓராயிரம் பாடல்கள் இயற்றினார். அந்த நூல் 'கணபதி ஆயிரம்' என்ற பெயரால் வழங்கி வருகிறது.

இந்த நூலில் விநாயகரின் எண்ணிலடங்காத இயல்புகளும் கருணையும் அருட் தன்மையும் விளக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி நகரில் எண்ணாயிரம் பிள்ளையார் என்ற பெயரிலும், ஆறுமுகமங்கலம் மற்றும் கிளாக்குளம் ஆகிய ஊர்களில் ஆயிரத்தெண் விநாயகர் என்ற பெயரிலும் விநாயகப் பெருமான் கோயில் கொண்டுள்ளார்.

நன்றி-
*இராமகிருஷ்ண விஜயம் - 1998*

நம் பாரதத் திருநாட்டிலும், பழமையான இந்து மதத்திலும் சிறப்பாகக் கொண்டாடப் பெறும் கீர்த்திமிகு மூர்த்தியே விநாயகர்!

அவர் எழுந்தருளாத ஊரே இல்லை!

கோயில் என்று ஒன்று கட்டிக் கொண்டா அவர் கொலு வீற்றிருக்கிறார்? இல்லையே, மூலை முடுக்குகளிலும், பட்டி தொட்டிகளிலும், ஆறு குளம், அருகினிலும், ஆல, அரச மரத்தடிகளிலும் எளிமையாக வீற்றிருந்து பக்தர்களின் கோரிக்கையைப் பரிவுடன் கவனிக்கிறார் அவர்!

மேலும் ஒரு சிறப்புச் செய்தி!

எல்லா மூலமந்திரங்களும் தோத்திரங்களும் 'ஓம்' என்னும் பிரணவத்தையே முடிமணியாக ஏற்றுள்ளன. இந்து மதத் தத்துவங்களிலேயே ஓங்காரத் தத்துவம் உச்சியிடம் வகிக்கின்றது. அந்த ஓங்கார வடிவமே விநாயகர் என்றால் அவர்தானே முதல் தெய்வம்! எனவே தான் இந்து மதத்தினர் ஆனைமுகனிலேதான் ஆலய வழிபாட்டையே ஆரம்பிக்கின்றனர்.

அவர் மூல முதல் தெய்வம் என்பதால்தான்



# நம்பிக்கை உடையோரை தும்பிக்கை காக்கும்

*திருப்புகழ்ச் செல்வர், கவிமாமணி மதிவண்ணன்*

இந்து மக்களின் இணையற்ற வழிபாட்டில் இரண்டறக் கலந்துவிட்ட தெய்வம் கணபதி! எனவே இந்தியக் கலாசாரம் பரவியுள்ள ஜாவா, பிலிப்பைன்ஸ், பர்மா, கம்போடியா, மலேயா, இலங்கை எனப் பன்னாடுகளிலும் விளங்கி வருகிறது விநாயக வழிபாடு.

மிகவும் பழமையானது ரிக்வேதம். அத்தகைய அநாதியான ரிக் வேதத்திலேயே இருக்கிறார் விநாயகர்! 'கணாணாம் த்வாம் கணபதீம் அவா மஹே' என்பது வேத வாக்கியம்.

வெறும் கும்பிடு மட்டும் அவருக்குப் போதாது. தோப்புக்கரணமும் குட்டும் அதிகப்படியான வழிபாடாக அவருக்கு மட்டுமே உரித்தாக்கி இருக்கிறது நம் மதம்.

*'வளர்கை குழைபிடி தொப்பண குட்டொடு*
*வனச பரி புர பொற்பத அர்ச்சனை மறவேனே!'*

என அற்புதமாகப் பாடுகிறார் அருணகிரிநாதர்.

விநாயகர் வழிபாடு, அன்பர்களுக்கு என்னென்ன தருகிறது தெரியுமா? கபிலதேவர் பாடுகிறார்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற மண்டலாபிஷேகத்தின் போது, சம்மாங்கோட்டாரின் அழைப்பையேற்று, தமிழகத்திலிருந்து வருகை தந்த திருப்புகழ்ச் செல்வர் - கவிமாமணி மதிவண்ணன் அவர்கள் ஆலயத்தில் சொற்பொழிவு நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கதாகும்.

*திருவாக்கும்; செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்*
*பெருவாக்கும் பீடும் பெருக்கும்; உருவாக்கும்*
*ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்*
*காதலால் கூப்புவர்தம் கை.*

வி – இல்லை. நாயகர் – தலைவர், தனக்குமேல் தலைவர் இல்லையென்னும் பொருளில் விநாயகர் என்னும் பேர் பெற்றார் அவர்.

தேகம் இல்லாதவர் விதேகர். மலம் அற்றவர் விமலன். அவ்வாறே தலைவர் என்னும் நாயகர் தனக்குமேல் இல்லாதவர் விநாயகர்.

யானைக்கு யார் தலைவர்?

அதை அங்குசம் கொண்டு அடக்குகிற யானைப்பாகன் தான்!

ஆனால் அந்த தெய்வீக யானைக்குத்தான் தலைவன் இல்லையே! அங்குசத்தை அவர் மேல் செலுத்த அதிகாரி இல்லை!

எனவே தான் அவர் கரத்திலேயே அங்குசம் இருக்கிறது.

'அங்குச பாச கர ப்ரசித்தன்' என இந்து மதத் தத்துவம் இயம்புகின்றது.

விநாயகர் தான் மேலான தலைவர். எனவே அவரை முதலில் வணங்க எக்காரியமும் இடையூறின்றி நிறைவேறும். அதனால்தான் ஆண்டுத் தொடக் கத்திலேயே அவருக்கு முதற்பூசை நிகழ்த்தி பிற செயல்களைப் பிறகு நிகழ்த்தினர் நம்மவர்கள்.

ஆண்டுத் தொடக்கமா விநாயக சதுர்த்தி நிகழும் ஆவணி மாதம்? என நீங்கள் அதிசயிக்கலாம்.

ஆம்! பண்டையோர் சூரியனுக்கு உரிய சிம்மராசிக்கான மாதம் ஆவணி என்பதால் ஆவணி முதற்கொண்டே மாதங்களை எண்ணி வருடத்தின் முதல் மாதமாக ஆவணியையே கொண்டிருந்தனர். இந்த உண்மையைத் தொல்காப்பிய சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் நன்கு விளக்குகிறார்.

இவ்வாறு ஆவணியை முதல் மாதமாகக் கொண்டு கணித்தமுறை சுமார் 7000 ஆண்டுகட்கு முந்தியது என்கின்றனர் வானநூல் ஆய்வாளர்கள்!

காலத்தால் முந்திய கணேசரை ஆவணி வளர்பிறை சதுர்த்தியில் வழிபடுவோம்! நம் வாழ்க்கையை விநாயகர் விளங்க வைப்பார். நலம் அடைவோம்!

விநாயகர் நான்மணிமாலை – பாரதியார் பாடிய ஒரு பக்திப்பனுவல். அதில்

*'நமக்குத் தொழில் கவிதை. நாட்டிற்கு உழைத்தல்;*
*இமைப் பொழுதும் சோரா திருத்தல். உமைக்கினிய*
*மைந்தன் கணநாதன் நம் குடியை வாழ்விப்பான்*
*சிந்தையே! இம்மூன்றும் செய்!'*

என்கிறார் தேசியகவி பாரதியார்.

விநாயகர் வழிபாடு வேறு என்னென்ன தரும்? பாரதியார், பட்டியலிடுகிறார், ஒரு பாட்டியல் தருகிறார்.


*கணபதி தாளைக் கருத்திடை வைப்போம்.*
*குணம் அதிற் பலவாம்; கூறக் கேளீர்!*
*உட்செவி திறக்கும்! அகக்கண் ஒளிதரும்!*
*அக்கினி தோன்றும்! ஆண்மை வலியுறும்!*
*திக்கெலாம் வென்று ஜெயக்கொடி நாட்டலாம்!*

.....................................................

*வித்தை வளரும்! வேள்வி ஓங்கும்!*
*அமரத்தன்மை எய்தவும் பெறலாம்!*

அதனால் தானே திலகர் திருவிழா திலகமாக விநாய சதுர்த்தியை விமரிசையாக ஆக்கினார்!

தேசியமும் தெய்வீகமும் இணைந்த தெய்வம் விநாயகர் என தேர்ந்தார் பாலகங்காதர திலகர்!



எவ்வாறு என்கிறீர்களா? விநாயக சதுர்த்தியில் அவரைக் களிமண்ணில் தானே காட்சிப்படுத்துகிறோம்! எனவே 'பூமியே சாமி! என்பதை விநாயகர் நமக்கு விளங்க வைக்கிறார்! விசர்ஜனத்திலும் மீண்டும் கடலில் கரைந்து பூமியோடு ஒன்றாகி ஐக்கியமாகிவிடுகிறார்.

'பூமியே சாமி; சாமியே பூமி!' என்கிற தத்துவத்தைப் புலப்படுத்தும் பூஜையே விநாயக சதுர்த்தி விழா!

தனிபெருந் தலைவரான விநாயகர் உருவத்தை உற்று நோக்கினால் ஆண், பெண், விலங்கு, பூதம், தேவர் என அனைத்தும் அவரிடம் சங்கமமாகி இருப்பது தெரியும்.

விநாயகருக்கு ஒரு தந்தம் தான்! 'ஏக தந்தாய நம' என வழிபடுகிறோம். ஆண் யானைக்குத்தான் தந்தம், பெண் யானைக்குத் தந்தம் கிடையாது என நாம் அறிவோம்!

எனவே தந்தம் உள்ள பகுதி ஆண்! தந்தம் இல்லாத பகுதி பெண்! அவரிடம் உள்ள பெருத்த வயிறும் குறுகிய கால்களும் பூத அம்சம்! தலை யானைத் தலை! எனவே விலங்கு, ஐந்து கைகள் தேவ லக்ஷணம்! எல்லாமாகிக் கலந்து நிறைந்தவரே பிள்ளையார்!

'எங்கும் எவையும் போல் தங்கும் அவன் தானே தனி என அறிவோம்! ஆனந்தம் பெறுவோம்! அவன் அடிமலர் பணிவோம்!

ஆம்! அவன் பாதத்தைப் பற்றினால் நமக்கு உயர்வு கிடைக்கும்! யானையின் மேலேற வேண்டுமானால் அதன் காலைத்தானே யாரும் பற்ற வேண்டும்.

கமண்டல நீரைக் கவிழ்த்து காவிரியை வரவழைத்தார் விநாயகர். கல்யாணத்தை முருகனுக்கு நிகழ்த்தியவர் விநாயகர். நம்பியாண்டார் நம்பிக்குச் சகல கலைகளையும் இமைப் பொழுதில் அறிவித்தவரும் அவரே; ஔவையாருக்கு அருளியவர், மகாபாரதத்தை மேருமலையில் வியாசர் சொல்ல எழுதியவர் என விநாயக புராணம் விரிக்க விரிக்கப் பெருகுகின்றது. அவர் அற்புதச் செயல்கள் கேட்டு மனம் உருகுகின்றது.

அவர் பேராற்றல் பெற்றவர்! அதனால்தான் இப்போதும் அசாத்திய காரியங்களைச் செய்து முடிப்பேன் என யாரேனும் சொன்னால் அவன் பெரிய கொம்பனா ? எனக் கேட்கிறார்கள். கணேசரைப் போல் கணக்கில்லாத ஆற்றல் பெற்றவனா என்பதே அதன் பொருள்! பொதுவாக தாய், தகப்பன், பாட்டன், தமையன் இவர்களுக்குதான் சிறப்பாக 'ஆர்' விகுதியை நமது தமிழ் இலக்கணம் தருகிறது. அதனால்தான் தாயார், தகப்பனார், தமக்கையார் என அழைக்கின்றோம். 'பிள்ளை' க்கு 'ஆர்' விகுதி பொருந்தாது. ஆனால் இவர் ஒருவருக்கு மட்டும் 'பிள்ளையார்' என சிறப்பு விகுதி தந்து அழைக்கிறோம் என்றால் இவர் பெருமை ஒரு கட்டுரையில் அடங்கிவிடுமா என்ன?

'பிடித்து வைத்தால் பிள்ளையார்'

'கணபதி பூஜை கைமேற்பலன்'

'நம்பிக்கை உடையவரைத் தும்பிக்கை காக்கும்!'

எனப் பழமொழிகளில் உலா வருகிறது பிள்ளையார் பெருமை!

மகிமையில் சிறந்த இத்தகைய மகாகணபதி எவ்வளவு எளிமையாக நமக்காக இறங்கி வருகிறார் பாருங்கள்!

மற்றத் தெய்வங்கட்கு உருவம் அமைக்க வேண்டுமானால் ஆகம சாஸ்திரப்படி செய்ய வேண்டும். ஒரு சிறு குறைபாடு இருந்தாலும் அது வழிபாட்டிற்குப் பொருந்தாது.

ஆனால் பிள்ளையாரோ மண், மஞ்சள் ஏன் சாணம் எதில் பிடித்து வைத்தாலும் அருள் பாலிக்கிறார். அதனால்தான் 'பிடித்து வைத்தால் பிள்ளையார்' என்கிறோம். அதில் குறைபாடு ஏற்பட்டாலும் அவருக்கு நிறைவே! அதனால் வெல்லத்தில் பிள்ளையாரைச் செய்து அதையே கிள்ளி நிவேதனம் செய்தாலும் அவர் அகம் மகிழ்வார்!

தன் தந்தத்தைத் தானே ஒடித்துக் கொண்டவர் தானே அவர்!

வியாசர் மகாபாரதத்தைச் சொல்லச் சொல்ல, அந்த 60 லட்சம் கிரந்தங்களையும் மேருமலையில் எழுதினார் விநாயகர்.

மலையில் எழுத வலிமையான எழுதுகோல் வேண்டுமே! எதன் மூலம் எழுதினார் தெரியுமா?

தன் அழகான உறுதியான தந்தத்தை ஒடித்து எழுதினார்! யானைக்குத் தந்தம்தான் அழகு! அந்த அழகான தந்தம் போனாலும் பரவாயில்லை. அறிவான மகாபாரதக் கிரந்தம் மக்களுக்குக் கிடைக்கட்டும் என்ற உயரிய நோக்கம் அவருக்கு! வில்லிபுத்தூர் ஆழ்வார் இதை விமரிசையாகப் பாடுகிறார்!

*'நீடாழி உலகத்து மறை நாலொடு ஐந்து என்று*
*நிலைநிற்கவே*
*வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம்*
*சொன்னநாள்*
*ஏடாக மாமேரு வெற்பாக அங்கூர் எழுத்தாணி தன்*
*கோடாக எழுதும் பிரானைப் பணிந்து அன்பு*
*கூர்வாமரோ!*

ஆவணி வளர்பிறை சதுர்த்தியில் விநாயகரை வழிபடுகிறோம். தன்னிகரற்ற அவரைத் தங்கம், வெள்ளியிலோ உருவம் செய்து பூஜிக்கின்றோம்? இல்லையே!

களிமண்ணில் வடிவம் ஏற்கிறார்! எருக்கம் பூ மாலையை ஏற்றுக் கொள்கிறார்! பூஜை செய்ய பூ வேண்டாம், புல் போதும் என்று அருகம் புல்லால் அர்ச்சிக்கச் சொல்கிறார். வெண்கொற்றக்குடை விரித்து வைக்கவேண்டும் என்றா விளம்புகிறார்? காகிதக்குடை போதும். கனிந்த அன்புடன் எளிமையாய்ச் செய்யும் எதனையும் ஏற்கிறார், பெருமைக்கு உகந்த பிள்ளையார்.

ஸ்ரீ கணேச பஞ்ச ரத்னத்தில் ஆதிசங்கரர் 'முதாகராத்த மோதகம் சதாவிமுக்தி சாதகம்' என்கிறார்.

கொழுக்கட்டை செய்து விநாயகரை வழிபடுகிறோம். மோதகம் நிவேதனம் செய்தால் நம் பாதகம் களையப்படுகிறது. அனைத்தும் சாதகம் ஆகிறது.

பிள்ளையார் வடிவம் பற்றி நிறையவே சிந்தித்து விட்டோம்! அவருக்கு நிவேதனம் செய்யும் கொழுகட்டையையும் கொஞ்சம் பார்ப்போமே!

அரிசி மாவில் சொப்பு போல செய்கிறோம். தித்திக்கும் வெல்லத்தில் பூரணம் செய்து அதில் வைக்கிறோம். கொழுக்கட்டையை அர்ப்பணிக்கிறோம்.

மேலே வெண்மையாக விளங்கும் அரிசி சொப்புதான் உடம்பு. அதில் பூரணமாக விளங்கும் வெல்லம்தான் ஆத்மா, இரண்டையும் அவர்கையில் ஒப்படைத்துச் சரணடைகிறோம் என்றால் நம்மைப் பரிபூரணமாக அவரிடம் தருகிறோம் என்பதுதானே பொருள்!

கடிதமா? பிள்ளையார் சுழி

கட்டிடமா? கணபதி ஹோமம்!


கல்யாணமா? மஞ்சள் பிள்ளையார்!

தேசிய தெய்வீகமா? விநாயக சதுர்த்தி விழா!

என நம் வாழ்வைச் சிறப்புறப் பொலிய வைக்கும் விநாயகர் வெற்றி அளிக்கும் விநாயகர் தானே!

அவரை வழிபடுவோம்! அனைத்திலும் முதல் நிற்போம்! "வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்!"

இலங்கையின் மாவட்டங்கள் தோறும் நூற்றுக்கணக்கான பிள்ளையார் கோயில்கள் உள்ளன. ஆயினும் சில ஆலயங்கள் மிகவும் புகழ்பெற்றவை. பழம்பெருமை காரணமாகவும் சாந்நித்தியம் காரணமாகவும் இவை பக்தர்களால் ஈர்க்கப்பட்ட ஆலயங்கள். இங்கு குறிப்பிடப்படும் ஆலயங்கள் பற்றிய விபரங்கள் 1984ம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார அமைச்சு வெளியிட்ட "இலங்கையின் இந்துக் கோயில்கள்" எனும் நூலிலிருந்து பெறப்பட்டவையாகும்.



# இலங்கையின் புகழ் பெற்ற பிள்ளையார் கோயில்கள்

## வில்லூன்றி, ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில்

*வில்லூன்றி*

இராமபிரான் தனது வில்லை ஊன்றி ஏற்படுத்திய நன்னீர் ஊற்றினை உடையமையால் இப்பதி வில்லூன்றி எனப் பெயர் பெற்றது. இராமபிரான் சிவபூசை செய்த இடமாதலால் பூர்வ தனுஷ்கோடி எனக் கருதப்படுகிறது. முற்காலத்திலே சிவாலயம் ஒன்று இருந்ததாக ஐதீகம். பின்னர் 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட விநாயகர் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டார். நூறு வருடப் பழமை வாய்ந்த கல்வெட்டுக்கள், சாசனங்கள், திருவூஞ்சற் பாடல்கள் இங்கு உள்ளன. மூலமூர்த்தி வீரகத்தி விநாயகர். தினமும் ஆறு காலப் பூஜைகள் நடைபெறுகின்றன. வைகாசி அமாவாசையை இறுதி நாளாகக் கொண்டு பத்துத் தினங்களுக்கு வருடாந்த மகோற்சவம் நடைபெறுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றையும் கொண்ட பெருமைபெற்ற ஓர் ஆலயம் இதுவாகும்.

## அரியாலை, ஸ்ரீ சித்திவிநாயகர் கோயில்

*நீர்நொச்சித்தாழ்வு. அரியாலை, யாழ்ப்பாணம்*


கச்சிக் கணேசய்யரால் சுமார் 100 ஆண்டுகட்கு முன் ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு. சித்திவிநாயகர் விக்கிரகம் இந்தியாவிலிருந்து தொண்டை நாட்டைச் சேர்ந்த யாழ்ப்பாடியின் காலத்தில் அவரின் முதல் அமைச்சர் சேதிராயரின் வேண்டுகோளின்படி கச்சிக் கணேசய்யர் என்னும் அந்தணரினால் கொண்டு வரப்பட்டு இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. இவ்விவரத்தை யாழ்ப்பாண சரித்திர நூல் ஆசிரியர்

ஸ்ரீமான் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை யாழ்ப்பாண சரித்திரத்தில் (பக்கம் 11) கூறியுள்ளார். இது சேதுராயரால் கட்டப்பட்டது. மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள்– கொடித்தம்பப் பிள்ளையார். பஞ்சமுக விநாயகர், கந்தசாமியார், சனீஸ்வரன். நான்கு காலப்பூசை நடைபெறுகிறது. ஆனி மாதத்தில் 11 நாட்களுக்கு மகோற்சவம் நடைபெற்றும். 10 ஆம் நாள் தேரும், 11 ஆம் நாள் தீர்த்தமும் நடைபெற்று மகோற்சவம் முடிவுறுகின்றது.

## ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் கோவில்

*பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

1880 ஆம் ஆண்டு கோண்டாவில் கிழக்குச் சந்தியில் இருந்த மடத்தில் ஆரம்பமாகிப் பின்னர் ஆலயமாக ஸ்தாபிக்கப்பட்டது. மடம் இருந்த இடத்தில் கந்தபுராணப் படிப்பு நடைபெற்று வந்தது. வேல் ஒன்று வைத்துப் பூசை செய்யப்பட்டதாக வரலாறு உண்டு. 1965 ஆம் ஆண்டில் இந்த மடம் இருந்த இடத்தில் ஆலயம் ஒன்று அமைக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் 1972 ஆம் ஆண்டு புனருத்தாரணம் செய்யப் பட்டு அரசடிப் பிள்ளையார் என்றும், ஆசிமட விநாயகர் என்றும் அழைக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. மூலமூர்த்தி – விநாயகர். தினமும் காலை, மாலைப் பூசைகள் நடைபெறுகின்றன. ஆவணிச் சதுர்த்தியில் முடிவடையும் வண்ணம் அலங்கார உற்சவம் நடைபெற்று வருகின்றது. கார்த்திகையில் இருபத்தொரு நாட்களுக்குப் பெருங்கதையும் தொடர்ந்து அபிஷேகமும் நடைபெற்று வருகின்றன. கந்தையா சுவாமிகள் (குடைச் சாமியார்) குருபூசை கார்த்திகை நட்சத்திரத்தில் நடைபெற்று வருவதுடன் நல்லூர்க் கந்தனின் உற்சவ காலங்களில் தண்ணீர்ப்பந்தல் அமைத்து தாகசாந்தியும் வழங்கப்படுகின்றது.



## நெழுவினி சித்திவிநாயகர் கோயில்

*நெடுந்தீவு மேற்கு, நயினாதீவு*

போர்த்துக்கீசர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் தென்னிந்தியாவிலிருந்து இங்கு வந்து குடியேறிய மக்களால் மூலமூர்த்தி கொண்டுவரப்பட்டு ஆலயம் தாபிக்கப்பட்டதாக வரலாறு. அக்காலத்தில் இருந்தே பெரியதுறை என்ற துறைமுகத்துடன் தொடர்புடையதாக இருந்து வந்திருக்கிறது. இத்துறைமுகத்திலிருந்து இந்தியாவின் இராமேஸ்வரம் போன்ற புனிதத் தலங்களுக்குப் பூவும் பாலும் அனுப்பப்பட்டு வந்ததாக வரலாறு உண்டு. இத்தொடர்புடைய மக்கள் இந்தியாவிலிருந்து இலிங்கத்தைக் கொண்டுவந்து வழிபட்டதாகவும், போர்த்துக்கீசர் காலத்தில் ஏற்பட்ட கலவரங்களின்போது மறைத்து வைத்ததாகவும் அறியக்கூடியதாக இருக்கிறது. இவ்வாலயத்தில் ஐநூறு ஆண்டுகளுக்கு மேலாக உற்சவம், மகோற்சவம் நடைபெற்று வருகிறது. கல்வெட்டுக்கள், சாசனப் பாடல்கள் ஆகியனவும் உள்ளன. விநாயகருக்கு என்று எழுதப்பட்ட உறுதிகள், ஊஞ்சல் பாடல்கள் என்பனவும் உண்டு. மூலமூர்த்தி – விநாயகர். பரிவாரமூர்த்திகள் – வைரவர், சுப்பிரமணியர், சண்டேசுவரர். நாயன்மாருடைய விக்கிரகங்களும் பூசைக்கு வைக்கப்பட்டுள்ளன. தினமும் மூன்று காலப் பூசை நடைபெறும். ஆவணிச் சதுர்த்தி போன்ற தினங்களில் அபிஷேகங்களும் அன்னதானமும் நடைபெறும். மாதச் சதுர்த்தி, சிவராத்திரி போன்ற

விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகளும் நடைபெற்றுவருகின்றன. பங்குனி இருபத்திரண்டாந் திகதி கொடியேறி சித்திரை வருடப்பிறப்பன்று தீர்த்தோற்சவத்துடன் திருவிழா முடிவுறும்.

## மருதடி விநாயகர் கோவில்

### *மானிப்பாய்*

இவ்வாலயத்தை மருதடிப் பிள்ளையார் கோவில் எனவும் வழங்குவர். மருத மரத்தில் விநாயகர் தானாகத் தோன்றியதாக ஐதீகம். தினமும் நான்கு காலப் பூசை. சித்திரை வருடப் பிறப்பன்று தேர் அமையக்கூடியதாக 18 நாட்கள் மகோற்சவம் நடைபெறுகிறது. கைலாய வாகனம், 10 ஆம் திருவிழா மஞ்சம், 16 ஆம் திருவிழா சப்பறம் ஆகியன விசேட திருவிழாத் தினங்களாகும். இரு கோபுரங்கள் கிழக்கிலும் மேற்கிலுமாக அமைந்திருக்கின்றன. சிவன், அம்பாள், நடேசர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகள் இங்குள்ளனர்.

## ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்

### *மடத்துவாசல், இணுவில் தெற்கு, இணுவில்*

யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசன் பரராஜசேகரனால் வணங்கப்பட்ட சிறப்பையுடையது இவ்வாலயம். இங்கு மூலமூர்த்தியாக விநாயகர் வீற்றிருக்க பஞ்சமுக விநாயகர், லட்சுமிதேவி, சுப்பிரமணியர், வைரவர், நவக்கிரகம், சண்டேஸ்வரர் ஆகியோர் பரிவாரமூர்த்திகளாக எழுந்தருளி உள்ளனர். இங்குள்ள கண்ணன் விக்கிரகம் காலிங்கநர்த்தன வடிவம் கொண்டது. வைகாசிச்சதய நட்சத்திரத்திற் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தேர்த்திருவிழா திருவாதிரை நட்சத்திரத்தில் இடம்பெறும். தீர்த்த உற்சவத்துடன் மகோற்சவம் முடிவடைகின்றது. இங்கு மூன்று தேர்கள் இழுக்கப்படுகின்றன. ஆலயத்திற் சிற்ப ஓவிய வேலைப்பாடுகள் சிறப்பாகக் காணப்படுகின்றன.

## செகராசசேகரப் பிள்ளையார் கோவில்

### இணுவில்

யாழ்ப்பாணத்தை ஆண்ட மன்னன் பரராஜசேகரனது தம்பி செகராசசேகரனால் கி. பி. 1475இல் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. சிவஸ்ரீ வேதாரணியக் குருக்கள் அவர்களின் பரம்பரையினரே அன்று முதல் இன்றும் கோவிற் பூசைகளைச் செய்து வருகின்றார்கள். மூலமூர்த்தியாகப் பிள்ளையார் வீற்றிருக்கின்றார். பரிவார மூர்த்திகள் – உற்சவ விநாயகர், வேல், சந்தான கோபாலர், வைரவர், சண்டேஸ்வரர் ஆகியோர். தினமும் மூன்றுகாலப் பூசை. சித்திரைப் பூரணை அன்று தேர் நடைபெற அதற்கு முந்திய பதினொரு தினங்களும் மகோற்சவம் நடைபெறும். வருடாவருடம் திருச்செந்தூர்ப் புராணம், பிள்ளையார் கதை ஆகியன படிக்கப்படுகின்றன.

## வள்ளக்குளம் ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோவில்

### *மறவன்புலோ, சாவகச்சேரி*

வெள்ளிக்கிழமைகளில் மூன்று காலப் பூசைகளும், ஏனைய நாட்களில் இரண்டு காலப் பூசையும் நடைபெறுகின்றன. சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சந்நியாசியார் ஒருவர் தனது ஆத்மார்த்த பூசைக்காக இந்தியாவிலிருந்து ஒரு விநாயகர் திருவுருவத்தைக் கொண்டுவந்து ஸ்தாபித்தார். அந்த விக்கிரகமே இப்பொழுதும் வழிபாட்டிலிருக்கும் மூலவர். இத்தலத்தில் சந்நியாசிமாரின் வழிபாடு தொடர்ந்து இடம்பெற்றது. 1939 ஆம் ஆண்டு நிகழ்ந்த சிவராத்திரித் தினத்தன்று பகலும் இரவும் ஒரே இடத்திலிருந்து இந்த விநாயகரைக் கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் வழிபட்டார்களென்றும் அவர்களின் மௌன வழிபாட்டை அன்று ஏராளமானோர் நேரில் கண்டனர் என்றும் சொல்லப்படுகிறது. தலவிருட்சம் மருது. மாதச் சதுர்த்தி விழாவோடு இதர முக்கியமான சமய விழாக்களும் அனுஷ்டிக்கப்படுகின்றன.

## ஸ்ரீ காட்டு விநாயகர் கோவில்

### *முள்ளியவளை*

பரராசசேகர வன்னியனால் பரிபாலிக்கப்பட்ட வரலாற்றையுடையது. ஆலயத்தைப் பற்றிய கர்ண பரம்பரைக் கதைகளும் நாட்டுப் பாடல்களும் உள்ளன. மூலமூர்த்தி – வெள்ளைக்கை நாச்சனால் கொண்டு வரப்பட்ட விக்கிரகம், பரிவார மூர்த்திகள் – கண்ணகை,

சுப்பிரமணியர், வைரவர், நாகதம்பிரான். வெள்ளிக்கிழமைகளில் மூன்றுகாலப் பூசை உளது. மற்றைய தினங்களில் இரண்டு காலப் பூசை உண்டு. வைகாசிப் பூரணைத் திங்களை இறுதியாகக் கொண்டு எட்டு நாட்களுக்குத் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. புராண படனமும் இங்கு நடைபெறும்.

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்

*ஊற்றங்கரை வீதி,*

*முல்லைத்தீவு*

150 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. பண்டார வன்னியன் காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. வசந்தன் கும்மி, திருவூஞ்சல், ஊற்றங்கரை சித்திவிநாயகர் வெண்பா ஆகிய நூல்கள் உண்டு. மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள் – பாலதண்டபாணி, வைரவர். தினமும் மூன்றுகாலப் பூசை உளது. சித்திரைப் பூர்வபட்ச சதுர்த்தியன்று கொடியேறிப் பதினொரு தினங்களுக்கு உற்சவம் நடைபெறும்.

## கனகராய பிள்ளையார் கோவில்

*கனகராயன்குளம்*

*மாங்குளம்*

நூறு வருடப் பழமையான கோவில். 1989 ஆம் ஆண்டில் கனகராயன்குளம் புனருத்தாரணம் செய்யப்பட்டபோது ஆலயமும் புத்துயிர்பெற்றது. ஒரு சில விக்கிரகத்தை வைத்துப் பூசித்து வந்த இப்பகுதி மக்கள் 1962 ஆம் ஆண்டில் பிள்ளையார் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்தனர். வெள்ளிக்கிழமை தோறும் பூசை நடைபெறும். பிரதிமாதத்திலும் விக்னேஸ்வர சதுர்த்தியிலும் விசேட பூசைகள் நடைபெற்று வருகின்றன.

## ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்

*புதுக்குளம் வவுனியா*

1850 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. ஊஞ்சல் பாடல்கள் உண்டு. மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள் – வைரவர், முருகப் பெருமான். மாணிக்கவாசக சுவாமிகளும் உளர். பிள்ளையார் கதை, விநாயக சதுர்த்தி, திருவெம்பாவை சிறப்பாக நடைபெற்று வருகின்றன. விசேட நாட்களில் அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகிறது.

## மாமாங்கப் பிள்ளையார் கோவில்

*மாமாங்கேஸ்வரம்,*

*மட்டக்களப்பு*

கிழக்கிலங்கையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமைந்த தலம் மாமாங்கேஸ்வரமாகும். மூலஸ்தானத்தில் சிவலிங்கம் உள்ளது. எனினும் பெரும்பாலும், விநாயகர் அங்கியுடனே சிவலிங்கம் காட்சியளிப்பதால் மாமாங்கப் பிள்ளையார் என்று பக்தர்களினால் அன்பாக மூலமூர்த்தி அழைக்கப்படுகிறார்.

இத்தலத்திலுள்ள சிவலிங்கம் ஸ்ரீ இராமபிரானால் ஆக்கப்பட்டுப் பூசிக்கப்பட்டதென ஐதீகம் உள்ளது.

வருடாந்த உற்சவம் ஒன்பது தினங்கள் நடைபெற்று தீர்த்தத்துடன் முடிவடைகிறது. ஆடி அமாவாசைத் தினத்தன்று வருடாந்த தீர்த்தோற்சவம் நடைபெறும். தீர்த்தோற்சவத்தன்று சிவன், சக்தி, பிள்ளையார் ஆகிய மூன்று மூர்த்திகளும் எழுந்தருளிக் காட்சி கொடுப்பர். சிவனுக்கும் பிள்ளையார்க்கும் ஒன்றாகப் பூசை நடைபெற்று வருகிறது. இவற்றைத் தவிர விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

விநாயக சஷ்டி காலத்தில் கஜமுகாசுரன் போர் விழா மிகக் கோலாகலமாக இடம்பெறுகின்றது. 1888 ஆம் ஆண்டில் இங்கு முதலாவது கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. அக்காலம் முதல் கொடியேற்றத்தை



அடுத்து ஐந்து திருவிழாக்கள் நடைபெற்று தீர்த்தோற்சவம் இடம் பெற்றுள்ளது. தற்பொழுது திருவிழா முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

## ஸ்ரீ மாவேற்குடாப் பிள்ளையார் கோவில்

### *திருப்பழுகாமம், பெரியபோரதீவு*

கிழக்கு மாகாணத்தில் குளக்கோட்டரசராலும், அவர் பிரதிநிதிகளாலும் புனருத்தாரணஞ் செய்யப்பட்ட சம்புநாவற்பதி (கோயிற்போரதீவு)ச் சித்திவேலர் ஆலயத்துக்குத் திருப்பணி வேலைகளுக்காகத் தென்னிந்தியாவிலுள்ள காரைக்கால், மருங்கூர் ஆகிய இடங்களிலிருந்து ஆறு குடி வேளாளர் வரவழைக்கப் பட்டிருந்தனர். இவர்கள் அத்தியார்குடி, வைத்தியனார் குடி என்று அழைக்கப்பட்டனர். தமது இருப்பிடமாகிய ஸ்ரீ மாவேற்குடாவில் கோவில் ஒன்றை அமைத்து முருகப்பெருமானின் தங்கவேல் ஒன்றை மூலமூர்த்தியாக வைத்து வழிபட்டு வந்ததாகவும், பின்னர் இவர்கள் குடிபெயர்ந்து பழுகாமம் சென்றபோது இந்த இடம் காடாகி விட்டதாகவும் கர்ண பரம்பரைக் கதை கூறுகிறது. அப்பொழுது கோவிலின் பெயர் "ஸ்ரீ மாவேற்குடையார்" என்றிருந்தது. பின்னர் பிள்ளையாரும் இருப்பிடம் கொள்ள, "ஸ்ரீ மாவேற்குடாப் பிள்ளையார் கோவில்" எனப் பெயர்பெற்றது.



போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்ட புராதன ஆலயங்களில் இதுவும் ஒன்று. 1960 ஆம் ஆண்டில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. மூலமூர்த்திகளாக பிள்ளையாரும் முருகனும் உள்ளனர். பரிவார மூர்த்திகள் நாகதம்பிரபான், ஸ்ரீமாவேற்குடாக்காளி. தினமும் ஒரு காலப் பூசை. ஆனி உத்தரம், கந்தசஷ்டி, விநாயகர் விரதம், நவராத்திரி போன்ற தினங்களில் விஷேட பூசை வழிபாடுகள் உண்டு.

## ஸ்ரீ விநாயகர் கோவில்

### *கட்டுக்குளம், திரியாய், திருகோணமலை*

குளக்கோட்டு மன்னன் கல்வெட்டு வரலாற்றின்படி கோணேசர் ஆலயத்திற்குத் தாமரை, நூல் திரியும், பசு நெய்யும் பூசைக்கு வழங்கும் புனிதப் பணியை இக்கிராம மக்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் அதற்காக அக்கிராமத்தில் ஏழு தாமரைக் குளங்கள் அமைக்க வேண்டுமென்றும் பரராசசேகரன், செகராசசேகரன் என்ற சிற்றரசர்களுக்கு குளக்கோட்டு மன்னன் ஆணை பிறப்பித்தானென்றும் கட்டளையைக் கருத்திற் கொண்டு திருக்குளங்கள் அமைக்கும் சீரிய பணியை சிற்றரசர்கள் மேற்கொண்டார்களென்றும் சாசனம் சான்று பகர்கிறது. திரி – தாமரை நூற்திரி, ஆய் – பசுநெய், தாமரை நூற்திரியும் பசுநெய்யும் வழங்கக் கடமைப்பட்டவர்கள் இக்கிராமத்தில் வாழ்ந்தமையால் திரியாய் என்ற காரணப் பெயர் இக்கிராமத்திற்குச் சூட்டப்பட்டது. திரியாயில் அமைக்கப் பட்ட ஏழு குளங்களில் கட்டுக்குளம் ஒன்றாகும். கட்டுக்குளத்தின் கட்டுவேலை நடைபெற்றுவரும் நாட்களில் தினமும் இராக்காலங்களில் யானைகள் வந்து குளக்கட்டை மிதித்துச் சிதைத்து அட்டகாசம் புரிந்து வந்ததையிட்டு மன்னன் கலங்கிக் கோணேசப் பெருமானைத் தியானித்து வந்தான். ஒருநாள் இரவு, மன்னன் கனவிலே இறைவன் தோன்றி அமைக்கும் குளத்திற்கு அருகாமையில் கீழ்த்திசையிலே வீரமர நிழலிலே விநாயகப் பெருமான் வீற்றிருக்கிறார். அவரைப் பூசித்துக் கட்டு – குளம் என்று திருவாய் மலர்ந்தருளினார் என்றும், இக்கட்டளையை ஏற்று குளத்தை நோக்கிச் சென்றபோது வீரமர நிழலிலே விநாயகப்பெருமான் வீற்றிருந்ததாகவும், அவரைப் பூசித்துக் குளத்தைக் கட்டியதாகவும் வரலாறு உண்டு. "வீரையடி விநாயகரை வழிபட்டு கட்டுகுளம்" என்று

அசரீரி ஆணையிட்டமையினால் அக்குளத்திற்குக் கட்டுக்குளம் என்ற பெயர் வந்தது. நாளடைவில் அது கட்டுக்குளம் என்று வழங்கலாயிற்று. இக்குளத்தில் ஆண்டுதோறும் மலரும் தாமரை மலர்களைக் கொய்து வீரையடி விநாயகருக்குச் சமர்ப்பித்த பின்னரே திரி தயாரிப்பர்.

பொங்கல் விழா, சித்திரைப் பௌர்ணமி போன்ற விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

## தஞ்ச விநாயகர் கோவில்

### *6ஆம் வட்டாரம், திரியாலை, திருகோணமலை*

இருநூற்றைம்பது வருடங்கள் பழமை வாய்ந்தது. கல்லம்பத்தை என்ற பகுதியில் முன்னொருகால் பயிர்களுக்கு நோய் ஏற்பட்டது. அத்தோடு யானைகளும் அட்டகாசம் புரிந்ததாகக் கூறப்படுகிறது. தஞ்சாவூர் தாடிச்சாமியார் என்பவரால் ஒரு குளத்தில் கண்டெடுக்கப்பட்ட விநாயகர் விக்கிரகம் பூசைக்கு வைக்கப்பட்டுள்ளது. இதைத் தொடந்து பயிர்களின் நோய்கள் நீங்கியதுடன். யானைகளின் அட்டகாசமும் நின்று விட்டது என்பது வரலாறு. அந்த நேரத்திலிருந்து பொங்கல் விழா இங்கு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அறுவடை செய்த நெல்லிலிருந்து பொங்கல் செய்து வருகின்றார்கள். சித்திரை புதுவருடப் பிறப்பன்று பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. தஞ்சாவூர்ச் சுவாமியாரால் ஸ்தாபிக்கப்பட்ட கோயில் என்பதால் தஞ்ச விநாயகர் கோயில் என்றும், கல்லம்பத்தைப் பகுதியில் அமைந்திருப்பதால் கல்லம்பத்தை விநாயகர் கோயில் என்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. தினமும் ஒருகாலப் பூசை நடைபெற்று வருகிறது. விதைப்பு, அறுவடை காலங்களிலும் விசேட பொங்கல் நடைபெறும்.

## ஆனைப்பந்திப் பிள்ளையார் கோவில்

### *புளியந்தீவு மட்டக்களப்பு*

கிழகிலங்கையின் மட்டக்களப்புத் திருநகரில் ஆனைப்பந்திப் பதியில் எழுந்தருளியுள்ளவர் ஆனைப்பந்திப் பிள்ளையார். புலியன் என்ற வேடர் குலத் தலைவன் அரசு புரிந்த இடமாகையால் முன்னாளில் இவ்விடம் ''புலியந்தீவு'' என அழைக்கப்பட்டு, பின்னாளில் ''புளியந்தீவு'' எனப் பெயரைக்கொண்டது. இவ்வாலயத்தில் மூலமூர்த்தியாகப் பிள்ளையார் எழுந்தருளியுள்ளார். இங்கு சிவகாமி அம்பாள் சமேத நடராஜப் பெருமானும், தேவியர் சமேத சுப்பிரமணியரும், பழனியாண்டவரும், மனோன்மணி அம்பாளும், வைரவர், சஸ்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகளும், பரிவார மூர்த்திகளாக எழுந்தருளியுள்ளனர். அத்தோடு சிவலிங்கம், பார்வதி அம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கும் தனித்தனிக் கோவில்கள் இங்குள்ளன.

இக்கோவிலில் தினமும் மூன்று காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் பூசை மிகச் சிறப்பானது. மாத உற்சவமாக விநாயகப் பெருமானின் சதுர்த்தி உற்சவமும், முருகப்பெருமானின் கார்த்திகை உற்சவமும், அம்பாளின் பௌர்ணமிக்கான விசேட அலங்காரப் பூசையும் நடைபெற்று வருகின்றன. சித்திரா பௌர்ணமிக்குத் தீர்த்தோற்சவம் வரக்கூடியதாக முதல் பத்து தினங்களுக்கும் உற்சவம் நடைபெற்று அமிர்தகளி மாமாங்கேஸ்வரர் ஆலயத் திருக்குளத்தில் தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த மகோற்சவம் முடிவடையும்.



இம் மகோற்சவத்தில் வேட்டைத் திருவிழாவின் போது சுவாமி, திரௌபதை அம்மன் கோவிலுக்கு எழுந்தருளி வேட்டையாடி தமது கோவிலுக்குத் திரும்புவார். ஆனி உத்தரத்தன்றும், மார்கழித் திருவாதிரையன்றும் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கான அபிஷேகமும், ஆவணி ஓணத்தன்று பிள்ளையாருக்கும், மனோன்மணி அம்பாளுக்கும் மணவாளக்கோல விழாவும் அதி சிறப்பாக நடைபெறுகின்றன. புரட்டாதிச் சனிக்கிழமைகளில் விசேட பூசைகளும் நடைபெறுகின்றன. கார்த்திகை சோமவாரத்தில் விசேட அபிஷேக வழிபாடுகளும், சிறப்பாக நடைபெறுகின்றன. கேதார கௌரி விரதமும், விநாயக சஷ்டி விரதமும் இங்கு சிறப்பாக இடம்பெறுகின்றன.

## ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்

*பாண்டிருப்பு 1ஆம் குறிச்சி கல்முனை*

450 வருடங்களுக்கு முன்பாக கலிங்க தேசத்துச் சிற்றரசன் மன்னசிங்கன் இவ்வாலயத்தைப் பரிபாலித்து வந்ததோடு திருப்பணிகளைச் செய்து காணிகளையும் (நிந்தகம்) வழங்கியுள்ளார் என்பது வரலாறு. மட்டக்களப்பு மான்மியம், தாதன் கல்வெட்டுக்கள், உறுதி சாதனங்களில் இக்கோவில் பற்றி கூறப்பட்டுள்ளது. புரட்டாதிப் பூரணைக்கு முன்னுள்ள பதினெட்டு நாட்களில் வருடாந்த உற்சவம் நடைபெறுகிறது. மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள் – முருகன், விஷ்ணு, நவக்கிரகங்கள், வைரவர். தினமும் பூஜை உண்டு. விஷேட தினங்களில் விஷேட பூசை வழிபாடுகள். பழங்காலந்தொட்டு பதினெட்டுக் குடிவழியினரின் பெண் உரிமைப்படி பரிபாலிக்கப்பட்டு வருகிறது.

## ஸ்ரீ நந்தவனப் பிள்ளையார் கோவில்

*2 ஆம் குறிச்சி, காரைதீவு*

தவத்திரு விபுலானந்த அடிகளின் பிறந்த இடமான காரைதீவில் உள்ள இக்கோவிலில் அடிகளார் கூட்டுப் பிரார்த்தனை நடத்தி வந்தது உண்டு. ஸ்தாபிக்கப்பட்டு 100 வருடங்களுக்கு மேலாகிறது. சேரநாட்டிலிருந்து யாத்திரையாக இங்கு வந்த அம்மையார் ஒருவர் விக்கிரகம் ஒன்றைக்கொண்டு வந்து இங்கு வைத்து வணங்கி வந்ததாகவும் கூறப்பட்டுவருகிறது. பின்னர் பிள்ளையார் விக்கிரகம் வயல் ஒன்றுக்குள் கண்டெடுக்கப்பட்டுப் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் வரலாறு. ஆலயத்தைச் சுற்றி வயல்கள், தடாகங்கள், பூந்தோட்டங்கள் இருப்பதால் ஸ்ரீ நந்தவனப் பிள்ளையார் எனப்பெயர் பெற்றார். நித்திய பூஜை உண்டு. திருவெம்பாவை தினங்களில் உற்சவம் நடந்து திருவாதிரைத் தினத்தன்று முடிவுறும். ஆடி அமாவாசையன்று தேர்த்திருவிழாவும் தீர்த்தமும் நடைபெறுகின்றன. குளத்துவெளிப் பிள்ளையார் எனவும் அழைக்கப்பட்டு வருகின்றார்.

## களுதாவளைப் பிள்ளையார் கோவில்

*களுதாவளை, களுவாஞ்சிக்குடி*

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மகிமைகளையுடைய கோவில் இது. மட்டக்களப்பிலிருந்து பதினான்கு மைல் தூரத்தில் உள்ளது. கிழக்கே கடலையும், மேற்கே மட்டக்களப்பு வாவியையும் அண்டியிருப்பதனால் இயற்கை அழகுடனுள்ளது. முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட கோயிலென்று கூறப்படுகிறது.

ஆனி மாத உத்தர நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறக்கூடியவாறு பத்துத்




தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. கோயிலுக்கான நாகபாம்புகள் இன்றும் இருப்பதாகவும் வழிபட வருவோர்க்கு இவை இடையூறாக இருப்பதில்லை யென்றும் கூறப்பட்டு வருகிறது.

சுயம்புலிங்கப் பிள்ளையார் கோயில் என்றும் இந்த ஆலயத்தை அழைத்து வருகிறார்கள். ஆலய மகிமையை எடுத்துக் கூறும் "பட்டமம்" என்ற ஏடு உள்ளது. 1945 ம் ஆண்டில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவுக்குப் பின்னர் தினப்பூஜை ஆரம்பிக்கப்பட்டது. 1967ல் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றதைத் தொடர்ந்து 1968ல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

## சங்கமான் கண்டிப் பிள்ளையார் கோவில்

### கோமாரி

இந்த ஆலயம் மட்டக்களப்பிலிருந்து பொத்துவிலுக்குச் செல்லும் பிரதான பாதையில் சுமார் ஐம்பத்தாறு மைல் தொலைவில் உள்ளது.



இக்கோயிலுக்கு ஒரு மைல் தூரத்தில் சங்குமான் கண்டி மலை இருக்கிறது. கதிர்காமத்துக்குச் செல்லும் கால் நடை யாத்திரிகர்கள் இங்கு தங்கிச் செல்வது வழக்கம். 1950 ஆம் ஆண்டில் முதலில் இங்கு ஆலயம் எழுப்பப்பட்டது. கருங்கற்களினால் அமைக்கப்பட்ட கோவிலில் 1960 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடந்தது. பின்னர் அர்த்தமண்டபம், மகாமண்டபம், யாளி மண்டபம் ஆகியன அமைக்கப்பட்டு 1979 இல் கும்பாபிஷேகம் நடந்தேறியது. மலையைக் குடைந்து தீர்த்தக்கிணறு அமைக்கப்பட்டிருக்கிறது.

வருடாந்த உற்சவம் ஆடி மாதத்தில் நடைபெற்றுத் தீர்த்தோற்சவத்துடன் முடிவடையும். திருக்கார்த்திகை, தைப்பொங்கல், சிவராத்திரி, சித்திரை வருடப்பிறப்பு ஆகிய விசேட தினங்களில் விசேட பூஜைகள் நடைபெறுகின்றன.

## ஸ்ரீ மாணிக்க விநாயகர், கதிர்வேலாயுத சுவாமி கோவில்

### 14, பஜார் வீதி, பதுளை

மூலமூர்த்தி – வேல். பரிவார மூர்த்திகள் – விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், நவக்கிரகம், நான்கு காலப்பூசை. ஆடிப் பௌர்ணமியன்று இரதோற்சவம் நடைபெறக்கூடியவாறு வருடாந்த உற்சவம் நடைபெற்று வருகிறது. சுமார் 100 வருடங்கள் பழமை வாய்ந்த ஆலயம்.

## ஸ்ரீ ஆதிவிநாயகர் கோவில்

### ஹல்தும்முல்லை

நூறு வருடங்களுக்கு முற்பட்டது. விநாயகர், சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் நான்கு காலப் பூஜை. ஆனியில் கொடியேற்றத்துடன் உற்சவம் ஆரம்பமாகித் தேர், தீர்த்தத்துடன் நிறைவுறும். தைப்பூசம், மாசி மகம், பங்குனி உத்தரம், சித்திரா பௌர்ணமி, வைகாசி விசாகம் ஆகிய தினங்களில் விஷேட பூஜை வழிபாடுகள் நடைபெறு வருகின்றன.

## ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோவில்
### *பிரதான வீதி, அட்டன்*

மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள் – ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணியர், நவக்கிரகம், வைரவர். தினமும் மூன்று காலப் பூஜை உளது. மாத உற்சவம் மாதச் சதுர்த்திகளில் உண்டு. சித்திரா பௌர்ணமியன்று வருடாந்தப் பெருவிழா சிறப்பாக நடைபெறுகின்றது.

## ஸ்ரீ செல்வ விநாயகர் கோவில்
### *10/1, பேராதனை வீதி, கட்டுக்கலை, கண்டி*

மூலமூர்த்தி – பிள்ளையார். சோமசுந்தரேஸ்வரர், மீனாட்சியம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கு விசேட சந்நிதானம் உண்டு. பரிவார மூர்த்திகள் – சோமாஸ்கந்தர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர், நடராஜர், மகாவிஷ்ணு, சண்டேஸ்வரர். தினமும் நான்கு காலப் பூஜைகள் உண்டு. பங்குனி உத்தரத்தையொட்டி மகோற்சவம் நடைபெறுகிறது. கண்டி அரசர் காலத்திலிருந்து தலதாமாளிகை எசல பெரஹராவுடன் தொடர்புடைய கோவில் இதுவாகும்.

## ஸ்ரீ செல்வவிநாயகர் கோவில்
### *66, மாத்தளை வீதி, இரத்தோட்டை*


1922 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. சித்திரபுத்திரனார் கதைப்படிப்பு சித்திரா பௌர்ணமி தினங்களில் நடைபெற்றுவருகிறது. மூலமூர்த்தி – விநாயகர். பரிவார மூர்த்திகள் – முருகன், வைரவர். தினமும் இரு காலப் பூசை. சித்திரா பௌர்ணமியில் தேர்த்திருவிழா நடைபெறக்கூடியவாறு பதினைந்து தினங்களுக்கு வருடாந்த உற்சவம் நடைபெறும். விசேட தினங்களில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

## ஸ்ரீ செல்வவிநாயகர் கோவில்
### புத்தளம் வீதி, குருநாகல்

மடாலயமாகவிருந்து கோவிலாக வளர்ந்தது. 150 வருடம் பழமையானது. 1973 இல் மூலஸ்தானம் அமைக்கப்பட்டது. விநாயகப் பெருமானோடு பரிவாரத்தில் காளி அம்பாள், துர்க்கை அம்பாள், நவக்கிரகம், வைரவர் ஆகிய மூர்த்திகள் உள்ளன. தினமும் இரு காலப் பூசை. ஆவணிச் சதுர்த்தியையொட்டி வருடாந்தத் திருவிழா நடைபெற்றுவருகின்றது.

## ஸ்ரீ பாலசெல்வ விநாயகர் கோவில்
### *11/ 9, கோவில் வீதி, கப்பித்தாவத்தை, மருதானை, கொழும்பு 10*

இவ்வாலயம் 1702 இல் ஸ்தாபிக்கப்பட்டது. மூலமூர்த்தி – ஸ்ரீ பாலசெல்வ விநாயகர். பரிவாரத்திலே மகாலக்ஷ்மி, அம்பாள்மார் சகிதம் ஷண்முகர், வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் உளர். தினமும் ஆறுகாலப் பூஜை உண்டு. சதுர்த்தி, கார்த்திகை,



பூரணை ஆகிய நாட்களில் திருவிழா உண்டு. ஆனி மாத அனுஷ நட்சத்திரத்தன்று இறுதிநாட் திருவிழா அமையக்கூடிய வகையில் முதல் 9 நாட்தொடக்கம் அலங்காரத் திருவிழா நடைபெறும்.

கந்தசஷ்டித் திருவிழாவையடுத்து, பிள்ளையார் கதை 21 நாளும் புராணப்படனம், லட்சார்ச்சனை, திருவிழா என்பனவும் இடம் பெறும்.

## ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் கோவில்

### முகத்துவாரம், கொழும்பு 15

மூலமூர்த்தி - பிள்ளையார். சிவன், அம்பாளுக்கான தனித்தனி ஆலயங்கள் உள்ளன. நடேசர், பிள்ளையார், சுப்பிரமணியர், சண்முகர், வைரவர் நவக்கிரகம் ஆகிய மூர்த்திகள் இங்கு வீற்றிருக்கின்றனர். நித்திய பூஜை உண்டு. மாதச் சதுர்த்தி, ஆவணிச் சதுர்த்தி, மணவாளக்கோல விழா போன்றவை சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இவ்வாலயத்தின் பரிவாரத்தில் உள்ள காளி அம்பாள் சமுத்திரத்தைப் பார்த்த வண்ணம் வீற்றிருக்கின்றார். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் காளிகோவிலைப் பலரும் இன, மத வேறுபாடின்றி வழிபட்டு வருகின்றனர்.

## வரதராஜப் பிள்ளையார் கோவில்

### கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு 13

மூலமூர்த்தி - பிள்ளையார். சுப்பிரமணியர், வைரவர் ஆகிய மூர்த்திகளும் இங்கு உள்ளனர். நித்திய பூசை நடைபெற்று வருகின்றது. மாதச் சதுர்த்தியும் ஆவணிச் சதுர்த்தியும் மிக விசேடமானவை. மணவாளக் கோலவிழா கோலாகலமாக நடைபெறுகின்றது. வருடாவருடம் லக்ஷார்ச்சனை சிறப்பாக இடம் பெறும். புராணப் படிப்பும் இங்கு வழமையாக உண்டு.

## ஸ்ரீ முத்துவிநாயகர் கோவில்


### செட்டியார் தெரு, கொழும்பு 11

மூலமூர்த்தியாக ஸ்ரீ முத்துவிநாயகர் வீற்றிருக்கின்றார். சிவன், அம்பாளுக்கான தனிக் கோவில்கள் இங்கு உள்ளன. நடேசர், பிள்ளையார், பஞ்சமுக விநாயகர், சுப்பிரமணியர், வைரவர், நவக்கிரகம் ஆகிய மூர்த்திகளும் இங்கு உளர். நித்திய பூசை ஆறு காலங்களுக்கு உளது. சித்திரை வருடப் பிறப்புக்கு தேர் பவனி வரக்கூடிய வகையில் முதற் பத்துத் தினங்களுக்கும் மகோற்சவம் நடைபெறுகின்றது. வருடாந்தம் லக்ஷார்ச்சனை சிறப்பாக உள்ளது. மாதச் சதுர்த்தி, பிரதோஷம் போன்றவையும் இங்கு முக்கிய தினங்கள் ஆகும். கடலிலிருந்து எடுக்கப்பட்ட விநாயகர் ஆதலின் முத்து விநாயகர் என அழைக்கப்படுகின்றார்.

## ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில்


### மன்னார் வீதி, புத்தளம்

200 வருடங்களுக்கு முற்பட்ட ஆலயம் இது. கருங்கல்லில் செதுக்கப்பட்ட ஒரு பெரிய விளக்கு இப்பொழுதும் இருக்கிறது. சுற்றளவு சுமார் ஆறு அடி. தலவிருட்சம் - அரசமரம். பிள்ளையார் கதை, நவராத்திரி, திருவெம்பாவை போன்ற காலங்களில் விசேட பூசை, வழிபாடுகள் உண்டு. தினமும் மூன்று காலப் பூசை. பரிவார மூர்த்திகள் - வைரவர், மாரியம்பாள்.









# அயல் நாடுகளில் ஆனைமுகத்தோன் வழிபாடு

*(ஆர். பி. வி. எஸ். மணியன்)*

பிள்ளையாரின் பெருமை வெறும் ஆற்றங்கரை யோரத்திலும், அரசமரத்தடியிலும் மட்டும் அல்லாமல் அயல் நாடுகளிலும் பரவி மிகுந்திருக்கிறது.

இந்துக்கள் முழுமுதற் கடவுளாய் வழிபடும் கணபதி, நம் முன்னோர் சென்ற இடமெல்லாம் சென்றார். உலகம் முழுவதிலும் பரவிய ஹிந்து சமயக் கடவுளரில் கணபதிதான் முதலிடம் பெறுகிறார்.

தமிழகத்தோடு வணிகத்தொடர்பு கொண்டிருந்த ரோமாபுரி மற்றும் கிரேக்க தேசங்களில் தமிழகத்திலிருந்தே பிள்ளையார் வழிபாடு பரவியிருக்க வேண்டும் என்பது வரலாற்றாளர் துணிபு.

இந்துக்களில் வைதீக சமயத்தவர்கள் மட்டுமின்றி, புத்தரைப் பின் பற்றிய பௌத்தர்களும், மகாவீரரைப் பின்பற்றிய சமணர்களும்கூட கணபதியை ஏற்று வழிபடத் தொடங்கியதால் விநாயகர் இந்துக்களின் பொதுப் பண்பாட்டுத் தெய்வமாக உயர்ந்து நின்று

தொன்மையான வரலாறு கொண்ட பாரதம் மிகப் பழங்காலத்தில் இருந்தே வெளிநாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டிருந்தது. கடல் கடந்தும் எல்லை கடந்தும் சென்ற நம் வணிகர்கள் தமது பயணமும் வியாபாரமும் இடையூறுகள் இன்றி வெற்றி பெற விக்னேஸ்வரரை உடன் கொண்டு சென்று வழிபட்டிருக்கிறார்கள். இவர்கள் மூலம் – பிற நாட்டவர்கள் மத்தியிலும் பிள்ளையார் வழிபாட்டில் கவர்ச்சி ஏற்பட்டு – அவர்களும் கணபதியை வழிபடத் தொடங்கியுள்ளனர்.

விட்டார் எனலாம். எனவே பௌத்தம் மற்ற நாடுகளுக்குப் பரவியபோது பௌத்தர்களோடும் பிள்ளையார் பவனி போயிருக்கிறார். வெளிநாடுசென்ற கணபதி தென்கிழக்கு ஆசியாவில் வைதீகக் கடவுள் ஆகவும், தூரகிழக்கு நாடுகளில் பௌத்தசமயக் கடவுள் ஆகவும் கருதி வழிபடப்பட்டார்.

காலமும் தூரமும் கடந்து வழிபடப்பட்ட ஹிந்துக்கடவுள் நமது விநாயகர்.

கணபதி குடியேறிய சில நாடுகளில் அவரது பெருமையென்ன என்பதை இங்கு காண்போம்.

## ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் இன்றைய பாரத எல்லைக்கு அப்பால் இருக்கலாம். ஆனால் ஹிந்து கலாசார பேரரசுக்குட்பட்ட பகுதிக்குள்தான் இத்தேசம் ஒரு காலத்தில் விளங்கியது.

ஆப்கானிஸ்தானில் சில வருடங்களுக்கு முன்னால் ஒரு விக்கிரகம் கார்டெஸ் (cardez) என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்டுப் பின்னர் அங்கிருந்து காபூலிற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்குள்ள ஹிந்துக்களால் பமீர் திரையரங்கு அருகில் உள்ள பீரதன் நாத் தர்காவில் வைத்து வழிபடப்படுகிறது.

அந்த விக்கிரகம் தரம் குறைந்த சலவைக் கல்லினால் செய்யப்பட்டுள்ளது. அது அறுபது செ. மீ. உயரமும், 35 செ. மீ. அகலமும் உள்ளது.

விக்ரஹகத்தின் அடியில் உள்ள பீடத்தில் "இப்பெரிய அழகிய மகாவிநாயகர் ஷாஹீ அரசன் ஷாஹீ இங்களன் என்பவனால் அவன் ஆட்சிபீடம் ஏறிய எட்டாம் ஆண்டில் மஹாஜேஷ்ட மாதத்தில், சுக்ல பக்ஷம், திரயோதசி திதி, விசாக நட்சத்திரம் கூடிய சுபயோக சுபதினத்தில் சிம்ஹ லக்னத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது" என்று குறிக்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள அரசன் காஷ்மீரை ஆண்ட நரேந்திராதித்யனாக இருக்கலாமோ என்ற ஐயம் உள்ளது. ஏனெனில் நரேந்திராதித்யனும் இங்களன் என அழைக்கப் பட்டான். ஆனால் இதில் குறித்துள்ள இங்கள அரசனைப் பற்றித் திட்டவட்டமாக எதுவும் தெரியவில்லை. இவ்விக்ரகத்தில் கணபதி நின்ற வண்ணத்தில் காட்சியளிக்கிறார். அவரது கரங்கள், கால்கள், மற்றும் மார்புத் தசைகள் திரண்டதாக கலைச்சாயலோடு உள்ளன. சாரநாத்தில் உள்ள குப்தர்கால சிற்பங்களைப் போன்று இச்சிலையின் தலையில் கிரீடமும், கழுத்தைச் சுற்றி காந்தி என்னும் ஆபரணமும் உள்ளன.



சக்தி ரூபத்தில் ஹேரம்ப மூர்த்தி

கணபதி நான்கு கரங்களுடனேயே செதுக்கப்பட்டுள்ளார். ஆனால் துரதிருஷ்டவசமாக எல்லாக் கரங்களும் உடைந்த நிலையில் காட்சியளிக்கின்றன. நாகம் ஒன்றைப் பூணூலாகத் தரித்துள்ளார்.

அவர் இடையில் கட்டியுள்ள ஆடையில் சிம்ஹமுகம், தாமரை மொட்டுக்கள் ஆகிய சித்திரங்கள் – மகதக் கலைச் சாயலை ஒத்திருக்கின்றன.

காபூலிற்கு வடக்கே பத்துமைல் தொலைவில் உள்ள சங்கர் தரா எனும் இடத்தில் ஒரு சலவைக்கல் விக்ரஹம் கண்டெடுக்கப் பட்டுள்ளது. இவ்விடத்தில் சூரியன் மற்றும் சிவபெருமானின் விக்ரஹங்களும் கூடக் கண்டு எடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு கணபதி நின்ற கோலத்திலேயே காட்சி தருகிறார். மற்றப்படி எங்கும் காணப்படுவது போல் இவ்விநாயகர் பானை வயிற்றோடு கூடக் காட்சியளிக்கவில்லை. இவரும் நாக யக்ஞோப வீதத்தைத் தரித்துள்ளார். நாகத்தின் தலையே பூணூலில் உள்ள பிரம்ம முடிச்சாக உள்ளது.

இவருக்கும் நான்கு கரங்கள் உள்ளன. ஆனால் இடது மேல் கரம் உடைந்துள்ளது. கீழிரண்டு கரங்களும் கணங்கள் இருவர் தலையில் வைத்த நிலையில் காணப்படுகின்றன. இந்தக் கணங்கள் கிரேக்க மிடுக்குடன் சுருண்ட முடியுடன் தோற்ற மளிக்கின்றனர். இச்சிற்பம் காந்தாரக் கலையம்சத்தையும் தன்னகத்தே தாங்கியுள்ளது. தும்பிக்கை இடது புஜத்திற்கு மேல் நிலையில் தங்கி நிற்கிறது. வலது தந்தம் உடையாமலும் இடது தந்தம் உடைந்த நிலையிலும் ஏகதந்தராகக் காட்சியளிக்கிறார். இச்சிற்பம் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்று துணிந்து மதிப்பிடலாம். இன்றும் கூட இவ்விக்ரஹம் காபூலிலுள்ள ஹிந்துக்களால் கடற்கரை பஜாரில் (நரசிங் த்வாரா) வைத்து வழிபடப்படுகிறது.

இந்து சமயம் தழைத்து ஓங்கி நிலை பெற்றுள்ள நம்நாட்டில் கூட இத்தகைய புராதன கணேச விக்ரஹங்கள் இன்று காணப்பெறவில்லை. ஆனால் ஹிந்து சமயம் நிலைபெறாத ஆப்கானிஸ்தானில் இச்சிற்பங்கள் காணக் கிடைக்கின்றன.

ஆப்கானிஸ்தானம் இன்றைக்கு இஸ்லாமிய சமயத்தைத் தழுவிய தனித்த ஒரு நாடாக விளங்கலாம். ஆனால் ஒரு காலத்தில் அங்கு சைவமும், வைணமும், புத்த சமயமும் சிறப்புடன் விளங்கின என்பதை யாராலும் மறுக்க முடியாது.

## நேபாளம்

நேபாளத்தில் கணபதி வழிபாடு துவங்கிய காலத்தை வரையறுத்துச் சொல்ல இயலாது. ஆயினும் அசோகனின் மகள் சாருமதி என்பவள் நேபாளத்தில் கணபதிக்காகக் கோயில் ஒன்று கட்டினாள் என்ற ஐதீகமொன்று நிலவுகிறது. இதை மெய்ப்பிக்கும் வரலாற்றுச் சான்று எதுவும் இன்று இல்லை. நேபாளத்தில் எட்டாம் நூற்றாண்டில் தொடங்கிய கணபதி வழிபாடு பத்தாம் நூற்றாண்டில் பிரபலமடைந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.

இங்கு விநாயகர் இந்துக்களாலும், பௌத்தர்களாலும் வழிபடப்படுகிறார்.

பௌத்தர்கள் கணபதியை "சித்தி தாதா" எனப் போற்றி வழிபடுகின்றனர். "கணபதி ஹிருதயம்" என்ற ஸ்தோத்திரமானது பகவான் புத்தரால் ஆனந்தர் என்பவருக்கு ராஜக்ருஹத்தில் உபதேசிக்கப்பட்டது என நேபாள புராணக் கதையொன்று கூறுகிறது. ஏராளமான கணபதி உருவங்கள் நேபாளத்தில் கிடைத்துள்ளன. இவற்றுள் காத்மாண்டுவில் கிடைத்துள்ள இரண்டு உருவங்கள் குறிப்பிடத்தக்கன.



நேபாளத்தில்

இவ்விரு உருவங்களிலும் கணபதி இருகால்களின் அடியிலும் இரண்டு எலிகளை மிதித்துக் கொண்டு இருப்பது போல செதுக்கப்பட்டுள்ளார்.

ஒரு உருவத்தில் விநாயகருக்கு நான்கு கரங்களும், மற்றொன்றில் பதினாறு கரங்களும் உள்ளன. சிவபெருமானுடைய சின்னங்கள் சிலவும் கணபதியின் உருவச் சிற்பங்களில் சேர்க்கப் பட்டிருப்பது எல்லை கடந்த கணபதியின் விசேஷ அம்சமாகும்.

ஹேரம்ப கணபதியின் வடிவம் – நேபாளத்தில் பிரசித்தி பெற்றதாக உள்ளது. இந்த வடிவில் அவரது வாகனமாகச் சிங்கம் உள்ளது. ஐந்து தலைகள், பத்துக் கரங்கள் மற்றும் மடியில் சித்திதேவி.

1695 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஹேரம்ப விநாயகர் சிலை ஒன்று பட்காவ்ன் (Bhatgaon) என்ற இடத்தில் கிடைத்துள்ளது. இதில் வழக்கத்திற்கு மாறாக விநாயகர் மூஷிகத்தின் மீது அமர்ந்திருக்கிறார்.

மூனிச்சில் உள்ள வால்டெர் குண்டே அருங்காட்சியகத்தில் (Museum for Volter Kunde) உள்ள விநாயகர் சிலையில் ஒரு காலின் அடியில் மூஷிகமும் இன்னொரு காலின் அடியில் சிங்கமும் உள்ளன.

நேபாளத்தில் கணேசருக்கு எனச் சில தனி ஆலயங்கள் உள்ளன. அவற்றில் ஸிம்பி– தண்டு (Zimpi - Tandu) என்ற இடத்தில் உள்ள கோவில் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சித்தி விநாயகர் ஆலயம் ஒன்று சங்கு (Shanku) வில் இருக்கிறது. தன்கோட்டிற்கு (Thankot) வடக்கேயுள்ள விநாயகர் ஆலயத்தில் ஸ்பத – மாதர்கள் சிலைகள் உள்ளன. பாரதத்திலும் கணேசருடன் ஸப்த மாதர்களைச் சேர்த்துப் பார்க்கும் பழக்கம் உள்ளது.

அறுவடை விழாக்களில் கணபதி பிரதான இடத்தை வகிக்கிறார். நம்நாட்டிலும் கூட கொங்கணப் பகுதியில் கணபதி அறுவடை விழாக்களிலும் பிரதான தெய்வமாகக் கொண்டாடப்படுகிறார்.

## திபெத்தில்

நேபாளம் போன்று திபெத்தில் கணபதி அத்துணை பிரபலம் அடையவில்லை. மஹாயான புத்த சமயத்தின் பரவலே இதற்குக் காரணமாயிருந்

திருக்கலாம். பேய் பிசாசுகளினின்றும் மக்களை ரக்ஷிக்கும் கடவுளாகக் கணபதியை திபெத்தின் மேற்குப் பகுதி வாழ் மக்கள் வழிபட்டனர்.


இதனால் கணபதி திபெத்தில் உள்ள ஆலயங்களிலும் பிரதான வாயிலின் மேற்புறத்தில் காணப்படுகிறார்.

இந்து ஆலயங்களில் நம் நாட்டில் கூட எட்டாம் நூற்றாண்டு முதல் கணபதி பிரதான வாயிலின் அருகே வீற்றிருக்கச் செய்யப்பட்டுள்ளார்.

கணபதியைப் பெண் உருவத்தில் வழிபடுவது மிக அபூர்வம். நம் நாட்டில் மத்திய பிரதேசத்திலுள்ள பேராகாட்டில் (Bheraghat) "அறுபத்து நான்கு யோகினி" ஆலயத்தில் "கணேசனி" என்ற பெயரில் கணபதி பெண்ணுருவத்தில் வழிபடப்படுகிறார். திபெத்திலும் கூட கணபதி பெண் உருவத்தில் வழிபடப்பட்டுள்ளார்.

திபெத்திய பௌத்தர்கள் மஹாகாலன் கிருஷ்ண மஞ்சுஸ்ரீ போன்ற பௌத்த தெய்வங்களின் காலடியில் ஆண், பெண் கணேச உருவங்கள் மிதிபட்டுக் கிடப்பதாகவும் சித்தரித்து இருந்தனர்.

கோடானில் (Khotan) கணேசர் பிரசித்தி பெற்றிருந்தார். எண்டெரேயில் (Endere) ஸ்தூபி ஒன்றினை ஆழ்ந்து ஆராயும் போது ஸ்டெய்ன் (Stain) என்பவர் பல வெண்கலப் படிமங்களையும் – வண்ணம் பூசப்பட்ட மரத்தால் ஆன விநாயகர் சிலைகளையும் கண்டெடுத்தார். (Bezaklik) பெசாக்ளிக் என்னும் இடத்தில் உள்ள குகைக் கோயில்களில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்களில் கணேசர் இடம்பெற்றுள்ளார்.



இங்குள்ள சில விநாயகர் உருவங்களில் ஆனை முக்தோனின் முகத் தோற்றம் – யானை முகமாக இல்லாமல் சற்று மாறுபட்டு – காட்டுப் பன்றியின் முகத் தோற்றம் போலச் சித்தரிக்கப்

விக்னேஸ்வரி - சுசீந்திரம்

பட்டுள்ளது. சிவன் – கார்த்திகேயன் ஆகியோருடன் சேர்ந்து சித்தரிக்கப் பட்டுள்ளதால் – இது கணேசர் சிலைதான் என்பதில் சந்தேகம் இல்லை. ஒருக்கால் "பிள்ளையார் செதுக்கப் போய் – பன்றியாய் முடிந்த கதையாக" இருக்கலாம்.

கோடானிலிருந்து 75 மைல் தூரத்தில் காக்லிக் என்னும் இடத்தில் – இரண்டு விநாயகர் உருவங்கள் வரையப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று சோனி விநாயகராக உள்ளது. மூன்று கரங்கள் உள்ளன. இவர் மேலே உத்தரீயமும் கீழே அந்தரீயமும் உடுத்துள்ளார்.

இன்னொரு உருவம் கணேசர் உட்கார்ந்து இருப்பதுபோலக் காட்டப்பட்டுள்ளது. தலையின் பின்புறம் பிரபை வளையம் உள்ளது. தலையில் கிரீடமும் உடலில் ஆபரணங்களும் அணிந்திருக்கிறார். வலம்புரி விநாயகராக இவர் தோற்றமளிக்கிறார். அவர் பார்வை அவரது இடது புறம் நின்று கொண்டிருக்கும் பெண்ணொருத்தியை நோக்கியதாக உள்ளது. நான்கு கரங்களுடன் நீல நிற அந்தரீயம் அணிந்தவராக இவர் சித்தரிக்கப்பட்டுள்ளார்.

## பர்மாவில்

பர்மா இன்று பெரும்பான்மையான பௌத்த நாடு. இங்கு 11ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் பௌத்தம் நுழைந்திருக்க வேண்டும். அதற்கும் பல நூற்றாண்டுகள் முன்பே வைதிக சமயம் இங்கு கோலோச்சி இருந்திருக்கிறது. ஒரு காலத்தில் வைதிக சமயத்தைப் பின்பற்றியவர்கள் இங்கு வாழ்ந்தார்கள். நமது புராணங்களில் ப்ரும்மதேசம் என்று குறிக்கப்படும் பகுதி இதுவேதான். கீழை பர்மாவில் ஏராளமான பிள்ளையார் சிலைகள் கிடைத்துள்ளன. சிறியதும் பெரியதுமாக உள்ள இச்சிலைகளில் பெரும்பாலானவை பாரதத்தின் மற்றப் பகுதிகளிலிருந்து வியாபார நிமித்தமாக – பர்மா வந்த வர்த்தகர்கள் தங்களுடன் கொண்டு வந்தவையே ஆகும். இன்றும் பர்மா வணிகப் பெருமக்களிடையே தான் கணபதி பிரதான தெய்வமாகக் கருதப்படுகிறார்.

ரங்கூன் மியூஸியத்தில் இரண்டு அற்புதமான கணேச விக்ரஹங்கள் உள்ளன. இரண்டுமே அளவில் சிறியவை. ஒரு சிலை விநாயகரை பத்மாஸனத்தில் வீற்றிருப்பவராகச் சித்தரிக்கிறது. இவருக்கு ஆறு

கரங்கள். கரங்களில் எவற்றை ஏந்தியிருக்கிறார் என்பது தெளிவாக இல்லை.

பாகனில் உள்ள ஷ்வேசண்டா பகோடா வளாகத்தில் பிரமீடுகள் போன்ற பௌத்த விஹாரங்களின் – மூலைகளில் துவாரபாலக தேவதைகளில் கணேசரும் இடம் பெற்றிருக்கிறார் என்பதை பேராசிரியர் என். ஆர். ரே அவர்கள் "Brahmanical Gods in Burma" என்ற நூலில் விளக்கியுள்ளார்.

## சீனாவில்

மிகப்பழங்காலத்திலேயே கணேசர் மத்திய ஆசியா வழியாகச் சீனாவைச் சென்று அடைந்திருக்கிறார். குகை குடைவரைகளில் செதுக்கப் பட்டுள்ள கணேச சிற்பங்கள் துன் ஹுவாங் (Tun-Huang) என்ற இடத்தில் கிடைத்துள்ளன. அதேபோன்று குங் – சியான் (Kung - Hsein) என்ற இடத்தில் குகைக் கோவிலிலும் கணேச சிற்பம் உள்ளது. முதல் குகையில் பல ஹிந்து தெய்வங்களோடு கணேசரும் செதுக்கப்பட்டுள்ளார். இது 6–ம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக இருக்கலாம். பத்மாஸனத்தில் வீற்றிருப்பது போலக் கணேசர் காட்சியளிக்கிறார். இரு கரங்களில் ஒன்றில் சிந்தாமணியும், மற்றொன்றில் தாமரை மலரும் தாங்கிக் காட்சி தருகிறார். 'யானைகளின் அரசன்' என்று அவரை வர்ணித்திருக்கிறார்கள்.

சீனாவிலும் ஜப்பானிலும் கணேசர் இரு தோற்றங்களில் காட்சி தருகிறார். ஒரே உருவமாக உள்ள விநாயகர். இரு உருவங்களாக உள்ள காங்கிடென் (Kangi-ten) என்ற சிற்பங்கள். உட்கார்ந்த நிலையில் உள்ள கணேசர் சிற்பங்களே அதிகம் கிடைத்துள்ளன.



சைனாவில்

இவர் ஒரு கரத்தில் பரசும் ஒரு கரத்தில் கந்த மூலமும் தாங்கியுள்ளார். வாமாசாரத்தைப் பின்பற்றியவர்கள் மட்டுமே (Kangi - ten) காங்கிடென் என்று இரு உருவங்கள் இணைந்த கணேசரை இரகசியமாக வழிபட்டு வந்திருக்கின்றனர். 1017–ல் சென் ஸுங் (Chen Tsung) என்ற பேரரசர் இத்தகைய வழிபாட்டைத் தடை செய்திருந்ததே இதற்குக் காரணமாகும்.

நம் நாட்டிலிருந்து குறிப்பாகத் தென் பாரதத்திலிருந்து போதோய் ரிஷி என்பவர் சீனாவுக்குச் சென்றாராம். இவர் பெயர் போதாயன ரிஷியோ என்று தோன்றுகிறது. இவர் பல நூல்களை அந்நாட்டு மொழியில் மொழி பெயர்த்திருக்கிறார்.

அவற்றில் ஷிஜீசோரா என்ற நூலில், இரட்டை உருவ விநாயகர் செய்யும் முறை வர்ணிக்கப்பட்டுள்ளது. ஸம்ஸ்கிருதத்திலிருந்து இந்நூல் சீன மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## ஜப்பானில்

9ம் நூற்றாண்டு வரை ஜப்பானில் கணேச வழிபாடு இருந்ததற்கான சான்றுகள் இல்லை. கோல்ஸோ தயிஷி (Kolso Daishi) என்ற பௌத்த துறவி மூலம் கணேச வழிபாடு சீனாவிலிருந்து ஜப்பானில் நுழைந்தது. விநாயகர் வடிவில் பல ஊர்களில் கணேசர் வழிபடப்பட்டார். சில ஊர்களில் விநாயகருக்கு என ஆலயங்கள் இருந்தன. சாதாரணமாக கணேசர் புன்முறுவல் பூத்த முகத்துடன் நின்ற கோலத்தில் இரண்டு, நான்கு அல்லது ஆறுகரங்களுடன் காட்சி தருகிறார். இவர் ஷோதேன் ஷி மந்தரா என்று அழைக்கப்படுகிறார். காகுஸென் – சோ (Kaku zen cho) வடிவில் அவர் மூன்று தலைகளுடன் காணப்படுகிறார். அவரது ஒவ்வொரு முகத்திலும் மூன்று கண்கள் உள்ளன. மலைமீது அமர்ந்த தோற்றத்தில் அவர் "கஜேந்திரன்" என்று அழைக்கப்பட்டு வழிபடப் படுகிறார். வாமயோகத்தின் அடிப்படையில் – அவர் காங்கிடென் வடிவிலும் ரகசியமாக வழிபடப்பட்டிருக்கிறார்.



ஜப்பானில்

12–ம் நூற்றாண்டில் ஷின்காகு என்பவரால் எழுதப்பட்ட பென்ஸோன்ஸக்கி என்ற நூலில்

விநாயகரின் உருவ இலக்கணங்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. தரணி ஷுக்யோ, ஷிஜ்ஜுஹோக்யோகி ஆகிய நூல்களில் வாமயோக பத்ததியில் காணப்படும் இரு உருவ விநாயகர் பற்றிக் குறிப்புகள் உள்ளன.

பௌத்த தாந்தரிக மார்க்கத்தவர்கள் இரட்டை உருவப் பிள்ளையாரில் – ஆண் உருவை மஹா – வைரோசனரின் தோற்றம் என்றும், பெண் உருவை அவலோகிதேஸ்வரரின் உருவம் என்றும் கருதுகின்றனர்.

விநாயகரைச் சரிவர வணங்காவிடில் அவர் பல துன்பங்களைத் தருவார் என்று ஜப்பானியர் திடமாக நம்புகின்றனர். வெவ்வேறு விநாயக மந்திரங்களுக்கு வெவ்வேறு – தொல்லைகளை நீக்கும் – சக்தி உண்டு என்றும் அவர்கள் நம்புகிறார்கள்.

ஜப்பானிய மன்னர்களின் அரண்மனையில் தொடர்ந்து விநாயக வழிபாடு முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏராளமான மக்கள் இன்றுங் கூட தமக்குப் பல நன்மைகளை வேண்டி பிள்ளையாரை வழிபடுகின்றனர்.

விநாயகர் திசைகளைக் காவல் செய்யும் தெய்வமாகவும் வழிபடப்படுகிறார்.

## மங்கோலியாவில்

புத்தமதம் மங்கோலியாவில் நுழையும் போதே கணேசரும் நுழைந்திருக்கிறார். சிவபெருமானின் அம்சமாக மஹாகாலன் என்ற தெய்வத்தை மங்கோலியர்கள் வழிபட்டு வந்தனர். எனவே கணேச வழிபாடும் அங்கு கூடவே இடம்பெற்று விட்டது. நார்த்தானில் கண்டெடுக்கப்பட்டுள்ள 500 தெய்வங்களில் 'நிருத்ய கணபதி' வடிவம் உள்ளது. மூஷிக வாகனத்தில் விநாயகர் நின்று நடனமாடுகிறார். மூஞ்சூரின் வாயில் சிந்தாமணி உள்ளது. நான்கு கரங்களில் ஒன்றில் பரசு, மற்றொன்றில் கந்தமூலம், இன்னொன்றில் கொழுக்கட்டை, நான்காவதில் திரிசூலம் ஏந்தியுள்ளார்.

மங்கோலியாவில் வழங்கும் புராணக் கதையின்படி மங்கோலிய நாட்டின் முதல் மன்னனான பாக்ஸு பைஸின் (Hphags pais) தந்தை விநாயகரின் பக்தராம். விநாயகர் அவரை தும்பிக்கையால் தூக்கி மேரு பர்வதத்தின் சிகரத்தில் வைத்து அங்கிருந்து மங்கோலிய தேசத்தைக் காட்டி "உன் மகன் இந்நாட்டினை அரசாள்வான்" என்று கூறியதாகவும் அதன்படியே நடந்ததாகவும் கூறப்படுகிறது.

## இலங்கையில்

1934 – 35ல் நடந்த அகழ்வாராய்ச்சியில் மிஹிந்தலே அருகில் கந்தக செட்டிங்க ஸ்தூபி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. இந்த ஸ்தூபியில் செதுக்கப் பட்டுள்ள கணங்களில் – யானைத் தலையுடன் குள்ளமான தோற்றத்தில் விநாயகர் காட்சி தருகிறார்.

ஆந்திரப் பிரதேசம் அமராவதியில் உள்ள சிற்பங்களில் இது போன்ற கணங்கள் செதுக்கப் பட்டுள்ளன. பௌத்த சமயக் கதைகளில் கணங்களில் ஒருவராகக் கணேசர் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கிறார். இது வைதிக புராணக் கதைகள் – பௌத்தத்தில் ஏற்படுத்திய தாக்கத்தின் விளைவே.

பொலன்னறுவை என்னும் இடத்தில் உள்ள சிவன் கோவிலில் விநாயகர் சிலை இடம் பெற்றுள்ளது. இடது கரத்தில் மோதகத்துடன் இவர் காட்சி தருகிறார்.

கதிர்காமத்தில் உள்ள முருகன் ஆலயத்தில் விநாயகருக்குத் தனிச் சன்னதியே உள்ளது.

## தாய்லாந்து

மிகப் பழங்காலம் முதலே சயாம் என்று பிரசித்திபெற்ற தாய்லாந்து பாரதத்துடன் கலாசார உறவு கொண்டிருந்தது. முதல் நூற்றாண்டிலேயே சயாமிய சிற்பக் கலையில் அமராவதி சிற்பக் கலையின் சாயல் இருந்ததற்கான ஆதாரங்கள் உள. தாய்லாந்தின் தென்பகுதிதான் பாரதத்துடன் முதலில் தொடர்பு கொண்டிருந்திருக்க வேண்டும். பாரத நாட்டின் வணிகர் கீழை பர்மாவிலிருந்து கிழக்கு முகமாக – தாய்லாந்திற்குள்



நுழைவது எளிதாக இருந்தது. 8–ம் நூற்றாண்டின் மோன் ஓவியங்களில் பர்மிய ஹிந்துக்களின் கலை நுட்பத் தாக்கம் முதலிலேயே – ஏற்பட்டது போலும்.

மோன்கள் பக்தியுணர்வு மிக்க இந்துக்களாக இருந்தனர். பிற்காலத்தில் தாய்லாந்தவர்கள் – பௌத்தர்களாக மாறிய பின்னரும் – அவர்களிடையே விநாயகர் பிரபல தெய்வமாக விளங்குகிறார்.

அயூதியன் காலத்து விநாயகச் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. அயூத்யாவின் முற்கால கலைப் படைப்புகள் – பாரதத்தின் தாக்கத்தை வெகுவாக வெளிப்படுத்துகின்றன.

பாங்காக்கில் உள்ள இந்து ஆலயத்தில் கணேசரின் வெண்கலச் சிலை ஒன்றுள்ளது. கால்கள் ஒன்றின்மீது ஒன்றாக இருக்கும்படி இவ்விநாயகர் காட்சியளிக்கிறார். அவருக்கு நாக யக்ஞோப வீதம் உள்ளது. வலதுகையில் ஒடிந்த கொம்பும் – இடது கரத்தில் ஏடும் கொண்டு இவ்விநாயகர் தோற்றம் அளிப்பதைப் பார்க்கும்போது – வியாசருக்காக கணபதி மஹாபாரதம் எழுதிய புராணச் செய்தி சயாமியருக்குத் தெரிந்திருக்கிறது என்பதற்கான சான்றாகும்.

## கம்போடியாவில்

கம்போடியாவில் மஹாபாரதம் 6–ம் நூற்றாண்டிலேயே பிரபல்யம் அடைந்து விட்டது. கணபதி



ஸ்ரீ வித்யா கணபதி வழிபாட்டுக் கோலம்

ஞானத்தின் அதிதேவதை என்பதை இது சொல்லாமல் சொல்லிக் காட்டுகிறது.



இந்தியாவில்

காம்போஜம் என்று நம்மவரால் சிறப்பித்து அழைக்கப்பட்ட கம்போடியா பாரதத்துடன் பன்னெடுங் காலமாகவே பண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்தது.

பர்மா மற்றும் சயாம் போன்றே இங்கும் ஏராளமான கணேச விக்ரஹங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன.

ஆங்கோர் பரே (Angkor Borei) கல்வெட்டுகள் மூலம் ஹிந்து ஆலயத்திற்கு பல தாஸர்களை நியமித்திருந்த தகவல் தெரிகிறது. இந்த ஆலயங்களில் வழிபடப்பட்ட மூர்த்தங்களில் கணேசரும் ஒன்று.

889–ல் யசோவர்மன் என்ற மன்னன் யசோதாச்ரமம் என்ற ஒரு ஆஸ்ரமத்தை நிறுவி, சந்தன மலை என்ற இடத்தில் கணபதிக்குக் கோவில் எடுத்துள்ளான். அங்குள்ள கல்வெட்டு ஒன்றில் ஸமஸ்கிருத மொழியிலும் வாசகங்கள் உள்ளன. "சந்தானாத்ரி கணேசாய சாஸனம் வ்யாதாத் இதம்" என்ற வார்த்தைகள் உள்ளன.

பிரசாத் பாக் (Prasat bak) என்ற இடத்தில் விநாயகருக்கு எனத் தனிக் கோவில் இருந்தது.

பங்க் மேக்ளேவில் உள்ள சிற்பங்களில் (Bung Meglea) கணேசரும் காணப்படுகிறார். குக் ட்ராபியாங் குல் (Kuk Trapeang Kul) என்னும் ஆலயத்தின் அருகாமையில் பல கணேச விக்ரஹங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. கம்போடியா மக்கள் கணேசரை பிரா கெணேஸ் (Prah Kenas) என்ற பெயரில் வழிபட்டனர். இந்த கணேசர் பானை வயிற்றோனாகச் சித்தரிக்கப்படவில்லை. இரண்டு கைகளுடன் சம்மணமிட்ட கோலத்தில் அவர் காட்சி தருகிறார். தும்பிக்கை நேராக வந்து கீழ்முனையில் சுருண்டு காணப்படுகிறது. மோர்களின் முந்தைய காலத்திய சிற்பங்களில் கணேசர் தலையில் கிரீடம் ஏதும் இல்லை.

பின்னாளில் கணேசர் தலையில் கரண்ட மகுடம் சூட்டப்பட்டு உள்ளது. இடுப்புவரை ஆடையேதும் இல்லாமல் பாம்பை பூணூலாக அணிந்திருக்கிறார் பிள்ளையார்.

கம்போடியாவில் ஸ்பெக் த்மார் கெண்டர் (Speak Thmar Kendal) எனும் இடத்தில் உள்ள ஒரு தனியார் சிற்பக் கூடத்தில் அபூர்வமான முறையில் கணேசர் தோற்றமளிக்கிறார். இந்த கணேசருக்கு நான்கு தலைகள் – ஆனால் இரண்டே இரண்டு கைகள் தான். நான்கு தலைகளுடன் கூடிய பிள்ளையார் விக்ரஹங்கள் வெகு அபூர்வமானவை. இதுபோன்ற நான்கு தலைகளுடன் கூடிய கணேச விக்ரஹங்கள் ராஜஸ்தானில் உள்ள கடியாலா (Ghatiala) என்ற இடத்தில் தூணில் செதுக்கப்பட்டுள்ளன.

## சம்பாவில்

தற்போது தெற்கு மற்றும் மத்திய அன்னாம் நாட்டின் பகுதிகளைத்தான் ஒரு காலத்தில் சம்பா என்று அழைத்தனர். ப்யூனானுக்கும் – கம்போடியாவிற்கும் கிழக்கே இந்நாடு அமைந்திருந்தது. சம்பா – பெயரில் மட்டுமல்ல – அந்நாட்டின் அனைத்து அம்சங்களுமே – பாரத நாட்டுப் பண்பாட்டுச் சாயல் மிக்கதாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

அங்க கண்டு எடுக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளிலிருந்து கணேசருக்கு எனத் தனித்தனி ஆலயங்கள் இருந்தன என்பது தெளிவாகிறது. போ – நகரில் (Po - Nagar) அப்படிப்பட்ட ஆலயங்கள் பல உள்ளன.

ஏழாம் நூற்றாண்டிலிருந்தே கணேசர் பிரபல்யமான கடவுளாகத் திகழ்ந்திருக்கிறார். மை சோன் (Mi - Son) என்ற இடத்தில் உள்ள சிவாலயத்தில் அருமையான கணேசருடைய சிற்பம் ஒன்று கிட்டியுள்ளது. இச்சிற்பம் – எட்டாம் நூற்றாண்டினுடையது. மேர் சிற்பங்களோடு ஒப்பிடும்போது இந்த கணேசர் குண்டாகக் காட்சியளிக்கிறார். இதே மை–ஸோனில் உட்கார்ந்த தோற்றத்தில் மற்றொரு கணேசர் காட்சியளிக்கிறார். சைகோன் பொருட் காட்சியில் காணப்படும் கணேசர் ஒரு அற்புதமான விக்ரஹமாகும். ஆனால் இது சிதைந்த நிலையில் காணப்படுகிறது. கணேசர் இரு கரங்களுடன் உட்கார்ந்த நிலையில் இருக்கிறார். இக்கணேசர் மூன்று கண்களுடன் காணப்படுகிறார். அவரது தலைக்குப் பின்புறம் பிரபை வளையம் ஒன்று உள்ளது. இது போன்ற சிற்பம் – தென்கிழக்கு ஆசியாவிலேயே இது ஒன்றுதான் என்று பாய்ஸெலியர் (Boisselier) என்ற வரலாற்றாளர் குறிக்கிறார்.

## ஜாவா மற்றும் பாலியில்

இராமாயணத்தில் யவ–த்வீபம் என்று வர்ணிக்கப்பட்டுள்ள பூமிதான் இன்று ஜாவா என அழைக்கப்படுகிறது. முதல் நூற்றாண்டிற்கும் முன்னரே நம்நாட்டுடன் நெருங்கிய தொடர்பு ஜாவாவிற்கு இருந்திருக்க வேண்டும். சைவ சமயம் இந்நாட்டில் பிரபல்யமாக பரவியிருந்தது. இந்தோனேஷிய தீவுக் கூட்டத்தில் ஜாவா முக்கிய பகுதி. இங்கு வைதீக கடவுளர்களின் சிலைகள் பெரும் எண்ணிக்கையில் கிடைத்துள்ளன. கணேசருக்கு எனத் தனி ஆலயங்கள் ஜாவாவில் இல்லை. ஆனால் சிவாலயங்கள் அனைத்திலுமே கணேசருக்குச் சன்னதிகள் உள்ளன.

மேற்கு ஜாவாவில் மிகப் பழமையான கணேசரின் கல் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இச்சிலை கரடு முரடானதாகவும் – முழுமை பெறாததாகவும் உள்ளது.

இன்னொரு சிலை வெண்கலத்தினாலான கணேச விக்ரஹம் – ஜாவாவில் கண்டெடுத்தது தற்போது பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ளது.

டியாங் பீடபூமியில் கண்டெடுக்கப்பட்ட கணேசரின் கற்சிலை ஒன்று ஜாவாவில் பழமையான கணேச விக்ரஹம் என்று கருதப்படுகிறது. ஒரு கரத்தில் அக்ஷரமாலையும், ஒரு கரத்தில் பரசும் ஏந்தி, வலது கரத்தினால் ஒடிந்த கொம்பைப் பற்றிய வண்ணம் உட்கார்ந்த நிலையில் அவர் காட்சி தருகிறார். தலையில் கிரீடம் இல்லை. வழக்கம் போல நாகத்தையே



ஜாவாவில்

யக்ஞோபவீதமாக அணிந்துள்ளார்.

சண்டி பேனானில் (Chandi Banon) இருந்த ஒரு நுண்மையான கற்சிலை தற்போது ஜாகர்த்தா அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. போரோபுதூருக்கு அருகே சண்டி பேனானில் இருந்த சிவாலயத்தின் தடயங்கள் கூட ஏதும் இல்லாத அளவுக்கு அனைத்தும் அழிந்துவிட்டன.

கபால மாலைகள் அணிந்த கணேச சிற்பங்கள் ஜாவாவில் மட்டுமே காணக்கிடைப்பவை. சிவபெருமான் கபால மாலையணிந்தவன் என்கிற காரணத்தினால் – சிவனின் பிள்ளையான கணேசரையும் அக்கோலத்தில் ஜாவா மக்கள் காண்கின்றனர். சிங்கஸோரி அரசின் காலத்திய கணேச சிற்பங்கள் கபால மாலை அணிந்தவையாக செதுக்கப்பட்டுள்ளன. பீடத்தின் அடியிலும் மண்டை ஓடுகள் பல இருப்பது போன்று பாராவில் கிடைத்துள்ள கணேச சிலை காணப்படுகிறது.

சண்டி சிங்கஸோரி எனும் இடத்தில், நின்ற கோலத்தில் உள்ள கணேசர் கபால அணிகலன்கள் அணிந்துள்ளார். காலனின் பாதுகாப்போடு காணப்படும் கணேசருடைய சிலைகளும் ஜாவாவில் உண்டு.

## போர்னியோ

(Kotei) கோடே எனும் இடத்தில் உள்ள கல்வெட்டு மூலம் இந்துச் சடங்குகள் பற்றிய விவரம் கிடைக்கிறது. இங்கு கிடைத்துள்ள கணேசர் விக்ரஹம் பழமையானதாகக் கருதப்படுகிறது. மஹாகன் ஆற்றின் கரையில் இருந்த கோவில் ஒன்றில் இச்சிலை இருந்திருக்க வேண்டும். பின் ஆற்று வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு குகை ஒன்றினைச் சென்று அடைந்திருக்கிறது. முறம் போன்ற காதுகளுடன் நேரான தும்பிக்கையுடன் – கணேசர் காட்சியளிக்கும் விக்ரஹங்கள் போர்னியோவில் ஏராளமாகக் கிடைத்துள்ளன.

## அமெரிக்க மண்ணில் ஆனைமுகன் ஆலயம்

அமெரிக்கா என்ற உடனேயே நம்மவர்களுக்கு – மாட மாளிகைகள், விண்ணை முட்டும் வண்ணக் கட்டிடங்கள், வாயுவேகத்தில் விரைந்தோடும் அதிநவீன கார்கள், ரப்பரைக் கொண்டு செய்யப்பட்ட வழவழச்சாலைகள், அப்பழுக்கற்ற சுத்தமான, சுகாதாரமான குபேர பூமி – பூலோக ஸ்வர்க்கம் என்றெல்லாம்தான் நினைவு வரும்.

அமெரிக்க மண் – அண்மைக் காலமாக ஆன்மீக பூமியாகவும் – இந்து மண்ணாகவும் மாறிவரும் உண்மை பலருக்கும் தெரியவில்லை. அமெரிக்கா போகிற நம்மவர்கள் இங்கே எப்படி – திருப்பதிக்கும், திருச் செந்தூருக்கும், மதுரைக்கும், பழனிக்கும் போகிறோமோ அதேபோன்று – அமெரிக்காவிலும் தீர்த்தாடனம் செய்யப் பல திருக்கோயில்கள் உள்ளன.

அங்குள்ள திருக்கோயில்களுக்குப் பிள்ளையார் சுழியிட்டதே – நியூயார்க் நகரில் – ஒரு கோடிக்கும் அதிகமான செலவில் – கம்பீரமாகக் காட்சியளிக்கும் – கணநாதன் திருக்கோவில்தான்.

இங்கிருந்து செல்லும் பெரும்பாலோர் அமெரிக்காவில் முதலில் கால் ஊன்றும் இடம் நியூயார்க் நகரமாகத்தான் இருக்கும். பன்னாட்டு மக்களால் சூழப்பட்ட பரபரப்பான நகரம்.

இந்நகரில் ஃபிளஷ்ஷிங் (Flussing) என்னுமிடத்தில் மஹா கணபதியின் ஆலயம் எழும்பியுள்ளது.

காஞ்சி பரமாச்சார்யாரின் ஆசியோடு – வழிகாட்டுதலோடு – எழில் குலுங்கத் தமிழக ஆலயப் பாங்கின் வடிவெடுத்துச் சதா சர்வகாலமும் வேதபாராயண ஒலியோடு சென்று தரிசிப்போரை– மெய்சிலிர்க்க வைத்துக் கொண்டிருக்கிறது மஹாகணபதி ஆலயம்.

இரவு ஒன்பது மணி வரை ஆலயம் திறந்திருக்கிறது. எந்த வேளையிலும் இக்கோவிலில் கூட்டத்திற்கு குறைவில்லை.

அமெரிக்காவின் அதிமுக்கிய நகரில் அண்ணன் மஹாகணபதிக்கு ஆலயம் என்றால் – அதன் தலைநகரம் வாஷிங்டனில் அவன் அருமைத் தம்பி முருகனுக்கு ஆலயம் அங்கும் கணபதி வீற்றிருக்கிறான்.

ஸான்பிரான்ஸிஸ்கோவில் உள்ள பழனி ஸ்வாமி கோவிலில் பிள்ளையாருக்கும் சன்னதி

உண்டு. இங்கு அமெரிக்கர்களே பூஜாரிகளாக உள்ளனர். சாதாக தீக்ஷ கந்தர் என்று ஹிந்துத் திருநாமம் தாங்கியுள்ள அமெரிக்கரே இந்தக் கோயிலின் தலைமைப் பூஜாரி.

அமெரிக்கப் பெண்கள் புடவை கட்டி, பொட்டிட்டு, தினமும் இக்கோயிலை வலம் வந்து தரிசனம் செய்கின்றனர்.

லிவர்மோரில் உள்ள சிவாவிஷ்ணு கோவிலில் விநாயகப் பெருமானுக்கு சன்னதி உண்டு.

கிழக்கு லண்டனில் உள்ள முருகப் பெருமான் ஆலயத்திலும் ஒரு விநாயகர் சன்னதி உள்ளது. இங்ஙனம் காலமும் தூரமும் கடந்து விநாயகர் ஞாலமுழுதும் செங்கோல் ஓச்சி வந்துள்ளார் – வருகிறார் – வருவார்– என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கணபதியின் புகழ் உலகெங்கும் உள்ளவரை இந்துவின் புகழும் நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகம் உண்டோ?

*நன்றி :– விநாயகர் வழிபாடு*




**ஸ்ரீ வித்யா கணபதி**


# அறிவெனும் கேணி

தொட்டனைத்தூறும் மணற் கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

என்பது குறள்.

தோண்டத் தோண்ட ஊறுகின்ற கேணியைப் போன்றது அறிவு. கற்கக்கற்க அது விருத்தியடையும் என்பது பொருள். இங்கே அறிவை மணற் கேணிக்கு வள்ளுவர் ஒப்பிட்டது மிகவும் குறிப்பிடத் தக்க நயம். கிணறு வெட்டுவதற்காகப் பூமியைத் தோண்டுகிறோம். ஊற்றுக் கிடைத்த உடன் தண்ணீர் சுரக்கிறது. இங்கே கிணற்றில் நாம் தண்ணீரை ஊற்றுவதில்லை. தண்ணீர் ஏற்கனவே பூமிக்கடியில் இருக்கிறது. நாம் தோண்டி அதை வெளிக்கொணர்கிறோம். அதுபோலத்தான் மனிதர்களிலும் பலர் அறிவுடன்தான் பிறக்கிறார்கள். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் மாணவனுக்கு கல்வி கற்பிக்கும்போது அவனிடத்தில் ஏற்கனவே உள்ள அறிவை வெளிக் கொணர்கிறார். புதிதாக அறிவை உண்டாக்கிக் கொடுப்பதில்லை. கல்வியினால் ஒருவனிடத்தில் அறிவை உண்டாக்கிவிட்டதாக எண்ணுவது அறிவீனம். அதனாலேயே வள்ளுவர் அறிவைக் கேணிக்கு ஒப்பிட்டார், தண்ணீரே இல்லாத இடத்தில் எத்தனை ஆழம் தோண்டினாலும் தண்ணீர் வராது. அது போல ஒரு சிலருக்கு எத்தனை நாள் கல்வி புகட்டினாலும் அறிவு வெளிப்படாது. கிணறு இறைக்க இறைக்க ஊறும். அதுபோல கற்கக் கற்க அறிவு வளரும்.



UNIE ARTS



## கணபதிராமன்

இராமனை, விநாயகர் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுவதாகவும், அதனை கோசலை கண்டு மகிழ்வதாகவும் சுவாமிநாத ஆதித்ரேயன் என்ற புலவர் தமது கற்பனையில் கவிதையாக வடித்துள்ளார். அக்கவிதை இங்கு ஓவியமாகியுள்ளது.

நன்றி - அமுதசுரபி, தீபாவளி மலர், 97.



# மூர்த்தம்

தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வழிபாடு பெறும் தெய்வங்களில் ஒன்றாக இடும்பன் காணப்படுகிறான். கழனி, குன்றக்குடி முதலாம் தமிழ் நாட்டுத் திருத்தலங்களில் இடும்பனுக்கு விசேட மரியாதைகள் அளிக்கப்படுகின்றன. கொழும்பு, மலைநாடு, மட்டக்களப்புப் பிரதேசங்களில் இடும்பன் பரிவார தெய்வமாகத் தனிக் கோயில் பெற்று விளங்குவதைக் காணலாம். கொழும்பிலே வெள்ளவத்தை சம்மாங்கோடு ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் கோவில்,

திருகோணமலை மாவட்டத்திலே பறையன்குளம் எல்லைக் காளியம்மன் கோயிற் பகுதியிலே இடும்பன் மலை என ஒரு குன்று பெயர் பெறுகின்றது.

தமிழ் நாட்டிலே இடும்பாவனம், திருக்கன்றாப்பூர் எனும் இடங்களிலே இடும்பன் சிவனைப் பூசித்து வரம் பெற்றதாக ஐதீகம் உண்டு. இடும்பாவனம் எனும் பெயர் இடும்பனால் வந்ததாம். இடும்பாவனம் தஞ்சாவூர் மாவட்டத்திலேயுள்ள திருத்தலமாகும்.



# இடும்பன்

வெள்ளவத்தை ஸ்ரீ கதிரேசன் கோயில் ஆகிய திருக்கோயில்களிலே இடும்பன் தனிக் கோயில்களிலே எழுந்தருளுவதைக் காணலாம். இரத்தினபுரி ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோயில், நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகோயில், கொஸ்லாந்தை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமிகோயில் போன்ற மலைநாட்டுத் திருக்கோயில்களிலும் பரிவாரத் தெய்வமாக அவர் எழுந்தருளியுள்ளார். மட்டக்களப்புப் பிரதேசத்திலே ஓரிரு கோயில்களிலே பரிவாரத் தெய்வங்களில் இடும்பன் இடம் பெறுகிறான்.

இடும்பாவனத்துக்கு அண்மையில் இடும்பன் தலைநகரம் குன்றளூர் அமைந்திருந்ததாகக் கூறுவர்.

இடும்பன் வரலாறு பழனித் தலபுராணத்திலே கூறப்பட்டுள்ளது. அகத்தியமுனிவர் கந்தமலையின் சிகரங்களிற் சத்திசிகரம், சிவசிகரம் எனும் இரண்டினையும் சத்தி சிவமாகப் பாவித்துப் பூசித்துக் கந்தவேளின் உத்தரவின்படி அவற்றைப் பொதிய மலைக்குக் கொண்டு வந்து பூசிக்கக் கருதிப் பெயர்த்து வந்தார். பூர்ச்சவனம் எனும் தலத்திலே முருகனின் திருவருளினாலே அச்சிகரங்களை வைத்து விட்டுப் பொதிகை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

சூரபன்மன், சிங்கமுகன், தாரகன் என்ற அசுரர்களின் சேனைகளுக்கும் அக்குலத்தாருக்கும் வில்வித்தை முதலிய அத்திர சத்திர வித்தைகளைப் பயிற்றிய இடும்பாசுரன், முருகப்பெருமானின் வேலால் அசுரர்கள் அழிந்தமையால் மனைவி இடும்பியுடன் மகேந்திரபுரியைவிட்டு வன சஞ்சாரஞ் செய்யச் சென்றான். அவ்வழியிலே திருக்குற்றாலத்திற்கு அருகே அகத்திய முனிவரைக் கண்டு வணங்கி தன் வரலாறு கூறி ஆட்கொள்ள வேண்டினான்.

அகத்தியர் திருக்கேதாரத்திற்குப் பக்கத்திலுள்ள பூர்ச்சவனத்திலே இருக்கும் இரு சிகரங்களையும் எடுத்துக் கொண்டு பொதியமலைக்கு வருவாயானால் பெறற்கரும் பேற்றையடைவாய் என இடும்பனுக்குக் கூறி அவற்றை அடையும் வழிகளை உணர்த்தி மூலமந்திரமும் வழிபாடும் உபதேசித்து அனுப்பினார். இடும்பன் மனைவியோடு அகத்தியர் கூறியவழியே சென்று இரு சிகரங்களையுங் கண்டு மகிழ்ந்து பூசித்து மூல மந்திரத்தை விதிப்படி உளத்தழுத்தித் தவஞ் செய்தான்.

அப்போது பிரமதண்டம் புயதண்டாகவும், அட்டதிக்கு நாகங்கள் கயிறாகவும் தன் பக்கத்தில் வந்தமர்ந்தமை கண்டு அதிசயித்து, கைகுவித்து இரு சிகரங்களையும் பாம்புகளால் உறிபோலச் செய்து அகப்படுத்திப் பிரமதண்டுடன் பிணிந்து மூலமந்திரத்தை எண்ணிப் புயதண்டத்தைத் தோளில் வைத்து முழங்காலை ஊன்றி எழுந்து அவற்றைக் காவிக் கொண்டு காவடி எடுப்பார்போல் நடந்து சென்றான். வழிமயங்கிய இடும்பனுக்குக் கந்தன் வராகமலை சென்று தங்கி பொதிகை செல்லும்படி கூறினான்.

பழனியை அடைந்தபோது முருகன் திருவிளையாடலால் இடும்பனுக்குக் காவடி அதிபாரமாகத்தோன்ற இளைத்து அங்கே இறக்கி வைத்து இளைப்பாறினான். பின்பு காவடியைத் தூக்க முயன்றபோது முடியாமற் போகவே சுற்றிப் பார்த்த போது சிவகிரியின் ஒரு சாரிலுள்ள குராமர நிழலிலே தண்டாயுதபாணியைக் கண்டு அவனை யாரென்று அறியாது விலகும்படி பயமுறுத்தினான். முருகன் ''வலிமை உளதேல் கொண்டு செல்'' என்று விளையாடினான். கோபம் கொண்ட இடும்பன் குராவடியிற் பாய்ந்த போது அங்கு வீழ்ந்து இறந்தான். பிரமதண்டும் நாகங்களும் அஞ்சி அகன்று அகத்தியருக்குச் செய்தி கூறிவிட்டு தத்தமிருக்கை சேர்ந்தன. இடும்பியின் அழுகுரலுக்கு இரங்கிய முருகப்பெருமான் மாங்கலியப் பிச்சை அருளினான்.

இடும்பன் துயில் விட்டு எழுந்தவன் போல எழுந்து வணங்கித் துதித்து அம்மலையடியில் இருந்து குற்றேவல் புரிய வரம்கேட்டு இரப்பப் பெருமானும் அவ்வாறு அருளினார். இடும்பன் தான் இருமலைகளையும் எடுத்து வந்தது போல காவடி எடுத்து வரும் அடியவர்களுக்கு அருளும் படியும் கேட்டதாகக் கூறுவர்.

முருகன் சந்நிதிக்குக் காவடி எடுக்கும் வழக்கம் இடும்பன் கதையுடன் தொடர்புபடுவதைக் காணலாம். இடும்பன் காவடி எடுக்கும் கோலத்திலே கோயில்களில் இடம் பெறுவது இங்கு மனங் கொள்ளத்தக்கது.

முருகபக்தனான இடும்பனுக்கு முருகன் கோயில்களிலே சிறப்பிடம் அளித்தனர். பின்பு அவனுக்கு முருகன் பரிவார தெய்வமாக எழுந்தருளிய தலங்களிலும் இடம் தந்தனர். இடும்பன் பூசை பல திருத்தலங்களிலே மகோற்சவத்தை அடுத்து நடைபெறல் வழக்கிலே காணப்படுவதாகும்.


இடும்பன் கவசம் என்றொரு கவசமும் காணப்படுகின்றது.

*ஆதாரம் :- இந்துக் கலைக்களஞ்சியம்*

*பாகம் –1*






UNIE ARTS

# சகல மார்க்க நிறைவான சரவணபவன்



*(காஞ்சி சங்கராச்சார்ய சுவாமிகள்)*

பரமாத்மாவை அடைய நாலு மார்க்கங்கள் ஞானம், பக்தி, கர்மம், யோகம் என்று இருக்கின்றன. சரீரம், மனஸு, இதற்கெல்லாம் ஆதாரமாக இருக்கிற, ஆத்மா என்ன என்கிற விவகாரத்திலேயே, எப்போதும் இருந்து கொண்டிருந்தால், கடைசியில் அது தானே பளிச்சிடுகிறது. இதுதான் ஞானம். அங்கே, அறிகிற ஜீவாத்மாவுக்கும் அறியப்படுகிற பரமாத்மாவுக்கும் பேதமே இல்லை. எல்லாம் ஒரே சாந்த சமுத்திரமாக அடங்கி விடுகிறது.

சிலருக்கு இந்தச் சாந்தியைவிட, பரமாத்மாவோடு ஒன்றாகச் சேர்ந்து கரைந்து விடுவதைவிட, கொஞ்சம் பிரிந்து அவரிடம் அன்பாக இருந்து கொண்டிருப்பதில்தான் ருசி இருக்கிறது. இவர்கள் பக்தி செய்கிறார்கள். அதனால், பரமாத்மாவின் கருணையைப் பெறுகிறார்கள். இவர்கள் செய்யும் பக்தி, ஸ்வாமி திருப்பிச் செய்யும் கருணை, இரண்டும் அன்பு என்பதன் இரண்டு ரூபங்கள்தான். ஞானம் அறிவு வழி; பக்தி அன்பு வழி.

மனஸையும் கடந்து விட்டால் ஞானம்; மனஸை வைத்துக் கொண்டே பக்தி செய்ய வேண்டும். இதே மாதிரி சரீரத்தை வைத்துக் கொண்டு கர்மாக்களைச் செய்கிறோம். அப்போதும் கூட, நமக்கென்று பண்ணிக்கொள்ளாமல் லோக உபகாரமாகப் பண்ணி, அதன் பலனை ஈசுவரனுக்கு அர்ப்பணம் செய்தால் அதிலேயே ஓர் ஆனந்தம், நிறைவு இருக்கிறது. இவ்வாறு பற்றில்லாமல் கடமையைச் செய்வது கர்ம மார்க்கம்.

மனஸை நிறுத்த முடியாததாலேயே, ஆத்மாவைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. மனஸு கட்டுப்படாமல் ஓடுகிறது. ஆனால், மூச்சைக் கட்டுப்படுத்தி நிறுத்தி விட்டால், மனஸும் நின்றுவிடும். நமக்குப் பிராணன் என்று ஒன்றிருக்கின்றது. பேருயிர் ஒன்றிலிருந்துதான் இந்தப் பிராணன் புறப்பட்டிருக்கிறது. அதனால் இந்த பிராணனைச் சில தினுசுகளில் கட்டுப்படுத்தி, சமநிலைக்குக் கொண்டுவந்து விட்டால் பிராண மூலமான பேருயிரை பரமாத்ம சக்தியை அடைய முடிகிறது. இதற்கு யோக மார்க்கம் என்று பெயர்.

ஸுப்ரமண்ய சுவாமியைப் பற்றி எத்தனையோ கதைகள் இருக்கின்றன. அவருடைய மகிமைக்கும் லீலைக்கும் முடிவேயில்லை. இத்தனை கதைகள்,

தத்துவங்களிலிருந்தும் தெரிவது அவர் ஞானம், பக்தி, கர்மம், யோகம் எல்லாவற்றுக்கும் முடிவான பரம சத்தியமாக இருக்கிறார் என்பதுதான்!

முருகன் என்றால் ஞானப் பண்டிதன், ஞானோபதேசம் என்பது, நினைவுக்கு வந்து விடுகிறது. அத்வைத ஞான ஸ்வரூபமாகவே, அவரைத் திருப்புகழிலும் கந்தரனுபூதியிலும் அருணகிரிநாதர் சொல்லியிருக்கிறார்.

*நான் வேறு எனாதிருக்க, நீ வேறு எனாதிருக்க*
*ஏகபோகமாய் நீயு நானுமாய்*
*இறுகு வகை பரம் சுகமருள்*
*யானாகிய என்னை விழுங்கி வெறும்*
*தானாய் நிலை நின்றது தற்பரமே.*

பக்தி மார்க்கத்தில் முருகன் முடிவாக இருப்பதைச் சொல்லவே வேண்டாம்! அடியார்களின் பக்தியையும் அவர்களிடம் அவருடைய கருணையையும் தான் புராணக் கதைகள் ஸமஸ்கிருத ஸ்தோத்திரங்கள், தமிழ்த் துதி நூல்கள் எல்லாம் விஸ்தாரமாகச் சொல்கின்றன. இவற்றில் எல்லோருக்கும் ஒரு சில திருப்புகழ்கள், திருமுருகாற்றுப்படை, ஸுப்ரஹ்மண்ய புஜங்கம் ஆகியனவாவது மனப்பாடமாகத் தெரிந்திருக்க வேண்டும்.

கர்மா என்று எடுத்துக் கொண்டாலும், குமாரில பட்டராகவும், ஞானசம்பந்தராகவும் அவதரித்து அவரே, இந்த மார்க்கத்தை ஸ்தாபித்திருக்கிறார். அப்பர் ஸ்வாமிகள் 'தாஸமார்க்கம்' என்ற வழியில் எப்போதும் லோக க்ஷேமத்துக்காக ஊழியம் செய்து கொண்டே இருந்தவர். அவர் 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று சொன்னவர். இந்த வரி வருகிற செய்யுளின் ஆரம்பம் ''நம் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்' என்பது! கடம்ப மாலையை விரும்பி அணிகின்ற முருகன்தான் கடம்பன். 'முருகனைப் பெற்ற அம்பாளைத் தன் பாகத்தில் கொண்ட பரமேசுவரன்' என்ற ஸோமஸ்கந்த மூர்த்தமாக இங்கே அப்பர் சொல்கின்றார். நிஷ்காம்யமாகப் பணி செய்து கிடக்கிற பான்மையை முருகன் விசேஷமாக அருள்வான் என்கிற மாதிரி 'நம்கடம்பன்' என்று ஆரம்பித்திருக்கிறது!




யோகம் என்பது பிராண மூலத்தைக் கண்டு பிடித்து அதோடு சேர்கிற வழி. பிராண சக்தி என்பது சரீரத்தில் மூலாதாரம் என்கிற இடத்தில் குண்டலினீ என்கிற ஸர்ப்ப ரூபத்திலேயே இருக்கிறது. நமக்கெல்லாம் அதன் மகாசக்தி தெரியவேயில்லை. அது குண்டலாகாரமாகச் சுருட்டிக் கொண்டு தூங்குகிற பாம்பாகவே இருக்கிறது. தூங்கும் பாம்பைத் தட்டி எழுப்புவதற்குத்தான் யோக சாதனைகள் இருக்கின்றன. சுப்ரமண்யர் யோக விஸ்வரூபம். அதனால்தான் அவரை எப்போதும் பாம்போடேயே சேர்த்துச் சேர்த்துப் பேசுகிறோம். 'வாஸுகி தக்ஷகாதி ஸர்ப்ப ஸ்வரூப தரணாய என்று முத்துஸ்வாமி தீக்ஷிதர்கூட 'ஸ்ரீஸுப்ரஹ்யமண்யாய நமஸ்தே' கிருதியில் சொல்கிறார். ஆசார்யாளும் புஜங்கம் (புஜங்கம் என்றாலே பாம்பு) என்ற விருத்தத்தில்தான் ஸ்தோத்திரம் செய்கிறார். நாகப் பிரதிஷ்டை, ஷஷ்டியில் நாகராஜா பூஜை எல்லாம் சுப்ரமண்யரை உத்தேசித்தே செய்கிறோம். அவரே யோகத்தின் நிறைவு.

ஞானமும் யோகமும் முடிகிற இடத்தில் ஓர் ஆட்டம், அசைவு இல்லை. லோகமே இல்லை. உணர்ச்சிகளே இல்லை. இதெல்லாம் பட்டுப்போன

இடம் அது. இப்படிப் பட்டுப்போன நிலையில் ஈசுவரனை 'ஸ்தாணு' என்று சொல்வது வழக்கம். 'பட்ட கட்டை' என்று அர்த்தம். சுசீந்திரத்தில் 'ஸ்தாணுமாலயன்' என்று கேட்டிருப்பீர்கள். மும்மூர்த்தியும் சேர்ந்த ஸ்வரூபம். அதில் 'ஸ்தாணு' என்பது பரம வைராக்கியமான பரமேச்வரன்தான். உணர்ச்சியில்லா விட்டால், 'மரத்து'ப் போகிறது என்கிறோமல்லவா? அப்படிக் காய்ந்து மரமாக இருக்கிறவர் ஸ்தாணு. பக்த அனுக்கிரகத்துக்காகக் கருணையில் நனைந்திருக்கிறபோது 'ஆர்த்ர'ராக (ஆதிரையனாக) இருப்பவரே இப்படி ஞானத்தில் 'பட்ட கட்டை' யாயிருப்பார். அதே மாதிரித்தான் அம்பாளும், கருணாமயமான அவளும் பரம விரக்தியாக இருக்கிற ஓர் அவஸ்தை (நிலை) உண்டு. அவள் எப்போதும் ஈசுவரனையே பற்றிப் படர்ந்திருப்பவள். அவர் மரமாக இருந்தால், இவள் கொடியாகச் சுற்றிக் கொண்டிருக்கிறாள்; ஸ்ரீசைலத்தில் அவர் அர்ஜுன (மருத) மரமாக இருக்கிறார்; இவள் மல்லிகைக் கொடியாகச் சுற்றிக் கொண்டிருக்கிறாள். அதனால்தான் அவருக்கு மல்லிகார்ஜுனர் என்று பெயர். அது நல்ல பசுமையோடு இருக்கப்பட்ட மரம். பட்ட மரமாக அவர் இருக்கும் போது அம்பாள் என்ன செய்கிறாள்?

பரமேசுவரன் பச்சைப் பசேலென்று கப்பும் கிளையுமாக ஒரு மரம் மாதிரி இருந்தால், அம்பாள் ஒரு பசுங்கொடியாக அவரைச் சுற்றிக் கொண்டிருப்பாள். அவர் பட்டமரமாக. காய்ந்த கட்டையாக இருக்கும்போது, அவள் என்ன செய்கிறாள்? அப்போதும் அவரைச் சுற்றிக் கொண்டிருக்கிறாள். ஆனால், பச்சைக் கொடியாக இல்லை. இலையே இல்லாமல் நார் மாதிரியான கொடியாக, அவரைச் சுற்றிக் கொண்டிருக்கிறாள். அபர்ணா, அபர்ணா என்று அவளுக்கு ஒரு பெயர். 'பர்ணம் என்றால் இலை. இலையே இல்லாத கொடியாக இருக்கும்போது அம்பாள் அபர்ணாவாகிறாள். பர்வத ராஜகுமாரியாகப் பிறந்து ஈசுவரனைப் பதியாக அடைவதற்காக அம்பாள் தபஸ் பண்ணினபோது இலையைக் கூடச் சாப்பிடாமல், கடும் நியமத்தோடு இருந்ததாலேயே இந்தப் பெயர் உண்டாயிற்று என்று ஓர் அர்த்தம் சொல்வதுண்டு. 'ஸ்தாணு'வாக ஈசுவரன் இருக்கும்போது அவனை விடாமல் பற்றிக் கொண்டிருக்கிற அம்பாள் கொடிதான் 'அபர்ணா' என்று தோன்றுகிறது.



ஈசுவரனும் அம்பாளும் இருந்தால் ஸோமாஸ்கந்தமாக அங்கே ஸுப்ரமண்யரும் இருக்க வேண்டும் அல்லவா? ஈசுவரன் 'ஸ்தாணு' வாகவும் அம்பாள் 'அபர்ணா' வாகவும் இருக்கும் போது முருகன் எப்படியிருக்கிறார்? 'விசாக' ராக இருக்கிறார் என்று சொல்லலாம். 'சாகை' என்றால் கிளை என்று அர்த்தம். வேதத்தில் பல கிளைகள் உண்டு. அது ஒவ்வொன்றுக்கும் இன்ன வேதசாகை என்றே பெயர் சொல்வார்கள். 'வி' என்பது பல அர்த்தங்களில் வரும். சில சமயங்களில் ஒன்றை உயர்த்திக் காட்ட 'வி' சேர்ப்பதுண்டு. உதாரணமாக ஜயம் – விஜயம். ஆனால் 'வி'க்கு எதிர்மறைப் பொருளும் உண்டு. 'தவா', என்றால் புருஷனை உடையவள்; 'விதவா' என்றால் புருஷன் இல்லாதவள். இந்த ரீதியில் 'வி – சாக' என்றால் 'கிளை இல்லாத' என்று அர்த்தம். அப்பா பட்ட கட்டையாகவும், அம்மா இலை இல்லாத கொடியாகவும் இருக்கும்போது, குழந்தை முருகனும் கிளையே இல்லாத கீழ்க்கன்றாக இருக்கிறார். அது பரம வைராக்கிய ஸ்வரூபம்.

சுப்ரமண்யர் பரம வைராக்கியமாக, ஞானியாக, ஆண்டியாக, தண்டாயுதபாணியாக இருக்கிறார். அவரே வள்ளி தேவசேனா சமேதராகக் கல்யாண சுப்ரமண்யராகவும் இருக்கிறார். இம்மை மறுமை இரண்டுக்கும் உதவுபவராகவும், வழி காட்டுபவராகவும், அவர் இருப்பதையே இந்த இரண்டு கோலங்களும் காட்டுகின்றன.

பாமர ஜனங்களிலிருந்து தேவர் வரையில் எல்லோரையும் ஒரேபோல் அனுக்கிரகிக்கிறவர் அவர். வேட ஸ்திரீயான வள்ளியை ஒரு பத்தினியாகவும், தேவ ராஜகுமாரியான தேவசேனையை இன்னொரு பத்தினியாகவும் கொண்டவர். பார்வதி பரமேசுவரர்களின் கடைக்குட்டியான அவர்தான் தேவர்களில் ரொம்பவும் குழந்தை; அவரே தேவநாயகனாக இருக்கிறார். 'தேவாதி தேவப் பெருமாளே' என்று அருணகிரி சொல்வார்.

அவரை நாம் எல்லோரும் பக்தி செய்து, இக பர க்ஷேமத்தைப் பெற வேண்டும். இவ்விதம் பக்தி செய்வதற்காக நம்மை நக்கீரர் 'ஆற்றுப்படுத்திய' நூல்தான் திருமுருகாற்றுப்படை. ஆற்றுப்படை உடைய முருகன் கங்கை ஆற்றில் பிறந்தவர். ஆறு தாங்கிய ஜோதியான அவர், ஆறெழுத்து மந்திர மூர்த்தி; ஆறுதலைக் கொடுக்கும் ஆறுமுகர்; ஆறுபடை வீரர். அவரது வெற்றிநாளான மகா ஷஷ்டி துலா மாதத்தின் வளர்பிறை ஆறா நாள். துலா என்பது அவரது சமநிலையாம். தராசு முனையைக் காட்டுவது. ஞானத்தில் எங்கும் சமமாக இருந்து கொண்டே லோகானுக்கிரகத்துக்காக அசுரர்களை வென்று பக்தர்களை ரக்ஷிப்பவர். வெளிப்பகையோடு உட்பகைவர் அறுவரையும் அழித்து நம்மை ஜோதி ஸ்வரூபமாக்குகிற சிகரஜோதி அவர். மலைகளில், எல்லாம் மணிவிளக்காக மேலே நிற்பவர் அவர். கைலாஸ மலையில் ஜோதிப் பொழிவாய் உதித்தார்; திருப்பரங்குன்ற மலையிலும் திருத்தணிகை மலையிலும் தேவயானை வள்ளியரை மணந்தார்; பல மலைகளில் சேனையை வகுத்தார்; கந்தமாதன மலையில் சூரனை வதைத்தார்; பழனி மலையில் ஆண்டியாய் நின்றார்; ஸ்வாமி மலையில் ஞானமொழி பேசினார்.

தேவாதி தேவப் பெருமாளான அவர் பெரியரில் பெரியவர். நாம் சின்னஞ் சிறியர். சின்னஞ் சிறிய நாம் தானியங்களுள் சின்னஞ் சிறிய தினையைக் காட்டி அழைத்தால், அந்தப் பெரியோன் வருவான். சின்னச் சின்னத் தேனீக்கள், சின்ன மலர்களிலிருந்து எடுத்த தேனை விட்டு, தினை மாப்பிசைந்து அவருக்கு நிவேதனம் செய்தால், நமக்கு மனமலர்ச்சி என்ற தேனின் இனிமையைத் தருவார். தூய பசு மேய்ந்த தாவர லோகம் – இயற்கை அழகு – முழுவதற்கும் சாரமாகத் திரண்டு வந்த பசு நெய்யை மாவில் வார்த்து, ஜோதி விளக்கேற்றினால் நம் மனத்திலும் அவர் ஞானச் சுடரை ஏற்றி வைப்பார்! மாவிளக்கு என்று நாம் மாவிளக்கை அவருக்கு அர்ப்பணம் செய்தால், மாவிளக்கான – அதாவது மகா தீபமான – அவர் நமக்கு ஞான ஜோதியைத் தருவார்.

பரமேஸ்சுவர ஸ்வரூபமான அவருக்கு, 'அரன் நாமம் சூழ்க' என்று அவரே ஞானசம்பந்தராக வந்து சொன்னதற்கேற்ப, 'அரஹரோ ஹரோ' சொல்லி நம் பாபத்தையெல்லாம் எரித்துப் பரமானந்த ஜோதியாக இருப்போமாக!

*அரஹரோ ஹரா!*

நன்றி :– தெய்வத்தின் குரல்







# வேல், சேவல், மயில்

*கி. வ. ஜகந்நாதன்*

முருகன் என்றாலே தமிழ் நினைவுக்கு வரும். தமிழ் என்றால் திருப்புகழ் மனதில் தோன்றும். அந்தத்திருப்புகழால் முருகனைப்பாடிய அருணகிரியார் தனியாக முருகப்பெருமானை மட்டும் கும்பிட்டு நிற்காமல் வேலையும், மயிலையும், சேவலையும் குறிப்பிட்டுப்பாடிய பாடல்கள் பல; அவை உள்ளடக்கிய தத்துவங்களும் பலப்பல!

## வேல் சேவல் மயில்

ஞானப்பெருமானுடைய திருக்கரத்திலே படையாக விளங்குகின்ற வேலையும், வாகனமாக இருக்கிற மயிலையும், வெற்றிக்கொடியாக இருக்கிற சேவலையும் சேர்த்துத் துதிப்பது அருணகிரியார் வழக்கம். சேவல் விருத்தம், மயில் விருத்தம், வேல் விருத்தம் என்று அவற்றைத் தனியே பாடியிருக்கிறார். வேல் வகுப்பு, மயில் வகுப்பு என்று இரண்டு வகுப்புகள் வேறு பாடியிருக்கிறார்.

அவர் பாடிய நூல்கள் பல திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், வேல் மயில் சேவல் விருத்தங்கள், கந்தர் அநுபூதி என்ற ஆறு தொகுதிகளை அவர் பாடினார். இந்த ஆறு நூல்களுக்குள்ளும் இறுதியில் பாடிய நூல் கந்தர் அநுபூதி, கந்தர் அநுபூதியில் முதல் பாட்டில், ஆடுகின்ற பரியாகிய மயிலையும், படையாகிய ஞானவேலையும், வெற்றிக் கொடியாகிய சேவலையும் பாடுகின்ற உத்தியோகத்தை ஆண்டவனே எனக்குக் கொடுப்பாயாக' என்று விண்ணப்பித்துக் கொள்கிறார்.

*"ஆடும் பரிவேல் அணிசே வல்எனப்*
*பாடும் பணியே பணியா அருள்வாய்"*

## வேலின் தத்துவம்

வேல் வெறும் இரும்பு என்றோ மயிலும் சேவலும் வெறும் பறவைகள் என்றோ நினைப்பதற்கு உரியன அல்ல. அவை சில உண்மைகளைப் புலப்படுத்தும் அடையாளங்கள்.

"சிகராத்ரி கூறிட்ட வேல்" என்றால், கொடுமுடிகளோடு கூடிய பெரிய மலையைக் கூறு போட்டது என்று பொருள். அதைக்கண்டு இது 'நல்ல இரும்பினாலே ஆன வேல்' எண்ணத்தகுமா? பெரிய மலையாக நிற்பது எது? மனிதனுடைய அகங்காரம் மலை போல் நிற்கிறது. ஆடாமல் அசையாமல் பின்னாலே இருக்கிற அத்தனை பொருள்களையும் மறைத்துக்கொண்டு நிற்கிற மலைபோல, நான் நான் என்கிற அகங்காரம் மற்றவர்களுடைய நலன்களை எல்லாம் மறைத்துக் கொண்டு நிற்கிறது. பிறர் படுகின்ற நோயைக் கண்டு

மனம் இளகாதவனை, ஏண்டா பாறைபோல் நிற்கிறாய்? என்று சொல்வது இல்லையா? உள்ளத்திலே அசைவு இல்லாமல், இரக்க உணர்ச்சி இல்லாமல் மனிதர்கள் இருக்கிறார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களுடைய உள்ளம் கொடுமுடிகளோடு வளர்ந்து நிற்கும் மலைபோன்ற அகங்காரத்தை உடையதாக இருப்பதுதான். அகங்காரமுடையவன் பிறரிடத்திலே அன்பு இல்லாமல், கருணை இல்லாமல் நெகிழ்ச்சி இல்லாமல், 'நமக்கும் அவன் படுகின்ற துன்பம்போல நாளைக்கு வருமே' என்கிற நினைவு இல்லாமல் கல் மலை மாதிரியாகத்தான் நிற்பான், மனிதனுடைய அகங்காரமாகிய மலையிலே மமகாரமாகிய பல கொடுமுடிகள் இருக்கின்றன. இந்த அகங்கார மமகாரமாகிய அகப்பற்றுப் புறப்பற்றுகளே பல பல பிறவிகளுக்குக் காரணமாகின்றன. மமகாரங்களாகிய கொடுமுடிகளொடு வளர்ந்து நிற்கும் அகங்காரமாகிய அத்திரியைக் கூறுபோட வேண்டுமானால் ஞானம் வரவேண்டும்.



அகங்கார மமகாரங்களாகிய சிகராத்திரியைக் கூறிட்டது ஞானவேல்; அகங்காரத்தைச் சார்பாகக் கொண்ட சூரனைச் சம்காரம் பண்ணியது வேல்.

சிகராத்திரி கூறிட்ட வேலோடு செஞ்சேவலையும் பாடவேண்டும் என்கிறார் அருணகிரிநாதர்.

## சேவலின் தத்துவம்

சேவல் ஆண்டவனுடைய வெற்றிக் கொடியாக விளங்குகிறது. கோழி என்று நினைத்த மாத்திரத்திலே நல்லவர்களுக்குப் புற இருளைப் போக்கடிக்கின்ற சூரியனுடைய நினைவு வரும். முருகனிடத்தில் ஈடுபட்டவர்களுக்கு அஞ்ஞான இருளைப் போக்கடிக்கின்ற ஞானபானுவாகிய முருகனுடைய நினைவு முந்தும்.

செம்மை என்பது தமிழில் மிகச் சிறப்புடைய சொல். நம் உடம்பில் ஊற்றமாக இருக்கும் குருதி செம்மைதான். பரிபூரணம், நிறை என்பதைக் குறிப்பதற்கும் செம்மை என்ற சொல்லை வழங்குகிறோம்; ஒருவன் நன்றாகப் பாடினான் என்றால், "செம்மையாகப் பாடினான்" என்றும், ஒரு காரியத்தைத் திறம்படச் செய்தால், "செம்மையாகச் செய்தான்" என்றும் சொல்கிறோம். குறையின்றி நிறைவாக முடித்தான் என்பதையே, "செம்மையாகச் செய்தான்" என்கிறோம். உள்ளத்தில் கெடுதல் இல்லாமல் நேர்மை நிறைவு பெற்றிருந்தால் உள்ளம் செம்மையாக, தூயதாக இருக்கிறது என்று சொல்லலாம். சிறப்புடைய சேவலை நிறம் பற்றி மாத்திரம் செஞ்சேவல் என்று சொல்லவில்லை; குணம் பற்றியும் அவ்வாறு சொன்னார்.

அஞ்ஞானத்தில் உறங்கி வீழ்ந்து கொண்டிருப்பவர்களை ஞானபானுவாகிய எம்பெருமான் எழுந்தருளுகின்றான்; "தூங்காதீர்கள்" என்று அறைகூவி அழைப்பது சேவல். சக்தி சிவனிடத்தில் இருந்து தோன்றிய மாத்திரத்தில் முதல் முதலாகத் தோன்றியது நாத தத்துவம். அந்த நாத தத்துவமே கோழி. அதன் பின்னர் எஞ்சியுள்ள எல்லாத் தத்துவங்களும் வெளிப்பட்டன.

உலகத்துக் கோழி கூவும்போது புற இருள் விலகிப் பொழுது விடிகிறது; அஞ்ஞான இருள் நீங்கி, ஞான ஒளி



பிரகாசிப்பதற்கு அடையாளமாகக் கூவும் கோழி எம்பெருமான் திருக்கரத்திலுள்ளது; அது செஞ்சேவலாக விளங்குகின்றது.

"என்னுடைய மமகாரமாகிய கொடுமுடியோடு கூடிய அகங்கார மலையைக் கூறிடுவது வேல்; அதையும் அஞ்ஞான இருளைப் போக்க வழிகாட்டும் சேவலையும் செந்தமிழால் பகர்கின்ற ஆர்வத்தை எனக்குத் தருவாயாக" என்று பிரார்த்தனை செய்து கொண்டார்.

## மயிலின் தத்துவம்

வேல், சேவல் ஆகிய இரண்டோடு, மயிலையும் பாடுகின்ற பணி எப்போதும் இருக்கவேண்டும் என்பது அருணகிரியார் ஆர்வம். முதலில் வேலையும் சேவலையும் சொன்னவர் மயிலை மறக்கவில்லை. அதனை அடுத்த அடியில் இணைத்து விடுகிறார்.

*பணி பாச சங்கராம பணாமகுட*
*நிகராட்சம பட்ச பட்சி.*


பணிபாசம் என்றால் பாம்பாகிய கயிறு என்று பொருள். இங்கே நாகபாசம் எது? நம்முடைய பாசபந்தங்கள் தாம். பிறவிக்குக் காரணமான இந்தப் பாசபந்தங்களுக்குக் கட்டுப்பட்டுக் கிடக்கிறோம். பாசமாகிய பாம்புக்குக் கட்டுப்படுவதனாலே உயிர் குலைந்து விடுகிறோம். இந்தக் கட்டை அறுத்துக் கொண்டால்தான் மயக்கம் தீரும். சுற்றிச் சுழன்று கொண்டிருக்கிற பாம்பைக் கொத்திக் கொத்திக் கொன்றுவிடுவது மயில். மயில் ஓங்காரத்தின் வடிவம்; பாம்பு பெரிய பாசமாக இருப்பதனாலே, பாம்பை அடக்குகின்ற மயில் ஓங்கார மந்திரமாக இருக்கிறது. ஓங்கார மந்திரத் தியானம் பாசத்தை நீக்கும் என்று பெரியவர் சொல்வர். பிரணவ மந்திரத்தைத் தினமும் ஜபித்தால் பாசங்களினின்றும் விடுபட்டு எம்பெருமானை வணங்குகின்ற ஞானம் உண்டாகும். எல்லா மந்திரங்களுக்கும் மூலம் பிரணவம்.

சுருண்டு கிடக்கின்ற குண்டலினி ஆகிய பாம்பு கிடப்பது நீங்கி ஓட வேண்டும். மூலக்கனலை எழுப்பினால் இது நிகழும் என்று யோக சாஸ்திரம் கூறும். இதற்குக் குண்டலினி யோகம் என்று பெயர். சுருண்டு கிடக்கின்ற பாம்பு வாலையும், தலையையும் நீட்டிக் கொண்டு ஓடவேண்டுமானால் மயில் வரவேண்டும். யோகிகளுக்கும் முருகன் மயில் வாகனத்தில் காட்சிகொடுத்தால் நன்மை உண்டாகும்.

*சிகராத்ரி கூறிட்ட வேலும், செஞ்*
*சேவலும் செந்தமிழால்*
*பகர் ஆர்வம் ஈ;பணி பாசசங்*
*க்ராம பணாமகுட*
*நிகராட் சமபட்ச பட்சி*
*துரங்க நிருபகுமரா!*
*குக! ராட் சசபட்ச! விட்சோப!*
*தீர!குணதுங்கனே!*

*நன்றி: தர்மசக்கரம்.*

# துர்க்கா தேவி!




வேந்தன் முதல் வேலையாள் வரையில் உள்ள காரியஸ்தர் அனைவரும் அடங்கியது அரசாங்கம். ஒவ்வோர் உத்தியோகஸ்தனுக்கும் பிரத்தியேகமான பிரவிருத்தி உண்டு. அம்முறையில் அம்பாள் அநேக அம்சங்களை உடையவள். யார் யார் எந்த வைபவத்தை விசேஷமாகப் பெற விரும்புகின்றனரோ அதற்கேற்ற தேவியம்சத்தைப் பெரிதும் போற்றி வணங்குகின்றனர். எங்கும் நிறைபொருளாகக் கருதப்படும்போது அவளுக்குப் பூரணி என்றும், பராசக்தி என்றும், ராஜராஜேசுவரி என்றும், மூலப்பிரகிருதி என்றும் பெயர். முத்தொழில்களைச் செய்யுமிடத்து பிரம்மாணி, வைஷ்ணவி, ருத்ராணி என்று அவள் பேர் படைக்கின்றாள். சகுணப் பிரம்மம் அல்லது ஈசுவரனுக்கு ஒப்பாகும்போது அவளுக்குத் துர்க்கை என்னும் திருநாமம் வருகிறது. காலசொரூபிணியாகக் கருதப்படும்போது அவள் காளியாகின்றாள். வித்தையின் வடிவெடுக்கும்போது அம்பாளுக்குச் சரஸ்வதி என்றும் தனதானிய வடிவெடுக்கும் போது லக்ஷ்மி என்றும் பெயர். ஞானத்தை ஆதரிக்கும் மகாதேவியானவள் ஜகதாத்ரியாகவும் பவதாரணியாகவும் பாராட்டப்படுகிறாள்.

## துர்க்கை

பூலோக வாழ்க்கை நன்கு நடைபெறுவதற்குச் சக்தியின் என்னென்ன பகுதிகள் என்னென்ன பாங்கில் அமைந்திருக்க வேண்டும் என்பதைத் துர்க்காதேவியின் சொரூபம் நன்கு விளக்குகிறது. பிரபஞ்சம் முழுதிலும் அவள் வியாபித்திருக்கிறாள். எனினும் ஆண்டுக்கொரு தடவை அவள் ஹிமாசலத்திலிருந்து பூமியில் சமவெளிக்கு எழுந்தருளுகின்றாள் என்பது கோட்பாடு. புரட்டாசி மாதத்தில் வரும் நவராத்திரி அவளுடைய வருகையைக் குறிக்கிறது. மழைபெய்து ஓய்ந்தான பிறகு நிலவுலகெங்கும் சக்தி எழுந்தருளியிருப்பதன் அறிகுறிகள் தென்படுகின்றன. அவள் மண்ணுலகுக்கு வரும்பொழுது அவளுடைய அம்சங்களாகிய லக்ஷ்மி, சரஸ்வதி, கணேசன், கார்த்திகேயன் ஆகியவர்கள் அவளுடன் வருகிறார்கள். மண்ணுலக வாழ்வு மாண்புறுதற்கு வாழ்க்கையில் என்னென்ன பகுதிகள் எப்படி அமைந்திருக்க வேண்டும் என்பதை துர்க்கையும்


YOGENDRA
RASTOGI





அவளுடைய பரிவாரங்களும் சேர்ந்து விளக்குகிறார்கள். வாழ்வு நல்வாழ்வு ஆவதற்குத் தனிமனிதன் வாழ்விலும் சமூகத்தின் நடைமுறையிலும் ஆட்சியானது சிறப்புற்றிருக்க வேண்டும் என்பதைத் துர்க்காதேவி விளக்குகின்றாள். திறம்பட அவள் செலுத்துகிற ஆணையை மீறி யாரும் செல்லமுடியாது. உயர்ந்த இராணுவ தத்துவமே வடிவெடுத்தவள் என்று அவளைப் பகரலாம்.

மானுட வாழ்க்கையில் எல்லாம் போருக்குரிய சேனைமயமாகப் போய்விடுவது போதாது. வேண்டிய தருணத்தில் சேனை ஒன்று வெற்றிகரமாக வினையாற்ற வேண்டும் என்பது மெய். அத்தகைய செயலைச் செய்வதற்குச் சேனை ஆயத்தமாய் இருக்கவேண்டும். மற்ற மஹிமைகள் வாழ்வை அலங்கரிப்பதற்கு அதனுடன் வந்தமைகின்றன. செல்வத்தைப் பெருக்குவதற்குச் சின்னமாகத் திருமகள் இருக்கின்றாள். செல்வத்தைப் பெருக்கி அதைப் பயன்படுத்துபவர்களே இகலோக வாழ்க்கையை நன்கு நடாத்த முடியும். பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது கோட்பாடு. பின்பு செல்வம் ஒன்றை மட்டும் படைத்திருந்தால் போதாது. கலைகள் பல பயிலுவதும் அவசியமாகிறது. முயலுகின்றவர்கள் வாழ்க்கையில் விதவிதமான கலைஞானங்களைப் பெறலாம். அதற்கு அறிகுறியாக சரஸ்வதி இலங்குகின்றாள். இவர்கள் இருவரும் துர்க்கா தேவியுடன் மண்ணுலகுக்கு எழுந்தருளுவது போன்று கணேசனும் கார்த்திகேயனும் வருகின்றார்கள். ஞானத்துக்கும் நல்லறிவுக்கும் அறிகுறியாக கணேசன் இருக்கிறான். ஞானமிருக்குமளவு வாழ்வு நல்வாழ்வு ஆகும். இகபரம் இரண்டுக்கும் அது உற்ற துணையாகிறது. பெற்றுள்ள நல்லறிவைச் செயலுக்குக் கொண்டுவர வேண்டும். செயலில் காட்டப்படாத அறிவு ஓங்கியிருப்பதும், மறைந்திருப்பதும் ஒன்றாய் விடுகிறது. வாழ்வில் அதைப் பயன்படுத்தும் பொழுதே உண்மையில் அது ஓங்கியிருப்பதன் மஹிமை முழுதும் வெளியாகிறது. அறிவைச் செயலாக மாற்றுபவன் முருகக்கடவுள். அவன் மூலம் வாழ்வு ஆற்றல் நிறைந்தது ஆகிறது. அம்பிகையின் பகுதிகளாகிய இந்த நான்கு தேவதைகளையும் தொகுத்துப் பார்க்குமிடத்து ஆதிக்கத்துக்கு அறிகுறியாகின்றாள் துர்க்கை. செல்வத்தை வளர்க்கின்றாள் லக்ஷ்மி. கல்வியைப் பெருக்குகின்றாள் கலைமகள். ஞானத்தை ஓங்குவிக்கின்றான் கணபதி. வாழ்வை ஆற்றல் படைத்ததாக்குகின்றான் முருகவேள். நிறைவாழ்வின் பொலிவுகளை விளக்குகின்ற சக்திகளாக இப்பகுதிகள் அமைந்திருக்கின்றன.

பூலோகத்துக்கு எழுந்தருளுகின்ற துர்க்காதேவி தத்துவ விளக்கத்துக்கும் சின்ன மாகின்றாள். அவள் மஹிஷாசுரமர்த்தினியாக மண்ணுலகுக்கு எழுந்தருளுகின்றாள். சிங்கத்தின்மீது நின்று கொண்டு அவள் அவ்வசுரனை ஹதம் செய்கின்றாள். கன்னங்கரேலென்ற நிறமுடைய அவன் நிலத்தில் நிற்கின்றான். அவனுக்குச் சற்று உயரத்தில் சிம்மத்தின் மீது நின்று அம்பிகை ஆட்சி புரிகின்றாள். அவள் மஞ்சள் மேனியுடையவள். சிவப்பு வஸ்திரம்



அணிந்திருக்கின்றாள். ஆயுதங்கள் பலவற்றை அவள் கையாளுகின்றாள். மஹிஷாசுரன் தமோகுணத்தின் பிரதிநிதியாகின்றான். துர்க்கை ரஜோகுணத்தின் சின்னமாகின்றாள். இந்த அம்பிகையின் தலைக்கு மேல் சதாசிவம் தூவெண் வடிவெடுத்து ஆழ்ந்து ஆத்ம நிஷ்டையில் இருக்கின்றார். அவரது வெண்ணிறம் சத்துவ குணத்தைக் காட்டுகின்றது. அவர் தன்னில் தானாயிருப்பது பிரபஞ்சத்திலுள்ள கிருத்தியங்களை யெல்லாம் கடந்து பரத்தின்பால் செல்லுவது நமக்கு லக்ஷியம் என்பதை விளக்குகிறது. உருவமில்லாத பரம்பொருளிடத்திருந்து சத்வம், ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள் வடிவெடுக்கின்றன. தலையில் இருக்கும் தமோகுணத்தின் பால் போராட்டம் அதிகம். ரஜோகுணம் தமோகுணத்தை வெல்லுகிறது. பிறகு அது செல்வமாகவும், கலைகளாகவும், நல்லறிவாகவும், பேராற்றலாகவும் வடிவெடுக்கிறது. அவைகளை நல்வழியில் பயன்படுத்தி சத்வம் என்னும் நடுநிலையின்பால் அது செல்லுகிறது. பிறகு முக்குணத்துக்கும் அப்பாலுள்ள பரம்பொருளில் ஜீவனை அந்தச் சக்தியானது கொண்டு சேர்க்கிறது. இக்கோட்பாட்டை துர்க்காதேவியின் சொரூபம் விளக்குகின்றது. சக்தி எங்கும் நிறைந்தவள் என்பதை அவள் படைத்துள்ள பத்துக் கைகள் விளக்குகின்றன. எட்டுத் திக்குகளில் இருப்பவளும் அவளே; மேலும் கீழும் இருப்பவளும் அவளே என்பதை விளக்குதற்குப் பத்துக்கரங்கள் அமைந்திருக்கின்றன. சக்தியின் அனுக்கிரகத்தைக் கொண்டு வாழ்வு என்னும் போராட்டத்தை ஜீவன் வெற்றிகரமாக முடித்துப் பரத்தின்பால் செல்லுதல் அவனுடைய குறிக்கோள் ஆகின்றது.

மும்மூர்த்திகளில் ஒருவராகிய மகாவிஷ்ணு அம்பாள் மீது பாடிய ஸ்தோத்திரம் பின்வருமாறு:

தேவியாகிய உனக்கு நமஸ்காரம்; மூலப் பிரகிருதியாகிய உனக்கு நமஸ்காரம்; விரும்பியவைகள் அனைத்தையும் தருகின்றவளாகிய உனக்கு நமஸ்காரம். சித் (அறிவு) விருத்தி ரூபிணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். சத்–சித்–ஆனந்த ரூபிணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். சம்சார சாகரத்துக்குத் தோணியாயிருக்கின்ற உனக்கு நமஸ்காரம். பஞ்ச கிருத்தியங்களையும் நடத்துகின்றவளாகிய உனக்கு நமஸ்காரம். புவனேசுவரியாகிய உனக்கு நமஸ்காரம். அனைத்துக்கும் தலைமை வகிக்கின்றவளாகிய உனக்கு நமஸ்காரம். கூடஸ்தையாய் (எல்லாவற்றிற்கும் அடிப்படையாய்) இருக்கின்ற உனக்கு நமஸ்காரம். பொருளனைத்துக்கும் பொருளாயிருக்கும் உனக்கு நமஸ்காரம். ஹிருதயத்தில் பிரகாசிக்கின்றவளாகிய உனக்கு நமஸ்காரம். ஹே அம்ப, இவ் உலகமெல்லாம் உன்னிடத்து இருக்கின்றதென்பதும், என்னைப் போன்றவர்களது உற்பத்தியும் லயமும் உன்னிடத்திலேயே





பிக்கின்றாய். உன்னுடைய ஒளியினாலே எல்லா வற்றையும் பிரகாசிப்பிக்கின்றாய். கற்பாந்தரத்தில் நீ அழியாமலே இருக்கின்றாய். வேதம் முதலிய கலைகளை யெல்லாம் ஒருங்கே அறியவல்ல பண்டிதன் உன்னுடைய வைபவம் நிறைந்த வரலாற்றையும் எளிதில் அறிந்துகொள்ளலாமென்று எண்ணுவானாயின் அவனாலறியக் கூடுமானதோ? உனது அருளாலன்றி எந்த வித்வானும் உன்னை அறிய வல்லவன் ஆகான் – இங்ஙனம் திருமால் தேவியைப் போற்றினார்.

பூலோகத்தில் அவதார புருஷர்களாகத் தோன்றியவர்களும் தங்களுடைய அரும்பெருங் காரியங்களைச் செய்து முடிப்பதற்கு முன்பு சக்தி பூஜை பண்ணி அவளுடைய அனுக்கிரகத்தைப் பெற்றனர். ராமபிரான் இலங்கைக்குப் போகுமுன்பு துர்க்கை பூஜை செய்ததாகவும், கண்ணபிரான் காத்யாயினி பூஜை செய்ததாகவும் சொல்லப்படுகிறது. சங்கராச்சாரியார் சாரதா பூஜை பண்ணி அவளுடைய அனுக்கிரகத்தைப் பெற்றார். இக்காலத்தில் தோன்றிய ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸர் காளியின் வரப்பிரசாதத்தைப் பெற்றார். அந்தந்தக் காலத்துக்கு ஏற்றமுறையில் பூவுலகில் தர்மம் ஸ்தாபிக்கப்படுவதும் அகிலாண்ட நாயகியின் திருவுளப்பாங்கின்படி நிகழ்கின்றது. ஆதலால் அவ்வப்போது தோன்றும் மதாசாரியர்கள் மாயாசக்தியின் விசேஷ அருட்செல்வர்களாம். அன்னவர்களின் மூலம் அவளது அருள் நோக்கம் நிறைவேறுகிறது. ஜகன்மாதாவின் திருவருள் விலாசத்துக்கு அன்னியமான இச்சாசுதந்திரம் எதுவும் அவதார புருஷர்களுக்குக் கிடையாது. அவளுடைய தெய்வீக சக்தியாலும் சம்பத்தாலும் அவளுடைய காரியத்தை அவதார புருஷர்கள் செய்து முடிக்கின்றனர்.

என்பதையும் உன் திருவடியில் கண்டேன். உன் பாதகமலத்தில் கண்ட காட்சியினாலே நீ அகண்டமான மஹிமையுடையவளாயும், சர்வப் பிரபஞ்ச சொரூபிணியாயும் இருக்கின்றாய் என்பதையும் நான் நன்றாய்த் தெரிந்து கொண்டேன். இது நிச்சயம். ஜீவகோடிகளின் நிமித்தம் சிருஷ்டிக் காலத்தில் பிரபஞ்சத்தை சத்–அசத் விசாரத்தோடு விஸ்தாரமாய்ப் படைக்கின்றாய். இந்திரியங்களுக்கு விஷயமாகின்ற நானாவிதத் தத்துவ சொரூபிணியாய் எங்களுடைய சுகானுபவ நிமித்தம் திருவுருவங் கொண்டு பிரகாசிக்கின்றாய். எந்த வஸ்துவையும் அடைதற்கு உன்னைத் தவிர வேறோரிடமுமில்லை. நீயோ எல்லா வஸ்துவிலும் நிறைந்தவளாயிருக்கின்றாய். எந்தப் புத்திமானாலும் வியவகார தருமத்தில் உன்னை விட்டு ஒன்றுஞ் செய்ய முடியாது. ஹே தேவி, உன்னுடைய பிரபாவத்தினால் எல்லா உலகங்களையும் சந்தோஷிப்

# நாதனார் ஆடும் நடம்



நடராச வடிவம் நலங்கள் பலவும் நிறைந்தது; பழமையும் பெருமையும் வாய்ந்தது; தமிழ் நாட்டின் தனிப்பெரும் கலையியற் செல்வமாகக் கவினுற்றுப் புகழோங்கிப் பொலிவது! நடராசத் திருவுருவம் இடம் பெறாத கோயில் எதுவும் இல்லை. எல்லாச் சைவக் கோயில்களிலும் நடராசத் திருவுருவம் சிறப்புற வைத்துப் போற்றி வழிபடப் பெற்று வருகின்றது.

நடராசப் பெருமானிடத்தும், அப்பெருமானின் திருவுருவச் சிறப்பிலும், சைவத் தமிழ்ச் சான்றோர்கள் எல்லோருமே மிகவும் ஈடுபட்டுத் திளைத்து இன்புறுகின்றனர். அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், இராமலிங்க அடிகள் போன்ற சான்றோர்கள் அனைவரும், நடராசப் பெருமானிடத்தில் பெரிதும் ஈடுபட்டுப் பரவித் திளைத்து மகிழ்ந்துள்ளனர். சிலப்பதிகாரம், கலித்தொகை போன்ற பழம்பெரும் சங்க காலப் பனுவல்களிலும், நடராசப் பெருமானைப் பற்றிய புகழுரைகள் காணப்பெறுகின்றன.

### தத்துவ நுட்பங்கள் :

நடராச வடிவம் கலைநலம் சிறந்தது; கவர்ச்சி மிக்குத் திகழ்வது! அதன் ஒவ்வொரு பகுதியும் கவின்மிக்குப் பல தத்துவ நுட்பங்களை உள்ளடக்கிக் கொண்டு விளங்குகின்றது.

1. பரந்த திருமுக மண்டலம் : இறைவனின் தலைமை நிலையும் எல்லையில்லா அழகும், இனிய தண்ணளித் திறனும் உணர்த்துகின்றது.

2. பனித்த சடை : 'நுண்சிகை ஞானமாம்' எனத் திருமூலர் திருமந்திரம் கூறுமாறு ஞானச் சிறப்பையும், 'சைவம் விட்டிட்ட சடைகளும்' எனத் திருவிசைப்பாப் பாடல் கூறுதற்கேற்பச் சிவநெறிக்குரிய தவவொழுக்கச் சிறப்பையும் குறிக்கின்றது.

3. கங்கையைத் தரிசித்தல் : 'நில்லாக நீர் சடைமேல் நிற்பித்தான்' என அப்பர் பாடுதல் போல, இறைவனது பேராற்றலையும், வேகங் கெடுத்தாளும் வித்தகத்தையும் விளக்குகின்றது.

4. பிறையணிதல்: தன்னைச் சரண் அடைந்தவர்களைத் தாங்கித் தாழ்வு நீக்கிப் பாதுகாக்கும் வள்ளல் என்று அறிவிக்கின்றது.



5. குனித்த புருவம் : புருவத்தை வளைத்தல், நெறித்தல் முதலியன, பரதக் கலையில் வல்லவர்கள் தம் குறிப்புக்களை உணர்த்தும் மெய்ப்பாட்டு வகைகள் ஆகும். தன்பாற் போந்து குறையிரந்து முறையிடும் அடியார்களின் விண்ணப்பங்களைக் கூர்ந்து நோக்கி ஊன்றிக் கேட்டருளும் கருணைத்திறம் காட்டும்.

6. குமிண் சிரிப்பு : தன்னிடம் அடைக்கலம் புகுபவர்களை அருளுடன் வரவேற்று, அவர்கள் செய்த பிழைகளை மன்னித்து, அவர்களுக்கு வாழ்வளித்து மகிழ்ச்சி விளைவிக்கும் மாட்சிமையுணர்த்தும்.

*"சென்று தொழுமின்கள் தில்லையுள்*
*சிற்றம்பலத்து நட்டம்*
*என்று வந்தாய்? என்னும்*
*எம்பெருமான்றன் திருக்குறிப்பே"*

7. பவளமேனி : பவளம்போற் சிவந்த மேனி, தீவண்ணன் ஆகிய இறைவன் நெருப்புப் போல்பவன் என்று நினைப்பிக்கும். நெருப்பானது தன்பால் எய்தும் பொருள்களை எல்லாம் தூய்மைப்படுத்திப் புனிதம் உறுவிக்கும். அதுபோல இறைவனும் தன்பால் அன்பு செய்வார் மாசுகளையெல்லாம் போக்கித் தூய்மையாக்கி அருள்புரிதலைப் புலப்படுத்தும்.

8. பால் வெண்நீறு : எல்லாப் பொருள்களும் அழிந்து, இறுதியில் நீறு ஆகும். நீறு மற்றொன்றாக மாறி அழியாது. ஆதலின், திருநீறு அழிவிலாத் தன்மையையும், தூய இயல்பினையும் காட்டும். இறைவன் "தொழுதெழுவார் வினைவளம் நீறெழ நீறு அணிகின்றான்". அவன் "செந்நிற மேனியில் வெண்ணீறு" அணியும் கோலம், எவர் நெஞ்சையும் கவர்ந்து பிணிக்கவல்ல பெற்றிமையினைத் தெற்றெனத் தெருட்டும்.

9. நெற்றிக் கண் : "நுகல்விழி நாட்டத்து இறையோன்", "நெற்றித் தனிக்கண் ஒருத்தன்", "மத்தகஞ் சேர்தனி நோக்கினன்", கண்ணுதலான்" என்று சான்றோர்கள் போற்றும் நிலையிற் சிவபிரானுக்குரிய சிறப்பு அடையாளம்.

10. நீலகண்டம் : விண்ணோர் அமுது உண்டும் சாவ ஒருவரும் உண்ணாத நஞ்சு உண்டும், இருந்து அருள் செய்யும் பெருந்தகை ஆகிய, இறைவனின் நயத்தக்க நனி நாகரிக நலனைப் புலப்படுத்தும்.

11. உடுக்கை : 'எண்டோள் வீசி நின்றாடும் பிரான்' என்றவாறு நடராச வடிவத்திற்கு எட்டும், அதற்கும் மேற்பட்டும் கைகள் அமைக்கப்படுதல் உண்டு. எனினும் பொதுவாக நான்கு கைகள் எங்கும் காணப்படும். அவற்றில் வலக்கை ஒன்றில் உடுக்கை (டமருகம்) ஏந்தியிருப்பது, ஒலியை எழுப்பி அணுத்துகள்களைத் திரட்டி உலகப் பொருள்களைப் படைக்கும் நோக்குடன், இறைவன் பரநாதத்தைத் தோற்றுவிக்கும் பான்மையினைத் தெளிவிப்பது.

12. நெருப்பு : உலகுயிர்களைப் படைத்த இறைவன், அவைகள் பிறந்தும் இறந்தும் துயருற்று வருந்தும் இளைப்பினை நீக்கும் பொருட்டுச் செய்யும் அழித்தற் றொழிலுக்கு அடையாளம். "அழிப்பு இளைப்பு ஆற்றல்" என்பது சித்தியார். இடக்கை ஒன்றில் நெருப்பு இருக்கும்.

13. அமைத்த கை : இதனை 'அபயகரம்' எனவும் வழங்குவர். 'நீவிர் அஞ்சகற்க! யாம் நும்மைக் காக்கின்றோம்' எனத் தன் அடியவர்களுக்கு ஆறுதல் கூறித் தேற்றும் நிலை ஆதலின், இவ்வலக்கை காத்தற்றொழிலைக் காட்டும்.

14. வீசிய கரம் : இவ் இடக்கை யானையின் துதிக்கையினைப் போன்று நீண்டு வளைந்து திகழ்தலின் 'கஜஹஸ்தம் எனவும் வழங்கும். இக் கையின் ஒரு விரல் தூக்கிய திருவடியைக் காட்டிக் கொண்டிருக்கும்.

15. எடுத்த திருவடி : இஃது இறைவனின் திருவடியாகும். எனவே இஃது அம்மையின் பகுதிக்கு உரியது. அம்மை அருளே உருவமாகத் திகழ்பவள். "அருளது சத்தியாகும் அரன்தனக்கு" என்பது சாத்திரம். "துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பண்டு தொண்டர் தம்மை இன்பக்கரை முகந்து ஏற்றும் திறத்தன" என அப்பர் தேவாரம் அறிவிக்குமாறு போல, பிறவிக் கடலில் விழுந்து தத்தளிக்கும் உயிர்களை அக்கடலினின்று எடுத்து மீட்டுக் காப்பாற்றும் அருளற்றொழிலுக்கு உரியது.

16. ஊன்றிய திருவடி : இஃது இறைவனின் வலக்கால் ஆண் பகுதிக்கு உரியது. இது முயலகன் என்பவனை மிதித்து அடக்கும் வகையில், அவன்மீது ஊன்றிய நிலையில் அமைந்திருக்கும். நன்கு மிதித்து நசுக்கி விடாமலும், மிதியாமலே விட்டு விடாமலும், மெல்லென இறைவன் முயலகன் மீது நிற்கின்றான். இந்த நிலைமை மலத்தை முழுதாக அழித்து விடாமலும், மலத்தால் உயிர்கள் பெரிதும் வருந்தாமலும், வினைப்பயன்களை உயிர்கள் நுகரச் செய்ய இறைவன் இயற்றும் மறைத்தற்றொழிலைக் குறிக்கும்.

17. முயலகன் : இவனைப் பூதம், குறள், அசுரன் அபஸ்மாரன் முதலிய பெயர்களால் நூல்கள் வழங்கும். முயலகன் ஆணவமலத்திற்கு அறிகுறி. ஆணவமலம் என்றும் அழிவதில்லை. அதுபோலவே முயலகனும் இறைவன் திருவடிக் கீழ் என்றும் விளங்குகின்றான். இறைவனுக்குப் படி நிலையாய் அமைந்து உதவுதல் போல, முயலகன் காணப்படுகின்றான். அதுபோல ஆணவ



மலமும் உயிர்களின் இறையின்ப நுகர்ச்சிக்கு ஓராற்றாற் காரணமாகின்றது. "இத்தை விளைவித்தல் மலம்" என்பது காண்க. "மாயாதே தன் சத்தி மாய்ந்து" முத்தி நிலையில் உயிர்களின்பால் ஆணவமலம் அடங்கிக் கிடப்பதுபோல, முயலகனும் இறைவனின் திருவடிக்கீழ்" "மாயாதே தன் சத்திமாய்ந்து" கிடக்கின்றான் என்க.

18. தெற்கு நோக்குதல் : எல்லாத் திருக்கோயில்களிலும் நடராசப் பெருமானின் திருவுருவம் தெற்கு நோக்கியே அமைக்கப்பட்டிருத்தல் காணலாம். 'நம்பினவர்க்கு நடராசன் நம்பாதவர்க்கு எமராசன்' என வழங்கும் பழமொழிக்கு ஏற்ப, இறைவன் தன்னை வழிபடும் அடியவர்கட்குத் தெற்கேயிருந்து வரும் எமராசனால் யாதொரு துன்பமும் நேராமற் காத்தற் பொருட்டே, தெற்கு நோக்கி ஆடுகின்றான் என்பர் பெரியோர். திருவிளையாடற் புராணம் இயற்றியருளிய





பரஞ்சோதி முனிவர், செந்தமிழ் மொழியின் மீதும், தென்றற் காற்றின் மீதும் உள்ள விருப்பம் காரணமாகத் தெற்கு நோக்கி இறைவன் நடனம் புரிகின்றான் என்று குறிப்பிட்டுள்ளார்.

19. மாதொரு பாகம் நோக்குதல் : நடராச வடிவம் அமைக்கும் சிற்பக் கலைஞர்கள், அதன் முகமானது சற்றுச் சாய்ந்து நிற்கும் சிவகாமி அம்மையை நோக்கி ஆடுவது போலத் திருவுருவம் அமைப்பார்கள். இங்ஙனம் அம்பிகையை நோக்கியே இறைவன் திருநடம் புரியும் இயல்பு குறித்துக் குமரகுருபரர் அழகுற விளக்கி அருள்கின்றார். குழந்தையின் குடர், மருந்தைச் செறிக்கும் ஆற்றல் உடையதன்று என உணர்ந்து, ஒரு தாயானவள் அம் மருந்தினைத் தான் உண்டு, அம் மருந்தின் பயனைத் தன் பாலின் வழியாக அக்குழந்தை பெறும்படி செய்து, அதன் நோய் நீங்குமாறு செய்வித்தல் போல, அம்பிகை நடராசப் பெருமானின் திருநடனத்தைத் தான் தரிசித்து, அதன் பயனை உயிர்கள் அடையும்படி செய்விக்கின்றாள்.

## திருநடனச் சிறப்பு :

இறைவன் கலைகளின் முதல்வன்; கலையுருவினன். கலைகள் அவனிடமிருந்தே தோன்றுகின்றன. இறைவன் ஒரு சிறந்த பெருங்கலைஞன் என்பதையே நடராச வடிவம் நலமுற உணர்த்துகின்றது. "மனிதன் பேசத் தொடங்கும் முன்னரே ஆடக் கற்றுக் கொண்டுவிட்டான்" என ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். அம்முறையில் நோக்கினால், எல்லா வகைக் கலைகளுக்கும் முற்பட்டுப் பழமையும் பெருமையும் முதன்மையும் மிக்கதாக விளங்கும் கலை, நடனக் கலையே என்பது தெளிவாம்.

இத்தகைய நடனக் கலையின் தெய்வமாக அமைந்து, அண்ட வெளியினையே நடன மேடையாகக் கொண்டு, தானே காண்பவனும் நடிப்பவனுமாக நின்று, பல்வேறு வகையான, நடனத் திறங்களை இறைவன் செய்தருளுகின்றான். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்ற படி, வானவெளியில் சுழலும் கோள்களும், (Planets) விண்மீன்களும் (Stars) முதலிய அண்டகோடிகள் யாவும், அசைவுற்று இயங்கும் பொருட்டு, இறைவன் தான் அசைந்து யாவற்றையும் ஒருங்கே இயக்குவிக்கின்றான்.

மேலும், தில்லைச் சிதம்பரத்தில் இறைவன் இத்திருநடனம் இயற்றுதற்குக் காரணம், அஃது இவ்வுலகின் நடுவிடமாக இருத்தலேயாம்.


*விண்ணுக்கும் மேல், வியன்*
*பாத லக்கீழ், விரிநீர் உடுத்த*
*மண்ணுக்கு நாப்பண் நயந்து*
*தென்தில்லை நின்றோன்*

– திருக்கோவையார்

என மாணிக்கவாசகர் கூறுகின்றார். இவ்வாறே திருமந்திரம், கோயிற்புராணம், திருவாதவூரடிகள் புராணம் முதலியனவும் கூறுதல் காணலாம்.

*பேயினும் பெரியேன் செய்த*
*பிழைகளுக்கு எல்லை இல்லை;*
*ஆயினும் பொறுத்தாட் கொண்டாய்;*
*அம்பலத்து அரசே! என்தன்*
*தாயினும் இனிய! உன்தன்*
*தண்அருள் பெருமை தன்னை*
*நாயினும் கடையேன் எந்த*
*நலமறிந்து உரைப்பேன் அந்தோ!*

– இராமலிங்க சுவாமிகள்



அம்பிகை தட்சன் மகளாகத் தோன்றி வளர்ந்ததால் 'தாட்சாயணி' என்று அழைக்கப்பட்டாள். 'சதிதேவி' என்ற அவளது இயற்பெயர் நாளடைவில் மாறிவிட்டது. சிவனை அவமதித்து வேள்வி நடத்திய தட்சனின் பெண் என்று பொருள்படும் தாட்சாயணி என்னும் பெயரே எங்கும் பிரபலமாய் இருந்தது. அதனை மாற்றிக் கொள்ள எண்ணினாள். அம்பிகை. இறைவனை வலம் வந்து வணங்கி, தனது கருத்தைக் கூறி னாள். நன்றென மகிழ்ந்து இறைவனும் "உனது கட்டளைப்படி ஐந்தாண்டுகள் நிறைந்தவுடன் தவம் புரியத் தொடங்கினாள். பர்வதராஜனுக்குப் (மலையரசனுக்குப்) பெண்ணாகத் தோன்றியதால் அதன் பின் அவளது பெயர் 'பார்வதி' என்றே வழங்கலாயிற்று.

அம்பிகை பார்வதியாகித் தவமியற்றிய அதே நேரத்தில்தான் இறைவன் 'அறமுரைத்தபட்டன்' ஆக ஆலின் கீழ் அமர்ந்து தட்சிணாமூர்த்தியாக விளங்கினான்.



# தட்சிணாமூர்த்தி தத்துவம்

குழந்தைகளான உயிர்களுக்கு நல்லனவே எண்ணி இதனை நீ மொழிந்தாய். அப்பெயர் மாறும் வண்ணம் இனி நீ செயற்படலாம். எமது பக்தனாகிய இமவான் என்னும் மலையரசன் உன்னைப் பெண்ணாகப் பெறவேண்டித் தவமியற்றுகிறான். அவன் தவமியற்றும் இடத்துக்குச் சென்று சிறு குழந்தையாகக் கிடப்பாயாக" எனப் பணித்தான்.

இமவான் காணும்படி பொய்கையொன்றில் ஆயிரம் இதழ்கள் கொண்ட தாமரை மலர் மீது அம்பிகை சிறு குழந்தையின் வடிவத்துடன் கிடந்தாள். இமவானால் எடுத்து வளர்க்கப்பட்டாள். பிறகு, இறைவனின்

சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர் என்ற நான்கு முனிவர்களும் வேதம், ஆகமம், சாஸ்த்திரம், புராணம் முதலான ஞான நூல்கள் பலவற்றையும் முறைப்படி நன்கு கற்றனர். சான்றோர் பலரிடமும் பாடங்கேட்டுக் கேள்வி ஞானமும் கைவரப் பெற்றனர். அவர்களைச் சனகாதி முனிவர்கள் என்றே அழைப்பர். அவர்கள் திருக்கயிலை சென்று இறைவனை நேரில் கண்டு தரிசிக்கும் பேறும் பெற்றவர்கள். அவர்கள் கற்றுப் பெற்ற நூலறிவும், கேள்வி ஞானமும் ஞானத்தெளிவைத் தரவில்லை. மெய்ப்பொருள் என்ன என்பதும், உண்மைத் தத்துவந்தான் என்ன என்பதும் அவர்களுக்கு விளங்கவில்லை.



அம்பிகை பார்வதியாகித் தவமியற்றிய பொழுது தானும் யோகமூர்த்தியாகி அவர்களுக்கு உபதேசிக்க எண்ணினான். கயிலை மலைச்சாரலில் கல்லால மரத்தின் கீழ் சனகாதி முனிவர்கள் நால்வருக்கும் உபதேசிக்கத் திருவுள்ளம் கொண்டு நந்தியம் பெருமானைக் காவலாக வைத்தான். யோகமூர்த்தியாகி உபதேசிக்கும் பொழுது மன்மதன் ஒருவனைத் தவிர வேறு எவரையும் அங்கே அனுமதியாதிருக்கும் படியும் கட்டளையிட்டான்.

ஆலமரத்தின் கீழ் அமர்ந்து காலொன்றை மடித்து, பிறிதொன்றைக் கீழே தொங்கவிட்ட நிலையில் வலக்கரத்தால் சின்முத்திரை காட்டி உண்மை நிலையை உணர்த்தினான். தெற்கே செல்லும் மரண யாத்திரையை மேற்கொள்ளாது சரண யாத்திரையாக வடக்கே வாருங்கள் என்று உணர்த்த, தான் தெற்கு முகமாக அமர்ந்தான். தட்சிண (தெற்குத்) திசையை நோக்கி அமர்ந்தால் தட்சிணாமூர்த்தி என்று அழைக்கப்பட்டான். சின் முத்திரையைக் கண்ட சனகாதி முனிவர்கள் உள்ளத் தெளிவு பெற்றனர். வடமொழி சுலோகமொன்று அவன் உபதேச நிலையை அழகுபட வருணித்தது. அதாவது, பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் வயதில் சிறியவர்களாகவும் ஆசிரியர்கள் மூத்தவர்களாகவும் இருப்பர். ஆனால், இறைவன் நடத்திய இப்பள்ளியோ புதுமையானது! புரட்சிகரமானது!

இளமையழகுடன் இங்கு இறைவன் வீற்றிருக்கிறான். அவனது மாணவர்களாகிய சனகாதி முனிவர்கள் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் முதிர்ந்த வயோதிபர்கள்! ஆசிரியனான இறைவன் வாய் திறந்து எதுவும் பேசவில்லை. எனினும், அந்த மௌனத்தின் பயனாகவே மாணவர்களின் ஐயப்பாடுகள் அனைத்தும் நீங்கிவிட்டன!

அப்படி அவன் என்னதான் உணர்த்தினான்?

“தாம் அறிந்ததும் உணர்ந்ததுமே உண்மைத் தத்துவம். அதுவே அனைவரும் பின்பற்ற வேண்டிய சித்தாந்தம்” என்று எண்ணுவது அன்றும், இன்றும், என்றும் பலரது பழக்கமாகவுள்ளது. இறைவனைப் பற்றிய உண்மை நிலையை முழுவதுமாக அறிந்தவர்கள் எவரும் இல்லை.

சனகாதி முனிவர்கள் கல்வி, கேள்விகளில் மிகவும் வல்லவர்கள். ஆனாலும், தாங்கள் உண்மைத் தத்துவத்தை உணர வில்லை என்பதைத் தயக்கமின்றி ஒப்புக்கொண்டனர். அதனைத் தெளிந்து, தெரிந்து கொள்ளும் முயற்சியிலும் தங்களை ஈடு படுத்திக் கொண்டு ஈசனை நாடினர். உரிய நேரத்தில் அவர்களுக்கு அதனை உபதேசிப்பதாக இறைவன் அருளியிருந்தான்.

அவன் காட்டிய சின் முத்திரை என்னும் அடையாளம் வலக்கரத்தின் மூன்று விரல்கள் (சுண்டு, மோதிர, நடு விரல்கள்) மேலே உயர்ந்து நிற்கும் நிலையில் காணப்படும். ஆட்காட்டி விரல், கட்டைவிரலின் (பெருவிரலில்) அடியுடன் இணைந்திருக்கும்.

சத் என்றால் அறிவு. உண்மையறிவை உணர்த்தும் அடையாளம் சின்முத்திரை எனப்பட்டது.

இறைவன் 'பதி' எனப்படுவான். உயிர்கள் அனைத்தும் 'பசுக்கள்' எனப்படும். பசுக்களாகிய உயிர்களுக்கு இயல்பாகவே மூன்று குற்றங்கள் உண்டு. அவை ஆணவம், கன்மம், மாயை என்பவைதான். அவற்றை மும்மலங்கள் என்பர். அவற்றை விடுத்துப் பசுவாகிய உயிர்கள் இறைவனை அடைதல் என்பதே என்றுமுள்ள உலக இயக்கத் தத்துவம்.



உயர்த்திய மூன்று விரல்கள் மும்மலங்ளாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றைக் குறித்தன. பெருவிரல் பதியாகிய இறைவனையும், ஆட்காட்டி விரல் பதியை அடையும் பசுக்களையும் குறிக்கும்.

பெருவிரலின் உதவியின்றி மற்ற விரல்களால் எழுதவோ, வேறு செயல்களைச் செய்யவோ இயலாது. இறைவன் துணையின்றி உயிர் தனித்து இயங்காது என்பதை இது உணர்த்துகிறது.

முப்புரிநூல் என்னும் பூணூலும் இச் சின் முத்திரையின் தத்துவத்தையே உணர்த்தும் சின்னமாகும். எட்டுச் சாண் நீளத்துடன் மூன்று புரிகளாக ஒரு முடிச்சுடன் தயாரிக்கப்படுவது பூணூல். எண் சாண் உடம்பில் மும்மலங்கள் உள்ளன. அவை நீங்கும் வரை பிறவி என்னும் முடிச்சு உண்டு என விளக்குவதே பூணூல்.

இராமாயணத்தில் இராவணன், கும்பகர்ணன், விபீஷணன் என மூவர்.

இலலிதோபாக்கியானத்தில் பண்டாசுரன், விஷங்கன், விசுக்கிரன் என மூவர்.

இப்படி இதிகாச புராண உபபுராணங்களில் அசுர சகோதரர்கள் மூவராகவே காணப்படுகின்றனர்.

சின் முத்திரையின் உயர்த்திய மூன்று விரல்கள் உணர்த்தும் ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றைக் குறிக்கவே அவர்கள் மூவராகக் காணப்படுகின்றனர்.

இராவணன், சூரன், பண்டன் ஆகியோர் ஆணவ மலத்தின் பிரதிநிதிகள்.

கும்பகர்ணன், சிங்கமுகன், விஷங்கன் ஆகியோர் கன்ம மலத்தின் பிரதிநிதிகள்.

விபீஷணன், தாரகன், விசுக்கிரன் ஆகியோர் மாயா மலத்தின் பிரதிநிதிகள்.

இராமனும், முருகனும், அம்பிகையும் முறையே இக்காவியங்களின் பதிகள்.

அப்பதிகளைச் சரணடைந்த தேவர், முனிவர், மனிதர் ஆகிய அனைவரும் பசுக்கள். இவ்வாறு இதிகாச புராண வரலாறுகள் அனைத்தும் தட்சிணாமூர்த்தி காட்டும் சின் முத்திரையைச் சுற்றி இயங்கிய செய்திகள் ஆகும்.

சிவாலயங்களில் தட்சணாமூர்த்தி சுவாமி, சந்நிதியின் தெற்குப் புறத்தில் தெற்கு நோக்கி அமர்ந்திருப்பார். ஆலமரத்தின் கீழ் அமர்ந்த கோலத்தில் நான்கு கரங்களுடன் நான்கு முனிவர்கள் எதிரில் அமர்ந்திருக்க, கண்மூடிய மௌன நிலையில் காட்சியளிப்பார். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கங்களாலும் பதியை அடையலாம் என்பதைக் குறிப்பால் உணர்த்துபவர்கள் அம் முனிவர்கள். மார்க்கங்கள் வேறுபட்டாலும் இறுதியில் சென்று சேரும் இடம் இறைவனின் திருவடி நிழலே என உணர்த்த சனகாதி முனிவர்கள் நால்வரும் ஒரு சேர இறைவனின் திருவடி நிழலில் அமர்ந்திருக்கின்றனர்.

வேரிலிருந்து வளர்ந்து படர்ந்த பச்சை ஆலமரம் மீண்டும் உயரவிருந்து வேரைத் தரையில் ஊன்றச் செய்கிறது. தொடர்ந்து நடைபெறும் உலக இயக்கத்தை நிகழ்த்துபவன் இறைவன். அதனைக் குறிப்பால் உணர்த்த ஆலமரத்தின் கீழ் அமர்ந்துள்ளான்.

தட்சிணாமூர்த்தியின் வலக்கரம் சின் முத்திரை காட்டும். இடக்கரம் சுவடி ஏந்தியிருக்கும். மேலேயுள்ள வலக்கரத்தில் ஜப மாலையும் இடக்கரத்தில் மழுவும் இடம் பெற்றிருக்கும்.

தொங்கவிட்ட பாதத்தின் கீழ் முயலகன் என்னும் அசுரன் இருப்பான். அவன் அஞ்ஞானம் என்னும் அறியாமையின் சின்னமாவான்.

அம்பிகைக்கும் இறைவனுக்கும் மூன்று வகையில் வடிவங்கள் உண்டு.

1. இறைவனும் இறைவியும் தனித்தனி வடிவத்தில் இருத்தல் – நடராஜர், சிவகாமி எடுத்துக்காட்டு.

2. இருவரும் இணைந்திருத்தல் – அர்த்தநாரீசுவர் எடுத்துக்காட்டு.

3. ஒருவருள் ஒருவர் அடங்கிய கோலத்தில் இருத்தல் இவ்வகையில் காமாட்சி வடிவில் இறைவியுள் இறைவன் அடக்கம். தட்சிணாமூர்த்தி கோலத்தில் இறைவனுள் அம்பிகை அடக்கம். இறைவன் யோகமூர்த்தியாக இருக்கும் இக்கோலத்தில் யோகேஸ்வரியாகிய அம்பிகையின் திருவுருவை இறைவன் அழகு ஒழுக எழுதிப் பார்த்திருப்பான்.

வீணை மீட்டிய கோலத்தில் விளங்கும் தட்சிணாமூர்த்தியை "வீணாதர தட்சிணாமூர்த்தி" என்பர். இவரே நாரதர் முதலானவர்களுக்கு இசை நுணுக்கங்களை உபதேசித்தவர். வீணையை முதலில் உருவாக்கி, இசைத்தவர் தட்சிணாமூர்த்திதான். பிறகு அவ்வீணையைத் தனது சகோதரியும் கலைமகளுமான சரஸ்வதியிடம் அளித்தார் என்றும் கூறுவர்.

சிவாலயங்களில் தட்சணாமூர்த்தி சுவாமி, சந்நிதியின் தெற்குப் புறத்தில் தெற்கு நோக்கி அமர்ந்திருப்பார். ஆலமரத்தின் கீழ் அமர்ந்த கோலத்தில் நான்கு கரங்களுடன் நான்கு முனிவர்கள் எதிரில் அமர்ந்திருக்க, கண்மூடிய மௌன நிலையில் காட்சியளிப்பார்.

தஞ்சை மாவட்டம் ஆலங்குடி தட்சிணாமூர்த்தி மிகவும் பிரபலமானவர்.

திருவொற்றியூரில் பத்மாஸன நிலையில் அமர்ந்த தட்சிணா மூர்த்தி சிற்பம் உண்டு.

அறிவு மேம்பாட்டை அருளும் மேதாதட்சிணாமூர்த்தி மயிலாடுதுறையில் எழுந்தருளியுள்ளார். காவிரியின் வடகரையில் உள்ள வள்ளலார் கோயில் என்ற சிவாலயத்தில் இவர் காட்சி தருகிறார்.

மயிலாடுதுறை வதான்யேஸ்வரர் என்னும் வழிகாட்டும் வள்ளல் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இந்த தட்சிணாமூர்த்தி நந்தியம் பெருமான் மீது அமர்ந்து ஞான முத்திரை காட்டிய கோலத்துடன் விளங்குவது தனிச்சிறப்பாகும்.

மேலும், இப்பெருமான் மீது தருமையாதீனம் பத்தாவது குருமகா சன்னிதானம் சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் பத்துப் பாடல்கள் இயற்றியுள்ளார். அப்பதிகம் "தட்சிணாமூர்த்தி" திருவருட்பா என்றே போற்றப்படுகிறது.

வித்தைக்கு அதிதேவதையான கலைமகளுக்கு, சரசுவதியந்தாதி, சகலகலாவல்லி மாலை என இரண்டு தோத்திர நூல்களே உள்ளன.

அதேபோல் ஞானத்தை அருளும் ஆதிகுருவான தட்சிணா மூர்த்திக்கும் இரண்டே பதிகங்கள் உள்ளன. ஒன்று மேற் சொன்ன தட்சிணாமூர்த்தி திருவருட்பா, மற்றொன்று திருச்சிராப்பள்ளி தட்சிணாமூர்த்தி மீது தாயுமானவர் இயற்றிய 'சின்மயானந்த குரு' என்ற பதிகம் ஆகும்.

*தட்சிணாமூர்த்தி - ரூபிணி - தட்சிணா மூர்த்தி வடிவானவள்.*

*சனகாதி சமாராத்யா - சனகாதி முனிவர்களால் வழிபடப்பட்டவள்.*

*சிவஞான பிரதாயினி - சிவஞானத்தை அருளவல்லவள்.*

தாயுமானவர் பாடலும் "சீரிட்ட உலகன்னை வடிவான எந்தை " எனக் குறிப்பிடுகிறது.

சிவாலயங்களில் தெற்குப் பிரகாரச் சுவற்றிலேயே தட்சிணாமூர்த்தி அமர்ந்து விடுகிறார்.

தென்மாவட்டங்களில் சுற்றுப்பிரகாரத்தில் தட்சிணா மூர்த்திக்கென்று தனிச் சந்நிதிகள் விமானம் மற்றும் கலசத்துடன் கட்டப்பட்டுள்ளன.


காஞ்சிபுரத்தை அடுத்த கோவிந்தவாடி என்ற இடத்தில் தட்சிணாமூர்த்திக்கு தனிக் கோயில் உள்ளது. இத்திருக் கோயிலின் தட்சிணாமூர்த்தி உற்சவ மூர்த்தம் அழகு வாய்ந்தது.

தொடர்ந்து தட்சிணாமூர்த்தியை வழிபடுவோர் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குவர். தெளிந்த ஞானமும் புகழும் எய்துவர்.

மேலும் நவகோள்களும் நல்லனவே செய்யும். அனைவரும் எளிதில் பாராயணம் செய்ய ஏற்ற பாடல் வருமாறு:

*கல்லாலின் புடையமர்ந்து நான்மறை யாறங்க முதல் கற்ற கேள்வி*
*வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்*
*எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிச்*
*சொல்லாமற் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்.*




வாழ்நெறி

# சைவத்தின் பிரிவுகள்



சைவம் என்பது சூட்சும சரீரத்தையும் தத்துவங்களையும் உணர்த்தக் கூடியது. ஸ்தூலம் அழியக்கூடிய ஒன்று. இந்த அழிவில்தான் உயிர்ப்பு, மங்களம் அதாவது பரமசுகம், தோன்றுகிறது என்பதை விளக்குகிறது சைவம்.

பிறப்பவர் யாவரும் இறப்பை அடைவதே உலக நியதி. ஆயினும் கர்ம வினையை ஒட்டிய பிறப்பு, இறப்பு ஏற்படுவதைத் தவிர்த்து மறுபிறவி இல்லாமற் செய்து கொள்ளும் வழிகளைத் தருவதுதான் சைவம். பிறந்தால் இறப்பது நிச்சயம். ஆகையால் பிறப்பையே தடுப்பது தான் சிறந்த வழி. கர்ம வினையால் பிறப்பு ஏற்படுவதைத் தவிர்க்க வேண்டும். இந்தக் கர்ம வினையின் சக்தியைக் குறைக்கப் பெரிதும் உதவுவதுதான் சைவம்.

சைவத்தின் முக்கிய அடிப்படை ஆதிசங்கரர் அருளிய அத்வைதம் என்றாலும், அதன் பிரிவுகள் சில விசிஷ்டாத்சைதத்தையும் பின்பற்றுகிற பண்பை உடையவை. சிவசொரூபம், உருவம் இல்லாத சிவ–சக்தி ஐக்கிய நிலையானாலும், ஆனந்ததாண்டவராகவும், பிட்சாடனராகவும், சோமஸ்கந்தராகவும் வரித்து வழிபாடு செய்வதும் உண்டு. குண்டலினியை எழுப்பித் தன்னுள்ளேயே ஆன்ம சக்தியைக் காணும் அகவழிபாடும் இருக்கிறது; விபூதி அணிந்து, ருத்ராட்சத்திரம் தாங்கி, பஞ்சாட்சர மந்திரம் ஓதி பூஜை செய்யும் புற வழிபாடும் இருக்கிறது. சைவம் புராதனமானதாகவும் இருப்பினும், புதுமைகளைக் கனிவுடன் அனுமதிக்கிறது. கடுமையான விரதங்கள் இருப்பினும், இயலாதவர்களை மன்னிக்கும் பெருந்தன்மையும் அதற்கு உண்டு.

சைவத்தின் முக்கிய பிரிவுகளை இப்போது பார்ப்போம். சைவ சித்தாந்தம். பசுபதி சைவம், காஷ்மீர் சைவம், வீரசைவம், சிவ அத்வைதம், சித்த சித்தாந்தம் ஆகிய ஆறும் அப்படிக் குறிப்பிடத் தகுந்தவை. சைவம் கடல் போலப் பரந்தது. பல்வேறு தத்துவங்களைத் தன்னுள் கொண்டது. ஆகவே இந்த ஆறும் அவற்றில் குறிப்பாகச் செய்யப்படுபவை என்று மட்டுமே கொள்ள வேண்டும்.

சைவ ஆகமங்கள் இதன் முக்கிய அடிப்படை. ஆகமங்கள் சிவபெருமானை மேலான பெருமானாக, எங்கும் நீக்கம் இன்றி நிறைந்தவனாக, பக்தர்களின் வழிபாட்டைக் கனிவுடன் ஏற்கும் கருணா மூர்த்தியாக, ஒவ்வொருவரும் தனது தலைவனாக ஏற்று முறையிடக் கூடிய காட்சிக்கு எளியவனாக, யோக வழியில் அணுகக் கூடிய மூர்த்தியாகக் கருதுகிறது. இந்தப் பண்புகளே இந்தப் பிரிவுகளை இணைக்கும் நடுநூலாகும்.

ஆகம சம்பிரதாயம் இந்தத் தத்துவங்களை முக்கியமாகக் குறிப்பிடுகிறது. 1. ஆக்கல், காத்தல், அழித்தல், புறத்தே வெளியிடுதல், அகத்தே மறைத்தல் ஆகியவை. 2. பதி – பசு – பாசம் (இறைவன் – ஆன்மா – பற்று) 3. மும்மலங்கள் – ஆணவம், கர்மம், மாயை (4) மூன்று சக்திகள் (இச்சா –கிரியா – ஞானம்) (5) பஞ்ச பூதங்களை அடிப்படையாகக் கொண்ட முப்பத்தாறு தத்துவங்கள். (6) சத்குருநாதனின் தேவையும் மந்திரோபதேசமும் (7) மந்திரங்களின் சக்தி (8) சாரிய, கிரியா, யோக, ஞான பாதங்கள், எல்லா பிரிவினைகளும் இவற்றை ஆதாரமாகக் கொண்டவையே.

ஆகம மெய்ஞ்ஞான முறைகளில் எளிய மனிதனுக்காக ஏற்பட்டவை சிவபுராணங்கள். எளிய புராணக்கதைகளின் மூலம் ஐயனின் பெருமையை இது அவனுக்கு உணர்த்துகிறது. மற்றொன்று ஆலய வழிபாடு. வழிபாட்டு முறைகளின் பத்ததியையும், ஷோடச உபசாரங்களையும், பதினாறு பூஜா விதிகளையும் அது வகுத்துக்கொடுக்கிறது. மூன்றாவது நாயன்மார்கள் அளித்த தெய்வீகப் பாடல்களையும் அது வகுத்துக்கொடுக்கிறது. தெய்வீகப் பாடல்களைப் பாடுவதும் ஓதுவதும் ஆகும். நான்காவது குருநாதர், சுவாமிகள், பண்டிதர்கள், சாத்திர வல்லுநர்கள், பெரியோர்கள் மூலம் உபதேசங்களையும் விளக்கங்களையும் பெறுவது.

சைவத்தைப் பின்பற்றும் கோடிக்கணக்கான மக்களுக்கு, அது வாழும் முறையே ஆகும். வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் அது வகுத்துக் கொடுக்கிறது. ஆலய வழிபாடும், பூஜா விரதங்களும், புனித நீராடலும், புண்ணியப் பதிகளுக்குத் தரிசனம் செய்யச் சொல்லுவதும் யோக சாஸ்திரங்களைப் பின்பற்றுவதும் அத்தகைய அம்சங்களாகும்.

## சைவ சித்தாந்தம்

திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் சிவபெருமானின் பெருமையைப் பாசுரங்களாக வடித்தார்கள். பின்னர் சுந்தரமூர்த்தி சுவாமிகளும், திருவாசகம் எழுதிய மாணிக்க வாசகரும் சைவம் வளரத் தொண்டாற்றியவர்கள். தேவாரமும், திருவாசகமும் அடியவர்களினால், வேதங்களின் சாரமான உபநிடதங்களாகவே கருதப்படுகின்றன.

பிறகு பட்டினத்தடிகளின் பிரபந்தங்களில் தற்காலச் சைவ சித்தாந்தமென வழங்கும் தத்துவ சாஸ்திரக் கிரமம் முதன் முதலாகத் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டது. ஞான சம்பந்தர் தேவாரம் முதல், திருமூலரின் திருமந்திரம் வரை பத்துத் திருமுறைகளாகும். இதற்குப் பின் அடியார்கள் பலரும் அறிய பிரபந்தங்களைத் தொகுத்து அளித்த பெருமை நம்பியாண்டார் நம்பியைச் சேரும்.

சைவ சித்தாந்தத்தை அருளிய பெருமை தமிழகத்துக்கே உரியது. இதற்குரிய நூல்களில் புகழ்பாடி, இறைவனை அறிவதற்குரியவையாக எழுதப்பட்ட நூல்கள் திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார் ஆகியவை. இவற்றை அருளியவர்கள் முறையே திருவியலூர் உய்ய வந்த தேவநாயனாரும், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனாரும் ஆகும்.

இதன் பின்னர் தோன்றியவர் பொய் கண்டு அகன்ற மெய்கண்ட தேவராகும். இவர் உருவாக்கிய சிவஞான போதம் சைவசித்தாந்த சாஸ்திரங்களில் தலையாயது ஆகும். இவரும் இவருக்குப் பின் அருள்நந்திதேவர், மறைஞான சம்பந்தர், உமாபதியார் ஆகிய நால்வரும் சந்தான குரவர்கள் என்று அழைக்கப்படுவார்கள். தேவார திருவாசகங்கள், வேதத்தின் ஞானகாண்டப் பொருளை விளக்குவதைப் போல, இவர்கள் ஆகமங்களின் ஞான போதப்



பொருளைச் சைவ சித்தாந்த சாஸ்திரங்களில் வெளிப்படுத்தினர்.

சித்தாந்தம் என்பது முடிவு. சைவம் என்னும் சொல்லுக்கு ஆகமம் என்ற வேறொரு பொருள் உண்டு. ஆகவே ஆகமத்தின் முடிந்த ஞானம் சைவ சித்தாந்தம் ஆயிற்று.

சைவ சித்தாந்த முதல்வர் மெய் கண்டராவார். சைவசித்தாந்த நூல்கள் தோத்திரக் கிரந்தங்கள் எனும் தெய்வ வாழ்த்துக்கள் ஆகும். அவை துதிகளாகும்; பக்தர்களின் அநுபவங்களும் ஆகும். ஆகவே சைவசித்தாந்த சாஸ்திர நூல்கள் அனுபூதி நூல்கள் எனப்படுவதும் பொருத்தமாகும்.

எனவே சைவத்தின் தன்மையை அறிந்து அனுபூதி பெற்றோர் ஆக்கிய சைவசித்தாந்த நூல்கள் நமக்கு விளக்குபவை இவையே. பசு, பதி, பாசம் ஆகிய முப்பொருள் பற்றி அவை விளக்குகின்றன. சிவமே பதி, ஆன்மாவே பசு, ஆணவ மலங்களே பாசம் எனப்படும். இத்தகைய பதி, பசு, பாச இலக்கணங்களைத் தெளிவாக உணர்த்துவதே சித்தாந்த ஞானம் ஆகும்.

இந்தப் பிரிவைப் பின்பற்றும் சுமார் ஆறு கோடி மக்கள் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்கிறார்கள்.

## பசுபதி சைவம்

ஆன்மாக்களின் தலைவனான எம்பிரானை (பசுபதி) வழிபடும் அடியவர்கள், ஜடாமுடி தரித்து, கௌபீனம் அணிந்து, உடல் முழுவதும் நீறு பூசி, கனல் எனக் கனியும் கண்களுடன், தீவிர விரதம் மேற்கொண்டு, ஆலம் ஏந்தி நடப்பவர்களான சிவனடியார்களைப் பின்பற்றும் பசுபதர்கள் ஆவார்கள்.

சிவபெருமானின் கருணையைப் பெற்றுத் தரும் ஆற்றல் கொண்ட சிவனடியார்கள் காட்டிய வழியையே பின்பற்றுபவர்கள் இவர்கள். இத்தகையவர்கள் கங்கை பாயும் வட இந்தியா முதல், காவிரி பாயும் தென்னிந்தியா வரை இருந்திருக்கிறார்கள். யம, நியம சாதனைகளுடன் பூஜைகளில் ஈடுபடுவதும், பிரம்மச்சரிய விரதத்தைக் கடைப்பிடிப்பதும், அஹிம்சை வழியை மேற்கொள்வதும், தவ வழி நடப்பதும் இவர்களுடைய சிறப்புக்கள் ஆகும். வெளிப்படையான பாடல்கள், களைக்கூத்து ஆவேச பிரமாணங்கள், தன்னைச் சுத்தி செய்து கொள்ளும் தீவிர விரதங்கள். கோலங்கள் ஆகியவை இதன் முத்திரைகள்.

இதன் ஆதார நிறுவனர் குஜராத்தைச் சேர்ந்த லகுலீசர். குழந்தையாகப் பிறந்து இறந்துபோன இவருடைய உடலில் ஈசன் புகுந்து உயிர் தந்து பசுபதத் தத்துவத்தைப் பரப்ப அருளினார் என்று கூறுவார்கள். இந்த நிகழ்ச்சி இன்றும் காயாவரோகணத் திருவிழாவாக அவர்களால் கொண்டாடப்படுகிறது. சோம நாத்பூர் சிவாலயம் இந்தப் பிரிவினருக்கு உரியது. நேபாளம் பசுபதி நாதர்கோயிலும் அவ்வாறே இவர்களுக்கு உரியது.

லகுலீசர் இயற்றிய பசுபதி சூத்திரங்களும், அதன்மீது கௌண்டின்யர் இயற்றிய பாஷ்யமும், இவர்கள் போற்றி வணங்குபவை. இறைவன் யாவற்றுக்கும் மூலகாரணமாகவும், விளைவாகவும், இணைப்பாகவும் காரிய கர்த்தாவாகவும், விடுதலை அளிப்பவனாகவும் இருப்பதாக இவர்கள் தத்துவங்கள் அமைந்துள்ளன. இறப்புக்குப்பின் நடப்பதையும், இப்பிறவியிலும் மறுபிறவியிலும் நடப்பதையும், இறைவனே தீர்மானிக்க வேண்டும் என்பது இவர்களுடைய கொள்கை. இறந்த பின் ஆன்மா இறைவனைச் சார்ந்து நிற்பதாகவும், இறைவனுடன் ஐக்கியமாவதில்லை என்றும் கருதுகிறார்கள்.

## வீரசைவம்

நவீன ஆயிரம் ஆண்டுகளுக்குள் உருவான பிரிவு இது. கர்நாடகத்தில் ஸ்ரீ பசவன்னாவால் தோற்றுவிக்கப்பட்டது. வீரசைவர்கள் கழுத்தில் லிங்கம் அணிந்திருப்பவர்கள். சிவனையன்றி வேறொரு தெய்வம் இல்லை என்ற தீவிரமான கருத்துக் கொண்டவர்கள். உடம்போடு சிவலிங்கம் எப்போதும் ஒட்டியே இருப்பதால், ஆன்மா சிவபெருமானுடன் எப்போதும் ஒன்றி இருக்கும் என்ற கருத்து உடையவர்கள். இவர்களுக்குச் சிவ சரணர்கள் என்றும் பெயர் உண்டு.

லிங்காயத்து என்று அழைக்கப்படும் இவர்கள் பிற்பட்ட வகுப்பினர்களாக இருந்து, உயர் குடிமக்களின் சம்பிரதாய முறைகளை எதிர்ப்பவர்கள். வர்ணாசிரம தர்மம், ஜாதிப்பிரிவினை, பலி இடுதல், யாகம் செய்தல், சம்பிரதாயமான சடங்குகள் ஆகியற்றை விரும்பாதவர்கள்.

பசவண்ணா இரண்டு மனைவிகளை மணந்தவர். துறவறம் இல்லாமல் இல்லறம் மூலமாகவே ஆன்மீகப்பெரியோருக்கு நிகராக விளங்க முடியும் என்று கருத்துக் கொண்டவர். ஈசன் தனக்குள்ளேயே இருப்பதாக எண்ணவேண்டும் என்பது இவரது கொள்கை. ஆதலால் கோயிலுக்குச் சென்று வழிபட அவசியமில்லை என்று கருதுபவர். சிவானுபவ மண்டபம் என்ற இடத்தில் நாள்தோறும் தனது கொள்கைகளை வலியுறுத்திப் பேசி வந்தனர்.

கன்னடத்தில் வாசனங்கள் என்ற கவிதை வடிவில் உள்ள நூல்கள் இந்தத் தத்துவங்களை எடுத்துக் கூறுகின்றன. பசவண்ணாவின் மறைவுக்குப் பிறகு இப்பிரிவில் இந்த சம்பிரதாய எதிர்ப்புக்கள் மறைந்து விட்டன. ஆலய வழிபாடும், குருவிடம் மந்திரோபதேசம் ஏற்பதும், சைவ ஆகமங்களைப் பின்பற்றுவதும் இப்போது இவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. வீரசைவம் சக்தி வசிஷ்டாத்வைதத் தத்துவத்தை ஏற்றுக் கொள்ள வந்துள்ளது. சிவபெருமானாலேயே உயிர்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும், அவை தனித்து நிற்பதாகவும், அவற்றின் உலக வாழ்க்கை மாயை அல்ல என்பதும் இவர்களுடைய கொள்கை.


பக்தி, தியாகம், சிவபெருமானின் அருளைத் தீவிரமாக நாடுதல், எல்லாம் சிவமயம் என்று நம்புவது, சிவபெருமானிடம் ஐக்கியமாவது ஆகியவை இதன் அங்கங்கள், தினந்தோறும் சிவபூஜை செய்வது, சடாச்சாரம், சிவாச்சாரம். பிற உயிர்களிடம் அன்பு காட்டுவது, தனது குலப்பெருமையைக் காப்பது ஆகியவை இவர்களுக்கு விதிக்கப்பட்ட கடமைகள். குரு, லிங்கம், ஜங்கம சன்னியாசி, குலஎதுகை, பிரசாதம், விபூதி, ருத்திராட்சம், "நமசிவாய" என்ற மந்திரம் ஆகியவற்றை மதித்துப் போற்ற வேண்டும் என்பது விதி.

பையன்களும் பெண்களும், அறியாப் பருவத்திலேயே லிங்கதீட்சை பெறுவது வழக்கம். இது பூணூல் கல்யாணத்தைப் போலவே நடைபெறும். தினமும் அந்த லிங்கத்தைப் பூஜித்து வழிபடுவார்கள். பொதுவாக சமூக சேவையிலும், எளியவர்களுக்கு உதவுவதிலும் நம்பிக்கை மிகுந்தவர்கள். கர்நாடகத்திலும் மத்திய வட இந்தியாவிலும் சுமார் நான்கு கோடி வீரசைவர்கள் இருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

## காஷ்மீர் சைவம்

காஷ்மீர் சைவம் வளமான உடல் நலத்தையும், குண்டலினி சித்தயோகத்தின் மூலம் தன்னிலையை உணருவதற்கும் வழி செய்கிறது. காஷ்மீர் சைவம் தனிப்பட்ட இஷ்ட தெய்வ பூஜையை மறுப்பதில்லை. ஆனால் குருநாதரை நாடி மந்திரங்களைக் கற்று, பிறகு தனியே அமர்ந்து தியானம் செய்யும் முறையைப் பெரிதும் மதிக்கிறது. ஈசன் சக்தி மூலம், பக்தர்களுக்கு அருளுவதன் மூலம், தனது பேரொளியை அடியவர்களின் ஆன்மா மீது ஒளிரச் செய்வதாக அவர்கள் நம்புகிறார்கள். சிருஷ்டி, காத்தல், அழித்தல், வெளிப்படுதல், மறைத்தல் ஆகிய ஐந்து கிரியைகளின் வழியாக இறைவன் செயற்படுவதாகக் கொள்பவர்கள். உலகம், நாரன் என்ற இரண்டடையும் சிருஷ்டிக்கும், இறைவன் இரண்டிலும் வந்து நின்று இணைப்பதாகக் கருதுவார்கள். ஈசனுடன் ஆன்மா ஐக்கியமாவதாக நம்புவதில்லை.

இவர்கள், மூன்று உபாயங்கள் மூலம் ஈசனை அடைய முடியும் எனக் கருதுவார்கள். முதலாவது மூச்சு மூலமாகவும் தியான மூலமாகவும் அணுகுவது: இதன் பெயர் அனவோபாயம். எண்ணங்களை விலக்கி, நல்லனவற்றைப் பிரித்து, அவற்றை ஈசனிடம் ஒன்றித்த



கருத்துடன் ஈடுபடுத்துவது இரண்டாவது முறை: இதன் பெயர் சக்தி உபாயம். அடுத்ததாக, குருநாதர் மூலம் ஈசனைப் பற்றிய மந்திரோபதேசம் பெற்று ஜபித்து உணர முயலும் வழி. இதன் பெயர் சம்பவோபாயம். ஈசனைத் தன்னுள்ளேயே நினைத்து உணர முயலும் முறை நான்காவது; இது அநுபாயம்.


சுவாமி லட்சுமண்ஜீ என்பவர், 'பரம்பரா' என்ற இவர்களுடைய சாத்திர அமைப்புக்களுக்குக் கருத்துரை எழுதி இருக்கிறார்.

### சைவ அத்வைதம்

சைவ அத்வைதம் என்பது ஸ்ரீகாந்தரால் பிரம்பசூத்திர பாஷ்யம் மூலம் விளக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் வாழ்ந்த அப்பய்ய தீட்சிதரின் கருத்துரை இதைப் புரிந்துகொள்ளப் பெரிதும் உதவுகிறது.

ஈசன் விளையாட்டாகவே உலகை நிறுவி, பிறகு அதில் உள்ள உயிர்களிடம் இருந்து, லீலைகளைச் செய்து, சக்தி மூலம் இயங்குவதாகக் கூறுவது இவர்களது கொள்கை. சிவபெருமானது ஆன்மீகத் தோற்றம் கோடி சூரியப் பிரகாசமாக இருப்பதாகவும் வருணிக்கிறார். ஆழ்ந்த தியானத்தின் மூலம் பற்றுகளை விலக்கி இறைவனை அடைந்து விடலாம்.

உடல் மறையும்போது ஆன்மா விடுதலை பெற்று ஈசனை நாடுகிறது. ஆன்மாவுக்கு உயர் பண்புகள் ஏற்படுகின்றன. கர்மவினைப் பயனை ஒட்டியே இந்த முக்தி நிலை கிடைப்பதாக உணருகிறான்.



அப்பைய தீட்சிதர் சைவ வழிபாட்டு விதிகளை எழுதி வைத்திருக்கிறார். அவை இன்றும் பின்பற்றப்படுகின்றன. வேதாந்த மார்க்கத்தில் அவர் அத்வைதத்தையே நாடினார். ஆயினும் பிற மார்க்கங்களைப் பற்றியும் எழுதி இருக்கிறார். பிறமார்க்கங்களைப் பற்றியும், மாத்வரின் துவைதம் பற்றியும் கூட அவர் கருத்துரைகள் எழுதி உள்ளார். அவருடைய சிவகர்ணாமிதம் என்ற நூல் பக்திப் பயிரை விளையச் செய்வது.

### சித்த சித்தாந்தம்

சித்த சித்தாந்தத்தை கோரக்ஷண நாத சைவம் என்றும் அழைப்பார்கள். நேப்பாளத்தில் வசித்த மத்ஸ்யேந்திரநாதரின் சீடர் கோரக்ஷ்ணநாதர். ஈசனிடமிருந்தே சிவஞானம் பெற்று அவர் தனக்கு உபதேசித்ததாகக் கோரக்தாணநாதர் கூறி இருக்கிறார். இந்தப் பிரிவினர் ஹடயோகத்தில் தீவிரப்பற்று உள்ளவர்கள்.

கோரக்ஷணநாதர் இந்தப் பிரிவின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் 'சித்த சித்தாந்த பத்ததி' என்ற நூலில் எழுதி இருக்கிறார். ஆழ்ந்த சமாதி நிலையில் இருந்து அபூர்வ சித்திகளைப் பெற்றிருக்கிறார். அவருடைய சீடர்கள் அணிந்த ருத்ராட்சம், நெற்றியில் திருநீறு, விரிவான முடியும் தாடியும் ஆகியவை, இந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் அனைவராலும் பின்பற்றப்பட்டன.

நாதன் உள்ளிருக்கும் உலகையும், வெளி உலகையும் இறை வடிவங்களாகவே இவர்கள் மதிக்கிறார்கள். இதை 'மகா சாகரபிண்டம்' என்றும் அழைக்கிறார்கள். புனிதப் பயணங்களிலும், புண்ணிய தீர்த்தங்களிலும் பெரிதும் நம்பிக்கை கொண்டவர்கள். அகவழிபாடாகக் குண்டலினி யோகத்தைப் போற்றுபவர்கள். காயசித்தி மூலம் நீண்ட நாள் வாழ்வதில் நம்பிக்கை மிகுந்தவர்கள்.

"சிவத்திலிருந்து உருவாகிச் சிவத்திலேயே மீண்டும் மறைவதே நமது சித்தாந்தக் கொள்கை. நீரில் குமிழி எழுந்து நீரிலேயே மறைவதைப் போன்றதே நம்முடைய வாழ்க்கை. அந்த அகண்ட நீர்ப்பரப்பே இறைவன்" என்று கோரக்ஷணநாதர் எழுதுகிறார். பசுவைத் தெய்வமாக வணங்கிப் போற்ற வேண்டும் என்பது அவருடைய கொள்கை. இன்று உலகில் சுமார் ஏழரை லட்சம் மக்கள் இந்தப் பிரிவைச்

சார்ந்திருக்கிறார்கள். நேப்பாளத்திலும் வட இந்தியாவிலும் பரவலாக உள்ள இவர்களுடைய தாந்திரீக முறைகளிலும், சித்து வேலைகளிலும் தேர்ந்த சாதுக்கள் பலர் இருக்கிறார்கள்.

## சிவசொரூபங்கள்

சாந்த மூர்த்தியும் சத்குரு சொரூபியாகவும் இருந்து ஞானம் அருளும் நிலையில் அவர் தட்சிணாமூர்த்தி என அழைக்கப்படுகிறார். இதே சாந்த மூர்த்தியான ஜகதீசுவரன் 'ருத்ரன்' என்ற பெயரில் கோப சொரூபியாகக் காட்சி அளிக்கிறார்.

சாந்த சொரூபியாகவும், ரௌத்திர சொரூபனாகவும் விளங்கும் இவர் ஆனந்த நடனப்ரகாசனாகவும் விளங்குகிறார். அவர் ஆடும் அரங்கம் பக்தர்களுடைய மனமேயாகும். தாருகவனத்து ரிஷிகளின் அகந்தையை அடக்க ஈசன் கொண்ட வசீகரமான தோற்றம் பிட்சாடனர் உருவம். எல்லோருக்கும் அருள் புரியும் கருணை வடிவமே உருவமா திகழ்பவர் சோமஸ்கந்தர்.

சில சாளக்ராமங்களும் சிவனது சொரூபத்தை விளக்குவதாக உள்ளன. தொடர்ந்து வம்ச வழியாக இதற்குச் சிவ பூஜை செய்யும் வழக்கமும் உள்ளது.

## ருத்ராட்சமகிமை

சிவசின்னங்களில் ஒன்றும், சிவபக்தர்கள் பெருமையுடன் அணிவதுமான ருத்ராட்சத்தின் மகிமை அளவிட இயலாதது. ருத்திரனின் கண்களிலிருந்து (அட்சம்) தோன்றியமையால் இது இப் பெயர் பெற்றது.

இவை ஒரு முகத்திலிருந்து பதினாறு முகம் வரை பெற்றிருப்பவை. ருத்திராட்சம் அணிவதால் சர்வா பீஷ்டங்களும் நிறைவேறும்.


## வழிபாட்டு முறைகள்

சைவத்தில் அகவழிபாடு, புறவழி பாடு இரண்டுமே உள்ளன. சஹஸ்ர தள கமலத்தில் நிலைத்துள்ள அமைதியான சிவத்தை மூலாதாரத்திலிருந்து புறப்படும் குண்டலினிசக்தி எழுந்து சென்றடைந்து ஐக்கியம் அடையச் செய்யும் யோகநிலை வழிபாடு அகத்தைச் சார்ந்தது.

புறவழிபாடு செய்பவர்கள் சிவனை வழிபாடு செய்ய ஆசார சீலர்களாகத் திகழ்கிறார்கள். சிவபெருமானின் முக்கிய சின்னமாகிய விபூதி அணிந்து, ருத்ராட்ச மாலை தரித்து, சிவபெருமானது பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி, குருவின் அருள்பெற்று, தொடர்ந்து ஜபித்து வழிபாடு செய்வார்கள்.

சிவபெருமானை உருவமாகவும் லிங்க வடிவிலும், சாளக்ராமமாகவும் பூஜிப்பவர்கள் அபிஷேகங்களை நிறையச் செய்து வழிபடுவார்கள். சிவபெருமானின் உருவம், குணம் முதலியனவற்றை அழகுடன் விளக்கும் ஸ்ரீருத்ரம், சமகம் முதலிய சாந்தியளிக்கும் வேத மந்திரங்களைப் பக்தியுடனும், பரம நம்பிக்கையுனும் பாராயணம் செய்வார்கள். பிறகு ஈசனுடைய குணங்களை விளக்கும் சகஸ்ர நாமங்கள், ருத்ரத்ரிசதி, சிவாஷ்டோத்திரம் ஆகியவற்றைச் சொல்லி, வில்வதளங்களால் அர்ச்சனை செய்கின்றனர்.

சிவபூஜை செய்பவர்கள் சிவபெருமானது தத்துவத்தை 'சிதம்பர சக்ரம்' என்ற நாற்பத்து மூன்று கோணங்களைக் கொண்ட யந்திரத்திலேயே காண்கின்றனர். இதற்கும் அபிஷேகம், ஆராதனை முதலியவற்றை முறைப்படி செய்து வழிபடுகிறார்கள்.



சிவனை வழிபடும் ஆலயங்களில் பெருமானை லிங்க வடிவில் வழிபடுகிறார்கள். இதுவும் நம்மை நாமே அறிய உதவும் தத்துவ மூர்த்தியின் வடிவமாகும். இந்த வடிவில், சிவலிங்கத்தின் முடி சாந்தி கலையாகவும், மார்பு வித்தியா கலையாகவும், கும்பம் பிரதிஷ்டா கலையாகவும், முழந்தாள் நிவர்த்தி கலையாகவும், உரோமம் புவனமாகவும், வர்ணமும் மந்திரமும் இரத்தமாவும், பதம் நரம்பாகவும், தத்துவம் எலும்பும், தசையுமாகவும் கருதப்படுகிறது.

மேலும் இந்த லிங்க ஸ்வரூபங்கள், சிவ – சக்தி ஐக்ய ரூபமாக விளங்குவதால், ஆனந்த மயமானதும், மங்களத்தை அளிப்பவருமான சிவனைத் துதிப்பவர்களுக்குச் சக்தியின் அருளும் எளிதில் கிடைக்கிறது.

## பஞ்சபூதத் தத்துவம்

வேத சொரூபியான பரமசிவன், ப்ருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய பஞ்ச பூதத் தத்துவங்களையும் தன்னுள்ளே அடக்கித் தானே அகிலமாக விளங்குகிறான். கீழ்க் காணும் ஐந்து தலங்களில் அவன் உறைவதாகச் சொல்லுவார்கள்.

அப்புலிங்கம் ஜம்புகேசுவரம் – திருவானைக்கா.

தேயுலிங்கம் – திருவண்ணாமலை.

வாயுலிங்கம் – காளஹஸ்தி.


ப்ருத்விலிங்கம் – காஞ்சிபுரம்.

ஆகாசலிங்கம் – சிதம்பரம்.

இத்தலங்களில் உள்ள லிங்க மூர்த்திகளைத் தரிசித்து, இயற்கையையே இறைவனாகக் காணும் அனுபவத்தை அடியார்கள் பெறுகிறார்கள்.

ரௌத்ர சொரூபியான ருத்ரனை வணங்கிப் பூஜிக்க, பயன்படும் மந்திரமே ஸ்ரீருத்ரம். அது கிருஷ்ண யஜுர் வேதத்தில் நடுவில் உள்ளது. ருத்ர பாராயணத்தினால் நிறைய நன்மைகள் உண்டாகும்.

உபாசனா மார்க்கங்களின் மூலமாகவும், யோக மார்க்க மூலமாகவும், அறிந்து வழிபட உதவும் பஞ்சாட்சர மந்திரம் 'நமசிவாய' என்பது. நாசித் துவாரங்களைச் சிவன் (வலம் : சூர்யநாடி) என்றும், சக்தி (இடம் : சந்திரநாடி) என்றும் யோகசாஸ்திரம் கூறுகிறது. பஞ்சாட்சரத்தில் நம என்பதைச் சீராக உள்ளிழுத்து, 'ஓம்' என்று சிறிது நேரம் நிறுத்தி, 'சிவ' என்று சொல்லி வெளிவிடும் போது, 'ய' என்ற அட்சரம் மந்திரத்தின் ஜீவனாக அமைந்து, இந்தச் சுவாசத்தைப் பூர்த்தி செய்கிறது. கர்மவினையால் ஏற்படும் பிறப்பு, இறப்புக் காலத்தைக் குறுக்கி, ஜீவன் மோட்சத்தை அடைய உதவும் மந்திரமாக, பஞ்சாட்சர ஜபம் விளங்குகிறது.



உலகில் தோன்றும் மக்கள் சிலகாலம் வாழ்ந்து, மறைந்து விடும் தன்மை கொண்டோராவர். அவர்கள் வாழும் வகையிலிருந்தே உலகத்தோரால் உலக இன்பங்களை அனுபவித்தாலும் அதில் மனத்தைப் பறிகொடுக்காமல் தெய்வ சிந்தனையுடன் வாழ்வது மிகவும் அரிய உயரிய வாழ்வாகும்.

நமது முன்னோர்கள் - அன்றாடம் அதிகாலையில் நித்திரைவிட்டெழுவது முதலாக இரவு மீண்டும் படுக்கைக்குச் செல்லும் வரையுள்ள சகல காரியங்களையும் இன்ன வகையில் செய்தல் வேண்டும் பலவற்றுக்கும் மத்தியில் உழலும் மனிதனுக்கு மன அமைதிக்காகச் சில நிமிடமாவது நியதியாக தினமும் வழிபாடாற்றுவது மிகவும் அரிதாகும். ஆயினும் ஆலயத்திற்குச் சென்று சில நிமிட நேரமாவது சிந்தனைகளைச் சிதறவிடாது மனத்தை ஒரு நிலைப்படுத்தி தியானம், அர்ச்சனை, தோத்திரம் ஆகியவற்றில் ஈடுபடுத்தினால் அன்று முழுவதுமே மனத்தில் நிம்மதியும் சந்தோஷமும் அமைதியும் நிலைத்திருப்பதை அனுபவத்தில் அனைவரும்



# தெய்வீக வாழ்வு

டாக்டர் நா. சோமசுந்தரக் குருக்குள்.


என விதித்திருக்கின்றனர். "இப்படிச் செய்தல் தகாது", "இப்படித்தான் செய்தல் வேண்டும்" என்று வரையறுத்துக் கூறப்பட்டவற்றை ஆராய்ந்து பார்த்தோமெனில் - அவையனைத்தும் ஆரோக்கியத்திற்கும் செல்வத்திற்கும் அமைதிக்கும் ஒற்றுமைக்கும் அன்புக்கும், இறுதியில் எல்லையில்லாத இன்பத்திற்குமே ஏற்றவையாக இருப்பதை அறியலாம். ஆலய வழிபாடு தினமும் செய்தல் வேண்டும் என்பதும் அவர்களது அறிவுரையாகும். ஔவைப்பாட்டியும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" எனவும் கூறியுள்ளார். எனினும் வாழ்க்கைப் பிரச்சினைகள்

அறிவோம். இதனால் ஆலயத்துள் பிரவேசிப்பது முதலாக இங்கிருந்து திரும்புவது வரை நாம் அறிந்து அனுட்டிக்க வேண்டிய சில கருத்துக்களை இப்போது தொகுத்துத் தருகின்றேன்.

## கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

கோவிலுக்கு வெகுதூரத்திலிருந்து நோக்கும் போதே நமது மனத்தில் தெய்வ சிந்தனையை உண்டு

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கை வந்திருந்த
டாக்டர் நா. சோமசுந்தரக் குருக்கள்
இம்மலருக்கென வழங்கிய கட்டுரை




புண்ணுவது கோபுரத்தின் திருத்தோற்றமாம். இதனால் இதைத் தூலலிங்கம் எனக் கூறுவர். இதன் அமைப்பு எரியும் சுடர் போன்று உள்ளதை அறிவீர்கள். இறைவனின் திருவருள் வடிவமும் இவ்வண்ணம் என்றுதான் அருளாளர்கள் கூறியுள்ளனர்.

"சோதியே! சுடரே! சூழொளி விளக்கே!" எனவும், "தூண்டு சுடர் அனைய சோதி" என்றும் "கற்பனை கடந்த சோதி" எனவும் "பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பு" என்றும் திருமறைகள், புராணங்கள் இறைவனைப் போற்றியுள்ளன. மணிவாசகப் பெருமான் சிவ புராணத்தில், சிவனை "ஓங்கி – ஆழ்ந்து – அகன்ற நுண்ணியனே" என வர்ணித்துள்ளார். எனவே கோபுரத்தை இந்த மாதிரியான அமைப்பில் உருவாக்கினர். இதன் நாற்புறங்களிலும் பிரம்மா, விட்டுணு, உருத்திரன், மகேஸ்வரன் ஆகிய மூர்த்திகளின் பலவகைத் தோற்றங்கள் அமைக்கப்பட்டிருப்பது ஒரே பரம்பொருள்தான் பல்வேறு தோற்றங்களைத் தாங்கி ஐந்தொழில்களையும் நடாத்துமெனத் தெளிவதற்கேயாகும். சதாசிவ வடிவத்தின் ஐந்து திருமுகங்களும் சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருடம், ஈசானம் எனப் பெயர் பெற்று முறையே, பிரம்ம, விட்டுணு, உருத்திர, மகேச, சதாசிவ மூர்த்திகளாக விளங்குகின்றன. இவை ஆற்றும் ஐந்து தொழில்களும் பின்வருமாறு சிவாகமங்களில் கூறப்படுவதைக் காண்க.

*"சத்யோஜாஞ் சிருஷ்டி ரூபம் –*
*ஸ்திதிர் வாம முகம் பவேத்,*
*சம்ஹாரம் தட்சிணம் வக்த்ரம் –*
*திரோ பாவஞ்ச பூர்வகம்*
*அனுக்கிரஹஞ்ச ஊர்த்வ வக்த்ரம்"*

இக்கோபுரங்கள் மூன்று தத்துவங்களின் வடிவில் மூன்றுபடி நிலையுள்ளவையாகயும் பஞ்சகலை வடிவுளதாக ஐந்து நிலையுள்ளவையாகவும் இன்னும் ஏழு – ஒன்பது நிலைகளைக் கொண்டவையாகவும் வெவ்வேறு தத்துவ அடிப்படையில் இடம், பொருள், காலம் இவற்றுக்கேற்ப அமைக்கப்படுகின்றன.

இப்பிரபஞ்சம் முழுவதுமே இதனுள் அடக்கம் என நாம் சிந்தித்து வழிபடுவதற்காகவே உலகில் நடைபெறும் லீலா வினோதங்கள் பலவற்றைச் சிற்பங்களாகவும் ஓவியங்களாகவும் சித்திரித்துள்ளனர். உபானம் முதலான வரிவர்க்கங்களில் மந்திரங்கள், பதங்கள், வர்ணங்கள், புவனங்கள், தத்துவங்கள், கலைகள் ஆகிய யாவும் கற்பிக்கப்படுகின்றன. இதைத் தரிசிப்பது கோடி புண்ணியமாகும்.

கோபுர தரிசனத்தை முடித்தபின் கால் கைகளைச் சுத்தப்படுத்திக் கொண்டு ஆசாரத்துடன் உள்ளே புகுதல் வேண்டும்.

## மலைபோல ஒரு மாடு (நந்தி)

தர்மம் என்னும் அறத்திலேதான் தெய்வம் தங்கியுள்ளது என்னும் தத்துவத்தைத் தான் இடபத்தின் மேல் சிவன் அமர்ந்த நிலை. தருமம் எங்கே? இறைவன் அங்கே! என்றும் கருதலாம். இந்த தருமம் காலத்துக்கு காலம் மாறுபடும். கிருதயுகம் என்னும் யுகத்தில் எல்லோருக்கும் ஆயுள் அதிகம் அப்போது பிறந்திருந்தால், நாம் பல ஆயிரமாண்டுகள் வாழ்ந்திருக்கலாம். ஆனால் தருமத்தைச் செய்து நிறையப்புண்ணியம் தேடுவதானால் மிகவும் கஷ்டம். ஏனென்றால் எங்கும் நியாயம், நேர்மை, தானம், தருமம், பரோபகாரம், பொன், பொருள், உணவுவகை, ஏராளம் ஏராளம். இப்படி கிருதயுகத்தைப் பற்றி

வர்ணிக்கின்றார்கள். அப்படியானால் தர்மம் தழைத் தோங்கி நிற்கும் காலம் அது. நம்போன்றவர்கள் செய்யும் அற்புதமான ஜபம், தியானம், பஜனை தோத்திரங்கள் தான தருமங்களினால் நமக்குக் கிடைக்கும் புண்ணியப் பலனும் மிகவும் குறைவாகவேயிருக்கும். ஏனென்றால் நமக்குப் போட்டியாளர்கள் மிகவும் அதிகம். ஆகவே ஞானிகள் முனிவர்கள், அந்தணர்கள் அரசர்கள் வியாபாரிகள், விவசாயிகள் அனைவரும் சுத்தம் தரம் நியாயம் நேர்மை கட்டுப்பாடுகள் விதிமுறைகள் ஆயிரமாயிரம். இவற்றுக்கெல்லாம் ஈடு கொடுத்து யாகம் உற்சவம் ஜபம் தவம் ஏன் தோத்திரம் பாடுவதனால் கூட மிகவும் கவனமும் சாமர்த்தியமும் தேவையல்லவா? அதுமட்டுமா சிறு தவறுசெய்தால் கூட உடனே தண்டனை. முனிவர் தருவதானால் சாபம்; அரசர் தருவதானால் சிரச்சேதம். இவையெல்லாம் நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது.

அப்போது – தருமத்தின் சின்னமாகிய இடபம் நன்றாக நாலுகாலிலே உலவியது எனலாம்.

பின்பு – திரேதாயுகம் முதலாவது யுகத்தைக் காட்டிலும் தருமகாரியங்கள், நியாயம் – நீதி, புண்ணிய காரியங்களும் சற்றுக் குறைய ஆரம்பித்தன. நம்பிக்கை விசுவாசம் நாணயம் கட்டுப்பாடுகள் விதிமுறைகளில் சற்று சலுகை காட்டப்பட்டன.

அனைத்திலும் குறைபாடு :– ஆகவே தருமம் செய்யும் மனப்பான்மையுள்ளவர்களுக்கு பெருமளவு மதிப்பெண்கள் கிடைத்தன. பாடசாலையில் சென்ற வருட பாடத்திட்டத்தை – மாற்றியமைத்து இவ்வருடம் சுலபமாக அமைந்தவுடன் மாணவர்களில் இடைநிலையின் முதல் நிலைக்கு முன்னேறி விடுகின்றனர். காரணம் கல்வித்தராதரம் குறைக்கப்பட்டதுதான். அதுபோல் தருமத்தின் நிலையும் தளர ஆரம்பித்தது. அந்த யுகத்தில் தருமச் சின்னமாகிய நந்தி ஒருகாலில் வலுவிழந்து மூன்று காலுடன் நடமாடியது. ஆடற்காலமும் சற்றுக் குறைய ஆரம்பித்தது. அடுத்து துவாபரயுகம் என்னும் மூன்றாவது காலகட்டம்; தெய்வ நம்பிக்கை தரும சிந்தனை. பரோபகாரம் மிகமிக குறைந்திருந்ததினால் நியாயம் நேர்மையோடு தரும சிந்தனைகளுடன் வாழ்பவர்களுக் கெல்லாம் கடவுள் அவதரித்து வழிகாட்டினார். விதிமுறைகளில் மேலும் தளர்வு ஏற்பட்டால் பல்லாயிரக்கணக்கில் மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைவது போல புண்ணிய சீலர்களும் ஏராளமாக பெருந்தொகையில் சித்தியடைந்தார்கள். இந்த யுகத்தில் தருமத்தின் சின்னமாகிய காளைக்கு மேலும் ஒரு கால் பலவீனமடைந்ததினால் இரண்டு காலில் நாய் உட்கார்ந்திருப்பது போன்ற நிலை ஏற்பட்டது. இப்போது நான்காவது யுகம். நமது காலகட்டம். கலிகாலம் என்று பெயர்பூண்டு புகழுடன் விளங்குகின்றது. தர்மம், நியாயம் தானம், பரோபகாரம் இவையெல்லாம் என்ன விலை என்று கேட்கக்கூடியக் காலம். நெருங்கிய நண்பனைக் கேட்டால் என்னிடம் எந்தக் கெட்ட பழக்கமும் கிடையாது என்பான். வஞ்சகம், பொறாமை, கொலை, களவு, குடி, பித்தலாட்டம் எதுவுமேயில்லை என்பான். பின்பு சற்றுப் பேசிப்பார்த்தால் தேவைப்படும் போது பொய் மாத்திரம் பேசுவான் என்பது புரியும். அப்புறம் என்ன, எல்லாமே புளுகு தான் என்பது தெரியவரும். கடவுள் பார்த்தார். இம்முறை யாருமே பரீட்சையில் தேற மாட்டார்கள் போல் தெரிகிறது. எனவே பாடமே வேண்டாம். சும்மா வெளியூர் ரூர் போய் வருவோம் என்று அழைத்துப் போய் சில நல்ல



தகவல்களை மாணவர்களுக்கு தெரிவிக்க விரும்பும் ஆசிரியர் போல, மக்களிடம் சிறிதளவேனும் நியாயம் உண்மை, நாம ஜபம் போன்ற தெய்வ வழிபாடு இருந்தால் உடனே நூறுமதிப்பெண்களையும் போட்டு மோட்சம் அளிக்க முன்வந்துள்ள காலம் இது. எனவே நாமெல்லாம் மிகவும் அதிர்ஷ்டமுள்ள மாணவர்கள். ஆனால் ஞானமும், கல்வி தராதரம் போலவே ஆகிவிட்டது. நாம் இப்போது கண்டறியும் விஞ்ஞான உண்மைகள் யாவும் முன்பு கூறப்பட்ட மெய்ஞ்ஞான முடிவுகள் அல்லவா? புதிதாக ஒன்றுமே தோன்றவில்லையே? என்று நாம் ஆச்சரியப்படுகின்றோம். இக்காலத்தில் தருமத்தின் சின்னம் (நந்தியினால்) காலும் வலிவிழந்து வழங்காமல் போய்விட்டது. முன் போல கூட உட்கார முடியவில்லை. எனவே கீழே படுத்து விட்ட நிலையில் வலது முன்னங்காலை மட்டும் நீட்டி எழுந்திருக்க முயல்கின்றது. முடியவில்லை; ஆனால் முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பது உண்மை. தர்மம் என்றும் அழியாது. ஆகவே அடுத்தயுகம் நிச்சயம் மிளிரும் முதலாவது கிருதயுகம். தருமம் எழுந்து நாலுகாலில் நிற்கும். நீங்கள் அப்போது பிறந்தால் பல்லாயிரம் ஆண்டுகள் அழியாமல் வாழலாம்.

திருநாளைப் போவார் திருச்சரிதையில் – திருப்புன்கூர்த் தலத்தை அடைந்து வெளியில் நின்று தரிசனம் செய்ய முனைந்தபோது கோபுரத்து மண்டபத்தில் உள்ள பெரிய நந்தி மறைத்திருப்பதைப் பார்த்து "மலைபோல ஒரு மாடு படுத்திருக்கிறதே" என பாடினார். உடனே அந்த மாபெரும் நந்தி இறைவனருளால் விலகியது என அறிகிறோம். அந்த நந்தி தேவருக்கு "அதிகார நந்தி" எனப் பெயர். நமது கோவில்களில் இடவசதியின்மையால் இது அமைக்கப்படுவதில்லை. ஆயினும் நாம் மனத்தினால் அவரைச் சிந்தித்து வழிபட்டு, சுவாமி தரிசனம் செய்வதற்கு அவரது அனுமதியைப் பெற்று உட்செல்லுதல் வேண்டும். உள்ளே சென்றதும் கொடிமரத்திற்கு இப்பால் பூமியிலே வீழ்ந்து வணங்குதல் வேண்டும். அங்குள்ள பலிபீடத்தில் நமது காமம், குரோதம், மதம் முதலானவற்றை அர்ப்பணம் செய்து பரிசுத்த ஆன்மாவாகிய நந்தியைப் போல் நாமும் தூய்மையும் பக்தியும் உள்ளவர்களாகி வழிபடுதல் வேண்டும். கொடி மரத்தின் அமைப்பினை நோக்கின் அது சோதிவடிவான இறைவனை உணர்த்துவதாய் இருப்பதை அறியலாம். அதனடியில் மூலாதாரத்து அதிபதியாகிய கணபதி சிறிதாக, மறைவாக அமர்ந்திருப்பார். பாசநீக்கம் பெற்று விட்டால் ஆன்மா பதியைச் சென்றடைந்து பரமானந்தத்தை அனுபவிக்கும் என்பதை காண்பிப்பதற்கே – பலிபீடம், நந்தி முதலியன முறையே அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் கோவிலின் அமைப்பு கோபுரத்திலிருந்து கர்ப்பக்கிரகம் வரையும் நோக்கின் படுத்திருக்கும் ஒரு மனிதனின் உடலமைப்பில் இருப்பதை உணரலாம். கோபுரம் பாதங்கள் – கர்ப்பக்கிரகம் சிரசாகும். மேலும் கொடிமரம், விமானம் ஆகியன கீழே சமாதியில் உட்கார்ந்திருக்கும் ஒரு ஞானியின் வடிவில் அமைந்திருக்கின்றன. மூலாதாரம் முதல் ஆறு ஆதாரங்களும் கீழிருந்து படிப்படியாக விளங்குகின்றன. எனவே, இருவிதமான அமைப்புக்களும் திருவருளால் ஞானத்தில் நாம் கீழிருந்து மேல் நிலைக்கு உயர்த்தப்பட்டு நற்கதியடைய முடியும் என்பதையும் ஏக காலத்தில் தெரிய வைக்கின்றன. பாசங்களிலிருந்து விடுபட்ட ஆன்மாவானது படிப்படியாக ஆணவ முனைப்பு குன்றக்குன்ற ஞான வடிவமாக மாற்றமடையும் என்பதனை விளக்குவதற்காக, சில ஆலயங்களில் வெளியிலிருந்து எல்லா மண்டபங்களிலும் தனித்தனி ஒவ்வொரு நந்தி அமைக்கப் பெற்றிருப்பதனாலும், அவை ஒவ்வொன்றும் படிப்படியாக உருவத்தில் சிறிது சிறிதாக இருப்பதனாலும் ஆழ்ந்து சிந்திக்க கூடியதாக உள்ளது. (இங்குள்ள சிறுகோவில்களில் எல்லா மண்டபங்களிலும் தனித்தனி நந்தி இருப்பதில்லை. இடவசதியின்மையே இதற்கு முக்கிய காரணமாகும்) இதேபோன்று பாசநீக்கம் பெற்ற ஆன்மா கொடிமரமாகிய பதியுடன் சென்று சேர்வதனைக் கொடிமரம் விளக்குகின்றது. கொடிமரம் பதி. கொடிச்சீலையில் எழுதப் பெற்ற நந்தி. (இறைவனது படைக்கலமாகிய திருவருட் சக்தியைத் தனது முதுகில் தாங்கி நிற்பதனால்) சத்திநிபாதம் பெற்ற ஆன்மா. தருப்பைக் கயிறு பாசம். எனவே இருவகையான நிலையிலும் முப்பொருள் விளக்கத்தை நமக்கு நல்கி நிற்பதை அறியலாம். கொடிமரத்தினடியில் முலாதார ஸ்தானத்தில் நான்கு இதழ்களுடன் கூடிய தாமரைப் புஷ்பத்தில் மூலாதாரக் கணபதி வீற்றிருப்பார். மூலவர் எந்த மூர்த்தியாக இருப்பினும் மூலாதார ஸ்தானத்தில் விநாயகரே காணப்படுவார்.

*"வ, ச, ஷ, – தளயுக்தே சம்யகாதார பத்மே*
*தருண மருண காத்ரம் வாரணாஸ்யம் கணேசம்*
*அபய வரத ஹஸ்தம் சாருபாசாங்கு சோத்யத்*
*கரயுகள மனன்யம் சிந்தயேத் விக்னராஜம்"*

என, ஆகம தியானம் விளம்புகின்றது. இதனைப் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் –

**மாமலர் நாலையும் வட்டத்தின் மேலிடு**
**மாமலர் நாலினும் வவ்வாதி சவ்விடு**
**மாமலர் நாலிலே வட்டத்தி னுள்ளே**
**ஓமென விநாயகன்உலாவி நின்றானே**

என்று திருமூல தேவர் கூறுகின்றார்.

ஆகவே, இவற்றை நன்கு சிந்தித்துக் கொடிமரத்துக்கு இப்பால் கீழே வீழ்ந்து வணங்குதல் வேண்டும். அங்ஙனம் வணங்கும் போது காமம், வெகுளி, மயக்கம் ஆகியவை நம்மைவிட்டு நீங்குவதற்காக, பலிபீடத்திலே இவற்றை நாம் பலியிட்டுப் பரிசுத்தமான ஆன்மாவாகிய நந்தியைப் போல் ஆகவேண்டுமெனச் சிந்தித்து வணங்குதல் வேண்டும். கீழே வீழ்ந்து வணங்கும் நமஸ்காரம் ஆண்களுக்கு அட்டாங்க நமஸ்காரமெனவும், பெண்களுக்குப் பஞ்சாங்க நமஸ்காரம் எனவும் இருவகைப்படும்.


ஆண்களும் பெண்களும் செய்யக்கூடிய பொதுவான நமஸ்காரம். கைகள் இரண்டையும் கூப்பித் தலையைச் சாய்த்து அதனுடன் சேர்த்து மூன்று அங்கங்களினாலும் வணங்குவது திரியங்க நமஸ்காரமாகும். (உச்சியின் மீது இருகரங்களையும் உயர்த்தி வணங்குதல் ஆண்களுக்கு மட்டுமே உரிய வணக்கமாகும்.)


விநாயகர் முதல் சண்டேஸ்வரர் ஈறாக உள்ள மூர்த்திகளை முறைப்படி ஒவ்வொரு சன்னிதானத்தின் முன்னரும் சிறிது நேரம் மனஅடக்கத்துடன் நின்று அந்தந்தச் சுவாமிக்கு ஏற்ற தோத்திரங்களில் ஒன்றினைக் கூறி வணங்குதல் வேண்டும். வணங்கும் போது அந்த மூர்த்தியின் திருத்தோற்றத்தை நன்கு பார்த்துச் சிரசு முதல் பாதம் வரை அத்திருவுருவை அவதானித்துத் தத்துவார்த்தங்களை மனத்தில் சிந்தித்து வழிபடுதல் வேண்டும். அங்ஙனம் இல்லா விடில் நாம் கண்களை மூடித் தியானத்தில் ஈடுபடும் நேரத்தில் மூர்த்தியின் திருத்தோற்றத்தை நமது மனக்கண்களால் காணுவதற்கு இயலாது போய்விடும். ஆகவே கண்களை நாம் பெற்றதன் பயன் இறைவனின் அழகிய திருத்தோற்றத்தினையும் அபிஷேக ஆராதனைகளையும் திருவுலாவரும் அலங்காரக் காட்சியினையும் கண்டு ஆனந்தம் அடைய வேண்டுமென்பதை உணர்தல் அவசியம்.

# விநாயகர்

விநாயகப் பெருமானையே நாம் முதலில் வணங்குதல் வேண்டும். மூலமும் முழுதும் முடிவுமாக விளங்கும் பிரணவ வடிவினராக விநாயகப் பெருமான் விளங்குவதனால் இவரின் வழிபாடு முதன்மை பெற்றது. அ+உ+ம் ஆகிய மூவெழுத்துக்களின் நாதங்கள் ஒருங்கு இணையும்போது "ஓம்" என்னும் ஒலி பிறக்கின்றது. நாதவடிவில் இறைவன் நமக்குக் காட்சி தருவதற்கே பிரணவமாகிய ஓம் என்னும் எழுத்தைப் போன்ற யானையின் முகத்தைத் தமது திருவதனமாகக் கொண்டு விநாயகர் விளங்குகின்றார். விநாயகனை முதலில் வணங்கினால், நாம் ஆரம்பிக்கும் எக்காரியமும் எவ்வித இடையூறும் இன்றி நிறைவேறும் எனவும் அல்லாவிடில் விக்கினங்கள் சம்பவிக்கும் எனவும் நமக்குக் கந்தபுராணம் அறிவுரை பகருகிறது.

விநாயக வழிபாடு செய்யாவிடின் தீமை விளையும் என்பதைச் சிவபெருமான் திரிபுரதகனம் செய்ய முற்பட்டபோது தேர் அச்சு முறிந்ததால் நமக்கு உணர வைக்கின்றனர். இதனை, "முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம் அச்சது பொடி செய்த அதிதீரா" என அருணகிரிநாதர் குறிப்பிடுகின்றார். விநாயகரை வழிபாடு செய்யும் போது, இருகைகளையும் முட்டியாகப் பிடித்து இரு சுபாலங்களிலும் குட்டிக் கும்பிடுதல் வேண்டும். இதனால் சிரசிலுள்ள அமிர்தமானது சகல நாடிகளிலும் கலந்து உடம்பு முழுவதும் அமிர்தமயமாக மாறி விடும்




श्री
JOTHI 1005


J.B - 6448


என கூறப்படுகின்றது. வலது கை முட்டியினால் தலையின் வலது பக்கத்திலும் இடக்கை முட்டியினால் இடது பக்கத்திலும் குட்டிக் கும்பிடுதலே முறையாகும்.

மேலும் வலது கையினால் இடக்காதினையும் இடது கையினால் வலக் காதினையும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்து எழுந்து (கனைக்காலில் தொடைபடும் வண்ணம்) வணங்கல் வேண்டும். இதனை "தோப்புக்கரணம்" எனக்கூறுவர். கயமுகன் என்னும் அசுரன் தேவர்களைக் கொண்டு இங்ஙனம் தன்னை வழிபடும்படி கூறிக் கொடுமைப்படுத்தினான். விநாயகப் பெருமான் அவனைச் சங்காரம் செய்து தேவர்களைக் காத்தருளினார். அன்று முதல் தேவர்கள் விநாயகப் பெருமானை தோப்புக்கரணம் செய்து வழிபடுவராயினர்.

கருணையின் திருவடிவமாகவும் ஞானத்தின் இருப்பிடமாகவும் விநாயகரை நாம் சிந்தித்து வழிபடுதல் வேண்டும். மூஷிக வாகனத்தைக் கொண்டுள்ளதன் நோக்கம் அற்பப்பிராணியாயினும் பெருத்த உருவத்தினையுடைய தம்மைச் சுமக்கும் வண்ணம் மிக லேசாகத் தம்மை உணர வைத்தலே யாகும். இதிலிருந்து பலவகைப் பிறவிகளின் வெளித்தோற்றம் மாறுபாடாக இருப்பினும் உயிர் ஒரே தன்மையானதெனவும், அவ்வுயிரில் பரம்பொருளாகிய இறைவன் கலந்து உறைகின்றான் என்பதும் நமக்குத் தெரிகின்றது. விநாயக வணக்கத்தினை முடித்துக் கொண்டு சிவபெருமான் திருச்சந்நிதியின் முன்னர் செல்லுதல் முறையாகும்.

## சிவன்

சிவபெருமானே சைவசமயிகளின் முழு முதற்கடவுளாவார். சிவபெருமான் உலகம் முழுவதும் நிறைந்தும் உலகத்தோரின் மனம், வாக்கு,



முதலியவற்றைக் கடந்தும் நித்தியராய் விளங்குபவர். எனவே, உலகம் முழுவதும் வியாபித்துள்ள சிவனை அவரின் ஆற்றல் கருதி ஆணாகவும், பெருங் கருணை கருதிப் பெண்ணாகவும் ஒரே சமயத்தில் ஞானிகள் தமது உணர்விலே கண்டார்கள். அந்தத் திருக்கோலத்தையே அர்த்த நாரீஸ்வர வடிவமாகவும் சிவலிங்கத் திருமேனியாகவும் நமக்கு வர்ணித்தார்கள். சிவம், சக்தி ஆகிய இரண்டும் பிரிக்கமுடியாத சம்பந்தமுடையவை. சிவம் – சக்தியின் மூலம் இயங்கி ஐந்து தொழில்களையும் நிகழ வைக்கிறது. சிவசக்தி ஐக்கியத்தினை சிவ என்னும் பதமே நமக்குப் புரிய வைக்கிறது. சி என்பது சிவம். வ என்பது சக்தி. சிவம் உறுதியாக இருப்ப, சக்தி இயக்கம் கொண்டு விளங்குகிறது. இதனை உமாபதி சிவாச்சாரியார் "பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும் கூசாமற் காட்டக் கொடி" என்று கொடிக்கவி என்னும் நூலிற் குறிப்பிடுகின்றார். பேசும் எழுத்து என்றால் இயங்கும் தன்மை கொண்ட வ என்னும் திருவருளாகிய சக்தி.

இதை உணர்த்தவே, சிவக்குறியாக உள்ள சிவலிங்கத்தையும் ஆண், பெண், அடையாளத்தின் தோற்றத்தில் அமைத்துள்ளனர். சிவலிங்கத்தின் கீழுள்ள வட்டமான பகுதி ஆவுடையாள் எனப்படும். இது இயக்க சக்தியாகிய திருவருள் மயமானது. உலகம் முழுவதும் தன்னுள் அடக்கி விளங்குவது. இதனுள்ளே பாதியும் மேலே தெரியும் வண்ணம் பாதியுமாக உள்ளது லிங்கம் என்னும் பகுதியாகும். இது அசைவின்றி என்றும் உள்ள பொருளாகிய சிவம் ஆகும். உலக வடிவாக உள்ள ஆவுடையாளின் அமிழ்ந்தும் அதனைக் கடந்து மேற்பட்டும் இருப்பதனாலே (கட+உள்) கடவுள் என்று அழைக்கின்றோம். இன்றைய விஞ்ஞானிகள் கண்டுள்ள முடிவுகளின்படியும் உலகத்தின் எல்லாப் பொருள்களையும் துகள்களாக்கி மேலும் நுண்துகள்களாக்கி ஆராய்ந்து பார்க்கினும் உள்ளே ஒவ்வொரு நுண்துகளிலும் இரு பொருள்கள் காணப்படுகின்றன என்றும் ஒன்று அசைவற்றதும் மற்றது அசைவு உள்ளது எனவும் (எலெக்ட்ரோன் நியூட்ரோன்) கூறுகின்றனர். இதனை நமது மெய்ஞ்ஞானிகள் எப்போதோ கண்டு கூறியிருப்பதை அவரறியார்.

## அம்மன்

சிவலிங்க தரிசனத்தை முடித்துக் கொண்டு நடராஜர் முதலிய மூர்த்திகளை தரிசித்துக் கொண்டு அம்பிகையை தரிசித்தல் வேண்டும். இறைவன் வேறு



அன்னை வேறு என நாம் எண்ணுதல் தகாது. யாவராலும் கண்டுணர முடியாத இறைவன் அருள் திருமேனி தாங்கி நமக்கு உருவமாக தோற்றமளிக்கும் போது கருணை வடிவான தாயாகிய அம்பிகை வடிவினை நாம் கற்பிக்கின்றோம்.

"அப்பன் நீ அம்மை நீ" "அம்மையே, அப்பா" போன்ற திருமுறைத் தொடர்கள் இதனை வலியுறுத்துகின்றன. இறைவன் எல்லா வஸ்துக்களையும் உயிர்களையும் கோவிலாகக் கொண்டு அதனுள்ளுறை தெய்வமாகத் தானே விளங்குகின்றான். எனவே எல்லா வடிவங்களும், படிமங்களும் அவனுக்குக் கோயிலாகும். ஆயினும் திருவருள் வடிவாகிய சக்தியின் வடிவமே அவனுக்குச் சிறப்பான கோவிலாகும். இதனை "தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை" என்னும் தொடரின் ஆழமான தத்துவ கருத்து இயம்பி நிற்கிறது. நாம் அன்னையின் கருணையினாலே தான் ஆண்டவனை உணர முடியும் என்பதனாலும் ஆண்டவன் எம்மை நோக்கிக் கீழிறங்கி வரும் போது அன்னை வடிவிலே தான் வருவான் என்பதனாலும் நம்மை மிகவும் அணுகி விலங்குவது ஆண்டவனின் அருட்சக்தியே என அறியலாம். இதனாற் தான் "நமப் பார்வதீபதயே" என வரும் தொடரில் பார்வதியை முதலில் கூறிப்பதியை உணரவைக்கின்றனர். அன்னையை வணங்கி அருள் பெறுவோமாக.

## சுப்பிரமணிய சுவாமி

இதன்பின் முருகப்பெருமான் திருச்சந்நிதியை அடைந்து வணங்குதல் வேண்டும். என்றும் இளையனாய், அழகனாய் ஆண் மயிலை வாகனமாய்க் கொண்டு தேவலோக, பூலோக மாதர்களாகிய இரு தேவிமார்களைக்கொண்டு, திருக்கரத்திலே வேற்படைக்கலத்தைத் தாங்கிய வண்ணம் முருகன் காட்சி தருகின்றான். அவனது கொடியிலுள்ள சேவல் அவனது பெரும்புகழை யாவரும் அறியும் வண்ணம் உரத்துக் கூவிச் சொல்லுகின்றது. இத்தகைய கந்தக் கடவுளை வணங்கும் போது தோகைமயில் ஆகிய பிரணவத்தில், உட்பொருளாக ஞானப்பழமாகிய முருகப் பிரான் வீற்றிருப்பதாக நாம் சிந்திக்க வேண்டும். இரு சக்திகளில் தெய்வநாயகியை தேவர்கள் அழைத்துச் சென்று முருகனிடம் சேர்த்தார்கள். வள்ளி நாயகியை தேடித் தானே வலிய வந்து, வேடர்களை வென்று தன்னோடு சேர்த்துக் கொண்டார். இதனை கந்தபுராணம் கூறுகின்றது. சில ஆன்மாக்கள் ஞானத்தினாலே முருகனை அடைவது உண்டு. பல ஆன்மாக்கள் அஞ்ஞானத்தினாலே அறியாதிருப்பினும் கருணை மேலீட்டினாலே ஞானப்பழமாகி முருகன் தானே வந்து தடுத்தாட்கொண்டருள்வதும் உண்டு என்பதனை நாம் நினைவுக் கூர்தல் வேண்டும்.

வள்ளியை இச்சாசக்தியெனவும் தெய்வானையை கிரியா சக்தி யெனவும் வேற்படைக்கலத்தை ஞானசக்தி எனவும் வர்ணிப்பார்கள். ஆணவம் மேலிட்ட நிலையிலிருந்த சூரபத்மனை அவனது தவத்தின் மேம்பாட்டினாலே, முருகன் தானே வந்து ஞானாஸ்திரமாகிய வேலாயுதத்தின் மூலம் அவனது அஞ்ஞானத்தைப் போக்கித் தன்னை தாங்கும் வாகனமாகவும் தன் புகழ் பாடும் கொடியாகவும் நிலைப்பெறச் செய்து தன்னோடு சேர்ந்து அவற்றையும் யாவரும் போற்றி வழிபடச் செய்துள்ளான். இதனை "சேவலும் மயிலும் போற்றி, திருக்கைவேல் போற்றி, போற்றி" என்பதனால்



அறியலாம். முருகப் பெருமானின் வேலின் மகிமை அளவிடற்கரியது என்பதனால் "போற்றி போற்றி" என இருமுறை கூறினார்.


மேலும், வீரவேல், தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட தீர வேல், செவ்வேள், திருக்கைவேல், வாரிகுளித்தவேல், கொற்றவேல், சூர்மார்புங் குன்றும் துளைத்த வேல் உண்டே துணை, எனவும் கூறப்பட்டிருப்பதனால் வேற்ப்படை மகிமையை நன்குணரலாம்.

## வைரவசுவாமி

முருகப் பெருமானை தரிசித்தபின்பு, வைரவப் பெருமானை தரிசித்தல் முறையாகும். வைரவப் பெருமானைத் தரிசிக்கும் போது நான்கு வேதங்களிலும் முதல்வனாக இவரைச் சிந்தித்தல் வேண்டும். நாய் வாகனம் வேதவடிவாக விளங்குகின்றது. வைரவர் சூலமானது மும்பெரும் சக்திகளையும் குறிப்பிட்டு, படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் ஆற்றுபவர் இவரே என்று பறைசாற்றுகிறது. "மூவிலை இருதாட் சூலமேந்துதல் மூவரும் யாம் என மொழிந்த வாறே" என வரும் புராணத்தினாலும் இதனை உணரலாம். கபாலம் ஏந்தி இருப்பது ஆணவ முனைப்பை தாமே குறைத்து நம்மிடமிருந்து அஞ்ஞானத்தை ஏற்றுக் கொள்பவர் என்பதனை குறிக்கின்றது. பலி என்பது பிச்சை எனப் பொருள் படும். இரத்ததைப் பிச்சையாக ஏற்பவர் என்பதனால் " இரத்தப் பலிப்பிரியர்" எனக் கூறப்பட்டுள்ளதனை தவறாகப் புரிந்துக் கொண்டு ஏராளமாக உயிர்க்கொலைப் புரிவதில் மக்கள் சிரத்தைக் கெண்டு விளங்கினர். இரத்தமிடுக்கினால் நாம் அடாத காரியங்கள் செய்வதனையும் இரத்தம் குன்றியப் போது அமைதியாக வலுவிழந்து நிற்பதனையும் அனுபவத்தினாலேயே அறிவோம். மேலும் பலகோடி பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்களின் மண்டை ஓடுகளைத் தாம் தரித்திருப்பது தனது நிலையான தன்மையினையும் நமக்கு உணரச் செய்கின்றது. மண்டையோட்டு மாலையை நினைவு கூறுவதற்கே வடைமாலை அணிவிக்கின்றோம். இவற்றைச் சிந்தித்தால் நாமும் கர்வம் இன்றிப் பணிவு மிகுந்தவர்களாக மாறி நற்கதியடையலாம் என்பது துணிபு.

## நாகேஸ்வர (நாகதம்பிரான்) சுவாமி

நாகத்தம்பிரான் சன்னிதிக்கு வந்தவுடன் அங்கு ஐந்து தலை நாகபாம்பு பெரிய உருவத்துடன் காட்சி தருகிறது. சிறிய சிவலிங்கம் உள்ளே காணப்படுகின்றது. லிங்கத்திலும் பார்க்கப் பாம்பின் தோற்றம் அமைக்கப்பட்டிருப்பது நமக்கு ஓர் உண்மையை விளக்குகின்றது. உலகம் முழுவதிலும் அடங்கியும் ஆதாரங்கள் அனைத்தையும் கடந்து இறைவனது பேரருட் சக்தி விளங்கும் என்பதை காட்டவே இலிங்கத்தின் மேல் ஐந்து தலை நாகம் கவிழ்ந்திருப்பது உணரவைக்கின்றது. மூலதாரத்திலிருந்து கிளம்பும் மூச்சுக்காற்றானது இடை, பிங்களை ஆகிய இரு நாடிகளையும் யோக சாதனைமூலம் கட்டுப்படுத்தும் போது மிகவும் வேகத்துடன் சுழுமுனையாகிய நடு நாடி மூலம் மேற் கிளம்புகின்றது. அப்போது மூலதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாதகம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆறு ஆதாரங்களையும் கடந்து இறுதியில் சிரசின் மூலம் வெளிக்கிளம்பி துவாதசாந்தம் என்னும், (துரிய –துரியதீதம் எனும்) பரமண்டலத்தை அடையும் போது உள்ள பெருமையை இந்த நாகம் புலப்படுத்துகின்றது. யோகத்தின் மூலம் உணரப்படும் உட்பொருள் சிவம் என்பதனை இலிங்கம் உணர்த்துகின்றது. சில இடங்களில் நாகத்தில் விஷ்ணு காணப்படுவார். எப்படியிருப்பினும் தத்துவக் கருத்து ஒன்றேயாம். "காளிங்க நிறுத்தம்" எனும் தோற்றத்தில் கிருஷ்ணபகவான் பாம்பின் மீது நின்று அதன் வாலையும் கையில் பிடித்துயிருப்பது மூலமும் முடிவும் நானே என்பதனை புலப்படுத்துவதாகும். ஏனைய மூர்த்திகளை வணங்கியபின் சண்டேஸ்வரரை தரிசிப்போம்.



## சண்டேசுவரர்

இறைவன் மேல் இடையறாத பக்தி செலுத்தியதின் மூலம் விசார சர்மர் என்பவருக்கு இறைவன் சண்டேசபதம் எனும் பதம் முத்தி பேறினை கொடுத்து அருளினார். இவர் எக்காலமும் அவரையே தரிசித்துக்கொண்டு தியானத்தில் இருப்பவர். இறைவன் தனக்கு படைக்கப்படும் திருவமுது மற்றும் பரிவட்டங்கள் ஆகிய அனைத்தும் உனக்கே உரியவை என்று கூறி அருளினார். அதனால் தான் இறைவனுக்கு நிவேதனமாகும் அனைத்தும் சண்டேசுரருக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. மேலும் ''பக்தர்கள் எம்மைப் பூசித்த பலனை நீயே அவர்களுக்கு வரமாக வழங்குவாயாக'' என்று இறைவன் கட்டளையிட்டு அருளினான். ஆகவே நாம் இறுதியில் சண்டேசுவரப் பெருமானை தரிசித்து அவர் அருளைப் பெறுகின்றோம். இவர் கண்களை மூடி சிவசிந்தனையில் தியானித்துயிருப்பதால் மெதுவாக மும்முறை கையைத்தட்டி அவரது கிருபாநோக்கம் எம்மீது செலுத்தப்படவேண்டும் என்று யாசிக்கின்றோம். பலமாக கை தட்டுதலோ அவரது திருவுருவத்தை தூக்கியபடியே வேகமாக ஓடிச் செல்வதோ மகா பாவத்தை தருவதாகும். மேலும் சண்டேஸ்வரருக்கும் மூலமூர்த்திக்கும் இடையே குறுக்காக செல்லுதல் தகாது. ஆகவே மூலமூர்த்தியை வலம்வரும்போது இவரையும் சேர்த்து நாம் வலம் செய்வதினால், இவரைத் தனியாக வலம் செய்தல் அவசியமில்லை. மூலமூர்த்தியை வலம் செய்யும் போது பரிவாரமூர்த்திகளை வலம் வருதல் அவசியமில்லை. சிரசின் மீது கைகளை குவித்து மார்பின் நேரில் குவித்து வணங்கிக்கொண்டு இறைவனது துதிகளை அல்லது திருநாமங்களை உச்சரித்துக் கொண்டு மெதுவாக அடிமேலடி வைத்து வேறு எங்கும் கவனம் செலுத்தாது இடையில் வீண் வார்த்தைகளைப் பேசாது வலம் வருதல் முறையாகும்.

## தியானம்


அர்ச்சனை வழிபாடுகளை இயன்றளவு செய்த பின்பு இறுதியாக ஆலய வழிபாட்டின் முக்கியமான பெரும்பயன் யாதெனில், நாம் ஓர் இடத்தில் அமர்ந்து அமைதியாக இருந்து கண்களை மூடிக்கொண்டு மனத்தை அடக்கி வெளியே நாம் இதுவரை கண்டுகளித்த இறைவனது அழகிய திருக்கோலத்தினையும் பூஜை ஆராதனைகளையும் மனத்தில் மீண்டும் சிந்தித்து தியானத்தில் அமர்தல் ஆகும். வழிபாட்டினால் பெரும் பயன் நாம் தியானத்தில் ஈடுபடுதலேயாகும். இதுவே தவம் எனப்படும்.

*"சரணகம லாலயத்தை*
*அரை நிமிட நேரமட்டில்*
*தவமுறைதியானம் வைக்க*
*அறியாத சகடசட மூட மட்டி"*

என்று அருணகிரிநாதர் தம்மை பற்றி தாழ்த்திப் பாடுகிறார். எனவே நாம் ஒவ்வொருவரும் பூசையைத் தரிசித்தபின் உடனே வீண்வார்த்தையாடுவதில் ஈடுபடாது தியானத்தில் உட்கார்ந்து இருத்தல் அவசியம். ஆலயத்தினுள் நம்மை வீண்வார்த்தை பேசுவதற்கு தூண்டுபவர்களும் ஆண்டவரால் ஏவப்பட்டவர்களே. இது இறைவன் நம்மைப் பரீட்சை செய்வதற்காக ஏற்படுத்தியதேயாம். எனவே இதனை வென்று மௌனத்தைக் கடைப்பிடித்தலே நமது வழிபாட்டின் குறிக்கோள் ஆகும்.

இங்ஙனம் ஆலய வழிபாட்டினைத் தினமும் நியதியாக மேற்கொண்டு, நமது அன்றாட அலுவல்களையும் கவனித்துக் கொள்வோமேயானால் நமது வாழ்வு தெய்வீக வாழ்க்கையாக அமையும். மேலும் தினந்தோறும் ஆலயவழிபாடு செய்ய இயலாவிடின் விஷேட நாள்களிலும், புண்ணிய காலங்களிலுமாவது ஆசார சீலர்களாகச் சுவாமி தரிசனம் செய்பவர்களும் இறைவனது கருணைக்கு ஆளாவார்கள் .

*ஓம் சிவாய நம !*



# மோனத்தின் பயன்

*(பசும் பொற்கிழார்)*

## மோனம்

'மௌனம்'என்பதே 'மோனம்' என்பதாம். மவுனம், அக மவுனம் (மோனம்) புற மவுனம் என இரு வகையாகப் போற்றப்படுகின்றன. அக மவுனம் என்பது, மன மவுனம். புற மவுனம் என்பது உடல் மவுனம். அதாவது. உடல் உறுப்புக்கள் தத்தம் நிலையில் அமைதியாக இருத்தல். முதற்கண், வாய் பேசாதிருத்தல்; இதையே பெரும்பாலும் 'மவுனம்' எனப்போற்றுகிறார்கள். அது மட்டும் முழு மவுனம் ஆகுமா? வாய், தன் பேச்சை நிறுத்தினால் மட்டும் போதாது. மவுனத்தின் குறிக்கோளுக்கு மாறானவற்றைப் பருகவோ, உண்ணவோ, சுவைக்கவோ, புகைக்கவோ கூடாது. அதே போல், கண்களும், செவிகளும், கைகளும், கால்களும் பொதுவாக மெய்யும் (உடம்பும்) மவுனத்தின் குறிக்கோளுக்கு மாறான செயல்களைச் செய்யக் கூடாது. இவ்வாறு உடல் உறுப்புக்கள், தத்தம் நிலையில் திரியாது அடங்கியிருத்தலே புற அடக்க முடைமையாகும். இதுவே, புறமோனமாகும். இப்புற மோனம் எந்த அளவிற்கு மெய்ம்மையாகச் செயல் படுகிறதோ அந்த அளவிற்குப் பயன் உண்டு.

"வெள்ளைத்தனைய மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளத் தனைய(து) உயர்வு

## மனமோனம்

இனி, மன மவுனம் பற்றிச் சிறிது பார்ப்போம். மனத்தை மவுனப்படுத்தும் போது உடல் உறுப்புகளும் கட்டுப்பட்டே தீரும். மன மோனத்தின் பயன், மனத்துக்கண் மாசு இல்லாமல் இருத்தலே. அவ்வாறு மாசு என்னும் அழுக்கை உடனடியாகப் போக்க முடியாது. சன்னஞ் சன்னமாகத்தான் போக்க இயலும். நம் தமிழ் மறையாரும் 'அவா' என்னும் அழுக்கைப் பற்றிச் சொல்ல 'அவா அறுத்தல்' என்று தலைப்பைத் தந்ததைப் பார்த்தால் அறுத்தல் – அறுப்பது, உடனே துண்டிப்பது போன்றதன்று. படிப்படியாய் அறுத்துத் துண்டிப்பதாகும்.

எனவே, மனத்தின் அழுக்கிற்கு அடிப்படையே அவாதான். அவாதான் தவாப் பிறப்பீனும் வித்து. அப்படிப்பட்ட அழுக்கை அறுத்த பின்னர்தான் அம்மனம் மோனத்தில் உறையும். அவ்வாறு மோன நிலையில் (பற்றற்ற நிலையில்) உள்ளவர்கள் வனத்தகத்தில் தான் இருப்பர் என்பதில்லை! வெளி உலகத்தார் இடையிலேயும் இருப்பர். ஆயினும் அவர்கள் காண்டற்கு அரியராய் இருப்பர்.

அப்படிப்பட்டவர்கள் காட்சிக்கு எளியராய், கடுஞ்சொல் அல்லராய், அறிவின் மாட்சிக் குரியராய், இரவோர் போலும், பித்தர் போலும் கூட நடமாடுவர். அவர்களில் ஒரிருவர், ஆன்ம ஒளி ஆற்றலால் மகளிரையும் ஈர்க்கவும் கூடும். அதனால், மகளிர் தம் வலியுறுத்தலுக்கு ஆட்படவும் கூடும். ஆயினும் அவர்கள், தம் மனத்தகத்து அழுக்கறுத்த மவுன ஞான யோகிகளாகவே இருப்பர்! போகியாக மாட்டார்!

உண்மையான மோனநிலை நிலைக்கத் தவம் இயற்றியவர்கள் மோரில் மிதக்கும் வெண்ணெய் உருண்டையைப் போல் உள்ளவர்கள். மோரினுள் கலந்திருந்த வெண்ணெய், மத்தினால் எவ்வாறு கடையப் பெற்று உருண்டு திரண்டு பக்குவமாக உருட்டப்பட்ட அவ்வெண்ணெய் மீண்டும் மோரில் ஒன்றுவதில்லையோ அதுபோல உண்மையான மவுனஞான யோகியர் வெளியுலகில் தோய்ந்து காணப்பட்டாலும் அவர்கள் அவர்களே! இதை,

*"மனத்தகத்(து) அழுக்கறுத்த மவுனஞான யோகிகள்*
*முலைத்தடத்தில் இருக்கினும் மவுனஞான யோகியே*
*மனத்தகத்து அழுக்கறாத மவுனஞான யோகிகள்*
*வனத்தகத்(து) இருக்கினும் மனத்தகத்து அழுக்கறார்,"*

என்ற சிவ வாக்கியர் பாடலும் கூறும்.

"அவரவர்தம் மனமே, உண்மையான குருவாகும்! அதுவே காரண குருவாகும். வழி காட்டிக் கொடுப்போர் காரிய குரு'' என்பார் சித்த சமாஜ நிறுவகர் தந்தை சிவானந்த பரம ஹம்சர் அவர்கள்.

## மோனநிலை

மன அடக்க நிலையே மோன நிலை. மன அடக்கத்தின் பயன், அமரருள் உய்க்கும் ஆற்றலைத் தருவது. அவ்வாற்றலே அடக்க முடைமையின் அணி. மனமது அடங்குதல் என்பது, தூங்காமல் தூங்கும் தூயநிலை. அந்நிலைதான், பற்றற்றான் பற்றினைப் பற்றிய நிலை! அந்நிலையில் உள்ள அறிவே. மலர்தலும், கூம்பலும் இல்லாத அறிவு நிலை! அவ்வறிவே எப்பொருளிலும் மெய்ப்பொருள் காணும் மேலான அறிவுநிலை! எதிலும் காய்தல், உவத்தல், அகற்றி ஆயும் அறிவுநிலை. ஊழையும் உப்பக்கம் காணும் உயர்நிலை! இடும்பைக்கு இடும்பை படுக்கும் ஈடிலாநிலை! அடுக்கி வரினும் அழிவிலா உளநிலை. அஞ்சாமையை இயல்பாகக் கொண்ட அரியநிலை! விழுச் செல்வமாகிய வேண்டாமையைப் பெறும் பயனை மோன நிலைதரும். இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யும் இயல்பைத்தருவது மோனநிலை! இடுக்கண் வருங்கால் இனிய நகையாலே வெல்லும் இங்கித நிலையே மோன நிலை!

மோனத்தின் வழியில்தான் ஞானத்தைப் பெற்றனர் சித்தர்கள். 'தியானம்' என்பதும் மோனமே! ஆம்! மன மோனமே 'தியானம்'; மனம் எப்பற்றுமில்லாத நிலை உறக்கநிலை. ஆம். உறக்கநிலைதான் பொதுவாகப் பற்றற்ற நிலை. அந்நிலையைப் பெற எந்தப் பயிற்சியும் தேவையில்லை! இயல்பாகவே இரவு வரவும் உறக்கம் வருவது இயல்பு. அவ்வுறக்கத்தைத் தடுத்து, பலர் தொடர்ந்து அலுவல் புரிந்தாலும், அடுத்து அலுப்புத்தீர உறங்குவார்! அவ்வுறக்கம் இல்லையானால், மூளைக்குத் தெளிவு வருவதில்லை.

ஏதோ, கிறக்கமாகவும், சிறு மயக்கமாகவும், முகத்தில் தெளிவு இல்லாமலும் சோர்வு ஏற்படும்! இதைச் சற்று ஆராய வேண்டும். வெளி உறக்கம் கொள்ளும்போது, மனம் பற்றுக்களிலிருந்து



ஒய்வெடுத்துத் தனித்து அமைந்துள்ளது. அப்போது, மனத்திற்கு வேண்டுதலும் இல்லை. வேண்டாமையும் இல்லை. உடலும் சாக்காட்டுப் பிணம் போல் கிடக்கிறது! அப்போது, உயிர் உண்டா? இல்லையா? என்றால் உயிர் உண்டு. அதன் சார்பான உள் மூச்சும் உண்டு. ஆனால் மனம் புறப் பற்றுக்களிலிருந்து ஒய்வு எடுத்துத் தனித்து இருக்கும்போது மட்டுமே உள் மூச்சுக் காற்று நேராகச் சுழிமுனை நாடி வரை செல்கிறது. அப்போது அதற்கு ஓசையும் உண்டு. அது மேலுங் கீழுமாய்ப் போக வர இருக்கும்போது, அதன் பெயர் 'வாசி' என்பர். வாசி என்னும் வா – நெடில் 'வசி' என்னும் வ– குரல் நெடிலாகியது. அறு – ஆறு – எழு ஏழு ஆவது போல வாசி வசித்தலுக்குரியதாம். அவ்வாறு, சுவாசிப்பதே வசிப்பதாகுமாம். உறக்கம் விழித்தலும் அவ்வாசி. நாசி (மூக்கு) வழியாக நசிக்கின்றதாம். அது நசிக்கும் இடம்தான் நாசி என்ப.

மோன நிலையைத் தருவது, பொதுவாகவுள்ள புற உறக்க நிலை. அதுவும் மோனத்தைத் தருகிறது. ஆனால், அது இயலாத ஒருவன் பொறுமை உடையவனாய் இருப்பது போன்றதாகும்.

இனி விழித்திருக்கும் போதே தன் மனத்தை, புறப்பற்றுக்களிலிருந்து நீக்கி, பற்றற்றானின் பற்றைப்பற்றி, இயல்பாகும் நோன்பிற்கு ஒன்றின்மை – என்ற தமிழ் மறைக்கேற்ப ஒரு சிறு பற்றும் மனத்தில் இடம் பெறாமல், மனத்தைச் சும்மா இருக்கப் பழக்குவதே மேலான வழிபாடாகும்.

அவ்வழியைப் பலரும் பல முறைகளில், பலவகை வழிபாட்டுக் கலைகளில் பெற முயல்கின்றனர். அதற்காகப் பலர்க்கு, அரிய பெரிய பக்தித் தலங்களும், பெரிய ஆலயங்களும், பொருட் செலவுடைய வழிபாடுகளும் (பூசை ஆராதனைகளும்) தேவைப்படுகின்றன. ஆனால், "உள்ளம் பெருங்கோயில். ஊனுடம்பு ஆலயம், தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவனே சிவலிங்கம்" என்னும் திருமூலர் கருத்துப்படி,

நம் உடம்பையே கோவிலாக்கி, நம் சீவனை (உயிர்க்காற்றை) சிவமாக்கி, அதை விழித்துக் கொண்டே வாசித்து (சித்த வித்தை செய்து) அதனால் மனத்தை சுழி முனையிடத்திலேயே உறங்க வைத்துப் பழக்கலாம். அப்போது மனம் மோனத்தில் ஆழ்கிறது. அப்போது "ஆழ்நிலைத் தியானமாகிறது". அம்மோன நிலையை அடிக்கடி துய்க்கும் போது, அல்லவை தேயும்! அறம் நிலையை அடிக்கடி துய்க்கும் போது, அல்லவை தேயும்; அறம் பெருகும்! அறவினை யாது? எனில், கொல்லாமை!" என்பது முப்பாலர் வினாவிடை. அறம் பெருகும் என்பது உயிர் ஆற்றல் பெருகும் என்பது. அவ்வாற்றல் மோனத்தால் ஏற்படுவது. மோன ஆற்றலைப் பெறுவதே செயற்கு அரிய செயல்! அச்செயலின் பயன், கூற்றமும் குதித்தோடச் செய்யவல்ல ஆற்றலாம்!

*('தெய்வத் தமிழ்க் கருவூலம்' எனும் நூலிலிருந்து)*



# உலகம் உய்ய ஒரே வழி



*(செ. சிவசாமி)*

இந்த நூற்றாண்டில் விஞ்ஞானத்தின் பல்வேறு துறைகளிலும் மாபெரும் வெற்றிகளையும் சாதனைகளையும், மனிதன் படைத்துள்ளான். அணுசக்தி உற்பத்தி, சந்திர மண்டலத்தில் மனிதன், விண்வெளி ஆராய்ச்சி, உயிரியல் துறையில் புரட்சி மற்றும் பல துறைகளிலும் கற்பனையையும் மிஞ்சும் சாதனைகள், உணவு மற்றும் பொருள் உற்பத்திகள் பெருகிப் பொருளாதாரமும் செல்வச் செழிப்பும் உலகமெங்கும் ஓங்கியுள்ளன. இதன் விளைவாக தனிமனிதனுக்கும் உணவு, உடை, உறைவிடம், வாகனம், மற்றெல்லா வாழ்க்கை வசதிகளும் பெருகியுள்ளன.

மனிதன் தனது விஞ்ஞான அறிவின் துணையால் இயற்கைச் சக்தியின் இரகசியங்கள் பலவற்றைக் கண்டு பிடித்துத் தனது வாழ்க்கை வசதிகளை மிகுதியாகப் பெருக்கிக் கொண்டாலும் அதாவது பொருளாதார அடிப்படையில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொண்டாலும், உண்மையான இன்பத்தையும் மகிழ்ச்சியையும் தரக்கூடிய வாழ்க்கையை வீட்டிலும், நாட்டிலும் அமைத்துக் கொள்வதில் முன்னேற்றம் கண்டுள்ளானா? சற்று நிதானமாகச் சிந்தனை செய்தால் இந்தக் கேள்விக்குப் பதில் முன்னேற்றம் இல்லை என்பது மட்டுமல்ல! பின்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்பதாகும். எப்படி என்று பார்ப்போம்.

மனிதனின் முயற்சிகள், செயல்கள் அனைத்திற்கும் மூலகாரணம் இன்பம் அல்லது மகிழ்ச்சியை நாடுவதுதான். அதை வாழ்க்கையில் அடைவதற்கு என்னென்ன தேவை? வாழ்க்கை வசதிகளை அளித்திடும் செல்வம் மட்டும் போதுமா? போதாது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற வாக்கின்படி தேக ஆரோக்கியம் வேண்டும். அன்பும் ஒழுக்கமும், பாசமும் நிறைந்த குடும்பமும், நட்புணர்வும், சகோதரத்துவமும் நிறைந்த சமுதாயமும், சட்டம், ஒழுங்கு, நீதி, நேர்மை இவற்றைப் பராமரிப்பதில் கடமை தவறாத அரசு இவையனைத்தும் தேவை. இவைகளனைத்துக்கும் மேலாகத் தனி மனிதனிடம் நல்ல மனம் தேவை. ஆனால் இன்றுள்ள நிலைமை என்ன?

என்ன வேகத்தில் விஞ்ஞான உத்திகளும் தொழில் நுட்பங்களும், பொருளாதாரமும் வளர்ந்து வருகின்றனவோ அதைவிட அசுர வேகத்தில் நாட்டில் சீர்கேடுகள் பெருகி வருகின்றன. ஒன்றாக வாழ்ந்த

குடும்பங்கள் சிதறிக் கொண்டுள்ளன. நட்பாக இருந்த மக்கள் சமுதாயத்தில் சாதி, மதம், இனம், மொழி, கட்சி என்ற வேறுபாடுகளால் பகை உணர்வும், கலகங்களும் வளர்ந்து கொண்டுள்ளன. பதவி மோகத்தால் கட்சிகள் உடைந்து சிதறுகின்றன. நாடுகள் துண்டாடப்படுகின்றன. ஒரு பக்கம் நட்பு, சமாதானம் என்று பேசிக் கொண்டு மறுபக்கம் நாடுகள் அணுகுண்டு தயாரிப்பதில் முனைகின்றன.

உரிமைகளுக்குப் போராடுகின்றவர்கள் கடமைகளை மறந்து விட்டார்கள். செய்தித் தாள்களில் கொலை, கொள்ளை, விபத்து, கலவரம் பற்றிய செய்திகளே முக்கிய இடம் வகிக்கின்றன. கள், காமம், கவறு ஆகிய தீய சக்திகள் மூன்றும் தலை விரித்தாடுகின்றன. பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் பெரியோர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த மதிப்பும் மரியாதையும் மறைந்து விட்டன. மறை நூல்களையும் ஆன்மீகப் பெரியார்களையும், சமயக் கோட்பாடுகளையும் மக்கள் மறந்து விட்டார்கள். இந்த அவலமான சூழ்நிலை நாட்டில் உலவும்போது மனிதனுக்கு உண்மையான இன்பமும், மகிழ்ச்சியும் எப்படிக் கிடைக்கும்?

வேத இதிகாசங்களிலும், ஆகம சாஸ்திரங்களிலும், மறைநூல்களிலும், திருமுறைகளிலும் சொல்லப்பட்டுள்ள வாழ்க்கைத் தத்துவங்களையும் வழி முறைகளையும் நம் நாட்டில் தோன்றிய மாமுனிவர்களும், மகான்களும், அவதாரப் புருடர்களும், சித்தர்களும், ஞானிகளும் தெளிவாகவும் விளக்கமாகவும் போதனைகள் செய்து வந்துள்ளனர். இப் போதனைகளின் சிறப்புகளையும், மேன்மைகளையும் போற்றிப் புகழ்ந்து திரும்பும் இடமெல்லாம் பேசவும், எழுதவும் செய்கின்றார்கள். ஆனால் அவற்றை நடைமுறையில் கொண்டு வரவும், செயலில் கடைப்பிடிக்கவும் இயலாத நிலையில் மனிதன் இருக்கிறான். மனிதனின் பேச்சு ஒன்றாகவும், செயல் வேறாகவும் உள்ளது. அதாவது நல்வழிகளைப் பின்பற்ற வேண்டுமென்ற விருப்பம் இருந்தாலும், செயற்பாட்டில் கொண்டு வரும் சக்தி அவனிடம் இல்லை, இது ஏன்? மனிதன் தனது வாழ்க்கை முழுவதிலும் ஆற்றும் செயல்கள் அனைத்திற்கும் ஆதாரமாக இருந்து உயர்வுக்கும் தாழ்வுக்கும், நன்மைக்கும் தீமைக்கும் காரணமாகவும், கருவியாகவும் இருப்பது அவனது மனம் அல்லது சித்தம் ஆகும். இந்தக் கருவி எப்படிச் செயல்படுகின்றது என்று பார்ப்போம்.

பிரபஞ்சங்களனைத்தையும் இயக்கி வரும் இயற்கை அன்னையின் வெவ்வேறு தோற்றங்களான ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற ஐம்பூதங்களும் முறையே அவைகளின் சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் என்ற ஐந்து தன் மாத்திரைகளின் மூலமாக, மனித உடலிலுள்ள காது, மெய், கண், நாக்கு, மூக்கு என்ற ஐம்புலன்களையும் இயக்கி வருகின்றன. இந்த ஐம்புலன்களும் புத்தி, சித்தம், அகங்காரம் எனப்படும் அந்தகரணங்களை உள்ளடக்கிய மனம் (MIND) என்றழைக்கப்படும் அந்தகரணத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகின்றன.

நமது முன்னோர்கள் தங்களின் அனுபவ முதிர்ச்சியால் நமக்களித்த பொன் மொழிகள்


1. மனம் போல வாழ்வு
2. மனம்போல மாங்கல்யம்
3. மனம் பாதி மருந்து பாதி
4. மனமிருந்தால் மார்க்கமுண்டு

இவை மட்டுமா? இன்னும்,

1. மனம் ஒரு குரங்கு
2. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்.

இந்தப் பழமொழிகள் நமக்கு அறிவுறுத்துவது என்ன? ஒருவனது வாழ்க்கையின் உயர்வும், தாழ்வும் அவனது மனத்தின் தன்மையைப் பொறுத்தது என்ற மகத்தான உண்மையைத்தான்.

கிளைக்குக் கிளை, மரத்துக்கு மரம் சதா தாவித்திரியும் குரங்கினைப் போல மனமும் நிலையற்ற குணம் கொண்டது. சண்டித்தனமும் அடங்காப்பிடாரித் தனமும் கொண்டது. ஐம்புலங்கள் என்ற குதிரைகளை அடக்கி ஆளவேண்டிய மனம் என்ற சாரதி, சப்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்ற சுகங்களை நல்கும் பொருள்களை நாடித்திரிந்து, நாளடைவில் அவற்றுக்கு



அடிமையாகித் தன் சக்தியை இழக்கின்றது. ரதத்தின் சாரதி குதிரைகளுக்கு அடிமையாகிவிட்டால், ரதம் என்ற தேகத்தின் கதி என்ன? அதில் பயணம் செய்யும் ரதத்திற்கு உரியவர் கதி என்ன? புலன் வழிச் சுகங்களை அளிக்கும் பொருள்களே நாளடைவில் உயிரைக் குடிக்கும் நச்சரவங்களாக மாறி வாழ்க்கையை நரகமாக்குகின்றன.

இவ்வாறு ஐம்புலன்களின் வசப்பட்ட மனதில் காமக் குரோதாதிகளால் கடலில் அலைகள் போல எண்ணங்கள் இடைவிடாது பொங்கி ஆர்ப்பரித்துக் கொண்டுள்ளன. இந்த எண்ண அலைகள் எப்போது ஒய்கின்றனவோ அப்போதுதான், "மனம்போல் வாழ்வு தரும்" மனம் என்னும் தடாகத்தின் அடித்தளத்தில் உள்ள இறைவனது சக்தியின் பிரதி பிம்பமான ஆன்மாவின் சொரூபம் தெரியவரும்.

வாழ்க்கை நரகமாகவோ அல்லது சுவர்க்கமாகவோ மாற்றக்கூடிய மகத்தான சக்தி படைத்த இந்த மனத்தை அடக்கி, சுய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர நாம் என்ன முயற்சி எடுக்கின்றோம்? உடம்பைச் சுத்திகரித்து உரம் கொடுக்க எத்தனையோ தேகப் பயிற்சிகள், விளையாட்டுகள்; ஆனால் மனதைத் தூய்மைப்படுத்தி வாழ்வில் ஒளிபெற ஒரு பயிற்சியும் இல்லை. சுவாமி விவேகானந்தரின் கூற்றுப்படி மக்களில் பெரும்பான்மையினர், மனத்திற்கும், ஐம்புலன்களுக்கும் அடிமைகளாக விலங்கு வாழ்க்கையைத் தான் நடத்தி வருகின்றார்கள். இதில் ஏழை, பணக்காரன், படித்தவர், படிக்காதவர் என்ற வேறுபாடு கிடையாது. ஏனென்றால் இதைப் பற்றிய அறிவையும், அவசியத்தையும் உணர்ந்து முயற்சி எடுப்பவர்கள் வெகு சிலரே. கல்விக் கூடங்களில் கூட இதைப் பற்றிய அறிவு கற்றுக் கொடுக்கப்படுவது இல்லை.

ஐம்புலன்களையும் அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்தி தன்வசம் கொண்டு வர தினசரி தியானப் பயிற்சி ஒன்றே வழியாகும். "நானே அது, அதுவே நான்". "தத்துவமசி" என்பது போன்ற மகா வாக்கியங்களின் உட்பொருளை உணரமட்டுமல்ல, நேரடியான அனுபவத்தைப் பெற தியானம் அவசியம். பார்த்தனைத் தேரில் அமர்த்தி பார்த்த சாரதியாக இருந்து பகவான் அருளிய கீதோபதேசத்தில் தியானப் பயிற்சியின் அவசியம் பற்றி வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.


தியானப் பயிற்சியின் முக்கிய தேவை அது தினசரி செய்யப்பட வேண்டும். துவக்கத்தில் "இது நம்மால் முடியாது" என்ற உணர்வை உண்டாக்கும். ஆனால் தினசரிப் பயிற்சியின் விளைவால், சிறிது சிறிதாக மெள்ள மெள்ள ஆனால் நிச்சயமாக மனதில் பொங்கி வரும் எண்ண அலைகள் ஒய்ந்து அடங்குவதைக் காணலாம். தியானப் பயிற்சி ஆன்மீக நெறியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டுமல்ல, உலகாயத வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் மாணவர் – ஆசிரியர், ஆண்கள் – பெண்கள், இளைஞர் – முதியோர், இல்லத்தோர் – துறவியர் முதலிய வேறுபாடுகள் இன்றி யாவருக்கும் தேவை. இப்பயிற்சியின் பலனாக உள்ளம் மட்டுமல்ல, உடலும் தூய்மையடைந்து வலிவும் வனப்பும் பெறும். அவரவர் செய் தொழிலின் திறன் வளர்வதைக் கண்கூடாகக் காணலாம். வாழ்க்கையில் மறு மலர்ச்சி ஏற்படும்.

இப்பயிற்சியின் பயன்களையும் அளவி லடங்காத வியத்தகு பலன்களையும் மேல் நாட்டினருக்கே உரித்தான விஞ்ஞான அடிப்படையில் ஆராய்ந்து, அளவிட்டு உறுதிப்படுத்திய பின், அங்கு லட்சக் கணக்கான மக்கள் தியானப் பயிற்சியை ஆர்வத்துடன் செய்து வருகின்றார்கள். இம் முயற்சியில் சுவாமி முக்தானந்தாவால் துவக்கப்பட்ட சித்தயோக தியான இயக்கமும், மகரிஷி மகேஷ் யோகியால் துவக்கப்பட்ட ஆழ்நிலை தியான இயக்கமும் உலகளாவிய பல நாடுகளில் செய்து வரும் மகத்தான பணி குறிப்பிடத்தக்கது. எனவே நம் நாட்டிலுள்ள கல்வித் திட்டத்தில் தியானம் பற்றிய அறிவை மாணவர்களுக்குக் கற்றுத் தர அரசினரும், பல்கலைக்கழகங்களும், சமயப் பெரியார்களும் உடனடியாக ஆவன செய்ய வேண்டும். மேலும் மக்களிடையே இது பற்றிய அறிவைப் பரவச் செய்து விழிப்புணர்வையும் ஆர்வத்தையும் ஏற்படுத்த வேண்டும். தினசரி தியானப் பயிற்சியின் வழியாக வீடுகள் தோறும், நாடெங்கிலும், உலகமெங்கும் வற்றாத அன்பும், நீடித்த நிம்மதியும், தெய்வீக அன்பும் அமைதியும் நிலவுவதற்கு வழி செய்வோம்.

(அனைத்துலகத் தெய்வத் தமிழ் மாநாட்டு
மலரிலிருந்து – 1992)

# வேத நெறி

*(தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார்)*



நமது நாட்டில் பழமையான சமயநெறி வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையோடு இயைந்தது. அறமும் அன்பும் வளர்க்கும் அன்பு நெறியாக வழிகாட்டுகிறது.

*"ஒன்றே குலம் ஒருவனே தேவன்*
*நன்றே நினைமின்கள்"*

என்பது திருமந்திரம்

இதனைத் தமிழர்கள் தொன்றுதொட்டு வாழ்க்கையில் மேற்கொண்டுள்ளனர். சங்க காலம், சங்கமருவிய எனப் பகுக்கப்படும். மிகப் பழங்காலத்திலேயே நமது வழிபாட்டு முறை சிறப்பாக அமைந்திருந்தது என்பதற்குச் சான்றுகள் இலக்கியங்களிலும்,தொல்பொருள்களிலும் காணக் கிடைக்கின்றன. வாழ்க்கையைச் செம்மைப் படுத்துகின்ற நெறியைச் சமயநெறி என்பார்கள் சான்றோர்கள். சமயம் என்ற சொல் "சமைத்தல்" என்பதிலிருந்து உருவானது என்பர். சமைத்தல், சமைதல் என்ற சொற்கள் உலகியல் வழக்கில் "பக்குவப் படுத்தப்பட்டது" என்ற பொருளில் வழங்கப்படுவதைக் காணலாம்.

சமயநெறி உண்மை கண்டோராலும், உண்மைப் பொருளாகிய இறைவனாலும் அருளிய மொழிகள் சமய வாழ்விற்கு வழிகாட்டுவன. இவற்றையே முதல் நூல்கள் எனலாம். உலக மொழிகளிலும் பழமைமிக்க இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில்,

*"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்*
*முனைவன் கண்டது முதல் நூலாகும்"*

என வரையறுத்துக் கூறுகிறது. "வினையின் நீங்கிய" என்ற சொல்லுக்கு இருள் சேர் இரு வினையும் சேராத முழு முதலாகிய இறைவனையும் அவ்விறைவன் அருள் பெற்று இருவினை நீங்கிய அருளாளரையும் குறிப்பது என உரையாசிரியர்கள் பொருள் கொண்டனர். ஆதலின் அவர்கள் அருளிய நூல் முதல் நூலாகும். முதல் நூல் என்பது அடிப்படை. எனவே, அடிப்படை வித்தாக இருந்து வெளிப்படுவது வேதம் "வித்" என்ற சொல்லிலிருந்து வேதம். என்ற சொல் உருவாயிற்று. வித்து மண்ணுள் மறைந்து முளையாக வெளிப்படும். அதுபோல நம் பொறிகளால் எளிதில் உணர முடியாமல் சூழ்ந்து நோக்குங்கால் வெளிப்படும். அரிய செய்திகளைக் கொண்டு விளங்குவதால் இது "மறை" எனவும் வழங்கப்படுகிறது.

ஆறறிவு படைத்த மனித இனம் "வையத்துள் வாழ் வாங்கு வாழ நிறை மொழி மாந்தர் மறை மொழிகள்" துணைபுரிகின்றன. இந்நிறை மொழிகள் "மறை" எனப் போற்றப்படுகின்றன. உலகில் உள்ள பல்வேறு மதத் தலைவர்களும் தமக்குரிய வழிபாட்டிற்குத் தங்கள் தலைவர்கள் கூறும் மொழிகளை ஏற்று மறை எனப் போற்றுகின்றனர். அந்நெறியில் நமது வாழ்வியலை நடத்துகின்றனர்.

தமிழர்கள் உயர் தனிச் செந்தமிழை தாய் மொழியாகக் கொண்டவர்கள். தமிழ் காலத்தால் முந்தையது. செந்தமிழ், தெய்வத் தமிழ் எனவும் போற்றப்படுகின்றது. மிகவும் பழமையான உலக மொழிகளில் ஒன்றாகத் திகழ்வதும் சீரிளமைத் திறத்தோடு விளங்குவதுமான மொழி. நம் தமிழ் மொழி தமிழர் வாழ்வில் இலக்கியமும், இலக்கணமும் வாழ்வாங்கு வாழத் துணைபுரிகின்றன. வாழ்க்கையை அக வாழ்க்கை, புற வாழ்க்கை எனப்பகுத்து உலகியலை நடத்துவதற்கு உரிய இலக்கணத்தைப் பெற்றிருப்பது தமிழ். அன்பால் இணைந்து ஒருவனோடு ஒருத்தி சேர்ந்து நெறிப்பட வாழும் வாழ்க்கை அகத்திணை எனவும், பிறர்க்குதவி செய்து பொருள் தேடி நாட்டின் நலம் பேணி வாழ்கின்ற வாழ்க்கையைப் புறத்திணை எனவும் தொல்காப்பியம் குறித்துள்ளது.

திணை என்பது "ஒழுக்கம்" இவ்வொழுக்கத்தைப் பேணவேண்டும் என்பதற்கு வள்ளுவர்,

*"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்*
*உயிரினும் ஓம்பப் படும்"*

என்று கூறியுள்ளார்.

உடல் நலத்திற்கும் மன நலத்திற்கும் ஒழுக்கநெறி இன்றியமையாதது. உயிர் நலத்திற்கு உரியது கடவுள் வழிபாடு, வழிபாட்டு நெறியையும் வாழ்வியல் நெறியையும் காட்டுவது "வேதம்" எனவும், "மறை" எனவும் வழங்கப்படுகிறது.

*"நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த*
*மறைமொழி தானே மந்திரம் என்ப"*

என்று தொல்காப்பியம் கூறுகிறது. வாய்மொழியானது வாய்மொழியாக வழிவழி வந்தது "வேதம்" ஆதலின் எழுதாக் கிளவி என அது வழங்கப்பட்டது. நீண்ட காலம் தமிழ் மக்கள் அதனையே தொல்காப்பியர் தம் காலத்திற்கு முன்பே வழங்கப்பட்டதால் "மந்திரம் என்ப" என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. சங்க இலக்கியங்களில் நால் வேதம் என்ற பகுப்பை ஏற்று "நால்வேத நெறி" என்றும், "வேத முதல்வன்" என்றும் கூறுவதுடன் "நான்மறை" என்றும் வழங்கப்படுகின்றன. வேத நெறி சிறந்தது என்றும், அது மாறுபடத் தக்கதல்ல என்றும் நினைந்து,

*"நாஅல் வேத நெறி திரியினும்" எனவும்*
*"புரையில் நல்பனுவல் நால் வேதத்து*
*அருஞ் சீர்த்துப் பெருங் கண்ணுரை நெய்மலி*
*ஆவுதி பொங்க பன்மாண வீயாச்சிறப்பின் வேள்வி"*

என்றும் சொல்வதால் இவை தமிழர்க்கு உரியவை எனப்புலனாகியது.

நான்மறை என்ற சொல் சங்க நூல்களில் பெரிதும் எடுத்தாளப்பெறுகிறது.

*"ஆன்ற கேள்வி அடங்கிய கொள்கை*
*நான்மறை முனிவர் சுற்றமாக" எனவும்,*

சிறந்த நான்மறை முனிவர் எனவும் கூறுவதால் நான்மறை உணர்ந்த மேலோர்களைச் சுற்றமாகக் கொண்டு வாழ்தல் சிறப்புடையது. அது மன நலத்திற்கு உரியது; எல்லாப் புகழையும் பெற்று வாழ்வாங்கு வாழத் துணைபுரியும் என்பதைத் திருவள்ளுவர்,

*"மன நலம் மண்ணுயிர்க் காக்கும்*
*இனநலம் எல்லாப் புகழும் தரும்"*

என்று கூறுகிறார்.

உயிர் நலமும், மன நலமும், உடல் நலமும் எய்தும் நல்வாழ்வு வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்க்கையாகும். அவ்வாழ்வு வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வத்துள் வைக்கப்படுவதுமாகிய மேலுலக வாழ்வு தரும் என்பதை,

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்"*

எனத்தமிழ் மறை போற்றுகிறது.

*"உடம்பார் அழியின் உயிரார் அழிவர்*
*திடம்படும் மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்"*

எனவும்,

*"உடம்பினை முன்னம் இழுக்கென்று இருந்தேன்*
*உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்"*

எனவும் திருமூலர் அருளியுள்ளார்.

*"உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக*
*மடம்படும் உணர்நெய் யாட்டி உயிரெனுந் திரிமயங்கி*
*இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்*
*கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே,"*

என திருநாவுக்கரசரும் கூறகிறார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்வில் திடம்படும் மெய்ஞ்ஞானம் சேர்வதும் உடம்பினுக்குள்ளே உறுபொருள் காண்பதுவும் நோக்கமாக அமைதல் வேண்டும். இவ்வொழுக்க நெறியே நால்வேத நெறியாகும்.

இந்நெறியே நான்மறை முழுமுதல் மக்கட்செல்வனாகிய சிவனைப் போற்றும் நெறியாகும். ஆலமர் கடவுளாகிய சிவபெருமான்,

*"நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை*
*அன்றாலின் கீழிலிருந்து அறம் உரைத்தான் காணேடி"*

எனத் திருவாசகம் போற்றுகிறது.

எனவே நான்மறை முதுநூல் முக்கட்செல்வனால் அருளப்பெற்ற முதனூலாகும். அது அறநெறிகளை உணர்த்துவது; ஒழுக்க நெறிகளை வகுத்துக் காட்டுவது; வழிபாட்டு நெறிகளை வளர்ப்பது என்பதைச் சேக்கிழார்,

*"வேத நெறி தழைத் தோங்க*
*மிகு சைவத் துறைவிளங்க"*

என அருளினார்.

வேதம் என்ற சொல் தமிழில் தூயதாகப் புனிதமாகப் போற்றப்படும் சொல். இறையருள் பெறுவதற்கு வழி செய்கிறது. ஆனால் வடமொழியில் வேதம் என்ற சொல் வியாசரால் வகுக்கப்பட்ட நால் வேதங்களைக் குறிப்பதுடன், மருத்துவ நூலை "ஆயுர்வேதம்" எனவும், காம நூலை 'காந்தர்வ வேதம்' எனவும், படைக்கலப் பயிற்சி நூலை 'தனுர்வேதம்' எனவும் வழங்கப்படுகிறது. இவைகள் மெய்ப் பொருளை முழுமையாக உணர்த்துவன அல்ல. உலகில் வாழ்வுக்கும் வளத்துக்கும் உரியவற்றைப் பெறுவதற்கு வழி காட்டுவனவாக அமைகின்றன.

நால் வேதம் என்று சொல்லப்படுவது வியாசர் வகுத்ததற்கு முன் வேறு பெயரால் விளங்கியதைத் தொல்காப்பிய உரை ஆசிரியரான நச்சினார்க்கினியர் 'பராசரன் மைந்தன் வகுத்தது அல்ல' என்று கூறுவதால் அறியலாம். எனவே உயர் கருத்துக்களை வழங்குவன என்பதில் நமக்கு மாறுபட்ட கருத்து இல்லை என்றாலும், தமிழர் நெறிக்கு முதல் நூலாக அமைந்த தமிழ் மறை நூல்கள் நமது திருமுறைகள் திருக்குறள் ஆகியவையாகும்.

*'அறமுரைத்த நான்மறையின் விளக்கமே'* இந்நூல்கள் எனலாம். மறை நெறியும், ஆகம நெறியும் நம் தமிழ்ச் சமுதாய நெறியாதலின் நமது ஆதி குருமுதல்வர் சாந்த லிங்க அடிகளார் 'உம்பரும் பரவும் ஒருதமிழ் வேதத்து' ஒளித்தெமக்கு அளித்த வள்ளுவரே என திருக்குறளைக் கூறியுள்ளார்.

தேவர்களாலும் போற்றத்தக்கது தமிழ் வேதம் என்ற சிறப்பிக்கப்படுவதால் "தமிழ் மறைத் திருக்குறள்" ஆகும். சங்க இலக்கியங்களிலும் நால்வேதம், நான்மறை என்பன தமிழுக்கே உரிய எழுதாக் கிளவி எனக் கொள்ள வேண்டும். வேதநெறி என்று சேக்கிழார் கூறும் அறநெறியில் ஒழுகி மிகு சைவத் துறையாகிய ஆகம நெறியில் வழிபட்டு வாழ வேண்டும். அவ்வழிபாட்டுக்கு உரிய மறைமொழி ஐந்து எழுத்து ஆதலின்,

*"வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது*
*நாதன் நாமம் நமச்சி வாயவே"*

என அருளியுள்ளார் திருஞானசம்பந்தர். இந்த இருவினை பாசமும், மூன்று கல்களாகிய மும்மலங்களும் இணைத்துப் பிணைத்து வீழ்த்தப்பட்ட பாவக் கடலாகிய பிறவியிலிருந்து கரையேற அருளும் ஐந்தெழுத்தைத் தெப்பமாகக் கொண்டு, பிறவிப் பெருங்கடலை கடந்து, இறைவன் தாள் சேரவேண்டும் என்பது நான்மறையின் முடிந்த முடிவாகும். மறைநெறியும் ஆகமநெறியும் ஒன்று என்பதை எங்கள் ஆதி குரு முதல்வர் 'அவிரோத உந்தியார்' நூலில் அருளியுள்ளார். ஏவல்நெறி, தேர்மறை நெறி, ஆகம நெறி ஒன்று எனக்காட்டும் வீரசைவ தொல்நெறி மாகேசன் எங்கள் சாந்தலிங்க தேசிகனாம் தூயோன் தாளே.

தெய்வத் தமிழால் வழங்கப்படும் செந்நெறி வேதநெறி அவினாசியில் முதலைவாய்ப் பிள்ளையை மீட்ட தெய்வத்தமிழ் பற்றித் தண்டபாணி சுவாமிகள்,

*"பந்தடிக் கொங்கைப் பரவை தன் கேள்வன் மற்றையராம்*
*வந்தனை காரரும் மகிழ்ந்திடுமாறு மறைபயிலும்*
*அந்தணச் சேவை அவினாசியூரில் அழைத்தது எண்ணில்*
*சந்தனக் குன்றின் மலை மேல் பிறந்த தமிழ்த்தெய்வமே"*

எனச் சிறப்பித்தருளியுள்ளார். தெய்வத் தமிழ்ப்பாக்கள் நிறைமொழியாகும்; அம்மொழியே மறைமொழி ஆதலின் வேதநெறியென்பது.

# இசையும் தெய்வமும்

*(கோ. செல்வம் எம். ஏ.,)*



சுவாமி சிவானந்தா அவர்கள் ஒரு கதையை வேடிக்கையாகச் சொல்வதுண்டு.

"அன்றாடம் வழிபாடு செய்கிறீர்களா? ஜபம் – தியானம் செய்து வருகிறீர்கள் அல்லவா?" என்று யாரையாவது பார்த்துக் கேட்டால், அதற்கு அவர், "எப்படி முடியும்? உணவுப் பண்டங்களின் விலையோ மிக உயரத்தில் கிடக்கிறது. நானும் பாதி பட்டினி. எப்படிப் பூசை – புனஸ்காரம் செய்ய இயலும்?" என்று தான் பதில் சொல்வார்.

"உணவே ஏன் நீ விலை உயர நிற்கிறாய்? ஏழைக்கும், நடுத்தர மனிதனுக்கும் எட்டாப் பொருளாகி விட்டாய்?" என்று கேட்டால். அதற்கு "உன் பக்தி குறைவாக உள்ளது. விலை உயர்கிறது. மழை சரியாகப் பொழிவதில்லை; உற்பத்தி மிகவில்லை" என்று உணவுப் பண்டம் பதில் பகரும்.

மழையிடம் சென்று, "ஏன் தேவையான அளவு பெய்ய வில்லை? என்னாயிற்று?" என்று வினவினால், மழையோ, 'குற்றம் என்னுடையதன்று; அக்கினியை நம்பி நான் இருக்கிறேன்" என்று விடை கூறும்.

அக்னியை அணுகி, "என்ன காரணம்?" என்று கேட்டால், "ஹோமம் யார் செய்கிறார்கள்? யாகம் யார் செய்கிறார்கள்? வறண்ட மண்ணில் மரம் கிடையாது; ஹோமப் புகை எழுந்தால் மேகம் கருணை கொள்ளும். இப்போதெல்லாம் சிகரட்டுப் புகையினால், மேகமண்டலம் மாசு பெற்றுள்ளதே, எதற்கும் என் தேவனாகிய வாயு பகவானைக் கேட்டுப் பாருங்கள்" என்று எடுத்துச் சொல்லும்.

வாயு பகவானை அண்டினால், அவர் "நான் என்ன செய்ய! ஒலியே ஆகாயத்தின் சொத்து. நான் ஆகாயத்தினால் தோற்று விக்கப்பட்டவன். ஆகாயம் தீய புகைகளால் மண்டியுள்ளது. பேரொலிகள் மண்ணிலிருந்து எழுப்பி ஆகாயத்தை முட்டிக் கலக்கப்படுத்தியுள்ளன. எதற்கும் ஆகாயத்தைக் கேட்டுப் பாருங்களேன்" எனப் பதில் பகரும். ஆகாயத்தை அண்டி நின்றாலோ, "உண்மையில் நிலம், நீர், காற்று, வாயு யாவும் என்னிடம் தோன்றியவையே. நான் ஒலிக்கு ஆதாரம். நல்ல ஒலியைத் தந்து வந்தவன்; என்னிடம் பூமியிலிருந்து வரும் நாராச ஒலியைத் தீய பேச்சுக்களும் என்னை மாசுபடுத்துகின்றன. இறை

பாடல்களும், இசைக் கீதங்களும் வருவது குறைந்து விட்டன. முறையான நாம சங்கீர்த்தனம் எனக்குப் பிடித்தமானது. அது கிடைத்தால் பதிலுக்கு நான் மழை பொழிய வைப்பேன்" என்று அது பதிலிறுக்கும்.

சுவாமி சிவானந்தர் சொல்லும் இக்கதை இன்று சிந்தித்தற்குரியது. இனிய ஓசை இந்த மண்ணில் பிறப்பது அருகி விட்டது. இசை வழிப்பாடல்கள் இங்கிருந்து புறப்படுவதும் அருகி விட்டது. நாம சங்கீர்த்தனம் நலிந்து வருகின்றது. தூய்மை சேர்க்கும் தொன்மையான இறை இசை குறைந்து விட்டது என்பது உண்மை.

இசைக்கு மாபெரும் ஆற்றல் உண்டு. இசைப்பவர் கேட்பவரைத் தம் இசையால் ஈர்ப்பார். தம் வயப்படுத்துவார். இசையே மருத்துவம், இசையே இறை, ஆன்ம லயத்தை உண்டாக்க வல்லது இசையே. ஆன்ம பரிபாகம் அடைய எளிய வழி பக்தியோகமே யாகும். பக்தியை இசைவழி பண்ணியும் பக்தியோகம் புரியலாம். இவ்வகையான இறைவழிச் சாதனத்தைச் சங்கீர்த்தனயோகம் என்று சுவாமி சிவானந்தர் குறிப்பிடுவார். ஆக, பக்தி உலகில் இசைக்கு ஓர் உரிய இடம் உண்டு என்பது உறுதி.

தென்னகத்தில் திவ்விய நாம சங்கீர்த்தனம் என்ற முறை உள்ளது. தென்னகம் தவிர ஏனைய மாநில மக்களான குஜராத்தியர், மராத்தியர், வங்காளியர், பிஹாரியர் யாவரும் அவரவர் மரபுக்கேற்ப



"மோஹல்லாக்களில்" சங்கீத பக்தி புரிந்து வருவதைப் பார்க்கலாம். அகண்ட கீர்த்தனை, வாத்சல்ய கீர்த்தனை, தாசபாவ கீர்த்தனை, லீலா கீர்த்தனை முதலான பக்திப் பாடல்கள் இன்னமும் சிற்சில பகுதிகளில் இங்குமங்குமாகப் புழக்கத்தில் இருந்து வருகின்றன. ஏனைய பக்திமார்க்கங்களைவிட சங்கீத வழியான பக்தி எளிது. மூச்சு அடக்கிப் பிராணாயாமம் செய்வதை விட எளிது இசைவழி பக்தி. பாடத் தெரிந்தோர் பாடி மகிழ்ந்திட அப்பாடலில் திளைப்பதும் எளிய பக்தியே. வேதம் தெரிந்தவர்கள், யோகம் தெரிந்தவர்கள் எல்லோரும் இசை பக்தியில் எளிதில் வீழ்ந்து நனைந்து மகிழலாம். எளிய இனிய பக்தி முறை இந்த இசை வழியான பக்தி முறை. எனவேதான், "உளங்கனிந்த போதெல்லாம் உவந்து உவந்து பாடுவேன்" என்றார் திருஞானசம்பந்தர்.

இறைவனே "ஏழிசையானவன்; இசைப் பயனானவன்" என்பதைப் பாடியே அறிவித்தவர்கள் நம் நாயன்மார்களும் ஆழ்வார்களும்.

இசைக்கும் எல்லா இடங்களிலும் உரிமை உண்டு. வீட்டுக்குள்ளே பாடலாம்; வீதியில் விடியற்காலையில் குழுவோடு பாடலாம்; கோலில்களில் பாடலாம். எங்கும் பாடலாம். எப்போதும் பாடலாம். எப்படிப் பாடினாலும் இறைவன் அதனை ஏற்றுக் கொள்வானாதலால் எப்படியும் பாடலாம். பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் தமது பாடல்களின் பதிகமுடிவில் 'பாடி ஆடுக' என்றே குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

இசைவழி இறைவனை ஏத்திடவே அருணகிரி நாதர் சந்தமுறையில் திருப்புகழ் செய்தார். இசையினால் அமைந்த பக்திப் பாடல் பாடுபவரையும் கேட்பவரையும் தெய்வீக ஓட்டத்தில் கொண்டு செலுத்தும்.

பக்தியின் ஒன்பது முறைகளுள் சங்கீர்த்தனமும் ஒன்று என்பது மறக்கற் பாலதன்று. திவ்விய நாம சங்கீர்த்தனம் என்பது தென்னிந்தியாவிற்கே உரியது. திவ்விய நாமக் கீர்த்தனங்களில் பக்தியின் எல்லாப் பாவங்களும் அடங்கியுள்ளன. பகவானின் லீலா விநோதங்களைச் செவிமடுக்கும் சிரவணம், பகவானின் நாமங்களை மீண்டும் மீண்டும் நாமடுத்து உச்சரிக்கும் ஸ்மரணை, பகவானின் கீர்த்திமை சங்கீர்த்தனை, பகவானின் பாதார விந்தங்களை

வழிபடும் பாதசேவை, மலர்களால் வழிபடும் அர்ச்சனை, பகவானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கும் வந்தனை, பணியாள் பாவமான தாஸ்யம், நண்பனின் பாவமான சக்யம், தன்னையே பகவானுக்கு அர்ப்பணிக்கும் ஆத்ம நிவேதனம் – ஆகிய யாவுமே பக்தியின் பாவங்களாகித் திவ்விய நாம சங்கீர்த்தனத்தில் அடங்கிக் கிடக்கக் காணலாம்.

பாரத நாட்டின் வட பகுதியில் கீர்த்தனை பாடுவது பக்தியில் சிறப்பான பகுதியாகும். மிருதங்கமும், சிப்ளாவும் கொண்டு பாடுவது கீர்த்தனை. சந்தனமும் மாலையும் அணிவித்து மிருதங்கத்தை வழிபட்ட பிறகு கீர்த்தனையைத் தொடங்குவர். வைணவ சம்பிரதாயம் நிறைந்துள்ள மணிப்பூரில் மிருதங்கம், கோல், மந்திரா ஆகியவற்றுக்கு ஆரத்தி செய்துவிட்டுக் கீர்த்தனை தொடங்குவர். கீர்த்தனை பாடுபவரும் மாலை புனைவது சிறப்பானதாகும்.

இசை ஒருவரை இசைவிக்கக் கூடியது. இசை என்றால் 'புகழ்' என்ற பொருளும் கொண்டது. புகழாகிய இசையை, இசையால் பாடினால் இறைவன் இரங்குவான், இறங்கி வருவான் என்பது உண்மை. இமயமலையை அசைக்க முயன்ற இராவணன் இசை பாடியே இறைவனின் திருவுள்ளத்தைக் கரைய வைத்தான், தேவார,திருவாசக, பிரபந்த ஆசிரியர்களும் திருப்புகழ் அருணகிரி முதலான பல பக்தர்களும் இறைவனை இசையால் ஏத்தியே அவனை நெருங்கினர். சங்கீத மும்மூர்த்திகளான தியாக ராஜர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி முதலானோரும் கோபாலகிருஷ்ண, பாரதியார் போன்றோரும், இசைவழியே இறைவனை ஏத்தினர். அவனை அறிந்தனர். அதன்பின் அவனோடு இணைந்தனர்.

முத்தமிழில் 'இசைத்தமிழ்' என்பது இயலுக்கும் நாடகத்திற்கும் இடைப்பட்ட தமிழ். 'முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்போன் முருகன்' என்பது அருணகிரிநாதர் அருளிய வாக்கு. இசைத் தமிழால் அறியாது வைதாலும் இறைவன் ஏற்பான் என்கிற கருத்தில் அருணகிரியார் அதனை உணர்ந்திருக்க வேண்டும்.

இசை உலகில் ''சஞ்சாரம்'' என்ற சொல் வழங்குவதுண்டு. தன்னை மறந்த லயத்தில் இசையறிஞர் பாடும்போது எங்கெங்கோ சஞ்சரிக்கிறார். கேட்பவரையும் கூடவே அழைத்துச் சென்று சஞ்சரிக்க வைக்கிறார்.

பக்தி உலகம் பரந்து; பல்வேறு பட்டது. பல்வகை முறைகளில் இறைவனை உணர வழிவகுப்பது பக்தி உலகம். அதில் வேதாந்த வழி உண்டு. வேதாந்தம் அறிந்த கொள்ள மன உறுதிப்பாடும், அகன்ற அறிவும் தெளிந்த சிந்தனையும், ஆழ்ந்து ஆராயும் நுண்ணறிவும் தேவை. மிகச் சிலரே இத்திறமை பெற்றவராவர். குண்டலினி வழி பேரின்ப நிலை அடையலாம் என்று ஒருவகை வழியை பக்தி உலகம் சுட்டுகின்றது. அவ்வழி செல்ல மகத்தான ஆன்ம பலம் தேவையாகும். ஆனால் இன்றைய அவசர உலகில் இசை வழியாக இறைவனை ஆடிப்பாட இயலும். எளிதில் இயலும். இசைபாடி இறைவனை ஏத்திப் பரவுகையில் தூய்மையின்மை அகலும்; மனம் அலைபாயும் தன்மை ஒயும்; அறியாமை என்ற இருள் விலகும். கபீர்தாசர், குருநானக், சூரதாசர், அருணகிரிநாதர், தியாகராஜர் போன்ற ஆன்றோர்கள் நாதயோகம் வழியாகவே இறைவனை அணுகுகின்றனர். இசையானது சத்துவ குணத்தையும், தூய்மையையும் உண்டாக்கவல்லது . இனிய இசையால் சமாதி நிலையும் எய்த முடியும் என்பது உண்மையாதலால் நாம் பாடுவோம்; பரமனைப் பாடி ஏத்துவோம், அவன் அருள் பெற்றிடப் பாடி யாடி மகிழ்வோம்.

('தெய்வத் தமிழ்க் கருவூலம்' எனும் நூலிலிருந்து)

# இம்மலர் செயலுருப் பெறுவதற்கு உதவிய புரவலர்களின் வர்த்தக நிறுவனங்கள்

| | | |
|---|---|---|
| 1. | GEETHA TRADING COMPANY | - 103, 2nd Cross Street, Colombo - 11. |
| 2. | APCO TEXX | - Keyzer Plaza Super Market, 147/20, Keyzer Street, Colombo - 11 |
| 3. | REGENT PHARMA STORES | - 279-B, R.A. De Mel Mawatha, Colombo - 03. |
| 4. | P. M. M. MEDICAL | - 84, Ragala Bazaar, Halgranoya. |
| 5. | JEYA TEXTILES | - 122, 3rd Cross Street, Colombo - 11. |
| 6. | JANASRI | - 108, 3rd Cross Street, Colombo - 11. |
| 7. | MODERN CENTRE | - 57, 2nd Cross Street, Colombo - 11. |
| 8. | NEW NIPPONE | - 84/4-B, 2nd Cross Street, Colombo - 11. |
| 9. | MAGNA MARKETING | - 107-111-1F, 2nd Cross, Colombo - 11. |
| 10. | SONALI SILKS | - #107-2 I 2nd Cross Street, Colombo - 11. |
| 11. | ASHIYA TRADERS | - 136, 2nd Cross, Street, Colombo - 11. |
| 12. | MICRO TEXS | - 122 3A, Keyzer Street, Colombo - 11. |
| 13. | ESCO ENTERPRISES | - 128 - A, 1/F Keyzer Street, Colombo - 11. |
| 14. | VENTURES | - 147/11B, Keyzer Street, Colombo - 11. |
| 15. | NEW TOPMARK | - 100/3A, Keyzer Street, Colombo - 11. |
| 16. | SASICO TEX | - 53/A 12, Keyzer Street, Colombo - 11. |
| 17. | JANALANKA TEXTILES | - 29E 99, Main Street, Bandarawela. |
| 18. | SHOBA TEXTILE | - 77, 3rd Cross Street, Colombo - 11. |
| 19. | PRABU TEXTILES | - 151/1 Keyzer Street, Colombo - 11. |
| 20. | TEXLINK TRADERS | - 147/3, Keyzer Street, Colombo - 11. |
| 21. | PEARL TEXTILES | - 145, Keyzer Street, Colombo - 11. |
| 22. | SWARNA TEX (PVT) LIMITED | - 176, (180) Keyzer Street, Colombo - 11. |
| 23. | GOLDEN CAFE | - 98, Bankshall Street, Colombo - 11. |
| 24. | VIVITHAS | - # 114, 3rd Cross Street, Colombo - 11. |
| 25. | MAIYURA TEXTILES | - 149, Keyzer Street, Colombo - 11. |
| 26. | SAMANALA TRADERS | - 235, Olcott Mawatha, Colombo - 11. |
| 27. | JANAMANGALA TRADERS | - 180, C, Keyzer Street, Colombo - 11. |
| 28. | PETTAH CENTRE | - 67-A, Bankshall Street, Colombo - 11. |

| | | |
|---|---|---|
| 29. SMARTIES | - | 91/2, 2nd Cross Street, Colombo - 11. |
| 30. STARLINE TEXTILES | - | 155, Keyzer Street, Colombo - 11. |
| 31. SARITA | - | 99, Main Street, Colombo - 11. |
| 32. ROBINSON (PVT) LTD. | - | 176 Main Street, Colombo - 11. |
| 33. AGASH IMPEX | - | 165, 1/A, Keyzer Street, Colombo - 11. |
| 34. JUBILEE TEX | - | 243, Olcott Mawatha, Colombo - 11. |
| 35. AARTHI | - | 49A, Keyzer Street, Colombo - 11. |
| 36. ROHAN'S | - | 73, Main Street, Colombo - 11. |
| 37. GEMINI STORES PRIVATE LIMITED | - | 63, Bankshall Street, Colombo - 11. |
| 38. SHANKO TEXTILE | - | 105, Keyzer Street, Colombo - 11. |
| 39. WINDOW DECOR TEXTILES | - | 95, Tokyo Shopping Complex, Galle Road, Bambalapitiya. |
| 40. OMEGA TRADERS | - | 62, A, Old Moor Street, Colombo - 12. |
| 41. ASIANS TRADERS | - | 65A, Keyzer Street, Colombo - 11. |
| 42. AISWARYAS | - | 128 - A - 1/E, Keyzer Street, Colombo - 11. |
| 43. SRIYANI | - | 131, 2nd Cross Street, Colombo - 11. |
| 44. CASUAL CLASSICS | - | Five Star Complex, 49/6, Keyzer Street, Colombo - 11. |
| 45. PHOTO UNI | - | 108, Front Street, Colombo - 11. |
| 46. RAVI TEX | - | Velona Market, 112/3, Keyzer Street, Colombo - 11. |
| 47. FORD MOTORS | - | 119/1-9, Prince Street, Colombo - 11. |
| 48. KAVITHAS | - | 100/6, Keyzer Street, Crystal Palace Super Market, Colombo - 11. |
| 49. RAJAH ENTERPRISES | - | 106E, 2nd Cross Street, Colombo - 11. |
| 50. SRI MAITHILY JEWELLERS | - | 153A, Sea Street, Colombo - 11. |
| 51. WESTERN JEWELLERS | - | 88 Sea Street, Colombo - 11. |
| 52. JAYALALITHA | - | "Jayalalitha Jewellery Mart", 65, Sea Street, Colombo - 11. |
| 53. V - CHEM (PVT) LTD. | - | 132, Wolfendhal Street, Colombo - 13. |
| 54. CEYLON CHEMICAL SUPPLIERS | - | 136, Wolfendhal Street, Colombo - 13. |
| 55. VATHSALA TRADE CENTRE | - | 182, Sea Street, Colombo - 11. |
| 56. RKN COLLECTION | - | 151, Keyzer Street, 1st Floor, Colombo - 11. |
| 57. NEW ANJANA TEXTILE | - | 127, 2nd Cross Street, Colombo - 11. |
| 58. LIFE STYLE | - | 112/15 Velona Supermarket, Keyzer Street, Colombo - 11. |
| 59. SATHYA JEWELLERY | - | 201, Sea Street, Colombo - 11. |
| 60. ROYAL AGENCY | - | 23/4, Vivekananda Hill, Colombo - 13. |

| | | | |
|---|---|---|---|
| 61. | RAMMY TRADERS | - | 155, Prince Street, Colombo - 11. |
| 62. | FIVE STAR TEXTILES CENTRE (PVT) LTD | - | 95, $2^{nd}$ Cross Street, Colombo - 11. |
| 63. | LATHA TEXTILES | - | 121 1/z $1^{st}$ Cross Street, Colombo - 11. |
| 64. | SARANIYA TEXTILES | - | 107-111, $2^{nd}$ Cross Street, Colombo - 11. |
| 65. | TEEMAA TEX'S | - | Crystel Palace Super Market, 100/1, Keyzer Street, Colombo-11. |
| 66. | RAMYA TEX | - | 77, Keyzer Street, Colombo - 11. |
| 67. | RICHWIN TRADING COMPANY | - | Trade Centre 84, $1^{st}$ Floor, $2^{nd}$ Cross Street, Colombo - 11. |
| 68. | SADANA & VICTORYS | - | 75 & 180/1, Keyzer Street, Colombo - 11. |
| 69. | MULTI FABS | - | Ameen Trade Centre, 57/26, Keyzer Street, Colombo - 11. |
| 70. | AMPEX COMMERCIAL AGENCIES (PVT) LTD | - | 29, Prince Street, Colombo - 11. |
| 71. | AMBRO ELECTRICALS | - | 88/5 & 92 $1^{st}$ Cross Street, Colombo - 11. |
| 72. | REGENCY ACCESSORIES | - | 121 M, $1^{st}$ Cross Street, Colombo - 11. |
| 73. | GANESH TEXTILES (PVT) LTD. | - | 81, 83 Main Street, Colombo - 11. |
| 74. | KANDY STORES | - | 134, Main Street, Colombo - 11. |
| 75. | RAM BROS. | - | 140, Main Street, Colombo - 11. |
| 76. | NISHAN'S | - | 188/3 K. Keyzer Street, Aslam Trade Centre, Colombo - 11. |
| 77. | CHENSURR IMPEX | - | 79 1/10 - H, Keyzer Street, Colombo - 11. |
| 78. | ABITHA ENTERPRISES | - | Aslam Trade Centre, 188-3J $1^{st}$ Floor Keyzer Street, Colombo -11. |
| 79. | CHARM TEXTILE | - | 122, ABA 7A Keyzer Street, Colombo - 11. |
| 80. | NICE TEXTILE | - | 128 A1/C Keyzer Street, Favourites Super Market, Colombo -11. |
| 81. | CARNATION TEXTILES | - | Favourite Shopping Centre,128-A-1-V, Keyzer Street,Colombo-11. |
| 82. | SEVENA ENTERPRISESS | - | 93/3, Keyzer Street, Colombo - 11. |
| 83. | SPENCERS | - | 103, Keyzer Street, Colombo - 11. |
| 84. | NANDA TEXTILES | - | 140, Keyzer Street, Colombo - 11. |
| 85. | NIKON PARADISE | - | 107 & 111, 4E, $2^{nd}$ Cross Street, Colombo - 11. |
| 86. | JAYANTHI TEXTILE | - | 134, Keyzer Street, Colombo - 11. |
| 87. | GLOBE TRADERS | - | 111, Prince Street, Colombo - 11. |

| | | |
|---|---|---|
| 88. THE CORNER SHOP | - | 80C, 2nd Cross Street, Colombo - 11. |
| 89. RANJANAS (PVT) LIMITED | - | 127, Main Street, Colombo - 11. |
| 90. DRESS LINE | - | 146 2nd Cross Street, Colombo - 11. |
| 91. COTTON MART | - | Ameen Trade Centre, 57/23, Keyzer Street, Colombo - 11. |
| 92. KANEBO TEX | - | 84/A 1, 2nd Cross Street, Colombo - 11. |
| 93. EMPRES TEX | - | 128/A1/D,Keyzer Street,(Favourite Shopping Centre) Co - 11. |
| 94. KALPANAS | - | 119, 1/8, Prince Street, Colombo - 11. |
| 95. YARN TEX | - | 84 - A3, 2nd Cross Street, Colombo - 11. |
| 96. SUPREME STATIONERS | - | 61, 2nd Cross Street, Colombo - 11. |
| 97. SHARP KNITE LINE (PTE) LTD | - | 92, 2nd Cross Street, Colombo - 11. |
| 98. UMAYAL'S | - | Trade Centre Complex , 84 -C/4 2nd Cross Street, Colombo -11. |
| 99. KEN TEXTILES | - | Trade Centre Super Market, 84/B5, 2nd Cross Street, Colombo - 11. |
| 100.RANJANE'S | - | Fashion Super Market, 133/13, Keyzer Street, Colombo - 11. |
| 101.SITHAARA EMPORIUM | - | 101, Main Street, Colombo - 11. |
| 102.SARATHA'S | - | 196, Main Street, Colombo - 11. |
| 103.LALITHA TRADE CENTRE | - | 200, Main Street, Colombo - 11. |
| 104.THE CURTAIN SHOP | - | 208, Main Street, Colombo - 11. |
| 105.OCEANICK IMPEX | - | 192, Main Street, Colombo - 11. |
| 106.UDAYAMS | - | 188, Main Street, Colombo - 11. |
| 107.SPINNEY TRADING COMPANY | - | 88/11, 1st Cross Street, Colombo - 11. |
| 108.SANTHA TEX (PVT) LTD | - | 212, Main Street, Colombo - 11. |
| 109.RADHAS TEXTILES | - | 169/A1 International Plaza Complex, 2nd Cross Street, Co - 11. |
| 110.RATNA STORES (PVT) LTD. | - | 206, Keyzer Street, Colombo - 11. |
| 111.NIPHON CENTRE | - | 143/B, 2nd Cross Street, Colombo - 11. |
| 112.PILOT STATIONERS (PVT) LTD. | - | 110, Bankshall Street, Colombo - 11. |
| 113.ANOMAA TEXTILE | - | 196/9, Keyzer Street, Colombo - 11. |
| 114.RED ROSE TRADE CENTRE | - | 113, Keyzer Street, Colombo - 11 |
| 115.HOUSE OF CURTAIN | - | 175A, Main Street, Colombo - 13. |

| | | |
|---|---|---|
| 116.RANMUTHU TEXTILE | - | 106, 3rd Cross Street, Colombo - 11. |
| 117.STYLE CENTRE | - | 178, Keyzer Street, Colombo - 11. |
| 118.WILLS TRADERS | - | 180 1/1-B, Keyzer Street, Colombo - 11. |
| 119.KAYLINE TRADERS | - | 123, Keyzer Street, Colombo - 11. |
| 120.SARAVANAS | - | 119, Keyzer Street, Colombo - 11. |
| 121.MADUSHA TEXTILE | - | 163/1 & 168, Keyzer Street, Colombo - 11. |
| 122.K. G. TEXTILES (PVT) LTD. | - | 115, Keyzer Street, Colombo - 11. |
| 123.RADHEKA TEXTILES | - | 121, 2nd Cross Street, Colombo - 11. |
| 124.SUITING SHOP | - | 156, Keyzer Street, Colombo - 11. |
| 125.P. T. C. COMBINE | - | 158, Keyzer Street, Colombo - 11. |
| 126.QUEEIN TEX | - | 160, Keyzer Street, Colombo - 11. |
| 127.CITY TEX | - | 131,Keyzer Street, Colombo - 11. |
| 128.PRO LINE TEX | - | 147/6, Keyzer Street, Keyzer Plaza Market, Colombo - 11. |
| 129.NEON CENTRE | - | 135, Keyzer Street, Colombo - 11. |
| 130.DESIGN TEXTILE CENTRE | - | 153, Keyzer Street, Colombo - 11. |
| 131.JEYA SRI | - | 115, 3rd Cross Street, Colombo - 11. |
| 132.KALIKOS | - | 114/1, 3rd Cross Street, Colombo - 11. |
| 133.KALAIMAGAL TRADERS | - | 120, 3rd Cross Street, Colombo - 11. |
| 134.CENTRAAL OIL STORES | - | 155, 5th Cross Street, Colombo - 11. |
| 135.CITY POINT | - | 103, 3rd Cross Street, Colombo - 11. |
| 136.NEW GOLD STAR TEXTILES | - | 106/A, 3rd Cross Street, Colombo - 11. |
| 137.ROYAL | - | 95, 3rd Cross Street, Colombo - 11. |
| 138.JEEVAN | - | 99, 3rd Cross Street, Colombo - 11. |
| 139.CROWN | - | 59, 3rd Cross Street, Colombo - 11. |
| 140.TEX LAND | - | 82-A, 3rd Cross Street, Colombo - 11. |
| 141.BRILLIANT CENTRE | - | 155A, Keyzer Street, Colombo - 11. |
| 142.SELVAS | - | 55, 3rd Cross Street, Colombo - 11. |
| 143.JEYA SEIKO JEWELS | - | 137/8, Sea Street, Solid Complex, Colombo - 11. |
| 144.SIRI BRINTHA JEWELLERS | - | 104/1 Shopping Complex, Sea Street, Colombo - 11. |
| 145.NEW KALYANI | - | 95, Sea Street, Colombo - 11. |
| 146.GOKULE RAADHAI MERCHANTS | - | 184, Sea Street, Colombo - 11. |
| 147.1ST CHOICE | - | Crystal Palace Super Market, 100/7A, Keyzer Street, Co - 11. |


| | | |
|---|---|---|
| 148.DIAMOND TEX | - | 30B, 3rd Cross Street, Colombo - 11. |
| 149.LAKSHMI | - | 180-A-5, Keyzer Street, Attar Mahal Colombo - 11. |
| 150.PREMIUM OILS CENTRE | - | 77, 79, Wolfendhal Street, Colombo - 13. |
| 151.SRI VASANTHA MAHAL | - | 313, Sea Street, Colombo - 11. |
| 152.CASIO | - | 147, Keyzer Street, Colombo - 11. |
| 153.K. FASHION | - | 76-1/9, Super Market 1st Floor Keyzer Street, Colombo -11. |
| 154.WEAR ME | - | 76-B, Keyzer Street, Colombo - 11. |
| 155.COLLING WOODS | - | 3A, 8th Lane, Colombo - 03. |
| 156.THE OZONETEX | - | No. 26A, Galle Road, Wellawatte, Colombo - 06. |
| 157.SRI LUCKSHIMI'S | - | 139, Galle Road, Colombo - 04. |
| 158.APCO PHARMACY & GROCERY | - | No. 10, Panjanantha Mawatha, Colombo - 15. |
| 159.SILKOS | - | 124, 7/B, Keyzer Street, Colombo - 11. |
| 160.WELLAWATTE ABBARNA TEXTILE | - | 7D, Sinsapa Road, Colombo - 06. |
| 161.DESIGN TEXTILES | - | Orchard Shopping Complex, 133, Galle Road, Colombo - 4. |
| 162.AMARAPAALI | - | 7/5- B, Sinsapa Road, Colombo - 6. (Orchard Shopping Complex) |
| 163.JAYA LALITHANGHI JEWELLERS | - | 225, Galle Road, Bambalapitiya, Colombo - 04. |
| 164.WELLAWATTA NEW A KUMARAN'S | - | 7/1A, Galle Road,Wellawatta,Col-06.(Orchard Shopping Complex) |
| 165.WELLAWATTA NEW NALLI SILK'S | - | 7/16, Orchard Shopping Complex, Wellawatta, Colombo - 06. |
| 166.ROTEX | - | 108/6, 3rd Cross Street, Colombo - 11. |
| 167.STAR SAREE HOUSE | - | No. 41, Galle Road, Wellawatta, Colombo - 06. |
| 168.MARUTHI | - | No. 122/4A, Keyzer Street, Colombo - 11. |
| 169.EMMEE COLLECTION | - | No. 24A, Galle Road, Colombo - 06. |
| 170.ARUNA ENTERPRISES | - | 337, Old, Moor Street, Colombo - 12. |
| 171.MODERN HARDWARE CENTRE | - | No.43, Abdul Jabbar Mawatha, Colombo - 12. |
| 172.VIMAISCE AGENCY | - | No.364, Old Moor Street, Colombo - 12. |
| 173.GATEWAY METALS | - | No.335, Old Moor Street, Colombo - 12. |
| 174.TRANSTEEL MERCHANTS | - | No.325, Old Moor Street, Colombo - 12. |
| 175.JANATHA STEELS | - | No. 20, Quarry Road, Colombo - 12. |
| 176.UNILINK INTER TRADES | - | No. 31 2/5A, Quarry Road, Colombo - 12. |

| | | |
|---|---|---|
| 177.NAYAGARAH ENTERPRISE | - | No. 31 2/4, Quarry Road, Colombo - 12. |
| 178.KRISHNA METALS (PVT) LTD. | - | No. 119, Bandaranayake Mawatha, Colombo - 12. |
| 179.METRO METALS (PVT) LTD. | - | No. 37, Quarry Road, Colombo - 12. |
| 180.STANDARD STEEL CENTRE | - | No. 311, 2nd Floor Old Moor Street, Colombo - 12. |
| 181.TOP STEEL (PVT) LTD. | - | No. 454, Old Moor Street, Colombo - 12. |
| 182.ISLAND TRADE CENTRE (PVT) LTD. | - | No.437, Old Moor Street, Colombo - 12. |
| 183.LIBERTY HARDWARE STORES | - | No.453, Old Moor Street, Colombo - 12. |
| 184.ANUSHAN STEEL | - | No.12, Grandpass Road, Colombo - 14. |
| 185.COLONIAL HARDWARE STORES | - | No. 427, Old Moor Street, Colombo - 12. |
| 186.KAILASH HARDWARE CENTRE | - | No. 456, Old Moor Street, Colombo - 12. |
| 187.RAMSONS TERRAZZO | - | No.443, Old Moor Street, Colombo - 12. |
| 188.LOTUS HARDWARE CENTRE | - | No.270-B, Old Moor Street, Colombo - 12. |
| 189.SUPER STEEL CENTRE | - | No.419, Old Moor Street, Colombo - 12. |
| 190.LANKA STEEL CENTRE | - | No.316A, Old Moor Street, Colombo -12. |
| 191.SHRI SAKTHI JEWELLERS | - | No.121, Sea Street, Colombo - 11. |
| 192.MANAMAGAL JEWEL PALACE | - | No.91, Sea Street, Colombo - 11. |
| 193 CAMBRIDGE TRADERS | - | No. 22E, Quarry Road, Colombo - 12 |
| 194.SEVANA STEELS | - | No. 5A, Abdul Jabbar Mawatha, Colombo - 12 |
| 195.VISAKA SUPPLIES (PVT) LTD. | - | No. 430-C Old Moor Street, Colombo - 12. |
| 196.CEYLON STEEL COMPANY | - | No. 332, Old Moor Street, Colombo - 12. |
| 197.COLOMBIA FERTILIZER (PVT) LTD | - | No. 228, Bandaranayake Mawatha, Colombo - 12. |
| 198.VANIC METAL | - | No.20 C, Quarry Road, Colombo - 12. |
| 199.ORIENTAL ENTERPRISES & AGENCIES (PVT) LTD | - | No. 325/A Old Moor Street, Colombo - 12.. |
| 200.GREENFIELD BIO PLANTATIONS (PVT) LTD | - | 23, Bray Brooke Street, Colombo - 02. |
| 201.K. P. KALIAPPAPILLAI & SONS LTD. | - | 263, Sea Street, Colombo - 11. |
| 202.K. KANAGARATNAM | - | 3B/1, Sea View Avenue, Colombo - 03. |
| 203.LANKA TRADERS | - | No.73, St. Joseph Street, Colombo - 14. |
| 204.SSi education. | - | 3-3/1, Station Road, 3rd Floor, Nadaraja Building, Colombo-3 |


# நன்றி !

'மாணிக்க விநாயகம்' எனும்
இச்சிறப்புமலரை
நூல் வடிவாக்குவதற்கு
எமக்குத் துணைநின்ற
ஆலய நிர்வாகத்தைச் சார்ந்த
பெரியோர்கள்,
ஆசிச்செய்திகளை அனுப்பி உதவிய
பீடாதிபதிகள், குருமஹா சந்நிதானங்கள்,
அருட்துறவியர்,
அட்டைப்படம் வரைந்துதவிய ஓவியர்,
கட்டுரைகள் தந்த அறிஞர்கள்,
இம்மலரை மலரச் செய்த
புரவலர் பெருமக்கள்
அச்சக உரிமையாளர், ஊழியர்கள்
அனைவருக்கும் எமது
நன்றி மலர்களைச்
சமர்ப்பிக்கின்றோம்.

*- சம்மாங்கோட்டார்*







உ

கணபதி துணை

கொழும்பு


சம்மாங்கோடு

ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய

# மகா

# கும்பாபிஷேகம்

## 24.08.2001



### கணபதி துதி

சுக்லாம் பரதரம் விஷ்ணும்
சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத்
ஸர்வ விக்னோப சாந்தயே


சம்மாங்கோடு
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில்
பரிபாலன சபை (வரையறுக்கப்பட்டது)
91/1, பிரதான வீதி, கொழும்பு - 11.
தொலைபேசி - 433627, 435521.



வடிவமைப்பும், அச்சுப்பதிப்பும் வரையறுக்கப்பட்ட யுனி ஆர்ட்ஸ் (தனியார்) நிறுவனம்
48 B, புளூமெண்டால் வீதி, கொழும்பு 13. தொ.பே- 330195, 478133.